[Issued—17-4-1962]

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

Madras Legislative Assembly Debates

November 1to6. 1961.

Volume :- XLVIII 1to6

with index.

One set for Binding.

No 29 (e)

©

GOVERNMENT OF MADRAS
1962

Legislative Assembly Department
Madras

PRICE, 50 *naye Paise*]

PAGES

III Government Motion—
Third Five-Year Plan—Madras State (discussion)—*cont.* .. 153–228

IV Papers laid on the table of the House 228–229

Saturday, 11th November 1961.

I Questions and Answers 239–259

II Government Motion—
Third Five-Year Plan—Madras State (discussion)—*cont.* .. 259–340

III Papers laid on the table of the House 340

Monday, 13th November 1961.

I Questions and Answers 349–375

II Calling attention to the need for famine relief work in Coimbatore district 375–376

III Government Bill—
The Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1961 376–377

IV Government Motion—
National Integration 377–454

V Papers laid on the table of the House 454

Tuesday, 14th November 1961.

I Questions and Answers 463–486

II Announcements—
(1) The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 29 of 1961) 486
(2) The Madras City Municipal (Amendment) Bill, 1961 .. 491

III Government Bills—
(1) The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 26 of 1961) 486–491
(2) The Madras City Municipal (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 35 of 1961) 491–546

Wednesday, 15th November 1961.

I Questions and Answers 557–583

II Calling attention to slump in jaggery 583–584

III Government Bills—
(1) The Madras Gift Goods (Unlawful Profession) Bill, 1961 584
(2) The Madras Hill Stations (Preservation of Trees) Amendment Bill, 1961 585–595
(3) The Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961) 595–621

PAGES

(4) The Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961) 621–629
(5) The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 48 of 1961) .. 630–636
(6) The Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 49 of 1961) .. 637–638
(7) The Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 50 of 1961) 638–639

IV Announcements—
(1) The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 629
(2) The Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 636
(3) The Madras Iruvaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 638
(4) Business of the House 640

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Thursday, the 9th November 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George at eleven of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTA-VATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Cement.

DEPUTY SPEAKER: Question Nos. 1914, 1915 and 1916 will be taken up together.

* **1914 Q.—SRI S. M. ANNAMALAI :** *கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—*

(அ) 1959-60, 1960-61-ல் நம் மாநிலத்தில் (1) இறக்குமதியான (2) உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்ட் எவ்வளவு?

(இ) 1961-ல் நம் மாநிலத்திற்குத் தேவையான சிமெண்டு எவ்வளவு?

(உ) ஏற்றுமதியான சிமெண்டு எவ்வளவு?

THE HON. SRI P. KAKKAN :—

(அ) (i) Nil.

(ii) 1959–60	... ...	898,296	tonnes.
1960–61	... ...	1,116,804	,,
Up to May 1961	...	467,174	,,

(இ) (1) Roughly, 541,000 tonnes.

(உ) Ten thousand, two hundred and twenty-one tonnes up to 30—4—1961 during this year.

* 1915 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state the quantity of cement allotted to Madras State in 1961?

THE HON. SRI P. KAKKAN : Three lakhs eighty-three thousand four hundred tonnes for the current year for use till September 1961.

* **1916 Q.—SRI S. M. ANNAMALAI :**
SRI A. A. RASHEED :
SRI V. K. KOTHANDARAMAN : } *கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) சிமெண்டு விநியோகத்தில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதற்குக் காரணமென்ன?

(இ) இதைப் போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) Generally, the production of cement falls short of the demand. There has further been a spurt in demand all over due to increased Governmental construction and private building activity. The bottleneck in the movement of cement is another factor. During the recent months, the acute shortage of cement has occurred due to short fall in production in the cement industrial units in the region.

(இ) When it was noticed that the scarcity of cement hampered the progress of the Government constructional works the Government of India were addressed and an 'ad hoc' allotment of 5,000 tonnes of cement was obtained. The Government have also reintroduced the cement permit system under which 80 per cent of the stock of cement received will be sold against permits issued by competent authorities and the balance of 20 per cent will be sold without permits to bona fide consumers. The Government are also considering the question of appointing a Special Officer who can attend to problems relating to cement industry and can remove the bottlenecks in the movement of cement.

SRI S. M. ANNAMALAI : 1960-ம் வருஷத்தில் 11 லட்சம் டன் சிமெண்ட் உற்பத்தி செய்யப்பட்டது. 1961-ம் வருஷத்தில் 4 லட்சம் டன்னுகக் குறைந்ததற்குக் காரணம் என்ன? இதைக் குறித்து சர்க்கார் ஆலோசித்தார்களா?

THE HON. SRI P. KAKKAN : இந்த மாநிலத்திற்கு மட்டும் உற்பத்தி செய்யப்படவில்லை. பொதுவாக நம் மாநிலத்தில் எல்லா சிமெண்ட் பாக்டரிகளிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. விநியோகம் செய்வது மத்திய சர்க்கார் பொறுப்பில் இருக்கிறது. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாகத்தான் அவர்கள் 'அலாட்' செய்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கு எவ்வளவு தேவையோ அவ்வளவு வேண்டுமென்று கேட்கின்றோம். இருந்தாலும், சிமெண்ட் உற்பத்தி சில காரணங்களால் குறைந்துவிட்டது. அதனுல், நமக்கு 'அலாட்' செய்திருப்பதும் குறைந்திருக்கிறது.

SRI A. A. RASHEED : When there is shortage of cement in our country as well as in our State, what is the necessity for exporting cement to foreign countries? Will the Government make representations to the Union Government for stopping such exports?

THE HON. SRI P. KAKKAN : We have represented to the Government of India, but we cannot ask them to stop exports.

SRI N. K. PALANISAMI : இறக்குமதி செய்யப்படுகிற சிமெண்ட் நியாய விலைக்குக் கிடைக்காமல் இரட்டிப்பான விலைக்கு ரூ. 13 வரைக்கும்கூட விற்கப்படுகிறது. அதன் காரணமாக சர்க்கார் எடுத்துக்கொண்டு நிறைவேற்றும் வேலைகளுக்கெல்லாம் திட்டமிட்டதற்கும் அதிகமாகத் தொகை செலவிட

வேண்டியிருக்கிறது. ஆகவே, கண்ட்ரோல் விலைக்குக் கிடைக்க சர்க்கார் ஏதாவது முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா? அப்படியானுல், அதன் விவரம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : என்பது சதவிகித ஸ்டாக்கை 'பர்மிட்' பெற்றவர்களுக்கும், 20 சதவிகித ஸ்டாக்கை, மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதாக ஏற்பாடு செய்திருக்கிறோம். இந்த முறையில் சிமெண்ட் எல்லோருக்கும் கிடைக்கும் என்று நினைக்கிறோம்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : பொது மராமத்து இலாகாவினர் எப்பொழுது வேலை ஆரம்பிக்கின்றார்களோ அப்பொழுது தேவைப்படுகிற சிமெண்டை வாங்கிக்கொண்டால் பரவாயில்லை. அப்படியில்லாமல், வேலை ஆரம்பிப்பதற்கு முன்பே தேவையான எல்லா சிமெண்டையும் வாங்கி ஸ்டாக் செய்து கொள்வதால் பொது மக்களுக்குத் தேவையான நேரத்தில் சிமெண்ட் கிடைக்கவில்லை என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அதற்கு அரசாங்கம் என்ன பரிகாரம் தேடி இருக்கிறார்கள்?

THE HON. SRI P. KAKKAN : பொது மராமத்து இலாகா வேலைக்கு எல்லா சிமெண்டையும் வாங்கிச் சேர்த்து வைத்துக் கொள்வது இல்லை. எவ்வெப்போது தேவையோ அப்பொழுதுதான் சிமெண்ட் வாங்கி வேலை நடைபெறுகிறது. பொது மக்களுக்குத் தேவையான சிமெண்டு கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

SRI T. T. DANIEL : May I know what the price of cement per bag is at present? Is it a fact that any quantity of cement is available i black-market on higher price, and, if so, may I know what steps the Government have taken to control the price of cement?

THE HON. SRI P. KAKKAN : I want notice of a separate question.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Are there proposals before the Government to overcome this difficulty, and, if so, may I know what those proposals are?

THE HON. SRI P. KAKKAN : ஸ்பெஷல் ஆபீசர் ஒருவரை நியமித்து, பாக்டரியை அடிக்கடி சுற்றிப் பார்த்து, எவ்வளவு தூரம் உற்பத்தியை அதிகரிக்க முடியுமோ அவ்வளவு அதிகரிக்கவும், நல்ல முறையில் சிமெண்ட் கிடைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரே ஸ்பெஷல் ஆபீசரை நியமிப்பதுபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். நாமும் ஒரு ஸ்பெஷல் ஆபீசரை வைத்துக் கவனிக்கத் திட்டமிட்டிருக்கிறோம்.

டால்மியா, தாளையூத்து சிமெண்ட் தொழிற்சாலைகளிலுள்ள இயந்திரங்களும் 'ரிபேர்' செய்யப்படுவதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அதுவும் செய்து முடிந்த பிறகு, போதுமான சிமெண்ட் கிடைக்குமென்று நாம் நினைக்கிறோம்.

SRI K. VINAYAKAM : நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் சிமெண்ட் நம் மாநிலத்தில் விநியோகிக்கப்பட ஏற்பாடு செய்தால் இங்கு பற்றாக்குறை ஏற்படாது என்று சொல்லப்படுகிற கருத்தும், இந்த மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்று மதி செய்வதால்தான் இப்பொழுது இந்தச் சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிற கருத்தும் வாஸ்தவந்தானா? அப்படி யிருந்தால், உற்பத்தி செய்யப்படுவதில் எத்தனை சதவிகிதம் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : These are all policy matters and I am afraid, during the question-hour we cannot discuss all these things. It will also be difficult to give any reply to such questions.

DEPUTY SPEAKER : I disallow the question as it relates to a matter of policy.

SRI A. GOVINDASAMY : விவசாயத்திற்காக மோட்டார் பம்ப் செட் வைப்பதற்குக் கட்டிடம் கட்ட 100 மூட்டை, 50 மூட்டை சிமெண்ட் தேவையென்று கேட்டால் மூன்று மூட்டைகள், ஐந்து மூட்டைகள் தான் வழங்கப்படுகின்றன. அதனால், விவசாய வேலை தடைப்படுகிறது. ஆகவே, விவசாயத்திற்குத் தேவையான அளவு சிமெண்ட் பர்மிட் கொடுக்க தாசில்தாருக்குக் கட்டளை இடப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : கையிலே ஸ்டாக் இருக்கிற அளவுக்கு கலெக்டரோ தாசில்தாரோ பர்மிட் கொடுப்பார்கள். இரண்டு டன்னுக்குக் குறையாமல் கொடுக்கலாம் என்று கட்டளை இடப்பட்டிருக்கிறது. சிமெண்ட் ஜாஸ்தி இருந்தால் ஜாஸ்தி கொடுக்கப்படும். குறைவாக இருந்தால், குறைத்துக் கொடுக்கப் படும்.

SRI V. SANKARAN : பொதுவாக வியாபாரிகள் சிமெண் டைப் பதுக்கி வைத்துக்கொண்டு, மூட்டைக்கு ஆறு, ஏழு ரூபாய் அதிகம் கொடுத்தால் கொடுக்கிறார்கள். மூட்டையிலிருந்து ஓரளவு சிமெண்டை எடுத்துவிட்டு சாம்பலைக் கலந்து கொடுக்கிறார்கள். மூட்டையின் கனம் சரியாக இருப்பதில்லை. இத்தகைய ஊழல் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நல்ல முறையில் சிமெண்ட் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : அம்மாதிரி தகவல் என்னிடம் இல்லை. அம்மாதிரி ஊழல் இருந்தால், கனம் அங்கத்தினர் குறிப் பாக எழுதியனுப்பினால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

SRI J. MATHA GOWDER : சிமெண்ட் பற்றாக் குறையைப் போக்க தமிழ்நாட்டிலேயே ஏதாவது புதிதாக சிமெண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி செய் திருக்கிறதா? இல்லையென்றால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏதாவது தொழிற்சாலை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்யுமா?

DEPUTY SPEAKER : A similar question put by hon. Member Sri V. K. Ramaswamy Mudaliyar has already been answered by the Hon. Minister.

SRI V. K. KOTHANDARAMAN : விநியோகத்தில் ஏற்படக் கூடிய ஊழலின் காரணமாகத்தான் ஏற்கனவே சல்பேட் போன்ற உரங்களைக்கூடத் தனியாரிடத்தில் இருந்து எடுத்து கூட்டுறவுகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கொடுத்திருக் கிறோம். அப்படியே இந்தச் சிமெண்டு விநியோகத்தையும்கூடத் தனியாரிடத்தில் இருந்து எடுத்து கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்துதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. கூட்டுறவு சொஸைடிகளிடத்திலோ, பஞ்சாயத்து போர்டுகளிடத்திலோ கொடுக்கிற தகவல் என்னிடத்தில் இல்லை.

SRI R. SRINIVASA IYER : இப்போது 20 சதவிகிதம் என்று தனியார் டெப்போக்களுக்குக் கொடுக்கிற முறையில் இன்றைக்கு மூட்டை 12 ரூபாய் 15 ரூபாய் என்று விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இப்படி கள்ளமார்க்கெட் ஆகாமல் தடுக்க ஒரு ஊருக்கே இரண்டு மூன்று ஏஜெண்டுகளுக்கு லைசென்சு கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN : இதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பரிசீலனை செய்யப்படும்.

Sweepers and scavengers

* 1917 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) that details of Centrally-sponsored schemes to be implemented during the current year for improving the working conditions of sweepers and scavengers; and

(*b*) the list of municipalities to be benefited?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A paper[a] is placed on the table of the House.

Highways and Rural Works Department

* 1918 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

வேதாரண்யத்தில் மராமத்து இலாகா (**Highways**)-ல் மேஸ்திரி **or Attender**-ஆக வேலை செய்யும் ஒருவர் சென்ற 6 வருட காலமாக வேலை செய்யாமலேயே சம்பளம் வாங்கி வருவது உண்மையா?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

---

[a] Printed as Appendix I on page 107 infra.

[9th November 1961

SRI V. K. KOTHANDARAMAN : சார், இதுபோன்று ஆறு வருஷ காலமாக ஒரு வேலையும் செய்யாமல் சம்பளம் வாங்கி வருகிறேன் என்றும், அதற்குக் காரணத்தை விசாரணை செய்தால் நேரில் சொல்வதற்குத் தயாராய் இருக்கிறேன் என்றுகூட சர்க்காருக்கு அவர் கடிதம் எழுதியிருக்கிறார். அதன் பேரில் இனிமேலாவது பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தயாரா?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினருடைய கேள்வியை நான் உணர்வேன். அந்த ஆள் ரொம்ப மோசமான பேர்வழி. பொறுப்பான வேலை எதுவும் அவனுக்குக் கொடுக்கக் கூடாது என்றே வைத்திருந்தது. எனக்கு வேலை கொடுப்பது இல்லையென்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான். இப்போது அவனை சஸ்பெண்டு பண்ணி வைத்திருக்கிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டும் வருகிறது.

SRI V. K. KOTHANDARAMAN : அந்த ஆள் ரொம்ப மோசமானவன் என்று அதிகாரிகள் சொன்னதை வைத்துக் கொண்டு கனம் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடாது. இவனுக்கு மேலதிகாரியாக இருக்கக்கூடியவரிடத்தில் காணப்படும் ஊழல்களை இவன் கண்டுகொள்வதனாலேயே இவனை அவர்கள் 'கண்டெம்' செய்திருக்கிறார்கள் என்பது பரிசீலனை செய்யப் பட்டதா?

THE HON. SRI P. KAKKAN : மேலதிகாரிகள் சொன்னார்கள் என்று சொல்லவில்லை. முன்பு தஞ்சாவூர் டிவிஷனில் இருந்தான். அங்கே கெட்ட பெயர் வாங்கிக்கொண்டதால் நாகப்பட்டிணத்திற்கு மாற்றப்பட்டான். இங்கும் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டால்தான் இவனைப்பற்றி மோசமான ஆள் என்று அரசாங்கம் முடிவுக்கு வரவேண்டியதாக இருந்தது.

* 1919 *Q*.—**SRI N. MARUDACHALAM** : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹைவேஸ் டிபார்ட்மெண்டில் தினக்கூலிகளாக வேலை செய்து வரும் தொழிலாளிகளை நிரந்தரமாக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.

SRI N. MARUDACHALAM : சார், இந்தக் கோவை ஜில்லாவில் சாலை மராமத்து இலாகாவில் மட்டும் 150 ஆண்களும், பெண்களும் இருக்கிறார்கள். பத்து வருஷ காலமாக வேலை நிரந்தரமாக்கப்படாமல் கூலிகளாகவே வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக மாற்றுவதற்குச் சர்க்கார் உத்தரவு போடுமா?

THE HON. SRI P. KAKKAN : இவ்விஷயம் பரிசீலனை செய்யப் பட்டது. பே கமிஷன் சிபார்சுப்படி 5 வருஷங்களுக்கு மேலாகத் தொடர்ந்து இருக்கிறவர்கள் காயம் செய்யப்படலாம் என்று சர்க்காரும் ஒத்துக்கொண்டிருக்கிறது. இதுபற்றி பின்னாலே நல்லதொரு முடிவு ஏற்படும்.

9th November 1961]

Tanks (Avanashi, Palladam and Erode taluks)

* 1920 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the District Development Council, Coimbatore, passed a resolution on 28th April 1961, requesting the Government to arrange for the investigation of a scheme to fill up about 35 tanks in Avanashi, Palladam and Erode taluks;

(b) whether any investigation has been conducted in this regard; and

(c) if so, details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes, Sir.

(b) & (c) Detailed investigation is being conducted by the Chief Engineer (Irrigation).

SRI N. K. PALANISAMI : நீலகிரி ஜில்லாவில் நடுவட்டத்திலிருந்து கேரளா ஸ்டேட்டுக்கு ஒரு நதி உற்பத்தியாகிப் போகிறது என்பது வாஸ்தவமா? இதைப் பரிசீலனை செய்ய ஏதாவது சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI P. KAKKAN : நீலகிரி ஜில்லாவில் இருந்து மேற்கும், கிழக்கும், வடக்கும்கூட போகிறது. கனம் அங்கத்தினர் கேட்ட மூல கேள்விக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?

SRIMATHI C. KOLANTHAI AMMAL : உதவி சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன வசதி பெறாது வறண்ட பிரதேசமாக இருக்கும் பல்லடம், அவிநாசி, ஈரோடு போன்ற இடங்களில் எல்லாம் இருக்கும் சர்க்கார் குளம், குட்டைகளை எல்லாம் பராமரிக்க ஏதேனும் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI P. KAKKAN : இது குளம், குட்டை சம்பந்தப் பட்ட கேள்வி அல்ல.

SRI N. K. PALANISAMI : குந்தா கழிவு நீரை உபயோகப் படுத்தும் திட்டமும், அப்பர் பவானித் திட்டமும் ஒன்றுதானா? அல்லது வெவ்வேறா?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி போட வேண்டும்.

Marina Beach

* 1921 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Works be pleased to furnish the details of the scheme for the improvement of Marina Beach in the City of Madras?

THE HON. SRI P. KAKKAN : The attention of the member is invited to the paper[a] placed on the table of the House.

SRI A. A. RASHEED : May I know whether any aid or grant has been received from the Union Government for the improvement of the Marina Beach as a tourist attraction?

[a] Printed as Appendix II on pages 107-112 infra.

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI K. VINAYAKAM : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற தாளில் இரண்டாவது பக்கத்தில், இரண்டாவது பாராவில் புதிய ரோடு போடப்பட்டிருக்கிறது என்ற தகவல் காணப்படுகிறது. இதற்கு லவ்வர்ஸ்பாத்—காதலர் பாதை என்ற பெயரையே வைப்பதில் ஆட்சேபனை என்ன? இந்த ரோட்டில் ஆங்காங்கே உட்காருவதற்கு பெஞ்சுகள் போட அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN : காதலர் பாதை என்ற பெயரை மாற்றவில்லை. அங்கே வசதிகள் செய்து கொடுக்க ஆட்சேபனை இல்லை.

SRI A. GOVINDASAMY : காதலர் பாதை வயதான மந்திரிகள் நடமாடும் இடமாக இருக்கக் காரணம் என்ன? (சிரிப்பு.)

SRI A. A. RASHEED : May I know whether any steps have been taken to remove the thatched huts which mar the beauty of the Marina?

THE HON. SRI P. KAKKAN : In the evening most of the huts are removed by the firshermen.

Pudupettai Handloom Weavers' Society

* 1922 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வடாற்காடு மாவட்டம், போளூர் தாலூகா, களம்பூர், மதுரா, புதுப்பேட்டை கைத்தறி நெசவாளர் சங்கத்தில் இவ்வாண்டு புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்று வந்த புகாரின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : No complaint was received that new members were not admitted in this society during the current year.

Electricity for agricultural purposes

* 1923 Q.—SRI N. S. RAMALINGAM (on behalf of SRI V. ARUNACHALA THEVAR) : Will the Hon. the Minister for Electricity be pleased to state, when the scheme for the supply of electricity for agricultural purposes will be extended to the villages in the Pudukkottai Division?

THE HON. SRI V. RAMAIAH : The attention of the hon. Member is invited to the answer contained in the paper [a] placed on the table of the House.

[a] Printed as Appendix III on pages 112–113 infra.

Madras-Nagercoil Express Bus Service

* 1924 Q.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is a proposal to introduce an Express bus-service from Madras to Nagercoil to be covered on a single day;

(b) what will be the fare; and

(c) whether there is any proposal to have the coaches air-conditioned?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) & (c) Do not arise.

SRI T. T. DANIEL : May I know what the peculiar type of difficulties is which the Government think that they will have to face, if such an Express Bus is run with a few hours' stay at Tiruchirappalli?

THE HON. SRI V. RAMAIAH : I have just now stated that there is no proposal at all and I do not think that this supplementary arises out of my answer.

Housing Scheme for Sweepers and Scavengers

* 1925 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the number of houses to be constructed under the Centrally sponsored Subsidised Housing Scheme for sweepers and scavengers.

(b) the allotment for each of the municipalities to be benefited;

(c) whether town panchayats have been included in the scheme; and

(d) if so, the names of such town panchayats?

THE HON. SRI P. KAKKAN : (a) One thousand houses.

(b) to (d) The selection of the municipalities and panchayats for implementation of the Housing Scheme has not yet been finalised by the Inspector of Municipal Councils and Local Boards, who is in charge of the scheme.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், தாழ்த்தப்பட்ட மக்களாக உள்ள நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு அல்லாத குறையைப் போக்குவதற்கான நிலைமையை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே அரசாங்கம் நிறைவேற்ற முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN : மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் நன்கு யோசித்துத்தான் இந்த நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற

ஏற்பாட்டை செய்திருக்கிறார்கள். இதற்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 30 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷம் 5 லட்சம் ரூபாய் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காகவும், 3 லட்சம் ரூபாய் வண்டிகள் வாங்கிக் கொடுப்பதற்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI P. G. MANICKAM : இந்தத் திட்டமானது நகரங்களில் மட்டும்தான் அமுலுக்குக் கொண்டு வரப்படுமா அல்லது மேஜர் பஞ்சாயத்து போர்டுகளிலும் அமுலுக்குக் கொண்டு வரப்படுமா ?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் கொடுக்கும் விகிதத்தில் மேஜர் பஞ்சாயத்து போர்டுகளும் இதில் இடம் பெறும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இவ்வளவு குறைவாக, 1,000 வீடுகள் அளவிற்குக் கட்டுவதற்குத்தான் திட்டமிட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கிற பணம் குறைவாக இருக்கிறது என்பதாலா அல்லது மாகாண அரசாங்கத்திலிருந்து போடக்கூடிய தொகை இதைக் காட்டிலும் அதிக அளவில் போட முடியாது என்ற காரணத்தினாலா ?

THE HON. SRI P. KAKKAN : இந்தத் திட்டம் "க்ராண்ட் இன் எய்டு" அடிப்படையிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. தற்போது பரீட்சார்த்தமாக சிறிய அளவில் திட்டமிடப்பட்டிருக்கிறது. போகப் போகப் பெரும் அளவில் இது நிறைவேற்றப்படும்.

SRI A. GOVINDASAMY : முதல்தர நகரசபை இருக்கின்ற பகுதிகளில் மட்டும் இதை நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டிருக்கிறதா ? அல்லது இரண்டாம்தர, மூன்றாம்தர முனிசிபாலிடிகள் இருக்கும் பகுதிகளிலும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா ?

THE HON. SRI P. KAKKAN : முதல்தர, இரண்டாம்தர, மூன்றாம்தர பஞ்சாயத்துக்கள் எல்லாம் இந்தச் சலுகையைப் பெற முன் வந்தால் அவ்வாறு வருகிற எல்லாப் பஞ்சாயத்துக்களுக்குமே அரசாங்கம் உதவி செய்யும்.

SRI V. K. KOTHANDARAMAN : இதுவரை ஒரு வீடுகூடக் கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கின்ற நகரசபைகளுக்கும் மேஜர் பஞ்சாயத்துக்களுக்கும் முதல் சலுகை கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இது சர்க்கார் ஏற்பாடு செய்வதில்லை. அந்தந்த நகரசபைகளும், பஞ்சாயத்துக்களும் முன்வந்தால் சர்க்கார் பாதிப் பணம் கொடுக்கும். பாதிப் பணமும் அவைகளால் ஒதுக்க முடியவில்லை என்றால் அரசாங்கத்திடமிருந்து அதற்காகக் கடன் வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம்.

Handloom cloths

DEPUTY SPEAKER : Questions 1926, 1927 and 1928 will be taken up together.

* 1926 *Q.*—SRI N. K. PALANISAMI : }
SRI A. A. RASHEED : } Will the Hon. the Minister for Electricity be pleased to state (*a*) whether the State Government have addressed the Government of India to arrange for the disposal of handloom cloths that are stocked without any sale; and

(*b*) if so, the reply received from the Centre?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The Handloom Export organisation has arranged for the purchase of accumulated stocks of "Bleeding Madras" variety.

* 1927 *Q.*—SRI A. A. RASHEED : }
SRI S. M. ANNAMALAI : }
SRI P. U. SHANMUGAM : } Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Union Government have offered to buy the unsold stocks of "Bleeding Madras" cloth from the State?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir. The Handloom Export Organization of the State Trading Corporation is procuring the unsold stocks of "Bleeding Madras" cloth under instructions from the Government of India.

* 1928 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether representations have been received from Co-operative Weavers' Societies regarding accumulation of stocks of handloom cloths; and

(*b*) if so, the steps taken to reduce the stocks?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Sir, may I know whether our Government have any information regarding the reported orders received from the United States of America for "Bleeding Madras" recently?

THE HON. SRI V. RAMAIAH : I have no information, Sir.

SRI N. K. PALANISAMI : ஸார், "ப்ளீடிங் மெட்ராஸ்" என்ற துணியை வாங்க மட்டும் ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதே மாதிரித் தேங்கிக் கிடக்கும் மற்ற கைத்தறித் துணிகளை வாங்குவதற்கும் அந்த மாதிரி ஸ்தாபனம் ஏற்படுத்த முன்வருவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH: இந்தக் கைத்தறித் துணிகள் பற்றிப் பரிசீலனை செய்ததில் 'ப்ளீடிங் மெட்ருஸ்' என்ற ரகந்தான் அதிக அளவில் தேக்கமாகி இருப்பதாகத் தெரிய வந்தது. அதனால் அதுபற்றி விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. மற்ற ரகங்களைப் பொறுத்தவரையில் அதிகமான தேக்கம் இல்லை.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: தலைவர் அவர்களே, நம்முடைய மாகாணத்திலே உள்ள பல ஜில்லாக்களிலே உள்ள சொசைடிகளில் இருந்து துணிகள் தேங்கிக் கிடப்பதை விற்பதற்கு அரசாங்கம் வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா? அவைகளின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: விண்ணப்பங்கள் ஏதும் வந்ததாகத் தெரியவில்லை. இதுபற்றிப் பொதுவாகப் பரிசீலனை செய்ததில் தீபாவளிப் பண்டிகைக்குப் பிறகு அதிகத் தேக்கம் இருக்காது என்ற தகவல் கிடைத்திருக்கிறது. இதுபற்றி மேலும் பரிசீலனை செய்து அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

SRIMATHI T. N. ANANDANAYAKI: இந்த "ப்ளீடிங் மெட்ருஸ்" துணியை மத்திய அரசாங்கம் வாங்கும்போது விலை குறைவாகக் கொடுப்பதாக வியாபாரிகள் தூது வந்தார்களா? முடிவு என்ன?

THE HON. SRI V. RAMAIAH: விலை நிர்ணயம் செய்யப்படுவது தரத்தைப் பொறுத்திருக்கிறது. இந்த ப்ளீடிங் மெட்ருசுக்கு அமெரிக்கா தேசத்தில் அதிக கிராக்கி இருந்தது, அதனால் தனிப்பட்டவர்கள் இதில் ஈடுபட்டு மிகவும் தரக்குறைவான துணிகளை உற்பத்தி செய்து அனுப்பிய காரணத்தால் அமெரிக்காவில் இதைத் தடை செய்துவிட்டார்கள். தரத்திற்குத் தகுந்தவாறுதான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

SRI A. GOVINDASAMY: "ப்ளீடிங் மெட்ருஸ்" என்ற ரகத் துணிக்கு அதிகக் கிராக்கி ஏற்பட்ட காரணத்தால் வடநாட்டுக்காரர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு அந்த ரகத் துணியைத் தயாரித்த காரணத்தால்தான் பாதகம் ஏற்பட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI V. RAMAIAH: இதை உற்பத்தி செய்தவர்கள் முழுவதும் தென்னாட்டுக்காரர்கள்தான்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM: தலைவர் அவர்களே, கைத்தறித் துணியின் தேக்கம் எத்தனை கஜம் என்று அமைச்சர் அவர்களால் சொல்ல முடியுமா?

THE HON SRI V. RAMAIAH: தற்போது எவ்வளவு தேக்கம் என்று சொல்ல முடியாது. இப்போதுதான் அதிகமான வியாபாரம் தீபாவளியின் காரணமாக நடைபெற்று இருக்கிறது. இந்தக் கேள்வியை இன்னும் ஒரு மாதமோ அல்லது இரண்டு மாதமோ கழித்துக் கேட்டால் புள்ளி விவரம் கொடுக்க முடியும்.

SRI S. M. ANNAMALAI: இந்தப் ப்ளீடிங் மெட்ருஸ் துணியை சொசைடிகளிடம் உள்ள இருப்பிலிருந்து வாங்குகிறார்களா? அல்லது தனியார் துறையிடமிருந்து வாங்குகிறார்களா? இன்னும் இருப்பில் இருந்தால் அதையும் மத்திய சர்க்கார் வாங்கிக்கொள்ள சர்க்கார் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

THE HON. SRI V. RAMAIAH: சொசைடிகளிடம் இருக்கும் துணிகளை மட்டுமல்லாது எங்கெங்கு தேக்கம் இருக்கிறது என்பதையெல்லாம் பரிசீலனை செய்து வாங்கப்படுகிறது. மேலும் விவரம் தேவையானால் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI A. A. RASHEED: Sir, may I know the total quantity proposed to be purchased from us by the Export Handloom Organization?

THE HON. SRI V. RAMAIAH: They are prepared to buy cloth of any standard that will be made available to them. Actually, we have not fixed any target as such.

SRI D. S. AUTHIMOOLAM: ஸார், இந்த ப்ளீடிங் மெட்ருஸ் என்ற சொல் "ரத்தக் கறை படிந்த" என்ற அர்த்தத்தைக் கொடுப்பதால் இந்தப் பெயரை மாற்றுவது பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா?

THE HON. SRI V. RAMAIAH: நாம் இந்தப் பெயரை மாற்றினால் அமெரிக்கர்கள் வாங்கமாட்டார்கள். இந்தப் பெயர் அவர்களுக்கு இஷ்டமாக இருக்கிறது. ஆகவே, வியாபாரத்தைக் கருதி இந்தப் பெயரை மாற்றாமல் இருப்பது நல்லது.

SRI V. K. KOTHANDARAMAN: அமெரிக்கர்களின் மோகத்திற்குத் தடை ஏற்படக்கூடிய வகையில் மட்ட ரகத் துணிகளை உற்பத்தி செய்து அனுப்பிய நபர்கள் யார் யார்? அவர்கள் பேரிலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இப்பொழுதும் அவர்கள் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு அனுமதி இருக்கிறதா அல்லது ரத்து செய்யப்பட்டுவிட்டதா?

THE HON. SRI V. RAMAIAH: அமெரிக்கர்களுக்கு யார் மேலும் தனிப்பட்ட முறையில் கோபம் கிடையாது, சில தனிப்பட்டவர்கள் தரக் குறைவான துணியை உற்பத்தி செய்த காரணத்தால் அவர்கள் வாங்க மறுத்தார்கள். இந்த ப்ளீடிங் மெட்ருசுக்கு அங்கு நிரந்தரமாகக் கிராக்கி இருக்க முடியாது. அமெரிக்கர்களைப் பொறுத்தவரை வருஷத்திற்கு ஒரு முறை அவர்களுடைய மோகம் மாறிக்கொண்டே இருக்கும். இருந்தாலும் எப்படியும் விற்பனை செய்யவேண்டும். மற்ற தேசங்களிலும் இந்த மோகத்தை உண்டு பண்ண முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும்.

Drivers (heavy transport)

* 1929 Q.—SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM: கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா— 11-30 a.m.

(அ) ஹெவி டிரான்ஸ்போர்ட் டிரைவர்களுடைய சர்க்கார் சம்பள விகிதம் என்ன?

(இ) இது லைட் டிரான்ஸ்போர்ட்டை விட எவ்வளவு அதிகம்?

(உ) பழைய சம்பளக் கமிஷன் ரிபோர்ட்படி சம்பளம் கொடுக்கப்படுகிறதா?

(எ) இல்லையென்றால் காரணமென்ன?

THE HON. SRI V. RAMAIAH: (அ) & (இ) There is no distinction in the scales of pay of drivers of heavy transport and light transport vehicles so far as the Madras State Transport Department is concerned. The following are the scales of pay of the drivers in that department:—

Drivers (Selection Grade)—Rs. 90—3—105—4—125.

Drivers (Ordinary Grade)—Rs 80—2—100.

(உ) Yes, Sir.

(எ) Does not arise.

SRI K. VINAYAKAM: Sir, is it a fact that the scale of pay and emoluments paid to the heavy-endorsed drivers of the Government Transport is lower when compared to that of drivers employed in Messrs. T.V.S. & Sons and other private enterprises? Will the Government consider the desirability of increasing the rate to that standard so as to attract efficient men?

THE HON. SRI V. RAMAIAH: When we take into account the conditions of employment of Government drivers, we cannot take into account only their pay for the purpose of increasing or decreasing their emoluments There are so many other factors which have to be considered. In consideration of all this, we are also able to get good drivers.

Agricultural implements (prizes to fabricators)

* 1930 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயக் கருவிகள் செய்பவர்களுக்குப் பரிசுகள் வழங்குவதைக் குறித்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கேட்டார்களா?

(இ) இதற்காக மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் தருகிறார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) & (இ) The Indian Council of Agricultural Research has sanctioned a scheme for the award of President's Gold Medal and prizes for outstanding contribution in the field of production of agricultural implements. Four copies of the rules are placed in the Legislature Secretariat Library. The Ministry of Commerce and Industry sought the co-operation of the State Government to inform all the manufacturing concerns of agricultural implements in this State of the scheme and advise them to participate in the competition. Action has been taken accordingly.

SRI S. M. ANNAMALAI: ஸார், விவசாயக் கருவிகள் என்றால் என்னென்ன பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன? விஞ்ஞான முறையிலும் நவீன முறையிலும் தயாரிக்கப்படுகின்ற கருவிகள் மட்டும்தானா? அல்லது பழைய கருவிகளையே தயாரிக்கலாம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறதா? எந்த அடிப்படையில் இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பழைய கருவிகள், புதிய கருவிகள் என்று ஒன்றும் பிரிக்கப்படவில்லை. பழைய கருவிகளையே புதுப்பித்து தயாரிக்கலாம். விஞ்ஞான முறையிலும் மாற்றி அமைக்கலாம். பொதுவாக நம்மிடையே மாடுகள் இழுக்கின்ற கருவிகள் இருக்கின்றன. கையால் உபயோகப்படுத்துகின்ற கருவிகளும் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நல்ல முறையில் தயாரிப்பவர்களுக்கு பரிசு கொடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் வட்டாரத்திலும் இதுபோன்ற விவசாயக் கருவிகளை கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்யவேண்டும் என்று மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கு ஆலோசனை கூறியிருக்கிறதா? அப்படியென்றால் அதன் மீது நம்முடைய சர்க்காரின் அபிப்பிராயம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இந்தக் கேள்வி இதிலிருந்து எழவில்லை. இதைப்பற்றி மேல் விவரங்கள் அறிய வேண்டுமானால் தனியாக கேள்வி போடவேண்டும். இதில் மத்திய சர்க்காருக்கோ அல்லது ராஜ்ய சர்க்காருக்கோ எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அதோடு இதில் பஞ்சாயத்து யூனியன்களும் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் இதில் வேண்டிய கவனம் செலுத்தி வருகிறது.

Agricultural implements (production)

* 1931 *Q.*—SRI A. R. MARIMUTHU: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் விவசாய உபகரணங்கள் செய்யும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(இ) அங்கு என்ன என்ன கருவிகள் செய்யப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) & (இ) A statement [a] is placed on the table of the House.

SRI A. R. MARIMUTHU: நவீன விவசாயக் கருவிகள் இப்போது விவசாயிகளுக்கு மிகவும் தேவையாக இருக்கின்றன. ஆகவே, ஒவ்வொரு தாலூகாவுக்கும் ஒவ்வொரு செண்டர் அமைத்து உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஒவ்வொரு தாலூகாவுக்கும் அமைப்பது என்பது சாத்தியமில்லை. கூடியமட்டும் இது விரிவாக்கப்படும்.

[a] Printed as Appendix IV on pages 114–115 infra.

SRI A. R. MARIMUTHU : பொதுவாக தயாரிக்கப்படும் விவசாயக் கருவிகள் மிகவும் தரம் குறைந்தவைகளாக இருக்கின்றன. சமீபத்தில் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் மூலம் கொடுத்த விவசாயக் கருவிகளை சரியானபடி உபயோகப்படுத்த முடியவில்லை. ஆகவே, இந்தக் கருவிகளை நல்ல முறையில் தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி அப்போதைக்கப்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதோடு கருவிகளை மட்டும் குறை சொல்லுவதில் பிரயோசனம் இல்லை, அதை உபயோகிப்பவர்கள் மீதும் தவறுகள் இருக்கலாம்.

Supply of fertilizers (Tiruchirappalli district)

*1932 *Q.*—SRI T. KARIA GOUNDER (on behalf of SRI G. ANNAMALAI MUTHURAJA) : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லாவிற்கு நடைமுறை விவசாய ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட உர மூட்டைகள் எவ்வளவு?

(இ) அது எந்த முறையில் விநியோகிக்கப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The total quantity of fertilizers fixed for Tiruchirappalli district for 1961-62 is 13,300 tonnes in terms of Ammonium Sulphate (one metric tonne of Ammonium Sulphate is sent in 10 bags of 100 kilograms each. In respect of other fertilizers one metric tonne is sent in 20 bags of 50 kilograms each).

(*b*) The retail distribution of these fertilisers to the ryots is done solely through the primary co-operative societies.

SRI A. GOVINDASAMY : திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூரில் ரசாயன உரத்தோடு சாப்பாட்டுக்கான உப்பையும் சேர்த்து விற்பனை செய்ததாக தகவல் இருந்ததே, அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இதில் யார் யாரெல்லாம் தண்டிக்கப்பட்டார்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது பழைய விஷயம். வேறு சில இடங்களிலும் இம்மாதிரி நடந்திருக்கின்றன. முக்கியமாக தென்னாற்காடு மாவட்டத்தில் மிகவும் அதிகமாக நடப்பதாக தகவல். இதைக் கண்டுபிடித்து கேஸ் போடப்படுகிறது. அதை கோர்ட்டுக்கு அனுப்புகிறார்கள். கோர்ட்டில்தான் தகுந்தபடி தண்டனை கொடுக்கப்படும்.

SRI A. GOVINDASAMY : தென்னாற்காடு ஜில்லாவில்தான் அதிகமாக நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றார்கள். அதை ஏன் போலீஸ் நிர்வாகம் சரியாக கண்டு பிடிக்கவில்லை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸ் நிர்வாகத்தின் குறைவு என்று என்றால் ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது. போலீசார் தக்கபடி நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

SRI T. M. NALLASAMI : 1960-61-ம் ஆண்டில் அமோனியம் சல்பேட் உரம் கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்டுள்ளதா? அப்படியானால் அது சரியாக விநியோகம் செய்யப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கரும்பு உற்பத்தி செய்பவர்களுக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. சில இடங்களில் இதை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், சில இடங்களில் ஃபாக்டரிகள் மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது.

SRI T. K. SUBBIAH : 'அரியலூரில் நடந்த உப்பு கலப்படத்திற்கு தென்னாற்காடு ஜில்லாவிலிருந்துதான் காலி சாக்குகள் வந்தன என்று சொல்லப்படுவது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தத் தகவல் என்னிடமில்லை.

Azhagar Hills

*1933 *Q.*—SRI A. E. CHANDRASEKHARA NAYAGAR : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரைக்கடுத்த அழகர் மலை யாருக்குச் சொந்தமானது?

(இ) அம்மலையின் பேரில் எத்தனை கோயில்கள், மடங்கள், தீர்த்தங்கள் இருக்கின்றன? அவைகளின் பெயர்கள் என்ன?

(உ) அழகர் மலையின் பேரில் ஜம்புலபுத்தூர் மண்டபம் என்று ஒன்று இருக்கின்றதா? அந்த மண்டபத்தில் வேறு கோயில்கள் கட்ட முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

(எ) அப்படியானால் அம்முயற்சிக்கும், சர்க்காருக்கும் சம்பந்தம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) It belongs to the Government.

(இ) There are three theerthams on the Hills, Hanumar theertham, Garuda theertham and Nupra Gangai theertham. There are no temples or madams on the Hills.

(உ) There is no mantapam on the Hills known as "Jampulaputhur Mantapam".

(எ) Does not arise.

[9th November 1961

Sri K. VINAYAKAM : முருகன் பெருமையை எடுத்துக் காட்டுகிற ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய பழமுதிர்சோலைதான் இப்போதுள்ள அழகர் மலை என்பது உண்மையா? அது வைஷ்ணவர் கையில் சிக்கி, அதன் மூலம் சைவம் அழிக்கப்பட்டு விட்டதும் வாஸ்தவம்தானா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இந்த மூலக் கேள்வியை கேட்டிருக்கும் அங்கத்தினர் அவர்கள் தீவிர வைஷ்ணவ ராவார், இந்த உப கேள்வியைக் கேட்கும் அங்கத்தினர் அவர்கள் முருகன் பக்தர் ஆவார். சர்க்காரைப் பொறுத்த வரையில் சைவமும், வைஷ்ணவமும் ஒன்றுதான். இங்கேயே பெருமாள் கோவிலில், விநாயகரும் இருக்கிறது, பைரவரும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

Sugar Mills, Pennadam

* 1934 *Q.*—**Sri S. RAMALINGA PADAYACHI :** கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விருத்தாசலம் வட்டம் பெண்ணாடத்தில் சர்க்கரை மில் ஏற்படுத்த இருந்தது எந்த நிலையில் உள்ளது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Soundararajan and Company, Madras, obtained a licence in October 1960 from the Government of India for the establishment of a sugar factory at Pennadam under the name and style of Aruna Sugar Limited, with a cane crushing of 1,250 tons per day. Share capital collection and purchase of machinery are in progress.

Sri A. GOVINDASAMY : இந்த ஆலை எப்போது துவங்கும், விவசாயிகளிடமிருந்து இதற்கான விண்ணப்பங்கள் வாங்கப்படுகிறதா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மிஷினரிக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஷேர்-காப்பிட்டல் வசூல் செய்யவேண்டும். இந்த வேலைகள் எல்லாம் இருக்கின்றன. நர்சரி பிளான்டேஷன் பற்றி என்னிடம் தகவல் இல்லை.

Sri S. RAMALINGA PADAYACHI : இந்த ஆலை கட்டுவதில், சில நிலச் சொந்தக்காரர்கள், தங்களை ஆலையின் பங்குதாரர்களாக சேர்த்துக்கொள்ளாததின் காரணமாக அவர்கள் நிலம் கொடுக்க மறுப்பதாகவும், இதன் காரணமாக பாக்டரி கட்டிட வேலை தடங்கல் ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது. இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக கேள்வி போட்டாலோ அல்லது எனக்கு தனியாக எழுதிக் கேட்டாலோ வேண்டிய விவரங்கள் தெரிவிக்கலாம்.

9th November 1961]

Polio-myelitis

* 1935 *Q.*—**Sri S. M. ANNAMALAI :** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

இளம்பிள்ளை வாதத்தைப் போக்க சர்க்கார் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

The Hon. Sri M. A. MANICKAVELU : Polio-myelitis is not prevalent in an epidemic form in this State. Stray cases, when they occur, are isolated and treated in hospitals. Concurrent disinfection procedures and preventive measures are also adopted to avoid the spread of the disease.

Sri S. M. ANNAMALAI : ஸார், இந்த வியாதியினால் அநேக சிறு குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். இதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது?

The Hon. Sri M. A. MANICKAVELU : இது ஒரு பூச்சியின் மூலமாக வருகிறது. தொத்து நோய் என்றும் சொல்லுகிறார்கள். இது பாதிக்கப்பட்டவர்கள் தனியாக இருக்கவேண்டும், தனியாக வைத்திருந்தால், மேலும் நோய் பரவாமல் தடுக்க முடியும். அதோடு சுற்றுப்புறமும் சுத்தமாக இருக்கவேண்டும், பாதிக்கப்பட்டிருப்பவர்களை ஜாக்கிரதையாக கவனித்துக்கொள்ள வேண்டும். இதன் மூலம் மற்றவர்களுக்கு பரவாதபடி தடுத்துக்கொள்ளலாம். வியாதி வந்துவிட்டால், மருந்து கொடுத்துத்தான் சிகிச்சை செய்ய வேண்டும்.

Sri M. S. SELVARAJAN : இந்த இளம்பிள்ளை வாத நோய் ஏற்பட்டிருக்கக்கூடியவர்களுக்கு சிகிச்சை செய்யக்கூடிய ஆர்தோபோடிக் ஸெண்டர்ஸ்களுக்கு ராஜ்ய சர்க்காரினால் ஏதாவது உதவி செய்யப்பட்டு வருகிறதா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இந்தமாதிரி நோய் வந்து உறுப்புகள் உபயோகமில்லாது போனால் உதவி செய்வதற்கான ஏற்பாடு இருக்கிறது. அதை இன்னும் விஸ்தரிப்பதற்கும் யோசனை இருக்கிறது.

Sri A. A. RASHEED : Sir, may I know whether there is any proposal to vaccinate the school going children with Dr. Salk's serum?

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes, Sir, that is also being considered.

Sri V. SANKARAN : நோய் வந்த பிறகு என்னென்ன ப்ரிக்காஷன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்த நோய் என்னென்ன காரணங்களினால் வருகிறது, இதைத் தடுக்க என்னென்ன விதத்தில் முன் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பார்த்து சர்க்கார் அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : சுகாதார விதிகளை அனுசரித்தால் கூடுமான வரையில் இதைத் தடுக்கலாம். (சிரிப்பு.)

[9th November 1961

Minor Irrigation Schemes (Salem district)

* 1936 *Q*.—SRIMATHI HEMALATHA DEVI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்காக சேலம் ஜில்லாவிற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) (1) சேலம் ஜில்லாவில், (2) தர்மபுரி தாலூகாவில் எடுத்துக்கொண்டு செய்த வேலைகள் யாவை?

(உ) 1961-ல் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ள வேலைகள் யாவை?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ), (இ) & (உ) A statement* is placed on the table of the House.

SRIMATHI HEMALATHA DEVI : இக்கேள்வியின் 'வி' பிரிவில் தெரிவித்துள்ளபடி 1961-62-ம் ஆண்டுக்கான வேலைகளில் மத்தளப் பள்ளம், மாவாத்திப்பள்ளம், மூலபெல்லூர், பெரியபள்ளம் ஆகிய ஏரிகளை இன்வெஸ்டிகேஷன் செய்துவிட்டார்களா? அப்படி செய்து விட்டிருந்தால் விவரம் என்ன என்று அறிவிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கிற விவரங்களைத் தவிர வேறு விவரங்கள் ஒன்றும் இல்லை. கனம் அங்கத்தினர் அதைப்பற்றி எனக்கு எழுதி அனுப்பினால் கவனித்து செய்ய வேண்டியதைச் செய்யலாம். இப் போது கொடுத்திருக்கிற ஜாபிதாவே பெரிதாக இருக்கிறது. அந்த ஜாபிதா பூராவையும் கனம் அங்கத்தினர் அவர்கள் பார்த்தார் களோ இல்லையோ என்று தெரியவில்லை.

Factory effluent (lands affected)

* 1937 *Q*.—SRI A. E. CHANDRASEKARA NAYAGAR : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தோல் பதனிடும் தொழிற்சாலை, பாரி அண்டு கம்பெனி இவைகளில் கழிவு நீர்களினால் வாலாஜா தாலூகாவில் எத்தனை ஏக்கர் நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது?

(இ) இதைக் குறித்து சர்க்காருக்கும், ஜில்லா சுகாதார அதிகாரிகளுக்கும், கலெக்டருக்கும் புகார்கள் வந்துள்ளனவா?

(உ) அப்புகார்களின்மீது எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக் கைகள் யாவை?

THE HON. SRI M. A. MANICKAVELU : (அ) About 950 acres.

(இ) Yes, Sir.

(உ)-Instructions have been issued to all the Commissioners of Municipalities, Executive Officers of Panchayats and Health Inspectors to impose conditions on the tanneries for the construction of sedimentation tanks.

---

* Printed as appendix V on pages 115-116 infra.

9th November 1961]

In June 1960 the Government discussed the best methods of treating the effluent let out by the factories of the East India Distilleries, Limited, Ranipet, and the Director of Public Health was asked to submit proposals—

(i) for the appointment of an Investigation Commission to find out the best method of treatment of the factory effluent and its disposal after treatment; and

(ii) whether it will be feasible to allow the treated water to be let out in the Company's field and to suggest a suitable solution for the problem.

The report of the Director of Public Health has been received and it is under consideration.

Regarding disposal of tannery effluents, an experimental study has been undertaken at Vaniyambadi. The study is expected to be completed this year and the method of disposal of tannery effluents evolved will be recommended for adoption by the tanneries.

SRI A. A. RASHEED : Sir, since the construction of sedimentation tanks costs money, will the Government consider to give some grant to these tanneries also?

THE HON. SRI M. A. MANICKAVELU : Why, the tanneries make plenty of money. They must undertake these works.

Health Research Laboratories

* 1938 *Q*.—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal to start wealth research laboratories in the districts; and

(*b*) if so, the estimated cost for each health laboratory?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether such health research laboratories will not be extremely useful for proper treatment of diseases and for effectively controlling epidemics and why not our Government see the desirability of building one such research health laboratory in our State?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, every district has got a laboratory except Coimbatore where we are going to have a laboratory on a bigger scale and in these laboratories examinations are taking place. For instance, examination of food samples, chemical and bacteriological examination of samples of water and examination of bacteriological and clinical material received from hospitals and health centres and all that. So the laboratories are serving these purposes.

[9th November 1961

DR. (SRIMATHI) T. S. SOUNDARAM RAMACHANDRAN: May I know, Sir, what is exactly meant by health research laboratories? I would like to know how health could be researched and whether such laboratories had been established in the districts?

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, that is the term used by the member, who put the question. We are having district laboratories, where research is also being undertaken. There are no separate research centres, which may be called health research laboratories.

Hospital for Arni, North Arcot district

* 1939 *Q.*—**SRI B. DORAISAMI REDDIAR**: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், ஆரணியில் கட்டப்படவிருக்கும் ஆஸ்பத்திரி எப்போது கட்டி முடிக்கப்படும்?

(இ) எத்தனை படுக்கைகள், ஆப்பரேஷன் தியேட்டர்கள், எக்ஸ்ரே லெபரேட்டரிகள் நிறுவப்படும்?

(உ) இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை குறைக்கப்பட்டிருப்பது உண்மையா?

(எ) அப்படியானால், காரணமென்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: (அ) **Preliminary steps for the construction of the hospital buildings are being taken up. It will be ready for occupation in due course.**

(இ) Forty-eight beds, one operation theatre and one **X-ray Laboratory will be provided.**

(உ) No.

(எ) Does not arise.

Town-Planning (Tiruchirappalli district)

* 1940 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether schemes of town-planning for Tiruchirappalli Municipality and Golden Rock Panchayat areas have been received by the Government;

(*b*) when the schemes were received and when they are expected to be approved; and

(*c*) the details of the schemes?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) **Three out of ten schemes of Tiruchirappalli Municipality have been received by the Government.**

9th November 1961]

No scheme for the Golden Rock Panchayat has been received so far.

(*b*) Two schemes have been sanctioned in 1948 and 1950 and the third Scheme received on 13th October 1958 was returned to the Commissioner, Tiruchirappalli Municipality, for carrying out modification suggested by the Director of Town-Planning. This was re-submitted on 24th October 1959. It has been referred to the Collector of Tiruchirappalli for remarks which are awaited.

(*c*) A statement [a] is placed on the table of the House.

Satyagraha notice from Agriculturists

* 1941 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN:**
SRI S. R. MUNUSAMI: } கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட ரிபப்ளிகன் பார்ட்டி தலைவர் மூலம் 28—7—1961 தேதியிட்ட விவசாயிகள் சத்தியாக்கிரக நோட்டீஸ் சர்க்காருக்குக் கிடைத்துள்ளதா?

(இ) சத்தியாக்கிரக நோட்டீஸ் வாதத்தின் அம்சங்கள் யாவை?

(உ) சத்தியாக்கிரக நோட்டீஸ் சம்மந்தமாகச் சர்க்கார் எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI M. A. MANICKAVELU: (அ) Yes.

(இ) (i) Lands under the sivoijama occupation of landless poor persons should be assigned to them;

(ii) Forest lands which are cultivable should be assigned to landless poor persons at the rate of 5 acres; and

(iii) Deprssed Classes should be assigned the lands reserved for them.

(உ) The points raished in the notice have been examined and a suitable reply has been given.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிற ஹரிஜன மக்கள் பல ஆண்டு காலமாகவே கேட்டு வருகிறார்கள். பல ஆண்டு காலமாகவே பரிசிலனை செய்கிறோம் என்றுதான் பதில் சொல்லப்பட்டு வருகிறது. அப்படி பரிசீலனை செய்து ஒன்று கொடுக்க முடியும் அல்லது முடியாது என்பதைச் சொல்லுவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பது பற்றியாவது சொல்ல முடியுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்த நிலம் வழங்குவதிலே ரொம்பவும் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஸ்பெஷலாக ஸ்டாஃபெல்லாம் நியமிக்க ஏற்பா

[a] Printed as Appendix VI on pages 117-118 infra.

[9th November 1961

டாகியிருக்கிறது. இதில் என்ன கஷ்டம் என்ருல் கொடுக்கக் கூடாத நிலத்தையே கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிருர்கள்—அதாவது. டாங்க் பெட், சானெல் புறம்போக்கு இவைகளைக் கேட்கிருர்கள். முதலில் இல்லை என்ருலும் திரும்பவும் அதையே கேட்கிருர்கள். மற்றப்படி சல்லிசாகக் கொடுக்கக்கூடிய நிலத்தில் தாமதம் இல்லை.

Sri K. VINAYAKAM: Sir, did the threatened Satyagraha movement fructify and if so, what were the repercussions?

The Hon. Sri M. A. MANICKAVELU: There were no repercussions as it did not fructify.

Sri S. R. MUNUSAMI: ஸார், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற டி.ஸி, புறம்போக்கு நிலங்களில் சென்னசமுத்திரம் போன்ற இடங்களில் நிலத்திலே வேலம் விதைகளை விதைத்து வருகிருர்களே பஞ்சாயத்திலே, அதெல்லாம் ஆட்சேபணைக்குரியதா என்பதைச் சர்க்கார் தெரிந்து அதன் மீது நடவடிக்கை எடுப்பார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இது ஒரு தனிப்பட்ட விஷயம். இதைப்பற்றி குறிப்பாக எழுதி அனுப்பிஞல் அல்லது என்னிடம் சொன்ஞல் விசாரிக்கிறேன். பொதுவாக ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் ஹரிஜனங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஒதுக்கப்படாத நிலம் ஹரிஜனங்களுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது.

Old age Pension

* 1942 *Q.*—Sri A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to grant old age pension for persons above 55?

The Hon. Sri C. SUBRAMANIAM: A scheme for the grant of pension to old and destitute persons is under the consideration of the Government.

* 1943 *Q.*—Sri T. T. DANIEL: } Sri M. P. SARATHI: } Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have decided to bring in legislation in regard to the payment of old-age pension for those above 60 years of age?

The Hon. Sri C. SUBRAMANIAM: The attention of the Member is drawn to the answer to question No. 1942 (Starred) by Sri A. A. Rasheed, M.L.A.

I now refer to another clause, viz., clause 23 which makes provision for reduction of rent. In sub-clause (2) it is stated—'Whenever adverse seasonal conditions result in the reduction of the gross produce from any particular crop to the extent of more than 25 per cent . . .' The expression 'more than 25 per cent' seems to be elastic. A certain fixed percentage has to be prescribed in that regard to allow reduction in the payment of the fair rent. These things may be considered by the Select Committee when they consider the various clauses of the Bill.

* **SRI R. SRINIVASA IYER:** தலைவர் அவர்களே, இந்த மசோதா, உச்ச வரம்பு சட்டத்திலிருந்து தர்ம ஸ்தாபன சொத்துக்களை விலக்கினதற்காக, இந்தச் சட்டசபைத் தொடரிலேயே

9th November 1961] [Sri R. Srinivasa Iyer]

இதைக்கொண்டு வந்து நிறைவேற்றிவிடுகிறேன் என்று கனம் அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கிணங்க—இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சபையிலேயே நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், பிரேரேபிக்கப்பட்டிருக்கிறது. இதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதை இங்கே வெளியிட விரும்புகிறேன்.

முக்கியமாக முஸ்லீம்களில் வாக்ப் என்று, தர்மத்திற்காக எழுதி வைத்ததும் அல்ல, இதரர்களுடைய உபயோகத்திற்காக வைத்ததும் இல்லையென்ற ரீதியில்—அதாவது அந்தச் சொத்தை விற்க முடியாத அளவுக்கு சொல்ப விகிதாசாரத்தை மட்டும் மசூதிக்கு என்று கொடுத்துவிட்டு பாக்கியை அந்த அந்தக் குடும்பத்தவர்களே அனுபவித்துக் கொள்ளும்படியாக எழுதி வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் அநேகம் இருக்கின்றன. அம்மாதிரி எழுதி வைக்க அவர்களுக்குத் தனியாகச் சட்டமே இருக்கிறது. அவை இந்தச் சட்டத்தின் கீழ் வருமா வராதா என்பது தெரியவில்லை. நியாயமாகப் பார்த்தால் அவைகளும் இந்தச் சட்டத்திற்குள் இருந்தால்தான் உணவு உற்பத்தி பெருகும். நியாயவார அடிப்படையில் விவசாயிகளுக்கு அனுகூலம் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'அக்ரிகல்சர்' என்பதற்கு உச்சவரம்புச் சட்டத்தில் என்ன விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அத்தனை விளக்கமும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தேவையில்லையென்று கருதுகிறேன். மத சம்பந்தமான சொத்துக்களைக் குத்தகைக்கு விட்டு, உணவு உற்பத்தி பாதிக்கப்படாத வகையில் கவனம் செலுத்துவதற்காக மட்டும் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தில் அவ்வளவு விளக்கமும் தேவையில்லையென்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக இந்த தர்மஸ்தாபனங்கள், கோயில்கள் எல்லாம் பர்சனல் கல்டிவேஷன் என்று பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. ஒன்று பர்சனல் கல்டிவேஷன் என்றே வைத்துக்கொள்ளவேண்டாம், எல்லாவற்றையும் குத்தகைக்கு விட்டுவிட வேண்டும் என்று செய்துவிடலாம். பண்ணைச் சாகுபடி என்று தர்மஸ்தாபனங்களுக்குத் தேவையில்லையென்று சொல்லிவிட்டால் கூடப் பரவாயில்லை. குத்தகைக்கு விட்டு நிச்சயமாக, நிரந்தரமாக 40 சத விகிதம் என்று அதில் கிடைக்கிற வரும்படியே அவர்களுக்குப் போதுமானது. ஆனால் சொந்தச் சாகுபடிக்கு அனுமதிப்பது என்றால் பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பது மிகமிகக் குறைவு. எக்கனமிக்கலாக இது இருக்காது. ஒரு ஆள், ஒரு ஜோடி மாடு என்று வைத்து பண்ணையில் வைப்பதாக இருந்தால் கட்டுப்படியாகக் கூடிய வகையில் அந்த அளவை இன்னும் உயர்த்த வேண்டும், அல்லது பண்ணைச் சாகுபடியே வேண்டாம் என்று செய்துவிடவேண்டும். இதை பொறுக்குக் கமிட்டியார் நன்கு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[Sri R. Srinivasa Iyer] [9th November 1961.

அடுத்தபடியாக இந்தப் பத்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்வதிலேயே இலுப்பத்தோப்பு, தென்னந்தோப்பு, மாந்தோப்பு, நந்தவனம் முதலியவைகளைச் சேர்க்கக்கூடாது. முக்கியமாக இந்த மசோதா எதற்கு என்று சொன்னால் ஒரே வருஷத்தில் ஒரு போகம், இருபோகம், முப்போகம் வரையில் மகசூல் அறுவடை செய்கின்ற மாசூல் விளையும் நிலங்களுக்குத்தானே தவிர தோப்புத்துரவுகளை எல்லாம் இதற்குள் கொண்டுவந்துவிடக் கூடாது. ஆகவே இலுப்பத்தோப், தென்னந்தோப்பு பழவகை மரங்கள் இவைகள் எல்லாம் வருஷத்திற்கு ஒரு முறை குத்தகைக்கு விடக் கூடியது. அவற்றுக்கு இதில் இருந்து விலக்கு கொடுத்துவிடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வாரச்சாகுபடி செய்தால் 40 சதவிகிதப் களத்து மேட்டில் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. களத்து மேட்டில் வாரத்தைக் கொடுக்காமல் எடுத்துக்கொண்டு போகக் கூடாது என்று இருக்கிறது. ஆனால் ஒரு மாதத்திற்குள் குத்தகை பணத்தைக் கொடுக்கலாம் என்றும் இருக்கிறது. இது ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருக்கிறது. வாரத்தைக் களத்து மேட்டில் கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் 424, ஐ.பி.ஸி. செக்ஷன்படி நடவடிக்கை எடுக்கலாம், எவிக்ஷன் ஆக்ட்படி நடவடிக்கை எடுக்க இடமுண்டு, அதுபோலவே இங்கும் இருக்கவேண்டும். தர்ம ஸ்தாபனங்களுக்கு நைவேத்தியம் முதலியவற்றுக்காக நெல்தான் வேண்டும். களத்து மேட்டில் நெல்லாக அளக்கவே இந்தச் சட்டத்தில் வகை செய்யப்படவேண்டும். மீறி நெல்லைக்கொண்டு போய்விட்டால் போன வருஷத்தில் ஜாஸ்தி விலை என்ன விற்றதோ அந்த விலைக்கு ஒரு மாதத்திற்குள் பணத்தைக் கட்டவேண்டும் என்று செய்யவேண்டும். மாதாமாதம் வெளியிடுகிற விலைவாசிப்படி என்று இருக்கக் கூடாது. இருந்தால் குறைந்த விலைக்கு விற்றதாகச் சொல்லி பணத்தைக் கட்டிவிட்டு அவர்கள் உயர்ந்த விலைக்கு விற்றுக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படும். தர்மஸ்தாபனங்களுக்கு விலைவாசியில் ஏற்படக்கூடிய லாபம் போய்விடும்.

அடுத்தபடியாக பர்சனல் கல்டிவேஷன் சம்பந்தப்பட்ட வரையில் டெபனிஷன் போடப்பட்டிருக்கிறது. அதில் ஹையர்டு லேபர் என்றுதான் இருக்கிறது. **Hired Stock** என்றும் இருக்க வேண்டும். எவிக்ஷன் சம்பந்தப்பட்ட வரையில்—என்ன என்ன காரணங்களுக்காக எவிக்ட் பண்ணலாம் என்று போடப்பட்டிருக்கிறது. அத்துடன் "வாரத்தைக் களத்து மேட்டில் கொடுக்காவிட்டால்" என்பதையும் சேர்க்கவேண்டும். மேலும் ஆதரைஸ்டு ஆபீசர் அவர்களே எடுத்து குத்தகைக்குக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. தவிர சாகுபடி முச்சிலிக்கா 3 பேருக்கு எழுதிக் கொடுக்கவேண்டும் என்பதில் தர்மகர்த்தா சார்பில் ஆதரைஸ்டு ஆபீசரே கையொப்பம் இடலாம் என்று வைக்கலாம்: கோர்ட்டில் பார்டிக்காக கையெழுத்திடுவது உண்டு. அதுபோல இதற்கும் போடலாம் என்று செய்யலாம்.

9th November 1961.] [Sri R. Srinivasa Iyer]

அடுத்தபடியாக, "**Restoration of possession**" -க்கு ஒரு செக்ஷன் இருக்கிறது. செக்ஷன் 18-ல் எந்தக் காலத்திற்குப் பிறகு டெனன்டை அப்புறப்படுத்தினால், "**Restoration of possession**" என்று இல்லை. ஆக்ட் 14/52-ல் ஒரு தேதி, ஆக்ட் 25/55-ல் ஒரு தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே மாதிரி இதிலும் ஒரு குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு அப்புறப்படுத்தப் பட்டால், "**Restoration of possession**" என்று இருக்க வேண்டும். இதில் தேதி விட்டுப் போயிருக்கிறது. குறுகிய காலத்திற்குள் பெரிய ஒரு மசோதாவைத் தயாரித்திருப்பதால் சில விஷயங்கள் விட்டுப் போயிருக்கலாம். 1961-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 29-ம் தேதியில் இந்த மசோதா பிரசுரமாகி இருக்கிறது. ஒன்று அந்தத் தேதியைப் போட வேண்டும். அல்லது உச்ச வரம்புச் சட்டப்படி 1960-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6-ம் தேதிக்குப் பிறகு குத்தகைதாரர்களை அப்புறப்படுத்தினால் அவர்களுக்கு "**Restoration of possession**" கொடுக்கவேண்டியது என்று இருக்க வேண்டும். அந்தமாதிரிக் குறிப்பிட்ட தேதி இருக்கவேண்டும்.

இந்த மசோதாவில் "பேர் ரெண்ட்" போடப்பட்டிருக்கிறது. "பேர் ரெண்ட்" எந்த மாசூலுக்கு என்று இல்லை. முதலில் சொன்னமாதிரி வருஷா வருஷம் சாகுபடி செய்து அறுவடை செய்யக்கூடிய மாசூலுக்கு மட்டுமா என்று தெரியவில்லை. தானியங்களான நெல், கம்பு, சோளம், கேழ்வரகு போன்று அப்போதைக் கப்போது சாகுபடி செய்து அறுவடை செய்யக்கூடியதற்கு மட்டுந்தான் 40 சதவிகிதம் என்று குறிப்பிட வேண்டும். இவைகளோடு தென்னந்தோப்பையும், மற்ற மரங்களையும் அனுபவித்துக் கொண்டுவரும்படி கொடுக்கமாட்டேன் என்று குத்தகைக்காரன் சொல்லுகிறான். மரங்களுக்கெல்லாம் குத்தகை காண்ட்ராக்ட்படி தான் நடக்கவேண்டும்.

"டிஸ்ட்ரிக்ட் கோர்ட்" என்பதற்கு "டெபனிஷன்" இரண்டு இடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. தர்மகர்த்தா குத்தகைக்கு விடுவது என்ற இடத்தில் ஒரே வாசகம் ஐந்து இடத்தில் கூறப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் ஒரே இடத்தில் வரலாம். மேலும் இந்தச் சட்டத்தை அமுலாக்குவதற்கான அதிகாரம் ஜில்லா கலெக்டரிலிருந்து கவர்ன்மெண்ட் வரை பல அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தனை பேருக்கு அதிகாரம் இருக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வளவு அதிகாரிகள் தேவையில்லை. ஆதரைஸ்டு ஆபீசர், கலெக்டர், கோர்ட் என்று இருந்தால் போதும். எல்லாவிதமான அதிகாரத்தையும் சேர்த்துப் போட்டால் இந்த மசோதா "சிம்ப்ளிபை" ஆகிவிடும். காலதாமதம் ஆகாது. சாகுபடி, எவிக்ஷன் ஆகியவை சீக்கிரத்தில் நடக்க வேண்டிய விஷயம்.

"**Tenant farming societies**" பற்றி நல்ல முறையில் செக்ஷன் போடப்பட்டிருக்கிறது. இதில், "லாண்ட் ஓனர்" சொசைடியில் மெம்பராகவில்லை என்பது முக்கியமான விஷயம். கோவாப்ப

[Sri R. Srinivasa Iyer] [9th November 1961.

ரேட்டிவ் சொசைடிஸ் ஆக்டுப்படிதான் நடக்க வேண்டும் என்றால் பிறகு அந்த சொசைடி பேரில் "லாண்ட் ஓனர்" சிவில் கோர்ட்டில் பிராது போடுவது முடியுமா? பாக்கி ஏற்பட்டால் என்ன செய்வது? என்பது தவிர்க்க முடியாது. இவையெல்லாம் குறைபாடுகள். "லாண்ட் ஓனரை" மெம்பராகச் சேர்த்து விட வேண்டும். அவருக்கும் அது ரொம்ப நல்லது. அதற்குக் கண்டிஷன் போட்ட பிறகு ஆர்பிட்ரேஷன் மூலம் நடவடிக்கை எடுக்க வழி வேண்டும். அப்படி இல்லையென்று சொன்னால் கோர்ட்டுக்குப் போகவேண்டுமா, கோர்ட்டுக்குப் போக முடியாதா என்பது சர்ச்சைக்கு இடமாகக் கூடிய விஷயமாகிவிடும்.

"Power of Government to issue orders and directions to the authorized officer, etc.", என்பது 48-வது செக்ஷனில் இருக்கிறது. இது வேறு எந்த ஆக்டிலும் இல்லை. இதில் புதிதாக இருக்கிறது. இந்த ஆக்ட் பற்றி "ஜெனரல் கேரக்டர்"-ஆக "ஆதரைஸ்டு ஆபீசருக்கு" "ஆர்டர்ஸ் அண்டு டைரக்ஷன்" போடலாம் என்ற அதிகாரம் அரசாங்கத்திற்கு இருப்பது சரியல்ல என்று தெரிகிறது. ஆக்ட் 24/52 படி பண்ணை நிலங்கள்கூட 10 எக்கருக்கு மேல் இருந்தால் குத்தகைக்கு விடவேண்டுமென்று சட்டமிருக்கிறது. பண்ணை ஆளை விலக்கும் காலத்தில் அந்த ஆக்டின் படி நஷ்ட ஈடு கேட்பான். அவனுக்கே குத்தகைக்கு விடவேண்டுமென்று கேட்பான். Act 14|52 Repeal ஆக்க வேண்டும். இந்த மசோதாவில் பல இடங்களில் ஒரே வாசகம் திரும்பத் திரும்ப வந்திருக்கிறது. அதையெல்லாம் நல்ல முறையிலே பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: கனம் தலைவர் அவர்களே, தேவாலயங்கள், மடங்கள் பற்றிய இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது. ஆரம்பத்திலும் தேவலாயங்கள், மடங்கள் ஆகியவற்றுக்குச் சொந்தமாக இருக்கக் கூடிய நிலங்களுக்குக் கூட வரம்பு கட்டவேண்டுமென்ற முறையில் வந்தது. அதற்குப் பிறகு அதை மாற்றி, திருத்தியமைக்கப்பட்டு இப்போது ஒவ்வொரு கட்டளைக்கும் 10 ஸ்டாண்டர்டு எக்கர் சொந்தமாக சாகுபடி செய்யலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. மற்ற நிலத்தை விவசாயிகளுக்கு எப்படிக் கொடுத்து விவசாயம் செய்யவேண்டுமென்ற அடிப்படையில் இந்த மசோதா வந்திருக்கிறது. இது பற்றிச் சிலர் நல்ல அரிய ஆலோசனைகள் கூறியிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே, ஒரிஜினல் பில்லில் பலவித விலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மசோதா எந்த முறையிலே கொண்டுவரப்பட்டிருக்கிறது? ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாவில் அவர்களுக்கே சொந்தமாகக் கூடிய முறையிலே விதி விலக்கு என்ற பெயரில், அது நிறைவேற்றப்பட்டு அதைப் போல இதையும் நிறைவேற்ற இப்படிப் பொறுக்குக் கமிட்டிக்குக் கொண்டு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டதா என்று நினைக்கவேண்டி

9th November 1961] [Sri V. K. Kothandaraman]

யிருக்கிறது. இதற்குப் பொறுக்குக் கமிட்டி அவசியமே இல்லை. ஆனாலும் போடப்பட்டிருக்கிறது. இப்போது இதிலே இருக்கக் கூடிய ஒரு சில குறைபாடுகளைப் பற்றிச் சொல்ல நான் ஆசைப் படுகிறேன்.

ஒரு கட்டளைக்கு 10 ஸ்டாண்டர்டு எக்கர் சொந்தமாகச் சாகுபடி செய்யலாம் என்று இருக்கிறது. கட்டளை என்று சொன்னால் யார் யார் என்று தெளிவாகத் தெரியவில்லை. பூ கொண்டுவந்து கொடுக்கிறவர் ஒரு கட்டளை அதைக் கட்டிக் கொடுப்பவர் ஒரு கட்டளை, சந்தனம் அரைப்பவர் ஒரு கட்டளை, அர்ச்சனை செய்பவர் ஒரு கட்டளை என்று என்னென்னவோ பெயர்களில் கட்டளைகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன்.

(Deputy Speaker in the Chair.)

ஆகவேதான் இந்தக் கட்டளைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற காரணத்தால் அமைச்சர் அவர்களுக்குக் கடந்த மாதம் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அந்தப் புள்ளி விவரங்களைத் தெரியப்படுத்த வேண்டுமென்று மேலதிகாரிகளுக்குச் சொல்லியிருப்பதாகச் சொல்கிறார்கள். அது வந்த பிறகுதான் நமக்குத் தெரியும். கட்டளை என்பதைப் பற்றி ஏன் தெரிந்து கொள்ளவேண்டுமென்கிறேன் என்றால், ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாவில் 1955-ம் வருஷத்திலிருந்து உச்ச வரம்பு கொண்டுவரப் போகிறோம் என்று சொல்லிக் கொண்டே வந்து 1960-ம் வருஷத்தில் கொண்டு வந்த காரணத்தினால்தான். இந்த ஐந்து வருஷ காலத்தில் அதை எப்படி எல்லாம் மாற்றி, திருத்தி எழுதிக் கொள்ளவேண்டுமோ அவ்வாறு திருத்தி எழுதிக் கொண்டார்கள். அதேபோல் 1955-ல் இல்லாத கட்டளைகளை இப்போது இருப்பதாகச் செய்து ஒரு கட்டளைக்குப் பத்து எக்கர் சாகுபடி செய்யலாம் என்று செய்தால் அதில் பலன் இல்லை. ஆகவேதான் எந்தெந்த வருஷத்தில் எந்தெந்தக் கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பற்றிய விவரங்களை எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி ஒரு கட்டளைக்கு 10 ஸ்டாண்டர்டு எக்கர் என்று இருப்பதைவிட ஒரு ஸ்தாபனத்திற்கு 10 ஸ்டாண்டர்டு எக்கர் என்று இருந்தாலே போதுமானது. கனம் ஸ்ரீனிவாசய்யர் அவர்கள் நெய்வேத்தியத்திற்கு இல்லையென்று சொன்னார்கள். விவசாயம் செய்து பாடுபடக் கூடியவர்களில் 100-க்கு 90 பேர் ஹரிஜன தாழ்த்தப்பட்ட மக்கள் தான். அவர்களுடைய குழந்தைகள் நெய்வேத்தியத்திற்கு வழி இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, நெய்வேத்தியத்திற்கு இல்லையென்று பார்ப்பது சரியல்ல. கூடுமான வரையில் சிக்கனமான முறையில் செய்யவேண்டும். மகாராஜாக்களை ஒழித்துவிட்டோமென்று நாம் சொன்னாலும் கம்பீரமான வகையில் வாழ்க்கை நடத்தக்கூடிய நிலையில் இந்த மடாலயங்கள் இருந்து வருகின்றன என்பது நான் சொல்லாமலேயே கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் இதைப்பற்றி

தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே ஒரு மடத்திற்கு பத்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் மட்டும் இருந்தால் போதும் என்று தீர்மானிப்பதுதான் சரியாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

இதுபோன்று ஒரு குடும்பத்திற்கு ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்ற அளவில் இருக்கவேண்டும் என்று சொல்லுகிற இந்த நேரத்தில், சில மடத்தின் நிலங்களில் யாருமே விவசாயம் செய்ய முன் வரவில்லை, ஆகவே சொந்த சாகுபடிக்கு எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்ற நிலைமை வரக்கூடாது. நிலங்களிலிருந்து ஏற்கனவே வெளியேற்றப்பட்டிருந்த விவசாயியாக இருந்தாலும் சரி, அல்லது இப்போது வேறு விவசாயம் செய்து கொண்டிருக்கிறவர்களாக இருந்தாலும் சரி, யார் விவசாயம் செய்ய விரும்பி முன் வருகிறார்களோ அவர்களுக்கு விவசாயத்திற்கு கொடுக்கவேண்டும். அப்படி யாரும் கிடைக்கவில்லை என்று சட்டென்று சொல்லிவிட்டால், நல்ல முறையில் பத்திரிகையில் விளம்பரம் செய்யவேண்டும். அப்படி விளம்பரம் செய்வதாக இருந்தால் வெளியில் இருக்கக்கூடியவர்களும் இதைப் பார்த்து விவசாயம் செய்வதற்கு முன் வருவார்கள். அந்த அடிப்படையில் பார்த்து விவசாயிகளுக்கு நிலங்களை விநியோகிக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்த மசோதா எந்த தேதியிலிருந்து நிறைவேறுகிறதோ அந்த தேதியிலிருந்து அமல் செய்யப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமில்லாமல் 1955-ம் ஆண்டிலிருந்தே இதை அமல்படுத்தக்கூடிய அளவுக்கு கொண்டு வந்தால்தான் உபயோகமிருக்கும். ஏற்கனவே நிறைவேற்றிய மசோதாவில் ஏற்பட்ட பல ஊழல்களை இதன் மூலம் தவிர்க்க முடியும் என்று . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மசோதாவை நிறைவேற்றியது இந்த மன்றம். ஆகவே அதில் ஊழல்கள் இருக்கின்றன என்று சொல்வது சரியல்ல, அது மிகவும் தவறு கூட.

SRI V. K. KOTHANDARAMAN: ஊழல் என்ற பதம் வேண்டுமென்றால் சரியில்லாமல் இருக்கலாம். ஆனால் நாம் மசோதாவை நிறைவேற்றிய நேரத்தில் எவ்வளவோ பேர்கள், பினாமி மாறுதல்கள் செய்து கொண்டது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அந்த மாதிரியான தவறுகள் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

அதோடு களத்திலேயே நெல்லை கொண்டுவந்து கொடுக்க வேண்டும் என்றும், இல்லையென்றால் உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சொல்லுவதுபோல் இருக்கிறது. களத்திலேயே நெல்லை கொடுப்பதற்கு விவசாயிகள் தயாராக இருந்தாலும்கூட, அதை உடனடியாக பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் தயாராக இருக்கமாட்டார்கள். அதற்கு மாறாக

என்னிடம் நேரில் தகவல் தெரிவிக்கவில்லை; என்னை கூப்பிடா
மலேயே நெல்லை கொண்டுபோய் விட்டார்கள் என்ற தகராறுகள்
எல்லாம் வரக்கூடும். இதையெல்லாம் கூடுமான வரையில் இதற்
கென்று இருக்கக்கூடிய அதிகாரிகள் தடுப்பதற்கு முயற்சி எடுக்க
வேண்டும். இதற்கு மாறாக விவசாயிகள் பேரில் பழிவாங்கக்கூடிய
நிலைமை ஏற்படக்கூடாது. இப்போதுள்ள நிலைமையைப் பார்த்
தால் பழிவாங்கக்கூடிய மனோபாவம் இருப்பதாகத் தெரிகிறது.
அதோடு இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவை இப்
போதே நிறைவேற்றியிருக்கலாம். ஆனால் இப்போது இது
பொறுக்கு குழுவுக்குப் போகப் போகிறது. ஆகவே பொறுக்குக்
குழுவுக்குப் போவதின் காரணமாக இந்த மசோதா இன்னும் நல்ல
முறையில் செழுமையடைந்து வரவேண்டுமே ஒழிய மடாதிபதி
களை திருப்திபடுத்தக்கூடிய வகையில் அமையக்கூடாது
என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதில் மடாதிபதிகள்
கருத்துக்கள் என்ன என்பதெல்லாம் செலக்ட் கமிட்டியின் முன்
வரும்போது தெரியும், கஷ்டப்பட்டு வாங்கின நிலங்களுக்கே உச்ச
வரம்பு கொண்டுவந்திருக்கும்போது ஏன் மடங்களுடைய நிலங்
களுக்கு மட்டும் உச்சவரம்பு கொண்டுவரக்கூடாது என்பதுதான்
நமக்கு புரியவில்லை. தர்மத்திற்காக கொடுத்த சொத்துக்களை
யாரும் சொந்தம் என்று எடுத்துக்கொள்ள முடியாது என்று
சொன்னால், அது காலம் போகப் போக நிச்சயமாக மாறியே தீரும்
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த
மசோதாவின் மூலம் ஏழை விவசாயிகள் பாதிக்காத வகையில்
இந்த மசோதாவை செலக்ட் கமிட்டியில் அமைக்க வேண்டும்.
அதற்கு போதிய அளவில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்
என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்
கொள்கிறேன்.

*** SRI M. SELVARAJ:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் துணைத்
தலைவர் அவர்களே, அறநிலையங்களுக்கும், மடாலயங்களுக்கும்
இருக்கின்ற நிலங்களுக்கு கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்ற
முறையில் கொண்டு வந்திருக்கின்ற மசோதாவை பொதுவாக
நான் வரவேற்கிறேன். ஏற்கனவே இந்த மன்றத்தில் நிலத்திற்கு
உச்சவரம்பு கட்டவேண்டும் என்பதற்காக சட்டம் கொண்டுவந்த
போது, எதிர்க் கட்சியிலுள்ளவர்கள், இந்த மசோதாவிலிருந்து
மடாலயங்களுக்கும், அறநிலையங்களுக்கும் விதிவிலக்கு
அளிக்கக்கூடாது என்று எடுத்துக் கூறினார்கள். அதற்
கிணங்க கனம் அமைச்சர் அவர்கள் இப்போது இந்த மசோதாவை
கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நாம் அவர்களை பாராட்ட
கடமைப்பட்டிருக்கிறோம். மேலும் அறநிலையங்களுக்கும், மடங்க
ளுக்கும் கனம் கோதண்டராமன் அவர்கள் கூறியது போன்று
டிரஸ்ட், அல்லது கட்டளை என்ற பெயரில் 10, 15 ஏக்கர்கள்
விட்டுக்கொடுப்பது என்றால், இதற்கென்றே 150 ஏக்கர்கள்வரை
ஒதுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவைகளை எல்லாம்
செலக்ட் கமிட்டிக்கு வருகின்ற நேரத்தில் அங்கத்தினர்கள் சற்று
கவனமாக சிந்தித்துப் பார்த்து, அதற்குத் தகுந்தபடி இதற்கான

[Sri M. Selvaraj] [9th November 1961.

"டெஃபினிஷனை" தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கட்டளைக்கு 10 ஏக்கர் அல்லது 15 ஏக்கர்கள் என்று ஒதுக்காமல் ஒரு ஸ்தாபனத்திற்கு மொத்தமாக 10 ஏக்கர் என்று ஒதுக்கப்படக்கூடிய நிலை. இந்த மசோதாவின் மூலமாக நான் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்தச் சட்டத்தின் மூலமாக ஏழை எளிய விவசாயி களை நிலங்களிலிருந்து வெளியேற்றக்கூடிய நிலைமை ஏற்படக் கூடாது. ஏதோ இப்போது குறைந்தது ஐந்து ஸ்டாண்டர்ட் ஏக்கர்களாவது ஒருவர் குத்தகைக்கு வைத்திருக்கவேண்டும் என்று ஏதோ சில சட்டதிட்ட விதிகள் அமைத்திருக்கிறோம். அற நிலையங்களுக்கும், மடாலயங்களுக்கும் கொடுக்கவேண்டிய பங்கு தொகையை, கொடுக்கவேண்டிய நேரத்தில் கொடுக்கவில்லை என்றால் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடிய நிலை ஏற்படக்கூடும். ஆகவே இதில் விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றாத நிலைமையில் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு கொடுக்க வழிவகை செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன். மேலும் அவர்கள் கொடுக்கவேண்டிய பங்குத் தொகை யைப் பார்க்கும்போது, பம்பு செட், மூலமாக பாசனம் செய்து கொண்டிருப்பவர்கள் 40 சதமானம் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பம்பு செட்டுக்கு ஏற்படுகின்ற மின்சார செலவு, அது சம்பந்தப்பட்ட எல்லா செலவுகளையும் அந்த நிலத்தை யார் குத்தகைக்கு ஏற்றியிருக்கிறார்களோ அவர் களே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியல்ல, ஆகவே இதை மாற்றி அமைக்கவேண்டும். அதற்கு மாறாக எந்த தர்ம ஸ்தாபனத்தின் பேரில் அந்த நிலம் இருக் கிறதோ அவர்களே இந்தச் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் இப்போது 40 சதமானம் என்றிருப்பதை மாற்றி 25 சதமானம் என்று திருத்தி அமைக்க வேண்டும். அப்போதுதான் விவசாயிகள் பொருளாதாரத் துறையில் ஓரளவுக்கு முன்னேற முடியும். ஆகவே இப்படிப்பட்ட சில சிக்கலான பிரச்னைகள் வரும் போது அவைகளை பொறுக்குக் கமிட்டியில் நன்கு பரிசீலனை செய்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தோப்புகள் போன்றவைகளுக்கு இதிலும் விதிவிலக்கு இருக்கவேண்டும் என்று ஒரு சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். விதிவிலக்கு இல்லாமலேயே இப்போது கட்டளை ஒன்றுக்கு பத்து ஏக்கர் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் விதிவிலக்கு என்று சொல்வதாக இருந்தால் இந்த மசோ தாவினுடைய நோக்கமே வெற்றியடைய முடியாது. ஆகவே ஒரு ஸ்தாபனத்திற்கு 10 ஏக்கர் என்று மட்டும் கொடுப்ப தற்கு வழிவகை செய்யவேண்டும். இன்னும் இது போன்ற பல பிரச்னைகளையும் கவனித்து பொறுக்குக் குழு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

9th November 1961]

SRI D. S. AUTHIMOOLAM: மிஸ்டர் டெப்டி ஸ்பீக்கர் ஸார், இந்த மசோதாவைப் பற்றி நினைக்கும்போது, ஒரு பக்கம் சிரிப்பு ஏற்படுகிறது. ஏனென்றால் எப்போதுமே நிலம் சம்பந்தமான கொள்கையில் சர்க்காருடைய தெளிவான அபிப்பிராயத்தைக் காண முடியவில்லை. இது சம்பந்தமாக முக்கியமாக நாலைந்து மசோதாக்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூர் பண்ணையாட்கள் சட்டம், டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட், ஃபேர் ரென்ட் ஆக்ட், வினோபாஜியினுடைய பூமிதான இயக்கத் தின் விளைவாக ஏற்பட்ட ஒரு சட்டம் இப்படி பல சட்டங்கள் கொண்டுவந்திருக்கிறீர்கள். கடைசியாக நிலத்திற்கு உச்சவரம்பு கட்டவேண்டும் என்ற சட்டம் வருகிறது என்று சொல்லி, அதையும் கொண்டுவந்தீர்கள். வந்ததிலே கடைசியிலே என்ன ஆயிற்று என்றால் 5 ஏக்கர், 3 ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருப்பவ னுக்கு விமோசனம் கிடைக்கவில்லை. அவன் தொலைந்தான்— சட்னியாகி விட்டான். அதற்குப் பிறகு மடாதிபதிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி இருக்கிறது உங்கள் தர்மமான சட்டங்கள். உங்கள் நியாயம் இப்படி இருக் கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: மசோதா இங்கு இருக்கிறது. அதைப்பற்றித்தான் கனம் அங்கத்தினர் பேச வேண்டும். தர்மத்தைப் பற்றிப் பேச வேறு இடம் இருக்கிறது —மேடை இருக்கிறது. இங்கு பேசவேண்டியது மசோதாவைப் பற்றித்தான். செலக்ட் கமிட்டியில் கனம் அங்கத்தினருடைய பெயரையும் பிரேரேபித்திருக்கிறேன். செலக்ட் கமிட்டியில் அங்கத்தினராக இருப்பவர்கள் இங்கே சாதாரணமாகப் பேசுவ தில்லை. பேசுவதாக இருந்தாலும் மசோதாவைப் பற்றித்தான் பேசவேண்டும். அதுவும் மசோதாவைப் படித்துப் புரிந்து கொண்டு பேசவேண்டும்.

SRI D. S. AUTHIMOOLAM: I have clearly understood the 'Masotha'. I am strictly adhering to the advice of the Hon. Minister also. அதாவது நான் சொல்ல வந்தது என்ன வென்றால் நீங்கள் இந்த மசோதாவிலே . . .

DEPUTY SPEAKER: To whom does the hon. Member refer by using the word 'Neengal'?

SRI D. S. AUTHOMOOLAM: அதாவது சர்க்கார். உச்ச வரம்பு மசோதாவிலே எல்லாவற்றுக்கும் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று நிர்ணயித்தீர்கள். அதன் பின்பு உங்களை—கனம் மந்திரி களையும், மற்றவர்களையும்—மடாதிபதிகள் பார்த்திருக்கிறார்கள். . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM: எந்த மடாதி பதியும் பார்க்கவில்லை. அந்தக் காரியங்களை கனம் அங்கத்தினரே பார்த்துக் கொள்ளலாம்.

Sri D. S. AUTHIMOOLAM: அதன் பேரில் அவர்களுக்கு தலுகை கொடுக்கவேண்டும் என்று 200 ஏக்கர் என்று கொண்டு வந்தார்கள். இருநூறு ஏக்கர் என்று கொண்டுவந்த பிறகு, 'ஆபத்பாந்தவா', 'அனுதரக்ஷகா' என்று அவர்கள் சர்க்காரை வேண்டிக்கொண்டிருக்கலாம். அவர்களுக்கு சலுகை செய்வதற் காக கடைசியில் அந்த நிலங்கள் அவர்களிடம் சாசுவதமாக இருக்கவேண்டுமென்று நில உச்சவரம்பு மசோதாவிலே இருந்ததை வாபஸ் பெற்றுக்கொண்டு இப்போது ஒருமசோதா வந்திருக்கிறது. இப்படி மசோதாவிற்கு கணக்கு வழக்கே இல்லை. இப்போது ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த நாட்டில் ஜமீந்தார் கள் எப்படி தேவையில்லை என்று அவர்களை காலி செய்தோமோ அதே மாதிரி மடாதிபதிகள் விஷயத்திலும் இதையெல்லாம் இந்த நில உச்ச வரம்பு மசோதாவில் சரியானபடி கண்டிப்பு செய்து அந்த நிலங்களை எடுத்து land to the tiller என்று பழமொழிக் கேற்ப நடக்கவேண்டும். மடாதிபதிகளிடமிருந்து நிலங்களை எடுத்துக் கொடுத்திருக்கலாம். அப்படிக்கில்லாமல் அவர்களுக்கு பாதுகாப்பு செய்துவிட்டார்கள். ஜமீந்தார்களுக்கு ஜமீன் உரிமை கிடையாது, அவர்கள் இந்த நாட்டின் ப்ராக்ரஸுக்கு முட்டுக்கட்டைகள் என்று அவர்களை எப்படி அப்புறப்படுத்தி னோமோ அதே மாதிரி இவர்களையும் செய்திருக்கவேண்டும். ஏன் சொல்லுகிறேன் என்றால் இந்த மடாதிபதிகள் கஷ்டப்பட்டு சம்பாத்தியம் செய்து லட்சக்கணக்கான ஏக்கர்கள் அவர்களுக்கு சொந்தமாக ஏற்படவில்லை. அந்தக் காலத்தில் இருந்த ஜனங்கள் பாமர ஜனங்களாக இருந்தார்கள். விவரம் தெரிந்த சமூகத்தார் ஆங்காங்கு நிலங்களை பட்டா செய்து கொண்டார்கள். இதைத் தவிர வேறு விதமாக இருக்க முடியாது. ஆயிரக்கணக்கான ஏக்கர்களை ஏகபோகமாக அனுபவித்துக்கொண்டு ஆத்மிக வேலை ஏதும் செய்யாமல் இருக்கிறார்கள். சில மடங்கள் இதற்கு எக்ஸெப் ஷனாக இருக்கலாம். சிருங்கேரி மடம், காஞ்சி காமகோடி பீடம் போன்ற மடங்களில் சில அறிவாளிகள் இருக்கலாமே தவிர நூற்றுக்கு தொண்ணூறு மடாதிபதிகள் ஒரு வேலையும் செய்யாமல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களால் நாட்டுக்கு ஒரு பிரயோசனமும் கிடையாது. அவர்களிடமிருந்து நிலங்களை நாம் பிடுங்கி நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுத்திருக்கவேண்டும். அப்படியில்லாது, ஒரு க்ளியர்-கட் பாலிஸி இல்லாத நிலையில் இருப் பதால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த மசோதாவைக் கொண்டு வந்ததிலே இன்னொரு ஆப்ஜெக்ட் பூர்த்தியாகிறது என்று நினைக் கிறேன். நமது ப்ரைம் மினிஸ்டர் எப்போது பார்த்தாலும் டெனெண்ட்ஸ் ஃபார்மிங் சொஸைட்டி, கல்ட்டிவேட்டிங் டெனெண்ட்ஸ் சொஸைட்டி, கூட்டுறவு விவசாயப் பண்ணை, அப்படி, இப்படி என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பதால், "தமிழ் நாட்டில் பாருங்கள், இப்போது ஒரு சட்டம் கொண்டு வந்து அதன் மூலம் ஆயிரக்கணக்கான டெனெண்ட்ஸ் ஃபார்மிங் சொஸைட்டி ஏற்படுத்தப் போகிறோம்" என்று அவர்களுக்குச்

சொல்லி, அவர்கள் மூலம் பிளானிங் கமிஷனுக்கு தகவல் சொல்லி, உணவு உற்பத்திக்காக வேலை செய்து விட்டதாகப் பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாமே தவிர இதன் மூலம் உண்மையாக நாட் டில் சோஷல் ஜஸ்டிஸ் செய்வதாக ஆகாது. இது மடாதிபதிகளைப் பாதுகாக்கும் திட்டம், மடாதிபதிகள் பரம்பரையாக வேலை செய்ய வேண்டாம் என்ற முறையில் அவர்கள் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வைத்துக்கொள்ளக் கூடிய முறையில் கொண்டு வந்தி ருக்கிறீர்கள். இப்படிச் செய்வது சோஷலிஸ பாணி சமுதா யத்தை அமைப்பதற்கு வசதியாகாது, நீங்கள் மடாதிபதிகளுக்கு இதன் மூலம் பாதுகாப்புக் கொடுப்பதாகத்தான் இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM: ஒன்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா இல்லாதி ருந்தால் நலம் என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

* **Sri G. NARAYANASWAMI NAIDU:** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்தச் சட்டம் வெகு நீண்ட நாட்களாக நாம் எதிர்பார்த்த அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக நான் நினைக் கிறேன். யாரோ ஒரு சிலருக்கு இந்த உலக பிரக்ஞை இல்லாதவர் களைத் தவிர பெரியவர்களாக இருப்பவர்களுக்கு, பண்டார சந்நிதி களுக்கு இந்த சட்டம் ஆதரவாக இருப்பதாகப்படு கிறதே தவிர ஆதரவாகப் போவதும் இல்லை, ஷரத்துக்களும் குடிகளுக்கு எதிரிடையாகவும் இல்லை என்று நான் கருதுகிறேன். கோவில்கள், அதற்குரிய தர்மங்கள் எப்போதுமே, எந்தக் காலத் திலுமே தேவை. சில தர்மங்கள் இப்போது தேவையில்லை என்று நாம் நினைக்கலாம். பழைய காலத்து வழிப்போக்கர்கள் ஒன்றைப் பார்த்திருப்பார்கள்—ஏன், இப்போது காரிலே போகிறவர்கள்கூட இந்தக் காட்சியைப் பார்த்திருக்கலாம். ஐந்து மைலுக்கு ஒரு மண்டபம் கட்டி அங்கே சமீபத்திலே ஒரு சுமைதாங்கிக் கல்லை நட்டிருப்பார்கள். அந்தக் காலத்தில் மூட்டை தூக்கிக்கொண்டு போகிறவர்கள் ஓய்வு பெற, தலையில் இருக்கும் சுமையை சுமை தாங்கிக் கல்லில் இறக்கிவிட்டு, பக்கத்தில் இருக்கக்கூடிய நீரூற்று அல்லது குளத்தில் தண்ணீர் சாப்பிட்டுவிட்டு மண்டபத்தில் தங்கி சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு செல்வதற்கு அந்தக் காலத் திலே தர்மங்களை ஏற்படுத்தினார்கள். ஆனால் இன்று மூட்டை தூக்கிக்கொண்டு போகின்றவர்கள் இல்லை, மண்டபத்தில் ஓய்வு பெறுகிறவர்களும் இல்லை. குளத்தில் தண்ணீர் சாப்பிட்டால் அது ரொம்பவும் சுகாதாரக் குறைவு என்று வேறு சொல்லப்படுகிறது. ஆகையால் இப்போது தண்ணீர்ப் பந்தல் தேவையில்லை, சுமை தாங்கி கட்டவேண்டியதில்லை, மண்டபங்கள் கட்ட வேண்டிய தில்லை. இன்னும் சில இடங்களிலே தண்ணீர் பந்தலுக்கு தர்மங் கள் இருக்கின்றன. மணலியில் சின்னய்யா எஸ்டேட்டிலே வெற் றிலை பாக்கு கொடுப்பதற்காகக் கொடுக்கப்பட்ட கிராமம் அது. சாப்பிட்டுவிட்டு ஓய்வு பெறுகிறவர்களுக்கு வெற்றிலை பாக்கு

[Sri G. Narayanaswami Naidu] [9th November 1961.

மாத்திரம் கொடுக்க நூற்றுக்கணக்கான எக்கர் எழுதிவைத்திருக்கிறார்கள். இப்போது பொதுமக்களுக்குப் பயனுள்ள காரியம் என்றால் வெற்றிலை பாக்குக்குப் பதிலாக, அதை சிகரெட் தர்மம் செய்கிற ஸ்தாபனமாக மாற்றியாக வேண்டும். இன்னும் 5 வருஷம் அல்லது 10 வருஷத்திற்குப் பிறகு வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்ளக்கூடியவர்கள் யாரையும் பார்க்க முடியாது. இப்போது கூட என்னையும் கனம் முத்துகுமாரசுவாமியையும் தவிர வேறு யாரும் அடைக்காய் போடுபவர் இல்லை. காலத்திற்கு ஏற்ற தர்மம் இது என்று புரிந்து அதற்கேற்ற வழியில் தர்மம் செய்ய இவைகளையும் இந்தச் சட்டத்தில் கொண்டு வந்தால் நலமாக இருக்கும்—சட்டம் அதற்கு இடம் கொடுக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. இருந்தாலும் மூல நோக்கம் என்று சில பேர்கள் சொல்லுகிறார்களே இந்த மூல நோக்கத்தை இந்தச் சட்டத்தினால் யாராலும் நிறைவேற்ற முடியாது. மூல நோக்கத்திற்கான காரணங்கேள மாறி விட்டன. ஆகையால் தர்மங்களால் ஜனங்களுக்கு தொந்தரவு இல்லாமல் தர்மம் தர்மமாகவே இருக்க வேண்டும்—ஆனால் அதே முறையில் அதர்மமாக இருக்கக்கூடாது. விவசாயம் செய்வதை ஏக போக உரிமையாக ஏலத்திற்கு விட்டு, பணம் உடையவர்கள் ஏலம் எடுத்து யாரோ வாழ்வதற்குப் பயன் பெற்றதை மாற்றவேண்டும். அது இந்தச் சட்டத்தினால் பூர்ணமாக நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன். பொதுவாக பசு மாடு வளர்த்து அந்த மாடு போடுகின்ற சாணத்தை எடுத்து அதை விபூதியாக்கி சில பேருக்கு கொடுப்பதற்காக என்று ஒரு தர்மம் எழுதி வைத்திருக்கிறார்கள். இது இப்போது தேவையா? நாம் கோயிலுக்குப் போனால், ஏதோ சிலர் பிறருடைய தொந்தரவுக்காக விபூதி பூசிக் கொள்வதைப் பார்க்கலாம். இப்போது விபூதி பூசிக் கொள்ளும் வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டு வருகிறது. அடுத்த தலைமுறைக்கு இந்த அளவுக்காவது இருக்குமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. ஆகவே அந்த மாதிரியான தர்மத்திற்காக எழுதியுள்ள பொருள்களை வேறு துறைக்குப் பயன்படுத்தலாம். அல்லது தமிழுக்கு, அதன் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்தலாம்.

பத்து ஏக்கர் வரையிலும் விதிவிலக்கு கொடுக்கலாம் என்று கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். இது நல்லதென்று எனக்குப் படுகிறது. நந்தவனமாக இருப்பதற்காகவே இந்த பத்து ஏக்கர் ஒதுக்கப்பட்டது என்று நான் கருதுகிறேன். பழைய காலத்திலே கிராமத்திலே உள்ள கோவில்களில்தான் புல்தரைகளையும், நந்தவனங்களையும் பார்க்கலாம். இந்த இரண்டும் கிராமத்தை அழகுபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வழி என்று நான் நினைக்கிறேன். அதேபோல் முன்பெல்லாம் கோயில்களில் நந்தவனங்கள் இருக்கும். இப்போது கோயில்களில் நந்தவனங்கள் இருப்பது மிகவும் குறைந்து போய்விட்டது. முந்தி கோயில்களின் உள்ளே போனால், விஷ்ணு கோயிலாக இருந்தால் அங்கு துளசி இருக்கும். சிவன் கோயிலாக இருந்தால் வில்வ மரம்

9th November 1961. [Sri G. Narayanaswami Naidu]

இருக்கும். இப்போது இருக்கிற வில்வ மரத்தையும் வெட்டி தைலம் காய்ச்சி விடுகிறார்கள். இப்போது மீண்டும் முன்புபோல் வில்வ மரங்களை வைக்க வேண்டும். காரணம் என்னவென்றால், அது வன மகோத்சவம் கொண்டாடியதாகவும் இருக்கும்; ஆரோக்கியத்தையும் கொடுக்கும்; அறிவையும் வளர்க்கும்; நல்ல அழகையும் கொடுக்கும். அதை விட்டுவிட்டு இப்போது பிரகாரம் பூராவும் கல்லும், செடிகளும், முள்ளுமாகத்தான் இருப்பதைக் காண்கிறோம். கோயில்களில் வில்வ மரம், துளசி ஆகியவைகளை வைப்பது மிகவும் அவசியம். வில்வ மரத்தின் உபயோகத்தைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் வண்டி வண்டியாய் சொல்லலாம்; அதேபோல் துளசியைப் பற்றியும் வண்டி வண்டியாய் சொல்லலாம். நம்முடைய உடல் ஆரோக்கியத்திற்கு இவைகள் மிகவும் அவசியம். ஆங்கில மருந்து டுலசால் என்பதுகூட துளசிச் சாறோடு, இன்னும் வேறு சில சேர்க்கப்பட்டு செய்வதாகச் சொல்லப்படுகிறது. அதேபோல் பிரான்ஸ் தேசத்திலிருந்து வில்வ மரத்திலிருந்து பற்பல மருந்துகள் செய்யப்பட்டு, அங்கு டப்பாக்களில் அடைக்கப்பட்டு இங்கு விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இந்த மாதிரி பல நன்மைகளைத் தரும் மரங்களையும் மருந்துக்கு உதவும் பச்சிலைகளையும் கோவில்களில் வளர்க்க வேண்டும். கொடுக்கக்கூடிய முறையில் இதை மாற்றியமைக்க வேண்டுமே தவிர, இந்த பத்து ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்கு என்று ஒதுக்கக்கூடாது. ஒதுக்க முடியாது. கோயிலைச் சார்ந்த நிலங்களை கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிரிடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இந்த பத்து ஏக்கர் ஒதுக்குவதைப் பற்றி நண்பர் ஸ்ரீ. ஆர். சீனுவாச அய்யர் அவர்கள் ஒரு கோணத்திலிருந்து பார்த்துப் பேசினார்கள். நான் மற்றொரு கோணத்தில் இருந்து பேசுகிறேன். இந்த பத்து ஏக்கர் நிலத்தை மட்டும் தனிப்பட்ட முறையில் கோவிலார் சாகுபடி செய்யவேண்டுமென்றால், அதற்காக தனியாக உழவு மாடுகள் வேண்டும். அதை கோவில் டிரஸ்டியோ அல்லது பண்டார சந்நதியோ நேரில் பார்வையிட வேண்டும். அப்படியெல்லாம் பார்த்தாலும் அது கடைசியிலே நஷ்டத்திலே தான் போய் முடியும். லாபம் வரக்கூடிய முறையில் நம்முடைய தர்ம சொத்துக்கள் இதுவரையிலும் பரிபாலித்தது கிடையாது. பரம்பரை டிரஸ்டிகளாக உள்ளவர்கள், தங்கள் பிள்ளை தவறான வழியில் ஈடுபட்டிருந்தால், சொத்து அழிந்து விடக்கூடாதே என்பதற்காக, தர்மத்திற்காக எழுதி வைத்தார்களே தவிர, அதை ஒரு ஷராவாக வைத்துக் கொண்டிருந்தார்களே தவிர, வேறொன்றுமில்லை. அப்படி வைக்கப்பட்ட தர்ம சொத்துக்களும் இன்றைக்கு அழிந்துவிட்டது. சத்திரங்கள் தமிழ் நாட்டிலே இருக்கிறது என்று சொன்னால், எந்த சத்திரமாவது நல்ல முறையிலே இருக்கிறதா என்று பார்த்தால் ஒன்றுகூட இடிந்து விழாமல் இல்லை. ஏதோ சத்திரம் என்று பெயருக்கு இருக்கும். அதற்குரிய சொத்துக்களை ஒருவர் அல்லது சில பேர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சொத்துக்களையெல்லாம் நல்ல

[Sri G. Narayanaswami Naidu] [9th November 1961

முறையில் பரிபாலித்து, அந்தச் சொத்துக்கள் எல்லாம் பொது மக்களுக்கு உபயோகப்படும் வகையில் மாற்றியமைக்கவேண்டும். அதற்கு இந்தச் சட்டம் இடம் கொடுக்குமென்று நான் கருதுகிறேன். பண்டார சந்நதிகள் இனிமேல் நிலம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னாலும், அந்த வாய்ப்பு தானாகவே குறைந்து போய்விடுமென்று நான் நினைக்கிறேன். சாகுபடி செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் இல்லாமல் அரசாங்கம் செய்துவிட்டால், அவர்கள் நிலம் வைத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே அந்த முறையில் இந்த சட்டம் இருக்க உதவும் என்று நம்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த சர்க்காரையும், அறநிலைய அமைச்சர் அவர்களையும் நான் மனமாரப் பாராட்டிக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் பொறுக்குக் கமிட்டியிலே இருப்பதால், முக்கியமாக இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதிகமாக நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. முக்கியமாக தர்ம ஸ்தாபனங்கள் நல்ல முறையிலே நடக்க வேண்டும், சாகுபடியாளர்களை அப்புறப்படுத்தக் கூடாது, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றெல்லாம் இருப்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இதிலே முக்கியமானதொன்று, நாம் உச்ச வரம்பு மசோதாவிலே முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று பேசி தீர்மானம் செய்திருக்கிறோம். ஆனால், இதிலே பத்து ஏக்கர் என்று கண்டிருக்கிறது. நிர்வாக ஸ்தாபனம் நல்லமுறையில் நடப்பதற்கு தேவாலயங்களுக்கு இன்னும் அதிகமாக வருவாய் வேண்டும். ஆகவே தர்ம ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நடப்பதற்கு பொதுவாக முப்பது ஏக்கர் வைக்கலாமா, கூடாதா என்பதைச் சர்க்கார் சற்று யோசிக்கவேண்டும். தவிர, தோப்புக்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டும். தென்னந்தோப்புக்களுக்கும், இலுப்பைத் தோப்புக்களுக்கும் முக்கியமாக விதிவிலக்கு கொடுக்க வேண்டும். இவை இரண்டும் தேவாலயங்களுக்கு மிகவும் முக்கியமானது. எண்ணெய் எடுப்பதற்கு இலுப்பைத் தோப்புக்கள் மிகவும் அவசியம். அதேபோல் கோயில்களுக்கு தேங்காயும் முக்கியமானது. ஆகவே இவைகளையும் சற்று யோசிக்க வேண்டும். இந்த அளவோடு என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டு, மற்றவைகளை ஒவ்வொரு செக்ஷனை வரும்போது என்னுடைய அபிப்பிராயத்தை பொறுக்குக் கமிட்டியில் சமர்ப்பிக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*** THE HON. SRI M. BHAKTAVATSALAM :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்கள், யோசனைகள், குறைபாடுகள் எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னார்கள். சிலவற்றை பொறுக்குக் கமிட்டியிலே பரிசீலனை செய்யலாம் என்று சொன்னார்கள். சில

9th November 1961.] [Sri M. Bhaktavatsalam]

யோசனைகளை இந்த மசோதா சட்டமாக்கப்பட்ட பிறகு விதிகளிலே கவனிக்கலாம். வேறு சிலர் சில கருத்துக்கள் இந்த மசோதாவுக்குப் புறம்பானது என்று சொன்னார்கள். பொதுவாக இந்தச் சந்தர்ப்பத்திலே இதையெல்லாம் எடுத்துக் சொல்வதற்கு கனம் அங்கத்தினர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் இது பொறுக்குக் கமிட்டியிலே கவனிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனால் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தர்ம ஸ்தாபனங்கள் சிலவற்றிற்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நாம் அதோடு மட்டுமல்லாமல், எல்லாவற்றுக்கும் 5 ஏக்கருக்கு மேற்படாமல் இருக்கவேண்டுமென்று செய்திருக்கிறோம். அப்படிச் செய்வதனால் தோப்புக்களை குத்தகைக்கு விட முடியாது. தோட்டப் பயிர்களை விட முடியாது. மலைப் பிரதேசங்களை விட முடியாது. ஆகவே இவைகளுக்கு எல்லாம் விதிவிலக்கு கொடுக்கப்பட வேண்டும். இதையெல்லாம் தான் செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்யும். அதேபோல் வேறு சில கனம் அங்கத்தினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் இந்த கமிட்டி பரிசீலனை செய்யும். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது, கோயில்களுக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறதே, நாம் உச்ச வரம்பை சட்டத்திலே 30 ஏக்கர் என்று செய்திருக்கிறோமே என்று சொன்னார்கள். அந்த 30 ஏக்கர் வேறு, இந்த 10 ஏக்கர் வேறு. சொந்தத்திற்கு நிலத்தை வைத்துக் கொள்வதென்றால், 30 ஏக்கர் என்று வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. இதிலே சொந்தத்திற்கு எடுக்கவில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம் என்பதற்காக முன்பு உச்ச வரம்பு சட்டத்திலே இதற்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் இப்போது 10 ஏக்கர் என்று சொல்வது, இதைச் சொந்தமாக சாகுபடி செய்வது. மற்றவையெல்லாம் குத்தகைதாரர் மூலமாக. முன்பெல்லாம் சொந்தமாக சாகுபடி செய்ததின் மூலமாக, நஷ்டம் வருகிறதே தவிர, பலனில்லை. வேண்டுமானால் ஒன்றிரண்டு தர்ம ஸ்தாபனங்களுக்கு வரலாம். ஆகவேதான் சொந்த உபயோகத்திற்கு என்று தர்ம ஸ்தாபனத்திற்கும், தேவஸ்தானத்திற்கும் ஓரளவுக்கு நிலம் ஒதுக்கவேண்டுமென்பதற்காக பத்து ஏக்கர் என்று வைத்திருக்கிறோம். ஆகவே 30 ஏக்கர் தேவையில்லை. ஆனால் இந்த 10 ஏக்கர் வேண்டுமா, அல்லது அதற்கும் குறைவாக வேண்டுமா, அல்லது அதிகமாக வேண்டுமா என்பதையெல்லாம் கூட பொறுக்குக் கமிட்டியிலே முடிவு செய்துகொள்ளலாம். ஆகவே நான் மேலும் இந்தச் சபையினுடைய காலத்தை எடுத்துக்கொள்ளாமல் இந்த மசோதா பற்றி பொறுக்குக் கமிட்டியிலே நல்ல முறையிலே முடிவு செய்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அங்கத்தினர்கள் எல்லோரும் ஏகமனதாக இதை வரவேற்றது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த மசோதாவிலே ஒன்றுமில்லை என்று சொன்ன அங்கத்தினர்கூட, இந்த மசோதா வேண்டாமென்று சொல்லவில்லை. அனைவரும் இந்த மசோதாவை வரவேற்றதற்காக நன்றி கூறிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[9th November 1961

1-30 p.m. DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Land) Bill, 1961 (L.A. Bill No. 47 of 1961) be referred to a Select Committee consisting of—

1 The Hon. Sri M. BHAKTAVATSALAM.
2 The Hon. Sri C. SUBRAMANIAM.
3 Sri P. G. KARUTHIRUMAN.
4 Sri R. SRINIVASA IYER.
5 Sri T. T. DANIEL.
6 Sri K. S. G. HAJA SHERIFF.
7 Sri R. SUBRAMANIAM
8 Sri K. R. VISWANATHAN.
9 Sri K. S. SUBRAMANIA GOUNDER.
10 Srimathi Dr. T. S. SOUNDARAM RAMACHANDRAN.
11 Sri A. R. SUBBIAH MUDALIAR.
12 Sri V. K. RAMASWAMY MUDALIYAR.
13 Sri D. S. AUTHIMOOLAM.
14 Sri V. K. KOTHANDARAMAN
15 Sri M. SELVARAJ.
16 Sri A. R. MARIMUTHU.
17 Sri G. NARAYANASWAMI NAIDU.

The motion was put and carried.

Under Rule 99 (1) of the Assembly Rules, I nominate Hon. Sri M. Bhaktavatsalam as the Chairman of the Select Committee.

VI. ANNOUNCEMENTS—*cont.*

(2) BUSINESS OF THE HOUSE.

DEPUTY SPEAKER : I have to announce that the Business Advisory Committee at its meeting to-day decided on the following programme of business—

November 9th (after noon)	Discussion on the Third Five-Year Plan.
November 10th November 11th	Discussion on the Third Five-Year Plan.
November 12th Sunday—Holiday.	
November 13th	Discussion on National Integration.
November 14th November 15th; and November 16th	1. The Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 26 of 1961).

9th November 1961] [Deputy Speaker]

November 14th November 15th; and November 16th—*cont.*	2. The Madras City Municipal (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 35 of 1961). 3. The Madras Hill Stations (Preservation of Trees) Amendment Bill, 1961. 4. The Madras Private Forests (Assumption of Management) Bill, 1961. 5. The Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961). 6. The Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961). 7. The Madras Minor Inams Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 48 of 1961). 8. The Madras Lease-Holds (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 49 of 1961). 9. The Madras Iruwaram Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 50 of 1961).

The House will sit, if necessary on the 17th November 1961 also.

The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then rose.

[After lunch 3 p.m.]

IV. GOVERNMENT MOTION—*cont.*

(2) THE THIRD FIVE-YEAR PLAN—MADRAS STATE.

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, Sir, I move—

"That the Third Five-Year Plan for the State of Madras be taken into consideration."

கனம் உதவி சபா நாயகர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நம்முடைய நாடு முன்னேறுவதற்காக உருவாக்கப் பட்டு, சென்னை அரசாங்கத்தை, தமிழ் நாடு அரசாங்கத்தைப் பொறுத்த வரை, எந்தெந்தத் திட்டங்களை எந்தெந்த அளவுக்கு நிறைவேற்ற வேண்டுமென்று முடிவாகியிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நம் சபையிலே இதற்கு முன்பே விவாதம் செய்து, அப்பொழுது நம்முடைய பல கருத்துக்களைச் சொல்லி, எந்த எந்த திட்டங்களை எடுக்க வேண்டுமென்று அப்பொழுதே

[Sri C. Subramaniam] [9th November 1961

ஓரளவுக்கு நம் கருத்துக்களைக் கூறினோம். அதற்கு பிற்பாடு
மற்ற எல்லா இராச்சியங்களிலும் அவர்கள் சட்ட சபைகளிலும்
அவர்கள் சொன்ன கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு, எந்த அள
வுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இருக்க வேண்டும் என்று
முடிவு எடுக்க வேண்டியது பொதுவாக நாஷனல் டெவலப்மெண்ட்
கவுன்சிலுக்கு ஏற்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் அறி
வார்கள், நாஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் எல்லா இராச்சிய
முதன் மந்திரிகளும் இடம் பெற்று இருக்கிறார்கள் என்பது.
அதோடு, ப்ளானிங் கமிஷன் அங்கத்தினர்களும், மற்றும் மத்திய
சர்க்கார் முக்கிய மந்திரிகளும் இடம் பெற்று இருக்கும் ஒரு சபை.
அந்த சபை நாடு முழுவதிற்கும் எந்த முறையிலே திட்டம் தீட்ட
வேண்டும் என்று நிர்ணயிக்க வேண்டிய பொறுப்புள்ள சபையாக
அது அமைந்திருக்கிறது.

ப்ளானிங் கமிஷனுடைய வேலை, அதனுடைய பணி, ஆலோசனை
சொல்லக் கூடியது. அந்த அளவுக்குத்தான் ப்ளானிங் கமிஷனுக்கு
அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறதே ஒழிய, ப்ளானிங் கமிஷ
னுக்கு திட்ட வட்டமாக இந்தக் காரியத்தைத்தான் செய்யவேண்டு
மென்று சொல்லும் அதிகாரம் கிடையாது. ஆனால், இப்பொழுது
இருக்கும் ப்ளானிங் கமிஷனுக்கு ஒரு முக்கியத்துவம் என்ன
வென்றால், நம் பிரதம மந்திரி ப்ளானிங் கமிஷனுக்கு தலைவராக
இருக்கிறார்கள். அதன் காரணத்தினால், ப்ளானிங் கமிஷன்
சொல்லும் ஆலோசனைகளுக்கு ஒரு தனி மதிப்பு இருக்கிறது
என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இருப்
பினும், ப்ளானிங் கமிஷனுக்கு அதிகார பூர்வமாக இன்னின்ன
காரியங்களை, திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லக்
கூடிய எந்த விதமான அதிகாரமும் கிடையாது; பொறுப்பும்
கிடையாது. அவர்களுக்கு. அவர்கள் ஆலோசனை சொல்லக்
கடமைப் பட்டிருக்கிறார்கள். அந்த ஆலோசனைகளை மற்ற எல்லா
இராச்சிய சர்க்கார்களும், மத்திய சர்க்காரும் பரிசீலனை செய்து
ஒரு முடிவு எடுப்பதுடன், எல்லாவற்றிற்கும் மேலாக, தேசீய அபி
விருத்தி கவுன்சிலில், எல்லா இராச்சியங்களிலிருந்தும் வரும்
பிரதிநிதிகள், மத்திய சர்க்கார் பிரதிநிதிகள், இவர்கள் எல்லாரும்
உட்கார்ந்து, ஒரு முடிவு செய்ய வேண்டுமென்ற முறையிலே
அமைப்பு இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பல சமயங்
களிலே நமக்கும் கூட தோன்றும்: ஏன் இந்த ப்ளானிங் கமிஷனு
க்கு இவ்வளவு அதிகாரம் கொடுக்க வேண்டும் என்று. அப்படி
நமக்கும் கூட ஒரு குழப்பம், குழப்பமான நிலைமை ஏற்படுகிறது.
அதற்கு ஒரு காரணம், ப்ளானிங் கமிஷனில் இருப்பவர்கள்கூட,
ஒரு சிலர் தங்களுக்கு ஏதோ அதிகாரம் இருப்பதாக நினைத்துக்
கொண்டு பேசுவதுதான் என்பது என் கருத்து. ப்ளானிங் கமி
ஷனைப் பொறுத்த வரையில், அது ஒரு ஆலோசனைக்குழு என்று
அவர்கள் உணரவேண்டும். அந்த முறையிலே, ஆலோசனைக்குழு
அங்கத்தினர்கள் நடந்து கொண்டால், நாட்டிலே இந்தக் குழப்பத்
திற்கு இடம் இராது. சமீபத்திலே கூட, ப்ளானிங் கமிஷன் அங்கத்
தினர் ஒருவர் நாம் இங்கே கொண்டுவந்த நிலச் சீர்திருத்த மசோ
தாவைப் பற்றிப் பேசியிருந்தார்கள். (குறுக்கீடு) ஆம், மைசூர்

9th November 1961] [Sri C. Subramaniam]

சட்டத்தைப் பற்றிப் பேசியிருந்தார்கள். அது உண்மையிலேயே வருந்தத்தக்கது. அது ப்ளானிங் கமிஷனுக்கே சரியானதல்ல. அந்தக் குழு அங்கத்தினர்கள் எந்த அளவுக்கு மௌனமாக இருக்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் தங்கள் பணியைச் செய்ய தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள்; பேசுவதற்காகவல்ல, கொள்கைகளை வகுப்பதற்காக அல்ல அந்தக் குழு; அது ஒரு ஆலோசனைக் குழு என்பதை அவர்களும் உணரவேண்டும். இம்மாதிரிப் பேச்சுக்கள் வருவதால்தான் மற்றவர்களும், ஏதோ கடைசியில் முடிவு செய்ய வேண்டியது ப்ளானிங் கமிஷன் போல் இருக்கிறது என்று பலர் நினைக்க இடம் ஏற்படுகிறது. அம்மாதிரிச் சூழ்நிலை ஏற்படுவதை தவிர்க்க வேண்டியது மிகவும் அவசியம் என்று நான் இன்றைக்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

அரசியல் அமைப்பில், அரசியல் சட்டத்திலே, மத்திய சர்க்காரைப் பொறுத்த வரையில், பார்லிமெண்டுதான் எல்லாவிதமான அதிகாரத்திற்கும் பொறுப்பு பெற்று இருக்கிறது. அதே மாதிரி, நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில், இந்த சட்ட சபைதான்—மேல் சபையையும் சேர்த்து என்று வைத்துக்கொள்ளலாம்—நம் சட்ட சபை அமைப்பு எல்லா அதிகாரத்தையும் பெற்று இருக்கிறது. இதிலே நாம் இன்னொருவர் ஆலோசனையை ஏற்றுக் கொள்ளலாம், ஏற்றுக் கொள்ளாமல் இருக்கலாம். சட்ட சபை பிரதிநிதிகள் என்ற முறையில், மந்திரி சபைக்கு பொறுப்பு, அதிகாரம் இருக்கிறது. ஆனால், அந்த அதிகாரம் இந்த சட்ட சபை கொடுக்கும் அதிகாரம் தான். ஆகையினால், அரசாங்கங்களுக்கு, அது ராஜ்ய சர்க்கார்களானாலும் சரி, மத்திய சர்க்கார் ஆனாலும் சரி, ஆலோசனை கொடுக்க வேண்டிய பொறுப்பு மட்டும் திட்ட கமிஷனுக்கு உண்டே தவிர, அதற்கு மேல் இல்லை. அதை நாமும் உணரவேண்டும்; திட்ட கமிஷனும் உணரவேண்டும் என்று நாம் இன்றைக்கு வலியுறுத்த வேண்டியிருக்கிறது. ஏனென்றால், சில இடங்களிலே, ப்ளானிங் கமிஷன் ஒரு "சூபர் காபினெட்" என்ற முறையிலே அதைப்பற்றி குறை சொல்லும் முறையிலே சொல்ல முன் வந்திருப்பது தவறான சூழ்நிலை காரணமாக ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி எண்ணத்திற்கு நடைமுறையிலோ அல்லது சட்ட ரீதியாகவோ எந்த ஆதாரமும் கிடையாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இந்த மாதிரி திட்டக் கமிஷனே அவசியமா, திட்டம் போடுவதே அவசியமா என்பது பற்றியெல்லாம் கருத்து வேறுபாடு எழுந்திருக்கிறது. நாட்டிலே திட்டம் போடுவது என்று சொல்லுவது இன்றைக்கு ஏற்பட்டதல்ல. திட்ட அடிப்படையிலே நாம் நாட்டை முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும் என்று நமக்கு சுதந்திரம் வருவதற்கு முன்பே, அப்பொழுது நாட்டின் சுதந்திரத்திற்குத் தனிப்பிரதிநிதியாக இருந்த காங்கிரஸ் மகாசபை, அப்பொழுதே தீர்மானித்திருக்கிறது; திட்ட அடிப்படையில் பல காரியங்களைச் செய்து நாம் முன்னேற வேண்டும் என்று அன்றே தீர்மானித்திருக்கிறோம். அது மற்ற நாடுகளின், சமுதாயங்களின் அனுபவத்தை ஒத்திருக்கிறது. திட்

[Sri C. Subramaniam] [9th November 1961

அடிப்படையில் அபிவிருத்தி யடைய வேண்டும் என்று எடுத்துக் கொண்டது, முதன் முதலிலே கம்யூனிஸ்டு நாடுகளிலே, கம்யூனிஸ்ட் அடிப்படையில் இருக்கும் நாடுகளிலே. அதன் காரணமாகத்தான் இந்த விதமான வாதம் ஏற்பட்டது. அப்படிபட்ட வாதம் தவறான கருத்துக்கொண்ட வாதம். அது, திட்டம் போடுவது என்பது கம்யூனிச அடிப்படையில் இருக்கக்கூடிய திட்டம் என்று சொல்லக்கூடிய வாதம். அப்படி நினைப்பது தவறு. ஆகவே நாம் திட்டம் போடக்கூடிய காலத்தில் எந்த முறையில் திட்டம் போடுகிறோம் என்று பார்க்க வேண்டும். நாம் எந்த முறையில் இயங்கி வருகிறோம் என்று பார்க்க வேண்டும். அப்படி கம்யூனிஸ அடிப்படையில் திட்டம் போடுவதாக இருந்தால் இந்த சட்டசபைக்கு இடமே இல்லை. இதுதான் நாம் புரிந்து கொள்ளக் கூடிய விஷயம். சமீபத்தில் வரக்கூடிய தேர்தலுக்கு இடமில்லை, பார்லிமெண்டுக்கு இடம் இல்லை. பார்லிமெண்டுக்கு எலெக்ஷன் தேவையில்லை. இன்றைக்கு பரிபூரண அதிகாரம் மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் எந்த முடிவு எடுக்கிறார்களோ அதுதான் நடத்திச் செல்லப்பட வேண்டும். அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு அரசியல் அமைப்பு அமைந்திருக்கிறது. ராஜ்ய சட்டசபையாக இருந்தாலும் சரி பார்லிமெண்டாக இருந்தாலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் முடிவு செய்யப்பட்டதுதான் நடைமுறைக்கு வரவேண்டியதாக இருக்கிறது. பார்லிமெண்டாக இருந்தாலும் சரி ராஜ்ய சட்டசபையாக இருந்தாலும் சரி நாடு முன்னேற்றமடைவதற்கு திட்ட அடிப்படையில் நாம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. எந்த முடிவுக்கு வருகிறோமோ அந்த அளவுக்கும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அதன் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆகவே திட்டம் ஆரம்பித்தது கம்யூனிஸ்ட் நாடுகள்தான் என்பதனால் அந்த கம்யூனிஸ்ட் அடிப்படையில் தான் ராஜ்யம் நடைபெற்று வருகிறது என்று சொல்வது சரியல்ல. நாமும் திட்டம் போடுவதால் இந்த ராஜ்யம் கம்யூனிஸ்ட் அடிப்படையில் இயங்கி வருகிறது என்று சொல்வதற்கு இல்லை. சுண்ணாம்பும் வெள்ளையாக இருக்கிறது வெண்ணெயும் வெள்ளையாக இருக்கிறது என்பதனால் இரண்டும் ஒன்று என்று சொல்வதாக இருக்கிறது. இப்பொழுது சொல்லக்கூடிய வாதம் சரியல்ல என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். திட்டம் வகுக்கப்படுகிறது. அந்த திட்டத்தை எந்த அளவுக்கு நிறைவேற்ற வேண்டும் என்பதை பார்லிமெண்டும் ராஜ்ய சட்டசபைகளும்தான் முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால்தான் முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. அந்த அதிகாரம் சட்டசபைக்குத் தான் இருக்கிறது. போடப்பட்ட திட்டத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும் அதை மாற்றி அமைக்க வேண்டியதாக இருந்தாலும் சரி சட்டசபைக்குத்தான் அப்படிப்பட்ட அதிகாரம் இருக்கிறது. பார்லிமெண்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. பார்லிமெண்டுக்கும் சட்டசபைக்கும் பிரதிநிதிகளை

9th November 1961] [Sri C. Subramaniam]

தேர்ந்தெடுக்கக்கூடிய அதிகாரம் மக்களுக்குத்தான் இருக்கிறது. அந்த முறையில்தான் நம்முடைய அரசியல் அமைப்பு இருக்கிறது. அதுதான் ஜனநாயக அமைப்பு என்பதைதான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மக்களால் கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட அதிகாரத்தை ஒருவராலும் அசைக்கவே முடியாது. எந்த கட்சியாக இருந்தாலும் சரி அந்தக் கட்சிக்கு அதிகாரம் கொடுக்கும் போது ஜனநாயக அடிப்படையில் இப்படிப்பட்ட அதிகாரம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் நம்முடைய அரசாங்கம் நடைபெற்று வருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி திட்டம் போடுவது கம்யூனிஸ்ட் நாட்டின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுப்பதாக இருக்கிறது என்று சொல்வது இதற்கு முரண்பாடாக இருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய கருத்துக்கு எதிராக இருக்கிறது. நாம் போடக்கூடிய திட்டங்களையெல்லாம் கிராம அடிப்படையில் வட்டார அடிப்படையில் அதை எந்த அளவுக்கு நிறைவேற்ற வேண்டுமோ அந்த அளவுக்கு நிறைவேற்றுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். இப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தை மத்திய கேந்திரமாக இருக்கக்கூடிய ஒரு ஸ்தாபனத்திற்கு மட்டும் விட்டு விடவில்லை. இன்றைக்கு இந்தச் சட்டசபை ஒரு முக்கியமான திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு கிராமத்திலும் மக்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கும் அளவில் கிராம பஞ்சாயத்துக்களை அமைத்து இருக்கிறது. அந்த வட்டாரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த பஞ்சாயத்துக்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கிராம ஆட்சியை நடத்துவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி பல பஞ்சாயத்துக்கள் கொண்டது ஒரு பஞ்சாயத்து யூனியன் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு வேண்டிய அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களே தங்களுடைய வேலைகளைச் செய்து கொள்ளலாம். அவர்களே திட்டங்களை அமைத்துக்கொள்ளலாம் என்றும் போடப்பட்ட திட்டங்களை அவர்களே நிறைவேற்றிக்கொள்ளலாம் என்றும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு அதிகாரம் அந்த பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கம்யூனிஸ அமைப்பில் இருந்தால் இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்காமல் குவியல் முறையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால் இப்படிப்பட்ட பஞ்சாயத்து அமைப்பில் பரவல் முறையில்தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமத்திலுள்ள எல்லோரும் பூரண பங்கெடுத்துக்கொள்வதற்கு வேண்டிய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. போடப்படும் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு அவர்களுக்கே இருக்க வேண்டும் என்றும் எல்லா நடவடிக்கைகளிலும் அவர்களும் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட அமைப்புக்குப் பிறப்பட்டும் கம்யூனிஸ பாதையில் போய்க் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது ஒப்புக்கொள்ளக்

[Sri C. Subramaniam] [9th November 1961

கூடியதாக இல்லை. திட்டம் போடுகிறோம் அதனால் கம்யூனிஸ பாதையில் செல்லுகிறோம் என்று சொன்னால் இவைகளையெல்லாம் கவனிக்காமல், அது வெறும் வாதத்திற்குச் சொல்வது என்றே தான் எடுத்துக்கொள்ள வேண்டும். இதை கனம் சட்டசபை அங்கத்தினர்கள் உணர வேண்டும். வெளியிலுள்ள மக்கள் இதை உணர வேண்டும், என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே திட்டம் போடுகிறோம் என்பதனால் சர்வாதிகார அடிப்படையில் செல்லுகிறோம் என்றும் கம்யூனிஸ அடிப்படையில் செல்லுகிறோம் என்றும் சொல்வது சரியல்ல. இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பார்த்தால் கம்யூனிஸ அடிப்படையில் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லவே முடியாது. இன்றைக்கு இருக்கக்கூடிய அரசாங்கத்தின் கொள்கை என்ன? எந்த அளவுக்கு மக்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறோம் என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். இன்றைக்கு அரசாங்கத்தின் கொள்கைப்படி சர்வாதிகார அடிப்படையில் கொள்கை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதை கொஞ்சம் முக்கியமாக கவனிக்கவேண்டும்.

இன்றைக்கு மக்களுடைய மத்தியில் எப்படிப்பட்ட எண்ணம் பரப்பப்படுகிறது என்றால் சிறுபான்மையராக இருக்கக்கூடியவர்களுடைய கருத்துக்குத்தான் மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய அளவில் சொல்லப்பட்டு வருகிறது. பெரும்பான்மையோர்கள் என்ன நினைத்தாலும் அது சரியல்ல என்றும் பெரும்பான்மையோர் என்ன திட்டத்தைக் கொண்டு வந்தாலும் அது சரியல்ல என்றும் சொல்லப்படுகிறது. பெரும்பான்மையோருடைய எண்ணங்களுக்கு தவறான கருத்துக்களைக் கொடுக்கக் கூடிய அளவில் பேசப்பட்டு வருகிறது. சிறுபான்மையோர் என்ன நினைத்தாலும் அதுதான் சரி என்று சொல்லக்கூடிய அளவில் பேசப்பட்டு வருகிறது. ஆகவே இப்பொழுது சட்ட சபையில் காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் 150 பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மெஜாரிட்டியாக இருப்பதால் அவர்களுடைய கருத்துக்களை கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை, இரண்டு அல்லது நான்கு அல்லது பத்து அல்லது பதினைந்து பேர்கள் கொண்டிருக்கக்கூடிய கட்சிகளுடைய கருத்துக்களைத்தான் கேட்க வேண்டும் என்ற அடிப்படையில் பேசப்பட்டு வருகிறது. சிறு எண்ணிக்கையுள்ள கட்சி சொல்லக்கூடிய கருத்துக்குத்தான் அதிகமாக மதிப்பு கொடுக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு வாதத்தை இப்பொழுது ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டால் அதுதான் சர்வாதிகாரத்திற்குக் கொண்டு போய்விடும். இப்பொழுது பத்து அல்லது பதினைந்து, எண்ணிக்கை கொண்டவர்களுடைய கருத்துக்களைக் கேட்டால் பிறகு நாலைந்து பேர்களைக்கொண்ட கட்சியினுடைய கருத்துக்களைக் கேட்க வேண்டியதாக இருக்கும், அதற்கு பிறகு ஒருவருடைய கருத்தைக் கேட்க வேண்டியதாகக்கூட வந்துவிடும். அந்த நிலைமையில் சர்வாதிகாரத்திற்குத்தான் கொண்டு போய் விடும் என்பதைமட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

9th November 1961] [Sri C. Subramaniam]

இன்றைக்கு பல்வேறு கட்சிகள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லும்போது அவைகளையெல்லாம் ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. எதிர்க் கட்சியிலுள்ளவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று ஆலோசனை செய்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் சொல்வதை புறக்கணிப்பதாக இல்லை. அவர்களுடைய கருத்துக்கும் மதிப்புக் கொடுக்கப்படுகிறது. அவரவர்களுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்குதான் எல்லோருக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் ஜனநாயகம் அமைக்கப்பட்டிருக்கிறது. அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி அதன் கருத்துக்களை நன்றாக பரிசீலனை செய்துதான் பார்க்கப்படுகிறது. அப்படி பார்த்து ஒரு முடிவுக்கு வந்து அது தப்பாக இருந்தாலும் அதை மாற்றிக்கொள்வதற்கும் நமக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கம்யூனிஸ அமைப்பில் பாதையில் போகக்கூடிய நாட்டில் இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஒரு முடிவு எடுத்துக்கொண்டு விட்டால் அதுதான் கடைசி வரையிலும் கம்யூனிஸ பாதையில் போகக்கூடிய நாடுகள் இயங்கி வருகின்றன. அது முடிவு எடுத்த பிறகு அதை மாற்றிக்கொள்வதற்கு கஷ்டமாக இருக்கும் அங்கு. அதை மாற்ற வேண்டுமென்றால் குழப்பம் ஏற்படக்கூடியதாகி விடும். அவர்களுடைய சித்தாந்தம் அது. அவர்களுடைய சித்தாந்தம் அந்த அடிப்படையில் இருக்கிறது. அது எந்த முடிவாக இருந்தாலும் சரி எந்த பெரியவரால் முடிவு செய்யப்பட்டாலும் சரி அதை எதிர்த்துச் சொல்லக்கூடிய ஒரு சுதந்தரம் அங்கு கிடையாது. ஆனால் இங்கு அதைப்பற்றி எங்கு வேண்டுமானாலும் பிரசாரம் செய்யலாம், எந்த பத்திரிகையில் வேண்டுமானாலும் எழுதலாம். இந்த அளவுக்கு இங்கு சுதந்தரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்களுடைய கருத்துக்களை மாற்றுவதற்கு எந்த வகையில் வேண்டுமானாலும் முயற்சி எடுத்துக் கொள்ளலாம். ஒருவர் சொல்லக்கூடியதுதான் நல்லது, அது எந்த அறிஞர் சொன்னாலும் அதுதான் சரி என்று சொல்வது சரியல்ல. ஒரு முடிவு எடுத்துக் கொண்ட பிறகு அது தப்பாக இருந்தால் அதை மாற்றிக்கொள்வதற்கு வழி சொல்வதுதான் ஜனநாயகத்திற்கு உகந்தது, மெஜாரிட்டியாக உள்ளவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்வதுதான் ஜனநாயகத்திற்கு உகந்தது என்பதை நான் மறுபடியும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதெல்லாம் ஒரு புறமிருக்க, திட்டம் நமக்குத் தேவையா, திட்ட அடிப்படையிலே நாம் முன்னேறலாமா, வேறு விதமாக முன்னேறலாமா என்பதைப்பற்றி அடிப்படையாக நாம் இன்றைக்கு யோசித்துப் பார்க்கவேண்டியதாக இருக்கிறது. சிலர் நினைக்கலாம், திட்டம் என்று சொல்லும்போது கம்யூனிஸ்டு ரஷ்யாவில்தான் திட்டம் இருக்கிறது, அல்லது அந்தப் பாதையிலே செல்லக்கூடிய வேறு சில நாடுகளில்தான் திட்டம் இருக்கிறது என்று. திட்டம் அங்கேதான் ஆரம்பித்தது. என்றாலும், இன்றைக்கு எந்த முறையில் காலப் போக்கு இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது ஜனநாயக அடிப்படையில் இயங்குகிற நாடுகளிலே திட்ட

[Sri C. Subramaniam] [9th November 1961

மிட்டுத்தான் முன்னேறவேண்டுமென்ற கருத்து பரவிக்கொண்டு வருகிறது. பின்னடைந்திருக்கும் நாடுகளில் அல்ல. பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கும் பல நாடுகளில்கூட இன்றைக்குத் திட்ட அடிப்படையில்தான் வேகமாக, கணிசமாக முன்னேற்றம் அடைய முடியும் என்ற கருத்து ஒப்புக்கொள்ளப்படுவது மட்டுமல்ல, அந்த முறையிலே நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இரண்டாவது மகா யுத்தத்திற்குப் பிற்பாடு ஐரோப்பிய நாடுகளிலே ஓரளவு குழப்பமான நிலைமை இருந்தாலுங்கூட, பொருளாதாரத் துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது—பிரான்சு நாட்டிலே. அதற்குக் காரணம் என்ன என்பதைப் பற்றிச் சமீபத்திலே பல இடங்களில் வாதங்கள் நடந்தன. அவர்கள் ஒரு முடிவுக்குத்தான் வந்திருக்கிறார்கள். பிரான்சிலே அரசியல் குழப்பமான நிலைமையில் பல மாறுதல்கள் அடிக்கடி ஏற்பட்டிருந்தாலுங்கூட, கணிசமான பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் திட்ட அடிப்படையில் முன்னேற முன்வந்திருப்பதுதான் என்று இன்றைக்குப் பொருளாதார நிபுணர்கள், அரசியல் மேதைகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் இங்கிலாந்திலேகூட பொருளாதாரத் துறையில் குழப்பமான நிலைமை ஏற்படும்போது, கன்சர்வேடிவ் கட்சி அரசாங்கத்திலே இருந்தாலுங்கூட, அவர்களும் திட்ட அடிப்படையில் காரியங்கள் செய்ய முன்வந்தால்தான் இந்தச் சிக்கல்களையெல்லாம் ஓரளவு நீக்க முடியும் என்று இன்றைக்கிருக்கும் கன்சர்வேடிவ் கட்சி நிதி மந்திரி வலியுறுத்தி வருகிறார் பார்லிமென்டிலேகூட சமீபத்தில் அதுபற்றிப் பேசியிருக்கிறார். இதைப்பற்றி பத்திரிகையிலும் மேடைகளிலும் விவாதங்கள் நடந்துகொண்டிருப்பதை விஷயமறிந்தவர்கள் கட்டாயம் தெரிந்திருப்பார்கள்.

முன்னேற்றம் அடைந்திருக்கும் நாடுகளில், அதைவிட அதிகமான முன்னேற்றம், வேகமான முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்று சொல்லும்போது திட்ட அடிப்படையில்தான் இதைச் சமாளிக்க வேண்டுமென்ற கருத்தை அவர்கள் ஒப்புக்கொள்வது மட்டுமல்ல, நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கும் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் இன்னும் சிக்கலான நிலைமையில் இருக்கிறோம். பொருளாதாரத் துறையிலே தேங்கித் தேய்ந்து போயிருக்கும் நிலைமையில் இருக்கிறோம். தேங்கித் தேய்ந்து போனதற்குக் காரணம் 150, 200 ஆண்டுகளாக நாம் அரசியல் அடிமைகளாக அன்னிய ஆட்சியின் கீழ் இருந்ததுதான். அந்தக் காரணத்தால்தான் மற்ற நாடுகள் முன்னேற்றம் அடைந்திருக்கும்போது நாம் தேங்கித் தேய்ந்து போயிருந்த நிலைமை ஏற்பட்டது. தேங்கித் தேய்ந்து போன நிலையை இன்றைக்கு மாற்றி, அதிலே வளர்ச்சி ஏற்படச் செய்யவேண்டும் என்பதிலே அக்கறை கொண்டிருக்கும் நாம், இவ்வளவு பெரிய நாடாக இருந்தும் இவ்வளவு பிற்போக்கு நாடாக இருக்கும் நிலையில் இதை எந்த முறையில் செய்வது என்பதுதான் இன்றைக்கு நாம் முடிவு கட்டவேண்டிய விஷயம்.

9th November 1961] [Sri C. Subramaniam]

அவ்வாறு யோசனை செய்யும்போது, மற்ற நாடுகளின் அனுபவத்தை எடுத்துக்கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். ஒருசில கருத்து வேறுபாடு ஆங்காங்கு இருந்தாலுங்கூட, திட்ட அடிப்படையில் நமக்கு இருக்கும் வசதிகளை எந்த அளவுக்கு நல்ல முறையில் பயன்படுத்த முடியுமோ அதைப் பயன்படுத்தி பொருளாதாரத் துறையில் எந்த அளவுக்கு அபிவிருத்தி செய்ய முடியுமோ அந்த அடிப்படையில் நாம் நடவடிக்கை எடுத்தால்தான் நாட்டில் முன்னேற்றத்தை நாம் ஏற்படுத்த முடியும், கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

இந்த முடிவைப் பற்றி சமீப காலம் வரையில் கருத்து வேற்றுமை இருந்ததில்லை. சமீபத்தில்தான் கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. ஜனநாயகத்திலே எல்லாக் கருத்துக்களுக்கும் இடம் உண்டு. எந்த வேறுபட்ட கருத்தையும் நாம் வரவேற்கிறோம். அதிலே எந்த அளவு உண்மை இருக்கிறது என்பதைப் பற்றியும் நாம் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு இருக்கும் மனித அனுபவத்தை வைத்துக்கொண்டு மற்ற சமுதாயத்திலே இருக்கும் முன்னேற்றத்தையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு, இன்றைக்கு நம்முடைய நாடு வேகமாக முன்னேறவேண்டும், பொருளாதாரத் துறையிலே கணிசமான வளர்ச்சி அடையவேண்டுமென்றால் திட்ட அடிப்படையில்தான் முடியும் என்பதை நான் முதலில் வலியுறுத்த விரும்புகிறேன். திட்டம் போடுவதில் தவறுகள் நேரலாம், நிறைவேற்றுவதிலும் தவறுகள் நேரிடலாம். அது வேறு விஷயம். அடிப்படையாக இன்றைக்கு ஒன்று ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியமாக இருக்கிறது. திட்ட அடிப்படையில்தான் நம்முடைய நாட்டில் பொருளாதார வளர்ச்சியை வேகமாகக் கொண்டுசெல்ல முடியும். கணிசமாக பொருளாதார வளர்ச்சியைப் பெற முடியும் என்பதை உலகத்திலே இருக்கும் எல்லா நிபுணர்களும் சொல்கிறார்கள். ரஷ்ய நிபுணர்கள் வேண்டுமென்றால் அவர்கள் முறைப் பிரகாரம் சொல்வார்கள் என்று சொல்லிவிடலாம். ஆனால், முதலாளித்துவ நாடாக, கட்டுப்பாடுகள் ஒன்றுமே வேண்டியதில்லை, திட்டம் அவசியமில்லை என்று சொல்லக்கூடிய அமெரிக்க நாட்டிலிருந்து வரக்கூடிய பொருளாதார நிபுணர்கள், இங்கிலாந்திலிருந்து வரக்கூடிய பொருளாதார நிபுணர்கள், உலகத்திலே வெவ்வேறு பகுதிகளிலிருந்து வரக்கூடிய பொருளாதார நிபுணர்கள் எல்லோரும் ஏகோபித்த கருத்துத்தான் கொண்டிருக்கிறார்கள். திட்ட அடிப்படையில்தான் இந்தியாவின் பிற்காலம் அமைந்திருக்கிறது என்பதைப்பற்றி நான் பார்த்த வரையில் கருத்து வேறுபாடு நிபுணர்கள் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்தத் திட்டத்தை எப்படிப் போடுவது என்பதைப்பற்றிச் சில கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். பல கருத்துக்கள் இருக்கின்றன என்ற காரணத்தால் ஒரு முடிவும் எடுக்காமலிருந்தால் காரியம் நடைபெறாது. ஆகவே, திட்டத்தைப் போடுவதிலே

[Sri C. Subramaniam] [9th November 1961]

பல்வேறு முறைகள் இருந்தாலும் நாம் ஒரு முடிவு எடுக்க வேண்டியதாக இருக்கிறது. எந்த முறையிலே நாம் திட்டம் போடுவது என்று முடிவு செய்து திட்டத்தை உருவாக்கி திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்பேர்ப்பட்ட முறையிலேதான் நிர்வாகத்திலே திறமை வாய்ந்தவர்கள், அனுபவம் உள்ளவர்கள் பொருளாதார விதிகளை நன்றாக உணர்ந்தவர்கள், பொருளாதார நிபுணர்கள், வெவ்வேறு துறைகளிலே பணியாற்றுகிறவர்கள், இவர்களுடைய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, இதிலே ஆலோசனை கூறுவதற்குக் குழுவை நியமிப்பது நல்லது என்ற முறையில் திட்டக் கமிஷன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த திட்டக் கமிஷன் சொல்லக்கூடிய ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு நாம் திட்டத்தை உருவாக்கவேண்டுமென்று சொல்கிறோம். நாம் போட்டிருக்கும் திட்டத்தில் ஒரு சிறு குறை கூட இல்லை, 100-க்கு 100 முழுவதும் பூர்ணத்துவம் பெற்றிருக்கிறது, 'பர்பெக்ட்' ஆன திட்டம் என்று நான் சொல்லத் தயாராயில்லை. எந்த மனித முயற்சிதான் குற்றமற்றதாக இருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன். (சில கனம் அங்கத்தினர்கள் சிரிப்பு). இன்றைக்குச் சிரிக்கின்றவர்கள் கூட அவர்கள் பேசுகிற பேச்சிலே செய்கின்ற நடவடிக்கைகளிலே குற்றம் இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். தாம் அறிஞர்கள், தாம் பேசுவதில் குற்றம் இல்லை, செய்வதில் குற்றம் இல்லை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், அதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால், சல்லடை போட்டு அரித்தால்கூட நல்லது இருக்கமுடியாது என்பதில் சந்தேகம் இல்லை. இதிலே சிரிக்கக்கூடியது ஒன்றுமில்லை. இது இயற்கை விதி. சிலர் நினைக்கலாம்—பட்டங்கள் வைத்துக் கொண்டு தாம் சொல்வதுதான் சரி, அதுவே இறுதியானது என்று. நாங்கள் அம்மாதிரி நினைப்பதில்லை. நாங்கள் சாதாரண மனிதர்கள். நாங்கள் செய்யக்கூடிய முடிவிலே குறை இருக்கலாம். திட்டங்களை நடத்துவதிலே கூட குறை இருக்கலாம். குறைகளை யாராவது எடுத்துச் சொன்னால், குறைகளை மனதிலே படும்படியாகச் சொன்னால், குறையாக இருந்தால் ஒப்புக்கொள்ளவேண்டுமென்ற மனப்பான்மை எங்களுக்கு இருக்கிறது. ஏதோ நாம் செய்துவிட்டோம், நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் திருத்திக் கொள்ள மாட்டோம் என்ற மனப்பான்மை எங்களுக்கு இல்லை. குற்றம் இருந்தால் திருத்திக்கொள்ளவேண்டுமென்ற மனப்பான்மையில்தான் நாங்கள் இயங்கிவருகிறோம். இனிமேல் வருகிறவர்கள் தாங்கள் குற்றமே செய்யாமல், தவறே இல்லாமல் காரியங்களைச் செய்யத் தகுதி பெற்றிருக்கிறோம் என்பார்களானால் உண்மையில் அந்த மனப்பான்மைதான் அவர்கள் நிர்வாகத்திற்கு வரவே தகுதியற்றவர்கள் என்பதற்கு அடிப்படையாக இருக்கக்கூடியது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். திட்டம் முழுவதிலுமே எந்தவிதமான குறையும் இல்லை என்று நான் சொல்ல முன்வரவில்லை. ஆனால், எங்களால் இயன்ற அளவு, மற்றவர்கள் அறிவை, அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாங்கள் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். அதிலே ஆங்காங்கு குறை

9th November 1961] [Sri C. Subramaniam]

இருந்தால், அந்தக் குறை சரியானதாக இருந்தால், அதைத் திருத்துவதற்கு நாங்கள் எப்பொழுதும் தயாராயிருக்கிறோம் என்பதையும் நான் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. திட்டத்தை உருவாக்குவது ரொம்ப சுலபம். திட்டம் போடுவதே ஒரு கலையாகிவிட்டது. மற்ற நாடுகளின் அனுபவத்தை வைத்துக்கொண்டு திட்டம் உருவாக்குவது சுலபம். ஆனால், திட்டத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கின்றன என்பதை நாம் நன்றாக உணரவேண்டும். அதிலே பல தவறுகள் நமக்கு ஏற்பட்டுவிடுகின்றன என்பதை நான் உணருகிறேன். நாம் எடுக்கக்கூடிய நடவடிக்கையிலே பல தவறுகள் நம்மையும் மீறி ஏற்பட்டுவிடுகின்றன என்பதை எதிர்க் கட்சியிலே இருந்தால்தான் எடுத்துச்சொல்ல முடியும் என்பது அல்ல. நானே எடுத்துச் சொல்ல முடியும். எங்கெங்கே தவறு ஏற்பட்டு விட்டது என்பதை நான் எடுத்துச் சொல்ல முடியும். ஆனால், அந்தத்தவறு ஏற்படாமலிருந்தால்தான் திட்டம் ஏற்படவேண்டும், அப்படியானால்தான் நிர்வாகத்திலே இருக்கவேண்டும் என்றால், நாம் எந்தக் காரியத்தையுமே ஆரம்பிக்க முடியாது. கல்லாக ஒன்று இருந்தால் அதற்கு உயிர் இல்லை, அசைவு இல்லை, ஆகவே அதன் இயக்கத்தில் தவறு ஒன்றும் நேரவில்லை என்று சொல்லி விடலாம். ஆனால் உயிர் உள்ள ஒன்றின் செய்கையிலே நல்லதும் உண்டு. கெட்டதும் உண்டு. தவறு ஏற்படுவது என்பது மனித இயற்கை. அதுவும் மனிதன் ஒரு பெரிய காரியத்தை எடுத்து 3·30 p.m.
நிறைவேற்றுகிறபோது பெரும் தவறுகள் ஏற்படத்தான் செய்யும். தொன்று தொட்டு ஏற்பட்டு வருகின்ற மனித அனுபவமே இதைத் தான் சொல்கிறது. தவறுகள் ஏற்பட்டாலும் கூடத் தவறைத் தவறு என்று ஒப்புக்கொண்டு அவ்வப்போது அதைச் சரிசெய்து கொண்டு போவதுதான் மனித அறிவுக்கு ஒத்தது, மனிதப் பண்பாட்டுக்கு ஒத்தது என்று முதலில் சொல்ல விரும்புகிறேன்.

திட்டம் முழுவதும் நூற்றுக்கு நூறு சரியென்று நாங்கள் சொல்லவில்லை. நூற்றுக்கு நூறு பிழை இல்லாமல் சரியாக அவற்றை நிறைவேற்றிவிட்டோம் என்றும் நாங்கள் சொல்லவில்லை. இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில்—எங்களுக்கு இருக்கக் கூடிய அநுபவங்களை எல்லாம் வைத்துக்கொண்டு—எங்களால் முடிந்தவரையில் திறமையாக நல்லதொரு திட்டத்தை வகுத்திருக்கிறோம் என்றுதான் சொல்லவிரும்புகிறேன். எங்கள் சக்திக்கு ஏற்றபடி நிறைவேற்றவும் முன்வந்திருக்கிறோம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்துக்கொண்டு பார்த்தாலும் சரி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்துக் கொண்டு பார்த்தாலும் சரி, இதுவரையிலும் கிடைத்திருக்கக் கூடிய புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு பார்த்தாலும் சரி—சில குறைகள் ஏற்பட்டிருக்கலாம், சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம்—இன்றைக்குக் கணிசமான அளவுக்கு நாம் முன்னேறியிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்கவே முடியாது. எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி—அதுவும் இந்தப் பத்து ஆண்டுகளில்

[Sri C. Subramaniam] [9th November 1961

—கொஞ்சங்கூட விருப்பு வெறுப்பு இல்லாமல் நாடுநகரங்களுக்குள்ளே சென்று பார்த்தால் மக்களுடைய வளவாழ்வில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பது கண்கூடு. இதை யாரும் மறுக்க முடியாது. அதே அடிப்படையில் இந்த மூன்றாவது திட்டத்தையும் வகுத்து நாட்டில் நல்லதொரு முன்னேற்றம் எல்லாத்துறைகளிலும் ஏற்படும்படியாகச் செய்யலாம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. திட்ட அடிப்படையில்தான் முன்னேற முடியும் என்ற கருத்தில் இதைத் தயாரித்திருக்கிறோம். அநேகமாக திட்டம் வேண்டும் என்பதை—ஒரு கட்சி தவிர பாக்கி எல்லாக் கட்சிகளும் ஒத்துக்கொள்கின்றன. திட்டமே வேண்டாம் என்கிற அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவார்கள், அதற்குப் பிறகு அந்தக் கருத்துக்களுக்கு நான் பதில் சொல்கிறேன். ஆனால் இன்றைக்கு மாற்றுக் கட்சிகளை எடுத்துக் கொண்டால் திட்டத்தை வேகமாக நிறைவேற்றவேண்டும் என்கிறவர்கள் இருக்கிறார்கள். திட்டம் போதாது, இன்னும் அதிகமாகப் போடவேண்டும் என்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். இன்னும் திறமையாக நிறைவேற்றவேண்டும் என்று சொல்லக்கூடிய கட்சிகளும் இருக்கின்றன. ஆகவே ஒருவகையில் எல்லாக் கட்சிகளும் —நான் முன்பு சொன்னதுபோல ஒரு கட்சியைத் தவிர—மற்றக் கட்சிகள் எல்லாம் திட்ட அடிப்படையில்தான் முன்னேறமுடியும் என்கிற கொள்கையை ஒப்புக்கொள்கின்றன. "ஆனால் நான் சொல்வதைத்தான் கேட்கவேண்டும்" என்று ஒருவர் தனியாகச் சொன்னால்—இந்த ஜனநாயக காலத்தில் அதை ஏற்றுக்கொள்ள என்னால் முடியாது. என்னதான் ஒருவர் சொல்வது நல்லதாக இருந்தாலும்கூட ஜனநாயக அடிப்படையில் பலரும் ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்தையே நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆகையால்தான் இன்றைக்கு எல்லாத் துறைகளிலும் உள்ளவர்களைக்கொண்டு இந்தத்திட்டங்கள் பலமுறை பல கட்டங்களில் ஆராய்ச்சி செய்யப்பட்டு வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டத்தைத்தான் நாங்கள் மக்கள் முன்னிலையில் வைத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டால் அதை நிறைவேற்றி வைப்பதற்கு அவர்கள் எங்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். எங்கள் கொள்கையை சில கட்சிகளைப் போல ஒளித்து வைத்துவிட்டு தேர்தலுக்கு நிற்க விரும்பவில்லை. "தேர்தல் முடியட்டும், அதுவரைக்கும் இந்த நம்முடைய கொள்கையை வெளிப்படுத்த வேண்டாம், தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டால் இருக்கவே இருக்கிறது, நம் கொள்கையைச் செயலாக்குவோம்", என்ற கருத்துடையவர்கள் அல்ல நாங்கள். ஒளிவுமறைவு இன்றி எங்கள் கருத்துக்களை மக்களுக்கு முன் வைத்திருக்கிறோம். பிப்ரவரி மாதம் தேர்தல் வருகிறது. இந்தத் திட்ட அடிப்படையில்தான் மக்களிடத்தில் வோட்டு கேட்கப் போகிறோம். அவர்கள் என்ன தீர்ப்பு கொடுத்தாலும் அதை ஏற்றுக்கொள்ளப்போகிறோம். மக்கள் தீர்ப்பு எதுவாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்வோம். மற்றவர்களும் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது என் வேண்டுகோள். அப்போதுதான் உண்மையான ஜனநாயகம் தழைக்கும். அதை

9th November 1961] [Sri C. Subramaniam]

விட்டு அவர்கள் தங்கள் தீர்ப்பை அளித்த பிறகும் அதை ஏற்றுக் கொள்ளாமல் "அவர்களுக்கு என்ன தெரியும். அவர்கள் ஒன்றும் அறியாதவர்கள். ஆகவே அதை ஒத்துக்கொள்ள முடியாது" என்று சொல்வது நமக்கு உகந்தது அல்ல. இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் மூன்றாவது திட்டத்தை இந்தச் சபையே வகுக்கக்கூடிய பொறுப்பை உடையது. அதைப்போலவே நாடு முழுவதற்குமான திட்டத்தை வகுக்கக்கூடிய பொறுப்பு பார்லிமெண்டினுடையது. அபிவிருத்திக்குழு, மற்றவர்கள் எல்லாம் எந்த எந்த வகையில் திட்டம் அமையவேண்டுமென்ற ஆலோசனையை அளிக்கிறார்கள். இப்போது உள்ள திட்டங்கள் என்ன, இன்னும் பல்வேறு துறையில் என்ன என்ன அபிவிருத்தித் திட்டங்களை அமைக்கலாம் என்பதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டியவர்கள் நாம்.

அதிலே கூடக் கருத்து வேறுபாடு இருந்தது. அந்த அபிவிருத்திக் குழுவிலேயே சிலபேர் 8,000 கோடி இருந்தால் போதும் என்றும், சிலபேர் 9,000 கோடி இருக்கவேண்டுமென்றும், சிலபேர் 10,200 கோடிக்கு மேல் போகவே கூடாது என்றும் சொன்னார்கள். பல அளவுகளைக் கணக்கிட்டு கடைசியாக 11,000 கோடி அளவில் திட்டம் இருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதிலும் பொதுத் துறை, தனியார் துறை இரண்டும் சேர்ந்து அந்த அளவு இருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, நாட்டிலே உள்ள பல்வேறு பகுதிகளும் பல்வேறு அளவில் அபிவிருத்தி அடையும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கிறது. பிற்போக்காக இருக்கக் கூடிய பகுதிகள் இன்னும் கொஞ்சம் அதிகமாக வளர்ச்சி பெறக் கூடிய முறையிலே திட்டம் அமைக்கப்படவேண்டுமென்ற சித்தாந்தத்திலே ஒப்புக் கொள்ளப்பட்டு அந்த அடிப்படையிலே முடிவுகள் ஓரளவு எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நாடு முழுவதற்கும் இந்தத் திட்டம் என்ற அடிப்படையில்தான் இதை நோக்க வேண்டும். நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று சொல்கிறவர்கள் கூட இன்றைக்குத் திட்டத்தைப் பரிசீலனை செய்யும்போது திட்டம் நாடு முழுவதற்கும் என்ற அடிப்படையில் வைத்துத்தான் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்து திட்ட அளவு இதற்கு மேல் போகலாமா அல்லது இதை விடக் குறைக்கலாமா என்றெல்லாம் யோசனை செய்து, இந்த அளவுக்கு மேல் போனால் கொஞ்சம் கஷ்டம் ஏற்படலாம் என்ற காரணத்தால் 11,000 கோடி அளவில் திட்டம் இருக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இதே அளவுக்குத்தான் செய்ய வேண்டுமென்று யாரும் சொல்ல முடியாது. எதிர்பாராமல் நாம் போட்டிருக்கக்கூடிய திட்டத்திற்குக் கீழே போனாலும் போகலாம். அதிர்ஷ்டவசமாக நாம் எடுக்கக் கூடிய திட்டங்கள் நல்ல முறையில் நிறைவேறி வசதிகள் பெருகினால் இப்போது போட்டிருக்கும் அளவை மீறியும் செய்யலாம். இந்தத் தொகையை ஒரு பொது நோக்காக வைத்துக்கொண்டு திட்டத்தை நிறைவேற்ற நாம் முன் வந்திருக்கிறோம்.

[Sri C. Subramaniam] [9th November 1961

இந்தத் திட்டத்தை நாம் இரண்டு பகுதிகளாக பிரிக்க வேண்டியதாக இருக்கிறது. ஒன்று, மத்திய அரசாங்கத் திட்டங்கள், இரண்டாவது ராஜ்ய அரசாங்கத் திட்டங்கள். மத்திய அரசாங்கத் திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் சேர்ந்தது அல்ல. அந்தத் திட்டங்கள் இந்தியா முழுவதற்கும் உரிய திட்டங்கள். இன்றைக்கு இரும்புத் தொழிற்சாலை, உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் அந்த மூலப் பொருள்கள் எந்தப் பகுதிகளில் கிடைக்கின்றனவோ, எந்தப் பகுதியில் ஆரம்பித்தால் சிக்கனமாக உற்பத்தி செய்ய முடியுமோ அங்கே அந்தத் தொழிலை ஆரம்பிக்க முடியும். அந்த முறையில் மத்திய அரசாங்கத் திட்டங்கள் இன்றையதினம் வகுக்கப்பட்டிருக்கின்றன. அதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்தை நடத்திச் செல்லக் கூடிய, நம்முடைய பிரதிநிதிகள் இருக்கக்கூடிய பார்லிமெண்டுக்கும் ஆகும்.

எந்தெந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பது பற்றியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ராஜ்ய அரசாங்கமும் எந்த அளவுக்குத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று முடிவு செய்யும்போது, நம் ஒரு ராஜ்யம் மட்டுமல்ல, 14 ராஜ்யங்கள் இருக்கின்றன என்பதை நாம் மனதில் எண்ணிப் பார்க்க வேண்டும். 14 ராஜ்யங்களும் என்னென்ன தேவை என்று சொல்வதை வைத்துக்கொண்டு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. கேரளமும், மைசூரும், ஆந்திரமும் இன்னும் வடக்கே போகப் போக மற்ற ராஜ்யங்களும் இருக்கின்றன. எல்லோருடைய ஆசைகளையும், அளவுகளையும் கணக்கில் வைத்துக் கொண்டுதான் இருக்கக் கூடிய வசதியை எந்த அளவுக்குப் பங்கு போட வேண்டுமென்ற முறையில் பங்கு போடப்பட்டிருக்கிறது. நம்முடைய சட்டசபையில் விவாதிக்கும்போது 400 கோடி அளவில் இருக்கலாம் என்று முடிவு செய்தோம். இந்த மாதிரி ஒவ்வொருவரும் கொடுத்த கணக்கைக் கூட்டிப் பார்க்கும்போது நம்மிடம் இருக்கும் வசதிக்கு மேல் போய்விட்டது. ஒவ்வொரு ராஜ்ய அளவையும் கணக்கிட்டு, நம்மிடம் இருக்கிற வசதிக் கணக்குகள் வருகிற மாதிரி திட்டத்தை நிறைவேற்றுவது அவசியமாகிறது. அந்த அடிப்படையில் நம்முடைய ராஜ்யத்திற்கு 291 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நாட்டுக்கு ஏன் ஆயிரம் கோடி ரூபாய்க்குத் திட்டமிடக் கூடாது என்று கேட்டால் பக்கத்தில் இருக்கக்கூடிய மற்றவர்களைச் சுரண்டி நாம் முன்னுக்கு வருவது என்பது முடியாது என்றுதான் சொல்ல வேண்டும் அவர்கள் ஏமாளிகள் அல்ல. ஆகவே, நம்மை மட்டும் நினைத்துக் கொண்டு ஆயிரம் கோடி வேண்டுமென்று கேட்டால் ஏதோ "அடாவழக்கு" என்ற முறையிலே சொல்லலாம் அல்லது வீண் பழிக்காக வேண்டுமானால் சொல்லலாம். இன்றைக்கு நாம் ஒன்று பட்ட நாடாக இயங்கும்போது மற்ற ராஜ்யங்களின் ஆசைகளையும், அவர்கள் வசதிகளையும் நம்முடைய வசதிகளையும் மனதில் கொண்டு நியாயமாகப் பங்கு போட்டுக் கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. அந்த முறையிலே நான் உறுதியாக, எந்தவிதமான

9th November 1961] [Sri C. Subramaniam]

மனக் கூசலும் இல்லாமல் நம்முடைய பங்கு குறைவு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இருப்பதைப் பங்கு போட்டுக் கொண்டதில் எந்த விதமான அநியாயமும் ஏற்பட்டு விடவில்லை. இன்னும் புதிதாகப் பல வசதிகள் வேண்டுமானால், அதிகமாகப் பெற வேண்டுமென்ற கருத்தை ஒப்புங் கொள்ளும் போது, சரியான பங்கு, நியாயமான பங்கு, ஓரளவு அதிகமாகக் கூடப் பெற முயற்சி செய்து ஓரளவு அதில் வெற்றியும் பெற்றிருக்கிறோம் என்று உறுதியாகச் சொல்லிக் கொள்ள முடியும். ஆகவே, இன்றைக்கு நம்முடைய ராஜ்ய அரசாங்கம் மூலம் நிறைவேற்றப் படக் கூடிய திட்டங்களின் அளவு 291 கோடி. நம்முடைய ராஜ்ய வரம்புக்குள்ளாகவே மத்திய அரசாங்கத் திட்டங்கள் வேறு பல இருக்கின்றன. அந்தத் திட்டங்கள் இந்த 291 கோடி ரூபாயில் சேரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தத் திட்டத்தின் அளவு 11,000 கோடி என்று சொல்லும்போது அதில் அரசாங்கம் ஈடுபடக்கூடிய திட்டங்கள் மட்டுமல்லாது தனியார் துறையிலே நடக்கக் கூடிய திட்டங்களும் அடங்கியிருக்கின்றன. ஆகவே, ராஜ்ய சர்க்காரே நிறை வேற்றும் திட்டங்களுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய தொகையைக் கொண்டு, 11,000 கோடி ரூபாய்த் திட்டத்தில் நமக்குக் கிடைத்திருப்பது மிகவும் கொஞ்சமே என்று பேசுவதில் பிரயோஜனம் இல்லை. 291 கோடி தான் நமக்குக் கிடைத்திருக்கிறது என்று கிளிப்பிள்ளை மாதிரி சொல்வதில் பயன் இல்லை. இந்த நிதி மந்திரியால் 291 கோடிக்கு மேல் கேட்டுப் பெற முடியவில்லை என்று வாதம் செய்து கொண்டிருந்தால் அது அறியாத மக்களை ஏமாற்ற வேண்டுமானால் பயன்படுமே தவிர அறிந்தவர்களை ஏமாற்ற அறிஞர்களாலும் முடியாது என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, 291 கோடி என்பது ராஜ்ய அரசாங்கம் மேற்கொண்டு நடத்தக் கூடிய திட்டங்கள் . மற்றும் மத்திய அரசாங்கம் எடுத்து நடத்தக் கூடிய திட்டங்கள் இருக்கின்றன, தனியார் துறையிலே எடுத்து நடத்தக் கூடிய திட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, 291 கோடி. என்று சொல்லும்போது இதை நம் மனதிலே வைத்துக் கொள்ளவேண்டும். தனியார் துறைக் கொள்கைப் பொறுத்த வரையிலே ஒரு கருத்து வேறுபாடு இருக்கிறது. ஒருசிலர் நினைப்பது, எல்லா வேலைகளையும் அல்லது எல்லா அபிவிருத்திகளையும் ஏன் தனியார் துறையில் விட்டுவிடக்கூடாது என்று கேட்கிறார்கள். சர்க்கார் அபிவிருத்தித் திட்டங்களில் தலையிட வேண்டிய அவசியமே இல்லை என்று சுதந்திரக்கட்சி வற்புறுத்தி வந்திருக்கிறது. தேர்தல் அறிக்கையிலும் இதைத்தான் சொல்லியிருக்கிறது. தொழில் திட்டங்களில் சர்க்கார் தலையிடக்கூடாது, அது ஜனநாயகத்திற்கே விரோதமானது என்கின்ற அடிப்படையில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூற்று தவறு என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ரஷ்யாவை எடுத்துக்கொள்வோமேயானால் அங்கு எல்லாத் தொழில்களிலுமே பொதுத்துறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே தனியார் துறையில் நடப்பதைப்பற்றி அங்கு பார்க்க முடியாது. அதைவிட்டுவிட்டால் ஜனநாயக அடிப்படையில் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய

[Sri C. Subramaniam] [9th November 1961

எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் பொதுத்துறை கணிசமான அளவில் இருந்து கொண்டிருக்கிறது. அது போன்ற நாடுகளில் இருக்கின்ற முன்னேற்றத்தையும் பார்த்துத்தான், நம்முடைய கொள்கைக்கு ஏற்ப தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் இரண்டு துறையிலும் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்ற அளவில் தான் நாம் அபிவிருத்தித் திட்டங்களை போடுகிறோம். நம்மைப்பொறுத்தவரையில் பொதுத்துறையிலும் தனியார்த் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். இதில் இன்னொரு வாதம் என்னவென்றால், தனியார் துறைக்காக முக்கியத்துவம் அதிகம் கொடுப்பதா அல்லது பொதுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதா என்கின்ற வாதம் வருகிறது. ஒரு சிலர் பொதுத்துறையில் அதிகமாக ஒதுக்கிவிட்டார்கள் என்று குறைப்படுகிறார்கள். இன்னொரு பக்கத்தில் தனியார் துறைக்கு அதிகமாக ஒதுக்கி விட்டார்கள் என்று குறைபடுகிறார்கள். சில இடங்களில் குறை ஏற்படலாம். ஆனால் அதையே அடிப்படையாக வைத்துக்கொண்டு கொள்கையையே குறை கூறுவது என்பது சரியல்ல. பொதுத்துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய கொள்கையின் படி, அடிப்படையாக இருக்கின்ற தொழில்கள், அதாவது கனரக தொழில், இரும்பு, உருக்கு உற்பத்தித் தொழில், எண்ணெய் உற்பத்தித் தொழில், நிலக்கரி, மின்சாரம் போன்ற தொழில்களை எல்லாம் பொதுத்துறையில் நடத்தி வருகிறோம். அதே சமயத்தில் இதன் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை உபயோகப்படுத்தக்கூடிய பல்வேறு தொழில்களை தனியார்துறையில் நிறைவேற்ற வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதோடு இதில் முக்கியமாக பொதுத்துறையில் நடைபெறும் தொழில்களில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஏற்ப தனியார் துறையிலும் தொழில்கள் பெருக வேண்டும். அடிப்படை பொருட்களை மட்டும் உற்பத்தி செய்து கொண்டிருந்தால் அதன் மூலமாக சமுதாயத்திற்கு எந்தவிதமான பயனும் ஏற்படாது, அதை உபயோகப்படுத்தும்போதுதான் சமுதாயத்திற்கு அது பயன்படுகிறது. உற்பத்தி செய்யும் எல்லாப் பொருட்களும் உபயோகித்தால்தான் நல்ல பலன் கிடைக்க முடியும். நிலக்கரியை எடுத்துக் கொண்டால் பல்வேறு துறையில் அதை உபயோகப்படுத்தியாக வேண்டும். மின்சாரத்தை எடுத்துக்கொண்டால் அதையும் பல்வேறு துறையில் உபயோகப்படுத்தியாகவேண்டும். அந்த அளவுக்கு இதைப்பார்க்கும்போது உற்பத்தி செய்கின்ற அடிப்படைப் பொருட்களை போதுமான அளவு உபயோகப்படுத்துகின்ற வேறு பல தொழில்களும் வளர்ந்தாக வேண்டும். இல்லாவிட்டால், வெட்டுகின்ற நிலக்கரி ஒரு வாரத்தில் தேங்கிவிடும். இரும்பு உற்பத்தியை எடுத்துக்கொண்டால் போதிய அளவு அதை உபயோகப்படுத்தவில்லை என்றால் அந்த தொழிலை ஒரு மாதத்திற்குள் மூடிவிட வேண்டியிருக்கும். ஆகவே எந்த அளவிற்கு அடிப்படையான பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ அதைவிட அதிகமாக அதை உபயோகப்படுத்துகின்ற பிறதொழில்களும் வளர்ந்தாக வேண்டும். அந்த முறையில் பார்க்கும்போது, பொதுத்துறையில் வளரக்கூடிய அளவுக்கு தனியார் துறையிலும் தொழில்கள் வளர்ந்தாக வேண்டும். இதைத்தான் நான் பல இடங்-

9th November 1961] [Sri C. Subramaniam]

களில் வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். ஆகவே நாட்டின் முன்னேற்றத்திற்கு நம்முடைய கொள்கையின் அடிப்படையில் பார்த்தால் தனியார் துறையும், பொதுத்துறையும் வளர்ந்தாக வேண்டும். இந்த விதத்தில் தனியார் துறையும் பொதுத்துறையும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருக்கிறது. ஒன்றை மட்டும் மிகைபடுத்தி வைத்திருக்கவேண்டும் என்றால், ஒரு வருடத்திற்கோ அல்லது இரண்டு வருடத்திற்கோ தான் வைத்திருக்க முடியும். இந்த அடிப்படையில் நாம் தொடர்ந்து சொல்ல முடியாது. இரண்டும் சேர்ந்து வளருவதின் மூலமாகத்தான் நாம் கொண்டிருக்கின்ற அடிப்படையில் நம்முடைய பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். ரஷ்யாவில் பொதுத்துறையில் தான் எல்லா தொழில்களும் நடக்கின்றன என்று சொன்னால் அது வேறு விஷயம். அதே போன்று வேறு பல நாடுகளில் தனியார் துறையில் தான் எல்லாத் தொழில்களும் நடக்கின்றன என்று சொன்னால் அது வேறு விஷயம். இவை இரண்டிலுமுள்ள நன்மைகளை எடுத்து நாம் அமைத்திருக்கின்ற திட்டக்கொள்கையின் அடிப்படையில் பார்க்கும்போது இரண்டு துறைகளும் ஒரேவிதத்தில் வளர்ந்தாக வேண்டும். இல்லையென்றால் தொழில்களில் எந்த விதமான வளர்ச்சியும் ஏற்பட முடியாது. அதற்கு மாறாக தொழில்களில் தேக்கம் ஏற்பட்டுவிடும். எந்த பொருளை எடுத்துக் கொண்டாலும் அதை சரியானபடி உபயோகப்படுத்தாவிட்டால், அது அப்படியே நின்று விடும். திட்டமே அவசியமில்லை என்று சொல்லக்கூடிய ஒரு வாதமும் நம்மிடையே இருந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால் தொழில்களை திட்டமிட்டு வளர்த்தாக வேண்டும் என்று நாம் திட்டமிட்டிருக்கும் போது, அதில் ஒன்றுக்கொன்று முரண்படாமல் இரண்டும் ஒரே விதமாய், ஒரு வண்டியில் போகும் இரண்டு காளைகளைப்போல் தனியார் துறை, பொதுத்துறை இரண்டும் ஒரே விதமாக வளர்ந்து கொண்டிருக்கும். வண்டியில் இரண்டு காளைகளும் ஒன்று சேர்ந்து போகாவிட்டால் வண்டிக்கே ஆபத்துதான் ஏற்படும். ஆகவே இரண்டு துறைகளும் நல்ல முறையில் வளர வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒன்றை மட்டும் நிறுத்தி வைத்துக்கொண்டு வண்டியை ஓட்ட முடியாது. இந்த அடிப்படையில், நாம் எடுத்துக் கொண்டிருக்கின்ற கொள்கையை அனுசரித்து, ஒன்றுக்கு பாதகம் ஒன்று சாதகம் என்றில்லாமல், இரண்டும் ஒரே மாதிரியாக இயங்க வேண்டும் என்ற அடிப்படையில் நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய திட்டம் முழுவதுமே பொதுத் துறையில் தான் இருக்கவேண்டும் என்று சிலர் சொல்லலாம். அதே நேரத்தில் தனியார் துறையிலேயே திட்டங்கள் முழுவதும் இருக்க வேண்டும் என்று சொல்லலாம். அது வேறு விஷயம். ஆனால் நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற கொள்கையின் அடிப்படையில் இரண்டு துறைகளும் வளர வேண்டுமென்பது தான், வேண்டுமென்றால் இதை அர்த்தநாரீசுவரக் கொள்கை என்று சொல்லலாம். அதில் தான் வாழ்க்கையின் ரகசியம் இருக்கிறது. இரண்டு சக்திகள் இல்லையென்றால் உலகத்தில் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படமுடியாது. இரண்டு சக்தியில்லை என்றால் எந்த சிருஷ்டியும்

ஏற்பட முடியாது, இந்த அடிப்படையில் தான் அர்த்தநாரீசுவரக் கொள்கையை சொல்ல முடியும், அதன் அடிப்படையில் தான் நம்முடைய கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதிரி இரண்டு துறைகளும் வளரவேண்டும் என்கின்ற கொள்கையை வதைத்திருப்பது பெரிய வாததத்திற்குரிய விஷயமல்ல. மற்ற நாடுகளைப் பார்த்து, அவர்கள் அடைந்திருக்கும் முன்னேற்றத்தைப் பார்த்து அதைப் போலவே நாமும் முன்னேற வேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கம் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நிறைவேற்றுவதில் பல குறைகள் ஏற்படலாம். நானே பல குறைகளை எடுத்துச்சொல்ல முடியும். இரண்டாவது திட்டத்தில் ஐந்து மில்லியன் டன் இரும்பு உருக்கு உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் திட்டமிட்டிருந்தோம். ஆனால் நாம் இரண்டு மில்லியன் அளவைக்கூட நாம் எட்டவில்லை. அதில் தவறு இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதை நான் பல தடவைகளில் எடுத்துக்காண்பித்திருக்கிறேன். எங்கேயோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் சொல்லியிருக்கிறேன். அதற்காக திட்டமே தவறு, கொள்கையே தவறு என்று சொல்லிவிட முடியாது. தனியார் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி பொதுத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி. அதை நடத்துகிறவர்கள் எல்லாம் மந்திரிகள் அல்ல, தொழில்களை நடத்துகின்றவர்கள் தொழில் நிபுணர்கள், தொழிலில் பயிற்சி பெற்றிருக்கின்றவர்கள், இதில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளிகள் இவர்கள் தான். ஆகவே இதில் வேண்டுமென்றால் நமக்குப் போதிய அனுபவம் இல்லை என்பதை வேண்டுமென்றால் ஒப்புக்கொள்ளலாம். பொதுத் துறையில் மட்டுமல்ல, தனியார் துறையிலும் பல தவறுகள் நடைபெறுகின்றன. ஆனால் அதை அவ்வளவாக ஒருவரும் கவனிப்பதில்லை. பொதுத்துறையை எடுத்துக்கொண்டால் அது வெற்றி பெற்றுவிட்டால் ஒருவரும் கவனிப்பதில்லை. ஆனால் குறைகள் ஏதாவது நடந்து விட்டால் அதைப்பற்றி கூறுவதற்கு எவ்வளவோ வழிகள் இருக்கின்றன, அதற்காக சட்டசபை இருக்கிறது, எதிர்கட்சிகள் இருக்கின்றன. இதன் காரணமாக பொதுத்துறையில் நடைபெறும் சிறு தவறுகளைக் கூட வெளியில் பெரிதாக காட்டுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதே நேரத்தில் தனியார் துறையில் ஏதாவது தவறுகள் நடந்தால் யாரும் கவலைப்படுவதில்லை. தனியார் துறையில் ஈடுபட்டிருக்கின்றவர்கள் அவர்கள் ஏதாவது தொழிலில் நஷ்டமடைந்து மூழ்கிப்போனாலும் கூட அதை யாரும் கவனிக்கமுன் வருவதில்லை. ஆகவே பொதுவாக பொதுத்துறையில் தான் அதிகமான அளவில் தவறுகள் நடக்கின்றன என்கின்ற ஒரு தவறான கருத்து பரவியிருக்கிறது. நம்முடைய அனுபவக் குறைவுகளின் காரணமாக பல தவறுகள் ஏற்படுகின்றன. அந்த தவறை நிவர்த்திப்பதற்கும், இம்மாதிரி தவறுகள் மேலும் நடக்காதவாறு பார்த்துக்கொள்வதற்கும் நாம் முயற்சி எடுக்கின்றோம். அதற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் நாம் மூன்றுவது திட்டத்தை அமைத்திருக்கிறோம். அதை எல்லாம் புத்தக ரூபத்தில் கனம் அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டிருக்

கிறது. அதை அங்கத்தினர்கள் அனைவரும் துருவித் துருவிப் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதன் மீது தங்கள் கருத்துக்கள் என்ன என்பதை கூற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காகத்தான் இந்த விவாதம் சபையின் முன்பு வந்திருக்கிறது. இதில் கடைசியாக ஒரு உறுதியை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு சொல்லப்படும் கருத்துக்கள் எந்த விதத்தில் இருந்தாலும், இப்போது ஒதுக்கப்பட்டிருப்பது போதாது, 1,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டும் என்று சொன்னாலும் கூட, அதைப் பற்றி பரிசீலிப்பதற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம். அது முடியுமா முடியாதா என்கின்ற காரியம் ஒருபுறம இருந்தாலும், நாங்கள் சொல்லுவதை ஏற்றுக்கொண்டால் தான் இந்த திட்டம் சரியான முறையில் நடைபெறும் என்ற அளவில் இல்லாது, இப்போது ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையில் எந்த அளவுக்கு மாற்றம் செய்ய முடியும் என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு முடிந்த வரையில் இது தான் முடிவானது என்றில்லாமல் இதை ஏதாவது சற்று மாற்றமுடியுமென்றால், முடிந்த வரையில் நமது சக்திக்கு ஏற்ப மாற்றலாம், அதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது, பட்ஜெட் வரவிருக்கின்றது, அந்த நேரத்தில் மாற்றிக் கொள்ளலாம், அதற்கும் நமக்கு சந்தர்ப்பம் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். போட்டிருக்கக் கூடிய இந்தத் திட்டம் மூன்று வருஷ காலமாகப் பரிசீலனை செய்து, துருவித் துருவிப் பார்த்து, ஏற்படுத்தியிருக்கக் கூடிய திட்டம். இதற்கு மாறாக யாராவது கருத்துக்கள் சொல்லி அவைகள் ஒப்புக்கொள்ளப்படவில்லையென்றால் யாரும் குறை சொல்லக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு வருஷம் விஷயம் தெரிந்தவர்களால் நன்கு ஆராயப்பட்டு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இது ஒருவருடைய கருத்து அல்ல. நம் நாட்டிலே இருக்கக் கூடியவர்களுடைய கருத்து மட்டுமல்ல. உலகத்திலே இருக்கக் கூடிய பல்வேறு பேர்களுடைய கருத்துக்களைக் கொண்டு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டத்தை மேலாகப் பார்த்து குற்றம் சொல்லாமல், அடிப்படையாக குற்றம் இருந்தால் அதை எடுத்துக் காட்டுவது அவசியம். உண்மையான குறைகள் இருந்தால் அவைகளை என்றும் ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்—அவைகளை நீக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற உறுதியைத் தான் இப்போது அளிக்க விரும்புகிறேன். 4-00 p.m.

இன்னும் 291 கோடி என்று போட்டிருக்கும்போது இது இந்த அளவிலேயே நின்று விடும் என்று யாரும் நினைக்கவேண்டாம். நமக்கு இருக்கும் அனுபவத்தை வைத்துக்கொண்டு நமக்கு இருக்கக்கூடிய வசதியை வைத்துக்கொண்டு இதை நாம் அதிகரிக்க முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் 152 கோடி என்று அன்றைக்கு கணக்கிட்டாலும் பூரா கணக்கையும் பார்க்கும்போது 187·4 கோடி அளவுக்கு இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். நாம் முதலில் 152 கோடி என்று கணக்கு போட்டிருந்தோம். அதற்கு மேல் நீட்டக் கூடாது என்று யாரும் சத்தியாக்கிரகம்

[Sri C. Subramaniam] [9th November 1961

செய்யவில்லை. நமக்கு திறமை இருக்கும்போது, நமக்கு ஆற்றல் இருக்கும்போது, போகப் போக நமது அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு அதைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். முதல் வருஷத் திட்டத்தை முடிவாக்கும் முறையிலும் கூட திட்டக் கமிஷன் சொல்லியது—அவர்கள் ஆலோசனை சொன்னார்கள்—100-க்கு 16 பங்கு வரும்படி போட்டால் போதும் என்று. நாம் சொன்னோம் 16 பங்கு போதாது, இன்னும் அதிகமாக இருக்க வேண்டும் என்று. ஆகையால் 18 பங்கு எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்தோம். அப்படி முடிவு செய்து நமது 6 மாத அனுபவத்தைப் பார்க்கும்போது 48 கோடியோடு கூட நிற்காது, இன்னும் 4—5 கோடி அதிகமாக ஆகும் என்று தோன்றுகிறது. இதைப் பற்றி ஓரளவுக்கு பட்ஜெட்டிலே கணக்கு கொடுக்க முடியும். இப்போது பார்க்கும்போது 18 பங்கு மட்டுமல்லாமல் 20 பங்கு அளவுக்குக் கூட போகும் என்று தெரிய வருகிறது. ஆக, 291 கோடி என்று சொல்லும்போது கணக்குக்காக வைத்திருக்கிறதே தவிர, அந்த அளவுக்குத்தான் செய்யவேண்டும், அதற்கு மேல் கூடாது என்பது அல்ல. நமது திறமையைப் பொறுத்து, நம்முடைய வசதியைப் பொறுத்து, இதை பெருக்கிக்கொண்டே போக முடியும் என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

ஆகையால் இங்கு பல்வேறு கட்சிகள்—அதுவும் முக்கியமாக தேர்தல் வரும்போது, தேர்தல் சமயத்தில் பல்வேறு விஷயங்களைச் சொல்லவேண்டும் என்று இயற்கையாக அத்தகைய மனப்பான்மை ஏற்படுமானால் அதைப் பற்றி நான் குறையாகச் சொல்லவில்லை. அதிலும் முக்கியமாக தேர்தல் வரும்போது நிர்வாகத்தில் இருக்கக் கூடிய கட்சியின் பேரில் இருக்கும் குறைகள், இல்லாத குறைகள் எல்லாவற்றையும் சொல்லவேண்டியது எதிர் கட்சிகளுடைய பொறுப்பு—கடமை—என்று நினைக்கிறார்கள். இதைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் ஏதாவது குற்றம் சொல்லுவார்களானால் எந்த முறையில் சொன்னாலும் அப்போது கூட எங்களுக்கு வருத்தம் ஏற்படாது, சமீபத்தில் தேர்தல் இருக்கப் போவதால். நான் கேட்டுக்கொள்ளுவது, தேர்தல் முடிந்த பிற்பாடாவது மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டு தொடர்ந்து மேலும் மேலும் நிறைவேற முட்டுக்கட்டையாக இல்லாமல் நாங்களே எதிர் கட்சியில் உட்கார்ந்தாலும் சரி, அல்லது நீங்களே இருந்தாலும் சரி எல்லோரும் ஒத்துழைத்து திட்டத்தை நிறைவேற்ற முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அடிப்படையில் கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் இப்போது சபையின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Third Five-Year Plan for the State of Madras be taken into consideration."

Amendments, if any, to the motion may be moved tomorrow morning. Hon. Members, who wish to move amendments, may give notice of them before 9-30 a.m. tomorrow.

9th November 1961]

* SRI K. ANBAZHAGAN: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டினுடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை, மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற்று நிறைவேற்ற முன் வருகிற அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை இப்போது சட்ட மன்றத்தின் ஆலோசனைக்கு வழங்கியிருக்கிறார்கள். இதற்கு முன்னரும் இந்தத். திட்டம் ஆலோசனைக்கு வந்திருக்கிறது அப்போதும் மாற்று கட்சிகளில் உள்ள நண்பர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் பல்வேறு ஆலோசனைகளை எடுத்துக் கூறினார்கள். அவைகள் எந்த அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை இப்போது சட்டமன்றத்தின் முன்னால் எடுத்து வைக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கை தெளிவாகத் தெரிவிக்கிறது என்று நான் நம்புகிறேன்.

இதற்கு முன்னுரை வழங்கிய அமைச்சர் அவர்கள், இந்தத் திட்டத்தைப் பற்றி பெரும் சாதனையென வாதிட்டுப் பேசுவதற்கு இடமில்லை என்றாலும் திட்டத்தினை விளக்கிப் பேசவேண்டும் என்று பேசுகிற நிலையில் "குறைகள் ஏற்பட்டால் அது இயற்கை" என்ற முடிவோடு அவர் உரையை நிகழ்த்தியிருக்கிறார். வழக்கம் போல, குறைகளே ஏற்படாது என்று தைரியமாகப் பேச வேண்டியவர்கள், குறைகள் ஏற்படக் கூடும், குறைகள் ஏற்பட்டிருக்கின்றன, குறைகள் ஏற்பட்டிருப்பது எனக்கே தெரியும் என்று பேசுகின்றார்கள். இன்னும், பொதுத் தேர்தல் வருகிறது என்று குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள் அடுத்த தேர்தலுக்குப் பின்னால் நாங்கள் இங்கு இருந்தாலும் அல்லது நீங்கள் இங்கு இருந்தாலும் யார் செய்கின்ற காரியமாக இருந்தாலும் மற்றவர்கள் பொறுப்பு உணர்ச்சியோடு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் இந்த விதத்தில் உரை நிகழ்த்தியதிலிருந்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையேதான் இவர்கள் தேர்தலுக்கு நம்பியிருக்கிறார்களோ என்று நான் மனதில் கருதுகிறேன்—அது வெற்றி தருமா என்றும் நான் சந்தேகிக்கிறேன்.

என்றாலும் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல அர்த்தநாரீச்வரரைப் போன்று, உருவத்தால் மட்டுமின்றி செயலில் மீனுக்கு வாலையும் பாம்புக்கு தலையையும் காட்டுவது போன்று, அப்படிப்பட்ட கொள்கை இருக்குமானால் அது நல்ல தல்ல என்று நான் நினைவூட்டிக்கொள்கிறேன். அரசாங்கத்தின் கொள்கை திட்டவட்டமாகத் தெளிவாக்கப்படுகிற நிலைமை ஏற்பட்டால்தான் நல்ல பலன் ஏற்படமுடியும். அவ்வப்போது ஏற்படுகிற நிலைமைகளுக்கேற்ப கொள்கைகளை மாற்றிக்கொள்ளுகின்ற சூழ்நிலை அமையுமானால், தனியார் துறைக்குச் சலுகை காட்டுகின்ற நிலைமை ஏற்படுமானால், பொதுத்துறையில் ஏற்று இருக்கின்ற கடமைகளை தனியார் துறைக்கு மாற்றுகின்ற நிலைமை ஏற்படுமானால், அல்லது தனியார் துறைக்கு ஒதுக்கி வைத்திருக்கின்ற ஒன்றை வேண்டாதவன் ஒருவனுக்கு கொடுக்கக் கூடாது என்ற காரணத்திற்காகப் பொதுத் துறைக்கு மாற்றுகின்ற நிலைமை ஏற்படுமானால்—மாநில அரசில் நாங்கள் அப்படி செய்வதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடுமானாலும் பேரரசைப் பொறுத்த வரையில் அந்த அளவுக்கு மாற்றங்கள் ஏற்படுகின்ற

[Sri K. Anbazhagan] [9th November 1961

காரணத்தால், அவ்வப்போது கொள்கைகளை மாற்றிக் கொள்ளுகின்ற நிலைமையில் இப்படிப்பட்ட திட்டங்கள் பழையபடி பயன்தராது போகும் என்பதை நான் நினைவூட்டிக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில், இப்படிப்பட்ட திட்டக் குழுவில்—திட்டக் குழுவினிடம் சென்று நமது மாநிலத்தினுடைய பங்கைக் கேட்கும் பெரும் பொறுப்பை கொண்டிருக்கிற அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்கூட இல்லையே என்பது வருத்தப்படவேண்டியதாக இருக்கிறது. மாநிலத்தின் சார்பில் அவர்கள் திட்டக் குழுவின் உறுப்பினராக இருந்தால்தான் தமிழ்நாட்டுக்கு நியாயமான பலன் கிடைக்கக்கூடும். எதிலும் எப்போதும் பிச்சை எடுக்கின்ற எண்ணம் தானா என்று அமைச்சர் கேட்பார்—ஆனால் அமைச்சர் அவர்கள் உரையைக் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில் எனக்குத் தோன்றியது, அவரே அந்த இடத்தில் இருந்தால் ஓரளவு அதிகப் பலன் கிடைக்கும் என்ற எண்ணம் தான். இப்போது திட்டக் குழு பண்டித நேருவின் தலைமையில் இயங்கி வருவதால் திட்டக் குழுவின் கருத்துக்கள் பாராளுமன்றத்தின் பரிசீலனையிலும் சரி, அல்லது சட்ட மன்றத்தின் பரிசீலனையிலும் சரி முழு அளவு பரிசீலனை செய்யப்பட்டு மாற்றுக் கருத்துக்கள் ஏற்கப்படக் கூடிய அரிய வாய்ப்பை இழந்து விடுகிறது. இதனால் மற்றவர்கள் எடுத்துச் சொல்லும் கருத்துக்கள் இடம் பெறாமல் போகின்றன, குறைகளும் குற்றச்சாட்டுகளும் ஒதுக்கப்படுகின்றன என்று நான் நினைவூட்டிக்கொள்கிறேன். பண்டித நேருவுக்குப் பதிலாக—அகில இந்திய அரசின் பிரதமர் இக்குழுவின் தலைவராக இருப்பதற்குப் பதிலாக—வேறு ஒரு நிபுணர் இருந்தால், ஒரு நிபுணரின் தலைமையில் செயலாற்றினால், அது ஜனநாயகத் தன்மைக்கு ஏற்றதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திட்டக்குழு அகில இந்தியாவுக்கு என்று அழைக்கப்படுகிற காரணத்தினால், மத்திய சர்க்காரால் டில்லி ஆட்சி பீடத்திற்கு நெருங்கியிருக்கின்றவர்கள் அதில் இடம் பெறுகிறார்கள். மாநிலத்தில் பிரதிநிதிகள், முக்கியமாக தமிழ்நாடு அரசாங்கம், ஆந்திர அரசாங்கம் என்ற இப்படிப்பட்ட மாநில அரசாங்கங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதி வீதம் திட்டக் குழுவில் இடம் பெற வழிவகை காணப்படவில்லை. மாநிலத்துக்கு ஒரு பிரதிநிதி என்று இருந்தால்தான் அந்தத் திட்டத்தினால் கிடைக்கும் பலன்கள் எல்லாப் பகுதிகளுக்கும் எளிதாக கிடைக்க முடியும். திட்டக் குழுவிடம் அணுகி நேரில் ஒரு நாள் வேண்டுகோளை எடுத்துச் சொல்வதைவிட குழுவில் உறுப்பினராக இடம்பெற்றால்தான் மாநில அடிப்படையில் கிடைக்க வேண்டிய பலன் கிடைக்க முடியும்.

அது மட்டுமல்லாமல், இவ்வளவு பெரிய அளவில் மத்திய அரசு திட்டங்களை நிறைவேற்றுவதால் மாநில அரசாங்கத்தினர் ஆண்டுதோறும் இங்கு கொண்டுவரும் நிதி நிலை அறிக்கை மூலம் பெரிய அளவுக்குத் திட்டமிட முடியாமல் இதுவே தடையாக அமைந்து விடுகிறது. மத்திய சர்க்கார் திட்டக்குழு மூலமாகப் பெரும் திட்டங்களைப் போடுகிற காரணத்தினால் மாநிலத்தில் என்றுமே

9th November 1961] [Sri K. Anbazhagan]

எந்தத் திட்டமும் போட முடியாமல் தடையாக இருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார், மாநில அரசினர்கள் எச்சரிக்கையாக இருந்து உரிய பங்கைப் பெற்று வந்திருக்கிறார்கள் என்று. 291 கோடிக்கு அனுமதி பெற்றிருக்கிறோம் அது சாதாரணமா, இன்னும் இதை உயர்த்தக் கூட எங்களால் முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். அந்தத் தொகையிலே எப்படி நியாயமான அளவு நமக்குக் கிடைத்தது என்பதை கனம் அமைச்சர் கணக்குக்காட்ட முன்வருகிறார். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மாநில அரசுகள் துறைக்கு 3,725 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கின்றபோது, அதிலே நமக்கு கிடைத்திருக்கக்கூடிய 291, கோடியை மட்டும் வைத்துக்கொண்டு ஏறத்தாழ 12-ல் ஒரு பங்கை நாம் திட்டத் தொகையாகப் பெற்றிருக்கிறோம் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் வாதிட்டுச் சொல்ல முடிகிறது. அதேபோல் மத்திய அரசாங்கத் துறைக்கென்று ஒதுக்கியுள்ள தொகை 3,775 கோடி. இந்த 3,775 கோடியில் நம்முடைய தமிழ்நாட்டுக்கு என்று எவ்வளவு கோடி திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கும்படி நான் கனம் அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த 3,775 கோடியில் நமக்கு கிடைக்க வேண்டிய பங்குத் தொகையில் 4-ல் ஒரு பங்கு அளவு கூடக் கிடைக்கவில்லை என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசினத் துறையில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவிட்டது வெறும் புள்ளிதான். இரண்டாவது திட்டத்திலேயும் திருநாமந்தான். மூன்றாவது திட்டத்திலே பல ஆயிரம் கோடியில் மிச்சம் கிடைத்தது தனுக்கோடிதான். தயவு செய்து புள்ளி விவரத்தோடு, இதிலே 12-ல் ஒரு பங்கு நம்முடைய மாகாணத்திற்கு கிடைத்ததா என்று அமைச்சர் சொல்ல வேண்டும்.

இப்போது புதிய தொழிற்சாலைகளும், அதற்கான திட்டங்களும் போடப்பட்டு பெரு வளர்ச்சி அடைந்திருப்பதாகப் பேசுவார்களானால், அதிலே எவ்விதப் பயனும் இல்லை. அத்தொழிற்சாலைகள் எல்லாம் நல்லமுறையில் உருவாகிப் பலன் கிடைக்க வேண்டும். ஆனால் அதற்குக்கூட அகில இந்திய அடிப்படையில் 'பிரைவேட் செக்டார்' தனியார் துறைக்கென திட்ட அளவில் 4,000 கோடி என்று ஒதுக்கப்பட்டு விடுகிறது என்று சொன்னால், சென்னை மாகாணத்திற்கு என்று அதில் பங்கு எவ்வளவு கிடைக்கிறது என்பதைச் சற்றுக் கவனித்துப் பார்க்க வேண்டும். அதேபோல் மற்ற மாநிலங்களுக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கவனிக்கவேண்டும். மேலும் முதல் திட்டத்தில் தனியார் துறையில் எவ்வளவு ஒதுக்கப்பட்டது, இரண்டாவது திட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது, மூன்றாவது திட்டத்திற்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்பதையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால் அதிலேயும் முன்னேற்றம் காணப்படவில்லை. ஆனால் தொழிலுக்கான மூலப்பொருள் கிடைக்குமிடங்களில்—மாநிலங்களில்—தொழில் நடத்த நிதி ஒதுக்கப்படுகிறது என்று கூறியிருக்கின்றனர். மாகாணங்களில் தொழில் நடத்த மத்திய சர்க்கார் தொகை ஒதுக்குகிறார்கள். அப்படி ஒதுக்கப்

படுகின்ற தொகையின் விவரத்தைப் பார்த்து, அதன்படியும் 12-ல் ஒரு பங்கு தொகை கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கும்.

அதுமட்டுமல்ல. இந்த திட்டம் எப்படி எப்படி உருமாறுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி முதலிலே அறிக்கை வந்தது. அந்த நேரத்திலே மத்திய அரசு துறையிலே 2,150 கோடி என்றும், மாகாண அரசாங்கத்திற்கு 3,850 கோடி என்றும், தனியார் துறையிலே 4,500 கோடி என்றும் தெரிவிக்கப்பட்டது. 2,150 கோடி என்று இருந்த மத்திய அரசுத்துறை தொகை வளர்ந்து இப்போது 3,725 கோடி என்று உயர்ந்துள்ளது. அப்படி 3,725 கோடி என்று மத்திய அரசுத் தொகை உயருவதைப் போல் மாகாண அரசுதுறையின் அளவும் உயர்ந்தால், அதை திட்டத்தின் முன்னேற்றம் என்று சொல்லலாம். அதே சமயத்தில் மாகாணத்தின் பங்கு 150—125 கோடி குறைந்து தான் இருக்கிறது. மாகாணங்களின் தொகை உயர்ந்து மத்திய சர்க்காரின் தொகை குறைந்தால், அது ஜனநாயகத்திற்கு ஏற்றது என்றுகூடச் சொல்ல முடியும். அதேபோல் மத்திய சர்க்கார் தொழில்களுக்குப் போடும் முதலீட்டை நினைக்கும்போது, அவர்கள் முதலீடுகள் எல்லாம் பல கோடிகளில் இருக்கிறது. மாகாணத்தின் முதலீடோ 3 கோடி, 4 கோடி அளவில்தான் இருக்கிறது. அந்த அளவுக்குத்தான் மாகாணத்திற்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி நினைத்துப் பார்க்கும்போது, அகில இந்திய தொழில்துறை அடிப்படை என்று சொல்லிக்கொண்டு அதிலே நிலக்கரி இரும்பு போன்ற கனிகளை எடுக்கும் சுரங்கங்களையும் சேர்த்து 3,725 கோடி என்று சொன்னால், என்றைக்கும் எந்தக் காலத்திலும் மாகாண அரசினர் மத்திய அரசை நம்பி எதிர்பார்த்தே இருக்க வேண்டுமென்ற அவசியத்தை உண்டாக்குகிறார்கள் என்பது விளங்குகிறது. மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசை நம்பியே தங்களுடைய தொழில் துறையை நடத்த வேண்டும் என்ற அளவுக்குத்தான் நிலமை இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, இப்படி 3,775 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் துறைக்கு மட்டும் ஒதுக்கிக் கொள்வது நியாயமல்ல என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

இதேபோல் மற்றொரு வகையில் மத்திய சர்க்கார் துறையிலே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்ட தொகை 870 கோடி ரூபாய். இந்த 870 கோடி ரூபாயில் நமது மாகாணத்திற்கு செலவழிக்கப்பட்ட தொகையோ ஒரு சில கோடிதான் அதேபோல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இந்தத் துறைக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள தொகை 1,520 கோடி இதில் நம்முடைய மாகாணத்தின் பங்கு எவ்வளவு என்பதைப் பார்க்க வேண்டும். இதிலேயும் நமக்கு ஏமாற்றந்தான். நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் சொல்லிக் கொண்டு, சேலத்தில் உள்ள இரும்பு ஆராய்ச்சிக்கு விடப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டு, இதற்கென 25 கோடி மட்டும். ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதையெல்லாம்

கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். இதுவரையிலும் நமக்கு மத்திய அரசாங்கத்துறையில் தொழில்களுக்கு மட்டும் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது? எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், இதிலே போடப்பட்ட மூலதனத் தொகை எவ்வளவு என்பதையும் அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இதேபோலத் தான் ரயில்வே போக்குவரத்துத் துறையிலேயும் நாம் மிகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே புதிய ரயில் பாதை போடுவதற்கான அறிகுறியே காணப்படவில்லை. அதேபோல் தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் இன்றுவரை செயற்படாமல் கைவிடப்பட்டிருக்கிறது. விழுப்புரம் மின்சார ரயில் பாதை திட்டம் இன்றையத் தினம்வரை ஓடக்கூடிய தண்டவாளம்கூட போடப்படாமல் காலம் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையிலே தமிழ்நாட்டிலே போக்குவரத்துத் துறையிலே பல திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களையும் எடுத்துக்கொண்டால், முதல் திட்டத்தில் 5 கோடி, 3 கோடி அளவு கொடுத்துவிட்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிலக்கரி எடுப்பதற்காக 40 கோடி, அதேபோல் கோச் பாக்டரிக்கு 8 கோடி, சென்னை துறைமுகத்திற்கு 16 கோடி என்ற அளவிற்கு மட்டுமே ஒதுக்கி இருக்கிறார்களே தவிர, பெருமளவிற்கு எந்தத் துறைக்கும் ஒதுக்கவில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயாவது இவைகட்கு உரிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அதிலேயும் இல்லை. நம்முடைய நாட்டிலே உள்ள பின்தங்கிய நிலைமையை மாற்றக்கூடிய அளவிற்காவது இதில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்றால், அதற்கு எவ்வித வழிவகையும் காணவில்லை.

அது மட்டுமல்ல. இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆராய்ந்து வெளியிடுகிறபோது அவர்களே சொல்லி இருப்பது இது. இதுவரையில் போடப்பட்ட திட்டங்களில் தேசிய வருமான உயர்வு முதல் திட்டத்திலே எதிர்பார்த்த அளவு 12 சதவிகிதம் என்றும், அது 18 சதவிகிதமாக உயர்ந்தது என்றும்; ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எதிர்பார்த்த உயர்வு 25 சதவிகிதம் என்றும், மாறாக அது 20 சதவிகிதந்தான் உயர்ந்தது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது அவர்கள் எந்த லட்சியத்தை நிறைவேற்ற வேண்டுமென்று திட்டம் போட்டார்களோ, அதை நிறைவேற்ற முடியவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதனாலே இவர்கள் போடுகின்ற திட்டங்களிலே எல்லாம் முழுப் பலன் கிடைக்குமா என்ற சந்தேகம் ஏற்படத்தான் செய்யும்.

அதேபோன்று Per-carita Income அதாவது சராசரி வருமானம் அகில இந்தியாவில் இந்தப் பத்து ஆண்டு காலத்தில் 16 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 306 ரூபாயிலிருந்து 330 ரூபாய்க்கு வந்திருக்கிறது. அதாவது

1956 முதல் 1961 வரை ஏறத்தாழ 8 சதவிகிதம்தான். ஆனால் அதே நேரத்தில் விலைவாசி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஜெனரல் இன்டெக்ஸ் ஆப் ஹோல்-சேல் பிரைஸஸ் (General Index of whole sale prices) மொத்த விலை புள்ளி எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால், கடந்த ஐந்தாண்டு காலத்தில் அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 30 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. உணவுப்பொருள்கள் மட்டும் 27 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. இன்டஸ்ட்ரியல் ரா மெடிரியல்-தொழில் மூலப்பொருள் 45 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

இவ்வாறு மக்களின் அன்றாடத் தேவையான பொருள்களின் விலைவாசி கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் 27 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதம்வரை உயர்ந்திருக்கிற நிலையில் மக்களின் சராசரி வருமானம் 8 சதவிகிதம்தான் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் இந்த திட்டத்தால் பொதுமக்களுக்குக் கிடைத்த பலன் என்ன? வருமான விகிதத்திலும் மிகப் பெரிய செல்வர்கள் உள்ளார்கள். ஆலை அரசர்கள், ஜமீன்தார்கள் இருக்கிறார்கள். இவர்களையெல்லாம் நீக்கிவிட்டுப் பார்த்தால், சாதாரண ஏழை மக்களின் சராசரி வருமான உயர்வு இன்னும் குறைவாகத்தான் காணப்படும். ஆனால் அதே நேரத்தில் 25 அல்லது 30 சத விகிதம் விலைவாசிகள் அதிகரித்துக் கொண்டு இருக்குமானால், இந்தத் திட்டங்கள் போடுவதின் நோக்கம் எப்படி வெற்றியடைய முடியுமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதிலும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இந்த விலைவாசி பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற நகரங்களைவிட சென்னையிலேயே அதிகமாக இருந்திருக்கிறது. இந்த விலைவாசியானது தமிழ்நாட்டிலே உள்ள சராசரி வருமான நிலைமைக்கு ஒத்த வகையில் இருந்தாலாவது அதை எடுத்துக் காட்டி, அப்படித் தமிழ்நாட்டிலே விலைவாசியானது அதிகமாக இருந்தாலும், அதற்குத் தகுந்த முறையிலே அவர்களின் வருமானமும் உயர்ந்திருக்கிறது என்று எடுத்துக் காட்டி, அதுபற்றி அமைச்சர் பெருமையாகப் பேசலாம். அப்படியாவது இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். முழு வயிற்றுக்குச் சோறு இல்லாவிட்டாலும், இன்றைக்கு மனிதன் வெண்மையாக உடை உடுத்தப் பழகிவிட்டான்.

அதேபோல் குந்துவதற்கு நல்ல குடிசை இல்லாவிட்டாலும், குடிசைக்கு முன்னாலே சாணம் போட்டு மெழுகி, கோலமிடப் பழகி விட்டான். கூந்தலுக்கு எண்ணெய் தேய்த்துக் கொள்ள வசதி இல்லாவிட்டாலும், வெறும் காகிதப் பூவையாவது சூட்டிக் கொள்ளப் பெண்கள் பழகி விட்டார்கள். இதைப் பார்த்து முன்னேற்றம் என்று எண்ணிக்கொண்டு, அதனால் பர் காபிடா இன்கம், சராசரி வருமான அளவும் உயர்ந்து விட்டது என்று சொல்வதில் எவ்விதப் பயனும் இல்லை. அதே நேரத்திலே இன்றைய தினம் விலைவாசி எவ்வளவு தூரத்திற்கு உயர்ந்திருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

இப்படிப்பட்ட விலைவாசி உயர்வினால் யாருக்கேனும் நன்மை ஏற்பட்டிருக்கிறது என்றாவது சொல்ல முடியுமா? அதுவுமில்லை. இன்றைக்கு இதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை மிகவும் வருத்தத்தோடு, மன வேதனையோடு கூற விரும்புகிறேன்.

அதேபோல் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், காஸ்ட் ஆப் லிவ்விங் இன்டக்ஸ் பார் ஓர்கர்ஸ், தொழிலாளிகளின் அன்றாடச் செலவுப்புள்ளி 1956-ல் 100-ஆக இருந்தது, இப்போது 124 ஆக உயர்ந்துள்ளது. இது அகில இந்திய அடிப்படையில் கொடுத்துள்ள புள்ளி விவரம். தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால் இன்னும் அதிகமாகவே இருக்கும். இந்தவிதமான நிலைமையில், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்திலே மக்கள் மகிழ்ச்சி அடைய வேண்டுமென்று சொன்னால், எப்படி முடியும்? இந்தத் திட்டத்திலே பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு இன்னின்ன திட்டங்களை வகுத்திருக்கிறோம், அதனால் அவர்களுடைய நிலையை இந்த அளவுக்கு உயர்த்த முடியும் என்று சொன்னாலாவது ஓரளவுக்கு மக்கள் மகிழலாம். அதற்கு ஏது இடம்?

திட்டம் என்று சொன்னவுடன், அது தனியார் துறை சம்பந்தப்பட்டதா, சர்க்கார், மக்கள்துறை சம்பந்தப்பட்டதா, அது மத்திய அரசு சம்பந்தப்பட்டதா, மாநில அரசு சம்பந்தப்பட்டதா, இந்தத் திட்டத்தினால் முதலாளிகளுக்கு அதிக நன்மையும் லாபமும் கிடைக்குமா, ஏழைகளுக்கு அதிக நன்மைகள் கிடைக்குமா; இந்தத் திட்டத்தில் நேரடியாக நம் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படக்கூடிய வகையில் மூலத் தொழில் கருவிகள் உற்பத்தி செய்யப்படுமா அல்லது கன்சம்ஷன் குட்ஸ்—மக்கள் தேவைக்கான பொருள்கள் மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுமா என்று ஒவ்வொரு துறையிலும் இந்தத் திட்டத்தைப் பற்றி அலசிப் பார்த்து, அவைகளை எடுத்துக் கூற கனம் அமைச்சர் அவர்கள் முன் வந்திருக்க வேண்டும். அவைகளை அலசிப்பார்த்து நிகரத்திலே இத் திட்டத்தால் இவ்வளவு நன்மை என்று சொல்வார்களேயானால், இந்த மூன்றாவது திட்டத்தையாவது வரவேற்கலாம். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பெயர் அளவுக்குப் பல திட்டங்களைப் போட்டு நிறைவேற்றுகிறோம் என்று பொதுமக்களிடத்தில் ஆசை வார்த்தைகள் சொல்லப் பயன்படுமே தவிர, வேறு எந்த வகையிலும் பெரிய பலனை அளிக்காது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். இப்படிப் பேசுகிற கருத்து இன்றைக்கு மட்டும் பேசப்படுவது அல்ல; திட்டத்தை தகர்ப்பதற்கும் அல்ல; இந்தியாவுக்கு திட்டம் கூடாது என்று சொல்லுவதற்கும் அல்ல; தாய் நாடு திராவிடநாடு விடுதலைக்கு ஆதாரம்தேடும் அடிப்படையில் பேசுவதும் அல்ல. இந்தியாவுக்கு மட்டுமல்ல, அகில உலகத்திற்கும் திட்டம் தேவை

ஆப்பிரிக்கா நாட்டிற்குக் கூட திட்டம் தேவை. எங்கெங்கே மனிதன் இருந்தாலும் முறைப்படி திட்டமிட்டு அதற்கு இசைந்து அவன் வாழவேண்டும் என்று கருதுவது தவறு அல்ல. ஆனால், திட்டத்தின் பெயரால் அரசாங்கத்தின் அதிகாரம் வளர்ந்து

[Sri K. Anbazhagan] [9th November 1961]

கொண்டே போய், தனி மனிதனுடைய உரிமைகள் பரிக்கப்படுகின்றன என்ற கட்டம் ஏற்படுமேயானுல், அதை எந்த ஜனநாயகவாதியும் ஏற்றுக் கொள்ளமாட்டான். அமைச்சர் அவர்கள் ரஷ்யா முன்னேறியிருக்கிறது என்று சொன்னுர்கள். ப்ரெஞ்சு நாடு முன்னேறியிருக்கிறது, தொழில் துறையிலே வளம் பெற்றிருக்கிறது என்றும் சொன்னுர்கள். என்ன காரணம் அவர்கள் சொன்னுர்கள் என்று எனக்குப் புரியவில்லை.

அதிலே ஒரு காரணம் ப்ரெஞ்சு நாடு அளவிலே சின்ன நாடாக இருப்பதால் மிக நன்ருக முன்னேறக்கூடிய வாய்ப்பு அதற்கு இருக்கிறது. ஜப்பான் நாடு சிறிய நாடாக இருக்கிற காரணத்தினுல், எவருக்கும் கடன்படவேண்டிய தேவை இல்லாமல் வளர முடிகிறது. சிறிய நாடுகளுக்கு சில வாய்ப்புகள், பெரிய நாடுகளுக்கு வேறு சில வாய்ப்புகள். பெரிய நாட்டு அரசுகளுக்கு ஏற்படும் அதிகாரம் தனி மனிதன் முன்னேற்றத்திற்குப் பெரிய அளவுக்குத் துணை செய்வதில்லை. மாருக சர்வாதிகாரத்திற்கு வேண்டுமானுல் துணை நிற்கும்; எதேச்சாதிகார மனப்பான்மையை வளர்க்க துணை நிற்கும். மத்திய அரசாங்கத் திட்டம் என்ற பெயரால் மாகாண அரசாங்கங்களை வெறும் மாவட்ட ஆட்சி மன்றங்களாக மாற்றுவதற்குத்தான் அது பயன்படும். அதே நேரத்திலே சிறிய நாடுகள் என்ற காரணத்தினுல் உலகத்திலே முன்னேறியிருக்கிற நாடுகளையும் பார்க்கிறோம். நாமோ பெரிய நாட்டின் ஒரு பகுதியாக ஒட்டிக்கொண்டிருக்கிறோம். அதனுலேயே நம்முடைய மக்கள் நிம்மதி அடையும் அளவுக்கு முன்னேற முடியவில்லை என்பதைப் பார்க்கிறோம்.

இதை அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்த்து, ப்ரெஞ்சு நாடு முன்னேற முடிந்ததுபோல்—தமிழ்நாடு முன்னேற பிரிவதற்கான உரிமையும், எதிர்க்கட்சியின் ஆற்றலும்கூட இருக்கட்டும்—இப்பொழுது அமைச்சர் அவர்களுக்கு உள்ள ஆற்றலை வைத்து தமிழ் நாட்டிற்கு இவ்வளவு பங்கு என்பதைத் நிர்மானித்து அதை இந்தத் துறைகளிலே பெறவேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது, எவ்வளவோ திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம் என்று அடிக்கடி சொன்னுலும், அவைகளை நிறைவேற்றுவதற்கு வழிவகை காணவில்லை. தமிழ் நாட்டில் அணு உலைக் கூடம் ஏற்பட வேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அணு உலைக் கூடம் ஏற்படுத்தி, மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் தெரிவித்தார்கள். இடையே அதைத் தளரவிட்டார்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னுல் ஒரு புதிய ஆர்வம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அந்த ஆர்வக் குறைவு, மறுபடியும் அதை வற்புறுத்தத் தவறிய நிலைமை. எதிர்க்கட்சிகளுக்குத் தந்த விளக்கமோ, "மற்ற மாநிலங்கள் அணு பரிசோதனை செய்து பார்க்கட்டும் நன்மையாக இருந்தால் எடுத்துக்கொள்ளலாம்" என்று பதிலளித்ததனுல் ஏற்பட்ட நிலைமை. மூலப்பொருள்கள் கிடைக்கும் இடத்தில் தொழில் துவங்குகிறோம் என்று சொல்லி

9th November 1961] [Sri K. Anbazhagan]

வருவதால், தென்னுட்டில் அணு உலைக் கூடம் ஏற்படுத்துவதற்குத் தேவையான மூலப் பொருள்கள் இருப்பதினுல் இங்கே அணு உலைக் கூடம் ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்திக் கேட்டுப் பெற்றிருக்கலாம்.

அதேபோலத்தான் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தைப் பற்றி, அந்தப் பிரச்னை வரும்போதெல்லாம் அமைச்சர் அவர்கள் உறுதி சொல்லிக்கொண்டிருந்தார்கள். மத்திய அரசாங்க அமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்கள், இந்தத் திட்டத்தைப் பற்றி சொல்லுகிறபொழுது அதை எப்படியும் நிறைவேற்றி விடுவோம் என்று சொன்னுர்கள். வேறு ஒரு அமைச்சர் இதைப் பற்றிச் சொல்லுகிறபொழுது சேதுக் கால்வாய் திட்டத்தோடு இணைக்கப்பட்டு இந்தத் திட்டம் நிறைவேறவேண்டும், அப்படி இணைக்கப்படாமல் நிறைவேற்றினுல் பலன் இருக்குமா என்று சந்தேகப்படுவதாக ஒரு ஐயப்பாட்டை கிளப்பினுர்.

இம்மாதிரி தூத்துக்குடி துறைமுகத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் கட்டத்தில் அதை எடுத்துக்கொள்ளலாமா என்ற ஐயம் அரசினரால் கிளப்பப்படுகிறது. இதற்காகத் தனித்தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கிற ஏட்டில் இதைப்பற்றி எந்தக் குறிப்பையும் காணுேம். அதேபோல் சேதுக் கால்வாய் திட்டம் இதோடு இணைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால், தமிழ் நாட்டிற்கு மட்டும் மல்ல, அகில இந்தியாவுக்கும் கப்பல் போக்குவரத்துச் செலவு குறையும், அந்தப் பெரும் வசதி செய்து தருவதாக அது இருக்கும். ஆனுல், சேதுக்கால்வாய் திட்டம் இதிலே சேர்த்துக்கொள்ளப்படவில்லை. நெய்வேலி வளரப்போகிறது என்று சொன்னுல், பக்கத்தில் இருக்கிற துறைமுகங்களான கடலூர், பரங்கிப்பேட்டை ஆகியவை சீர்திருத்தப்பட்டிருக்கவேண்டும். அதற்கும் இத்திட்டத்தில் வழி காணவில்லை.

காவேரி வட்டத்தில் எண்ணெய் ஆராய்ச்சிக்கூடம் ஏற்படுத்துவது பற்றி தெளிவாக முடிவு எடுக்கப்படவில்லை. அதைப்பற்றி குறிப்பு ஒன்றும் தரப்படவில்லை. அதோடு அல்லாமல் எண்ணெய் தூய்மி (Oil Refinery) நிலையம் தேவை. அம்மாதிரி எண்ணெய் தூய்மி நிலையத்தை இப்பொழுதுகூடத் தமிழ்நாட்டில் ஏற்படுத்தவேண்டும் என்று பலதடவை சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதை எண்ணிப்பார்த்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற இசைந்திருந்தால், உண்மையிலேயே அதனுல் பலன் ஏற்படும். அம்மாதிரி எண்ணெய் திட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தால் தஞ்சை மாவட்டத்தில் ஒரு பெரிய தொழில் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். தமிழ் நாட்டிலே வேறு எந்த இடத்திலே அம்மாதிரி எண்ணெய் தூய்மி நிலையம் ஏற்படுத்தினுல்கூட, அதற்குப் பின்னர் அது பல விதத்திலும் முன்னேற்றத்திற்கு துணையாக இருக்கும் என்று வற்புறுத்தியிருக்கவேண்டும்.

[9th November 1961

THE HON. SRI C. SUBRAMANIAM: தஞ்சாவூரில் தான் இருக்க வேண்டுமா . . .

SRI K. ANBAZHAGAN: இடம் எனக்குத் தெரியாது. நான் நிபுணன் அல்ல. நிபுணர்களோடு நெருங்கிப் பழகுகிறவர்களுக்குத்தான் இடம் தெரியும். என்னுடைய கருத்து தமிழ் நாட்டில் இருக்கவேண்டுமென்பதுதான். தமிழ் நாட்டில் கிழக்கு மேற்கு பார்க்க நாங்கள் ஆரம்பிக்கவில்லை. தமிழ் நாட்டில் எந்த இடமானாலும் சரி. அந்த இடம் அதற்கு ஏற்றபடி வசதியாக இருந்தால் அங்கே அமைக்கலாம். தமிழ் நாட்டில் ஏற்படுத்தவேண்டுமென்பதுதான் கருத்து.

கனரக மின்சாரத் தொழிற்சாலை ஒன்று இங்கு நான் வரப்போகிறது என்று பலதடவை சொல்லியும், பின்னால் அது கைவிடப்பட்டுவிடுமோ என்று ஐயுறுகிறேன். இங்கே ஒரு ஹெவி பாய்லர் பிளாண்டு மட்டும், திருச்சி, பொன்மலைப் பகுதியில் வைக்கப்போவதாகத் தெரிகிறது. அப்படி இங்கே வைப்பதாக இருந்த தொழில்கள் கைவிடப்படுகின்றன. ஆவடியில் மத்திய அரசாங்க ராணுவத் தளவாட உற்பத்திக்கு துணையாக இருக்கக்கூடிய, ராணுவத் தொடர்பான ஒரு பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, பின்னால் அது எப்படியோ இன்றுவரை கைவிடப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு). அதைப் பற்றி எந்தக் குறிப்பும் இதில் இல்லை. கைவிடப்படவில்லை என்று கூறும் அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் குறிப்பு கொடுக்கட்டும். அமைச்சர் அவர்கள் இருக்கிற இடத்தில் நான் இல்லை. நான் இருக்கிற இடத்திற்கு அமைச்சர் அவர்கள் இப்பொழுது வர விரும்பமாட்டார். அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் என்னென்ன தொழில்கள் தொடங்கப்படும் என்று சொல்லியுள்ள பகுதியில் அந்தத் தொழில் குறிப்பிடப்படவில்லை. எந்தெந்த தொழில்கள் இப்படி நிறைவேற்றப்படாமல் கைவிடப்படும் என்ற ஐயத்திற்கு இடம் இருக்கிறதோ, அவற்றை வற்புறுத்திப் பெறவேண்டும்.

இவை எல்லாவற்றையும்விட, சென்னைமாநகரத்தைப் பொறுத்த வரையில் சென்னை மாநகரத்திற்காகப் பல பெரிய திட்டங்கள் போடப்பட்டு பலகாலமாக அவை நிறைவேற்றப்படாமல் இருக்கிற காரணத்தினால், மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலாவது அவற்றை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் சென்னைமாநகரத்தின் நலன் இப்பொழுது உள்ள நிலைமையைவிடக் கெட்டுப்போகாமல் இருக்கும். வருங்காலத்தில் இதைவிட மக்கள் தொகையும் பெருகி, வசதிகளும் குறையுமானால், உண்மையிலேயே சென்னை நகர மக்கள் நல்வாழ்வு நடத்த முடியாது. அவர்களுடைய வாழ்க்கை பலவிதத்திலும் தொல்லைக்கு ஆளாகும். இத்திட்டத்தில் நான் குறிப்பிட விரும்புவது, சென்னைமாநகரத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குடிநீர் வடிகால் திட்டத்திற்கு 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் உதவித் தொகை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. சென்னைமாநகரத்தில் எந்த அளவுக்குத் திட்டப்படி குடிநீர் வழங்கவேண்டு

9th November 1961] [Sri K. Anbazhagan]

மென்ற அவசியம் இருக்கிறதோ, அந்தக் குடி நீரை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கும், வடிகால் திட்டத்திற்கும், டிரைனேஜ் கட்டுவதற்குத் தான் இந்த 5 கோடி ரூபாய் ஈடாகும். ஐந்து கோடி ரூபாயில் எந்த ஒரு உயர்தர திட்டமும் மாஸ்டர் பிளானும் செயல்படமுடியாது. ஏற்கனவே 40 ஆண்டுகள், 50 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட தண்ணீர் குழாய்கள் மடிந்துப் போய் விட்டதால் அந்த இடங்களில் குழாய்களை புதுப்பிப்பதற்கும், சென்னை நகரத்தோடு சேர்ந்த புதிய பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்து தருவதற்கும்தான் இந்த ஐந்து கோடி ரூபாய் துணையாகும். சென்னை நகரக் குடிதண்ணீர் திட்டம் பக்கத்திலுள்ள தண்ணீரைக் கொண்டு வந்து மக்களுக்கு வழங்குவது என்ற கட்டத்தில் இப்பொழுது இல்லை. எனவேதான், காவேரி தண்ணீரைச் சென்னைநகரத்திற்குக் கொண்டுவருவதுபற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு குழு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காவேரித் தண்ணீரைக் கொண்டுவரும் திட்டத்திற்கு 15 கோடி, 20 கோடி ரூபாய் அளவு பணம் ஒதுக்கியிருக்கவேண்டும். நிபுணர்கள் இதைப்பற்றி ஆராய்கிறார்கள் என்று மட்டும் சொல்லப்படுகிறது. நகரத்தில் ஏறத்தாழ 17½ லட்சம், 18 லட்சம் மக்கள் இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரம் தரப்படுகிறது. அவர்களது குடிதண்ணீர் தேவைக்கு காவேரித் தண்ணீரைச் சென்னை நகரத்திற்குக் கொண்டுவருவது மூன்றாவது திட்டத்தில் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். அதற்கு எந்த அடையாளத் தொகையும் ஒதுக்கப்படவில்லை. அம்மாதிரி ஒதுக்கப்படாதது வருந்தத்தக்கது. மேலும் சென்னைமாநகரத்திற்கு இப்பொழுது வழங்கப்படுகிற தண்ணீர் ஒரு நாளுக்கு 340 லட்சம் காலன் அளவுதான். பம்பாயில் வழங்கப்படுகிற தண்ணீர் 850 லட்சம் காலன் ஒரு நாளைக்கு. டெல்லியில் ஏறத்தாழ 650 லட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதுபோன்று ஏராளமாக தண்ணீர் வழங்கப்படக்கூடிய பகுதிகளுக்கு மூன்றாவது திட்டத்தில் பெரிய திட்டங்கள் போட்டு குடிதண்ணீர் வழங்குவதற்கு ஒரு பெரிய தொகை ஒதுக்க மத்திய அரசு இசைந்திருப்பதாக டெல்லி நகராட்சி மன்றத்தின் திட்டம் மூலம் அறிகிறேன். அந்த வாய்ப்பு டெல்லி நகராட்சி மன்றத்திற்கு இருக்கிறது என்றால், நம் சென்னைமாநகரத்திற்கும் குடிநீர் கொண்டுவர திட்டம் வேண்டும் என்று ஏன் வற்புறுத்தக் கூடாது? அமைச்சர் அவர்கள் இவற்றைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் வடக்கு தெற்கு என்று வேற்றுமையே கிடையாது, அம்மாதிரி வேற்றுமைக்கு எள்ளு அளவும் இடம் தரமாட்டோம், நகரம், கிராமம் என்று கூட பிரித்துப் பார்க்கமாட்டோம் என்று சொன்னாலும்கூட, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு மாநில அரசாங்கத்திற்கு மட்டும் அல்ல, மற்றும் 'டெரிடரீஸ்' என்று சொல்லப்படுகிற பகுதிகளுக்கும், வழங்கப்பட்டிருக்கிற நிதி உதவி பற்றியும், டெல்லிக்கு எவ்வளவு தொகைக்கு திட்டம் போடப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் திட்டவெளியீட்டில் படம் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இதோ அது. டெல்லிக்குக் கோபுர அளவிலும், மற்றப் பகுதிகளுக்குக் குடிசை அளவிலும்

வழங்கியிருக்கிறார்கள். 82 கோடி ரூபாய் டெல்லிக்கு மட்டும் வழங்கியிருக்கிறார்கள். பாண்டிச்சேரிக்கு 5 கோடி 6 கோடி ரூபாய், மற்ற பகுதிகளுக்கு 4 கோடி ரூபாய் இப்படி வழங்கியிருக்கிறார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தலை நகரத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்க அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்
4-30 p.m. டெல்லி சர்க்கார் என்பதை எடுத்துக்காட்டுவதற்குத்தான். அப்படி அவர்கள் ஒதுக்குவது டெல்லியின் வசதியைப் பெருக்கப் பயன் படும். சென்னை நகரத்திற்கு ஒரு ஐந்து அல்லது ஆறு கோடி என்று சொல்லி விடாமல் அதிகமாக ஏற்படுத்தியிருந்தால் நலமாக இருந்திருக்கும். எந்தக் காரணத்தினாலோ அப்படி செய்யவில்லை. சென்னை நகரத்திற்கு ஒரு நல்ல குடிதண்ணீர் திட்டத்தைக்கூட நிறைவேற்ற முடியவில்லை.

சென்னை நகரத்தில் கூவம் ஆறு திட்டம் என்று ஒரு போக்கு
வரத்துக்கு வசதியான திட்டத்தை இரண்டு மூன்று ஆண்டுக
ளுக்கு முன்னாலேயே நிபுணர்கள் ஆராய்ந்து, அந்தத் திட்டத்தை
அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். சென்னை நகரத்தின்
நெருக்கடியைத் தவிர்க்க 1¼ அல்லது 1½ கோடி ரூபாய் செலவில்
கூவத்தை சுத்தப்படுத்தி, அதற்குக் கரை கட்டி, அதில் கடல்
நீரைப் பாய்ச்ச வழி செய்து, அதில் படகுகள் போக்குவரத்தை
நடத்தலாம். கூவம் ஆறு துறைமுகத்திற்குப் பக்கத்தில்
வருவதால், அதை ஒட்டி கடலில் கலப்பதால், இறக்குமதி பொருள்
களை துறைமுக (ஹார்பர்) வட்டாரத்தில் பல்வேறு கிடங்குகள்
இருப்பதால்—நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்க பொருள்களை
நேரிடையாக நகரத்தின் எல்லைக்குக் கொண்டு போக வசதிகள்
செய்ய முடியும். அந்தத் திட்டத்திற்கு மூலதனம் வேண்டும்,
எங்கே போவது என்று கேட்கலாம். மத்திய சர்க்கார், மாநில
சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கும் கடற்கரை நிலத்தை ஹார்
பருக்கு இடவசதிக்காக எடுத்திருக்கிறார்கள். 1½ கோடி ரூபாய்
அளவுக்கு மாநில சர்க்காருக்கு ஈட்டுத்தொகை தருகிறார்கள், அந்த
நிதியைப் பயன்படுத்தினால், கூவத்தைப் பயன்படுத்த முடியும்,
அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று தெரிவிக்கிறேன்.
கூவத்தைப் பயன்படுத்தி, கரை கட்டி, கரைக்குப் பக்கத்தில் பல
கோடவுன்கள் அமைக்க வழிசெய்து, வணிகர்கள் பொருள்களை
கரைக்குப் பக்கத்தில் சேர்த்துவைத்து ஹார்பர் பகுதியிலிருந்து,
வெளிப் பகுதிகளுக்குக் கொண்டு போகும் அளவுக்கு நகர நெருக்
கடியைக் குறைக்க இந்தத் திட்டம் துணையாக இருக்கும். அந்தத்
திட்டம் எந்தக் காரணத்தினாலோ கைவிடப் பட்டிருக்கிறது.
அமைச்சரவர்கள் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி, திட்டத்தை
நிறைவேற்றுவதற்கான வழிவகை காணவில்லை என்று வருத்தத்
துடன் தெரிவிக்கிறேன். பல திட்டங்களைப் பற்றி இந்தக் குறிப்பில்
இல்லை. அமைச்சரைக் கேட்டால், எப்பொழுது அத்
திட்டங்களுக்குத் தேவை ஏற்படுகிறதோ, அப்பொழுது கேட்டுப்
பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கிறார்கள். அந்த போதாது,

அந்த உரிமையை முன்னாலேயே பெறவேண்டும். அதை நிறைவேற்றுவதற்கு நிதி துண்டு விழுந்தால், அப்பொழுது அதற்கு உதவி பெறலாம். புதிய பல திட்டங்களுக்குத் தேவை என்றால், அடுத்த ஐந்தாண்டு தள்ளிப் போடக் கூடிய நிலைமைதான் ஏற்படும்.

காவேரியிலிருந்து கால்வாய் வெட்டி புதுக்கோட்டைப் பகுதிக்கு நீர் பாய்ச்ச வேண்டும் என்று சட்ட மன்றத்திலே பல தடவைகள் தெரிவித்தார்கள். ஏதோ காரணத்தினால் அது ஏற்கப் படவில்லை. அதேபோல, மேட்டூர் அணையை உயர்த்த வேண்டும். காவேரிக்குக் கரை உயர்த்த வேண்டும்; கொள்ளிடத்தை ஆழப் படுத்த வேண்டும்; பாலாற்றுக்கு நீர் கொண்டு வரவேண்டும். அம்மாதிரியான திட்டங்கள்பற்றி குறிப்பில் ஒன்றும் இல்லை. அவைகளை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்க வேண்டும்.

மற்றும் மின்சார உற்பத்தியைப் பெருக்கவும், சென்னை நகரத்தில் நடத்தப்படும் தொழில்களுக்குத் துணையாகவும் ஒரு மின்சார நிலையம் ஏற்படுத்த வேண்டும். சென்னை வடிகால் நீரை ஒரு இடத்தில் தேக்கி, அதைச் சுத்தப்படுத்தும் முறையில் ஒரு நிலையம் ஏற்படுத்தி, அதன் மூலம் எரிவாயுவைப் உற்பத்தி செய்ய முடியும். அப்படிக் கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தியே தொழிற்சாலைகள் நடத்தலாம் அந்த எரிவாயு மூலம் மின்சாரத் திற்கு வழிசெய்யலாம். "காஸ் டர்பைன்" முறை மூலமாக எரிவாயுவை உற்பத்தி செய்து, மின்சார உற்பத்தி செய்ய முடியும் வாயுவை உற்பத்தி செய்து, மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவிக்கிறேன். அப்படி சென்னை நகரத்திலுள்ள "ஸூவேஜ் வாட்டரை"க் கொண்டு மின்சார உற்பத்திக்குத் தேவையான ஒரு எரிவாயு நிலையத்தை ஏற்படுத்துவதானால் அதற்குப் பெரும் மூலதனம் தேவை ஆகிவிடாது, சில கோடிகள் தான் வேண்டும், இதனால் சென்னை நகர மின்சாரத் தேவையை யாவது நிறைவேற்றலாம். இந்த ஸூவேஜ் வாட்டர் கூவத்தில் கலப்பதால் ஏற்படும் தீமையும் கெடுதலும் ஒழியும். தண்ணீர் வடிகட்டுவதனால் கிடைக்கும் வண்டலும் எருவாகப் பயன் படும்; தண்ணீரும் பாசனத்திற்குக் கிடைக்கும். குடிதண்ணீராகக் கொடுக்கும் அளவுக்குக்கூட தூய்மைப்படுத்த முடியும் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட தண்ணீரை அருந்த பொது மக்கள் அருவெறுப்பு அடைவார்கள் என்று சொன்னாலும், அவர்கள் உள்ளம் இடம் தராது என்று சொன்னாலும், அதைப் பாசனத் திற்குப் பயன் படுத்தலாம். அந்தத் திட்டம் என்ன காரணத் தினாலோ இதில் இடம் பெறவில்லை. அவ்வாறு விட்டுவிட்ட திட்டங்களைச் சேர்த்துப் பொதுமக்களுக்குப் பயன் அளிக்கும் திட்டங்களையும் சேர்த்துப் பார்த்தால், எந்த அளவுக்குந் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது, அந்தத் தொகை போதாது. அதனை இரட்டிப்பு மடங்கு ஆக ஆக்க முழு முயற்சி எடுக்க வேண்டும். தமிழ் நாட்டிலே உள்ள வருமானக் குறைவை நீக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, இந்தக் திட்டத்தின் அளவை உயர்த்துவது மூலமாக முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்தத் திட்டத்திலே எங்களுக்கு வெறுப்பு இல்லை. ஆனால், அதை நிறைவேற்றும் முறைகளிலே, ஏற்படும் குறைகளை அதில் காட்டப்படும் ஓரவஞ்சனைகளை, ஊழல்களைக் களைய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். வட நாட்டில் இரும்புத் தொழிற் சாலையில் ஏற்பட்டது ஊழல், சிந்திரியில் ஏற்பட்டது ஊழல், பக்ராவில் ஏற்பட்ட ஊழல் வளர்ந்து அது அணை வெடிக்கும் அளவுக்குப் போயிற்று—அவற்றிலும் நம் வரிப் பணமும் போய்ச் சேர்ந்திருக்கிறது என்ற உணர்ச்சியால், அந்தமாதிரியான குறைகளை ஊழல்களை நீக்க வேண்டும் என்று கேட்கிறோம். அமைச்சரவர்கள் குறைகள் இருப்பது இயற்கைதான் என்று சொல்லி விட்டால் போதாது. குறைகளைப் போக்க வேண்டும். நிதியமைச்சரவர்கள் இங்கே இருந்து குறைகளைப் போக்க முடியாது, அங்கேயே போய் நீக்கலாம் என்று போகப்போகிறார் போலும் என்றெண்ணுகிறேன். எங்கே போனாலும், உள்ள குறைகளை நீக்காவிடில் பயனில்லை என்று அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு, இந்தத் திட்டத்திற்கு நாங்கள் கொடுத்திருக்கும் பல திருத்தங்களையும் எண்ணிப் பார்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நமக்கு முன்னால் விவாதத்திற்கு வந்திருக்கும் இந்த நேரத்திலே, மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் பல விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது அகில இந்திய ரீதியில் ஆரம்பித்து, சர்வ தேச ரீதியில் சென்று இன்றைக்கு நாம் எந்த அளவுக்கு ஜனநாயகத்தை நாம் அனுஷ்டிக்கிறோம், என்ன வேண்டுமானாலும் பேசக்கூடிய பரிபூரண சுதந்திரம் கொடுத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். எந்த அளவுக்கு முதல் ஆண்டுத் திட்டம் இருந்தது, இரண்டாவது திட்டம் இருந்தது. இப்பொழுது எந்த அளவுக்கு மூன்றாவது திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது என்று சொல்லி, இந்த ஆண்டு முதல் ஆண்டாக ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நேரத்தில், இந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட வேண்டுமானால், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பெரிய அளவுக்கு உதவி செய்திருக்கிறார்கள் என்பதை அமைச்சரோ அல்லது சர்க்காரோ மறுக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில், இன்றைக்கு திட்டத்திற்கு ஒதுக்கும் தொகை எவ்வளவு, 100 கோடியா, 200 கோடியா, 300 கோடியா அல்லது 500 கோடியா என்பதல்ல பிரச்சினை. நீட்டலாம் திட்டத்தை. ஆனால், திட்டத்தைப் போடுவது பெரிதல்ல. அதைத் திறமையாக, நேர்மையாக நிறைவேற்ற வேண்டும் என்பதில்தான் எல்லாம் இருக்கிறது என்பதை யாரும் உணருவார்கள். அப்படிச் சொல்லக்கூடிய நேரத்திலே, இந்த இரண்டு திட்டங்களிலே என்ன குறைபாடுகளைக் கண்டீர்கள், சொல்லியிருக்கிறீர்கள் என்று கேட்கலாம். குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், இந்த இரண்டு திட்டங்களை நிறைவேற்றிய பிறகு, இன்றைக்கு மூன்றாவது திட்டத்திலே, விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டும்,

உணவு உற்பத்தி பெருக வேண்டும், குடும்பக் கட்டுப்பாட்டை நல்ல முறையிலே கொண்டு வரவேண்டும் என்பவைதான் பிரதானமாக இருக்கிறது. தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும், பொருள் வசதிகள் ஏற்படவேண்டும் என்று அந்தத் துறையில் கவனிக்கப் படுகிறது. அப்படிச் சொல்லித் திட்டம் தீட்டி விட்டால் போதுமா? குறிப்பாக மற்ற நாடுகள் எந்த அளவுக்கு முன்னேறிக்கொண்டு போகின்றன என்று பார்க்கும்போது, நாம் பழைய உழவு மாட்டை வைத்துக் கொண்டு, பழைய கலப்பையை வைத்துக் கொண்டு பெரிய அளவில் முன்னேற முடியுமா? நவீனக் கருவிகளை உபயோகிக்க வேண்டும். விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களை அத்தியாவசியமான பொருள்களைக் கொடுப்பது மட்டுமல்லாமல், அவை குறைந்த விலையில் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்தாகவேண்டும். சர்க்காருடைய கொள்கை இந்த விஷயத்தில் மிகவும் பிற்பட்ட கொள்கையாக இருக்கிறது. விவசாய அபிவிருத்திக்கு, உணவு உற்பத்திக்கு, தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய மூலப் பொருள்கள் எந்த அளவில் உற்பத்தி செய்யப் படுகின்றன அதற்காகக என்ன திட்டங்கள் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. அது மாத்திரம் அல்ல, நாங்கள் திட்டங்களை நிறைவேற்றி விட்டோம், உற்பத்தியைப் பெருக்கி விட்டோம், அதிகப்படுத்தி விட்டோம் என்று சொல்லி விட்டால் மட்டும் போதாது. உற்பத்தி அதிகமாக அதிகமாக விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகிறது. அப்படி உயர்ந்து கொண்டு போகலாமா? விலைவாசிகள் வருடத்திற்கு வருடம் மாதத்திற்கு மாதம் உயர்ந்து கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன? பல தொழில்கள் தனியார் துறையில் இருப்பதால்தான் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகிறது. ஒரு சிலருடைய கையில் இருப்பதால் பெரிய அளவிற்குப் பொருள் அங்கே குவிந்திருப்பதால் அவர்கள் கொள்ளை லாபம் அடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருப் பதால் விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகிறது. அவர்கள் விற்பனையைக் கட்டுப்படுத்துவதாலும் கொள்ளை லாபம் அடிப் பதாலும்தான் இப்படி விலைவாசிகள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் 11,600 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டாலும்கூட அந்த அளவில் நிறைவேற்றக்கூடியதாக இருக் கிறது. அதனால்தான் வருஷம் ஒன்றுக்கு 1½ மடங்கு உயர்ந்து கொண்டே போகிறது. இப்படித் தனியார் துறையில் அதிகப்படியான தொழிற்சாலைகள் இருப்பதால்தான் திட்டமே உருக்குலையக் கூடிய அளவில் அவர்கள் விலைவாசிகளை உயர்த்தி வருகிறார்கள். அதனால் இன்றைக்கு விலைவாசிகளை கட்டுப்படுத்த வேண்டும். வாழ்க்கைக்கு அத்யாவசியமாக உள்ள பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். இன்றைய நிலைமையில் விலைவாசிகள் எப்படி இருக்கிறது என்றால் குறைகூறக்கூடிய அளவில் நிலைமை இருக்கிறது. இதற்கு முன்னதாக கனம் அமைச்சர் அவர்கள் விலைவாசியைப்பற்றிப் பேசும்போது விலைவாசியின் உயர்வால் அதிகச் சம்பளம் வேண்டும் என்று கேட்கிறார்கள் என்றும் அதிகச்

[Sri V. K. Kothandaraman] [9th November 1961

சம்பளம் கொடுத்தால் விலைவாசிகள் அதிகமாக ஆகிறது என்றும் இப்படி ஒன்றுக்கு ஒன்று போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது என்றும் சொன்னார். இப்படிச் சொல்லிக்கொண்டு வந்தவர் சென்ற பட்ஜெட் விவாத நேரத்தில் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொன்னார். அதே மாதிரிதான் பார்லிமெண்டிலும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் சொன்னார்கள். அதே மாதிரி தான் திருச்சியில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில்கூட இது சம்பந்தமாக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அப்படி கமிட்டி அமைக்கக்கூடிய நிலைமைகூட ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிக் கமிட்டிகளை அமைத்து விட்டால் மட்டும் போதாது. அதே நேரத்தில் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில் இந்த நாட்டில் சோஷலிசம் உதவுமா என்று சந்தேகம் வந்தது. இந்த நாட்டிற்கு சோஷலிசமும் கம்யூனிஸமும் உதவாது என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால் சோஷலிச சமுதாயத்தைக் கொண்டு வருவதற்காக ஆவடி காங்கிரஸ் கூட்டத்தில் இதைப்பற்றித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் மூலமாவது மக்களிடத்தில் சோஷலிச சமுதாயத்தைப் பரப்புவதற்கு முயற்சிக்கப்பட்டது. அந்த அளவிலாவது அவர்களிடம் சோஷலிச மனப்பான்மை உண்டாகட்டும் என்ற அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் இன்றைய தினம் என்ன பார்க்கிறோம் என்றால் வேலையில்லாத் திண்டாட்டம்தான் அதிகமாகி இருக்கிறது. எந்த அளவுக்கு நாம் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோமோ அந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துக்கொண்டேதான் வருகிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்தில் சர்க்கார் புள்ளி விவரப்படி 53 லட்சம் பேர்களுக்கு வேலை இல்லாமல் இருந்திருக்கிறது. அதே போன்று மூன்றாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்தில் 93 லட்சம் பேர்களுக்கு வேலை இல்லாமல் இருக்கிறது. அரைகுறை வேலையிலுள்ளவர்கள் 150 முதல் 200 லட்சம் பேர்கள். இது போல் புள்ளி விவரம் சர்க்காருடையதுதான். இந்த நிலைமையில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதற்குக் காரணம் என்ன?

விவசாயத் துறையில் விவசாயி நிலச்சுவார்தார்களுடைய உறவு சரியாக இல்லாமல் இருப்பதோடல்லாமல் தொழில் துறையில்கூட முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் உறவு சரியாக இல்லை. அதுவும் தனியார் துறையில் இது பெரிய அளவிற்கு இருந்து வருகிறது. இன்றைக்கு நாங்கள் கம்யூனிஸ்ட் நாடு என்று சொல்லுகிறோம். தனியார் துறையில் எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறதோ அந்த அளவுக்கு சர்க்கார் துறையில் இருக்க முடியாது. அந்த முறையில் தனியார் துறையில் அதிகப்படியான தொழில்கள் இருப்பது அவசியம் இல்லை. இன்றைக்குப் பார்த்தால் குறிப்பாக கோச் பாக்டரியும், நெய்வேலி

9th November 1961] [Sri V. K. Kothandaraman]

திட்டமும் சர்க்காருடைய கையில் இருக்கிறது. ராஜ்ய சர்க்கார் எடுத்து நடத்தி வருவது இங்கே இருக்கக்கூடிய பஸ் ட்ரான்ஸ்போர்ட் தான். அது தவிர வேறு கிடையாது. ஆனால் சர்க்கார் சொல்லலாம், சர்க்கார் எடுத்து நடத்தினால் பத்துத் தொழிற்சாலைகளை எடுத்து நடத்தலாம், அப்பொழுது பத்தாயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கலாம், ஆனால் தனியார் துறையில் எடுத்து நடத்தினால் அவர்கள் 100 தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம், தனியார் தனிப்பட்ட முறையில் மூலதனம் போடுகிறார்கள் அதனால் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லலாம். இப்படி ஐந்து வருஷங்களாகக் கூறிக்கொண்டே வருகிறார்கள். ஆனால் வேலை இல்லாத் திண்டாட்டம்தான் அதிகமாகிக்கொண்டு வருகிறது. இதை நான் சர்க்காருடைய புள்ளி விவரங்களிலிருந்தே எடுத்துக்காட்ட முடியும். அதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த நாட்டில் 200 வருஷ காலமாக அந்நிய ஆட்சி இருந்த காலம் முதற்கொண்டு அந்நியர் இங்கிருந்து சுரண்டிக் கொண்டே போனான் என்று சொல்லப்படுகிறது. அன்று வெள்ளையன் இங்கிருந்து சுரண்டிக் கொண்டு போனான், ஆனால் இன்றைய தினம் இங்குள்ள முதலாளிகளே சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். சுரண்டுதல் பெரிய அளவில் உயர்ந்து கொண்டேதான் போய்க் கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் தனியார் துறையில் தொழில்கள் இருப்பதால்தான் முதலாளிகள் சரியாக அவைகளை நடத்துவில்லை. திடீர் திடீர் என்று தொழிற்சாலைகளை மூடிவிடுகிறார்கள். முதலாளி தொழிலாளி உறவு சரியாக இல்லை. சில தொழில்களை சர்க்காருக்குக் காண்பித்துப் பணத்தை வாங்கி அதை அபிவிருத்தி செய்யாமல் தொழிற்சாலைகளை மூடிவிடுகிறார்கள். ஆகவே அவர்கள் தொழில்களை சரியாக நடத்துகிறார்களா என்று பார்க்க வேண்டும். சரியானபடி தொழிற்சாலைகள் நடத்தப்படாததால்தான் இன்றையதினம் அவற்றை சர்க்காரே எடுத்து நடத்த வேண்டும் என்று சொல்லுகிறோம். அப்படி நடத்தக்கூடிய நிலைமையில் இல்லாதபோது தேர்தல் காலத்தில் மூன்றாவது திட்டத்தைக் காட்டி வெற்றி பெறப் போகிறார்கள். இதைத்தான் சுதந்தரா கட்சி எதிர்க்கிறது. இதைக் காட்டி மக்களிடத்தில் வோட்டு வாங்கலாம் என்று எதிர் பார்க்கிறது. இதற்கு 1,650 கோடி ரூபாய் புதிய வரி மூலமாக வசூல் செய்யப் போகிறார்கள். அந்த அளவுக்கு விலைவாசிகள் உயரப்போகிறது. அதற்கு என்று மேலும் புதிய வரிகளைப் போடப் போகிறார்கள். இதுதான் இரண்டாவது திட்ட காலத்திலும் நடந்தது. இப்பொழுது இதைக் காட்டி விட்டு பிறகு துணிச்சலாக அதிகப்படியான வரி போட்டு வசூலிக்கப் போகிறார்கள். ஆகவே தேர்தலுக்குப் போன பிறகு பார்க்கலாம். இன்றையதினம் 60 கோடி ரூபாய் ஏழை மக்களுடைய பொருள்களின் மீது வரி விதிக்கப் போகிறார்கள். தேர்தலுக்குப் பிறகு புதிய புதிய ரூபத்தில் வரிகள் வரப்போகிறது. இப்பொழுது குடும்பக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருகிறார்கள். ஒருவருக்கு இரண்டு மூன்று குழந்தைகளுக்குமேல் இருக்கக் கூடாது என்று சொல்லி வருகிறார்கள். மூன்றாவது திட்ட காலத்திற்குப் பிறகு இந்த அளவுக்கு மேல் பிள்ளைகள் இருந்தால் ஒரு

குழந்தைக்குப் பத்து ரூபாய் என்றும், இரண்டு குழந்தைகள் இருந்தால் பதினைந்து ரூபாய் என்றும் வரி விதிக்கக்கூடிய அளவில் வரலாம். ஆகவே எந்த வகையிலாவது வரி போடக்கூடிய அளவுக்கு பயம் இருக்கிறது. ஆகவே இன்றைக்கு இந்தப் பணத்தைச் சம்பாதிக்க சர்க்கார் ஏன் பஸ் லாரி போன்ற ட்ரான்ஸ்போர்ட்களை சர்க்காரே எடுத்து நடத்தக் கூடாது? அது போன்று இன்னும் சில கனரக இயந்திரத் தொழிற்சாலைகளை சர்க்காரே ஏன் எடுத்து நடத்தக் கூடாது? அப்படி எடுத்து நடத்தாமல் இருப்பதால்தான் திட்டம் தீட்டும்போது சோவியத் ரஷ்யா போன்ற திட்டங்களை நிறைவேற்றுகிறார்கள் என்று திரு. ராஜகோபாலாசாரியார் போன்றவர்கள் சொல்லி வருகிறார்கள். அதனால்தான் கம்யூனிஸ பாதையில் போகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த அளவில்தான் இன்றைக்கு சுதந்தரா கட்சி பிரசாரம் செய்துகொண்டு வருகிறது.

THE HON. SRI P. KAKKAN : அதனால்தான் அந்தக் கட்சியுடன் உறவாடிக்கொண்டு வருகிறீர்களா?

SRI V. K. KOTHANDARAMAN : அந்தக் கட்சியுடனும் சரி வேறு எந்தக் கட்சியுடனும் சரி உறவாடிக்கொண்டு நாங்கள் வரவில்லை. இதுபற்றி தேர்தலுக்குப் பிறகு தெரியும். யார் யாருடன் உறவாடிக் கொண்டு வருகிறார்கள் என்பது. அது இப்பொழுதே எங்களுக்குத் தெரியும். ஆனால் அதைப்பற்றி பின்னடி—தேர்தலுக்குப் பிறகு சொல்லுகிறோம். அதையேதான் நாங்கள் சொல்லிக்கொண்டு வருகிறோம்.

THE HON. SRI P. KAKKAN : நேரடியாக உறவாடாவிட்டாலும் வேறு விதமாக உறவாடிக்கொண்டுதான் வருகிறீர்கள்.

SRI V. K. KOTHANDARAMAN : தேர்தல் வரட்டும் சொல்லுகிறோம். ஒரு வருடத்திற்கு முன்னதாக கம்யூனிஸ்ட் கட்சி பலமாக இருக்கிறது, அதை கவிழ்க்க வேண்டும் என்பதற்காக எந்த அளவுக்கு ஜவஹர்லால் அவர்களும் காங்கிரஸ் கட்சி ப்ரசிடெண்ட் சஞ்சீவ ரெட்டி அவர்களும் மற்றும் பெரியவர்கள் முதற்கொண்டு பிற்போக்கு சக்திகளுடன் எவ்வளவு உறவாடினார்கள் என்பது தெரியும். பிற்போக்கு சக்திகளுடன் சேரக் கூடாது என்று சொன்னவர்கள் எப்படி உறவாடினார்கள் என்பதை மறைப்பதற்கு வேண்டுமானால் சொல்லலாம். ஆகவேதான், இன்றைய தினம் யார் யாருடன் சேரப் போகின்றார்கள், எப்படி நடைபெறப் போகின்றது என்பதை நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். நமது தமிழ்நாட்டில் தொழில்கள் வளருவதற்கான வாய்ப்புகள் எவ்வளவோ இருக்கின்றன. காகிதத் தொழிற்சாலை, பிலிம் தொழிற்சாலை, மாக்னஸைட் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை போன்றவைகளையெல்லாம் தனியார்கள் கையில் கொடுப்பதன் மூலமாகத் திட்டம் நிறைவேற முடியாத நிலைமையில் இருக்கிறது.

கிராமப் புறங்களில் பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பரிபூரண அதிகாரம் கொடுத்துவிட்டோம் என்று சர்க்கார் சொல்லுகிறார்கள் என்றாலும். அங்கே கிணறு வெட்டவேண்டுமென்றால் சிமெண்ட்

கிடைக்கவில்லை, கட்டிடம் கட்ட வேண்டுமென்றால் இரும்பு கிடைக்கவில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. ப்ளாக் மார்க்கெட்டில் வாங்கி வேலை செய்யக்கூடிய அளவு பல இடங்களில் நிலைமை இருந்து வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். சிமெண்ட் தொழிற்சாலை, இரும்புத் தொழிற்சாலை முதலியவைகள் சர்க்கார் கையில் இருக்குமேயானால், இதுபோன்று திட்டமே நிறைவேற முடியாத நிலைமை ஏற்பட முடியுமா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

திட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்றுவதற்கு ஆலோசனை கூறவேண்டுமென்று சொல்லிவிட்டு, அதே நேரத்தில் திட்டத்தைச் சீர்குலைப்பதற்கு முயற்சி செய்யக்கூடிய அளவுக்கு, மேலுக்கு காங்கிரஸ் என்று சொல்லிக் கொண்டு உள்ளுக்கு சுதந்திரா கட்சியுடன் உறவாடக்கூடிய அளவுக்குப் பல தொழிற்சாலைகளை நடத்தக்கூடிய . நபர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களைத் தாஜா செய்யக்கூடிய முறையிலே சர்க்காருடைய போக்கு இருக்கிறது. இதை மூடி மறைத்துக்கொள்வதற்கு என்ன வேண்டுமானாலும் பதில் சொல்லப்படுகிறது. திட்டமே வேண்டாம் என்று சொன்னவர்கள் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்தவர்கள். தனியார்த் துறையில்தான் இருக்கவேண்டும். பொதுத் துறையிலே தொழில்கள் இருக்கக்கூடாது என்று சொல்லக்கூடியவர்கள்தான் பகிரங்கமாகச் சொல்கிறார்கள். நமது சர்க்கார் நாளுக்காகப் படிப்படியாக முன்னேறுகிறோம். படிப்படியாக இரண்டையும் வளர்த்துக் கொண்டு போகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த ராஜ்ய சர்க்கார் எத்தனை தொழிற்சாலைகளை நடத்துகிறது என்று நான் கேட்கிறேன். கொஞ்சம் மூலதனம் போட்டிருக்கலாம். தனியார்களுக்கு மட்டும் பணம் எங்கிருந்து வருகிறது? அமெரிக்காவிடத்திலிருந்தோ, மேற்கு ஜெர்மனியிடத்திலிருந்தோ தனியார்களுக்குப் பணம் வருகிறதேயொழிய, அதே பணம் இந்தச் சர்க்கார் தொழில் நடத்தலாம் என்றால், அதற்குக் கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். நாங்கள் என்ன செய்வது என்று சர்க்கார் பதில் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்தச் சர்க்கார் பேரில் அவர்களுக்கு மதிப்பு இல்லை; நம்பிக்கை கிடையாது. ஆனால், இந்தியாவிலே தனியார்கள் நடத்தினால் எவ்வளவு கடன் வேண்டுமானாலும் கொடுப்போம் என்று சொல்லும் நிலைமை இருக்குமானால், இதற்கு ஆதரவு கொடுக்கும் அளவுக்கு சர்க்கார் இருக்குமானால், திட்டம் எந்த அளவுக்கு நிறைவேறும் என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேனே தவிர, மற்றப்படி ஏதோ சர்க்காரைக் குறை கூறி, மக்கள் மத்தியிலே சொல்லி வோட்டு வாங்கி மந்திரியாக உட்கார்ந்துவிடவேண்டும் என்பதற்காக அல்ல. இன்றைக்கு மந்திரியாக இருப்பவர்கள் நாளைக்கு ஒன்றுமே இல்லாமல் இருப்பதையும் நேருக்கு நேராக நாம் பார்க்கிறோம். இன்றைக்கு எம். எல். ஏ-வாக இருப்பவர் நாளைக்குச் சாதாரண மனிதராக வந்துவிடுகிறார். இதையும் பார்க்கிறோம். ஆகவே, திட்டத்தைப் பரிபூரணமாக நிறைவேற்ற வேண்டுமானால், நேர்மையான பார்வையில் பார்ப்பதன் மூலமாகத்தான் நாம் நல்ல முறையில் நிறை

வேற்ற முடியுமே அல்லாமல், நாம் விவசாய அபிவிருத்தி, உணவு உற்பத்தி, தொழில் அபிவிருத்தி என்று சொன்னால் மட்டும் போதாது. அதற்காகப் பணியாற்றுவதற்கு வழி காணவேண்டும். எதற்கெடுத்தாலும் மக்கள் பேரிலே மறைமுகமான வரி போடக் கூடாது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் எந்த அளவு நேரடி வரியைவிட மறைமுக வரி அதிகப்படுத்தக்கூடிய அளவுக்கு நிலைமை வளர்ந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

Sri R. KRISHNASAMI NAIDU : ஒவ்வொரு 'ஐட' மாகச் சொல்லுங்கள்.

Sri V. K. KOTHANDARAMAN : ஒரு 'ஐடம்' என்ன, ஆயிரம் ஐடம்கள் சொல்லத் தயார்.

Sri R. KRISHNASAMI NAIDU : ஒன்று சொல்லுங்கள்.

Sri V. K. KOTHANDARAMAN : இந்த நாடு 1947-ம் வருஷத்தில் சுதந்திரம் அடைந்த முதல் வருஷத்திலிருந்தே தனியார் துறையில் பல தொழிற்சாலைகள் நடந்துவருகின்றன. பல தொழிற்சாலைகளை வைத்துக் கொண்டிருக்கக்கூடிய டாடா ஸ்டீல் தொழிற்சாலையில் 4 கோடி 6 லட்ச ரூபாய் லாபம் வந்திருக்கிறது. 1960-ம் வருஷத்தில் 14 கோடி ரூபாய் லாபம் வந்திருக்கிறது. அப்பேர்ப்பட்ட பிரபுவுக்கு 10 கோடி ரூபாய், தம்பிடி வட்டி இல்லாமல் அரசாங்கம் கடன் கொடுத்திருக்கிறது. சாதாரண விவசாயி பம்ப் செட் வாங்கவேண்டும், கிணறு வெட்டவேண்டும், அல்லது விவசாய அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கடன் கேட்டால் அதற்குப் பல முறை சுற்றி அலையக்கூடிய நிலைமை இருக்கிறது. கடன் வாங்கிவிட்டாலும், அதைத் திருப்பிக் கட்ட முடியாவிட்டால், ஆடு, மாடு முதற்கொண்டு ஆஸ்தி எல்லாவற்றையும் ஜப்தி செய்து வசூல் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அதுபோன்றுதான் சிறிய வியாபாரியின் நிலைமையும். பெரிய முதலாளிகள் ரொம்ப இலேசாக, சாதாரணமாகப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது, 300 கோடி ரூபாய் வரையில் அவர்கள் வருமான வரி மத்திய சர்க்காருக்குச் செலுத்த வேண்டியிருக்கிறது, அதை எப்படியாவது கொடுத்துவிடுங்கள் என்று கெஞ்சிக் கூத்தாடும் நிலைமை இருக்கிறது. பார்லிமெண்டில் என்ன நடக்கிறது என்று நாம் கொஞ்சம் படிக்கவேண்டும். அப்பொழுதுதான், ஒரு ஐடம் அல்ல எத்தனை ஐடம் வேண்டுமானாலும் தெரிந்துகொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும்.

உணவு உற்பத்திப் பெருக்கத்தை ஏற்படுத்தவேண்டுமானால் விவசாய உறவு முறை சரியாக இருந்தாகவேண்டும். அப்படியில்லாமல், நாங்கள் என்ன வேண்டுமானாலும் பேச உரிமை கொடுத்துவிட்டோம், சுண்ணாம்பையும் வெண்ணெயையும் ஒன்றாகப் பார்க்கக்கூடாது என்று சொல்வதில் பிரயோஜனம் இல்லை. சுண்ணாம்பைக் காட்டி வெண்ணெய் என்று சொல்லக்கூடிய நபர்களும் இருக்கிறார்கள். சுண்ணாம்பை வெண்ணெய் என்று சொல்லக்கூடிய நபர்கள் யார் என்று தீர்ப்பு சொல்லக்கூடியவர்கள்

61413

மக்கள்தான். இன்றைக்குள்ள நிலைமையில் மெஜாரிட்டியாக வந்துவிட்டோம் என்று ஏதோ பிரமாதமாக [illegible]விட்டால் போதாது. நாளாவட்டத்தில் காலம் நிர்ணயிக்கும். [illegible] தெரியும். பக்கத்திலே எடுத்துக்காட்டாக இருப்பது [illegible] விஷயம். அதை மறந்துவிடக்கூடாது. ஆகவேதான் இன்றைக்கு இருக்கும் இந்த நிலைமையில் விவசாய உறவு முறைகளை நல்ல முறையிலே ஏற்படுத்தவேண்டும். புதிய வரிகளைக் கண் மூடித்தனமாகப் போடக் கூடாது என்பதை இப்போதே சொல்கிறேன். நமது சர்க்காரே தொழிற்சாலைகளை எடுத்து நடத்துவதன் மூலமாக, பஸ்களை எடுத்து நடத்துவதன் மூலமாக, பெரிய தொழில்களை நடத்தக்கூடிய அவர்களுக்கும் வரம்பு கட்டுவதன் மூலமாக, எந்த விதத்தில் வருமானத்தைக் கண்டுபிடிக்க முடியுமோ அந்த அளவு வருவாய் தேடவேண்டும். அதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதற்குமேல் வரியை போடாதே என்று நாங்கள் சொல்லவில்லை. சிட்டுக் குருவியின் தலையில் சுண்டக்காயை வையுங்கள், யானைத் தலையில் பாறாங்கல்லை வையுங்கள் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். சிட்டுக் குருவி தலையில் பாறாங்கல்லை வைத்தால் அது சட்னியாய்விடும். யானைத்தலையில் சுண்டக்காயை வைக்கவேண்டாம் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். தேர்தலுக்குப் பிறகு என்ன சொல்வார்கள் என்று தெரியும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பார்த்தோம். அழுகும் பொருள் வியாபாரிகள் தேர்தலின் போது ஏன் காங்கிரசை எதிர்த்தார்கள்? சர்க்கார் சிப்பந்திகள் ஏன் காங்கிரசை எதிர்த்தார்கள்? எந்த அளவு விலைவாசி உயர்ந்து கொண்டு போகிறது என்று அவர்களுக்குத் தெரியும். ஆகவே, உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்று சொன்னால் போதாது. விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். விவசாய அபிவிருத்திக்காக உறவு முறை சரியான முறையில் இருக்கச் செய்யவேண்டும். தொழில் அபிவிருத்தி என்று பேச்சளவில் சொல்லிவிட்டால் போதாது. கூடுமானவரை கன இயந்திரத் தொழிற்சாலைகளையெல்லாம் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்றுதான் இந்த நேரத்தில் நான் சொல்கிறேன். எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் சொல்லவில்லை. எல்லாமே தேசியமயமாக வேண்டுமென்று நான் சொல்லவில்லை. பிரான்ஸ் நாட்டை உதாரணமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது ஏகாதிபத்திய நாட்டைச் சேர்ந்தது. அங்கே திடீர் திடீர் என்று மந்திரிசபை கவிழ்ந்துகொண்டே இருக்கிறது. அங்கே பொருளாதாரத் துறையில் எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்று சொன்னார்கள். இங்கே ஒரு சர்க்காரை இன்னொரு சர்க்கார் அதாவது மத்திய சர்க்காரே—கவிழ்க்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அங்கே அப்படி அல்ல. அங்கே மக்கள் சபையிலே மக்களே மந்திரி சபையைக் கவிழ்த்து விடுகிறார்கள். அதைவிட இன்னும் சிறிய நாடாக இருக்கும் க்யூபா நாட்டிலே கூட எந்த அளவு தொழில்கள் தேசியமயமாகிறது என்பதைப் பார்க்கிறோம். சிலோனில் ஒரு பெண் பிள்ளை பிரதம மந்திரியாக

[Sri V. K. Kothandaraman] [9th November 1961

வந்தவுடனே எந்த அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது, அதற்கான திட்டங்கள் தீட்டக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இத்துடன் என் பேச்சை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

5·00 p.m. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8–30 a.m. tomorrow. The House then adjourned.

VII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. *Statutory Rules and Orders.*

365. *Notification issued with G.O.* 2617, *Revenue. dated 27th June* 1961 *regarding amendments to the Madras General Sales Tax Rules,* 1959, *published with Revenue Department Notification S.R.O. No. A*-1941 *of* 1959, *dated 28th March* 1959, *at Pages* 232–280 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated 1st April* 1959. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act,* 1959 (*Madras Act I of* 1959).]

366. *Notification issued with G.O. No.* 3534, *Revenue, dated 19th August* 1961, *exempting the religious institutions, the annual income of which is less than two hundred rupees, from the payment of contribution under sub-section* (1) *of section* 92 *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959. [*Laid on the table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Madras Act* 22 *of* 1959).]

367. *Notification issued with G.O. No.* 2947, *Revenue, dated 17th July* 1961, *regarding amendments to the headings in the forms issued under the Madras Entertainment Tax Rules,* 1939. [*Laid on the table of the House under section* 16 (4) *of the Madras (Entertainments Tax Act,* 1939) (*Madras Act X of* 1939).]

368. *Notification issued with G.O. No.* 1066, *Rural Development and Local Administration, dated 12th April* 1961, *under section* 7 (3) *of the Madras Panchayats Act,* 1958, *regarding declaration of Panchayats Development Block and constitution of third batch of Panchayat Unions in South Cuddalore Development District.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1959 (*Madras Act XXXV of* 1958).]

369. *Notification issued with G.O. No.* 1056, *Rural Development and Local Administration, dated 12th April* 1961, *under section* 7 (3) *of the Madras Panchayats Act,* 1958, *regarding declaration of Panchayats Development Blocks and constitution of third batch of Panchayat Unions in Chingleput Development District.* [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958.)]

9th November 1961]

370. *Notification issued with G.O. No.* 1069, *Rural Development and Local Administration, dated 12th April* 1961 *under section* 7 (3) *of the Madras Panchayats Act,* 1958, *regarding declaration of Panchayat Development Block and constitution of third batch of Panchayat Unions in North Tirunelveli Development District.* [*Laid on the table of the House under Section* 170 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

371. *Notification issued with G.O. No.* 1335, *Rural Development and Local Administration, dated 10th May* 1961, *regarding delegation of certain powers vested in Government to Additional Development Commissioner, Madras, under the Madras Panchayats Act,* 1958. [*Laid on the table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

372. *Notification issued with G.O. Ms. No.* 3280, *Home, dated 20th September* 1961, *amending rules issued under the Madras Borstal Schools Act,* 1925, *published with Home Department Notification No.* 1074, *dated the 25th August* 1938, *at pages* 1308–09 *of Part I of the* Fort St. George Gazette, *dated the 13th September* 1938, *as subsequently amended.* [*Laid on the table of the House under section* 4 *of the Madras Borstal Schools Act,* 1925 (*Madras Act V of* 1926).]

373. *Notification issued with G.O. Ms. No.* 1499, *Public (Services-A), dated 4th September* 1961, *amending Annexure I of the Madras Public Service Commission Regulations,* 1954, *published with Public (Services) Department Notification No.* 50, *dated the 5th May* 1954, *at pages* 759 *to* 768 *of Part-I of the* Fort St. George Gazette, *dated the 9th June* 1954, *as subsequently amended.* [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

374. *Notification issued with G.O. No.* 2906, *Revenue, dated 13th July* 1961, *framing rules under sub-section* (1) *or clauses* (*b*), (*c*), (*d*), (*e*) *and* (*h*) *of sub-section* (2) *of section* 29, *read with section* 17 *of the Madras (Transferred Territory) Incorporated House under section* 29 (3) *of the Madras (Transferred Territory) and Unincorporated Devaswams Act.* [*Laid on the table of the Incorporated and Unincorporated Devaswams Act,* 1959 (*Madras Act* 30 *of* 1959).]

375. *Notification issued with G.O. Ms. No.* 3002, *Home, dated 31st August* 1961, *exempting from payment of Motor Vehicles Tax in respect of Willy's Jeep, bearing registration No. MDR* 3607, *belonging to the United Nations International Children's Emergency Fund, under sub-section* (1) *of section* 11 *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931. [*Laid on the table of the House under section* 11(2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

376. *Notification issued with G.O. Ms. No.* 3181, *Home, dated 14th September* 1961, *ameding rule* 6 *of the Madras Neera or Padani Rules,* 1939, *published with Revenue Department*

[9th November 1961

Notification No. 196, *dated* 10*th February* 1939, *at pages* 255–256 *of Part I of the* Fort St. George Gazette, *dated* 28*th February* 1939, *as subsequently amended.* [*Laid on the table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act X of* 1937).]

377. *Notification issued with G.O. Ms. No.* 2989, *Home, dated* 30*th August* 1961, *amending the Rules for the Disposal of Confiscated Articles, published with Revenue Department Notification No.* 799, *dated the* 15*th October* 1937, *at page* 1785 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 19*th October* 1937, *as subsequently amended.* [*Laid on the table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act* 1937 (*Madras Act X of* 1937).]

378. *Notification issued with G.O. Ms. No.* 5384, *Industries, Labour and Co-operation (Labour), dated* 6*th September* 1961 *inserting a new Rule No.* 29 *after Rules* 28 *of the Madras Catering Establishments rules,* 1959, *published with the Industries, Labour and Co-operation Department Notification S.R.O. No. A*-2118 *of* 1959, *dated the* 31*st March* 1959, *at pages* 299 *to* 309 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the* 8*th April* 1959. [*Laid on the table of the House under section* 29 (4) *of the Madras Catering Establishments Act,* 1958. (*Madras Act XIII of* 1958.]

379. *Notification issued with G.O. Ms. No.* 3171, *Home, dated the* 14*th September* 1961, *amending Rule* 56 *of the Madras Cinemas (Regulation) Rules,* 1957, *published with Home Department Notification S.R.O. No. A*-701 *of* 1957, *dated the* 30*th January* 1957, *at pages* 79 *to* 104 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated the* 30*th January* 1957, *as subsequently amended.* [*Laid on the table of he House under section* 10 (3) *of the Madras Cinemas (Regulation) Act,* 1955 (*Madras Act IX of* 1955).]

380. *Notification issued with G.O. Ms. No.* 3270, *Home, dated* 19*th September* 1961, *exempting from the Motor Vehicles Tax payable in respect of the bus MDH* 2819 *used for comforts of troops and their families stationed with Vehicles Depot., Avadi.* [*Laid on the table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act,* 1931 (*Madras Act III of* 1931).]

381. *Notification issued with Government Memorandum No.* 82482 *M.* 5/60-6, *Local Administration, dated* 17*th August* 1961 *amending the late Health, Education and Local Administration Department Notification No.* 672, *dated the* 29*th September* 1955, *published in Part I of the* Fort St. George Gazette *Extraordinary, dated the* 30*th September* 1955, *regarding Courtallam Township Committee* [*Laid on the table of the House under section* 4 (3) *of the Courtallam Township Act,* 1955 (*Madras Act XVI of* 1955).]

9th November 1961]

382. *Notification issued by the Regional Inspector of Municipal Councils and Local Boards, Thanjavur regarding Kandithampettai and Ullikottai Panchayats in Thanjavur District.* [*Laid on the* table of the House under section 113 (4) of the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]

B. Reports, Notifications and other papers.

224. *The Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Bill,* 1961.

225. *Notification issued with G.O. Ms. No.* 2716, *Home, dated* 7*th August* 1961 *amending the Rules for the management of special Homes and work-houses in the City of Madras,* 1955 *as published with Home Department Notification, dated* 23*rd June* 1955, *at pages* 279 *to* 289 *of the Rules Supplement to Part I of the* Fort St. George Gazette, *dated* 13*th July* 1955 *under section* 71-*L of the Madras City Police Act,* 1888 (*Madras Act III of* 1888), *as subsequently amended.*

226. *Government review on the working of the Travancore Minerals, Limited, Quilon for the year ending* 31*st March* 1960 *together with the Company's Annual Report.*

227. *Statement showing the activities of the Accommodation Control Department of the half-year ending* 30*th June* 1961

228. *Notification issued with G.O. Ms. No.* 1223, *Health, dated* 16*th May* 1961 *amending Rule I of the Rules published with the late Public Health Department Notification No.* 303, *dated the* 15*th August* 1938, *at pages* 311–318 *of Part I of the* Fort St. George Gazette, *dated the* 25*th April* 1938 *under section* 20 *of the Madras Registration of Births and Deaths Act,* 1899 (*Madras Act III of* 1899), *as subsequently amended.*

229. *The Madras Hindu Religious and Charitable Endowments (Second Amendment) Bill,* 1961 (*L.C. Bill No.* 4 *of* 1961).

230. *Notification issued with G.O. Ms. No.* 2942, *Food and Agriculture, dated* 16*th August* 1961 *empowering certain officers of the Fisheries Department to exercise the powers specified in section* 7 (1) *of the Indian Fisheries Act,* 1897 (*Central Act IV of* 1897) *in respect of any offence punishable under section* 4 *or* 5 *or under any rule under section* 6 *of the said Act*

231. *Notification issued with G.O. Ms. No.* 5360, *Industries, Labour and Co-operation (Labour), dated* 5*th September* 1961 *amending the Industries, Labour and Co-operation Department Notification* 11-1 *No.* 1665 *of* 1960, *dated* 22*nd September* 1960, *published at pages* 560–564 *of Part II—Section I of the* Fort St. George Gazette, *dated the* 19*th October* 1960 *under sub-section* (1) *of section* 7 *of the Plantations Labour Act,* 1951 (*Central Act LXIX of* 1951).

[9th November 1961

232. *Notification issued with G.O. Ms. No.* 1405, *Food and Agriculture, dated* 13*th October* 1960 *amending the Madras Cotton Control Order* 1960 *under sub-section* (1) *and clause* (*a*), (*b*), (*d*) *and* (*f*) *of sub-section* (2) *of section* 3 *of the Essential Commodities Act*, 1955 (*Central Act* 10 *of* 1955).

233. *Notification issued with G.O. Ms. No.* 3459, *Food and Agriculture, dated* 13*th October* 1960 *amending the Madras Cotton Control Order*, 1960, *published at pages* 205-206 *of the Rules Supplement to Part II of the* Fort St. George Gazette, dated the 11*th May* 1960 *under sub-section* (1) *and clauses* (*a*), (*b*), (*d*) *and* (*f*) *of sub-section* (2) *of section* 3 *of the Essential Commodities Act*, 1955 (*Central Act* 10 *of* 1955).

234. *Notification issued with G.O. Ms. No.* 394, *Food and Agriculture, dated* 14*th March* 1961 *amending the Madras Cotton Control Order*, 1960, *published at pages* 205-206 *of Rules Supplement to Part II of the Fort St. George Gazette, dated the* 11*th May* 1960, *under sub-section* (1) *and clauses* (*a*), (*b*), (*d*) *and* (*f*) *of sub-section* (2) *of section* (3) *of the Essential Commodities Act*, 1955 (*Central Act* 10 *of* 1955) *as subsequently amended*.

235. *The Madras Minor Inams* (*Abolition and Conversion into Ryotwari*) *Bill*, 1961 (*L.A. Bill No.* 48 *of* 1961).

236. *The Madras Lease-holds* (*Abolition and Conversion into Ryotwari*) *Bill*, 1961 (*L.A. Bill No.* 49 *of* 1961).

237. *The Madras Iruvaram Inam Estates* (*Abolition and Conversion into Ryotwari*) *Bill*, 1961 (*L.A. Bill No.* 50 *of* 1961).

9th November 1961]

APPENDIX I.

[Vide answer to Starred Question No. 1917, asked by Sri V. K. Kothandaraman on behalf of Sri M. Kalyanasundaram at the meeting of the Legislative Assembly held on 9th November 1961, page 5 supra.]

A.—Under the Centrally sponsored programme for Scheduled Castes, the Government have drawn up two schemes for the improvement of the working conditions of sweepers and scavengers, viz., (1) housing of sweepers and scavengers and (2) supply of wheel-barrows. Under the housing schemes, houses costing Rs. 1,000 each will be constructed according to an approved type design. Fifty per cent of the cost of construction of a house will be given as subsidy by the Government and the remaining portion of the expenditure will be met by the local bodies concerned. The local bodies are eligible for loans from Government to meet their share of contribution. The houses shall be the property of the local bodies concerned and the beneficiary-sweepers and scavengers can occupy them so long as they are in service under the local bodies. The local bodies may levy a nominal rent to meet the maintenance charges of the houses.

As a measure calculated to eliminate the practice of carrying night-soil on heads, a scheme has been formulated to introduce wheel barrows for use by scavengers or sweepers employed by the local bodies or municipalities for transporting the night-soil Fifty per cent of the cost of purchase of wheel barrows will be subsidised by the Central Government, and the remaining portion will be borne by the local body or municipality concerned.

The list of municipalities and panchayats to be benefited during the current year has not been finalised yet.

APPENDIX II.

[Vide answer to Starred Question No. 1921 asked by Sri A. A. Rasheed at the meeting of the Legislative Assembly held on 9th November 1961, page 7 supra.]

(18) சென்னை நகர் நடுவில் நீர் தேங்கும் கூவத்தை முன்னர் நிபுணர்கள் ஆராய்ந்து கூறிய திட்டப்படி, படகு போக்குவரத்துக்குரிய கால்வாயாக அமைக்க வேண்டும்.

(19) சென்னைப்புறநகர் திட்டத்துக்கும்—பெருஞ்சாலை இணைப்புக்கும் வழி செய்யவேண்டும்.

(20) சென்னை மாநகர் நடைபாதை வாசிகளுக்கு குடி- T, *வசதி செய்யவேண்டும்.*

during 196

(21) சென்னையிலிருந்து தெற்கே விழுப்புரம்—மேற்கே All adeq *—விரைவுப்பாதை* (**Express Highways**) *அமைக்க*

caterpillar m

10th November 1961] [Sri K. Anbazhagan]

(22) சென்னையிலிருந்து அரக்கோணம் வரை மின்சார ரயில் பாதை மேற்கொள்ள வேண்டும்.

(23) தமிழ்நாடு அரசினரால் பல ஆண்டுகளாக கேட்கப்பட்டுவரும் புதிய ரயில்பாதைகளை இத்திட்டத்தில் நிறைவேற்றச் செய்யவேண்டும்.

(24) வெள்ளத் தடுப்புக்கு ஏதுவாக—காவிரியில் புது அணை கட்டுவது, மேட்டூர் அணை கரையை உயர்த்துவது, காவிரியிலிருந்து புதுக்கோட்டை பகுதிக்கு கால்வாய் வெட்டுவது காவிரி கரையை உயர்த்துவது, கொள்ளிடத்தை ஆழப்படுத்துவது—ஆகியவற்றை மேற்கொள்ளவேண்டும்.

(25) பாலாற்றுக்கு நீர் கிடைக்க வழிகாண வேண்டும்.

(26) மதுரை விமான நிலையத்தின் தரத்தை உயர்த்த வேண்டும்.

(27) மதுரையில் ஓர் பல்கலைக்கழகம் அமைய வழிகாண வேண்டும்.

(28) அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், காவல் துறையினர் ஆகியோரில் குறைந்த ஊதியம் உள்ளவர்கள் அனைவருக்கும் குடியிருப்பு வீடுகள் கட்டித்தர திட்டமிட வேண்டும்.

SRI P. U. SHANMUGAM : I second the amendment, Sir,

SRI N. K. PALANISAMI : Sir, I move—

Add at the end the following, viz.—

and on such consideration this House is of opinion that.—

(1) the Plan fails to draw the correct lessons from the experience of the earlier two Five-Year Plans and continues to suffer from certain fundamental defects in its approach, objectives and methods;

(2) the size and the scope of the Plan do not measure up to the imperative needs of rapid economic development and there is no dependable guarantee that the rate of growth, which is far from adequate, will be achieved;

(3) having regard to the growth of population, unless the rate of growth of the economic development is accelerated, it will be difficult to maintain even the existing level of living of our people and the promise of "the opportunity to lead a good life" to the masses would all but remain on paper;

(4) far from containing any effective proposals for an equitable and fair distribution of national income among various classes, the Plan continues the same old policies of its two predecessors which have resulted in enormous concentration of wealth in the hands of a few and growth of income disparities;

(5) the Plan does not at all offer in concrete terms any rise in the living standards of the working people and material incentive which is essential for rousing labour enthusiasm and for releasing the creative energy of our people;

[Sri N. K. Palanisami] [10th November 1961

(6) despite its proclaimed stress on agriculture, the Plan does not still come to grips with the crux of the problem of our agrarian economy, namely radical agrarian reforms to distribute land to the tiller of the soil;

(7) the Plan does neither assess the existing ceilings on landholdings nor make any proposals to enforce the ceiling in a manner that would break the concentration of land with a relatively small number of landlords and make larger quantities of surplus lands available to the State for distribution among agricultural labour and poor peasants;

(8) the Plan does not have adequate proposals to relieve pressure on land by creating and expanding alternative avenues of employment in our villages through rapid and wide-spread promotion of cottage and village industries;

(9) the Plan does not realistically review the experience of the rural co-operatives nor does it propose any radical orientation so as to eliminate the grip of the village exploiters over them and mobilise the people in a truly voluntary co-operative efforts,

(10) the proposals of the Plan for industrialisation are neither adequate nor balanced nor do they place adequate emphasis on the small and medium industries which have an important part to play in the present stage of our development.

(11) the growth of the Public Sector industries remain still restricted largely due to failure to nationalise certain industries and there is no promise, at the present rate of relative development of the public and private sector, that the latter is going to attain decisively the commanding heights in our economy, in the course of the next five years or even longer;

(12) the Plan exaggerates the role of the organized private sector and plays down its negative and retarding features under monopoly controls;

(13) the Industries in the private sector are not sufficiently brought within the purview of planning and much of its field is left open to operations in disregard of national priorities, and for sheer profit motive;

(14) the Plan does not propose effective measures through cost accounting under the aegis of the State and otherwise against manipulations by monopolists in respect of production costs, prices and so on;

(15) the approach of the Plan with regard to resources is conservative and conventional and in a great measure undemocratic and anti-people;

(16) the Plan does not recognise even in principle that in the conditions of our country an expanding and revenue yielding State Sector has to provide the main source of the wherewithal for planning while the taxes on the common man has to be reduced;

10th November 1961] [Sri N. K. Palnisami]

(17) the Plan relies more on taxes the incidence of which fall more and more on the working people while the upper strata of the rich are not adequately taxed;

(18) the Plan has no correct approach for mobilising to the fulllest possible extent for planned investment the savings in the corporate sector and in partnership concerns under the control of the big business.

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move—

"Add at the end the fololwing, viz. :—

"and on such consideration the House is of opinion—

(1) that sufficient outlay has not been made and attention given to agriculture to cope up with the ever increasing population of the State;

(2) that sufficient steps have not been taken to increase the transport facilities, railways and waterways and roads to facilitate easy movement of goods to the State and out of the State;

(3) that sufficient outlay has not been provided for starting more large and medium industries to achieve rapid industrialisation;

(4) that sufficient attention has not been given to provide more power at cheap rates to industries to facilitate industrialisation;

(5) that there has been no appreciable increase in the relief of unemployment; and

(6) that no steps have been taken for lowering of price levels as a result of the first two Plans and the Third Plan which is likely to result in further inflation and increase of taxation."

SRI A. GOVINDASAMY : I second the amendment, Sir.

DEPUTY SPEAKER : The motion and the amendments are before the House for discussion.

SRI P. S. CHINNADURAI : *மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியான வடிவம் இப்பொழுது இந்த சபை முன்பு விவாதத்திற்கு வைக்கப் பட்டிருக்கிறது. இந்த வடிவத்தைப் பற்றி ஏற்கெனவே இந்த சபையில் மிகவும் விரிவாக விவாதம் நடந்துவிட்டதால், இனி இந்தத் திட்டத்தை எந்த அளவிலே திறம்பட நிறைவேற்றுவது என்பது குறித்துத்தான் நாம் பேசவேண்டியிருக்கிறது. ஆகவே அது பற்றி இந்த சபையிலே, இன்றைக்கும், நாளைக்கும் மட்டுமல்ல, இந்தத் திட்ட காலம் முடியும் வரையிலும் நாம் பேசிக் கொண்டு இருப்போம். இந்தத் திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்குரிய எல்லாவிதமான வழிவகைகளையும் நாம்*

[Sri P. S. Chinnadurai] [10th November 1961

எல்லோரும் கலந்து பேசி, செயலாற்றுவதில் தக்க முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும் என்ற மனப்பான்மையோடு, இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் குறித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். திட்டங்கள் அவசியமா என்ற கேள்வியைப் பொறுத்த வரையில், நாட்டில் யாரோ ஒரு சிலர் திட்டங்களே தேவையில்லை என்று பேசி வந்த போதிலும், இந்தியா போன்ற பின் தங்கிய நாட்டில் திட்டமிட்டுத்தான் பொருளாதாரம் வளரவேண்டும், திட்டமூலம்தான் மக்கள் முன்னேறவேண்டும் என்ற கருத்து வேரூன்றி இருக்கிறது. இந்த மக்கள் திட்ட மிட்டு முன்னேறுவதைத்தான் உறுதியாக எண்ணி, நம்பி வருகிறார்கள் என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நாடு பொருளாதாரத் துறையில் பெரிய மாறுதலை அடைந்து கொண்டு வருகிறது; விரைவாக உயர வேண்டும் என்ற ஆவல் மக்களிடம் இருக்கிறது. மிக்க அவசியமாகத் திட்டங்கள் இட்டு முன்னேறவேண்டும் என்ற அவா மக்களிடம் வேரூன்றியிருக்கிறது. அதை அகற்றும் முறையில் குழப்பத்தை உண்டு பண்ணும் ரீதியில் ஒரு சில மேதாவிகள் முயன்றாலும், அது நிறைவேறாது. திட்டங்கள் போடுவதின் மூலம்தான் நாட்டை வளம் பெறச் செய்ய முடியும், அப்படித்திட்டங்கள் போடுவதிலும், அவற்றை நிறை வேற்றுவதிலும் தங்கள் தங்கள் பங்கை நிறை வேற்ற முன்வரவேண்டும் என்று மக்கள் ஆவலாக இருக்கிறார்கள். ஒரு சிலருடைய குழம்பிய பொருளாதாரத்தை, குழம்பிய சேற்றில் மீன் பிடிப்பது போன்ற முதலாளித்துவக் கொள்கையை, நாட்டிலுள்ள பெருவாரியான மக்கள் ஏற்கமாட்டார்கள், அதற்கு இடம் தர மாட்டார்கள். திட்ட மிடுவதில் இங்கும் அங்கும் ஏற்படும் எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சி பின்வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன்.

திட்டங்கள் அவசியம்தான். திட்டங்களின் நோக்கம் என்ன? திட்டங்கள் எந்த அடிப்படையில், எந்த லட்சியத்தை அடிப்படையாகக்கொண்டு இருக்க வேண்டும் என்ற கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே நாம் சமதர்ம பொருளாதார லட்சியத்தை நம் நாட்டின் லட்சியமாக ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். இந்தியாவிலேயே சம தர்மத்திற்கு விரோதமாகப் பேசி வந்த போதிலும், இந்தியாவின் லட்சியம் சமதர்மம் என்று நாட்டின் பாராளுமன்றமே ஏற்றுக் கொண்டு இருக்கிறது. இந்த நாட்டில் உள்ள கட்சிகளுக்குள் பெரிய கட்சியாகவும், சுதந்திரம் பெற்ற நாள் முதல் ஆளும் கட்சியாகவும் இருந்து வரும் காங்கிரஸ் கட்சி சில ஆண்டு காலத்திற்கு முன்வரை சமதர்மத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மறுத்து வந்தது. ஆனாலும், மாறி வரும் நாட்டு மக்களின் கருத்தை உணர்ந்து, அவர்கள் எண்ணங்களை ஆராய்ந்து, நம் நாட்டின் பொருளாதார லட்சியம் சமதர்மமாகத்தான் இருக்க வேண்டும், சமதர்ம பொருளாதாரத்தின் மூலம் தான் முன்னேற்றம் அடையவேண்டும், அப்படி அடைவதுதான் நாட்டின் லட்சியம் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு நாட்டில் பெருவாரியான மக்கள் விரும்புவது, சமதர்மப் பொருளாதார லட்சியம். அந்த லட்சியத்தை ஒரு கட்சி

10th November 1961] [Sri P. S. Chinnadurai]

யைத் தவிர, புதிதாகத் தோன்றியிருக்கும் ஒரு கட்சியைத் தவிர, மற்ற எல்லாக் கட்சிகளும் தங்கள் தங்கள் விளக்கத்திற்குத் தக்கபடி சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவே நாம் இடும் திட்டங்கள் அந்த சமதர்மப் பொருளாதாரத்திற்குத் தக்கபடி அமைய வேண்டும் என்பதில் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இந்த விஷயத்தில் நான் ஆரஅமர நிதானித்துப் பேச விரும்புகிறேன். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இட்டு இருக்கும் முறையையும், ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கியிருக்கும் தொகையையும் ஆராய்ந்து பார்க்கும் போது, நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிற சமதர்மப் பொருளாதார லட்சியத்தை நோக்கி நாம் வேகமாக மக்களை நடத்திச் செல்ல அதற்குரிய வாய்ப்பினைக் கொடுக்கும் திட்டமாக இருக்கிறதா என்றால், நாம் விரும்பும் அளவுக்கு வாய்ப்புகளை அளிப்பதாக இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். சமதர்ம பொருளாதார லட்சியத்தை நோக்கி மக்களைக் கொண்டு செல்லும் திட்டமாக இந்த மூன்றாவது திட்டம் அமையவில்லை. ஏதோ ஒரு தயக்கத்தை அடிப்படையாகக்கொண்டு, ஒரு கலப்படப் பொருளாதாரத்தை அமைக்கப் போகும் திட்டமாகத் திகழ்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், இந்தத் திட்டம் நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் லட்சியத்திற்கு ஏற்ப, அதை நோக்கி தீவிரமாக, அதி வேகமாகச் செல்லக் கூடியதாக இல்லை. தனியார் துறைகளுக்கு குறைத்து, பொதுத் துறைகளுக்கு அதிகமாகத் தொகைகளை ஒதுக்க முற்பட்டிருக்கவேண்டும். அப்படிச் செய்வது நம் கடமை. இதனால், தனியார் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பல்வேறு தொழிற்சாலைகளை நாட்டில் ஏற்படுத்த வேண்டாம் என்றோ அல்லது அம்மாதிரி ஏற்பட்ட பிறகு அவை நடைபெறாமல் இருக்கும் அதற்கு இடையூறாக இருக்கும் ஒரு கொள்கையை அனுசரிக்க் வேண்டுமென்றோ நான் விரும்பவில்லை. எனது கட்சியும் விரும்பாது. ஆனால், இருக்கும் குறைகளை எடுத்துச் சுட்டிக்காட்டுவது என் கடமை. இந்த மூன்றாவது திட்டம் ஒரு கலப்படப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் ஒரு திட்டம் என்று நான் எண்ணுகிறேன். ஆனால், பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்தது என்றால், அதை விட்டு விடுவதற்கில்லை. மேலும், மேலும், முனைந்து, முனைந்து நல்ல பிள்ளையாராகப் பிடிக்க முடியுமா என்று முயற்சி செய்ய வேண்டும் என்றுதான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு அம்மாதிரி நிறைவேற்ற முடியாவிட்டாலும், அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலாவது அப்படிச் செய்ய முடியுமா என்று இப்போதிருந்தே அடிகோலவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையாக இருக்கிறது. இம்மாதிரிக் கருத்துக்களைச் சொல்லும் போது, " சரி, உங்கள் கருத்துக்களை நீங்கள் சொல்லுங்கள், எங்கள் கருத்துக்களை நாங்கள் சொல்லுகிறோம். இரண்டையும் மக்கள் முன்னாலே வைக்கிறோம். தேர்தலில் மக்கள் என்ன தீர்ப்புச் சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். அவர்கள் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுவோம் " என்று ஒரு புதிய கருத்தை, புதிய

[Sri P. S. Chinnadurai] [10th November 1961

கருத்து என்று கூடச் சொல்ல மாட்டேன், ஒரு புதிய பிரசார தந்திரத்தை நிதி அமைச்சரவர்கள் நேற்று சபைமுன் எடுத்து கூறியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இந்த மூன்றாவது திட்டம் காங்கிரஸ் கட்சியின் திட்டம் என்று அவர்கள் நினைக்கிறார்களா? அப்படியானால், திட்டத்தை உருவாக்குவதில் ஆலோசனைகள் கொடுக்கவும், திட்டத்தை உருவாக்கவும், ஒரு சர்வ கட்சிக் குழுவை ஏற்படுத்தியிருக்க வேண்டிய அவசியம் என்ன? ஆகவே, நாம் ஆலோசனைகள் செய்து, 400 கோடி ரூபாய் அளவுக்குத் திட்டம் வகுத்து, பின்னால் எல்லா இராச்சியங்களும் தங்கள் தங்கள் கருத்துக்களை சொன்ன பிறகு மேல் இடத்தில், அகில இந்திய ரீதியில் ஆலோசனை செய்து குறைத்துக் கொண்டோம். அப்படிக் குறைத்துக் கொண்டதில் கருத்து வேறுபாடு வந்தது. அதைப் பற்றி ஒரு தடவை சொல்லியாகி விட்டது. சண்டை போட்டிருக்க வேண்டும், துணிச்சலாக நடந்துக் கொண்டிருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லி முடிந்தாகி விட்டது. இப்பொழுது திட்டம் நம் முன்னால், சபை முன்னால் இருக்கிறது. அதை நாம் அமல் நடத்தும் கட்டத்தில் இருக்கிறோம். அதில் ஏற்பட்ட குறைபாட்டையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு, திட்டம் நிறைவேறுவதற்கு இடையூறாக இருப்பதில் எனக்கு அக்கறையில்லை. இருக்கும் அளவில், 291 கோடி என்பதை கூடுமான வரையில், 10, 50 கோடிகள் அதிகமாக வாங்கக் கூடிய வாய்ப்புக்களை தேட வேண்டும் என்பதுதான் என் எண்ணம். அதை விட்டு, திட்ட அளவு குறைந்து போனதற்காக, குறைவையே சொல்லிக்கொண்டு, மேலும் நான்கு ஆண்டுகள் என் மூச்சை வீணாக்க விரும்பவில்லை. இருக்கும் அளவில் திட்டங்களைச் சரிவர நிறைவேற்ற வாய்ப்புகளைத் தேடவேண்டும் என்கிற ஆசைதான் எனக்கு இருக்கிறது. ஆனால், இதை காங்கிரஸ் கட்சி ஒரு தேர்தல் சாசனமாக பயன்படுத்தினால், அது சரியாகாது, நன்மையில்லை என்று சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் என்பது, அவ்வப்போது ஏற்படுகின்ற அமைச்சர் அவையைப் பொறுத்து கொள்கைகள் நிர்மானிக்கப்பட்டாலும் அரசாங்கம் என்பது என்றைக்கும் நிரந்தரமாக உள்ளது. அது எப்பொழுதும் நிரந்தரமாகத்தான் இருந்து கொண்டிருக்கும். அந்த அரசாங்கத்தை யார் நடத்தினாலும் அதற்கு எல்லாரும் துணை கொண்டு போடப்படும் திட்டங்களை எடுத்து நடத்த வேண்டும். திட்டங்களை உருவாக்க வேண்டும். ஆயிரம் ரூபாய் அளவுக்கு திட்டம் போட வேண்டும் என்று சொன்னாலும் ஏதோ ஒரு அளவுக்கு அந்த திட்டம் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் கோடி ரூபாய் அளவில் நாம் திட்டம் போட்டு அதை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும்கூட அந்த ஆசையை நிறைவேற்ற முடியுமா முடியாதா என்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே திட்டம்போட வேண்டியது அவசியம். அது யாரால் போட்ட திட்டமாக இருந்தாலும் அதை நிறைவேற்றியாக வேண்டும். அதை நிறைவேற்றுவதில் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. அப்படி அபிப்பிராய பேதம் இருந்தால் அவர்களால் அந்த திட்டங்களை நிறைவேற்றவே முடியாது. அப்படி அபிப்பிராய பேதம் இருந்தால் அந்த திட்டத்தை உருவாக்கக்

10th November 1961] [Sri P. S. Chinnadurai]

கூடிய குழுவில் இடம் பெற்றிருக்க வேண்டிய அவசியமே இல்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே இப்பொழுது போடப்பட்டிருக்கும் திட்டம் காங்கிரஸ் கட்சியின் பொது திட்டம் அல்ல. இந்த திட்டம் எல்லா கட்சிகளாலும் தான் போடப்பட்ட திட்டம், தனி திட்டம் அல்ல.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் சொன்னதில் இரண்டு வித கருத்துக்கள் இருக்கின்றன. ஒரு பகுதி திட்டம் வேண்டும் என்று சொல்லுகிறார்கள், இன்னொரு பகுதி திட்டம் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். இந்த திட்டம் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் தான் போடப்பட்டிருக்கிறது. அந்த அளவில் தான் நேற்றைய தினம் நான் சொன்னேன். அதற்கு ஆதரவு கொடுக்காதவர்கள் அதற்கு தப்பு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

SRI P. S. CHINNADURAI : கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்கு நன்றி செலுத்துகிறேன். இது ஒரு கட்சியின் திட்டம் அல்ல. இது தேர்தல் பிரசாரம் என்று சொல்ல முடியாது. இது தேர்தல் சாசனம் என்றும் சொல்ல முடியாது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்த திட்டத்தை எல்லா கட்சிகளும் ஒன்று பட்டு நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. இதில் பல குறைபாடுகள் இருக்கலாம். அப்படி இருந்தால் அதை மக்களிடம் எடுத்துக் காட்டி அதற்கு பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும். குறைபாடுகள் இருந்தால் அதை அமைச்சரவைக்குச் சொல்லி அதை மக்களிடம் சொல்ல வேண்டும். திட்டத்தை எடுத்து நிறைவேற்றக்கூடிய காலத்தில் அந்தக் குறைகளை எடுத்துச் சொல்லி அவற்றைப் போக்கி அதை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி நிறைவேற்றும் வகையில் மக்களுக்கு நன்மையைச் செய்ய முற்படவேண்டும். இந்த திட்டத்தை நிறைவேற்றும்போது எல்லோரும் ஒரு மனப்பட்டு ஒரு மனதுடன் சேர்ந்து நிறைவேற்றவேண்டும் என்ற என்னுடைய எண்ணத்தை, என்னுடைய ஆவலை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி அந்தக் கட்சி இந்த திட்டத்தை எடுத்து நிறைவேற்ற முன் வர வேண்டும். எந்த விதமான மாறுதல் இல்லாமலும் நிறைவேற்ற முற்பட வேண்டும், என்பதில் யாருக்கும் எந்த விதமான பயமும் இல்லை. இந்த திட்டம் வேண்டாம் என்று சொல்லுகிற கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் கூட இந்த திட்டத்தை எடுத்து நிறைவேற்றத்தான் வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். அதிலிருந்து அவர்கள் தப்பி விட முடியாது, என்பதை நான் உறுதியாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே திட்டங்களை நிறைவேற்ற முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும், திட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும், அது இருக்கிற அளவில் அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்.

சுமார் 108 கோடி ரூபாய் ஏற்கெனவே நாம் திட்டமிட்ட அளவில் குறைந்து விட்டது. அதில் பெரும் பகுதி விவசாயத்திற்கும்

[Sri P. S. Chinnadurai] [10th November 1961

மின்சாரத்திற்கும் செலவிடப்பட வேண்டியது போய் விட்டது. இந்த இரண்டு அம்சங்களில் தான் குறைந்து போய் விட்டது என்பதை நாம் நினைவு படுத்திக்கொள்ளவேண்டும். ஆகவே வருகின்ற ஆண்டில் கூடுமான வரையில் மின்சார வளர்ச்சிக்கும் விவசாய அபிவிருத்திக்கும் அதிகப்படியாக செலவு செய்வதற்கு நாம் ஏதாவது முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்த வரைக்கும் நாம் ரொம்பவும் முன்னேறியிருக்கிறோம் என்று கனம் அமைச்சர் அவர்கள் அடிக்கடி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் நம்முடைய நாட்டில் மின்சார வளர்ச்சி வேண்டிய அளவு முன்னேற்றமடையாமல் இருக்கிறது என்பதைக் காட்ட எவ்வளவோ உதாரணங்கள் கொடுக்கலாம். குறிப்பாக ஒரு உதாரணத்தைச் சொல்லலாம். உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அங்கு இன்றைக்கு அடைந்திருக்கும் மின்சார அபிவிருத்தியை கணக்கிட்டுப் பார்த்தால் 1965-ம் ஆண்டில் அங்கு மின்சார அபிவிருத்திக்கும் இங்கு ஏற்படும் மின்சார அபிவிருத்திக்கும் கணக்கிட்டுப் பார்த்தால் அங்கு 100 என்றால் அதில் மூன்று சத விகிதம்தான் இங்கு உற்பத்தி பண்ணுவதாகத் தெரிய வரும். அந்த அளவில் நாம் குறைந்திருக்கிறோம்.

அதேமாதிரி உருக்கு விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் 1965-ம் ஆண்டில் அங்கு ஏற்படப்போகிற உற்பத்திக்கும் இங்கு ஏற்படப்போகிற உற்பத்திக்கும் கணக்கிட்டுப் பார்த்தால் நாம் அவர்களில் நான்கு சத விகிதம் தான் உற்பத்தி செய்யக் கூடியதாக ஏற்படும். அமெரிக்க உற்பத்தியில் நம்முடைய உற்பத்தி நான்கு சத விகிதம் தான் இருக்கும். ஆனால் மின்சாரத் துறையில் நாம் எவ்வளவோ அபிவிருத்தி அடைந்து விட்டோம் என்று பெருமைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். அமெரிக்கருடைய லட்சிய அளவிற்கு நாம் எப்பொழுது போவோம் என்பதை நாம் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். அந்த முறையில் நாம் செயல்பட எவ்வளவு காலமாகும் என்பதையும் கணக்கெடுத்துப் பார்க்க வேண்டும். ஆகவே நாம் எல்லாவற்றிலும் அபிவிருத்தி அடைந்து விட்டோம் என்று சொல்லிக்கொள்ள முடியாது.

அதே மாதிரி நீர்ப்பாசன திட்டங்களை எடுத்துக்கொண்டாலும் நாம் அடைந்திருக்கிற முன்னேற்றம் மிகவும் குறைவுதான். என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் பல பகுதிகளில் பாசனத்திற்கு வழி வகை காணப்படவில்லை. பாசனத்திற்கு இன்னும் எவ்வளவோ முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. இன்னும் எவ்வளவோ பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் நிறைவேற வேண்டியதாக இருக்கிறது. காவிரி கங்கை இணைப்பு திட்டத்தை எடுத்து நிறைவேற்றினால் அதனால் தமிழ் நாட்டிற்கு எவ்வளவோ நன்மை ஏற்படலாம். அந்த பெரிய திட்டம் பாக்கியாக இருக்கிறது. அதனால் பாசன வசதி அடைவது தமிழ் ராஜ்யம் மட்டும் அல்ல; மற்ற ராஜ்யங்களுக்கும் வசதி கிடைக்கும். மற்ற பகுதிகளில் வரட்சியாக

10th November 1961] [Sri P. S. Chinnadurai]

இருக்கக்கூடிய இடங்களுக்கெல்லாம் பாசன வசதி கிடைக்க முடியும். இந்த திட்டத்தை எடுத்து நிறைவேற்றுவது ரொம்பவும் அவசியம். இதைப்பற்றி பல நிபுணர்கள் சொல்லி வருகிறார்கள். இப்படிப்பட்ட எண்ணம் நிபுணர்களிடத்தில் வந்தால் போதாது. அரசியல்வாதிகளிடத்தில் வரவேண்டும். அவர்களிடத்தில் வந்தால்தான் அது உருவாவதற்கு முடியும். ஆகவே இப்படிப்பட்ட பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எல்லாம் எடுத்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. இதை எடுத்து நிறைவேற்றிக் கொடுத்தால்தான் பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் எல்லாம் எடுத்து நிறைவேற்றியாகி விட்டன என்ற ஆறுதல் ஏற்படும்.

சிறிய நீர்ப்பாசனங்களைப் பொறுத்த மட்டில் இன்னும் எவ்வளவோ நிறைவேற வேண்டியதாக இருக்கிறது. பழைய குளம் குட்டைகளையே நம்மால் தூர் எடுக்க முடியவில்லை. நிபுணர்கள் இல்லாமல் இஞ்சினியர்கள் இல்லாமல் கல்லூரிகள் இல்லாமல் ஐந்தாண்டு திட்டங்கள் இல்லாமல் வெகு காலத்திற்கு முன் பழைய தலைமுறையில் ஏற்பட்ட குளம் குட்டைகளை அவர்கள் வண்டல் இல்லாமல் வைத்துக்கொண்டு வேண்டிய தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொண்டிருந்தார்கள். எப்பொழுதும் தண்ணீர் அவற்றில் நிறைய இருக்கும். அந்த நிலைமை இப்பொழுது போய் விட்டது. இனிமேல்தான் நாம் நாலாயிரம் குளம் குட்டைகளை தூர் எடுக்கப்போகிறோம். பல ஆயிரக்கணக்கான குளம் குட்டைகள் தூர் எடுக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்து நடத்தினால் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் நிறைவேறியதாகக் கருதலாம். ஆகவே அதற்கும் வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member has got two more minutes.

SRI P. S. CHINNADURAI: ஆகவே சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும். அத்துடன் பரம்பிக்குளம் திட்டம் இருக்கிறது. அங்குள்ள எஞ்சினியர்கள் எல்லோரும் சொல்கிறார்கள்—அவர்களைப்பற்றி நான் குறை கூறவில்லை—கீழே இருக்கக்கூடிய தண்ணீரை மேடான இடத்திற்குக் கொண்டுபோக முடியாது என்று சொல்லுகிறார்கள். சாதாரணமாக தாழ்வான இடங்களில் இருக்கக்கூடிய தண்ணீரை மேடான இடங்களுக்குக் கொண்டு போகக்கூடிய திட்டங்களை அவர்கள் எடுத்து நடத்துவதாக இல்லை. சாதாரணமாக ஐம்பது அடி உயரம் கொண்டு போக வேண்டியதாக இருந்தாலும் அவர்கள் அதற்கு திட்டம் வகுக்க முன் வருவதாக இல்லை. அப்படி திட்டம் வகுத்தால் தான் வரண்ட பகுதிகளுக்கும் தண்ணீர் கொண்டு போவதற்கு வழி ஏற்படும். கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து வந்திருக்கிறார். அங்கே காலிபோர்னியா என்னும் இடத்தில் சுமார் 7,000 மைல்களுக்கு தண்ணீரைக் கொண்டு போய் அதற்கு மேல் 3,000 அடி உயரத்திற்குக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். அப்படிக்கொண்டு

[Sri P. S. Chinnadurai] [10th November 1961

போய் அங்கு உயரத்தில் தண்ணீர் சப்ளை செய்கிறார்கள். ஆனால் இங்கு ஐம்பது அல்லது நூறு அடி உயரத்திற்குக் கூட தண்ணீர் கொண்டு போவதாக இல்லை. சில லட்சம் ரூபாய் செலவு செய்தாலும் கூட ஐம்பது அடி உயரத்திற்கு தண்ணீரைக்கொண்டு போவதற்கு திட்டம் வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் கொஞ்சம் கவனம் செலுத்தினால் பல்லடம்
10.00 a.m போன்ற உயர்ந்த இடங்களுக்கு தண்ணீரைக் கொண்டு போய் பாசன வசதி செய்து கொடுக்கலாம். அதற்கு வேண்டிய வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நொய்யல் நதியின் தண்ணீரைச் சரியானபடி பயன்படுத்துவதில்லை. வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது தண்ணீர் வீணாகிக் கொண்டிருக்கிறது. வெள்ளத் தண்ணீரைச் சரியான முறையில் பயன்படுத்த புதிய திட்டம் வகுப்பதன் மூலம் பல்லடம் தாலுகாவில் அதிகமான விஸ்தீரணத்திற்குப் பாசன வசதி கிடைக்கும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

குந்தா கழிவுத் தண்ணீர்த் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி நிறுத்தி விடாமல், உண்மையிலேயே பயன்படத்தக்க முறையில் நிறைவேற்றவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பரம்பிக்குளத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இன்னும் 50,000 ஏக்கராவுக்குத் தண்ணீர் பாய வழிவகை காணமுடியும், கேரள சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்துவதன் மூலம் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று நான் அறிகிறேன். அது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை துவங்கி விட்டார்களா, துவங்கியது எந்த நிலைமையில் இருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை. பரம்பிக்குளத் திட்டம் நிறைவேற்றப் படும் காலத்திலேயே பேச்சு வார்த்தை முடியப்பெற்று, அதிகப் படித் தண்ணீர் இன்னும் 50,000 ஏக்கராவுக்குக் கிடைக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து ஒரு பிரச்னையைப் பற்றிக் கூறி என் உரையை முடித்துக்கொள்கின்றேன். தமிழ்நாட்டிலே விவசாயிகளுக்கு நல்ல துணைத் தொழிலாக இருக்கும் முறையில் பால் பண்ணை அமைப்பதும் கோழிப்பண்ணை அமைப்பதும் இருக்கின்றன. அவை குறித்து இந்தத் திட்டத்தில் ஓரளவுக்கு அதிகப்படியாகத் தொகை ஒதுக்கியிருந்தாலும், ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது. எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி போதாது. இதை இன்னும் அதிகப்படுத்துவதற்கு வழிவகை உண்டா என்று ஆராயவேண்டும். குறிப்பாக, வரட்சியாக இருக்கும் கோவை, இராமநாதபுரம் ஜில்லாக்களில் கோழிப் பண்ணை, பால் பண்ணைகளை அதிகப்படுத்துவதற்கு மார்க்கம் உண்டா என்பதைக் கண்டறிந்து அவைகளை முடித்துக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கோழிப் பண்ணை, பால் பண்ணை வைப்பதென்றால், நடுத்தரக் குடும்பத்திற்கு அதிலே

10th November 1961] [Sri P. S. Chinnadurai]

ஒரு கூச்சம் இருக்கிறது. இவைகளை ஒரு இழிவான தொழிலாகக் கருதிவிடுகிறார்கள். அந்த நிலையை மாற்றும் வகையில் கோழிப் பண்ணை, பால் பண்ணை வைக்க ஏற்பாடுகள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கடைசியாக ஒரு வார்த்தை. இந்தத் திட்டம் எல்லோருடைய திட்டம்தான். இதிலே குறைபாடுகள் இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றவேண்டிய திட்டம்தான் என்ற எண்ணத்தோடு நாம் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்வோம் என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

*SRI R. SRINIVASA IYER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது திட்டம் சென்னை மாநிலம் சம்பந்தப்பட்ட வரையில் கொண்டுவரப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டு, கனம் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கொண்டுவந்திருக்கும் திருத்தத்தை ஆமோதித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

மனிதனுடைய தேவைக்குக் கணக்கு இல்லை. எவ்வளவு கொடுத்தாலும் எவ்வளவு இருந்தாலும் இன்னும் அதிகம் தேவை என்பதுதான் பண்பு. அது நியாயமும்கூட. நம்முடைய பொருளாதார வசதி எந்த அளவு இருக்கிறது, அதில் எந்த அளவு நாம் ஐந்தாண்டுகளுக்குள் செலவு செய்யக்கூடும், எந்த எந்த வகையிலே செலவு செய்தால் நல்ல முறையில் நாட்டை முன்னேற்றத்திற்குக் கொண்டுவரலாம் என்பதை நிபுணர்கள்கூடி பல வருஷங்களாக ஆலோசனை செய்துத் திட்டமிட்டிருக்கிறார்கள். 290 கோடி ரூபாய் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருப்பது போதாது என்று பல புள்ளி விவரங்கள் சொல்லி வாதாடப்படுகிறது. ஆயிரம் கோடி இருந்தால் பரவாயில்லை, இரண்டாயிரம் கோடி இருந்தால் கொஞ்சம் நன்மை தான், அதற்குமேல் ஆயிரம் கோடி இருந்தாலுங்கூட நன்றாக இருக்கும் என்று சொல்லலாம். எந்த வகையிலே இந்தத் தொகையைத் திரட்டுவது? நமக்கு என்னவிதமான டெக்னிகல் பர்ஸானல் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இருக்கிறார்கள் என்று பார்த்துச் சொல்ல வேண்டும். சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்தப் பத்து வருஷங்களாக நாம் எந்த அளவு முன்னேறியிருக்கிறோம் என்பதைக் கணக்குப் போட்டு இந்தப் புஸ்தகத்திலே கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்து நாம் மேலும் மேலும் திட்டமிட்டுக்கொண்டு போவதுதான் சரியாக இருக்கும். நேற்றைய தினம் செக்ரடேரியட்டிலிருந்து அழகான ஒரு கம்பாரிடிவ் ஸ்டேட்மென்ட் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கும்போது, மற்ற மாநிலங்களோடு நம் மாநிலத்தின் ஜனத்தொகையையும் பரப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பாகுபாடு இருக்கிறதா என்றால் இல்லை. நம்முடைய மாநிலத்திற்கு ஜாஸ்தியான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. 11,000 கோடி ரூபாயைப் பகிர்ந்து கொடுக்கப்பட்டிருப்பதிலே ஆந்திரப் பிரதேசத்திற்கு 305 கோடி ரூபாயும், எஞ்சிய சென்னை ராஜ்ஜியத்திற்கு 290 கோடி ரூபாயும், மத்தியப் பிரதேசத்திற்கு 300 கோடி ரூபாயும், குஜராத்

[Sri R. Srinivasa Iyer] [10th November 1961

துக்கு 235 கோடி ரூபாயும், மேற்கு வங்காளத்திற்கு 250 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது. மேற்கு வங்காள மாநிலம் நம் மாநிலத்தைக் காட்டிலும் ஜனத்தொகை அதிகமாக உள்ள ஒரு மாநிலம். புள்ளி விவரத்தைப் பார்க்கும் போது, நமது அமைச்சர்கள் தேசீய அபிவிருத்திக் கவுன்சிலில் நம் மாநிலத்திற்கு எவ்வளவு தேவைப்படுமோ அதைப் பெற்றிருக்கிறார்கள். ஐந்து வருஷங்களில் எந்த அளவுக்கு அதை நல்ல வகையிலே பிரயோஜனப்படுத்த முடியுமோ அந்த வகையிலே தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் நேற்று இதைப்பற்றிப் பேசும்போது, இதை இன்னும் ஜாஸ்தியாகச் செய்து கொள்ளலாம், அதற்கு வழிவகை இருக்கிறது, மாற்றிக் கொள்ளலாம் என்றெல்லாம் சொன்னார்கள். அதே நேரத்தில், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியதைவிட நாம் ஜாஸ்தியாகச் செலவு செய்திருக்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் கொடுத்ததைப் பார்க்கிலும் ஜாஸ்தியாகச் செலவு செய்திருக்கிறோம். ஆகையால், இந்தத் திட்டத்தை ஒற்றுமையாக இருந்து நிறைவேற்றுவதற்கு நாம் வழிவகை கண்டு, எந்த எந்த வகையிலே மாற்றிக்கொள்ளலாமோ அந்த அந்த வகையிலே சுமாராகப் பொருளாதாரத்திற்குத் தக்கபடி அதிகப்படுத்திக் கொள்ளலாம். இதை நிறைவேற்றி நாம் நன்மை அடைய வேண்டியது நம்முடைய கடமையாகும்.

முக்கியமாக இரண்டொரு விஷயங்களைப் பற்றி மட்டும் விவரமாகச் சொல்ல முன்வருகிறேன். முதலாவது 'ரோட் ட்ரான்ஸ்போர்ட்'. நம் மாநிலத்தில் பெரும் சாலைகள் நல்ல நிலைமையில் இருப்பவை மிகவும் குறைவு. விஸ்தீரணத்தைப் பார்த்தால், மைல் கணக்கில் பார்த்தால் போதுமானதாக இல்லை. தேசீய அபிவிருத்திக் கவுன்சிலிலும், திட்டக் கமிஷனிலும்கூட, விவசாயமோ தொழிலோ வேறு எந்தத் திட்டம் விருத்தியாகவேண்டுமானாலும் நல்ல ரோடுகள் அமைக்கப்படவேண்டும் என்பதை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், நாக்பூர் ப்ளான் என்று 1943-ம் வருஷத்திலே போட்ட திட்டத்தை இப்பொழுது புதிதாகக் கொண்டுவந்து 1981-ம் வருஷம் வரையில் 20 வருஷங்களுக்கு ஒரு திட்டம் போட்டு இந்த இருபது வருஷ காலத்திற்கு நாட்டு மக்கள், கிராம மக்கள் காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இந்த ஜெனரேஷனில் அந்தத் திட்டம் முடியாது. ஆகவே, அம்மாதிரியான திட்டத்தை வகுத்து இருபது வருஷ காலத்திலே ரோட்டைப் பராமரிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னை 3-வது திட்டம் தமிழ் புத்தகம் 130-வது பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதாவது :

"தேசீய பெருஞ்சாலைகளுக்கான தொகை மத்திய ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. அனைத்து இந்திய அடிப்படையில் இச்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 47.50 கோடி. நமது மாநிலத்தைப் பொருத்த வரையில் இச்சாலைகள் சம்பந்தமான தெளிவான வேலைத் திட்டம் எதும்,

10th November 1961] [Sri R. Srinivasa Iyer]

இன்னமும் உருவாகவில்லை. நமது மாநில அரசாங்கம் தேசீய பெருஞ்சாலைகள் வேலைத் திட்டத்தின்கீழ் அடியிற்காணும் சாலைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளது :—

(அ) சேலம்–கடலூர்.

(ஆ) தூத்துக்குடி–கோவில்பட்டி.

(இ) பங்களூர்–சென்னை விரைவுச்சாலை.

(ஈ) கிழக்கு கடற்கரைச் சாலை."

ஆனால், எனக்குத் தெரிந்தவரையில், இந்த நான்கு திட்டங்களில் ஒன்று கூட இந்த மாநிலத்திற்காக ஒப்புக்கொள்ளப்படவில்லை மத்திய ப்ளானிங் கமிஷனால் என்று திட்டவட்டமாகத் தெரிகிறது. கிழக்குக் கடற்கரைச் சாலை ஆறு ஜில்லாக்களுக்கு உபயோகப் படக்கூடியது. ஜனங்கள் குடியிருக்கும் இடத்திற்கு ரோடு போடுவதா, அல்லது ரோடு போட்ட பிறகுதான் ஜனங்கள் குடியிருக்க வசதி ஏற்படுமா என்பது பிரச்னையாக இருந்துகொண்டிருக்கிறது. ரோடு இல்லாத இடங்களுக்கு எப்படியும் கண்டிப்பாக ரோடு போட்டாகவேண்டும். தஞ்சை மகாராஜா 120 அடி அகலத்திற்கு கிழக்கு கடற்கரைச் சாலை போட்டிருக்கிறார். அது இன்றைக்கு எட்டடி அகலம் தான் இருக்கிறது. சில இடங்களில் ரோடு இருக்கிற இடம் கூடத் தெரியவில்லை. இது மிகவும் முக்கியமான சாலை ஆகும். சென்னை-கன்யாகுமரி சாலைக்கு ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கப்போவதாக நமது மாநிலத்திலிருந்து வற்புறுத்தியும்கூட ஒரு ரூபாய் கூடக் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. இது தவிர, தேசீய பெருவழிச் சாலை (நாஷனல் ஹைவேஸ்)-க்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்கு புதிதாக ஒரு மைலுக்குக்கூட தொகை ஒதுக்கப்படவில்லை. இதற்கு வழிவகை தேடவேண்டும். இந்த நான்கு தேசீய பெருஞ்சாலைகளில் கிழக்குக் கடற்கரைச் சாலையைப்பற்றி நான் மிகவும் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சென்னையிலிருந்து முத்துப்பேட்டை வரையில் பஸ் போக்குவரத்து ஏற்படும் லெவலில் ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லா பூராவிலும் 153 மைல் நீளத்தில் இம்மாதிரி ஒரு மரீனா உலகத்திலேயே இல்லை என்று சொல்லக்கூடும். 540 மைல் தூரம் சென்னை மாநில கீழ்க் கடற்கரை இருக்கிறது. இதிலே 153 மைல் தஞ்சையில் இருக்கிறது. சமுத்திரத்தைப் பார்த்துக்கொண்டே 100 மைல் தூரம் பிரயாணம் செய்யலாம். 120 அடி அகல ரோடு இருந்து வந்தது. அந்த ரோட்டை நாஷனல் ஹைவேஸாக மாற்ற வேண்டியது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. இதில் குறுக்கே பாலம் இல்லாத இடங்களில் பாலம் போட வேண்டியதும் அவசியம். ராஜாமடம்அருகே அக்னியாறு, தாபேந்திரபட்டணம் அருகே பங்யாங்களானி ஆறு, அம்மணி சத்திரம் அருகே அம்புலியாறு, மிமிசல் ஆறு அருகே பாம்பாறு, வெள்ளாறு ஆகிய ஐந்து ஆறுகளுக்கும் பெரிய பாலங்கள் கட்டவேண்டும். (கனம் ஸ்ரீ. வி. ராமைய்யா : பாம்பாறு ?) மீமிசல் ஆற்றைத்தான் பாம்பாறு என்று சொல்வார்கள். இந்த ஐந்து ஆறுகளுக்கும் பெரிய பாலங்கள்

கட்டத் திட்டங்களைப் போட்டுவிட்டால் சென்னையிலிருந்து இராமேசுவரத்திற்கு நேராக பஸ் விடலாம். ஜனங்களுக்கு நலல ரோடு வசதியைச் செய்துகொடுத்தால் விவசாயப் பொருள்களை மார்க்கெட்டுக்குக் கொண்டுபோக வசதி இருக்கும். கிழக்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து மீன்களைக் மார்க்கெட் செய்வதறகு ரோடு வசதி இருந்தால் ஜனங்களுக்கு ரொம்பவும் திருப்தியாக இருக்கும். இவ்வாறு இந்தச் சௌகர்யம் வேண்டும் என்று கிராமத்திலுள்ள மக்கள் கேட்கிறார்கள். ஆனால் நாம் அதற்காக ஒன்றும் ஒதுக்கவில்லை. மெட்ராஸ் ஸிடியில் உள்ள ரோட்டைப் போட ஒண்ணரை கோடி ஒதுக்குகிறோம். அதற்கு மெடல் போட்டு, தார் போட்டு, சிமிண்டு போட்டு உடனே அதை இடிக்கவும் இடிக்கிறோம். இப்படி சென்னை போய்க்கொண்டிருந்தால் இன்னம் மிகமிக மோசமாகப் போய்விடும். நான் நேற்று கோடம்பாக்கம் போய் இருந்தேன். மிகமிக மோசமாக இருக்கிறது. சாக்கடை தண்ணீர் ரோட்டில்தான் போகிறது. துர் நாற்றம் தாங்கவில்லை. சென்னைக்கு என்று ஒரு மாஸ்டர் ப்ளான் போட்டு, ஸ்பெஷல் ஆபீசர் முதலியவர்களை எல்லாம் நியமித்து சர்க்கார் சிடி முனிசிபல் ஆக்ட்டு 41-44 செக்ஷன்படி நடவடிக்கை எடுத்து சர்க்காரே தன் சொந்தப் பொறுப்பில் அவற்றை நிறைவேற்ற வேண்டும். அப்போதுதான் இந்த ஸிடியில் ரோடுகள், சுகாதார வசதிகள் முதலியவை எல்லாம் சிறப்பான முறையில் அமையும். நான் கிராமத்தில் இருந்து வந்தவனானாலும் ஸிடியில் 25 வருஷம் வாழ்ந்தவன் என்ற காரணத்தினால் இதைப்பற்றித் தெரியும். இப்போது இந்த நகரம் விரிந்துவிட்ட காரணத்தினால் இது அழுக்கு நிரம்பி அபாயகரமானதாக ஆகிவிட்டது. கொசு உபத்திரவம் ஜாஸ்தியாகிவிட்டது. தெருவெல்லாம் சாக்கடைத் தண்ணீர் ஓடுகிறது. அங்கங்கே வரிவசூல் பண்ணத்தான் முந்துகிறார்கள். பலவகையிலும் பணம் வாங்கத்தான் துரிதமாக இருக்கிறார்கள். ஆனால் ரோடுகள், சாக்கடைகள் முதலியவை அமைத்துக் கொடுப்பதில் அக்கறை காட்டுவது இல்லை. அதனாலேயே இந்த நகரம் மிகவும் அசுத்தமானதாக, விகாரமானதாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நகரத்திற்காக என்றே உடனடியாக ஒரு மாஸ்டர் ப்ளான் தனியாகப் போட்டாகவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். காவேரித் தண்ணீரை மெட்ராசுக்குக் கொண்டு வருவது பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. எந்த இடத்தில் இருந்து கொண்டுவருவதாக இருந்தாலும் நிலங்களுக்குள்ள நீர்ப்பாசன உரிமைகளுக்கு இடைஞ்சல் இல்லாதபடி கொண்டுவருவதானால் ஆட்சேபனை இல்லை. கிருஷ்ணா பெண்ணார் ப்ராஜெக்ட் என்ன ஆயிற்று? அதைப்பற்றிப் பேசினார்கள். ஆந்திரா மைசூருக்கும் பங்கிடுவதைப்பற்றி விசாரணையும் தொடங்கியிருக்கிறது. அந்த ப்ராஜெக்டை நிறைவேற்றுகிறபோது சென்னை நகர குடிதண்ணீரைப் பற்றிமட்டும் சிந்திக்கக் கூடாது. செங்கல்பட்டு ஜில்லாவில் உள்ள ஆறு லட்சம் ஏக்கரா நிலப்பரப்புப் பாசனம் பற்றியும்

யோசித்து, விவசாயத்திற்குச் சௌகர்யமான முறையில் அதைக் கொண்டுவரவேண்டும். இத்திட்டத்திற்கு நமது பங்கு 34 கோடியாகும் என்கிறார்கள். இதில் ஏதாவது ஒரு பங்காவது இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவேண்டும்.

தனியாக அக்ரிகல்சரல் என்ஜினியரிங் கோர்ஸ் நம்முடைய ராஜ்யத்தில் எந்த யுனிவர்ஸிடியிலும் கிடையாது. வடநாட்டில் 2 யுனிவர்ஸிடியில் இருக்கிறது. நாம் புதிதாக அக்ரிகல்சரல் காலேஜ் ஏற்படுத்தப் போகிறோம். கோயம்புத்தூரில் ஒரு காலேஜ் இருக்கிறது. நான் ஏற்கனவே மைன்ஸ் அண்டு மெட்டாலர்ஜி என்ஜினியரிங் கோர்ஸ் ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதைப்போலவே இப்போது புதிதாக ஏற்படுத்த இருக்கிற அக்ரிகல்சரல் காலேஜிலாவது இந்த அக்ரிகல்சரல் எஞ்சினியரிங் கோர்சை சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மைனர் இர்ரிகேஷன் ப்ரோக்ராம்கீழ் நிறைய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. செலவும் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் செய்கிற வேலைகளைத் துரிதமாகத்தான் செய்வதில்லை. கனம் அமைச்சர் அவர்கள் இந்த ராஜ்யத்தில் 34 ஆயிரம் ஏரிகள் இருப்பதாகச் சொன்னார். இவற்றில் 24 ஆயிரத்தை பஞ்சாயத்து யூனியன்களிடம் கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இவற்றைப் பராமரிக்கப் போதுமான நிதி வசதி அவர்களுக்குக் கிடையாது. ஏற்கனவே கொடுத்துள்ள பணம் ரோடுகள் பராமரிப்புக்கே போதுமானதாக இல்லை. ஆகவே இவ்வினத்தில் அதிகத் தொகை ஒதுக்கித்தரவேண்டும், அவர்களுக்கு.

இன்னொரு விஷயம். இந்த மைனர் இர்ரிகேஷன் திட்டத்தில் கட்டளை வாய்க்கால், புள்ளம்பாடி வாய்க்கால் இவற்றையெல்லாம் நீட்டி, மழை காலத்தில் காவேரியில் அதிகவெள்ளம் வந்து சேதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் நடவடிக்கையாகவாவது—காவேரியில் வெள்ளம் அதிகமாக வரும்போது—கிராண்டு அணைக்கட்டு கால்வாயை பழைய பெண்ணாரு ஹெட்டுக்கு கொண்டுபோய் அதிக கண்கள் ஏற்படுத்தி ஜாஸ்தி தண்ணீர் எடுத்து புதுக்கோட்டை, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை முதலிய பகுதிகளுக்கு அதிகத் தண்ணீர் கொடுக்க வழிசெய்ய வேண்டும். இது ஒரு பெரிய முக்கியமான திட்டம். வெள்ளத் தடுப்புத் திட்டத்தில் அவசியம் இதைச் சேர்த்து காய்ந்துபோன அந்தப் பகுதிகள் வளம்பெற வழி செய்யலாம். நான் இதை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து நம்முடைய மெட்ராஸ் ஸ்டேட்டிலே இன்னும் சில ஆண்டுகாலங்களிலேயே இப்போது இருக்கும் ரோடு வசதி, ரெயில் வசதி எல்லாம் நம்முடைய உற்பத்திப்பொருள்களை ஏற்றிக் கொண்டு போவதற்கு இல்லாமற்போய் விடும். அடுத்த ஐந்தாண்டு காலத்திற்குள்ளாகவே மவுண்டு ரோடில் கார்கள் கியூ வரிசையாக நிற்பதற்க்கூட இடம் இல்லாமல் போய்விடும் என்று ஒரு எக்கனாமிகல் ரிவியூ பத்திரிகையில்கூட வந்திருக்கிறது. ஒரு நாளைக்கு 2 கார் வீதம் பதிவு செய்யப்பட்டு வருகிறது என்றால் இதைப் பற்றிக் கொஞ்சம் யோசிக்கத்தான் வேண்டும்.

[Sri R. Srinivasa Iyer] [10th November 1961

(Sri N. S. Ramalingam in the chair.)

ஜனங்களுடைய பிரயாணத்திற்கே இடமில்லாமல் போய் விடும். ஆகவே ஜல போக்குவரத்து சௌகரியைப் (including waterways) பெருக்க வேண்டியதும் அவசியம், குறிப்பாக பக்கிங்ஹாம் கனாலையும், வேதாரண்யம் கனாலையும், ஒன்றுசேர்த்து பிரயாணத்திற்கு சரக்கு போக்குவரத்துக்கும் பவர் போட்டுகள் போகும்படி வசதி செய்ய வேண்டும். வேதாரண்யம் கனாலைப்பற்றி ஏற்கனவே ஒரு ரிப்போர்ட் இருக்கிறது. ஆனால் ஒன்று. தஞ்சாவூர் ஜில்லாவின் அபிவிருத்தி எதுவாக இருந்தாலும் புறக்கணிக்கப்படுகிறது. வரி வாங்குவது, மற்ற நிதி வாங்குவது என்றால் தான் அந்த ஜில்லா கவனிக்கப்படுகிறது. சோழநாட்டின் நெற்களஞ்சியம் என்றெல்லாம் சொல்லப்பட்ட பெருமை போய்விட்டது. இன்றைக்கு செங்கல்பட்டு, தென்னாற்காடு, வடாற்காடு இவைதான் முன்னணியில் இருக்கின்றன. கொஞ்சம் தஞ்சை ஜில்லாவிற்கும் வசதி செய்துதரவேண்டும் என்று கருதினால் இந்த வேதாரண்யம் கனாலை ஆழப்படுத்தி, பக்கிங்ஹாம் கனாலோடு சேர்த்துவிட்டால் போதும், மோட்டார் போட்டு போய்வருவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் ஒரு சிறிய யோசனை. நான் பெரிய என்ஜினியர் அல்ல. ஆனாலும் ஒரு ரிடையர்ட் என்ஜினியர் அவர்களோடு பேசிக்கொண்டிருந்த போது மிகவும் நல்லதொரு திட்டம் என்று அவரே ஒப்புக்கொண்ட ஒன்றை சர்க்காருக்கு தெரிவிக்க விரும்புகிறேன். கூவம் ஆற்றையே தூர்த்துவிட்டு அங்கெல்லாம் பார்க், ப்ளே க்ரவுண்டு, வீடுகள் என்று கட்டிவிடலாம்; நகரத்திற்குள் அதனால் நிறைய இடம் கிடைக்கும். அந்தக் கூவம் ஆற்றையே அடைத்து சைதாப்பேட்டைக்கு மேற்கே அடையாற்றிலே விட்டு விடலாம். இதை ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கால்நடை சம்பந்தமாகவும், கோழிப்பண்ணை சம்பந்தமாகவும் எனக்கு முன் நண்பர்கள் பேசினார்கள். நமக்கு வெடர்னரி காலேஜ் போதாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒவ்வொரு கால்நடைப் பண்ணை ஏற்படுத்துவதை நான் வரவேற்கிறேன். ஆனால் கால்நடைத் துறையில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகள், மருத்துவர்கள் நமக்குப் போதாது. வெடர்னரி காலேஜ் எந்த ஜில்லாவில் ஏற்படுத்தவேண்டும் என்பது அல்ல இப்போது பிரச்னை. எந்த ஜில்லாவில் ஏற்படுத்தினாலும் சரி, உடனடியாக போஸ்ட் கிராஜுவேட் கோர்சோடு கூட மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே நம் ராஜ்யத்தில் உடனடியாக ஏற்படுத்தவேண்டியது அவசியம். இவ்வளவுக்கும் பணம் போதுமா, போதாதா என்று பரிசீலிக்கவில்லை. இருப்பதை நிரவலாம். அல்லது இந்த ஒவ்வொரு திட்டத்திற்கும் டோக்கன் கிராண்டாவது ஒதுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

10th November 1961]

Sri N. S. RAMALINGAM (Temporary Chairman): I fix a time limit of fifteen minutes for each hon. Member.

* Srimathi A. SUARES : Mr. Chairman, Sir, it is a well known fact that the Madras State is one of the most advanced States in the country as far as education goes. Even without a Five-Year Plan considerable progress has been made in this sphere from year to year. The outlay in the three plans shows an increase from 493.86 lakhs in the First Plan to 1,141.41 in the Second Plan and 2,564.99 in the Third Plan. Nearly, threefourths of the total plan outlays have been on Primary Education. During the last 10 years, the number of elementary schools has increased from 15,800 to 27,000 and the number of elementary school children from 18.3 lakhs to 33 lakhs.

The emphasis placed on Primary Education is necessary for, the primary stage is the foundation of the whole structure of education. With the introduction of compulsory primary education, it will be possible to enrol all children in the age group 6 to 11 by the end of the Third Plan period in the elementary schools. This large enrolment is made possible by the mid-day meal scheme where food is given to poor children. In the Third Plan Period it is proposed to spend 211 lakhs on the midday meal programme. It is not enough if every child in the age group 6 to 11 is enrolled in the Elementary Schools. The quality of teaching, regular attendance, the sincerity of the teachers, the goal to make the children permanently literate are some of the essential factors that have to be borne in mind. Only qualified trained teachers should be employed in the Elementary Schools. If the teachers were trained long ago and have run into a rut, refresher courses should be provided for them. They should visit Training Schools, exhibitions of teaching aids and children's work in other schools. Suitable school buildings that will give the right atmosphere, modern equipment, open spaces for school gardens and play grounds should also be provided.

In addition to this, much depends on the choice of inspecting officers, who will control and inspect the elementary schools. Besides the annual inspection, there should be surprise visits. Village teachers often absent themselves on some pretext or other and it is not an uncommon occurrence that a surprise visit reveals an empty school building with no signs of school children or staff. Inspecting Officer should be kept in a place for a continuous period of at least three years so that they could guide and watch the progress made by the school. Frequent changes of Inspecting Officers will not make any progress.

In addition to this, the Secondary Schools have increased from 637 in 1950–51 to 1231 in 1960–61. But the enrolment in the age group 14–17 is now only 10.9 per cent of the total number in this age group. It is proposed to enrol 75,000 pupils more in the Secondary School stage. Stimulus to enrolment will be given by

[Srimathi A. Suares] [10th November 1961

the extension of free education to all poor children in the High School stage. If this concession is largely availed of, there will be great improvement within the next five years.

The system of education in the State was re-organised in the year 1958. Instead of three stages viz., primary, middle and high there are only two stages now viz., an elementary course of seven years duration and a higher secondary course of 4 years duration. There will be public examination at the end of the 10th and 11th years. This pattern is likely to be changed according to reports in the newspapers. The starting of the Higher Secondary class or the XI standard is to be postponed for the present. This will mean that in High Schools there will be only 10 standards and pupils admitted at the age of five plus will complete the High School course at the age of 15 plus. Out of about 80,000 pupils who appear for the S.S.L.C. and High School examinations perhaps less than 30 per cent who secure eligibility for college education go in for higher studies. The remaining 70 per cent have to start a career with the S.S.L.C. certificate. Passing out at the age of 15 plus will be a great disadvantage. No one will employ the candidates at such an immature age. Completing the high school course in ten years may also be a disadvantage, for the advanced syllabus for each class may not be assimilated by the pupils. If the Higher Secondary Class is not to be opened in High Schools, it may be desirable to go back to the 11 year course of secondary education which will give a higher standard not only to those who go out to work after the S.S.L.C. course but also to the large numbers that will be required to undergo teachers' traing to man the increased number of schools in the Third Plan Period. About 31,000 additional teachers would be required to man the new schools that would be opened.

Under 'Medical', the Third Plan provides for buildings for better and newer hospitals, more equipment and higher salaries for medical personnel. Medical facilities will reach the villages through Primary Health Centres. To make such postings attractive higher emoluments and residential accommodation have been offered. In spite of this, the department will find it difficult to find sufficient doctors who will serve in the villages for amenities in rural areas are still lacking. Efforts should be made to provide better houisng, electricity, sanitation, good roads, education facilities, etc. If these are provided perhaps more doctors will serve in Primary Health Centres.

One of the achievements of the first two plans is the remarkable increase in the number of additional beds. In the first plan the figure was 1,300, in the Second Plan the figure was 5,200 and the Third plan proposes to have 5,250 which gives a total of 11,750 for the three plans. This is over and above the existing bed strength. An increase in the bed strength implies an increase in the number of doctors, head nurses, nurses, midwives, ward boys, etc. Unless the additional staff is sanctioned and appointed progress will be

10th November 1961] [Srimathi A. Suares]

retarded. In most hospitals the sanctioned staff work for a much higher figure than the sanctioned bed strength. When expansion takes places this over work should be relieved.

Under the head 'Technical Education' in the Third plan, provision for a large number of projects has been made. The projects started under the Second plan will be maintained and expanded with further grants-in-aid. In the Central Polytechnic in Madras, there is a proposal to put up new buildings in an area of 100 acres. The Nilgiris will have a new Polytechnic. What is most significant is, three technical institutions for women are to be started in the Third Plan period. This is a great step forward and I am sure when women technicians are trained, they will acquit themselves creditably. 10-30 a.m.

With the introduction of diversified courses in High Schools, it will be possible to select pupils with a technical bent and if the boys are encouraged to join these technical courses, there will be a large number of technicians to work in this State when industrialisation is well-established. There will also be Junior Technical Schools for Boys who have studied up to the 8th Standard.

The cost of the State Third Plan is Rs. 291 crores. Besides this, there are plans that will be implemented directly by the Central Government in the form of new Steel Mills, new Railway Lines, Harbours, exploitation of mineral resources, etc. With the investment of such large sums of money on the various developmental activities in the country, there is bound to be more food, more opportunities for work, higher standard of living and gradual eradication of poverty.

I wish the Third Plan every success. Thank you.

* SRIMATHI SATHIYAVANIMUTHU : தலைவர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி விவாதித்துக் கொண்டிருக்கையில், அனைவருக்கும் இருக்கின்ற குறைகளை எடுத்துச்சொல்ல இதில் உரிமை உண்டு என்றும், அந்தக் குறைகளை எல்லாம் ஓரளவுக்கு பரிசிலனை செய்து ஆளுகிற கட்சி ஏற்றுக்கொள்ள முடியும் என்றும் இந்த மன்றத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். நாட்டின் நலனைக் கருதி, நாடு முன்னேற வேண்டுமானால், படிப்படியான திட்டங்களை உருவாக்கி அதனை செயல்படுத்தி நன்மைகளை காணுவதின் மூலமாகத்தான் நாடு முன்னேற முடியும் என்பதை நாங்கள் எப்போதுமே எதிர்த்தது கிடையாது. பஞ்சாயத்து ஆட்சியின் மூலம் அதிகாரத்தை பரவலாக்கி பகிர்ந்து அளித்து அதன் மூலம் திட்டங்கள் ஒழுங்காக நடக்கின்றனவா, ஊழல்கள் இல்லாமல் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை பார்த்து, அதன் மூலம் நல்லமுறையில் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்ற நல்லெண்ணத்துடன் பஞ்சாயத்துக்களை அமைத்து நாம் அதை அமுல் நடத்திக்கொண்டிருக்கிறோம். அதிலும் எங்களுக்கு எந்தவிதமான குறையும் கிடையாது. ஆனால் செயலாற்றுவதில் ஏற்படுகிற குறைகளை நாங்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டுகிறோம். பொதுத்

துறையில் சில சாதனைகளையும் தனியார் துறையில் சில சாதனைகளையும் இரண்டும் சேர்ந்து செய்தால்தான் பெருவாரியான நன்மைகளை நாடு பெற முடியும் என்பதை சர்க்கார் தங்கள் கொள்கையாக வகுத்திருக்கிறது. இது எந்த அளவுக்கு வெற்றி பெறும் அல்லது எந்த அளவுக்கு வெற்றி பெறாது என்பதை நாங்கள் பல முறை இங்கு சுட்டிக்காட்டி கேலிக்குரிய முறையில் கூட இதைப்பற்றி எடுத்துக்காட்டியிருக்கிறோம். அதனை சர்க்கார் இதுவரை பரிசீலனை செய்ததாகத் தெரியவில்லை. மின்சாரம், நல்ல கனிப்பொருட்கள் இவைகளை எல்லாம் பொதுத்துறையில் வைத்துக்கொண்டு, அவைகளை பயன்படுத்துகின்ற தொழிலை தனியார் துறையிலும் ஒதுக்குவதன் மூலமாகத்தான் நல்ல வெற்றி காண முடியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ரஷ்யா போன்ற நாடுகளில் எல்லோமே பொதுத்துறையில் நடக்கிறது என்றிருந்தாலும் கூட, நாங்கள் பொதுத்துறையும் தேவை, தனியார் துறையும் தேவை என்றுதான் கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். பொதுத்துறையில் நடக்கின்ற குறைகளை இந்த சட்டமன்றமோ அல்லது பாராளுமன்றமோ அல்லது ஊராட்சி அல்லது பேராட்சி மன்றங்களோ அதைப்பற்றி சொல்லுவதற்கும் அதைப்பற்றி விவாதிப்பதற்கும் உரிமை இருக்கிறது. தனியார் துறையில் பல குறைகள் ஏற்பட்டு அதன் மூலம் ஏழைகள் கஷ்டப்படக்கூடிய நிலை ஏற்பட்டு, அதன் காரணமாக கோடிக்கணக்கான ரூபாய் லாபமாகப் பெற்றாலும் கூட, அவர்களது கணக்கை இந்த மன்றமோ அல்லது வேறு பொது மன்றங்களோ பரிசீலனை செய்வதற்கு உரிமை கிடையாது. அந்த அளவில் ஆளுகிற கட்சி தனியார் தொழிலகங்களுக்கு உரிமை அளித்திருக்கிறது. அவர்கள் செய்து வருகின்ற ஊழல்களையோ அல்லது அவர்களது வரவு செலவுகளைப்பற்றியோ ஆளுகிற கட்சியோ அல்லது எதிர்க் கட்சியோ பரிசீலனை செய்ய முடியாது. அந்தக் காரணத்தினால் தான் அப்பேர்ப்பட்ட தனியார் துறையிலுள்ள பெரிய முதலாளிகள் ஆளுகிற கட்சிக்கு மட்டும் கட்டுப்பட்டால் போதும் என்ற நிலையிலும், ஆளுகிற கட்சிக்கு மட்டும் பதில் சொன்னால் போதும் என்ற அளவிலும் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் அந்த நிலை ஏற்படத்தான் செய்யும். ஏற்பட்டும் வருகிறது. இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு ஆளுகிற கட்சி தேர்தலுக்காக தனியார் துறையிலுள்ள பெரும் முதலாளிகளை அணுகி நிதி கேட்பதற்கான சபலம் ஏற்படுகிறது. அதனால் தனிப்பட்ட துறையிலுள்ள முதலாளிகளுக்கும் ஓரளவுக்கு பலம் ஏற்படுகிறது. ஏற்கனவே இதைப்பற்றி பல முறை குற்றஞ்சாட்டுகின்ற முறையில் நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அதிகமான லாபத்தை கொடுக்கும், அதிகமான அளவில் பணமுதலைகளை சிருஷ்டிக்கும் தொழில்களாக இருக்கின்ற பஸ், சினிமா போன்ற தொழில்களை தேசியமயமாக்க வேண்டும் என்ற இந்த சட்டமன்றத்தில் நாங்கள் பல முறை தீர்மானங்களை கொண்டு வந்திருக்கிறோம், ஆனால் அவைகளை எல்லாம் ஆளும் கட்சி தங்களுக்கு இருக்கின்ற பலத்தைக்கொண்டு அந்த நல்ல தீர்மானங்கள் எல்லாம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றன.

இவைகளை எல்லாம் தேசியமயமாக்கினால் 1,000 கோடி அல்ல, 2,000 கோடி வரையிலும் இந்த மாநிலத்திற்கு செலவு செய்ய முடியும் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தனியார் துறைக்கு சலுக்கை காட்டவேண்டும் என்ற நோக்கத்துடன் அதிகமான அளவில் பொதுதுறை தேவையில்லை என்கின்ற ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு, அந்த வழியில்தான் நாங்கள் செல்வோம், அதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு தரவேண்டும், இருக்கின்ற திட்டம் 200 கோடியாக இருந்தாலும் சரி, 100 கோடியாக இருந்தாலும், அல்லது 5 கோடியாக இருந்தாலும் சரி அதை வைத்துக்கொண்டு தீட்டுகிற திட்டத்தை எதிர்கட்சிகள் அனைத்தும் ஆதரிக்கவேண்டும். அதை செயல்படுத்துவதிற்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்று சொன்னால் அது எந்த அளவுக்கு சாத்தியமானது என்பதை சர்க்கார் அறியவேண்டும். தனியார் துறையில் இருப்பவர்களும் தவறுகளை செய்கின்றார்கள் என்றும் ஆனால் அவர்களை கேட்பது முடியாத காரியம் என்றும், நேற்று கூட நமது நிதி அமைச்சர் அவர்கள் இங்கு தெரிவித்தார்கள். தனியார் துறையில் ஏற்படும் குறைகளை எடுத்துச்சொல்ல முடியுமா. முடியாதா என்கின்ற நிலைமையை ஆட்சிபீடத்திலிருக்கின்றவர்கள் சிந்தித்துப்பார்த்து நடவடிக்கை எடுத்தால் அதைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு வழி செய்ய முடியும். எனவேதான் அவர்கள் செய்கின்ற குறைகளையும் ஆட்சி மன்றங்கள், பொது மக்களின் பிரதிநிதிகள் அடங்கியிருக்கின்ற மன்றங்கள் பரிசீலனை செய்வதற்கு வழிவகை செய்தால்தான் பொதுத் துறைகளிலும் தனியார் துறைகளிலும் இருக்கின்ற குறைகளை, குற்றங் குறைகளை எடுத்துச் சொல்ல முடியும், அதன் மூலமாக குறைகளையும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இப்படி ஒதுக்கி வைத்திருக்கின்ற பணத்தில், இந்தத் திட்டத்தில் பிற்பட்ட சமுதாயத்தின் நலனுக்காக ஒதுக்கியுள்ள தொகை மிகக் குறைவாக இருக்கிறது என்பதை எங்களால் காண முடிகிறது. அதற்கான விளக்கங்களை கேள்வி நேரத்தில் மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. எஸ். எம். அண்ணாமலை அவர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலை இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த விளக்கத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும், மத்திய சர்க்கார் தருகிற பணத்திலிருந்து ஒதுக்கும்போது அதிகப்படியாக இருக்கும் என்று அந்தப் பதிலில் அழகாக சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இருந்தாலும் அகில இந்தியாவில் இருக்கின்ற பிற மாநிலங்களில், இரண்டாவது திட்டத்தை விட மூன்றாவது திட்டத்திற்கு அதிகப்படியாக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த மாநிலத்தில், ஏழைகளை எல்லாம் இந்த சர்க்கார்தான் கோடீசுவரர்களாக்கி வைத்திருக்கிறது என்றும், இந்த சர்க்கார் ஏழை மக்களை எல்லாம் பட்டதாரிகளாக்கியிருக்கிறது என்றும், இந்த சர்க்கார்தான் ஏழை மக்களுக்கு மாட மாளிகைகளை கட்டித் தந்திருக்கிறது என்றும்

[Srimathi Sathiyavanimuthu] [10th November 1961

பலவிதத்தில் மக்களிடத்தில் பிரச்சாரம் செய்யும் இந்தச் சர்க்கார் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மிகவும் குறைவான தொகையைத்தான் பெற்றிருக்கிறது. அதை என்னால் சுட்டிக் காட்ட முடியும். ஆந்திரப் பிரதேசத்தில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 461 லட்சம் என்றால் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 537 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அஸ்ஸாமில் இரண்டாவது திட்டத்தில் 824 லட்சம் என்றால் இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 1,030 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். பீஹாரில் இரண்டாவது திட்டத்தில் 434 லட்சம் என்றால், மூன்றாவது திட்டத்தில் 728 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். குஜராத்தில் 295 லட்சமாக இருந்தது இப்போது 305 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மஹாராஷ்டிராத்தில் 530 லட்சமாக இருந்தது இப்போது மூன்றாவது திட்டத்தில் 778 லட்சமாக ஆகியிருக்கிறது. மத்தியப் பிரதேசத்தில் 269 லட்சத்திலிருந்து எதிர்பார்க்க முடியாத அளவுக்கு, யாரும் ஆச்சரியப் படக்கூடிய அளவில் 800 லட்சம் அதிகப்படியாக உயர்த்தியிருக்கிறார்கள். மைசூரில் 279 லட்சமாக இருந்தது 400 லட்சத்திற்கும் அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. ஒரிஸாவில் 341 லட்சத்திலிருந்து 361 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் பரிதாபத்திற்குரிய நம் தமிழ் மாநிலத்தில் பிற்பட்ட சமுதாய மக்களுக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 459 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது 326 லட்சமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருக்கிறது. இது ஏட்டளவில் திட்டம் மூலமாக செலவழிக்கப்படும் தொகையாக இருந்தாலும் திட்டம் அல்லாமல் நான்-ப்ளான் தலைப்பின் கீழ் வருஷம் ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம், ஆக ஐந்து வருஷத்தில் 15 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம், திட்டமில்லாமல் 15 கோடி ரூபாய் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழித்ததைப் போல, திட்டத்தில் இல்லாமல் மேலும் வருஷத்திற்கு 4 கோடி ரூபாய் என்று ஐந்து ஆண்டுகளுக்கு 20 கோடி ரூபாய் செலவழிக்க முடியும் என்ற உறுதியைக் கூட கேள்வி நேரத்தில் தந்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு செயலாற்ற முடியுமோ என்று கூட அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. ஒதுக்கிய தொகையை இப்போது செலவழிப்பதிலும் பல தவறுகள் ஏற்படுகிறது, செலவழிக்கப்படுகிறது என்று சொல்லிவிட்டு அந்த மக்களை ஏமாற்றி வேறு ஏதாவது திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறதோ என்று கூட அஞ்ச முடிகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால் எனது தொகுதியில் இரண்டாவது திட்டத்தில் ஆதித் திராவிட மக்கள் வாழுகின்ற கிரே நகர் பள்ளம் என்று ஒன்று உண்டு, அந்தப் பகுதியில் இருக்கிற, ஏழை மக்கள் வாழுகின்ற குடிசைகளை அப்புறப்படுத்தி, சீர்வரிசையாக எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்த்து அந்தத் திட்டமே முடிந்து, மூன்றாவது திட்டத்தைப் பற்றிப் பேசிக்கொள்ளுகின்ற இந்த நேரம் வரையிலும் இந்த கிரே நகர் பள்ளம் பகுதி இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

10th November 1961] [Srimathi Sathiyavanimuthu]

இதே போல ஏழை மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் சர்க்கார் ஸ்காலர்ஷிப்—உபகாரச் சம்பளம்—கொடுக்கிறோம் என்று சொல்லும்போது, உணவு, விடுதிகளில் தங்குவதற்கு என்ன சலுகை கொடுக்கப்படுகிறது என்று விளக்கமாக, தெளிவாக இன்று காலை விவரங்களைத் தந்திருக்கிறார்கள். இவைகளிலே பார்க்கும்போது மிக அதிகப்படியான பணம் ஒதுக்கியிருப்பதாகக் காட்டப்படுகிறதே தவிர, ஒவ்வொரு கல்லூரியிலேயும், ஒவ்வொரு விடுதியிலேயும் உண்மையிலேயே மாணவர்கள். இப்போது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையின்றி திட்டமில்லாமல் நான்-ப்ளான் தலைப்பின்கீழ் அதிகப்படியான கோடிக்கணக்கான பணம் ஒதுக்கி, பெரிய சலுகைகளைப் பெற்று மாணவர்கள் நல்ல முறையில் படிக்கிறார்களா என்று கேட்டால் இல்லை. சமீபத்திலே, இந்த ஆட்சி மன்றத்தில் இருக்கும் அத்தனை பேர்களுக்கும் தெரியும், எம். ஸி. ராஜா ஹாஸ்டலில் மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். காரணத்தை அவர்கள் எடுத்துச் சொல்லும்போது, அது வேதனைக்குரிய ஒரு சம்பவம், போடுகிற சோறே கைக்குத்தல் அரிசி; பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சர்க்கார் தருகின்ற சலுகையாதலால், சர்க்கார் சலுகையினால் பயன் அடைகின்ற மக்கள் தானே என்ற எண்ணம் இயற்கையாகவே தோன்றுகிறது. கைக்குத்தல் அரிசியாக இருந்தாலும் பரவாயில்லை சத்து அதிகம் உள்ள உணவு என்று மாணவர்கள் இருந்து விடலாம், ஆனால் தரப்படுகிற குழம்பு வகைகள்—சாம்பார்—இரண்டே இரண்டு கரண்டி. 20-25 வயது மாணவன் ஆழாக்கு அரிசி சாப்பிடுகின்றவனானாலும் கூட இரண்டு கரண்டிக்கு மேல் கேட்டால், வீட்டில் இப்படித்தான் சாப்பிட்டாயோ, விடுதியில் இருக்கக்கூடாது, நீ படிக்க வேண்டியதில்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அமைச்சரிடத்தில் முறையிட்டாலோ நீங்கள் சாம்பார் சோறு சாப்பிட்டு படித்து பட்டம் பெறுவதில் பெறுமைஅடையவேண்டும். இரண்டு கரண்டிக்கு மேல் ஏன் வேண்டும் என்று அவர்களிடத்தில் கேட்கப்படுகிறது. இப்படி மாணவர்களை அதிகாரிகளும் மந்திரிகளும் மனக் கொதிப்பு அடையக்கூடிய அளவுக்கு, வேதனை படக்கூடிய அளவுக்கு பேசுகிறார்களென்றால் ஒதுக்கிய பணம் என்ன ஆனது? நோய்வாய்ப் பட்டால் 12 அணா அளவுக்கு மருத்துவ விதிப்படி உணவு கொள்ளலாம் என்று இருக்கிறது, ஆனால் இப்போது 12 அணா கொடுப்பது கிடையாது. பொறியியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 960 ரூபாய் உபகாரச் சம்பளமாகக் கொடுத்துவந்ததை இப்போது 840 ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி இந்த உண்ணாவிரதம் இருந்ததற்காக பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு கலைக் கல்லூரி மாணவன் இப்போது விடுதியிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறான். காரணம் என்னவென்று கேட்டால் உண்ணாவிரதம் செய்கிற அளவுக்குத் தூண்டி விட்டானாம். சாம்பார் இரண்டு கரண்டி போதாது என்று சொன்னதற்கு மாணவன் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறான். இன்னமும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இங்கே கோடி கோடியாக, 5 கோடி, 7 கோடி, 20 கோடி, 50 கோடி என்று செலவழிக்கிறோம்

என்று சொன்னால், அந்தப் பணம் எங்கே செல்லுகிறது? எனவே திட்டங்களைப் போட்டு எழுத்தினால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்படும் அளவுக்குப் போட்டு விட்டால், நேற்றைய தினம் கனம் அன்பழகன் அவர்கள் சொன்னது போல கோடி கோடியாகப் போட்டது என்னவாயிற்று என்றால் தனுஷ்கோடியாகத்தான் இருக்கும். கோடி கோடியாக ஒதுக்கும் பணம் ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேரவில்லையென்றால் ஒதுக்குகின்ற பணம் என்ன ஆகிறது? பணத்தை ஏன் ஒழுங்காகச் செலவழிக்கக் கூடாது? கனம் தலைவர் அவர்கள் மணி அடித்து விட்ட காரணத்தினால் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன்—அதுவும் எனது தொகுதியைச் சேர்ந்த காரணத்தினால். தொழில் அபிவிருத்தி என்று சொல்லும் போது, தொழிற்சாலைகளை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லும்போது, மத்திய சர்க்கார் பெரம்பூரில் கோச் பாக்டரி கட்டியதையும், நெய்வேலியில் நிலக்கரி தோண்டி எடுப்பதையும் ஆட்சிபீடத்தில் இருப்பவர்கள் சொல்லிக்கொள்வது வாடிக்கையாகி விட்டது. அழகிய போஸ்டர் மூலம் தீப்பெட்டி, தீப்பெட்டி, சுடர் தீப்பெட்டி என்றும், மாலு காலணி என்றும் மாநில அரசு ஏற்படுத்துகின்ற தொழிற்சாலைகள் என்று காட்டினார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலை எனது தொகுதியில் ஏற்பட்டதற்கு ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர் ஒருவர் கூட அவர்கள் தொகுதியில் கோச் பாக்டரி மாச் பாக்டரி இருக்கிறது, ஆனால் எனது தொகுதியில் அண்டா தொழிற்சாலை கூடக் கிடையாது. குண்டா தொழிற்சாலை கூட கிடையாது என்று பேசினார்கள். இன்றைக்கு அந்த தீப்பெட்டி தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. காரணம் என்ன? ஏன் மூடவேண்டும்? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு திட்டம் முடிவதற்கு முன்னரே இது மூடப்பட்டிருக்கிறது. எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால் விளம்பரப்படுத்தப்பட்டது இது சர்க்காரின் மகத்தான சாதனை என்று. எந்த பொருள் காட்சி சாலையிலும் சுடர் தீப்பெட்டி வாங்கவேண்டும் என்று விளம்பரப்படுத்தப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை ஏன் மூடப்பட்டது? இப்படி அதிகப்படியான பணத்தைச் செலவழித்து வெற்றி காண முடிகிறதா என்று பார்த்தால், வெற்றி காண முடியவில்லை. எனவே சொல்லுகிறேன், திட்டங்களைத் தீட்டி, புள்ளிவிவரங்களைக் காட்டி, கோடி கோடி என்று எழுத்தில் எழுதிக் காட்டி மந்திரிகளாக இருக்கிறவர்கள் எங்களை ஏமாற்றவேண்டாம். இதனை வைத்து தேர்தல் காலத்தில் ஓட்டு வாங்க எண்ணினால், இந்தத் திட்டத்தை எடுத்துக் காட்டினால் அதிலுள்ள குறைகளை மக்கள் அறிவார்கள், அதனால் நீங்கள் வெற்றி பெற முடியாது. மக்களை அணுகும் முன்னால் குறைகளை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டால் இதைக் காட்டி நீங்கள் ஓட்டுப் பெற முடியும் என்று கூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI J. MATHA GOWDER : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நான் ஆமோதித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள்

போட்டு திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெற்றிருக்கின்றன என்பதைப்பற்றி மக்கள் அறிவார்கள். அரசியல் கட்சிகள் ஒருக்கால் திட்டத்தைப் போட்டு மக்களை ஏமாற்றுகிறார்கள் அல்லது தங்களை ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லி விடலாம். ஆனால் அடுத்த தேர்தல் நெருங்குகிறது. 62-வது வருஷம் பிப்ரவரி மாதத்திலே பொதுத் தேர்தல் வருகிறது. பொதுத் தேர்தலிலே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்து எங்கே நாம் வெற்றி பெற்றுவிடப் போகிறோமோ என்று எதிர்க்கட்சிக்காரர்கள் பயப்படுகிறார்கள். பொதுத் தேர்தல் சமயத்திலே இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வருவதைக் கண்டு அவர்கள் பயப்படுவது இயற்கையே. ஏன் பயப்படுகிறார்கள்? இந்தத் திட்டத்தை பொதுமக்கள் நன்றாக புரிந்து கொண்டால், அடுத்த தேர்தலிலே நாம் இந்தச் சபைக்கு வர முடியுமோ, முடியாதோ என்ற நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டிருப்பதே யாகும். ஆகவே தான் நண்பர் ஸ்ரீ. சின்னதுரை அவர்கள் சொன்னார்கள், இந்தத் திட்டத்தை காங்கிரஸ்காரர்கள் மட்டும் உருவாக்கவில்லை. பல கட்சியினரும் சேர்ந்து இந்தத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம் என்று சொன்னார்கள். திட்டம் நல்ல முறையிலே இருப்பதை உணர்ந்து தான் நாங்களும் சேர்ந்து இந்தத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம் என்று சொல்லி, மக்களிடத்திலே அவர்களும் இதுபற்றி பிரசாரம் செய்வதற்கு சொல்கிறார்கள். இதை நாம் கூர்ந்து கவனிக்கும்போது இந்தத் திட்டத்தில் பல நன்மைகள் அமைந்திருக்கிறது தெரியும். இதை மக்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்கள். மக்களிடத்தில் இனிமேல் எதிர்க்கட்சிக்காரர்கள் பித்தலாட்டம் சொல்லி அவர்களை ஏமாற்றுவதற்கு முடியாது.

SRI A. GOVINDASAMI : On a point of order, Sir. இந்தச் சபையில் பித்தலாட்டம் என்ற வார்த்தை உபயோகிக்கலாமா?

TEMPORARY CHAIRMAN (SRI N. S. RAMALINGAM) : பித்தலாட்டம் என்பது சட்டசபைக்கு ஒவ்வாத வார்த்தையல்ல. ஆனால் அந்த வார்த்தையை உபயோகிக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

SRI J. MATHA GOWDER : எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் ஊழல் என்று பேசுகிறார்கள். அதை மட்டும் இங்கே பேசலாம் என்று அவர்களுக்குத் தெரிகிறது. ஆனால் நான் பித்தலாட்டம் என்று சொல்லும்போது மட்டும், அந்த வார்த்தையை உபயோகிக்கலாமா என்றும், அது முறையா என்று கேட்கிறார்கள். கேட்கட்டும். அவர்களுக்கு அப்படித்தான் பேசத் தெரியும். அதுவும் அவ்வளவு உசிதமல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI C. N. ANNADURAI : Sir, I did not hear your ruling on the point of order raised by the hon. Member, Sri Govindasami.

TEMPORARY CHAIRMAN (SRI N. S. RAMALINGAM) : I think it is neither objectionable nor unparliamentary. However I requested the hon. Member, Sri Matha Gowder, not to use that word.

[10th November 1961

SRI C. N. ANNADURAI : But he is repeating it.

SRI J. MATHA GOWDER : Sir, I never repeated it.

அவர்கள் ஊழல் என்று சொல்லும்போது, நாம் பித்தலாட்டம் என்று சொல்லுவது தப்பில்லை என்பதைத்தான் எடுத்து காட்டினேன். நான் சேர்மன் ரூலிங்குக்கு அப்பாற்பட்டு பேசவில்லை. நான் அப்படிப் பேசுவதற்கும் தயாராக இல்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படும்போது, எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் இந்தத் திட்டத்தைப் போட்டார்கள் என்று சர்க்கார் சொல்லும்போது, ஒரு சாரார் மட்டும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படும் போது இதிலே கலந்து கொள்ளவில்லை. அந்தக் கட்சியின் தலைவர் அதிலே கலந்து கொள்ளாதபோது, இங்கே எப்படிக் குறையை மட்டும் அவர்கள் பேச முடியுமென்பதுதான் எனக்குப் புரியவில்லை. திட்டத்தைத் தயாரிக்கும்போது, அந்தக் கட்சியின் தலைவர் அங்கு வந்திருந்து திட்டம் போடக்கூடிய நேரத்திலே அதிலே உள்ள குறைகளை எடுத்துச் சொல்லி இருந்தால் பரவாயில்லை. அப்படி வராமல் குறை இருக்கிறது என்று மட்டும் சொல்கிறார்கள். ஒன்று சொல்ல விரும்புகிறேன். இவர்கள் அடுத்தத் தேர்தலிலே இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்து மக்களிடத்திலே வோட்டு பெற முடியாது. நீங்கள் நிச்சயம் தோல்வி அடைவீர்கள். எனக்கு முன்னால் பேசிய அம்மையார் அவர்கள், எங்களைப் பார்த்து இந்தத் திட்டத்தை வைத்தே நாங்கள் மக்களிடத்திலே வோட்டுப் பெற முடியுமென்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் சவால் விட்டுச் சொல்கிறேன். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வைத்தே, மக்களிடத்திலே காங்கிரஸ் கட்சி பெருவாரியான வோட்டுக்கள் பெற்று, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைக்கும் அதிகமான அளவுக்கு மெஜாரிடியாக இந்த சட்ட மன்றத்திலே நாங்கள் அமையப் போகிறோம் என்று இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். (ஆரவாரம்) மக்கள் அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே மக்களிடத்திலே உண்மைக்குப் புறம்பாகப் பேசி நீங்கள் வோட்டு வாங்க முடியாது. அதை எதிர்க் கட்சிக்காரர்களும் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள். திட்டத்திலே சில குறைகள் இருக்கிறது என்று சொல்லுங்கள். அதை நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னபடி, இருக்கக்கூடிய குறைகளை நடைமுறையிலே நிவர்த்தி செய்துகொள்ள முடியுமே தவிர, இன்றைக்கே நிவர்த்தி செய்துவிட முடியாது. திட்டத்தை உருவாக்குகின்ற காலத்திலே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை அறிந்து, அந்த குறைகளை எப்படி எப்படி நிவர்த்தி செய்யலாம் என்பதற்காகவே நாம் இந்த சட்ட மன்றத்திலே அமர்ந்திருக்கிறோம். திட்டத்தைத்தான் நாம் போட்டு விட்டோமே, நாம் சும்மா இருந்து விடலாம் என்றால், அதற்கு நாம் இங்கே வந்து உட்காரவேண்டிய அவசியமே இல்லை. பணம் போதாது, அதற்காக மத்திய அரசாங்கத்திடமிருந்து சண்டை போட்டு சண்டை போட்டு நீங்கள் பணம் வாங்க

10th November 1961] [Sri J. Matha Gowder]

வில்லை என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். சண்டை போடுவது என்றால் எப்படி சண்டை போடுவது? கத்தியை எடுத்துக்கொண்டு, திடீரென்று தாக்குவதா என்று கேட்கிறேன்? நியாயத்தை எடுத்துக் காட்டி கேட்கிறோம். ஜனத்தொகையின் விகிதாசாரத்தை எடுத்துக் காட்டிக் கேட்கிறோம். மத்திய அரசாங்கத்திலே அங்கிருக்கக்கூடியவர்கள், ஒவ்வொரு மாகாணத்திற்கும் எவ்வளவு கொடுக்கலாம் என்பதைப் பார்த்துச் செய்கிறார்கள். அதற்கு பிளானிங் கமிஷன் என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இதையெல்லாம் நன்கு பரிசீலனை செய்து முடிவெடுக்கும்போது, சண்டை போடுங்கள் என்று சொன்னால், எங்கே யாரிடத்திலே போய் சண்டை போடுவது? ஒன்று வேண்டுமானால் செய்யலாம். இந்தத் தேர்தல் முடிந்த பிறகு, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கின்ற காலத்திலே வேண்டுமானால், இவர்களை ஒரு டெலிகேட்டாக அமைத்து அங்கே சண்டை போடுவதற்கு அனுப்பலாம். எங்களுக்குச் சண்டை போடுவதில் பழக்கமில்லை. சண்டை போடவும் தெரியாது. அப்படி இருக்கும்போது, இவர்கள் மக்களிடத்திலே சென்று, இந்த மந்திரிகள் எல்லாம் கோழைகள், சண்டைபோட்டு கேட்கத் தெரியவில்லை என்று சொல்வது ஏன் என்பதுதான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அதே போல் இவர்கள் வடநாட்டுக்காரர்களைக் கண்டும் பயப்படுகிறார்கள். வடநாட்டுக்காரர்களை காண்பித்துக் காண்பித்து தென்னாட்டிலே பிரசாரம் செய்துவருகிறார்கள். இப்படிச் சொல்லி தென்னாட்டிலே இருக்கக்கூடிய மக்களையெல்லாம் கோழைகளாக்குகிறார்கள். நம்முடைய நாட்டில் உள்ளவர்கள் எல்லாம் தைரியசாலிகள். ஆனால், இவர்கள் வடநாட்டுக்காரன் நம்மை ஏமாற்றி விட்டான், இங்கிருக்கக்கூடியவர்கள் எல்லாம் கோழைகள் என்று சொல்லும்போது, மக்களும் இயற்கையாகவே தைரியத்தை இழந்து கோழைகளாகி விடுவார்கள் என்பதை எதிர்க் கட்சிக்காரர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதே சமயத்தில் பணம் குறைவாக ஒதுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இதையும் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மதராஸ் மாகாணம் என்று இருந்தது இப்போது தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா முதலிய மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி பிரிக்கப்பட்ட பிறகு எவ்வளவு பணம் நம்முடைய மாகாணத்திற்கு ஒதுக்கப்படுகிறது என்பதைப் பார்த்தால், முன்பு எல்லாம் ஒன்றாக இருந்தபோது எவ்வளவு தொகை நமக்கு ஒதுக்கப்பட்டதோ, அதைவிட இப்போது இரண்டு பங்கு அதிகமாக நமக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது நன்கு தெரியும். இதையெல்லாம்கூட அவர்கள் புரிந்துகொள்ளாமல் இவர்கள் மக்களிடத்திலே போய் ஆயிரம் கோடி ரூபாய் கேட்டோம், அதற்கானத் திட்டம் இருக்கிறது, கொடுக்கவில்லை என்று கேட்டால், எங்கே திட்டமிருக்கிறது என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அதேபோல் பணக்காரர்களை நம்பித்தான் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்று பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். பணக்காரர்களிடத்திலே தேர்தல் நிதி வசூல் செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தேர்தல் நிதியை நாங்கள் தெரியாமல் வாங்கவில்லை. அவர்களுடைய கட்சி மட்டும்

தேர்தல் நிதி வாங்காமலா இருக்கிறது? சமீபத்தில்கூட, கனம் அண்ணாத்துரை அவர்கள் என்னுடைய தொகுதியிலே வந்து இரவு 10 மணிக்கு அல்லவா தேர்தல் நிதி வாங்கிக்கொண்டு போனார். நாங்களாவது தெரிந்து பகலிலே வாங்குகிறோம்.

SRI D. S. AUTHIMOOLAM: On a point of order, Sir. பிளான் பற்றிப் பேசும்போது, திராவிட முன்னேற்றக் கழகம்—காங்கிரஸ் பிரசாரம் பற்றி இந்த அசெம்பிளியில் பேசலாமா என்று கேட்கிறேன்.

SRI J. MATHA GOWDER: இது பொது விவாதம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது, அதிலேயுள்ள குறைகளை அவர்கள் எடுத்துச் சொல்லும்போது, திருப்பி அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். யார் தேர்தல் நிதி வாங்கவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன்? இவர்களும் தேர்தல் நிதி வாங்குகிறார்கள். நாங்களும் தேர்தல் நிதி வாங்குகிறோம். அப்படி இருக்கும்போது இவர்கள் மட்டும் ஏன் பணக்காரர்களைக் கண்டு பயப்படுகிறார்கள். பணக்காரர்கள் ஒன்றிரண்டு பேர்கள்தான். அவர்களைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. இந்த நாட்டிலே ஏழைகள்தான் ஆயிரக் கணக்கில் இருக்கிறார்கள். அவர்களிடத்திலேதான் அதிகப்படியான வோட்டுக்கள் இருக்கின்றன. அவர்கள் ஆதரவுதான் எங்களுக்குத் தேவை. ஆகையினாலே அவர்களுக்கு உபயோகப்படும் வகையிலே தான் நாங்கள் திட்டத்தை தயாரித்து வைத்திருக்கிறோம். ஆயிரம் கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆயிரம்
11 a.m. கோடி ரூபாய்க்கு எங்கே போவது? செங்கல் சூளையா என்ன லாரிகளில் ஏற்றிக் கொண்டுவந்து அடுக்குவதற்கு? செங்கல் சூளை இருந்தால்கூட 1,000 கோடி செங்கல் கொண்டுவருவதற்கு எத்தனை வாகன் வேண்டும், எத்தனை லாரிகள் வேண்டும், அதற்கு எத்தனை காலம் பிடிக்கும்? (குறுக்கீடு) நோட்டு அடிப்பது வேறு இடத்தில் அடிக்கிறார்கள். அந்த நோட்டுச் செல்லாது. அதே போன்று நோட்டு அடித்தாலும் அதைச் சர்க்கார் அனுமதிக்க மாட்டார்கள். மக்களிடம் போய் 1,000 கோடி ரூபாய்க்கு திட்டம் இருக்கிறது, காங்கிரஸ் சர்க்கார் பயன் இல்லை, மத்திய சர்க்காருக்குப் பயப்படுகிறார்கள் என்ற ஒரு வாதத்தை வைத்துக்கொண்டு சொல்லிக்கொண்டே போனால், அடுத்த தேர்தலில் தோற்பது நிச்சயம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். என்ன சாதனை செய்திருக்கிறீர்கள் இந்த ஐந்தாண்டுக் காலத்தில், உங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய தொகுதிக்கு என்ன செய்திருக்கிறீர்கள், இந்த மாநிலத்திற்கு என்ன நன்மை செய்திருக்கிறீர்கள் என்பதை மக்களிடையே எடுத்துச் சொன்னால்தான் மக்கள் வோட்டுப் போடுவார்கள் என்பது உறுதி. பக்கத்து வீட்டுக்காரரைப் பார்த்து பொறுமைப்படுவதில் பிரயோசனம் இல்லை. பக்கத்து வீட்டுக்காரருக்கு ஆண் பிள்ளை பிறந்தால், வயிற்றில் உலக்கையால் இடித்துக்கொள்ளுவது போலுள்ள நிலையில் இருக்கக் கூடாது. உங்களுடைய நிலை பரிதாபகரமாக இருக்கிறது. அந்த நிலையை மாற்றிக்கொள்ளவேண்டும். சர்க்காருடைய

சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லவேண்டும். அம் மாதிரி மக்களிடம் சொல்லுவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.

முன்பு பேசிய நண்பர் சின்னதுரை அவர்கள் அமெரிக்க நாட்டில் அதிகமாக மின்சார உற்பத்தி ஆகிவிட்டது என்று சொன்னார். அமெரிக்கா எந்த வருஷம் விடுதலை அடைந்தது, நம்முடைய நாடு எந்த வருஷம் விடுதலை அடைந்தது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்கே நாம் 4 சதவிகிதம்தான் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம் என்று சொன்னார்கள். அண்மையிலே அமெரிக்கா சென்றுவிட்டு வந்த நண்பர் திரு. சின்னதுரை அவர்களே இப்படிப் பேசுவது பற்றி நான் மிகவும் ஆச்சரியப்படுகிறேன். நம்முடைய நாட்டு நிலைக்கும், அந்த நாட்டு நிலைக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். நம்முடைய நாட்டில் உள்ள ஜன நெருக்கம் என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். நாட்டில் ஜன நெருக்கத்தை கட்டுப்படுத்தவேண்டுமென்பதற்காக காங்கிரஸ் சர்க்கார் சொன்னால், நண்பர் திரு. சின்னதுரை அவர்கள் அதை எதிர்க்கிறார். குடும்பக் கட்டுப்பாடு ஆகாது என்று சொல்லிவிட்டு, இங்கு ஜனத்தொகையும் அதிகரித்துவிட்டு, இங்கே 4 சதவிகிதம்தான் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னால், அறியாமையில் அம்மாதிரி பேசுகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த நிலையிலே எந்தவிதமான ஒரு திட்டத்தைச் சொன்னாலும், அதைச் சற்று புரிந்துகொண்டு சொல்லவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஏதோ மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்துவிட்டார்களாம் எம்.ஸி. ராஜா கல்லூரியில். உண்ணாவிரதம் இருந்த பிறகு நல்ல அரிசி கிடைக்கிறது என்று சொல்லப்பட்டது. நல்ல அரிசி மக்களுக்கு வேண்டும். (குறுக்கீடு) கல்லூரி ஹாஸ்டலில், வெறும் ஹாஸ்டலில் உண்ணாவிரதம் இருந்தார்களாம். அம்மையார் இரண்டு கரண்டிக்கு மேல் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். அதைப் பற்றி நான் ஒப்புக்கொள்ள முடியும். ஆனால் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பால் வேண்டுமென்றால் அயனாவரம் பால்தான் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஏதோ அரசியல் கட்சிக்காரர்கள்தான் இம்மாதிரி சூது செய்து மாணவர்களை வேறு பக்கம் திருப்பியிருக்கிறார்கள். இதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுக்கே தெரியும். அயனாவரம் பால்தான் வேண்டும் என்று சொல்லுவது சரியா? புலிப் பால் வேண்டுமென்றால் காங்கிரஸ் சர்க்கார் போய் புலிப்பால் கொண்டுவர முடியுமா? கிடைக்கக்கூடிய பாலைத்தான் கொடுக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னும் இரண்டு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்ட காலத்தில் குறிப்பாக ஆதிவாசி மக்களிடையே நாம் துரிதமாக வேலை செய்யவேண்டும். எங்களுடைய பிரதேசம் ஆதிவாசி மக்கள் இருக்கக்கூடிய பிரதேசம், மலைப் பிராந்தியம். ஆதிவாசி மக்கள் அங்கே காட்டிற்குள்ளே வசிக்கிறார்கள். அவர்களுக்கு நாம் ஓரளவு சலுகைகள் கொடுத்து, வசதிகள் செய்துகொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு மிக அவசிய

[Sri. J. Matha Gowder] [10th November 1961

மாக வேண்டியது பாதைகள். மதுரை காங்கிரஸ் மகாநாட்டில் கூட இதுபற்றி தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்களுக்கு அதிகமாகப் பாதைகள் போட்டுக்கொடுத்து, ஆதிவாசி மக்களைப்பற்றி கவனம் செலுத்த வேண்டும். பாதைகள் ஒழுங்காக போடப்பட்டு அவர்கள் முன்னேற்றத்திற்கு வழிவகைகள் செய்யவேண்டும். முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடியவர்களிடத்திலேயே அதிக அக்கறை காட்டாமல், ஆதிவாசி போன்ற மக்களிடத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும். சென்னை போன்ற நகரங்களில் அதிக அக்கறை காட்டுவது உசிதம் அல்ல. சென்னை நகர மக்களைக் காட்டிலும், கிராம மக்களை அதிகமாக ஊக்குவித்து, கிராம மக்கள் சென்னை நகர மக்களோடு சரிசமமாகவாழக்கூடிய நிலைமையை உண்டாக்குவதற்கு வேண்டிய திட்டங்கள் போட்டால்தான் அது ஒரு நல்ல திட்டமாக அமையும். இந்தத் திட்டத்தை மனதார வரவேற்று, இதன் மூலம் மக்களுக்கு ஒரு நல்வாழ்வு ஏற்படும் என்ற நம்பிக்கை கொண்டு, நான் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI R. CHIDAMBARA BHARATHI : தலைவர் அவர்களே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தச் சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. அதை நான் மனமார வரவேற்று, அதற்கு எங்கள் கட்சி சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிற திருத்தத்தை ஆமோதிப்பதன் மூலம் சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 86 கோடி ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டது, ஆனால் 80 கோடி ரூபாய்தான் செலவாகியிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 152 கோடி ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டு, 186 கோடி ரூபாய் வரையிலும் அதிகமாகச் செலவாகி இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிட்டத்தட்ட 291 கோடி ரூபாய்க்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. நாம் மிக சந்தோஷமாக வரவேற்க வேண்டிய விஷயம் எதுவாக இருக்கிறது என்றால், சர்க்கார் நிர்வாகஸ்தர்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் இருந்ததைக் காட்டிலும் இரண்டாவது திட்ட காலத்தில் மிக அக்கறையாக வேலை செய்து போடப்பட்ட திட்டத்திற்கு அதிகமாகவும், செலவு அதிகமாகவும் செய்திருக்கிறார்கள். மூன்றாவது திட்டத்திற்கு நமது சர்க்காரினுடைய கோரிக்கைக்குக் குறைவாக பிளானிங் கமிஷன் கொடுத்திருந்தாலும்கூட, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நாம் அதிகமாக செலவு செய்வதற்கு எப்படி நமக்கு வாய்ப்பு கிடைத்ததோ, அதே போன்று மூன்றாவது திட்ட காலத்திலும் அந்த வாய்ப்பை நாம் அடைய முடியும், அடைவதற்கு பல ஏதுக்கள் இருக்கின்றன. திட்டம் வேண்டும் என்று நினைப்பவர்களும், திட்டம் போதாது, இன்னும் அதிகமாகப் பணம் வேண்டும் என்று நினைப்பவர்களும் முந்திய இரண்டு திட்ட காலத்தில் நல்ல முறையில் சர்க்காரோடு ஒத்துழைத்திருக்கிறார்களா, நல்ல முறையில் ஒத்துழைக்க வேண்டும் என்று ஜனங்களை அணுகி பிரசாரம் செய்திருக்கிறார்களா என்று பார்ப்போமானால், அம்மாதிரி செய்யவில்லை செய்யாது பேசாமல் இருந்தாலும் பரவாயில்லை. முந்திய திட்டங்

10th November 1961] [Sri R. Chidambara Bharathi]

கள் நிறைவேற்றப்படும் காலத்தில் திட்டத்தைப்பற்றி குறை கூறிக்கொண்டு, அது நடைபெறாமல் இருப்பதற்கு எத்தனை விதத்தில் தடங்கல் சொல்லவேண்டும், மறைமுகமாகவும் நேரிடையாகவும் சொல்லவேண்டுமோ அந்த முறையில் பிரசாரம் செய்துவிட்டு, மனப்பூர்வமாகத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உதவியாக இருக்கவேண்டும் என்ற மனோபாவம் இல்லாமல் இருக்கிறவர்கள் 1,000 கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்வார்களேயானால் அது எந்த விதத்தில் நியாயம்? அந்த முறையில் இருக்கும்போது தேர்தலுக்கு மக்கள் முன்பாக வோட்டுக் கேட்பதற்கு முதல் இரண்டு திட்டங்களை உபயோகப்படுத்த நினைப்பது நியாயம் அற்ற செயல் என்று நான் யாருக்கும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், மக்கள் தீர்ப்புக் கொடுப்பார்கள் என்பதில் எனக்கு பரிபூரண நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால் மக்களுக்கு விஷயம் நன்கு தெரியும். முன்னையமாதிரி உள்ள மக்கள் அல்ல. சுமார் 15 வருஷங்களுக்கு முன்பாக இந்தியாவை நல்ல கண்ணோட்டத்தோடு சுற்றுப்பிரயாணம் செய்த ஒரு இந்திய மகனானவன் இன்றைய தினம் சுற்றுப்பிரயாணம் செய்தால் ஒவ்வொரு சிறிய கிராமத்திலும்கூட இந்த இரண்டு திட்ட காலத்திற்குள்ளாக ஒரு புதிய கட்டிடம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம், அதிகமாக மாணவர்கள் பள்ளிகளில் படித்து வருகிறார்கள், புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நல்ல ரோடுகள் இருக்கின்றன. மொத்தத்தில் பார்ப்போமானால் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்யப்பட்ட காரியங்களைப் பார்க்கிலும் இரண்டாவது திட்டத்தில் செய்யப்பட்ட காரியங்கள் இரண்டு பங்கு அதிகமாக இருக்கின்றன ஒவ்வொரு விஷயத்திலும். கல்வியை எடுத்துக்கொண்டாலும் சரி, ரோடு வசதியை எடுத்துக்கொண்டாலும் சரி, பள்ளிகள் வசதியை எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது தொழில் கல்வி பள்ளிக்கூடங்களை எடுத்துக்கொண்டாலும் சரி இரண்டு பங்கு அதிகமாக வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அநேகமாக இப்போது இருப்பதைப்பார்க்கிலும் 6 பங்கு அதிகமாக வசதிகள் ஏற்படுவதற்கு ஏதுக்கள் இருக்கின்றன. தேர்தல் பிரசாரத்திற்காகத் திட்டத்தைக் குற்றம் கூறிக்கொண்டும், திட்டமே இல்லாமல் இருக்கவேண்டும் அல்லது திட்டம் போடுபவர்கள் சர்வாதிகார மனப்பான்மையில் போடுகிறார்கள் என்று எண்ணிக்கொண்டிருப்பவர்களோடு தொடர்பு கொண்டு மக்களிடம் வோட்டுக் கேட்கும் பொழுது மக்கள் நிச்சயமாக ஒன்று நினைப்பார்கள். அதை நினைக்காமல் மக்கள் இருக்கமாட்டார்கள். அப்படி விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியாத மக்கள் இப்பொழுது சுதந்திர இந்தியாவில் இருக்கிறார்கள் என்று எதிர்க் கட்சிகள் நினைத்தால் அவர்கள் வருகிற பொதுத் தேர்தலிலே படு தோல்வி அடைவார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள் என்று நினைத்து, "தூங்குகிறவன் தொடையில் கயிறு திரித்தவரையில் ஆதாயம்" என்று கருதுகிறார்கள். மக்கள் யாரும் தூங்கவில்லை என்பதை நீங்கள் உணர வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் பொது மக்கள் தெரிந்துகொண்டு இருக்கிறார்கள். சாதாரணமாக, எதிர்க் கட்சிகளால் சட்ட சபையிலும், பொது மக்கள் மத்தியிலும் பேசப்படுவதுதான். திட்டத்திற்கு 1,000 கோடி ரூபாய் தேவை, இந்த 200 கோடி ரூபாய் வெறும் சுண்டைக்காய் என்று பிரசாரம் செய்கிறார்கள். மக்களுக்குத் தெரியும் இந்தப் பிரசாரத்தின் உண்மை. ஆயிரம் கோடி ரூபாய் என்று சொன்னால், அதை எப்படித் திரட்டுவது, எந்தெந்த வகையில் வரி போடுவது, யார் யாரிடத்தில் கடன் கேட்பது? அதேபோன்று 1,000 கோடி ரூபாய் செலவு செய்வதற்குத் திட்டமிடுவது முக்கியம். ஆகவே எதிர்க் கட்சிகள் எதைச் சொன்னாலும் மக்கள் நம்பிவிடுவார்கள் என்று நினைப்பது தவறு. மக்கள் நினைப்பது என்ன என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திட்டமென்பது மக்களுடைய தேவை, தேசத்தின் தேவை இரண்டையும் கருத்தில் வைத்துக்கொண்டு, ஆழ்ந்து சிந்தித்து, மக்களுடைய பிரதிநிதிகளையும், மக்களுடைய தலைவர்களையும் கலந்து, மக்களுடைய பிரதேசங்களைச் சுற்றிப் பார்த்து, சூழ்நிலைக்கேற்ப திட்டமிடுவதுதான் சிறந்த முறை. எல்லோருடைய அபிப்பிராயத்தையும் கேட்டு அப்படியே திட்டமிட முடியாது. சூழ்நிலையையும், சந்தர்ப்பங்களையும் தெரிந்துகொண்டு சக்திக்குத் தக்கவாறு பண வருவாயை உண்டாக்கி, செலவு செய்வதற்கு வசதி செய்து, திட்டமிடுவதுதான் முக்கியமானது. அந்த அளவிலே சிந்தித்துப்பார்த்தால், 1,000 கோடி ரூபாய் என்பது நடவாத காரியம். ஆனால், சிலர், பஸ் டிரான்ஸ்போர்ட்டையும், சினிமாக்களையும் தேசீயமயமாக்கிவிட்டால், இந்த 1,000 கோடி ரூபாய் கிடைத்துவிடுமென்று சொல்லுகிறார்கள். அவ்வாறு இப்பொழுதுள்ள சினிமாக் கொட்டகைகளையும், ஓடும் பஸ்களையும் எடுத்துக்கொண்டால்கூட, 5 வருடத்தில் 1,000 கோடி ரூபாய் மிஞ்சுமா என்பது சந்தேகம். நூறு கோடி ரூபாய் கூட கிடைக்காது. கணக்குப் போட்டுப் பார்த்தால் இது தெரியவரும். ஆனால் இன்றுள்ள நிலைமை என்ன? தமிழ் நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகள், அரசியல் கட்சிகள், தமிழ் நாட்டினுடைய வளர்ச்சியிலோ, தமிழ் மக்களுடைய வருங்கால நல் வாழ்விலோ அக்கறை காட்டாமல், தங்களுடைய கட்சி பலத்திற்காக, தங்களுடைய கட்சி ஆதிக்கத்திற்கு வருவதற்காகக் போடும் சண்டைதான் அதிகமாக இருக்கிறது. அதற்கு வேறு ஒரு உதாரணம் தேவையில்லை. இன்றையதினம் இந்த சபையிலே ஒரு ஹாஸ்டலைப் பற்றிப் பேசப்பட்டது. அதுவே சான்று தங்களுடைய சொத்து, தங்களுடைய பொறுப்பு, தங்களுடைய சாமான்கள் என்றெல்லாம் சொல்லிக்கொண்டு அதிலே அபிமானம் காட்டுவதைப் பார்க்கிறோம். அதைப்போல, அது தேசத்திலுள்ள பொது சொத்து, பொது சாமான்கள் என்ற அடிப்படையில், பொது நோக்கங்களுக்காக அவைகள் உபயோகப்படும் என்ற அடிப்படையில் உங்களுக்கு நல்லெண்ணம் எப்பொழுது வருகிறதோ, அப்பொழுதுதான் இந்த தேசத்தில், வருமானம் கிடைக்கக்கூடிய எந்தத் தொழிலையும் பொது உடமை ஆக்க முடியும். அந்த உணர்ச்சி இப்பொழுது எதிர்க் கட்சிகளுக்கு

வந்திருக்கிறதா என்று கேட்டால், இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். மக்களிடம் இந்த உணர்ச்சி வராமல் தடுப்பதற்கு எதிர்க் கட்சிகள் பாடுபடுகின்றன. இதற்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம். ஒரு உதாரணத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். சென்னையிலுள்ள ஒரு ஹாஸ்டலில் "பால் இந்த மாதிரி இருக்கவேண்டும், இரண்டு கரண்டி சாம்பார் வேண்டும், ரசம் வேண்டும், நல்ல மோர் வேண்டும்" என்றெல்லாம் கிளர்ச்சி செய்தால், வயிறு புடைக்குமா அல்லது அறிவு புடைக்குமா என்று கேட்கிறேன். இப்படி ஒரு பொது உணர்ச்சி, பொது நோக்கம் இல்லாமல், கட்சிப் பிரசாரத்திற்காக எதைப்பற்றி வேண்டுமானாலும் பேசலாமென்று நினைத்தால், பஸ் டிரான்ஸ்போர்ட்டையும், சினிமாக்களையும் பொது உடைமை ஆக்கினால், என்ன மிஞ்சும்? இப்படிச் செய்தால், அரசியல் கட்சித் தலைவர்களுடைய வயிறு புடைக்கலாம், அவர்களுடைய ஆடை, அலங்காரம் அதிகமாகலாம். இதை நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார்கள் தமிழ் நாட்டு மக்கள் என்பதை உங்களுக்கு நான் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

எதிர்க் கட்சிகள் எங்களுக்குக் கட்டாயம் தேவை. நீங்கள் நல்ல பொது உணர்ச்சியோடு, நல்ல சித்தத்தோடு சொல்லக்கூடிய யோசனைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம். ஆதலால்தான் நான் சொல்லுகிறேன், மக்கள் தூங்கிக்கொண்டு இருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். இன்னும் கோடிக்கணக்கான பணத்தை இந்த நாட்டிற்குச் செலவிட வேண்டுமென்று சொன்னால், என்றைக்கு எதிர்க் கட்சிகளுக்கு பொது உணர்ச்சியும், பொது நோக்கத்திற்காகப் பாடுபடவேண்டுமென்ற உணர்ச்சியும், ஓரளவு பொறுப்பும், நல்ல பண்பாடும் வருகிறதோ, அன்றையதினம் நடைமுறையில் இன்னும் அதிகமான பணத்தைச் செலவு செய்து பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். அம்மாதிரியான ஒரு நிலைமையை எதிர்க் கட்சிகளும், மக்களும் சீக்கிரத்தில் உண்டாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏதோ தேர்தல் காலத்தில் பிரசாரத்திற்காக இந்த மூன்றாவது திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் சர்க்கார் கட்சிக்காரர்கள் என்று பிரசாரம் செய்கிறார்கள். முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்துவிட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்பொழுது போடப்பட்டிருக்கிறது. அப்படியிருந்தாலும், அது குற்றமாகுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது காங்கிரஸ் சர்க்காரின் நோக்கமில்லை என்பது உங்களுக்கும் நன்றாகத் தெரியும். சுதந்திரம் கிடைப்பதற்காக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல தியாகங்கள் செய்த காலத்தில், பல சிரமங்கள் பட்டுக்கொண்டிருந்த காலத்தில், நம் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டால் என்னென்ன செய்ய வேண்டும், எந்த முறையில் மக்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று இந்த நாட்டை ஒரு உயர்ந்த நாடாக ஆக்க முடியும் என்ற அடிப்படையில் அப்பொழுது போடப்பட்ட திட்டங்கள்தான் இப்பொழுது

[Sri R. Chidambara Barathi] [10th November 1961

இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக நடைமுறையில் செயலாக்கப்பட்டு வருகின்றன. அப்படித் திட்டங்களை நிறைவேற்றுவதில், நாங்கள் உங்களைக் காட்டிலும் அதிகமான உணர்ச்சியும், பொறுப்பும் கொண்டிருக்கிறோம். ஆயிரம் கோடி ரூபாய் இல்லை, அதற்கு மேல் 5,000 கோடி அல்லது 10,000 கோடி ரூபாய் என்று நாட்டிற்காக, மக்களுடைய நன்மைக்காகச் செலவு செய்ய விரும்புகிறோம். ஆனால் 1,000 கோடி ரூபாய் செலவழித்தால், இன்னும் ஐந்தாண்டுகளில் அதிலிருந்து 1,500 கோடி ரூபாய் வருமானம் வருமா என்பதை யோசித்து நாங்கள் திட்டங்கள் போட்டு வருகிறோம். இதை நீங்கள் புரிந்துகொள்ளாவிட்டாலும், மக்கள் புரிந்துகொண்டுள்ளார்கள்.

ஒரு விஷயத்தை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். வைகை நதியின் இரு கரையிலும் இரண்டு வாய்க்கால்கள் வெட்டி அந்த வாய்க்காலிலிருந்து கண்மாய்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் கால்களுக்கு ஷட்டர்ஸ் கட்டி பாசன வசதிக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்ற ப்ரப்போசல் இருந்தது. முதல் சலுகையான இதை மூன்றாவது திட்ட ஆரம்ப காலத்திலேயே செய்வது என்று இருந்தது. இந்தத் திட்டம் இந்தச் சபையில் முதலில் ப்ரபோஸலாக வைக்கப்பட்ட புத்தகத்தில் அச்சடித்தும் கொடுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது வந்துள்ள இறுதியான மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இது காணப்படவில்லை. வைகை என்ற பெயரையே காணோம். ஆனால், மொத்தத்தில் செலவழியும் ரூபாயில் இந்தத் திட்டமும் சேர்க்கப்பட்டு இருக்கலாம். ஆனால், அது இந்தப் புத்தகத்தில் இல்லாததால், அதைக் குறிப்பிட்டேன். அநேகம் கோடி ரூபாய்கள் செலவில் பல திட்டங்கள் போடலாம். ஆனால், இந்த வைகைக்கால் திட்டம், சுலபமாகச் செய்வதற்கு இயற்கையாக அமைந்திருப்பது. இதைச் செய்தால் தண்ணீர் வீணாக்காமலும் வெள்ளப் பெருக்குக் காலத்தில் சேதமில்லாமல் தடுப்பாகவும் விவசாயத்திற்கு உதவி செய்யக் கூடியது. ஏற்கனவே வைகை அணைக்கட்டு கட்டியாகிவிட்டது. பத்து கோடி ரூபாய் செலவில் அணைகள் 20 ஆயிரம் ஏக்கர் சாகுபடிக்குக் கொண்டுவரப்படுகின்ற அவசியம்தான். அதிலிருந்து இரண்டு வாய்க்கால்கள் கொண்டுபோனால், வைகைக்குப் பாத்தியப்பட்ட தண்ணீரிலிருந்து குறைந்தது 1¼ லட்சம் ஏக்கராவுக்குப் பாசனம் கிடைக்கும் என்று நிபுணர்கள் சொல்லி இருக்கிறார்கள். அது பொது மக்கள் சார்பாக சட்டசபையிலும் கேட்டுக்கொள்ளப்பட்டு, சர்க்காராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. அதிகாரிகள் நன்கு ஆராய்ச்சி செய்து, சர்வே செய்து, எஸ்டிமேட்டும் சிந்தித்துப் போட்ட திட்டம் அது. அப்படி ஏற்றுக்கொண்ட திட்டத்தை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒரு மூன்று நான்கு கோடி ரூபாய்ச் செலவில் செய்தால், 1¼ லட்சம் ஏக்கரா நிலங்கள் விவசாயத்திற்கு வர ஏதுவாக இருக்கும். அதை இந்தத் திட்ட கால முதலிலேயே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடிக்கிறேன். இந்தச் சந்தர்ப்பம் கொடுத்த தலைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

10th November 1961]

TEMPORARY CHAIRMAN (SRI N. S. RAMALINGAM): கனம் அங்கத்தினர் எதிர்க் கட்சிகளைக் குறித்துச் சொல்லும் போது' "நீங்கள், நீங்கள்" என்று சொல்லுவது சரியில்லை. அப்படிக் குறிப்பிடக் கூடாது. சபைத் தலைவர் மூலமாகத்தான் பேசவேண்டும். நேரடியாகப் பேசுவது சரியாகாது என்று சொல்லிக்கொள்கிறேன். பேசும்போது நடுவில் குறுக்கிட வேண்டாம் என்று காத்திருந்தேன்.

SRI S. M. ANNAMALAI: 'சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சட்ட மன்றத்தின் முன்னால் வைத்திருக்கும் நம் தமிழ் நாட்டு மூன்றாவது திட்டத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இதே சட்ட மன்றத்தின் முன்னால், "ட்ராப்ட் அவுட்லைன்" என்று ஒரு புத்தகம் முன்பு வைக்கப்பட்டது; அதையும் இந்த மன்றம் விவாதித்தது. அன்றைக்கு வைக்கப்பட்ட புத்தகத்தின்படி நம் மாநிலத்திற்கு வேண்டியிருந்த தொகை 400 கோடி ரூபாய். ஆனால் இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கும் புத்தகத்தின்படி, இந்த மூன்றாவது திட்டம் குறைக்கப்பட்டு, ஏறத்தாழ 291 கோடி ரூபாய் செலவழக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "ட்ராப்ட் அவுட்லைன்" Draft Outline" விவாதத்தில் இருக்கும்போது, அமைச்சரவர்களே சொன்னார்கள், மாநில சர்க்கார்களுக்கு ஒதுக்கும் தொகை 2,000 கோடி என்றால், நம் மாநிலத்திற்கு 189 கோடியாகச் செலவழித்தோம் இரண்டாவது திட்ட காலத்தில் என்று. இன்றைக்கு இந்த மூன்றாவது திட்டத்தில் மாநில சர்க்கார்களுக்கு 3,250 . கோடி என்று வைத்துக் கொண்டால், நம் மாநிலத்திற்கு 350-லிருந்து 365 கோடி வரை கிடைக்கலாம் என்றும் சொன்னார்கள். இன்றைக்கு பார்க்கும்போது, மாநில சர்க்கார்களுக்காக மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கும் தொகை 3,650 கோடியாக உயர்ந்திருந்தும், நம் மாநிலத்திற்கு 291 கோடி அளவில்தான் கிடைத்திருக்கிறது. இதிலேயும் மத்திய சர்க்காரிலிருந்து 191 கோடிதான் நமக்குக் கிடைக்கும். மீதமுள்ள 100 கோடி ரூபாயையும் மாநில சர்க்கார் எந்த எந்த வகையில் தேடப்போகிறார்கள் என்பதையும் இந்தப் புத்தகத்தில் அமைச்சரவர்கள் சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். எந்த வகையில் நிறைவேற்றப் போகிறோம், . "What are the resources" என்று சொல்லப்படவில்லை. சில அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும் காலங்களில், 40 கோடி வரை வரி போட்டுத்தான் செய்யப்போகிறோம் என்று சொல்வதைப் பார்த்தால், ஒரே குழப்பமாக இருக்கிறது. இன்றைக்கு பண வீக்கம் அதிகமாக இருக்கிறது; விலைவாசிகளும் மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே போகிறது. இந்த நிலையில் எந்த அளவுக்கு மக்களின் வாங்கும் சக்தி இருக்கிறது என்று சர்க்கார் பரிசீலனை செய்ய வேண்டும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றியான பிறகும், கிராமப் புற மக்களின் நிலை என்ன, அவர்கள் அடைந்த பலன் என்ன என்று ஒரு கமிட்டியையாவது நியமித்து ஆராய்ச்சி செய்து பார்த்திருந்தால், அதன் பலாபலன்கள் தெரிந்திருக்கும். 1950-51-ல் இருந்ததை விட இன்றைக்கு இரண்டு திட்டங்கள் நிறை

[Sri S. M. Annamalai] [10th November 1961

வேற்றியான பிறகும் கிராமப்புற மக்களின் Per-capita income மேலும் குறைந்திருக்கிறதே தவிர உயரவில்லை. இதிலிருந்து கிராமப் புறங்களில் திட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேறி யிருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

இதே போலத்தான் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டமும். இதிலே மத்திய சர்க்கார் திட்டம் என்றும், மாநில சர்க்கார் திட்டம் என்றும், இன்னும் தனியார் திட்டம் என்றும் மூன்று விதத்தில் இதை நிறைவேற்றப் போகிறார்கள். இதிலே மத்திய சர்க்கார் திட்டங்கள் என்னென்ன என்று குறிப்பிட்டிருந்தால், நலமாக இருக்கும். மாநில சர்க்கார் திட்டங்கள் பொறுத்த வரையில், இந்தச் சட்ட மன்றத்திலேயே ஐந்து பிரேரணைகளை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம். அவற்றில் மத்திய சர்க்கார் எதை எதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள், எதை எதை புறக்கணித்திருக்கிறார்கள் என்று விவரம் கொடுத்திருந்தால் நலமாக இருக்கும். நன்றாக விளங்கியிருக்கும். "Price Policy" அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றன. அதைக் கட்டுப்படுத்த, "Price Policy" என்று மத்திய சர்க்காரால் திட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநில சர்க்கார் அம்மாதிரி கட்டுப்பாடு செய்யப் போகிறார்களா, அல்லது உணவுப் பண்டங்களின் விலைகள் ஏறிக்கொண்டேதான் போகும் என்று விட்டுக்கொண்டே இருக்கப் போகிறார்களா? இந்த மூன்றாவது திட்டத்திலும், விலை ஏற்றத்தை கண்காணிக்காமல் விட்டுவிடப் போகிறார்களா என்பதை அமைச்சரவர்கள் தன் பதிலில் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நேற்று பேசும்போது அமைச்சரவர்கள் சொன்னார்கள், தனியார் துறையும் பொதுத் துறையும் ஒன்றோடொன்று சேர்ந்து இயங்கிக்கொண்டே போக வேண்டும், இரட்டை மாட்டு வண்டி போல என்று சொன்னார்கள். ஏன், இரயில் வண்டி, ஆகாய விமானம் என்று சொல்லக் கூடாது? (கனம் ஸ்ரீ. ஸி. சுப்பிரமணியம்: ஆகாய விமானம் என்றாலும், இரண்டு ப்ரொபெல்லர்கள் போல்!) இரயில் வண்டி வேகத்தில் என்றாவது சொல்லக் கூடாதா? இரட்டை மாட்டு வண்டி வேகத்தில்தானா. எதற்காகச் சேர்ந்து இயங்க வேண்டும்? இதைப் பார்க்கும்போது, இந்த நாட்டில் சமதர்மக் கொள்கை மேலும் எப்படிப் பின்பற்றப்படும் என்றுதான் புரிந்துக்கொள்ள முடியவில்லை. சமதர்மக் கொள்கை வளர வேண்டுமானால் தனியார் துறை குறைய வேண்டும், சர்க்கார் துறை அல்லது பொதுத் துறை அதிகரிக்க வேண்டும். தனியார் துறைக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 45·26 கோடி ரூபாய் என்றால், இரண்டாவது திட்டத்தில் 184 கோடி முதலீடு செய்திருக்கிறார்கள். ஆகவே, இது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போய், மேலும் மேலும் தனியார் துறை வளர்ந்துகொண்டே வருகிறது. இதைப் பார்க்கும்போது எந்த அளவில் சமதர்மக் கொள்கை கையாளப்படுகிறது அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்பதை நான் சந்தேகிக்கும் அளவில்தான் இருக்கிறேன்.

10th November 1961] [Sri S. M. Annamalai]

இந்த புத்தகத்தில் விவசாயத் துறைக்கு ஏறத்தாழ 11 கோடி ரூபாய் என்றிருக்கிறது. முதலில் புத்தகத்தின் புள்ளி விவரப்படி வேளாண்மைக்கு 27 கோடி என்று இருந்தது. கடைசியில் இப்பொழுது இந்தப் புத்தகப்படி பார்த்தால், அது 11.07 கோடிதான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, சொன்னதில் 45 பர்செண்ட்தான் செலவழிக்கப் போகிறார்கள் என்று ஆகிறது. இப்படிப் பாதியளவுக்கூட இல்லாமல் முக்கியமான திட்டங்களைக் குறைத்துக்கொண்டே போவதைப் பார்த்தால், மூன்றாவது திட்டம் நிறைவேற்றப்பட்டும் என்ன பிரயோசனம் என்று சந்தேகிக்கும் அளவில்தான் இருக்கிறேன்.

நேற்றைக்கு அமைச்சரவர்கள் இதே புத்தகத்தைத் துருவித் துருவிப் படிகக வேண்டும் என்று சொன்னார்கள். படித்துப் பார்த்தால், இந்தப் புத்தகத்திற்கும், முன்னால் கொடுத்த புத்தகத்திற்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது என்று தெளிவாகிறது. எதை நம்புவது என்றே புரியவில்லை.

அதேபோலத்தான், வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரை அது தொழில் துறையில் மிகவும் பின் தங்கி இருக்கிறது என்பது தெரியும். சென்ற ஆண்டுகூட, The Economic invesigati Team என்று ஒரு Team" மத்திய சர்க்காரிலிருந்து வந்தது; வட ஆற்காடு மாவட்டத்தை சுற்றிப் பார்த்து ஒரு ரிப்போர்ட் அனுப்பியிருக்கிறது. 1961-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 27-ம் தேதி அந்த ரிப்போர்ட்டின் நகல்கூட எனக்குக் கிடைத்தது. அந்த ரிப்போர்டைப் பார்க்கும்போது, மற்ற மாவட்டங்களைவிட வட ஆற்காடு மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின் தங்கியிருக்கிறது என்ற வகையில் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி நாங்கள் பல முறை இந்தச் சட்ட மன்றத்தில் வற்புறுத்தினால், இந்தப் புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு, அதற்குக் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாமல் தட்டிக் கழித்து விடுகிறார். ஆகவே, வட ஆற்காடு மாவட்டம் பிற்போக்காக இருப்பதால் அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த அறிக்கையைப் பார்க்கும்போது வட ஆற்காடு எவ்வளவு பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது என்பது தெரிய வரும். அது மிகவும் பின் தங்கி இருக்கக்கூடிய காரணத்தால் வருங் காலத்தில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தொழில் துறையில் அது ரொம்பவும் பின் தங்கி இருப்பதால் தொழில் துறையில் பல அபிவிருத்தி வேலைகளை எடுத்துச் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் தொழில்களை ஆரம்பிப்பதற்கு அங்கு வேண்டிய வாய்ப்பு இருக்கிறது. அது பற்றி அந்த அறிக்கையில் நன்றாக விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட வட ஆற்காடு மாவட்டத்தில் தொழில் துறையில் மேலும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்று நான் சொல்லிக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

[10th November 1961

SRI A. MARIAPPAN : கனம் தலைவர் அவர்களே, கனம், நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திலுள்ள கருத்து வேறுபாடுகளைப்பற்றி நேற்று விளக்கம் கூறியதைப்பற்றி வரவேற்று அதற்கு என் நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் அதிகமான நூற்பு ஆலைகள் இருக்கிற காரணத்தால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும் அந்த வகையில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்ற காரணத்தால் அதிகப்படியான ஸ்பிண்டில்களை ஒதுக்கவில்லை. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவாவது தமிழ் நாட்டிற்கு அதிகப்படியான ஸ்பிண்டில்கள் இவ்வளவு பர்செண்ட் என்று கிடைப்பதற்கு இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரிடம் முயற்சி செய்யவேண்டும். குறிப்பாக தமிழ் நாட்டில்தான் அதிகப்படியான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் இங்கு அதிகப்படியான நெசவாளர்கள் இருந்த காரணத்தாலும் கைத்தறி அந்தக் காலம் முதற்கொண்டு நல்ல அபிவிருத்தி அடைந்து வந்ததன் காரணமாகவும் குறைவாக இங்கு ஒதுங்கி இருக்கிறார்கள். ஆகவே, அதை அதிகப் படுத்த முயற்சிகள் எடுத்துகொள்ள வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இன்னும் அதிகப்படியாக ஒதுக்குவதறகு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எதிர் கட்சியினரைப் பொறுத்த வரைக்கும் அவர்கள் அடிக்கடி ஊழல்களைப்பற்றியும் குறைகளைப்பற்றியும் தான் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஊழல்களும் குறைகளும் எங்கே இருக்கிறது என்று பார்த்தால் அநேகமாக திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நிர்வகிக்கக்கூடிய ஸ்தாபனங்களில்தான் அதிகப்படியான ஊழல்களும் குறைகளும் இருப்பதாகத் தெரிய வருகிறது. தமிழ் நாட்டில் ஒன்றிரண்டு ஸ்தாபனங்கள் அவர்களிடம் இருந்தாலும் அங்கு திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் நிர்வாகம் செய்தால் அங்குதான் அதிகப்படியான ஊழல்கள் இருக்கின்றன. அவர்கள் செய்யக்கூடிய ஊழல்கள் போல வேறு யாரும் செய்வதாகத் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எங்கேயெல்லாம் ஸ்தாபனங்களை நடத்துகிறார்களோ அங்குதான் இப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெறுகின்றன. சமீப காலத்தில்கூட ஒன்று நடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் நடத்தக்கூடிய கூட்டுறவு சங்கத்தில் 47 நெம்பர் கேட்டபோது அங்கு கிடைக்கவில்லை. அங்கு கொடுக்கப்பட்டதெல்லாம் தனிப்பட்ட முறையில் விற்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வந்தது. ஆகவே, அவர்களே ஊழல்களையும் தவறுகளையும் செய்துவிட்டு எங்கு பார்த்தாலும் ஊழலும் தவறுகளும் நடக்கின்றன என்று சொல்லிச் சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். அவர்களேதான் ஊழல், ஊழல் என்று பேசுகிறார்கள். அதே மாதிரித்தான் பஸ்போக்குவரத்தை பஸ் தொழிலை தேசிய மய

10th November 1961] [Sri A. Mariappan]

மாக்க வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். அவர்கள் தான் இதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். சமீபத்தில் சேலத்தில் கூட்டுறவு சங்கக் கூட்டம் நடைபெற்றபோது அங்குள்ள உபதலைவர் ஒருவர் சொன்னார், அதாவது திராவிட முன்னேற்றக் கழக தலைவர் சொன்னதாகச் சொன்னார், பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்க வேண்டும் என்பது திராவிடக் கழகத்திற்கு இஷ்டம் இல்லை என்றும் பொது மக்களிடம் பிரசாரம் செய்வதற்காகத்தான் அப்படிப் பேசப்படுகிறது என்றும் சொன்னதாகச் சொன்னார். இப்படியே அந்தக் கூட்டத்திலும் அறிவித்தார்கள். இப்படி மக்களிடம் சொல்லி ஏமாற்றி வருகிறார்கள். இப்படிச் சொல்லி வோட்டு வாங்க வேண்டும் என்று சொல்லுவதாகத் தெரிய வருகிறது நான் இதைச் சொல்லும்போது திருவண்ணாமலை அங்கத்தினர் அவர்கள் சிரிக்கிறார், அதாவது நான் சொல்வது தவறு என்று நினைத்துக் கொண்டு. நான் சொல்வதில் தவறே இல்லை, இதை நான் நிரூபிக்கத் தயாராகவும் இருக்கிறேன். பஸ் போக்கு போக்குவரத்தை தேசியமயமாக்க வேண்டுமென்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது. வெறும் பிரசாரத்திற்காகத்தான் அப்படிச் சொல்லி வருகிறார்கள். அவர்களுக்கு அதில் பொறுப்பு இல்லை, ஏதோ வேண்டுமென்று அழகாகச் சொல்லி விடுகிறார்கள். ஆகவே, இம்மாதிரி அவர்கள் இங்கு பேசுவதற்கும் வெளியில் பேசுவதற்கும் விரோதம் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் பெங்களூர் ரயில் பாதை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. அதற்காக மாகாண அரசாங்கத்தைப் பாராட்டுவதுடன் அவர்கள் அதை வெகு வேகமாக நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும் சேலம் ஜில்லா மிகவும் பெரிய ஜில்லா, சுமார் 36 லட்சம் ஜனத்தொகை கொண்ட ஜில்லா. அங்கு ஒரே ஒரு கல்லூரிதான் இருக்கிறது. அதனால் அங்குள்ள மாணவர்கள் வேறு ஜில்லாக்களுக்குச் சென்று படிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, சேலத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கல்லூரியை அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு தமிழ் நாடு அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் குடி தண்ணீர் வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சேலம் நகரசபை, இன்னும் ராசிபுரம், திருச்செங்கோடு, நாமக்கல் போன்ற பகுதிகளுக்குக் குடி தண்ணீர் வசதி செய்யத் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சேலம் நகரசபையைப் பொறுத்த வரைக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் எண்பது லட்சம் ரூபாய்க்குக் குடி தண்ணீர் வசதிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன். அதற்கு அரசாங்கத்தைப் பாராட்டு

[10th November 1961

SRI A. MARIAPPAN : கனம் தலைவர் அவர்களே, கனம், நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திலுள்ள கருத்து வேறுபாடுகளைப்பற்றி நேற்று விளக்கம் கூறியதைப்பற்றி வரவேற்று அதற்கு என் நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் அதிகமான நூற்பு ஆலைகள் இருக்கிற காரணத்தால் தமிழ் நாட்டைப் பொறுத்த வரைக்கும் அந்த வகையில் முன்னேற்றமடைந்திருக்கிறது என்ற காரணத்தால் அதிகப்படியான ஸ்பின்டில்களை ஒதுக்கவில்லை. ஆகவே, கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவாவது தமிழ் நாட்டிற்கு அதிகப்படியான ஸ்பிண்டில்கள் இவ்வளவு பர்செண்ட் என்று கிடைப்பதற்கு இந்தச் சர்க்கார் மத்திய சர்க்காரிடம் முயற்சி செய்யவேண்டும். குறிப்பாக தமிழ் நாட்டில்தான் அதிகப்படியான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். வெள்ளைக்காரன் இருந்த காலத்தில் இங்கு அதிகப்படியான நெசவாளர்கள் இருந்த காரணத்தாலும் கைத்தறி அந்தக் காலம் முதற்கொண்டு நல்ல அபிவிருத்தி அடைந்து வந்ததன் காரணமாகவும் குறைவாக இங்கு ஒதுங்கி இருக்கிறார்கள். ஆகவே, அதை அதிகப் படுத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இன்னும் அதிகப்படியாக ஒதுக்குவதறகு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எதிர் கட்சியினரைப் பொறுத்த வரைக்கும் அவர்கள் அடிக்கடி ஊழல்களைப்பற்றியும் குறைகளைப்பற்றியும் தான் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனால் ஊழல்களும் குறைகளும் எங்கே இருக்கிறது என்று பார்த்தால் அநேகமாக திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நிர்வகிக்கக்கூடிய ஸ்தாபனங்களில்தான் அதிகப்படியான ஊழல்களும் குறைகளும் இருப்பதாகத் தெரிய வருகிறது. தமிழ் நாட்டில் ஒன்றிரண்டு ஸ்தாபனங்கள் அவர்களிடம் இருந்தாலும் அங்கு திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் நிர்வாகம் செய்தால் அங்குதான் அதிகப்படியான ஊழல்கள் இருக்கின்றன. அவர்கள் செய்யக்கூடிய ஊழல்கள் போல வேறு யாரும் செய்வதாகத் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எங்கேயெல்லாம் ஸ்தாபனங்களை நடத்துகிறார்களோ அங்குதான் இப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெறுகின்றன. சமீப காலத்தில்கூட ஒன்று நடந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் நடத்தக்கூடிய கூட்டுறவு சங்கத்தில் 47 நெம்பர் கேட்டபோது அங்கு கிடைக்கவில்லை. அங்கு கொடுக்கப்பட்டதெல்லாம் தனிப்பட்ட முறையில் விற்கப்பட்டிருக்கிறது என்று தெரிய வந்தது. ஆகவே, அவர்களே ஊழல்களையும் தவறுகளையும் செய்துவிட்டு எங்கு பார்த்தாலும் ஊழலும் தவறுகளும் நடக்கின்றன என்று சொல்லிச் சொல்லி மக்களை ஏமாற்றி வருகிறார்கள். அவர்களேதான் ஊழல், ஊழல் என்று பேசுகிறார்கள். அதே மாதிரித்தான் பஸ்போக்குவரத்தை பஸ் தொழிலை தேசிய மய

10th November 1961] [Sri A. Mariappan]

மாக்க வேண்டுமென்று சொல்லி வருகிறார்கள். அவர்கள் தான் இதைப்பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள். சமீபத்தில் சேலத்தில் கூட்டுறவு சங்கக் கூட்டம் நடைபெற்றபோது அங்குள்ள உபதலைவர் ஒருவர் சொன்னார், அதாவது திராவிட முன்னேற்றக் கழக தலைவர் சொன்னதாகச் சொன்னார், பஸ் போக்குவரத்தை தேசிய மயமாக்க வேண்டும் என்பது திராவிடக் கழகத்திற்கு இஷ்டம் இல்லை என்றும் பொது மக்களிடம் பிரசாரம் செய்வதற்காகத்தான் அப்படிப் பேசப்படுகிறது என்றும் சொன்னதாகச் சொன்னார். இப்படியே அந்தக் கூட்டத்திலும் அறிவித்தார்கள். இப்படி மக்களிடம் சொல்லி ஏமாற்றி வருகிறார்கள். இப்படிச் சொல்லி வோட்டு வாங்க வேண்டும் என்று சொல்லுவதாகத் தெரிய வருகிறது நான் இதைச் சொல்லும்போது திருவண்ணாமலை அங்கத்தினர் அவர்கள் சிரிக்கிறார், அதாவது நான் சொல்வது தவறு என்று நினைத்துக் கொண்டு. நான் சொல்வதில் தவறே இல்லை, இதை நான் நிரூபிக்கத் தயாராகவும் இருக்கிறேன். பஸ் போக்கு போக்குவரத்தை தேசீய மயமாக்க வேண்டுமென்ற எண்ணம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது. வெறும் பிரசாரத்திற்காகத்தான் அப்படிச் சொல்லி வருகிறார்கள். அவர்களுக்கு அதில் பொறுப்பு இல்லை, ஏதோ வேண்டுமென்று அழகாகச் சொல்லி விடுகிறார்கள். ஆகவே, இம்மாதிரி அவர்கள் இங்கு பேசுவதற்கும் வெளியில் பேசுவதற்கும் விரோதம் இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சேலம் பெங்களூர் ரயில் பாதை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. அதற்காக மாகாண அரசாங்கத்தைப் பாராட்டுவதுடன் அவர்கள் அதை வெகு வேகமாக நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

போட்டு விடுங்கள். 1930-ம் வருஷத்திய ஸிலபஸ் அப்படியே வர வேண்டுமென்று சொல்லுங்கள்—வேலை சுருக்கமாக முடிந்து விடும். முதலில் இதை ஃபர்ஸ்ட் ஃபாரமிலிருந்து ஆரம்பிக்கலாம். இப்போது கடுமையான படிப்பு இல்லை. அதுதான் காரணம். வேறு காரணம் ஒன்றும் கிடையாது. பையன்கள் படிக்கத் தயாராக இருக்கிறார்கள். பழைய திட்டத்திற்கு மறுபடியும் போனால் தேவலை. யூனிவர்ஸிட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். அதுவும் அப்படித்தான். வட இந்திய யூனிவர்ஸிட்டிகளை விட நம் யூனிவர்ஸிட்டி முன்னணியில் நிற்கலாம். மதராஸ் யூனிவர்ஸிட்டியின் தரம் 100-க்கு 20 பங்குதான் குறைந்திருக்கிறது. வடக்கே 50 பங்கு குறைந்திருக்கிறது என்று ஸாடிஸ்ஃபேக்ஷன் இருக்கலாம். வர வர தரம் உயர வேண்டும். இப்போது அதனுடைய தரம் 120% ஆவது இருக்கவேண்டும். எத்தனையோ இடங்களில் திரு. லட்சுமணசுவாமி முதலியாரைப் பற்றி புகழ்ந்து பேசுகிறோம், நம்முடைய யூனிவர்ஸிட்டி தரத்திலே நாட்டிலேயே முதலாவதாக இருக்கிறது என்று சொல்லுகிறோம். எம்.ஏ. வாத்தியாரை வசனம் என்ன படித்திருக்கிறீர்கள் என்று கேட்டால் அவர் என்ன என்று தெரியாமல் விழிக்கிறார். தமிழ் எம்.ஏ. வாத்தியாரைப்பற்றித்தான் சொல்லுகிறேன். பிறகு டமில் ப்ரோஸ் என்று சொன்னால் தான் தெரியும். எம்.ஏ. படிப்பு இப்படி இருக்கிறது. வித்வான் படிப்பு படித்தவர்கள் தான் எம்.ஓ.எல். கிளாஸுக்குப் போகவேண்டும் என்று இருக்கவேண்டும். ஸ்டாண்டர்ட் குறைந்து போய் விட்டது என்பது இன்றைக்கு ப்ளாட்ஃபார்ம் ஸ்பீச் ஆகி விட்டது. இதைப்பற்றி மணிக்கணக்காகப் பேசலாம். இதோடு நிறுத்திக் கொள்கிறேன். (ஸ்ரீ. கே. விநாயகம்: மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ரக்ஷன் . . . ?) மீடியம் ஆஃப் இன்ஸ்ட்ரக்ஷனைப் பொறுத்த வரையில் செனெட் ஹவுஸில் இந்த சபை கூடிய போது 1937-ம் வருஷம் கம்பல்ஸரி ஹிந்தி வந்தபோது அப்போது லீடர் ஆஃப் தி அப்போஸிஷனாக இருந்த நான் அப்போதே எனது கருத்தை சொல்லியிருக்கிறேன்.

'I oppose compulsory introduction of Hindi, but I welcome introduction of Hindi on a voluntary basis which has better chances of success in this part of the country and in the same breath I demand retention of English for all time to come.'

இன்றைக்கு நான் சொல்லவில்லை. இங்கிலீஷ் மீடியம் வேண்டுமென்று எப்போதுமே சொல்லத் தயங்கியதில்லை. 25 வருஷத்திற்
கொடுத்திரு இங்கிலீஷ் வேண்டும். எஞ்சினீயர்கள், டாக்டர்கள் ஆகிய
செய்து கொ ில் இங்கிலீஷ் மீடியம் கட்டாயம் வேண்டும். ஹிந்தி
தரம் இன்னு ள் வருவதற்கே 10 வருஷங்கள் ஆகும். இங்கிலீஷை
காலேஜ் படி தான் தமிழ் வரும் என்று சொல்லக்கூடிய கட்சி
கால முதலில் நேரு சொல்லி விட்டார், டெக்னிக்கல்
துறைகள் டுக்கும், எஞ்சினீயரிங் எடுகேஷனுக்கும் இங்கிலீஷ்
புஸ்தகங்க று. பிறகு சமீபத்திலே யூனிவர்ஸிட்டி எடுகேஷனுக்
ஒழித்தால் ள வேண்டுமென்று சொல்லி விட்டார். அதன் பிறகு
இருக்கிறது ன் காங்கிரஸ்காரர்கள் இங்கிலீஷ் வேண்டுமென்று
எடுகேஷனுக்கு ஆ நமது கல்வி மந்திரியும் இங்கிலீஷ் மீடியம் பற்றி
வேண்டுமென்
கும் இங்கிலீஷ்

ஆட்சேபணை செய்யவில்லை. ஒரு இடத்தில் அவரே சொல்லியிருக்கிறார். இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்க நல்ல உபாத்தியாயர்கள் இருந்தால் ஸ்பெஷல் கிராண்டு கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். இங்கிலாந்திலேயே இங்கிலீஷ் ஸ்டாண்டர்ட் குறைந்து விட்டது என்று அவர்கள் வருத்தப்படுகிறார்கள். இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்க இங்கே ஸ்பெஷலாக வெள்ளைக்காரர்கள் வரப்போவதில்லை. 55 வயதுக்கு மேல் 70 வயது வரை உள்ளவர்கள் 1,000 அல்லது 500 பேர்கள் இருக்கிறார்கள். இவர்களை ப்ரெஸிடென்ஸி காலேஜ் உட்பட நியமித்து எல்லா ஹைஸ்கூல்களிலும் சொல்லித் தர ஏற்பாடு செய்து அவர்களை எம்ப்ளாய் செய்யவேண்டும். ஒவ்வொரு ஹைஸ்கூலிலும் இங்கிலீஷ் மீடியம் செக்ஷன் ஒன்றாவது நிச்சயமாக இருக்க வேண்டும். ஹிந்திக்காக அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கட்டும்—அதைப் பற்றி நாம் கவலைப் படவேண்டியதில்லை. இதிலே இன்னொன்று வரப் போகிறது, அதுதான் தேவநாகரி ஸ்கிரிப்ட். இனிமேல் தமிழ் முதல் தேவநாகரி ஸ்கிரிப்டில் தான் எழுதவேண்டியிருக்கப் போகிறது. இங்கிலீஷை நாம் எவ்வளவு காப்பாற்றுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தேவநாகரி ஸ்கிரிப்ட் வராமல் இருக்கும். இல்லாவிட்டால் தமிழ் உட்பட எல்லாவற்றையும் தேவநாகரி ஸ்கிரிப்டில் எழுத வேண்டிய நிலைமை ஏற்படும். அமைச்சர் அவர்கள் ரோமன் ஸ்கிரிப்ட் பற்றி சொல்லியிருக்கிறார். இங்கிலீஷ் இல்லாவிட்டால் ரோமன் ஸ்கிரிப்ட் கூட மைனாரிட்டியாக ஆகிப் போகும்—ரோமன் ஸ்கிரிப்ட் கட்சி கூட ஜெயிக்காது என்று பயமாக இருக்கிறது. தேவநாகரி ஸ்கிரிப்டுக்கு 500 பேர்கள் இருந்தால் ரெஸொலூஷன் பாஸ் ஆகிவிடுகிறது. ரெஸொலூஷன் பாஸாகி விட்டால் நாம் என்ன துப்பாக்கியை எடுத்து சுடப் போகிறோமா ?—அது கிடையாது. நான் இதைப் பற்றிப் பேசுவதாகவே இல்லை—கனம் அங்கத்தினர் பேசச் சொன்னதால் இவ்வளவு தூரம் பேசி விட்டேன். நான் இதைப் பற்றி எனது குறிப்பில் கூட எழுதி வைக்கவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர் பயந்து பேசுவதாகச் சொன்னார். தேவநாகரி ஸ்கிரிப்ட் நிச்சயம் ஜெயிக்காது என்று நான் இப்போதே உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRI M. A. MUTHIAH CHETTIAR : இந்த மட்டில் இப்போதைக்கு சந்தோஷம். பிறகு எப்படி ஆகப்போகிறதோ . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் இங்கு இருக்கும் வரையில் நிச்சயமாக வராது என்று சொல்லிக் கொள்கிறேன்.

SRI M. A. MUTHIAH CHETTIAR : அவர்கள் இங்கேயே மந்திரியாக இருக்கப் போவதில்லை. இங்கிருந்து டில்லிக்கு 100 பேர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறோம். அவர்கள் பேசுவதே கிடையாது. டில்லியில் அவர்கள் பேசி இருந்தால் இந்தத் திட்டத்திற்கு நமக்கு கிடைத்திருப்பது 291 கோடியாக இருக்காது, 591 கோடியாக இருந்திருக்கும். நாம் இங்கிருந்து

பசாதவர்களைத் தானே அனுப்பியிருக்கிறோம். (சிரிப்பு) காங்கிரஸ் பார்ட்டி மட்டுமல்ல, எல்லா கட்சிகளும் அப்படித்தான். பேசாமல் இருப்பது தான் முக்கிய கவாலிபிகேஷன். இனிமேலாவது அவர்கள் பேசுவார்கள் என்று நினைக்கிறேன். கனம் மந்திரி அவர்கள் அங்கு போனால் பார்லிமெண்ட் மெம்பர்கள் கூட அவர்களைப் பார்ப்பதில்லை. அவர்களைப் பார்த்து அவர்களுடைய கையை வலுப்படுத்தலாம். அதுவும் செய்வதில்லை.

மற்றபடி அவர்கள் சென்னை நகரைச் சுற்றி ஸாடிலைட் டவுன்ஸ் ஏற்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஸ்லம் க்ளியரன்ஸுக்கு 5 வருஷங்களுக்கு மூன்று கோடி போட்டிருக்கிறார்கள். சென்னை நகரம் மட்டுமல்ல, ஒவ்வொரு ஊரிலும், பஞ்சாயத்து ஏரியாவிலே கூட ஸ்லம் இருக்கிறது. இதை ஒரேயடியாகச் செய்ய முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத் தான் செய்ய வேண்டும். நாம் ஸ்லம் க்ளியரன்ஸ் செய்ய வேண்டும், அதே நேரத்தில் புதுப் புது ஸ்லம்களும் வந்துகொண்டே இருக்கத்தான் செய்யும். ஆகையால் இந்தத் தொகையைக் கூடுதலாக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இதைச் சரிவரப் படிக்கவில்லை, நான் சொல்லுவதில் ஏதாவது தவறுதல் இருந்தால் மன்னிக்க வேண்டும், வெட்டனரி காலேஜ்களை இன்னும் அதிகமாக்க வேண்டும். ஒரு காலேஜ் ஏற்படுத்தப் போகிறார்கள் என்று நினைக்கிறேன். குறைந்தது இரண்டு காலேஜ்களாவது ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக, இந்த
12-30 p.m. அளவுக்கு 290 கோடி ரூபாய் அளவுக்கு கிடைப்பதற்காவது ஏற்பாடு செய்ததுபற்றி உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன். இல்லாவிட்டால் அந்தத் தொகையும் வந்திருக்காது. சண்டை போட்டதால்தான் 290 கோடியாவது கிடைத்தது. இல்லாவிட்டால் முன்பு 180 கோடி, இப்போது 210 கோடி என்றுதான் வந்திருக்கும். இன்னும் இந்த ஐந்தாண்டுக் காலத்திலே இத் தொகையையும் கூடுதலாக்க வேண்டும்.

முக்கியமாக, நாம் பெரிய இர்ரிகேஷன் ஸ்கீம்களைத்தான் போடுகிறோமே தவிர, சின்னச் சின்ன இர்ரிகேஷன் ஸ்கீம்களை எடுத்துச் கொள்வது இல்லை. நான் இதைப்பற்றி பல தடவை எடுத்துச் சொல்லி இருக்கிறேன். எந்தத் தாலுகாவை எடுத்துக் கொண்டாலும், இரண்டு சிறிய மலைகள் அங்கே இருக்கும். இதற்கிடையே உள்ள இடம் ஒரு சிறிய வால் போல் இருக்கும். அங்கே ஒரு அணை கட்டினால், 5,000, 10,000 ஏக்கர்களுக்கு வசதி செய்து கொடுக்க முடியும். இப்போது எல்லா ஜில்லாக்களுக்கும் இர்ரிகேஷன் ஸ்கீம் இருக்கிறது. நான் முந்தி இந்தச் சட்டசபையிலே சொல்லி இருக்கிறபடி, கோதாவரி, கிருஷ்ணா போன்ற நதிகளிலிருந்து தண்ணீரைக் கொண்டுவந்தால், இர்ரிகேஷன் ஸ்கீமை நல்ல முறையில் நிறைவேற்ற முடியும். அதிகப்படியாக உள்ள தண்ணீரைக் கொடுப்பதற்கு ஆந்திராவும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. காவேரி ஸ்கீமை நிறைவேற்றுவதற்காவது மைசூர் ஆட்சேபணை தெரிவித்தது. இப்போது நாம் ஆந்திராவோடு சுமுக

மாக இருப்பதால், இதைச் சீக்கிரத்தில் நிறைவேற்றினால் நல்லது கோதாவரியிலிருந்து கிருஷ்ணாவுக்கு தண்ணீர் விட்டு, கிருஷ்ணாவிலிருந்து பெண்ணாற்றுக்குத் தண்ணீர் விட்டால், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு போன்ற மாவட்டங்களில் நல்ல பயன் ஏற்படும். இதைத் தவிர, சேலமும் உயர்வான இடத்திலே இருப்பதால், அதற்கும் எளிதாகப் பாசன வசதி கிடைத்துவிடும். காவேரி ஸ்கீம் போட்டு, அதோடு கோதாவரி, கிருஷ்ணா ஸ்கீமும் நிறைவேறி, பரம்பிக்குளம் போன்ற ஸ்கீமும் முடிவடைந்து விட்டால், எல்லா ஜில்லாக்களுக்கும் பாசன வசதி நல்ல முறையில் ஏற்பட்டு விடும். இதை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்வது என்பது கஷ்டம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது எடுத்துக்கொண்டு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே முடித்தால் நன்றாக இருக்கும். இந்த அடிப்படையில் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சமயத்திலே இவ்வளவு முயற்சி செய்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ள சர்க்காருக்கு என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* Sri N. S. RAMALINGAM: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டசபை முன்பு வைத்திருக்கக்கூடிய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரவேற்றும், கனம் கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை ஆதரித்தும் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்யத்தில் தேவைகளோ கட்டுக்கு அடங்கவில்லை. ஆனால் வசதிகளோ மிகக் குறைவாக இருக்கிறது. இந்தக் குறைந்த வசதிகளை வைத்துக் கொண்டு, அதிகப் பலன்கள் கொடுக்கக்கூடிய பல திட்டங்களைப் போட்டு, அதிலே முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் வெற்றிகரமாக நடத்தியிருக்கிறோம். இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, நாம் இந்த அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தத் திட்டம் போட்டிருக்கிற காலத்திலே, என் பிராந்தியத்திலே உள்ள சில முக்கியமான குறைகளை எடுத்துக் கூறி, அதற்கு எப்படி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதுபற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நாகப்பட்டினத்திலே 60 டன் உற்பத்தி செய்யக்கூடிய சூப்பர் பாஸ்பேட் உரத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருப்பதற்கு, நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. அதோடு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறேன். நமது நாட்டிலே இப்போது உரம் மிகவும் குறைவாக இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததே. ஆகவே, இம்மாதிரி சூப்பர் பாஸ்பேட் தொழிற்சாலை ஏற்படுத்துவது மிகவும் அவசியம். அதோடுகூட, இப்போது வருகின்ற உரங்கள் எல்லாம்கூட நாகப்பட்டினத்திற்கோ, தஞ்சை ஜில்லாவிலே உள்ள சில இடங்களுக்கோ வரவேண்டுமென்றால், கடலூர், சென்னை ஆகிய இடங்களிலே இறங்கி. அங்கிருந்து தஞ்சை ஜில்லாவுக்குக் கொண்டு

வரப்படுகிறது. அதிலே ரயிலிலே இட நெருக்கடி ஏற்படுகிறது. அதோடுகூட, விவசாயிகளுக்கு விலையும் கூடுதலாகி விடுகிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு, நாகப்பட்டினம் துறைமுகத்தை இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக்கொண்டு அபிவிருத்தி செய்ய வேண்டியது அவசியம். அப்போதுதான் அங்கு உரம் கொண்டு வரப்பட்டு, விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் உரத்தை விநியோகிக்க முடியும். தவிர, ரயில் நெருக்கடியும் குறையும். இன்றைய தினம் செய்தித் தாளில், பிலாயிலிருந்து நாகப்பட்டினம் வரவேண்யடி இரும்புத் துண்டுகள் திருச்சிக்கு பிராட் கேஜ் மூலம் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து நாகப்பட்டினத்திற்கு மீட்டர் கேஜ் மூலம் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. ஆகவே, இதையெல்லாம் தவிர்ப்பதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தூத்துக்குடி துறைமுகத்தைச் சேர்த்துக்கொள்ளும் போது, அதோடு இந்த நாகப்பட்டினம் துறைமுகத்தைப்பற்றியும் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, இன்னும் தஞ்சை ஜில்லா பின்தங்கிய பிரதேசமாக இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் திரு. சீனுவாச அய்யர் அவர்கள் சொன்னபடி தஞ்சை ஜில்லா என்றாலே ஒரு தப்பு அபிப்ராயம் இப்போது இருந்து வருகிறது. அது எல்லா வளம் பொருந்திய ஜில்லா, அங்கே செழுமை கூத்தாடுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படி முன்பு ஒரு காலத்தில் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அது மிகவும் செழுமை குறைந்து காணப்படுகிறது. அதிலும் பல பின் தங்கிய பகுதிகள் இருக்கின்றன. புதுக்கோட்டை, ராமநாதபுரத்தோடு ஒப்பிடக்கூடிய வகையில் பல பகுதி இருக்கிறது. குறிப்பாக, கடற்கரை ஓரத்தைப் பார்த்தால் மிகவும் மோசமாக இருக்கிறது. கீழ்க் கடற்கரை செல்லும் சாலையை முதலில் எடுத்துக் கொண்டு, அதை நேஷனல் ஹைவேஸ் ரோடாகப் போடவேண்டும். இந்த ரோடு சென்னையிலிருந்து, ராமேஸ்வரம் வரையில் 6 ஜில்லாக்களில் செல்கிறது. அதிலும் வெள்ளக் காலங்களில் இந்தப் பகுதியிலே உள்ளவர்கள் நீந்தி வரவேண்டியிருக்கிறது. வேறு ரோடு வசதிகளே இங்கு கிடையாது. ரயில் வசதியும் கிடையாது. ஆகவே, கீழ்க் கடற்கரைச் சாலைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நல்ல ரோடு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சென்ற வருஷம் இதே நவம்பர் மாதத்திலே வெள்ளம் வந்தது. வெள்ளம் எடுத்தபோது, மக்கள் ஊழியர்களான மராமத்து இலாகா மந்திரி அவர்களும், மின்சார இலாகா மந்திரி அவர்களும் அங்கு வந்து பார்த்தார்கள். அங்கு காரப்பிடாகை, சடயல் கோட்டகம் என்று ஊர் இருக்கிறது. அதன் நான்கு பக்கமும் நீர். வெள்ளம் வந்தபோது மக்கள் திருத்துறைப் பூண்டிக்கு நீந்தி வரவேண்டி நேர்ந்தது. அந்த இடத்திலே எல்லாம் போக்கு வரத்துக்கு உகந்த முறையிலே பாலம் கட்ட வேண்டும். அதோடு ரோடு வசதிகளும் செய்யலாம். இந்த

இரண்டும் செய்தால், அந்தப் பகுதியில் போக்குவரத்து வசதி நல்லமுறையில் அமையும். அதற்கானத் திட்டம் போடவேண்டும். இதையும், இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக் கொண்டு, பாலமாவது, ரோட்டு வசதியாவது செய்து கொடுத்தால், அந்தப் பகுதியிலே உள்ள ஏழை மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, இதையும் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு, கடல் ஓரப் பகுதியில் நீர்ப்பாசன வசதியும் சரியான முறையில் இல்லாமல் மானாவாரியாக இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், அங்கு நீர்ப்பாசன வசதிக்கு இடமிருக்கிறது. இப்போது வீணாகக் கடலுக்குப் போகும் நீரைத் தேக்கி, குறைந்த செலவில் அதாவது 5, 6 லட்சம் ரூபாய் செலவில் நீர்ப்பாசன வசதி செய்வதற்கு வசதி இருக்கிறது. அதற்குப் பலன் விரைவில் கிடைக்கக்கூடிய சாத்தியமும் இருக்கிறது. இந்தத் திட்டமானது 1958-லிருந்து அரசாங்கத்திலே பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதாவது வேளாங்கண்ணி வடக்கு பொய்யூர், தெற்கு பொய்யூர், திருத்துறைப்பூண்டி, விழுந்த மாவடு போன்ற இடங்களில் வசதி இருக்கிறது, இதைத் தவிர, இன்னும் பல இடங்களில் பல திட்டங்கள் பரிசீலனையில் இருந்து வருகிறது. அவைகளையெல்லாம் இந்தத் திட்டத்திலேயே எடுத்துக் கொள்வதற்கு முக்கியத்துவம் கொடுத்து, நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் தஞ்சை ஜில்லாவுக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டால், ஏதோ வெளிச்சம் போட்டுக் கொள்வதற்காக மின்சாரம் கேட்பதாக நினைத்துக் கொண்டு, அங்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிறது. ஆனால் அந்தக் கடற்கரை ஓரங்களிலே உள்ள பிரதேசங்களுக்கு மின்சாரம் கொடுத்தால், பாசன வசதியைப் பெருக்கிக் கொண்டு, சாகுபடியாளர்கள் விளைச்சலை அதிகப்படுத்துவதற்கு முடியும். ஆகவே, அந்தப் பகுதிகளுக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கனம் மின்சார அமைச்சர் அவர்களை நான் இந்தச் சபையிலுள்ள உதவி சபாநாயகர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். இதற்கும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் தஞ்சை ஜில்லாவிலே முந்திரித் தொழிற்சாலை ஏற்படுத்தலாம். ராஜ்யங்கள் பிரிக்கப்பட்ட பிறகு, நம்முடைய ராஜ்யத்திலே முந்திரிக்குத் தொழிற்சாலை கிடையாது. முந்திரிக்கு வல்லம் முந்திரியும், நாகப்பட்டினம் முந்திரியும் பெயர் போனது. இதை ஆராய்ந்து பார்த்து, ஆராய்ச்சி மூலம் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மூலப்பொருளை வைத்துக்கொண்டு, தொழிற்சாலை நிறுவினால் அந்நிய செலாவணியும் கிடைக்கும். ஆகவே, இந்த நாகப்பட்டிணம் வட்டாரத்தில் முந்திரித் தொழிற்சாலை ஒன்றை நிறுவ பிரயாரிடி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் காவேரி ஓரத்தில் எண்ணெய் அகப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அதுபற்றி சீக்கிரம் ஆராய்ச்சி செய்து நல்ல எண்ணெய் அகப்படுமானால் அங்கு எண்ணெய்

சுத்தம் செய்வதற்கு ஒரு தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கு கூடிய சீக்கிரம் முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை ஜில்லா விவசாய ஜில்லாவாக இருப்பதினால், மூன்றாவது திட்டத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிற இரண்டாவது விவசாயக் கல்லூரியை அங்கு ஏற்படுத்த வேண்டும். அதோடுகூட கிராம பல்கலைக் கழகத்தையும் அங்கே ஏற்படுத்த வேண்டும். இதற்காகப் பாபநாசம் தாலூகாவில் ஒரு நண்பர் 1,000 ஏகர் நிலம் இனாமாக அரசாங்கத்திற்குத் தருவதாக முன் வந்திருக்கிறார். அதை பயன்படுத்திக்கொண்டு அங்கு விவசாயக் கல்லூரியையோ, கிராமாந்திர பல்கலைக் கழகத்தையோ ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதைத் தவிர தஞ்சை ஜில்லாவில் வேதாரண்யம், நாகப்பட்டிணம் போன்ற கடலோரப் பிரதேசங்களில் உப்பு அதிகமாகக் கிடைப்பதால் அதை வைத்துக்கொண்டு பல தொழிற்சாலைகள் அங்கே ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். வேதாரண்யம் பக்கத்தில் தீக்குச்சி செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைப்பதாக நிபுணர்கள் சொல்லுகிறார்கள். அதை ஆராய்ந்து பார்த்து அம்மாதிரி தொழிற்சாலைகளை நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி தாலூக்காக்களில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைத்து மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கும் வழிவகைகள் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை வரவேற்று, திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை ஆதரித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: The hon. Member Sri K. Sattanatha Karayalar may now move his amendment.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I move—

"Add at the end the following—

and on such consideration this House recommends that the Government should give importance to the following schemes and projects:—

(i) Inter-State Irrigation Schemes for the utilisation of surplus waters of the rivers flowing in the adjoining States;

(ii) Steel Plant utilizing Salem iron ore and Neyveli Lignite;

(iii) Nuclear Power Station;

(iv) Sethusamudram Project and the development of Tuticorin as a Major Port;

(v) Extension of Railway lines; and

(vi) Exploration and establishment of an Oil Refinery in this State."

SRI P. U. SHANMUGAM: I second the amendment, Sir.

SRI D. S. AUTHIMOOLAM: மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், ஸார், நம்முடைய ஸ்டேட் ஐந்தாண்டுத் திட்ட புஸ்தகத்தில் 'இண்ட்ரொடக்ஷன்' என்ற பகுதியிலே சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள், சில விஷயங்களை விடப்பட்டிருக்கின்றன. முக்கியமாக மதராஸ் ஹார்பருக்கு கிட்டத்தட்ட 16 கோடி ரூபாய் வரையில் செலவு செய்யப்போகிறது, உலக பாங்கிலிருந்து நமக்குப் பண உதவி கிடைக்கிறது, 16 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது ஒரு வரவேற்கத்தக்க அம்சம். அதே நேரத்தில் இந்த ராஜ்யத்திற்கு மூன்றாவது திட்டத்தின் மூலம் இன்னும் பெரிய நன்மைகள் எவ்வளவு கிடைக்கும் என்பதைப்பற்றிச் சொல்லவில்லை. முக்கியமாக ரயில்வேயை எடுத்துக் கொள்ளலாம். இந்த நாட்டில் ரயில்வே மூலம் போக்குவரத்து வசதி ரொம்பவும் அபிவிருத்தி அடைய வேண்டியிருக்கிறது. எங்கு பார்த்தாலும் பழைய கம்பெனி நிர்வாகத்தில் எந்த நிலைமையில் ரயில்வேக்கள் இருந்தனவோ அதே நிலைமையில்தான் ஓரளவுக்கு இருக்கிறது என்று சொல்லலாம். சேலத்திற்கும் மைசூருக்கும் ரயில்வே தொடர்பு, மற்றும் மானாமதுரைக்கும், விருதுநகருக்கும் என்று நினைக்கிறேன் தொடர்பு, மற்றும் கன்யாகுமரிக்கும் திருநெல்வேலிக்கும் இணைப்பு இப்படி முக்கியமான பாதைகளெல்லாம் போடவேண்டும் என்று சென்ற 40 வருஷ காலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் இதுபற்றி அடிக்கடி பத்திரிகையில் பார்ப்பது என்னவென்றால், இதோ வந்துவிடும், அதோ டெல்லியில் சொல்லியிருக்கிறது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது என்று இப்படியெல்லாம் செய்திகள் அடிக்கடி பத்திரிகைகள் மூலம் கேட்டுக் கேட்டு காது புளித்துவிட்டது, பார்த்துப் பார்த்துக் கண் மங்கிப் போய்விட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நமக்கு என்னென்ன வசதிகள் கிடைக்கப் போகின்றன என்பதைப்பற்றித் திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை. அன்னிய நாடுகளிலிருந்து 45 கோடி மக்கள் பெயரால் ஏராளமாக இந்தியா சர்க்காரால் கடன் வாங்கப்படுகிறது. அதில் நம்முடைய பங்குத் தொகை நமக்கு எவ்வளவு கிடைத்து பெரிய வேலைகள் நடக்கப்போகின்றன என்பதைச் சொல்லாமல் இருப்பது வாஸ்தவத்திலேயே நம்முடைய சென்னை சர்க்காருடைய ரொம்ப ஒரு . . (ஒரு கனம் அங்கத்தினர்: இயலாமை) இயலாமையைத்தான் அது குறிப்பிடுகிறது. அவ்வப்பொழுது வேண்டிய தமிழ் பதங்களை நீங்கள்தான் சொல்ல வேண்டும். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்: ஆங்கிலத்தில் சொல்லுங்களேன்). ஆங்கிலமும் அரைகுறைதான் (சிரிப்பு). அதற்கு நீங்கள் சட்டமன்றத்தில் ஜவாப் சொல்லுவீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. நான் என்ன ஒரு பெரிய புள்ளியா? பெரிய பாயிண்டைச் சொல்லப் போகிறேன். அதற்கு நீங்கள் ஜவாப் சொல்லப் போகிறீர்கள். இப்பொழுது எலெக்ஷனில் ஜனங்களுக்கு நீங்கள் ஜவாப் சொல்லுவதற்கு

இவைகளைத் திட்டத்தில் சேர்த்து விட்டோம் என்று சொல்லுவதற்கு ஏன் இப்போது இதில் நீங்கள் குறிப்புக் கொடுக்கவில்லை. திட்டத்தில் சேர்த்துவிட்டோம் என்று வெறுமனே பிளாட்பாரத்திலிருந்து சொல்லிவிடலாம் என்ற எண்ணமா? முதல் திட்டத்தில் 2,800 கோடி ரூபாய் என்று நினைக்கிறேன், இரண்டாவது திட்டத்தில் 4,800 கோடி ரூபாய், மூன்றாவது திட்டத்தில் 11,000 கோடி ரூபாய் இப்படிச் செலவழிக்கும்போது மக்கள் ஏராளமாக வரி கொடுக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கிட்டத்தட்ட மக்கள் 2,000 கோடி ரூபாய்க்குத் தேசம் பூராவும் வரி கொடுக்கப் போகிறார்கள். இன்னும் நோட்டு அடிக்கப் போகிறார்கள். இம்மாதிரியாகப் பணம் புரண்டு கொண்டிருக்கிற வேளையிலே, 1¼ கோடி ரூபாய் திட்டம் திருநெல்வேலி-கன்யாகுமரி லைன் 40 வருஷ கால மாகப் போட வேண்டுமென்று வற்புறுத்தப்பட்ட திட்டத்தை நிறை வேற்ற முடியாத நிலைமை இருக்கிறது என்று சொன்னால், அது நாட்டினுடைய துரதிருஷ்டம் தான். தமிழனுடைய துரதிருஷ்டம் தான் என்று சொல்ல வேண்டும். ஏன் பெரிய மந்திரி சபை இந்தியாவிலேயே பெரிய மந்திரி சபை என்று பிரமாதமாகச் சொல்லிக்கொள்ளுகிறீகள். ஏன் இதை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியவில்லை? நான் எலெக்ஷனுக்கு நிற்கவில்லை. பொதுவாக நான் கேட்கிறேன். (கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம்: அதை இப்பொழுது அனௌன்ஸ் பண்ணிவிட்டீர்களா?) ஆமாம், தினசரி ஏதாவது ஒரு பார்டி வந்து கேட்கிறார்கள். அதற்காகத்தான் அதை 'கன்பர்ம்' பண்ணி வைத்துவிடலாம் என்று பார்த்தேன்.

இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்கிறேன். இந்தப் பெரிய புத்தகத்தில் இந்த ஐந்து வருஷங்களுக்கு ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தமிழ் நாட்டிலுள்ள மக்களுக்கு என்ன பெரிய சாதனைகளைச் செய்யப் போகிறீர்கள் என்பதைப்பற்றி சொல்லாமல் விட்டிருப்பது ரொம்ப வருந்தத்தக்க விஷயம்.

ரயில்வே போக்குவரத்து விஷயம் அப்படி இருக்கிறது என்று சொன்னால், ரோடு போக்குவரத்தை எடுத்துக் கொள்ளலாம். வடக்கு, தெற்கு என்று டி.எம்.கே. கட்சியினர் பேசுகிறார்கள். மற்ற மாகாணங்களில் திட்டம் எப்படி இருக்கிறது என்று நான் இன்னும் பார்க்கவில்லை. 'ஆல் இந்தியா ரிபோர்ட்' புஸ்தகத்தைப் படிக்கவில்லை. அதைப் படித்திருந்தால் இன்னும் சில விவரங்கள் தெரிந்திருக்கும். இந்தப் புஸ்தகத்தில் 116-வது பக்கத்தில், 'அட் தி பிகினிங் ஆப் தி பர்ஸ்ட் பிளானில்', 'டோடல் மைலேஜ் இன் தி ஸ்டேட்' ரோடுகளுடைய நீளம் 21,198 மைல். 'அட் தி எண்டு ஆப் தி செகண்டு பிளானில்' 25,867 மைல். ஆகையினால் கிட்டத்தட்ட 4,500 மைல் நீளமுள்ள ரோடுகளை 9 வருஷம், 10 வருஷத்தில் இந்த மாகாணத்தில் போட்டிருக்கிறீர்கள் என்று எடுத்துக் கொள்ளுவோம். (ஒரு கனம் அங்கத்தினர்: டெபுடி ஸ்பீக்கர் போட்டிருக்கிறார்?) பத்து வருஷங்களில் இந்த மாகாணத்தில் 4,500 மைல் நீளமுள்ள ரோடுகள் போட்டிருக்கிறீர்கள்—சர்க்கார். அப்படிப் பார்க்கும்பொழுது வருஷம் ஒன்றுக்கு 450 மைல் நீளமுள்ள ரோடுகளைத்தான் நீங்கள்—சர்க்கார்—போட்டிருக்கிறீர்கள் அப்படி 450 மைல் என்று சொன்னால், இதிலே எத்தனையோ 'கிளாஸிபிகேஷன் ஆப் ரோட்ஸ்' இருக்கிறது. 'ஸ்டேட் ஹைவேஸ், நாஷனல் ஹைவேஸ், வில்லேஜ் ரோட்ஸ், அதர் டிஸ்டிரிக்ட் ரோட்ஸ், மேஜர் டிஸ்டிரிக்ட் ரோட்ஸ்' இப்படி இருக்கிறது. வருஷம் ஒன்றுக்கு 450 மைல் நீளம் உள்ள ரோடுகள் போட்டிருக்கிறீர்கள்? இந்த ராஜ்யத்தில் என்றால், ஒவ்வொரு ஜில்லாவிலும் எவ்வளவு போட்டிருக்கிறீர்கள் என்று 12-ஐக் கொண்டு வகுத்துப்பாருங்கள். எத்தனை மைல் நீளம் ரோடு போட்டிருக்கிறீர்கள்? (ஸ்ரீ டி. கரிய கவுண்டர்: 45 மைல் நீளம்) நீங்கள் 'கரெக்டாக' சொல்லுகிறீர்கள்! இந்த முறையில் வருஷம் ஒன்றுக்கு ஒரு ஜில்லாவிலே கிட்டத்தட்ட 50 மைல் நீளம் ரோடுகள்தான் போடுவதற்கு இந்தத் திட்டங்கள் மூலம் பணம் ஒதுக்கி இருக்கிறீர்கள் என்றால், இந்தப் பணம் எல்லாம் எங்கே போச்சு? அதுதான் என்னுடைய முக்கியக் கேள்வி. இது ஒரு மைனர் மாட்டர் என்று சொல்லி நீங்கள் நெக்லட் பண்ணிவிட முடியாது. வெள்ளைக்காரன் காலத்திலே ஒவ்வொரு ஜில்லாவிலும், ஜில்லா போர்டு மூலம் 150 மைல் நீளமுள்ள ரோடுகள் போடப்பட்டு வந்தன. வில்லேஜ் ரோடுகள், ஸ்டேட் ஹைவேஸ் என்று பல வகைகளில் 150 மைல் நீளம் ரோடு போட்டு வந்தார்கள். நீங்கள் கிராமங்களுக்குப் பல நன்மைகள் செய்து விட்டோம், பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி விட்டோம், பஞ்சாயத்துத் தலைவர்களைப் பதவியில் வைத்திருக்கிறோம், அவர்களை மகாத்மாக்களாக வைத்திருக்கிறோம் என்றெல்லாம் சொல்லி மாநாடு நடத்துகிறீர்கள். அந்தக் காலத்தில் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் டோல்கேட் காம்பென்சேஷன் இவ்வளவு என்று நிர்ணயம் செய்து மோட்டார் வாகனங்கள் வரியிலிருந்து கொடுத்தார்கள். தஞ்சை ஜில்லா போர்டுக்கு 1½ லட்சம், கோயம்புத்தூர் ஜில்லா போர்டுக்கு 2 லட்சம் என்று இவ்வாறு கொடுத்தார்கள். அந்தக் காலத்தில் ஒரு ஜில்லாவில் 100 பஸ்களும், 50 லாரிகளும் 100 பிரைவேட் கார்களும் இருக்கும். ஆனால் இப்பொழுது எண்ணிக்கை 15 மடங்காக உயர்ந்து விட்டது. பழைய கணக்குப்படி பார்த்தால் இப்பொழுது ஒவ்வொரு ஜில்லா போர்டுக்கும் நிறையப் பணம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் ஜில்லா போர்டுகளை இன்று அபாலிஷ் செய்தாகிவிட்டது. சென்ற 10 வருட காலமாக ஜில்லா போர்டுகளுக்கு ரோடுகள் போடுவதற்கு என்று மெயின்டினன்ஸ் கிராண்டோ, வில்லேஜ் ரோடு கிராண்டோ, காப்பிட்டல் வொர்க்ஸ்களுக்குக்கூட ஒழுங்காக நீங்கள் பணம் கொடுக்கவில்லை. ஜில்லா போர்டுகள் எப்படி நடந்து வந்தன? வெள்ளைக்காரன் காலத்தில் தஞ்சை ஜில்லா போர்டுக்கு ஒரு ரெயில்வே லயன் சொந்தத்தில் இருந்தது. அதேமாதிரி திருநெல்வேலி ஜில்லா போர்டுக்கு திருநெல்வேலி-திருச்செந்தூர் ரயில்வே லயன் இருந்தது. முப்பது லட்சம் ரூபாய் இருந்தது. எல்லாவற்றையும் விற்று விற்று எல்லாம் "கயா" ஆகிவிட்டது.

THE HON. SRI C. SUBRAMANIAM: சட்ட சபையில் பேசுகிறோம் என்பதை ஞாபகத்தில் வைத்துப் பேசுங்கள்.

[10th November 1961

SRI D. S. AUTHIMOOLAM : நான் கண்ணியக் குறைவாக நடந்து கொள்வதாக நினைக்க வேண்டாம். சர்க்கார் கணக்கிலிருந்தே 45 அல்லது 50 மைல் நீள ரோடுதான் போடப்பட்டது என்று தெரிய வருகிறது. இப்போது சமுதாய நலத் திட்டங்கள் மூலம் மண்ணை அள்ளிப் போட்டு ரோடு போட்டுவிடுகிறார்கள். அந்தக் கணக்கையும் சேர்த்துத்தான் ரிபோர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தமாதிரி நீங்கள் உங்களுடைய ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் என்ன செய்திருக்கிறீர்கள்? ஏதோ சில காரியங்கள் நடந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. சில அணைகளைக் கட்டி இருக்கிறீர்கள். ஐந்தாண்டுத் திட்டமில்லை என்றாலும் கட்டித்தான் இருப்பீர்கள். கொஞ்சம் வேகமாக வேலை நடந்திருக்கிறது என்று சொல்லலாம். அதே சமயத்தில் "கிரிமினல் வேஸ்ட் ஆப் எக்ஸ்பெண்டிசர்" நடந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 380 பிளாக்குகள் இருக்கின்றன. இவைகளுக்கு 380 ஜீப்கள், ஒவ்வொன்றுக்கும் தனித்தனி எஸ்டாபிளிஷ்மென்ட் என்ற முறையில் பணம் செலவாகி வருகிறது. "செத்தாடு கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்" என்ற முறையிலே நடக்கிறது. ஜனங்கள் தலையிலே வரியைப் போட்டு, இன்னும் கோடிக் கணக்கான பணத்தை கண்டுபிடிக்க வேண்டும். இந்த முறையிலே நிர்வாக அமைப்பு நடந்து கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் இந்த நாட்டில் கவனம் செலுத்த வேண்டிய ஐடெம்கள் எவ்வளவோ இருக்கின்றன. டெக்னிகல் எஜுகேஷனில் கொஞ்சம் முன்னேற்றம் இருக்கிறது. ஆனால் சமுதாயம் வளர்ச்சியடையும் அளவுக்கு முன்னேற்றம் போதாது என்பது கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் ஜெர்மனி போன்ற நாடுகளை எல்லாம் பார்த்து வந்திருக்கிறார்கள். ஐந்து கோடி ஜனத்தொகை உள்ள ஜெர்மனியில், பாலிடெக்னிக், மற்றும் டெக்னிகல் பள்ளிளில் 12 அல்லது 13 லட்சம் பேர்கள் படிப்பதாகத் தெரியவருகிறது. அப்படியிருக்கும்போது, 3½ கோடி ஜனத்தொகை உள்ள நம் தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட 2,000 பேர்கள் படிக்கிறார்கள் என்று சொல்லிப் பெருமைப்படுவதில் அர்த்தம் இல்லை. அப்படி படிக்கிறவர்களுக்கு ஏதாவது சப்ஸிடி கொடுக்கிறார்களா என்றால், 100-க்கு 30 பேர்களுக்குத்தான் சப்சிடி கொடுக்கிறார்கள். இந்தப் பாலிடெக்னிக்களிலே படிக்கிறவர்களில் 85 சதவிகிதம் பரம ஏழைகள். பத்து ஆயிரம் பேர்களாவது படிக்கும் வகையில் தொழில் கல்விக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இந்தத் திட்டத்திலே விடப்பட்டு இருந்தால் தக்க கவனம் செலுத்துமாறு கனம் நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் நம்முடைய நாட்டிலே காரியங்கள் நடக்கின்றன. அதுதான் நம் நாட்டின் ஜீவ நாடி என்றெல்லாம் சர்க்கார் ரிப்போர்ட்டுகள் கூறுகின்றன. நேஷனல் இன்கம் என்பதைப்பற்றிச் சொல்லும்பொழுது, விவசாயத்திலிருந்து 47 சதவிகிதம் கிடைப்பதாக சர்க்கார் ரிப்போர்ட்டிலிருந்து தெரிகிறது. அதே நேரத்தில் விவசாயம் முன்னேற்றம் அடைய அணைக்கட்டுகள் கட்டுவதற்கும், குளங்களை மராமத்து செய்வதற்கும் ஏராளமான பணம் செலவிட வேண்டியிருக்கிறது.

10th November 1961] [Sri D. S. Authimoolam]

லட்சக்கணக்கான குளங்கள் இருக்கின்றன. இந்த மராமத்து வேலை ஆமை வேகத்தில்தான் நடக்கிறது. டிபார்ட்மென்டுகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதற்கு தகுந்தபடி அலாட்மென்ட் கிடையாது. இரண்டரை கோடி அல்லது 3 கோடி என்று அலாட்மென்ட் செய்கிறார்கள். அதையும் காலாகாலத்தில் எஸ்டிமேட்டுகள் போட்டு சாங்ஷன் செய்யாமல், அந்த அலாட்மென்ட் செய்த தொகையும் ஸரண்டர் செய்யப்படுகிறது. இந்த முறையில்தான் நீர்ப்பாசன இலாகா வேலை செய்து வருகிறது.

கடைசியாக நான் ஒரு வார்த்தை சொல்லி முடித்துக் கொள்கிறேன். நீர்ப்பாசனத்தை எடுத்துக் கொண்டால், சர்க்காருடைய எந்த ரிப்போர்ட்டிலும் சரி, கவர்னர் உரையிலும் சரி, பட்ஜெட் உரையிலும் சரி, ஐந்தாண்டுத் திட்டப் புத்தகங்களிலும் சரி, ஒரே விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டப் புத்தகத்திலே 5-ம் பக்கத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது :

"Almost all the available sources of water in the State have been tapped and the line of further expansion lies mainly in improvements to minor irrigation sources."

அதையேதான் 21-ம் பக்கத்திலேயும், 66-ம் பக்கத்திலேயும் சொல்லியிருக்கிறார்கள். எல்லா மேஜர் ஸ்கீம்களையும் நிறைவேற்றி விட்டதாகச் சொல்கிறார்கள். எங்கள் ஜில்லாவைப் பொறுத்தவரையில், 85 லட்சம் ரூபாய் எஸ்டிமேட்டில் "கடனா நதி" திட்டம் ஒன்று இருக்கிறது. கிட்டத்தட்ட 10,000 ஏக்கர் நிலம் பாசனத்திற்கு வரும். ஐம்பது வருஷத்திற்கு முன்பே இந்தத் திட்டம் பரிசீலனையில் இருந்துவந்து, சென்ற 5 அல்லது 6 வருஷமாக கொஞ்சம் வேகம் கொடுக்கப்பட்டு, மூன்றாவது திட்டத்தில் இது சேர்த்துக்கொள்ளப்படும் என்று விளம்பரமும் சாற்றப்பட்டது. அப்படியிருந்தும் இந்தத் திட்டத்திலே அது சேர்க்கப்படவில்லை. அதற்கு வேண்டிய பணம் ஒதுக்கப்படவில்லை. இந்தப் புத்தகத்தில் அதைப்பற்றி பேச்சு மூச்சே இல்லை. ஆகவே, உங்கள் ரிப்போர்ட்டிலே எல்லா இரிகேஷன் பெஸிலிட்டிகளையும் உபயோகப்படுத்திவிட்டோம் என்று சொல்லுவது தவறு. எங்கள் ஜில்லாவில் இரண்டு திட்டங்கள் கைவிடப்பட்டிருக்கின்றன. மற்ற ஜில்லாக்களில் நிலைமை என்னவோ? இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் விலைவாசிகளை ஏற்றுகிறீர்களே தவிர, சென்னை சர்க்கார் மந்திரிகளாகிய நீங்கள், எதிர்பார்த்த திறமை அளவுக்கு உருப்படியான பெரிய காரியங்களைச் செய்யவில்லை என்று கூறிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மூன்றாவது திட்ட அறிக்கை பல எதிர்க் கட்சித் தலைவர்களையும் குழுவிலே சேர்த்து அமைத்து, தீர ஆலோசித்து தீட்டப்பட்ட திட்டங்களுடன் கூடியது என்று நேற்று கனம் நிதி அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆயினும், இந்தத் திட்டங்களை குறைகூற முற்பட்ட எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் எல்லோருமே, "ஏறத்தாழ, ஏறத்தாழ" என்று பேசி முடித்து 1-00 p.m.

விட்டார்கள். என்னென்ன குறைகள் என்று எதையும் குறிப்பாகச் சொல்லவில்லை என்பதைப் பார்க்கும்போது, நான் நினைக்கிறேன், இந்தத் திட்டத்தில் குறைகளே இல்லை, அப்படி ஏதாகிலும் இருந்தாலும், அதை நிவர்த்திக்க நம் மாநிலத்திற்கு திறமை இருக்கிறது என்பதினால்தான். ஆகவே, குறை கூற வேண்டும் என்று இருந்தாலும், "ஏறத்தாழ ஏறத்தாழ" என்று தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைச் சொன்னார்கள். ஏறத்தாழ நல்ல முறையிலே தான் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம் என்பதை யாரும் மறுக்கமுடியாது, மறைக்கவும் முடியாது என்று எண்ணுகிறேன்.

இன்றைக்கு ரூ. 291 கோடி அளவுக்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லும்போது 291 கோடிக்குத்தான் திட்டம், அதற்கு மேல் போக மாட்டோம் என்று யாரும் ஐயப்பட வேண்டாம். உதாரணமாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 159 கோடிக்குத்தான் முதலில் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால், நாம் உண்மையிலேயே 189 கோடி செலவழித்தோம். ஆகவே, சற்றேறக்குறைய 30 கோடி அளவுக்கு அதிகப்படியாக நம் திட்டங்களுக்குக் கொடுக்க மத்திய சர்க்கார் தயாராக இருந்தது என்பதை நாம் மறக்க முடியாது. அதேபோல, இன்றைக்கு 291 கோடி என்று சொல்லும்போது, அதற்கு மேல் ஒரு நயாபைசா கூட அதிகமாகச் செலவழிக்க முடியாது என்று வடக்கு கூறுவது போலவும், தெற்கு அதற்குப் பயந்து கட்டுப்படுவது போலவும் பேசுவது நாட்டில் உண்மையில் நடப்பதைப் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் நாம் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட மடக்கு வாதத்தை வடக்கு போட்டால், 159 கோடியிலிருந்து 189 கோடி அதிகமாகச் செலவழித்துப் பெறும் ஆற்றல் இருந்திருக்க முடியாது. திட்டங்களை எந்த அளவுக்கு வெற்றிகரமாக நிறைவேற்றுகிறோமோ அந்த அளவுக்கு அதிகப்படியான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை உணர்ந்தாலே போதுமானது. ஆகவே, அந்த வகையில், 291 கோடி மாநிலப் பொறுப்பில் செலவழிக்க இருக்கிறோம். மேலும் மத்திய சர்க்கார் பொறுப்பில் சற்றேறக்குறைய 190 கோடி அளவுக்குத் திட்டங்கள் வருகின்றன. இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் குறைந்தது 500 கோடியளவில் நம் மாநிலத் திட்டங்கள் அமைகின்றன என்பதை கனம் அங்கத்தினர்கள் மனதில் வைக்க வேண்டும். ஆண்டுக்கு ஆண்டு எடுத்துக் கொள்ளப் போகும் திட்டங்களை சேர்த்து எடுத்துக்கொண்டு பார்த்தால் உண்மை விளங்கும். இரண்டாவது திட்டத்தைப் போலவே, இந்த மூன்றாவது திட்டத்திலும் அதிகமான அளவில் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை, திட்டத்தின் எல்லாத் தலைப்பின் கீழும் கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களைப் பார்த்தால் விளங்கும். அதெல்லாம் மிக விவரமாக இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதிலே மின்சார உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நூறு கோடி அதற்கென்று ஒதுக்கியிருக்கிறோம். கடைசியில் என்ன கூறியிருக்கிறார்கள் என்று பார்த்தால், மூன்றாவது திட்ட இறுதியில் சற்றேறக்குறைய 27 பர்சென்ட்

மேலும் தேவைப்படும். அந்த அளவுக்குக் குறைவாகத்தான் கிடைக்கும். ஆகவே, அணுசக்தி நிலயம் அவசியமாகிறது. ஆகவே, அதையும் வற்புறுத்தி, இந்த மூன்றாவது திட்டத்திற்குள்ளாகவே அணுசக்தி நிலயத்தை நம் மாநிலத்தில் நிறுவ ஏற்பாடு செய்தால், திட்ட இறுதியில் அந்தப் பற்றாக்குறையும் இல்லாமல், முன்னேற்றத்திற்கு வழி கோலியவர்களாவோம். அதை நம் மாநில சர்க்கார் மறக்கக் கூடாது. இந்த மூன்றாவது திட்டத்தில் அந்த நிலயத்தை ஏற்படுத்த வழிகோலுவதும் அவசியம்.

சில துறைகளுக்கு மிக்க குறைவான தொகையே ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணம் தெரியவில்லை. பொது சுகாதாரத்திற்கு இரண்டாவது திட்டத்தில் இருந்ததைவிட குறைவாக இருக்கிறது. கிராமப் பக்கத்தில் தண்ணீர் வசதிக்கு என்று 324 லட்சம் என்று இருந்தது. இன்றைக்கு அது 150 லட்சமாகத்தான் இருக்கிறது. குறைவுக்குக் காரணம் தெரியவில்லை. இன்னும் கிராமப்புறங்களில் தண்ணீர் வசதி கொடுக்க வேண்டுமென்றால், கிணறு வெட்டுவது என்றால், அது லோகல் டெவலப்மென்ட் டிபார்ட்மென்டு செய்ய வேண்டுமா, ரூரல் வாடர் சப்ளைக்காரர்கள் வெட்டுவதா என்பது பிரச்சினையாக இருக்கிறது. பலருக்கும் அதிகாரம் இருந்தாலும், ஒருவரும் அதைச் செய்வதில்லை. ஆகவே, இன்னும் பல கிராமங்கள் தண்ணீர் வசதியே இல்லாமல் இருக்கின்றன. அரசாங்கம் 75 பர்சென்ட் கொடுத்து, பஞ்சாயத்து 25 பர்சென்ட் கொடுப்பதானாலும், சில அக்கறை இல்லாத பஞ்சாயத்துக்கள் 25 பர்சென்டும் கொடுக்காமல் இருப்பதனால், சர்க்கார் கொடுக்கும் 75 பர்சென்டும் பயன்படாமல் போய்விடுகிறது. ஆகவே, கிராமப்புறத்தில் தண்ணீர் வசதியே இல்லாமல் போகிறது. ஆகவே, இந்த மூன்றாவது திட்டத்திலாவது இதுபற்றி தீர ஆலோசித்து இதற்கு முக்கியத்துவம் கொடுத்து, முடிந்தால் அதிகமான தொகையைப் பெற்று இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். இம்மாதிரிச் சிறுசிறு சீர்திருத்தங்களைச் செய்வதால்தான், உண்மையிலேயே முன்னேற்றம் காணமுடியும் என்பதை உணர்ந்து, இதற்காக தொகையை அதிகரிக்கலாம்.

பொது சுகாதாரத்திற்கு மிக்க குறைவான தொகை தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மூன்று கோடிதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. க்ஷயரோகம் போன்ற நோய்களைத் தீர்க்க கவனம் செலுத்தியாக வேண்டும். இன்றைக்கு க்ஷயரோகத்திற்கு மருத்துவ வசதி மிகமிகக் குறைவு. தாம்பரத்திற்கு சிகிச்சைக்குப் போனால், வருஷக் கணக்காக நோயாளிகள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அதிக காலத்திற்குக் கொடுக்க வேண்டிய வசதிகள் கிடைக்காமல் மக்கள் அவதியுறுகிறார்கள். உள்ளே போகிறவர்கள் வெளியே வருவதேயில்லை; வெளியே நிற்கிறவர்கள், வெளியேயே நின்று கொண்டிருக்கிறார்கள். உள்ளே போக வழியில்லை. இப்படி க்ஷயரோகத்தால் அவதிப்படுபவர்கள், மருத்துவ சிகிச்சைக்கு வழியில்லாமல், ஆஸ்பத்திரிக்குப் போகலாம் என்றால், அவர்களுக்கு அட்மிஷன் கடிதம் வருவதற்குள் அடுத்த உலகத்திலிருந்து கடிதம்

வந்து விடுகிறது. அந்தப் பிரயாணத்தை ஆரம்பித்து விடுகிறார்கள். ஆகவே, இதையெல்லாம் உணர்ந்து இன்னும் அதிகமாகப் பணத்தை ஒதுக்கி, இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு சானடோரியம் வீதம் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு தஞ்சையில் ஒன்று, திருச்சியில் ஒன்று, கோவை மாவட்டத்தில் ஒன்று என்றுதான் இருக்கிறது. பதின்மூன்று ஜில்லாக்களைக் கொண்ட இந்த மாநிலத்தில் மாவட்டத்திற்கு ஒன்று என்று ஆஸ்பத்திரிகள் அமைத்தால்தான், சென்னை ஆஸ்பத்திரியில் நெருக்கடி குறையும். நகரப்புறத்து மக்களுக்கு கொஞ்சமாவது வசதி கிடைக்கும். ஆகையினால், இந்த 3 கோடி கொஞ்சமும் போதாது.

பின் தங்கிய வகுப்பினருக்கு உதவி கொடுக்கும் விஷயத்திலும், இரண்டாவது திட்டத்தில் 4½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு இந்த மூன்றாவது திட்டத்தில் 3¼ கோடி தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் "டி-நோடிபைட்" ஜாதி யாரையும் சேர்த்திருக்கிறது. அதையெல்லாம் விட்டுப் பார்த்தால், பின் தங்கிய வகுப்பினருக்குக் கிடைப்பது 40 லட்சம்தான். இது மிக மிகக் குறைவு என்பதைக் கல்வி அமைச்சரவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பின் தங்கிய வகுப்பினர் என்று சொல்லும்போது, ஜாதியின் அடிப்படையில் உதவியளித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை. அவர்களும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாகவும் இருக்கிறார்கள். வருஷம் 1,500 ரூபாய் வருமானம் என்று வைத்தால், மாதம் 125 ரூபாய் ஒருவன் சம்பாதித்தால், அவனுக்கு நான்கு குழந்தைகள் இருந்தால், ஒரு குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவதுகூட முடியாத காரியம். அவர்களுக்குப் பண உதவியளிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி அவர்கள் விரும்பும் பணம் கொடுக்கப்படாமல் போய்விட்டால், அவர்கள் முன்னேறுவது எப்படி? பின் தங்கியவர்கள் எப்பொழுதும் பின் தங்கியவர்களாகவே இருந்து, அவர்களுக்கு ஜாதி அடிப்படையில் உதவியளித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று சொல்லும் தன்மையல்ல என்னுடையது. ஆனால், அவர்கள் எவ்வளவு சீக்கிரம் முன்னேற முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முன்னேறி, முற்பட்ட இனத்திற்குக் கொண்டுவரப்பட்டால்தான், அவர்களும் சமுதாயத்தில் சங்கடமாக இல்லாமல் வாழ முடியும். ஆகவே, இந்த 40 லட்சம் ரூபாய் என்பது அவர்களுக்கு வசதிகளை அதிகரிக்கப் போதாது. அதையும் பிரித்துப் பார்த்தால், ஆண்டுக்கு 8 லட்சம்தான் வரும். அது கடலில் கரைத்த பெருங்காயம் போல்தான் இருக்கும். மத்திய சர்க்கார் உதவி பின் தங்கியவர்களில், 75 பர்செண்ட் மார்க்கு வாங்கிய மாணவனுக்குக்கூட கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எழுபத்து-ஐந்து சதவிகிதம் மார்க் வாங்குவதென்றால் பின் தங்கிய வகுப்பினர்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு எவ்வளவு கஷ்டம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். சமுதாயத்தில் பல திட்டங்களை உருவாக்குவதைக் காட்டிலும், பின் தங்கிய வகுப்பினர்களுக்கு அதிகப் பணம் ஒதுக்கி அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதினால் அதிக நன்மை உண்டாகும். ஆகையால், அந்த அடிப்படையில் ஒதுக்கியிருக்கும் பணம் மிகமிகக் குறைவு. மூன்றரை கோடி ரூபாய் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கிய நாம் அதில் பாதித் தொகையாவது பின் தங்கிய வகுப்பினர்களுக்கு ஒதுக்கியிருந்தால் பரவாயில்லை. நாற்பது லட்சம் ரூபாய் அளவுக்குத் திட்டங்கள் வகுத்துத் தொகை ஒதுக்கியிருப்பது பாராட்டுக்கு உரியதாகாது என்று நான் வருத்தத்தோடு சொல்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரை, பக்கிங்காம் கனால், கூவம் இவ்விரண்டையும் அபிவிருத்தி செய்வதற்குக் கமிஷன் போட்டார்கள். தீர ஆலோசிக்கிறோம் என்று கூறினார்கள். கார்ப்பரேஷனிலும் ஒரு திட்டம் தீட்டினார்கள். அது என்ன ஆயிற்று என்று திட்டத்திலே காணோம். கூவம் நாற்றத்தை உடனடியாக நீக்க வழி காண வேண்டும். அப்பொழுதுதான் நகரத்தில் ஓரளவு மக்களுக்குச் சுகாதார வசதி பெருக முடியும். பக்கிங்காம் கனாலை ஆழப்படுத்தினால் போக்குவரத்துக்கு இன்னும் வசதியாக இருக்கும் என்று சொல்லப்பட்டது. இந்த இரண்டிலும் கவனம் செலுத்தப்படாதது வருந்தத்தக்கது.

தொழில்கள் நம்முடைய மாநிலத்தில் அபிவிருத்தியாக வேண்டுமென்று எத்தனையோ கோடி ரூபாய் ஒதுக்குகிறோம். அபிவிருத்தி காண வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். ஆனால், நிர்வாகத் துறையிலே ஓரளவு சங்கடங்கள் இருப்பதால் இன்னும் பல சிறு தொழில்களை ஆரம்பிக்க வசதி இல்லாமலிருக்கிறது. மாநில அரசாங்கம் எஸென்ஷியாலிடி சர்டிபிகேட் கொடுத்து, மத்திய அரசாங்கத்திடமிருந்து சில பொருள்களைப் பெறவேண்டியிருக்கிறது. எஸென்ஷியாலிடி சர்ட்டிபிகேட் பெறுவதில் சில சங்கடங்கள் இருக்கின்றன, நம் மாநிலத்தில். ஆனால், பிற மாநிலங்களில் தாராளமாக இந்த சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். காரணம், சர்டிபிகேட் கொடுத்துவிட்டால், சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் செல்வாக்கை வைத்து, மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடியதைப் பெற்றுக்கொள்ளட்டும், அதனால் நம்முடைய மாநிலத்திற்கு லாபம்தானே என்று தாராள மனப்பான்மையோடு பிற மாகாணங்கள் எஸென்ஷியாலிடி சர்ட்டிபிகேட் தந்து விடுகிறார்கள். ஆனால் நம்முடைய இண்டஸ்ட்ரீஸ் டிபார்ட்மெண்ட் நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் அவர்களிடமிருந்து எஸென்ஷியாலிடி சர்ட்டிபிகேட் வாங்குவதே பெரிய கஷ்டமாக இருக்கிறது. 'இல்லை' என்று சொல்வதிலே அவர்களுக்கு ஒரு பெரிய ஆசை இருக்கிறது. இல்லையென்று சொல்வதில் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆகையால், கொஞ்சநஞ்சம் ஆசையோடு தொழில் ஆரம்பிக்க முன்வருகிறவர்கள்கூட, இந்த சர்ட்டிபிகேட் வாங்குவதிலேயே இவ்வளவு கஷ்டம் இருக்கும் போது, பின்னால் தொழில் ஆரம்பித்தால் என்ன என்ன கஷ்டம் இருக்குமோ என்று அஞ்சி ஓடக்கூடிய நிலைமையை இண்டஸ்ட்ரீஸ் இலாகாவினர் ஏற்படுத்தி விடுகிறார்கள். இதனால், மத்திய அரசாங்கத்திலிருந்து பெறக்கூடிய வசதிகளைக்கூடப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இதைச் சற்று தளர்த்திவிட்டால், நலமாக

[Srimathi Hemalatha Devi] [10th November 1961

இன்னும் அதிகப்படியான தொகை செலவழிந்தாலும் பரவாயில்லை. மக்களின் நலனில் அக்கறை கொண்ட நம் அரசாங்கம் மல்லேசுவரம் கோயில், வெள்ளைக்கல் மலைச்சாரல் என்ற இடத்தில் அந்த அணையைக் கட்டி முடிக்க வேண்டும். மூன்றாவது திட்டத்திலேயே அந்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சி அங்கத்தினர் ஒருவர் சாலைகள் போடுவதுபற்றிப் பேசும்போது ஜில்லாக்களில் எதிலும் 50 மைல்களுக்கு மேல் ரோடுகள் போடப்படவேயில்லை என்றார். புதிய ரோடுகளைப்பற்றிச் சொல்லியிருக்கலாம். அதுகூட அதிகமாகத்தான் இருக்கும். ஒவ்வொரு பிரதிநிதி தொகுதியிலும் எத்தனை மைல்கள் ரோடு போடப்பட்டுள்ளது என்ற புள்ளிவிவரங்களை எடுத்துப் பார்த்தால் அதுவும் 206 அங்கத்தினர்களுடைய தொகுதிகளுமாக எத்தனை மைல் நீள ரோடு போடப்பட்டிருக்கிறது என்பது நன்கு தெரியும். ஏதோ குறை கூறவேண்டும் என்பதற்காக எதை வேண்டுமானாலும் கூறலாமே தவிர, அவர் கூறும் விவரம் முற்றிலும் தவறு என்று எடுத்துக் கூற விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எத்தனையோ நல்ல திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். குடிதண்ணீர் வசதிக்காக பல திட்டங்கள் இருக்கின்றன. இப்படி எல்லா வகையிலும் போடப்பட்டுள்ள திட்டங்களை நாம் வரவேற்க வேண்டும். ஆகவே, நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர்களாயிருந்து இந்த மூன்றாவது திட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்று, எல்லாக் கட்சிகளும் இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

1-30 p.m.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet against at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. STATUTORY RULES AND ORDERS.

383. *Notification issued with Government Memorandum No.* 86326-D2/60-13, *Revenue, dated 16th September* 1961 *cancelling the Notification S.R.O. No. A*-465 *of* 1960, *published at page* 110 *in Part I of the Fort St. George Gazette, dated the* 27*th January* 1960 *in respect of the suit* (No. 140 *of* 1955) *properties in Vilamal village, Thanjavur district, belonging to Annadhana Kattalai attached to Sri Thiagarajaswamy Devasthanam, Tiruvarur, Thanjavur district.* [*Laid on the table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act,* 1959 (*Madras Act* 22 *of* 1959].

384. *Notification issued with G.O. Ms. No.* 3137, *Home, dated* 11*th September* 1961 *amending the Madras Chloral Hydrate Rules,* 1959, *published with Home Department Notification S.R.O., No. D*-199 *of* 1959, *dated the* 30*th March* 1959, *at pages* 136–145 *of the Rules Supplement to Part II of the Fort St. George Gazette, dated the* 13*th May* 1959, *as subsequently amended.* [*Laid on the table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act,* 1937 (*Madras Act* X *of* 1937).]

B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

238. *Letter No.* 7(44)-*EV*/58, *dated* 18*th May* 1961 *from the Government of India, Ministry of Finance (Department of Expenditure), New Delhi-*2, *communicating the decision of the Government of India regarding amendment of Pensions Act,* 1871 *providing for recovery of Government dues from pension.*

[10th November 1961

APPENDIX I.

[Vide answer to starred question No. 1958 asked by Sri T. S. Ramaswamy at the meeting of the Legislative Assembly held on 10th November 1961, page 122 supra].

Name of the School.	Percentage of pass.
R.K.M. Residential High School, Mylapore, Madras-4.	92
Northwick Girls' High School, Royapuram ..	90
Government School for Blind, Poonamallee (Chingleput district).	100
Government Secondary School for Girls, Chidambaram (South Arcot district).	93
Victoria Memorial High School, Bodinayakanur (Madurai district).	91
T.D.T.A.R.M.P. Pulamadan Chettiar National High School, Sattankulam (Tirunelveli district).	93
Municipal Girls' High School, Meenakshipuram (Tirunelveli Junction).	91
Rajalakshmi Mills High School, Uppilipalayam (Coimbatore district).	91
Immaculate Heart of Mary's High School, Mission State, Pondicherry.	100

APPENDIX II.

[Vide answer to starred question No. 1960 asked by Sri S. M. Annamalai at the meeting of the Legislative Assembly held on 10th November 1961, page 124 supra.]

Under the Third Plan, a provision of Rs. 538 lakhs has been made for the Welfare of Backward Classes comprising of Rs. 326 lakhs under the State Plan and Rs. 212 lakhs under Centrally Sponsored schemes under the Central Plan. Further the order of expenditure at the end of the Second Plan under the Head was about Rs. 3·55 crores per annum. A large part of this expenditure will continue to be incurred as 'Committed' expenditure under 'non-Plan' during the Third Plan period. There will be progressive increase of expenditure under the plan and non-Plan Heads and it is expected that the average rate of expenditure during the Third Plan period will be of the order of Rs. 4 crores per year. So the total expenditure under the Welfare of Backward Classes during the Third Plan period will be about Rs. 20 crores (Rs. 5·38 crores under Plan and Rs. 14·62 crores under non-Plan).

10th November 1961]

The details of expenditure which will be included in the Third Plan are as follows :—

(This is over and above the expenditure of nearly Rs. 3 crores a year to be spent outside the Plan.)

Name of the Group/Scheme. (1)	Provision made in the Third Plan. (2) (RUPEES IN LAKHS.)
A. SCHEDULED TRIBES.	
I. Education.	
1 Construction of non-residential schools	1·20
2 Construction of residential schools	2·50
3 Construction of hostels	3·00
4 Non-residential scholarships	0·30
5 Opening of residential schools	2·00
6 Conversion of non-residential schools into residential schools.	1·00
Total (Education) ..	10·00
II. Economic uplift.	
1 Agricultural subsidies (ploughs, bullocks, implements, etc.)	5·00
2 Subsidy for Minor Irrigation	3·00
3 * Forest Co-operatives and Multi-purpose Co-operatives.	2·00
4 Cottage Industries	5·00
Total (Economic uplift) ..	15·00
III. Health, Housing and other schemes.	
1 Drinking water wells	4·00
2 Medical units	2·00
3 Roads	2·00
4 Construction of houses	10·00
Total (Health, Housing, etc.) ..	18·00
Total (Scheduled Tribes) ..	43·00

[10th November 1961

Name of the Group/Scheme. (1)	Provision made in the Third Plan. (2) (RUPEES IN LAKHS.)
B. SCHEDULED CASTES.	
I. Education.	
1 Scholarships (Pre-matric)	30·00
2 Midday meals	25·00
3 Construction of and grants to schools	30·00
4 Construction of hostels, taking over of subsidised hostels and opening of new hostels.	20·00
Total (Education) ..	105·00
II. Economic uplift.	
1 Agricultural subsidy	35·00
2 Land Colonisation	25·00
3 Cottage Industries	40·00
Total (Economic uplift) ..	100·00
III. Health, Housing and other schemes.	
1 *House-sites for Harijans	60·00
2 *Subsidy for housing of sweepers and scavengers..	30·00
3 *Improvement of the working conditions of sweepers and scavengers including the elimination of the practice of carrying nightsoil as headloads.	20·00
4 Housing	40·00
Total (Housing, Health, etc.) ..	150·00
Total (Scheduled Castes) ..	355·00
*** C. DENOTIFIED TRIBES.**	
I. Education.	
1 Midday meals	10·00
2 Pre-matric scholarships	12·00
3 Boarding houses and Residential schools ..	15·00
Total (Education) ..	37·00

10th November 1961]

Name of the Group/Scheme. (1)	Provision made in the Third Plan. (2) (RUPEES IN LAKHS.)
C. DENOTIFIED TRIBES—*cont.*	
II. Other schemes.	
1 Agricultural subsidy (including ploughs, bulls, implements, etc.)	25·00
2 Cottage Industries	13·00
3 Housing colonies including wells, paths and other amenities.	25·00
Total (Other schemes) ..	63·00
Total (Denotified tribes) ..	100·00
D. OTHER BACKWARD CLASSES.	
Education.	
1 Scholarships	30.00
2 Boarding grants	10·00
Total (other Backward Classes) ..	40·00
Grand total (for welfare of Backward Classes) ..	538·00

* Schemes included under the Centrally Sponsored Scheme for which the Government of India will give full grant. The rest of the schemes will be eligible for 50 per cent grant from the Central Government.

The Total Central assistance admissible for the Plan expenditure will be Rs. 3·75 crores as indicated below :—

	Provision for five-year period.	Central assistance admissible.
	(RS. IN LAKHS.)	
1 State Plan Schemes (50 per cent grant) ..	326	163
2 Centrally Sponsored Schemes (100 per cent grant).	212	212
Total ..	538	375

[10th November 1961

Appendix III.

[Vide answer to starred question No. 1961 asked by Sri T. S. Ramaswami at the meeting of the Legislative Assembly held on 10th November 1961, page 125 supra].

Statement showing the names of persons for whom medals were awarded for meritorious service in the cause of Harijan uplift in Kanyakumari district.

1956—No persons from Kanyakumari district were considered for award of medals.

1957—Class I.

(1) Dr. M. E. Naidu, Kottar.

He was one of the leading Medical Practitioners at Kottar who had rendered meritorious service for the uplift of the Harijans and he is now no more.

(2) Sri Swamy Chelliah.

He belongs to the Hindu Sambavar Community. He has worked for the removal of untouchability and he is one of the members of the District Harijan Welfare Committee.

Class II.

(1) Sri P. Joseph Nadar.

He belongs to the respectable Nadar Community and he has done meritorious service for the removal of untouchability in Kollencode. He has contributed 50 cents of land for the construction of a Harijan Colony at Piracode.

(2) Sri A. Thavasi.

He belongs to the Hindu Sambavar Community. He is now one of the members of the State Harijan Welfare Committee and also the President of the Depressed Classes League, Kanyakumari district.

(3) Sri K. Arumugha Navalar.

He conducted a private Girls' Hostel for the Harijans and did meritorious service for the uplift of the Harijans. He is conducting an orphanage.

(4) Sri V. Dass Nadar, Kottaram.

He has rendered good service for the removal of untouchability. He is an ex-M.L.A.

(5) Dr. S. Muthukaruppa Pillai, Theroor.

He worked for the removal of untouchability and the uplift of Harijans.

(6) A. K. Chelliah, ex-M.L.A.

He belongs to the Hindu Sambavar Community and he is one of the members of the District Harijan Welfare Committee. He has worked for the removal of untouchability. He is the Secretary of the Depressed Classes League.

10th November 1961]

1958—Class I.

(1) Sri P. Thanulingam Nadar, M.P.

He is a member of the Lok Sabha and he has done meritorious service for the uplift of the Harijans.

(2) Sri A. Samraj.

He belongs to the Hindu Sambavar Community and he is a member of the Harijan Welfare Committee. He takes a good deal of interest in sponsoring the claims of Harijans.

Class II.

(1) Sri Kaliam Pillai Mathavan Pillai of Darsanamcope.

He has taken keen interest in introducing temple entry in the local temple and has arranged for the cosmopolitan dinners and he is working for the removal of untouchability.

(2) Sri V. Raman Pillai.

He is an ex-panchayat member and he has worked for the welfare of the Harijans.

(3) Sri P. J. Ponniah.

He belongs to the Hindu Sambavar Community and he is one of the members of the District Harijan Welfare Committee. He is working hard in the cause of Harijan uplift.

(4) Sri V. M. Jesudhas.

He has done meritorious service for the uplift of Harijans.

(5) Sri R. Subbiah.

He is now working as a teacher, Kurandi, Kannancheri and has worked for the uplift of the Harijans. He belongs to the Hindu Sambavar Community.

The selection of the rewardees for the calendar years 1959 and 1960 has not yet been finalised.

[10th November 1961]

Appendix IV.

[Vide answer to Starred Question No. 1967, asked by Sri T. S. Ramaswami and Sri M. P. Sarathy at the meeting of the Legislative Assembly held on 10th November 1961, page 130 supra.]

A. Fisheries Housing Scheme—

The scheme for fishermen housing was sanctioned by the Government in 1959. Houses have been sanctioned at the following places during 1959-61:—

		Number of houses for construction.
1	Karayoor, Thanjavur district	12
2	Eripurakarai, Thanjavur district	8
3	Ennore, Madras district	20
4	Walajabad, Chingleput district	19
5	Killai, South Arcot district	10
6	Uppalavadi, South Arcot district	10
7	Nambuthalai, Ramanathapuram district ..	2
8	Mallipatnam, Thanjavur district	12
அதுமட்டுமல்ல. 1961-வது சென்ஸஸ் கணக்கை எடுத்துக் கொண்டால் கிராமாந்திர மக்களில் பெரும்பாலோர் நகரங்களில் வந்து குடியேறி, அதனால் நகரங்களில் உள்ள ஜனத்தொகை 20 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதம் வரை அதிகப்படியாகியிருக்கிறது. திருப்பூர் போன்ற இடங்களில் 50 பங்கு அதிகப்படியாக ஜனத்தொகை உயர்ந்திருக்கிறது. இதை கணக்கில்கொண்டு குடிதண்ணீர் வசதி திட்டம் சரியானபடி இருக்கிறதா என்று பார்த்தால், உண்மையில் இல்லை. போட்டிருக்கக்கூடிய திட்டத்தை வெகுவாரியாக 'கட்' செய்துவிட்டார்கள்.

சென்னை நகர குடிதண்ணீர் அபிவிருத்தி பற்றி எற்கனவே கோதாவரியிலிருந்து தண்ணீர் கொண்டு வாலாம் என்று சொல்லப்பட்டது. பிறகு காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது பற்றி பூர்வாங்கமாக பரிசீலனை நடத்துவதற்கு ஒரு ஆபீசர் போடப்பட்டு, அதற்கான திட்டமும் சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக சொன்னார்கள். இதற்கெல்லாம் எவ்வளவு பணம் ஆகும், எத்தனை காலம் ஆகும். இதையெல்லாம் விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக சமுத்திர தண்ணீரை குடிதண்ணீராக உபயோகப்படுத்த முடியுமா என்பதைப்பற்றி பரிசீலனை செய்ய சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதை வெற்றிகரமாகச் செய்தால், இன்னும் நீர்ப்பாசனத்திற்கு உபயோகப்படும்படி அந்த மாதிரி ஒரு திட்டத்தை பரிசீலனை செய்யக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படும்.

அடுத்தபடியாக, ரோடு அபிவிருத்திக்கு சர்க்கார் போட்டிருக்கக்கூடிய திட்டங்களுக்கு பாதிப் பணம்கூட வந்து சேரவில்லை. எந்த அளவுக்கு ரோடு அபிவிருத்தி ஏற்படப்போகிறது? இப்படிப்பட்ட முறையில் நாம் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனாலும் இப்பொழுது இரண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும் நாம் எங்கே நிற்கிறோம். Where do we stand? What is the perspective of the Plan? இது தான் முக்கியம். இந்தத் திட்டமானது மக்களுக்கு பிரயோசனமாக இருக்கிறதா அல்லது ஒரு குறிப்பிட்ட ஏகபோக முதலாளிகளுக்கு பிரயோசனமாக இருக்கிறதா? மக்களுக்கு பிரயோசனமாக இல்லை என்று சர்க்காரே சொல்லிவிட்டார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டம் போடக்கூடிய காலத்தில் திட்டம் நிறைவேறவேண்டுமென்று சொன்னால், **we have to enthuse the masses** என்று அன்றையதினம் சொல்லப்

பட்டது. பிறகு இரண்டாவது திட்டம் நிறைவேறி இப்பொழுது மூன்றாவது திட்டம் போடப்படுகிறது. இப்பொழுது we have to enthuse the masses திட்டம் நிறைவேறுவதற்கு ஜனங்களை மேலும் ஊக்குவிக்கவேண்டும், மக்கள் திட்டத்தில் பங்கு கொள்ளும் முறைகளில் அவர்களுக்கு தூண்டுதல் செய்யவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் ஜனங்களுக்கு ஏன் அக்கரை இல்லை? கம்யூனிடி டெவலப்மெண்டுக்கு 250 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. திட்டம் போடக்கூடிய காலத்தில் இந்தத் திட்டம் நிறைவேறினால் silent economic revolution ஏற்படப்போகிறது என்று சொன்னார்கள். 250 கோடி ரூபாய் செலவு செய்தாகிவிட்டது. ஒன்றையும் காணோம். அவர்களே சொல்லுகிறார்கள் செலவு செய்யப்பட்ட தொகை பூராவும் இல்லாதவர்களுக்குப் போய்ச்சேரவில்லை, இருக்கக்கூடியவர்களுக்குத்தான் போய்ச் சேர்ந்திருக்கிறது. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட கமிஷன் ரிப்போர்ட்டும் செலவு செய்த பணத்தின் பலன் இல்லாதவர்களுக்குப் போய்ச் சேரவில்லை, இருக்கிறவர்களுக்குத்தான் போய்ச்சேர்ந்திருக்கிறது என்று சொல்லுகிறது.

அதுமட்டுமல்ல. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 20 பங்கு, 30 பங்கு வரையிலும் விலைவாசி ஏறியிருக்கிறது. விலைவாசி என்பது ஒரு திட்டம் போடக்கூடிய காலத்தில் எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு முக்கியமான பகுதி. It is an important factor. இந்தத் திட்டத்தினால் எவ்வளவு உற்பத்தி அதிகம் செய்வது, எந்த அளவுக்கு விலையை குறைப்பது என்று திட்டத்திலேயே 'இண்டகிரேடெட்'-ஆக இருக்கவேண்டும். அது 'ரிவெர்ஸ்' ஆக இருக்கிறது. திட்டப்படி உற்பத்தி அதிகரித்தும், விலைவாசி குறையாமல் அதிகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. விலைவாசி அதிகமாகப்போனால் அப்பொழுது என்ன அர்த்தம்? 'இண்டைரக்டாக' உற்பத்தி பொருள்களை ஜனங்கள் வாங்கக் கூடாது என்று அர்த்தம். ஆகவே, விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை; மேலும் மேலும் விலைகள் ஏறிக்கொண்டே போகின்றன. சர்க்கார் என்ன செய்கிறது? எந்த அளவுக்கு விலை ஏற்றம் இருக்கிறதோ அந்த அளவுக்கு ஜனங்களுடைய வருமானம் ஏறி இருக்கிறதா என்றால், இல்லை. "பிக்ஸட் இன்கம் க்ரூப்" சம்பளத்தை அதிகப்படுத்தும் திட்டமும் இல்லை. அவர்களே சொல்லியிருக்கிறார்கள், மூன்றாவது திட்ட காலத்தில் "ப்ரைஸ் ரைஸ் இஸ் இனெவிடபிள்" விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாது என்று. அப்படியானால், அது எந்த நிலையில் கொண்டுபோய்விடும் என்று சந்தேகிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக வரி. முதல், இரண்டாவது திட்ட காலத்தில் 450 கோடி ரூபாய் வரை வரி போடுவதாகத் திட்டம். ஆனால், உண்மையில் 900 கோடி ரூபாய் வரை போய் இருக்கிறது. இரண்டாவது திட்ட வரிகளைப் பார்த்தால், உண்மையாகவே, இரண்

டாவது திட்ட வெற்றியைப் பார்த்தால், அது 3,000 கோடி வரை போகும் போலத் தெரிகிறது. வரி அதிகமாகப் போகிறதே தவிர, ஏகபோக முதலாளிகள் லாபம்தான் அடைகிறார்கள். "டைரக்ட் டாக்ஸ்" விஷயத்தில் அவர்களுக்கு நிறையக் கன்செஷன்கள். சென்ற ஆண்டு எடுத்துக்கொண்டால், டைரக்ட் டாக்ஸுகள் 28 பங்கு வரை குறைந்திருக்கிறது. ஆகவே, சாதாரண ஜனங்கள் ஏராளமான வரியைக் கொடுக்க வேண்டியிருக்கும்போது, ஒரு குறிப்பிட்டவர்களுக்கு மட்டும் வரி படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. ஹோல்ஸேல் ப்ரைஸ் 20, 30 பர்சென்ட் அதிகரித்திருக்கிறது என்றால், ரீடெய்ல் ப்ரைஸைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. பல மடங்கு ஏறியிருக்கிறது. குறிப்பிட்டவர்களுக்கு டாக்ஸ் கன்செஷன் ஒரு பக்கம், சாதாரண மக்களுக்கு அதிகப்பட்ட வரிச் சுமை ஒரு பக்கம். இப்படியிருக்கும்போது மக்களின் வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது. அவர்கள் சாதாரணப் பண்டங்களையும் வாங்க முடியவில்லை

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பார்த்தால், அது எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறது? மூன்றாவது திட்டத்தில், "இட் ஹேஸ் பிகம் ஓர்ஸ்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. "நியூ எண்ட்ரண்ட்ஸ்", 18 வயதாகி வேலைக்கு வருபவர்கள் எண்ணிக்கை கிட்டத்தட்ட 17,000; அவர்கள் ஒரு பக்கம்; மற்றொரு பக்கம் ஏற்கனவே வேலையில்லாதவர்கள். இவர்கள் எல்லாருக்கும் பூராவாக வேலை வாய்ப்புகள் கொடுக்காவிட்டாலும், படிப்படியாகவாவது கொடுக்கப்படுகிறதா என்று பார்த்தால், "இன் தி தர்ட் ப்ளான் எம்ப்ளாய்மெண்ட் ப்ராப்ளம் இஸ் ஓர்ஸ்" என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தியா பூராவிலும் அணைக்கட்டுத் திட்டங்கள் போட்டு, கோடானுகோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளால் ஏராளமான நிலங்கள் பாசனத்திற்கு வருகின்றன. டெல்லி யுனிவர்சிடியைச் சேர்ந்த டாக்டர் ராஜன் அவர்கள், "எகனாமிக் வீக்லி" என்ற பத்திரிகையில், எழுதும்போது, கட்டப்பட்ட அணைகளால், பாசனவசதி பெற்ற நிலங்களிலிருந்து 1,800 கோடி அதிகப்படியான வருமானம் வந்திருக்கிறது; இந்த வருமானம் விவசாயத்தில் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் பலன் என்ன? அவர்களே சொல்லியிருக்கிறார்கள் இந்த 1,800 கோடி வருமானமும் கிராமப் பகுதியில் 100-க்கு 3 பேருக்குத்தான் கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி விவசாய வருமானம் 3 பர்சென்ட் ஜனங்களுக்குத்தான் போய் இருக்கிறது என்றால், என்ன பிரயோஜனம்? பாக்கி இருப்பவர்கள் என்ன பிரயோஜனத்தை அடைந்திருக்கிறார்கள்?

நாஷனல் இன்கம் ரேட் ஆப் க்ரோத் பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. வெளிநாடுகளிலிருந்து ஏராளமான கடன்கள் வாங்கியும், நம் ரிஸோர்ஸ்களைத் திரட்டியும் திட்டங்களைச் செய்திருக்கிறோம். ஆனால், பலன் என்ன? இன்றைக்கு ஈஜிப்ட், இரான் போன்ற நாடுகளை எடுத்துக்கொண்டால், அவர்கள் திட்டங்கள் ஒன்றும் இல்லாமலேயே, உற்பத்தியைப் பெரும் அளவுக்குப் பெருக்கி இருக்கிறார்கள் என்பது பற்றி ஐக்கிய நாடு கமிஷன்

சொல்லியிருக்கிறது. அதனால், மக்களுக்கு எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை, இவர்கள் திட்டங்கள் எல்லாம் நம் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் நீர்க்கவில்லை, என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதல் திட்ட காலத்தில், அடிப்படையான நோக்கம் என்னவென்று சொல்லப்பட்டது? "ப்ரொட்யூஸ் ஆர் பெரிஷ்" என்று சொல்லப்பட்டது. அது கடைசியில் என்னவாயிற்று? "ப்ரொட்யூஸ் அண்ட் பெரிஷ்" என்றுதான் முடிந்தது. இன்னொரு பக்கத்தில் ஏகபோக முதலாளிகள் என்ன சொல்லுகிறார்கள்? "We do not want to produce, but we want enormous profits" அந்த முறையில் இருக்கிறது.

1930-ம் வருஷம் பஞ்சாபில், ராவி நதிக்கரையில் காந்திஜி, நேருஜி போன்ற தலைவர்கள் சுதந்தரப் பிரதிக்ஞையை எடுத்துக் கொண்டார்கள். அந்நிய நாட்டுச் சுரண்டலால்தான் இந்தியா முன்னேற முடியவில்லை. ஆகவே, அன்னியனை வெளியேற்ற வேண்டும் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள். ஆனால், இன்றைய நிலைமை என்ன? 150 கோடிக்கு மேல் அன்னிய நாட்டுக்கும் போகிறது. இன்றைக்கும் ப்ரைவேட் செக்டாரில் உள்ள தனிப்பட்ட முதலாளிகளுக்கு பங்குத் தொகையாக ஏராளமான பணங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் "பைனான்ஷியல் எர்-கண்டிஷன்" செய்து கொண்டிருக்கிறார்கள். இவைகளுக்கெல்லாம், மக்களின் வரிப் பணத்திலிருந்து ஏராளமான தொகைகள் கொடுக்கப்பட்டு வருகிறது. ஏழு, எட்டு ஹௌஸ்களுக்கு, டாடா கம்பெனி போன்றவைகளுக்கு, அந்த முதலாளிகளுக்கு, கிட்டத்தட்ட 2,800 கோடி ரூபாய் வரை மொத்தம் கொடுக்கப்படுகிறது. கிட்டத்தட்ட 770 கோடி வரை அவர்கள் கண்ட்ரோல் செய்கிறார்கள். முதல் இரண்டு திட்டங்களின் மூலமாகவும் ப்ரைவேட் செக்டாருக்கு முதல் 600 கோடி என்று சொன்னார்கள்; ஆனால் நடைமுறையில், 850 கோடி வரை சர்க்கார் கொடுத்திருக்கிறது. அதே நேரத்தில், பப்ளிக் செக்டாரை எடுத்துக்கொண்டால், 770 கோடி ஒதுக்குவதாக இருந்தது, ஆனால் உண்மையில் ஒதுக்கினது 650 கோடிதான். ஆகவே, இந்த ஏகபோக முதலாளிகளுக்கு டாக்ஸ் கன்செஷன் ஒரு பக்கம், மேலும் மேலும் ஒதுக்கும் அதிகப்படியான தொகைகள் ஒரு பக்கம். இப்படி அவர்கள் லாபம் அடைகிறார்கள்.

நாம் பேசுவது திட்டமிட்ட பொருளாதாரம். இதிலே குறிப்பிட்ட ஒரு சாரார்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக என்ன நடக்கிறது? ப்ளான்ட் இண்டஸ்ட்ரீஸ் கொண்டு வரும்போது, குறிப்பிட்டவர்களுக்குக் குறிப்பிட்ட தொழில்கள் என்றாகிறது. ப்ராபிட் கண்ட்ரோல் இல்லை. இன்றைக்கு செமன்ட் அல்லது டெக்ஸ்டைல் என்று எடுத்துக்கொண்டால், அது குறிப்பிட்டவர்கள் கையில்தான் இருக்கிறது. இதன் காரணமாக சாதாரண மக்கள் எந்த லாபமும் அடையமுடியவில்லை. அதேபோலத்தான், மைன்களை எடுத்துக் கொண்டாலும் சரி, சர்க்கரை ஆலைகளை எடுத்துக்கொண்டாலும்

சரி, ஆட்டோமோபைல் இண்டஸ்ட்ரியை எடுத்துக் கொண்டாலும் சரி, இதிலெல்லாம் "மொனுபொலி" தான் இருக்கிறது. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "We do not want to produce but we want enormous profit" என்கிறார்கள். அவர்களுடைய ரிசர்வ் நிதி பாங்கிகளில் ஏராளமாக இருக்கிறது. ஆனாலும், அவர்கள் இன்வெஸ்ட் பண்ண முன்வர தயங்குகிறார்கள். நாலு, ஐந்து நாட்களுக்கு முன்பு கூட, பம்பாயில் ஒரு மத்திய சர்க்கார் அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள், இவர்கள் காங்கிரஸ் எலெக்ஷன் டண்டுக்குப் பணம் கொடுக்கிறார்களே தவிர, இன்வெஸ்ட் செய்ய மறுக்கிறார்கள் என்று. ஆகவே இப்படிப்பட்ட ஒரு நிலைமையைப் பார்க்கிறோம். வெளி நாடுகளிலிருந்து கடன் வாங்குகிறோம். கடனைக் கொண்டு வந்து, சக்கரையை உற்பத்தி செய்கிறோம். உற்பத்தி செய்த பொருளை விற்க அவர்களையே நாம் கெஞ்ச வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். டெக்ஸ்டைலை எடுத்துக் கொண்டால், விற்பனை 2 : 1-ஆக இருந்தது. அதற்கு சப்ஸிடி வேறு கொடுக்கப்பட்டது. இன்றைக்கு அதுவே எந்த நிலையில் இருக்கிறது. அது இன்றைக்கு 1 : 1 ஆகக் குறைந்திருக்கிறது. பாதிக்கு மேல் வியாபாரம் குறைந்திருக்கிறது. ஆகவே நமக்குப் பாரின் எக்சேஞ் குறைந்தது என்றால், மெஷினரிகளை இறக்குமதி செய்யவும் முடியவில்லை, ஏற்கனவே வாங்கி இருக்கும் கடனுக்கு வட்டி கூடக் கட்ட முடியவில்லை. ஆகவே இந்த ஏகபோக முதலாளிகளுக்குக் கொடுக்கும் சலுகைகள் நிறுத்தப்பட வேண்டும். இல்லையேல், வெளிநாடுகளில் நம்மால் காம்பெடிடிவ் ஆகப் போட்டி போடவும் முடிவதில்லை. ஜப்பான் முதலிய நாடுகளோடு போட்டி போட முடிவதில்லை. அதனால், நம் வெளிநாட்டு வியாபாரமும் போய் விடுகிறது. உள்நாட்டிலும், மார்கெட் எக்ஸ்பாண்டு செய்ய வசதிகள் கிடையாது. விலைக் கட்டுப்பாடும் இல்லை.

நாங்கள் சொல்கிறோம் பாங்குகளைப் பூராவும் தேசியமயமாக்க வேண்டும், வெளிநாட்டு வியாபாரத்தைச் சர்க்காரே எடுத்துக் கொள்ளவேண்டும் என்று. 'மொனுபலி கன்ட்ரோல்' பற்றி அன்றையதினம் சொல்லப்பட்டது. 'போர்த் ஷெட்யூல் ஆப் தி கான்ஸ்டிட்யூஷன் ஆப் இந்தியா' என்ன சொல்கிறது? ஈக்விடபிள் டிஸ்ட்ரிப்யூஷன், ஆப்பர்ச்சூனிடி' என்றெல்லாம் சொல்லப்படுகிறது. என்றாலும், 'டிஸ்பாரிடீஸ்' போயிருக்கிறதா என்று நான் கேட்கிறேன். இத்தனை திட்டங்களுக்கும் பிறகு ஒன்பதாவது ஸாம்பிள் ஸர்வே என்ன சொல்கிறது? தினமொன்றுக்கு ஐந்தணாவுக்கும் குறைவாகச் சம்பாதிக்கக்கூடியவர்கள் ஆறு கோடி பேர்கள் நம் தேசத்தில் இருக்கிறார்கள். நாலணாவுக்குக் குறைவாகச் சம்பாதிக்கக்கூடியவர்கள் நான்கு கோடி பேர்கள் இருக்கிறார்கள். இரண்டணாவுக்கும் குறைவாகச் சம்பாதிக்கக் கூடியவர்கள் இரண்டு கோடி பேர்கள் இருக்கிறார்கள் என்று சொல்கிறது.

ஆகவே, ஒரு பக்கம் 'அக்யூமுலேஷன் ஆப் வெல்த்' இருக்கிறது. கான்ஸ்டிட்யூஷன் எதைத் தடை செய்கிறதோ அதற்கு விரோதமாக ஒரு பக்கம் வறுமை இருக்க, இன்னொரு பக்கம் மேலும்

மேலும் ஏகபோக முதலாளிகள் எல்லா வசதியும் லாபமும் சௌகரியமும் பெறுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை மாற வேண்டும். அதற்காகத்தான் இந்தச் சர்க்காரிலுள்ள அமைச்சர்களும் அடிக்கடி டில்லி செல்கிறார்கள். குறிப்பிட்ட இடத்தில் மட்டும் செல்வத்தைக் குவிக்கக்கூடிய முறையை எதிர்க்காமல் இந்த நாட்டில் எந்தத் திட்டமும் சரிவர நடக்காது. இங்கிருந்து டில்லி செல்லக்கூடியவர்கள் அதற்காக வற்புறுத்தவேண்டும். அதற்காகத் திட்டங்களே வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. திட்டங்களே வேண்டாம் என்று சிலர் சொல்கிறார்கள். குறை இருப்பதினால் திட்டம் வேண்டாம் என்கிறார்கள் அவர்கள். திட்டம் இல்லாமலிருந்தாலும் இன்னும் பல மடங்கு லாபம் கிடைக்குமோ, ஆகவும் திட்டம் வேண்டாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். திட்டம் வேண்டாம் என்று அவர்கள் சொல்வதை நாங்கள் எதிர்க்கிறோம். திட்டம் வேண்டாம் என்று சொல்வதைக் கேட்டு அந்தச் சார்பில் சர்க்கார் போகக் கூடாது. இப்பொழுதிருக்கும் திட்டத்தை இந்த முறையில் திருத்தினால் பெருவாரியான மக்களுக்குப் பயன்படும். ஆகவே, இம்மாதிரி கொள்கையைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் கொடுத்திருக்கும் திருத்தத்தையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

* SRI K. B. S. MANI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இதில் 'பின் தங்கிய வகுப்பினர் நலன்' என்ற தலைப்பில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருகிற திட்டத்தில் 3.26 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை குறைவாகவே தெரிகிறது. அந்தக் குறையை ஈடு செய்ய என்ன வழி செய்திருக்கிறார்கள் என்று உள்ளேயிருக்கும் விவரங்களைப் பார்க்கும்போது, சில புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பகல் உணவுத் திட்டத்திற்குச் செலவிடப்படும் தொகை ரூ. 125 லட்சம் என்றும், அதிலே ரூ. 25 லட்சம் தான் இத்தொகையில் சேர்ந்ததாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்காலர்ஷிப்பாக கொடுக்கிற பணங்களிலேகூட ஓரளவு குறைச்சல் தொகைதான் என்றும் அந்த வகையிலும் ஈடு செய்யப்படுகிறது. மற்றும் வேறு பகுதிகளிலிருந்தும் ஈடு செய்யப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது கடந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கொடுக்கப்பட்ட தொகையைப்போல் தான் இந்தத் திட்டத்திலும் கொடுக்கப்படுகிறதே தவிர, கூடுதலாக அதிகத் தொகை வந்திருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

தொகையைச் செலவிடும் முறையைப் பார்க்கும்போது, உண்மையிலேயே ஹரிஜன மக்களுக்கு நேரடியாக முதல் திட்டத்தைக் காட்டிலும் அதிகத் தொகை நல்ல முறையில், நேர்மையான முறையில் இரண்டாவது திட்டத்தில் சேர்ந்தது.

மூன்றாவது திட்டத்தில் நேர்முகமாக அவர்களுக்குச் செலவிட வேண்டிய பணம் எவ்வளவு இருக்கிறதோ அது போய்ச்சேர வழி வகை விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வீடு கட்டும் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடும்போது, இதுவரை 18,500 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன, இரண்டாவது திட்டத்தில். அதற்கு மொத்தச் செலவு 111 லட்ச ரூபாய் ஆகும். ஆனால், மூன்றாவது திட்டத்தில் இன்னும் அதிகமாகச் செலவிட வேண்டிய நிலைமை இருக்கிறது என்று சர்க்கார் குறிப்பு கொடுத்திருக்கிறது. வீடுகள் கட்டிக்கொள்ளும் இடத்தைக் கொடுப்பதுபற்றி முதலில் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. சுகாதார வசதி பற்றியும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்கார் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து மனைக்கட்டு கொடுத்திருக்கும் இடங்கள் மிகவும் தாழ்மையான, நீர் தேங்கக் கூடிய பகுதிகளாக இருக்கின்றன. அந்த இடங்கள் பள்ளமாக இருக்கின்றன. அதைப் பரிலசீலனை செய்யவேண்டும். மூன்றாவது திட்டத்தில் கொடுக்கப்படும் இடங்களைப் பொறுத்தவரை, அந்தந்த ஜில்லா வெல்பேர் ஆபீசரை நேரடியாக வரவழைத்து, அந்த இடங்களை வீடு கட்டுவதற்குத் தகுந்தபடி உயர்த்தினாலொழிய, புஞ்சை நிலங்களாக ஆக்கப்பட்டாலொழிய, அதில் வீடு கட்டக் கூடாது என்று சொல்லவேண்டும். முதலிலே மனைக்கட்டை உயர்த்திக்கொண்டுதான் வீடு கட்டவேண்டுமென்ற ஒரு முறையை அனுஷ்டித்தால் உண்மையிலேயே வீடு கட்டும் திட்டம் பலனளிப்பதாகும்.

விவசாயத் துறையில் இருக்கும் மக்களுடைய வீடுகளை அப்புறப்படுத்தக்கூடாது என்ற சட்டம் நம்முடைய சர்க்காரிலே ஏற்படுத்தப்பட்ட பிறகு, அதிகமான மனைக் கட்டு வாங்கிக்கொடுக்கும் நிலைமை கூடக் குறையும். அப்படிக் குறைந்தால் அவரவர்கள் இருக்கும் இடங்களில் வீடு கட்டிக்கொள்வதற்கு அவர்களுக்கு சொசைட்டி மூலமாக கடன் கொடுத்து உதவி செய்தால் மிகவும் நலமாக இருக்கும். ஆனால், கிராமங்களில் வீடு கட்டும் திட்டம் என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 25 லட்ச ரூபாய் தான். மூன்றாவது திட்டக் காலத்தில் வீட்டு மனைக்கட்டுகள் அதிகமாக வாங்கவேண்டிய அவசியம் இருக்காது. வீடு கட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் தான் அதிகமாக இருக்கும். அதை சொஸைட்டி மூலமாகச் செய்தால்தான் சுலபமாக முடியும். இந்த 25 லட்ச ரூபாயையும் மற்ற துறைகளில் செலவிடும் பணங்களையும் எடுத்து சொஸைட்டிகளுக்கு அதை ஈடு செய்து, 25 லட்சத்தை அதிகப்படுத்தி, நம்முடைய மாகாண சர்க்கார் செய்தால் உண்மையிலேயே வீடு கட்டும் பிரச்சினைகள் சொசைட்டிகள் மூலமாகவே வெகு சுலபமாகத் தீர்ந்துவிடும்.

பகல் உணவுத் திட்டத்தின்கீழ் ஒரு குழந்தைக்கு 15 நயா பைசே செலவில் சாப்பாடு போடுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் விலைவாசி உயர்வில் இந்தத் தொகையில் உணவு கொடுப்பது சாத்தியமாக இருக்காது. அதைக்கொண்டு

ஓரளவு தான் குழந்தைகளுக்குச் சாப்பாடு கிடைக்கிறது. ஓரளவு சாப்பிடுகிறார்கள் என்று சொல்ல முடியுமே தவிர, உண்மையிலேயே ஒரு குழந்தை வளருவதற்குத் தகுதியான, போதுமான உணவு கிடைக்கவில்லை. ஐந்து வயதிலிருந்து பத்து வயதுக்குள் உள்ள ஒரு குழந்தை நன்றாகச் சாப்பிட்டு வளர்ச்சி பெறவேண்டுமானால், அந்த அளவு ஏழை மக்களால் வசதி செய்து கொடுக்க முடியாது என்ற கஷ்டத்தை உணர்ந்துதான் ஒருவேளையாவது நல்ல சாப்பாடு கொடுக்கலாம் என்று சர்க்கார் பகல் உணவுத் திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த ஒரு வேளை உணவாவது அவர்களுக்குப் போதுமான அளவு கொடுக்க முடிகிறதா என்றால் ருசியோடு சாப்பிடக்கூடிய அளவு கொடுக்க முடியவில்லை. சர்க்கார் உத்தரவுக்கிணங்கி சாப்பாடு போட வேண்டுமென்ற நிலையில் அனேக இடங்களில் செய்யப்பட்டு வருகிறது. ஆகவே, 15 நயே பைசே என்று இருப்பதைக் கூடுதலாக்க வேண்டும். வேறு மான்யத்திலிருந்து ஈடு செய்தாலும், குழந்தைகளின் வளர்ச்சியை முன்னிட்டு, அதைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

ஹரிஜனங்களுக்குக் குடியிருப்பு வசதி செய்யவேண்டிய விஷயத்தில் நூற்றுக்கு 90 பங்கு மக்களுடைய குடியிருப்புத் தொல்லைகள் அகற்றப்பட்டு விட்டன என்றுதான் சொல்ல வேண்டும். முதலில் கொண்டுவந்த நம்முடைய நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு சம்பந்தமாக ஒரு கட்டுப்பாடு வந்தது. அதாவது யார் யார் விவசாயம் செய்கிறார்களோ அவர்கள் குடியிருப்பைவிட்டுக் காலி செய்யவேண்டியதில்லை என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடி, கோயில் நிலங்களைப் பொறுத்தும் சட்டம் கொண்டுவரும்போது, கோயில் நிலங்களில் குடியிருக்கும் விவசாயிகளை அப்புறப்படுத்தக் கூடாது என்று சொல்லப்படுகிறது. ஆனால், விவசாயத்திலே சம்பந்தப் படாமல் சாதாரண கூலிகளாக இருப்பவர்களுக்கு குடியிருப்புக்குதான் மிகவும் கஷ்டமாக இருக்கும்.

ஆகவே பொதுவாக ஹரிஜனங்களுக்கு என்று மட்டும் அல்ல, வன்னியர், கள்ளர், தேவர், அகமுடையர்கள் என்று சொல்லப்படுகிற பிற்பட்ட வகுப்பினர்கள் எல்லோருக்கும் இந்தத் தொல்லை இருக்கிறது. குடியிருப்புக்கு மனைகள் கிடைப்பது இல்லை. எப்பவோ, யார் காலத்திலோ ராஜாக்களாலே கொடுக்கப்பட்ட ஜாகீர்களை வைத்துக்கொண்டு பலர் அநுபவிக்கிறார்கள். எதற்காகக் கொடுத்தார்கள், ஏன் கொடுத்தார்கள், இவர்கள் அவற்றுக்கு வரி கட்டுகிறார்களா இல்லையா என்பது ஒன்றும் தெரியாது. ஆனால் சொந்த பாத்யதை கொண்டாடுகிறார்கள். இப்படி எப்பவோ நாநூறு ஐநூறு வருஷங்களுக்கு முன் கொடுக்கப்பட்ட சொத்து என்பதற்காக அவர்கள் அதில் உரிமை கொண்டாடுகிற பரம்பரை பாத்யதையை ஒழித்துவிட்டு அவ்விடங்களில் குடியிருக்கிற ஏழை எளியவர்களுக்கே அந்த மனைக்கட்டுகளை கூட்டுறவு மூலம் உரிமையாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri K. B. S. Mani] [11th November 1961

அடுத்து மீனவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் நம்முடைய சர்க்கார் அவர்களுக்கு இயந்திரப் படகுகள், வலை முதலியவை எல்லாம் கொடுத்து உதவி செய்து வருகிறார்கள். இந்தத் துறையில் எங்கள் வட்டாரத்தில் நல்ல முன்னேற்றமாக காரியங்கள் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் கிட்டத்தட்ட 35 முனிசிபாலிட்டிகளில் இந்த மீனவர்களுக்கு மார்க்கெட் வசதி செய்யப்பட்டிருக்கிறது. மீன் விற்பதற்கும் கருவாடு விற்பதற்கும் வசதி செய்துகொடுக்கப்படுகிறது. இதே நிலையில் அவர்கள் இருந்துவிடாமல் இருப்பதற்கு காட்லிவர் ஆயில், ஷார்க்லிவர் ஆயில் போன்ற மீன் எண்ணெய்களை எவ்வாறு எடுப்பது என்பது போன்ற வழிகளை அவர்களுக்குச் சொல்லித்தர வேண்டும். இதற்காக ஆங்காங்கே அவர்களுக்கு தொழிற்சாலை ஏற்படுத்தித்தர வேண்டும். எல்லாவிடங்களிலும் என்று இல்லாவிட்டாலும் எதாவது ஓர் இடத்திலாவது பரிட்சார்த்தமாக ஒரு திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களையே அங்கத்தினர்களாகச் சேர்த்து, அவர்களே நடத்துகிற ஒரு தொழிற்சாலையாக அது இயங்கவேண்டும். உண்மையில் அப்போதுதான் அவர்கள் நிலைமை சற்று முன்னேற்றமடையும். இப்போது பாவம், காலையில் கலயத்தில் கொஞ்சம் பழைய சோற்றை எடுத்துக்கொண்டு அவன் கடலில் போய்விடுவதும், மாலையில் வயிற்றைக் கடல் மணலில் அழுத்திக்கொண்டு படுத்துவிடுவதும் பரிதாபகரமாக இருக்கிறது. இந்த மூன்றாவது திட்டத்திலே அவர்களுடைய நன்மைக்காக இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித்தரவேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **Sri R. KRISHNASAMI NAIDU :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை யொட்டி நான் கொடுத்துள்ள திருத்தத்தை வற்புறுத்தி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பெருத்த அளவில் இப்போது வகுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ராஜ்யம் சம்பந்தப்பட்ட அளவிலே முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைவிட இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன என்ன புதிய அம்சங்கள் எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை புத்தக ரூபமாகவே நமது அரசாங்கத்தார் அச்சிட்டு வழங்கியிருக்கிறார்கள். வாழ்க்கை சம்பந்தப்பட்ட மட்டில் ஒவ்வொரு துறையில் உள்ளவர்களுக்கும் எந்த அளவில் இந்தத் திட்டம் உபகாரமாக இருக்கும் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ள முடிகிறது. இந்த ஐந்தாண்டு திட்டங்களினால் என்ன பயன்? பொதுத் துறையைவிட தனியார் துறைதானே அதிகம் வளர்ந்திருக்கிறது என்று சிலர் பேசுகிறார்கள். பொதுத் துறையோ, தனியார் துறையோ முதலில் நம்நாட்டில் பல தொழில்கள் வளர்ந்திருக்கின்றன. இரண்டாவது முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்தம் 1,560 கோடி ரூபாய் பொதுத்துறை என்றால் தனியார் துறை 1,800 கோடி. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத் துறையில் 3,650 கோடி என்றால் தனியார் துறையில் 3,100

11th November 1961] [Sri R. Krishnasami Naidu]

கோடியாகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத் துறை 6,300 கோடி, தனியார் துறை 4,100 கோடிதான். இப்படி படிப்படியாக தனியார் துறையைக் காட்டிலும் பொதுத் துறை வளர்ந்துகொண்டேதான் இருக்கிறது. இதை யாரும் மறுக்க முடியாது. புள்ளி விவரங்கள் இருக்கின்றன. ஆனால் வேண்டுமென்றே ஒருசிலர் தனியார் துறை தானே வளர்கிறது, செல்வம் பணக்காரர்களிடத்திலே தானே குவிகிறது என்று பேசலாம். இதற்கு நாம் பதில் சொல்லவேண்டியது இல்லை. இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களே சொல்லும். இந்த விவரங்களை நன்றாகப் படித்துப் பார்த்தால் சோஷலிச அடிப்படையில் நமது சமுதாயத்தை அமைத்துக் கொள்வதற்கு ஏற்றவகையில் எப்படித் திட்டங்கள் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். நாட்டில் இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றினாலும் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது, மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்பதை நாம் இங்கே இப்போது விரிவாகக் கூறத் தேவையில்லை. நம்முடைய மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விரிவாகக் கூறியிருக்கிறார்கள். இந்த மூன்றாவது திட்டத்தின் சிறப்பியல்புகளைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்கள். வரக்கூடிய திட்டங்கள் மூலமாக நம்முடைய நாட்டை ஒரு நல்ல செல்வ வளமுள்ள நாடாக ஆக்குவதற்கான வழிமுறைகள் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படி திட்டமிட்டு, திட்டமிட்டு திட்ட அடிப்படையில் முன்னேறுவதற்கு நாம் முயற்சி செய்துகொண்டிருக்கும்போது வேண்டுமென்றே சிலர் உண்மைகளை மறைத்துப் பேசுகிறார்கள். வெளியில் பேசுவது வேறு விஷயம். சட்ட மன்றத்திலேயே அவ்வாறு பேசுவதைப் பார்த்தால் வேதனை அடையவேண்டியிருக்கிறது. கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்களை எல்லாம் பார்க்காமல் இப்படிப் பேசுகிறார்களே என்று நாம் வேதனை அடையவேண்டியதாக இருக்க, அவர்களும் தாம் வேதனை அடைவதாகவே பேசுகிறார்கள். வீடென்று இருந்த இடம் இல்லை, [illegible] பெருக்கி, நீர் தெளித்து கோலம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள், தலையிலே எண்ணெயில்லை காகிதப் பூ வைத்துக் கொள்ள கற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று என்ன என்னவோ மக்களிடத்தில் எடுத்துப் பேசிக்கொண்டிருக்கிறார்கள், ஒரு சிலர்.

வீடு சிறிய வீடாக இருந்தாலும் அதையும் சுத்தமாக வைத்து, முற்றத்தை நன்றாக மெழுகி அதிலே கோலம் இடுவதற்கான மனப்பண்பு பெண் மக்களுக்கு ஏற்பட வேண்டுமானால் அவள் மனதிலே திருப்தி இல்லாமல் அந்தக் காரியத்தைச் செய்ய முடியாது. மனப்பண்பாடு வாழ்க்கைத் தர உயர்வைக் காட்டுகிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தத் திட்டங்கள் மூலம் பொது மக்கள் வாழ்க்கைத் தரம் எவ்வளவு தூரம் உயர்ந்திருக்கிறது என்பதை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும் தெரிந்து கொள்ள முடியும். தற்போது மக்கள் வெள்ளையாகத் துணிகளைக் கட்டிக் கொள்ளப் பழகியிருக்கிறார்கள். வெள்ளையாகத் துணிகள் கட்டிக் கொள்ள வேண்டுமென்றால் துணிகள் அதிகமாக இருந்தால் தான்

கட்டிக்கொள்ள முடியும். ஒரு ஜோடி வேட்டி வைத்திருப்பவர்கள் பல ஜோடிகள் வைத்திருக்க வேண்டும். அதிகமான அளவுக்குத் துணிகளை வாங்குவதற்கான அளவுக்குப் பொருளாதார வசதி பெருகியிருக்க வேண்டும். இது எதைக் காட்டுகிறது, அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயருகிறது என்பதில் சந்தேகம் இல்லை. இவ்வாறு வாழ்க்கைத் துறையின் ஒவ்வொரு படியிலும் நல்லபடியான முன்னேற்றம் இன்று காணப்படுகிறது.

தற்போது நம்முடைய நாட்டின் மக்களுடைய சராசரி வயது உயர்ந்திருக்கிறது என்பதை எல்லாரும் ஒப்புக் கொள்ள முடியும். 1947-ம் வருஷத்திற்கு முன்னால் நம்முடைய இந்தியாவின் சராசரி வயது என்னவாக இருந்தது? இப்போது எப்படி 47 ஆக உயர்ந்தது? இதெல்லாம் மந்திர வித்தையா? காகிதத்தில் எழுதிக் காட்டி விட்டுப் பிறரை ஏமாற்றுவதற்காகவா என்பதையெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பொது மக்களுக்கு இந்தத் திட்டங்களிலே ஆர்வம் பிறக்க வேண்டும். அவர்களுடைய மனதிலே விஷத்தைத் தூவி விடக்கூடாது. உண்மைக்கு மாறான விஷயங்களை அரசியல் கட்சிகள் உண்டு பண்ணிக் கொண்டே இருந்தால் பொதுமக்களின் மனதிலே குழப்பங்கள் ஏற்படும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தாமல் இருப்பது ஒரு பெரிய தர்மம் கூட. உண்மையான விஷயங்களைக் கூறுவதால் நாட்டின் முன்னேற்றத்திற்குச் சாதகமாக இருக்குமேயொழிய கேடில்லை. தப்பான புள்ளி விவரங்களையும், கணக்குகளையும் கொடுப்பதன் காரணமாக நாட்டின் முன்னேற்றந்தான் பாதிக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

குடியிருப்புக்குக் கஷ்டமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளை வருஷா வருஷம் செய்து கொண்டுதான் வருகிறோம். சில அரசியல் கட்சிகள், குறிப்பாக கம்யூனிஸ்டுகள் "காலி இடங்களில் போய்க் குடிசை போட்டுக் கொண்டு இருந்து விடுங்கள், அப்போதுதான் அரசாங்கம் உங்களுக்குக் குடியிருப்புக்கு இடம் கொடுக்கும்" என்று மக்களைத் தூண்டிவிடுகிறார்கள். ஒன்றும் தெரியாத அப்பாவி மக்களைத் தீய எண்ணங்களினால் தூண்டும் விதமாகப் பேசி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சங்கடத்தை ஏற்படுத்துகிறார்கள். இப்படியெல்லாம் பொது மக்களைத் தவறான வழியில் செலுத்தி சங்கடங்களை உண்டாக்கி விட்டால் அவர்கள் அரசாங்கத்திற்கு விரோதமான மனோபாவமுள்ளவர்களாக மாறுவார்கள் என்ற காரணத்தால்தான் இப்படியெல்லாம் செய்கிறார்கள். இதுதான் அரசியல் கட்சிகளுக்கேற்ற வேலைத் திட்டமா?

சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்டவரையில் விளை நிலங்களை எடுத்துக்கொண்டால் எல்லா இடங்களிலும் அதிகப்படியான விளைச்சல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கான சாதனங்கள், பம்ப் செட்டுகள் எல்லாம் வழங்கப்படுகின்றன. நாட்டிலே நல்லமுறையில் சுபிட்சம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. 1949-50

வருஷங்களில் உணவுப் பொருள்கள் இத்தனை அவுன்ஸ் என்ற கணக்கில் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது உணவுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கிறது. எப்படி அதிகமான அளவில் உற்பத்தி செய்ய முடிந்தது, விவசாயம் செய்வது கட்டுபடியாகக் கூடிய வகையில் இந்தத் திட்டங்களின் மூலம் பலவகையிலும் உதவி செய்ததுதான் அதற்குக் காரணம். கடன் வசதிகள் பெருவாரியாகச் செய்யப்பட்டிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. ஆந்திரா, கேரளம், கன்னடம் ஒன்று சேர்ந்திருந்த காலத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 3 கோடியிலிருந்து 6 கோடி வரை கொடுக்கப்பட்டு வந்த கடன் தொகை தற்போது 26 கோடியாக வளர்ந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 50, 60 கோடியாக உயர்த்தப்படவிருக்கிறது. இதனால் லேவாதேவிக்காரர்கள் மிக மிகக் குறைந்து விட்டார்கள் என்று சொல்ல முடியும். இந்த முறையில் நல்லபடியாகத் திட்டங்கள் அமைந்திருக்க அதில் அதிருப்தி ஏற்படும் வகையில் சிலர் காரியங்களைச் செய்து வருகிறார்கள். விவகாரத்திற்காக வைத்துக் கொள்வோம். அரசாட்சியை நடத்துவதற்கான பொறுப்புகளை அந்தக் கட்சிக்காரர்கள் ஏற்றுக்கொள்ளும்போது, தற்போது அவர்கள் மக்கள் மனதிலே தப்பான அபிப்பிராயம் ஏற்படும்படிச் செய்ததானது அவர்கள் மேலேயே திருப்பினால் எப்படிச் சமாளிப்பது என்ற விஷயத்தையெல்லாம் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தத் திட்டத்திற்கு 1,000 கோடி வேண்டும், 500 கோடி வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் அந்த அளவுக்குத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளையும், கருத்துக்களையும் என்ன சொன்னார்கள். அவர்கள் உருப்படியான யோசனைகளைச் சொன்னார்களா? ஏதோ காங்கிரஸ் மீது துவேஷத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில்தான் அவர்கள் இந்த மாதிரியெல்லாம் பேசுகிறார்கள் என்று கூறி இந்தத் திட்டத்தை மனப்பூர்வமாக ஆதரித்து திருத்தத்தை ஏற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER: I have reduced the time-limit to ten minutes.

SRI T. KARIA GOUNDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் எப்போது பேச வந்தாலும் அப்போது ஐந்து நிமிடங்களாக நேரத்தைக் குறைத்து விடுகிறார்கள். இப்போது கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இரண்டு நாட்களாக இந்த மன்றத்தில் பல நண்பர்கள் இந்தத் திட்டத்தை ஆதரித்தும் பல நண்பர்கள் எதிர்த்தும் பேசினார்கள். ஆனால், நேற்றையதினம் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் 'நமது மாநிலத்திற்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் 291 கோடி ரூபாய் பங்கு வாங்கியிருப்பது சரியல்ல' 10-00 a.m.

[Sri T. Karia Gounder] [11th November 1961

என்று சொன்னார்கள். அதைப்போலவே, அவர்கள் கேட்கின்ற திராவிட நாட்டின் பகுதியாக இருக்கின்ற ஆந்திரத்திற்கும் கேரளத்திற்கும் மைசூருக்கும் அதிகமான பங்கு கொடுத்திருக்கிறார்கள் என்று கூறி, அதைப்பற்றி வருத்தமும் அடைந்தார்கள். அதுவுமன்னியில் உத்திரப் பிரதேசத்திற்கு 500 கோடி ரூபாய், 600 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். இதைப்பற்றிக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுடைய ஜனத் தொகையைக் கணக்கிட்டுப் பார்த்தால், நம்மை விட இரண்டு மடங்கு அவர்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும். அங்குள்ள ஜனத்தொகை 6 கோடி 36 லட்சம் என்பதை நண்பர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே, மத்திய சர்க்கார் நம்மை ஏமாற்றிவிட்டதாகச் சொல்வது எந்த விதத்திலும் உண்மையல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் நிதி அமைச்சர் மாயா ஜால வித்தை செய்கிறார்கள் என்று நேற்றையதினம் சிலர் சொன்னார்கள். நாங்கள் சிறு பிள்ளையாக இருந்தபோது தெருக்களில் கண்கட்டி வித்தைக்காரர்கள் வந்து வித்தை காட்டுவது வழக்கம். ஒரு மாங்கொட்டையை நட்டு விட்டு கூடையால் மூடிவிட்டுப் பின்னால் திறக்கும்போது மாஞ் செடி காய்த்திருக்கும். இன்னொரு தடவை என்ன செய்வார்களென்றால் ஒரு பெண்ணைக் கூடையினால் மூடிவிட்டு, கத்தியைக் கொண்டு குத்துவார். சிறிது நேரம் கழித்துத் திறந்து பார்த்தால் அந்தக் கூடையில் உள்ளே யாரையும் காண முடியாது. உடனே அவர், 'ஏ புள்ளே' என்று கூப்பிடுவார். அந்தப் பெண் ஒரு மூலையிலிருந்து வருவாள். அந்தமாதிரி மாயாஜால வித்தை காட்டவில்லை நம் கனம் நிதி அமைச்சர் அவர்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும், இரண்டாவது திட்ட காலத்திலும் நடந்திருக்கிற வேலைகளை இந்த நண்பர்கள் போய்ப் பார்ப்பதில்லை. பரம்பிக்குளம், லோயர் பவானி, அமராவதி, கிருஷ்ணகிரி, சாத்தனூர், மணிமுத்தாறு, வைகை இப்படிப்பட்ட நீர்த் தேக்கத் திட்டங்களையெல்லாம் பார்த்தால் நண்பர்கள் இந்தமாதிரி சொல்ல மாட்டார்கள். தேர்தலுக்கு வேண்டுமானால் இந்த மாதிரி இவர்கள் சொல்லலாம்: (குறுக்கீடு) ஆம். நாங்கள் தேர்தலில் மக்களிடத்தில் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இன்னதெல்லாம் நிறைவேற்றப் போகிறோம் என்று சொல்லிவிட்டுத்தான் தேர்தலுக்கு நிற்கப் போகிறோம். ஆனால், இவர்களுடைய திட்டம் என்ன? காங்கிரசைத் தோற்கடிப்பது மட்டுந்தான். திட்டம் வேண்டாம் என்றும் சிலர் சொல்கிறார்கள். திட்டம் இல்லாமலா இவைகளெல்லாம் நடந்திருக்கின்றன என்பதையும் நண்பர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இப்போது தேர்தலுக்கென்று நண்பர்கள் யார் யார் கூடவெல்லாமோ ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இந்த ஒப்பந்தமெல்லாம் சரிதானா என்பதையும் இவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். வாக்காளர்களையெல்லாம் இந்தக் காலத்தில் சுலபமாக ஏமாற்றிவிட முடியாது. சமீபத்தில் சென்னையில்கூட நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேறிய காலத்தில் முப்பது ஏக்கரைக் குறைக்க வேண்டும் என்று கொடி பிடித்து ஆர்ப்பாட்டம் நடத்தி

11th November 1961] [Sri T. Karia Gounder]

னார்களே, இவர்களுக்கு என்ன கிடைத்தது? இதையெல்லாம் இவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எங்களுக்கெல்லாம் இந்த நாட்டில் அக்கறையில்லையா? இவர்களது சினிமாப்படத்தில் அணை கட்டுகிறார்களே அந்த மாதிரியா நிதி அமைச்சர் அவர்கள் அணை கட்டியிருக்கிறார்கள்? பல திட்டங்களை நன்கு நிறைவேற்றியிருப்பதன் காரணமாகத்தான் மக்கள் இன்று நல்ல பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தொழில் வளத்தைப்பற்றி இன்று இவர்கள் சொல்கிறார்கள். 291 கோடி ரூபாய் தானே வாங்கியிருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். ஆனால், தனியார் துறையிலிருந்தும் மத்திய சர்க்காரிலிருந்தும் போடுகிற ரூபாயையெல்லாம் சேர்த்தால் ஆயிரம் கோடியாகிவிடும் என்பதில் சந்தேகமேயில்லை. இப்படியெல்லாம் இருந்துங்கூட வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்லுகிறார்கள். திருச்செந்தூர் பக்கத்தில் ராமகிருஷ்ணா லால், டாடா கம்பெனி, இவர்கள் பாதரசம் உற்பத்தி செய்யக்கூடிய தொழிலை ஆரம்பித்து ஐந்து கோடி ரூபாய் வரை செலவு செய்திருக்கிறார்கள். இன்னும் ஐந்து கோடி ரூபாய் செலவழிக்கப் போகிறோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். இதையெல்லாம் பார்த்தால், தமிழ்நாட்டை வடநாட்டார் ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்று சொல்வது எந்த அளவுக்குப் பொருந்தும் என்று தெரியவில்லை. இந்த நிலையில் நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் 291 கோடி ரூபாயைப் பயந்துபோய் வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்கள் என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்கள் திட்டத்தைச் சமர்ப்பித்து வைத்து ஆரம்பத்தில் சொன்னார்கள். இரண்டாவது திட்ட காலத்தில் 152 கோடி ரூபாய் திட்டத்திற்கு ஒதுக்கியிருந்தும் செலவழிந்த தொகை 186 கோடி ரூபாய். திட்டக் கமிஷன் சொல்வதையெல்லாம் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதில்லை. ஆகவே, மூன்றாவது திட்டக் காலத்திலும் இன்னும் சேர்க்கலாம் என்பதை அவர்கள் உறுதியாகச் சொன்னார்கள். அதிர்ஷ்டவசமாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்குப் போகப் போகிறார்கள். அங்கே நமது கோரிக்கைகளையெல்லாம் சொல்லத்தான் போகிறார்கள். தமிழ்நாட்டுக்கு கிடைத்திருக்கும் 291 கோடி ரூபாயோடு இன்னும் நூறு கோடி ரூபாய் வாங்கிவரத்தான் போகிறார்கள். அதில் சந்தேகமில்லை. ஆகவே, நண்பர்கள், 'அமைச்சர் அவர்கள் மாயா ஜால வித்தை காட்டுகிறார்கள்' என்று சொல்வதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லை. மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வரிப் பணத்தை வீணாக்குகிறார்கள் என்றெல்லாம்கூடச் சொல்கிறார்கள். இன்றைக்குக் கிராமங்களை எடுத்துக்கொண்டால், பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி எல்லா விதமான அதிகாரங்களையும் அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதன் காரணமாக கிராம மக்கள் அனைவரும் நலமாக இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயத்தைப்பற்றிப் பேசினார்கள். யார் பேசுகின்றார்கள்? விவசாயத்தைப்பற்றியே தெரியாதவர்கள், விவசாயத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். இவர்களுக்கு விவசாயத்தைப்பற்றி என்ன

தெரியும்? அம்மோனியம் சல்பேட் அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அமோனியம் சல்பேட் உரம் அதிகமாகப் போட்டால் பயிரின் நிறமே மாறிவிடும். கம்போஸ்ட் உரம், மாட்டுச் சாணம் அல்லது பசுந்தழை இவைகளையெல்லாம் நாம் அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்பதை விவசாயிகள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன். அமோனியம் சல்பேட்டை அதிகமாக உபயோகப்படுத்தினால் நிலமே உபயோகத்திற்கு இல்லாமல் போய்விடும். நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டது போன்று, நமது மூன்றாவது திட்டத்தில் விவசாயிகளுக்கு என்றே 26 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்தை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு விலைவாசிகளெல்லாம் உயர்ந்துகொண்டே இருக்கிறது, மக்களுடைய வாங்கும் சக்தி உயர்ந்திருக்கிறது என்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். கூரை வீட்டில்தான் இருக்கிறார்கள் என்று சொன்னாலும், அவர்கள் முன்பு இருந்த நிலையைக் காட்டிலும் நல்ல முறையில் வெள்ளைத் துணி கட்டுகிற அளவுக்கு வாழ்க்கைத்தரம் உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் உண்மையிலேயே பொருளாதாரத் துறையில் அவர்கள் உயர்ந்திருக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதையெல்லாம் மறந்துவிட்டு எதிர்க்கட்சியிலுள்ள சில கனம் அங்கத்தினர்கள் உண்மைக்கு மாறாகப் பேசுகிறார்கள். இது எதற்காக என்று பார்க்கும்போது, தேர்தலுக்காகத்தான் என்று தெரிகிறது. ஏதோ, தன் பெண்டாட்டிக்கு ஒருவன் புதுச் சேலை வாங்கிக் கொடுத்தானும். அதைப் பார்த்த எதிர் வீட்டுகாரர், இப்படி யார் வாங்கிக் கொடுப்பார்கள் என்று சொன்னானும்.

DEPUTY SPEAKER : The hon. Member's time is up.

SRI T. KARIA GOUNDER : ஆகவே, நாம் எல்லாத் துறையிலும் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். சுகாதாரத் துறையிலும் நல்ல முறையில் முன்னேறியிருக்கிறோம். கல்லூரிகளையும் பள்ளிகளையும்கூட ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனால், இவர்களுக்கு மட்டுந்தான் மக்களிடத்தில் கருத்து இருப்பதுபோலப் பல குறைகளை எடுத்துச் சொல்லுகிறார்கள். மீன் வளத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த சமூகத்தார் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கு உதவிகரமாக இருக்கக் கூடிய முறையில், வெளி நகரங்களுக்குச் சீக்கிரமாகக் கொண்டுபோய் விற்பனை செய்வதற்கு தெற்குக் கடற்கரையோரமாக நல்ல பாதை அமைத்து சௌகரியம் செய்து கொடுக்க மூன்றாவது திட்டத்தில் வழிவகை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, பாலாறு விஷயமாகப் பல தடவை பேசப்பட்டு வந்திருக்கிறது. காவேரித் தண்ணீரைக் கொண்டுவர பல முயற்சிகள் எடுத்துக்கொள்வதாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரில் போய் கனம் நிதி அமைச்சராக இருக்காமல் பி.டபிள்யூ.டி. அமைச்சராக இருந்து தமிழ்நாட்டுக்கு எவை எவையெல்லாம் தேவை என்பதை உணர்ந்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதுதான் நமது கோரிக்கை. அப்போது வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று சொல்வதற்கே இடமில்லாமல் போய்விடும்.

மலைவாசிகளைப் பொறுத்தவரை, ஏலகிரி மலையிலுள்ள வசதிகளைப் பயன்படுத்தி மத்திய சர்க்கார் உதவியுடன் ஒரு சுகவாச ஸ்தலமாக ஆக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில் பல வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது இந்த அரசாங்கம். அநேக புதிய பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. கல்லூரி அளவில் கூட இலவசக் கல்வி அளிப்பதற்கு இந்த அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறது.

கடைசியாக, பொருளாதாரத் துறையில் பின் தங்கிய மக்கள் எல்லோருக்கும் ஜாதிப் பாகுபாடு இல்லாமல் சர்க்கார் உதவி அளிக்கவேண்டும் என்ற மத்திய சர்க்காரின் அறிக்கையை யொட்டி, பொருளாதாரத் துறையில் பின்தங்கியிருக்கக்கூடிய எல்லோருக்கும் இலவசக் கல்வி அளிக்க சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதில் பேசுவதற்கு 10 நிமிஷ நேரம் அளித்த உதவி சபாநாயகருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI G. VAGHEESAM PILLAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சாதாரணமாக இந்த இரண்டு திட்டங்களிலேலே மக்கள் மத்தியிலே நல்ல நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. எல்லோரும் ஓரளவுக்கு சுகமாக வாழ முடியும் என்ற நம்பிக்கையிலே மக்கள் எல்லோரும் நன்றாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்ற விருப்பத்துடன் இருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து இந்த மக்களுடைய ஆதரவைத் திரட்டவேண்டும். நம்முடைய தமிழ்நாட்டிலே இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் ஒதுக்கிய தொகையைவிட அதிக ரூபாய் செலவழிக்கப்பட இருக்கிறது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 291 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதிலே கனம் நிதி அமைச்சர் அவர்கள் இன்னும் அதிகமாகச் செலவழிக்கக் கூடிய அளவுக்கு திட்டத்தை விரிவாகச் செய்து கொள்ளலாம் என்ற விவரத்தையும் நம்மிடம் சொன்னார்கள். எப்படி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகமாகச் செலவழித்தோமோ அந்த மாதிரியே நம் நாட்டு மக்களின் ஒத்துழைப்புடன் இன்னும் அதிகமாகச் செலவழித்து நல்ல வேலைகளைச் செய்ய முடியும் என்று நம்புகிறேன்.

தமிழ் நாட்டிலே எல்லாத் துறையிலும் முன்னேறியிருக்கிறோம். மக்களும் இதை உணர்ந்திருக்கிறார்கள். எந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமானாலும் முதலில் உணவு உற்பத்தியில் தான்

[Sri G. Vagheesam Pillai] [11th November 1961

அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அதிலும் காம்ஷியல் க்ராப்ஸ் போன்ற மூலப் பொருள்கள் இருந்தால்தான் திட்டங்கள் நிறைவேறும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 53 லட்சம் டன் உற்பத்தி செய்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 16 லட்சம் டன் அதிகமாக உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கிறோம்—அதாவது 31·2 சதவிகிதம் அதிகமாக உற்பத்தி செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். சாதாரணமாக தமிழ்நாட்டில் சராசரி 1,700 பவுண்டுக்கு மேல் உற்பத்தி ஆகியிருக்கிறது. மற்ற இடங்களில் 1,100 பவுண்டு வரைதான் உற்பத்தி ஆன போதிலும், நமது தமிழ்நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்கிறோம். இன்னும் 2,100 பவுண்டு வரையில் அதிகமாக உற்பத்தி செய்தால் 16 லட்சம் டன் சுலபமாக உற்பத்தி செய்துவிடலாம். அதற்கு வேண்டிய திட்டத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வகுத்திருக்கிறார்கள்.

அடுத்தபடியாக இன்னும் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் ப்ரொக்ராமுக்கு 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. இன்னும் அதிகமாகக்கூட செலவழிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். இன்றையதினம் நமது தமிழ்நாட்டிலே பல சின்னச் சின்ன நதிகள் இருக்கின்றன. உதாரணமாக தென் ஆற்காடு ஜில்லாவில் கடிலம், பெண்ணையாறு, மணிமுத்தாறு நதி போன்ற நதிகளில் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அணைகள் மணல் போக்கி இல்லாமல் தூர்ந்து போயிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் மணல்போக்கி ஏற்படுத்த வேண்டும். இன்னும் நமது ராஜ்யத்தில் குளம் குட்டைகள் அதிகமாக இருக்கின்றன. அதிலும் தென் ஆற்காடு ஜில்லாவில் அநேக ஏரிகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் மராமத்து செய்யவேண்டியிருக்கிறது. இதற்காக பல திட்டங்களைப் போட்டு சுமார் 8 லட்சம் ரூபாய் வரையில் செலவழித்தால் நல்ல பலன் கிடைக்கும். டெல்டாப் பிரதேசத்தில் பாய்ச்சல் ஆதாரம், வடிகால் ஆதாரம் இவைகளைச் செப்பனிட்டால் நல்ல பலன் அடைய முடியும். உதாரணமாக சிதம்பரம் தாலுகாவில்—நான் இதைப்பற்றி இந்த மன்றத்திலேயே சில சமயங்களில் சொல்லியிருக்கிறேன்—ஆயிரம் எக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டு நிலங்களுக்கு வாய்க்கால்களை சர்க்கார் செலவில் வெட்டிக் கொடுத்ததால் இரு போக சாகுபடி அதிகமாகி 5 வருஷத்தில் 50,000 எக்கருக்கு பாய்ச்சல் வசதி ஏற்பட்டு உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. ஆமூர், முசையூர் போன்ற இடங்களில் 1,300 எக்கர் விளைச்சலில் இருந்தது 1,000 எக்கர் அதிகமாகி 15,000 மூட்டை நெல் அதிகமாக விளைந்திருக்கிறது. டெல்டாப் பிரதேசத்தில் தனியாக ஒவ்வொரு இடத்திற்கும் ஒவ்வொரு ஸப்டிவிஷன் போட்டு, அதற்கு ஒரு ஜூனியர் என்ஜினீயரையாவது போட்டு, பாய்ச்சல் ஆதாரம், வடிகால் ஆதாரம் இவைகளை நல்ல முறையில் செப்பனிட வேண்டும். குடி மராமத்து சட்டப்படி ஆயிரம் எக்கருக்குக் கீழ் ஆயக்கட்டு உள்ள குளங்களையும் வாய்க்கால்களையும் எடுத்துக்கொண்டு செய்யவேண்டும். இப்போது சாதாரணமாக பஞ்சாயத்து யூனியனில், உணவு உற்பத்தி முதற்குறி

11th November 1961] [Sri G. Vagheesam Pillai]

என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், பல இடங்களில் ரோடு போடுவது, சுகாதாரம், கல்வி வசதி இவைகளைவிட இந்த உணவு உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தவில்லை. அதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்த வேண்டும். முக்கியமாக ப்ளாக் லெவலில் வாய்க்கால், குளங்கள் ஆகியவைகளை குடி மராமத்து சட்டத்தின்கீழ் மராமத்து செய்து அதற்கான செலவை கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்துவிடலாம். இதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆர்ட்டீஷியன் கிணறுகளில் 500 கிணறுகள் ஏற்படுத்த பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாக ஒதுக்கப்படவேண்டும். அதோடு பவர் டிரில் கிடைக்கவில்லை, அவைகளை வரவழைப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதையெல்லாம் கவனித்து 500 என்பதை 1,000-ஆகச் செய்தால் நல்லது. போர்வெல் 2,000 வெட்டுவதற்கு 50 லட்சம் கடன் கொடுக்க பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். உதாரணமாக எங்கள் தாலுகாவில் மாத்திரம் 75 போர்வெல் சாங்க்ஷன் செய்யப்பட்டு அவைகளுக்கு இப்போது 200 மனுக்களுக்கு மேல் வந்திருக்கின்றன. ஒரு தாலுகாவிலேயே இவ்வளவு என்றால் தென் ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக அடியூற்று தண்ணீர் இருக்கிறது; அதே மாதிரி மற்ற ஜில்லாக்களிலும் இருக்கிறது. ஆகையால் 2,000 என்பதை இன்னும் அதிகமாக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

பொறுக்கு விதை சம்பந்தப்பட்ட மட்டில் கிராம சகாயக்குகள் என்று ஏற்படுத்தி மணங்குக்கு இரண்டு ரூபாய் அதிகமாகக் கொடுக்கவேண்டும், பஞ்சாயத்து யூனியன் இதை விநியோகிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மோசமான விதைகளைக் கொடுத்துவிட்டால் முளைக்காமல் உணவு உற்பத்தியே பாதிக்கப்பட்டுவிடும். இப்போது யார் கொடுத்துள்ள விதை என்று சொல்லக்கூடிய நிலை இருப்பதால் கொடுக்கக்கூடியவர்கள் கொஞ்சம் கவனத்தோடு நல்ல விதைகளாகக் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். இதற்காக 120 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

பசுந்தாள் உரம் நிலத்திற்கு மிகவும் அவசியம். நிலங்களுக்கு இயற்கை உரமும் செயற்கை உரமும் இரண்டும் வேண்டும். இயற்கை உரம் 75 சதவிகிதம், செயற்கை உரம் 25 சதவிகிதம் அவசியம் தேவை. அதற்கு பசுந்தாள் உரத்தைத் தவிர குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடியது வேறு இல்லை. டெல்டாப் பிரதேசத்தில் 10 ரூபாய் வரையில் எக்கருக்கு விதைகளுக்கு செலவு செய்து 10 ரூபாய் கொடுத்து காவல் போட்டு மொத்தம் 20 ரூபாய்க்கு 5,000 அல்லது 10,000 பவுண்டு கிடைக்கிறது. இந்தப் பசுந்தாள் உரத்தைப் போட்டால்

நிலம் கெடாமல் இருக்கிறது. இப்போது 20 சதவிகிதம் சப்ஸிடியும், 80 சதவிகிதம் விவசாயிகள் பணம் கொடுக்கவேண்டும் என்ற திட்டம் இருக்கிறது. இதற்கு 1 லட்சம் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைவிட்டு பாதி விலைக்கு விதைகளைக் கொடுத்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பசுந்தாள் உரம் பரவலாகக் கிடைக்க வேண்டுமென்ற திட்டம் நல்ல முறையில் நிறைவேறும். இதற்கு 2 லட்சம் அல்லது 3 லட்சம் ரூபாய்தான் செலவாகும். கொஞ்சம் செலவு ஆனாலும் நல்ல பலன் ஏற்படும். அதையும் விவரமாக ஆராயவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் பயிர் பாதுகாப்பு ரொம்பவும் முக்கியம். பயிர்களுக்கு ஸ்ப்ரேயர் உபயோகப்படுத்த வேண்டுமென்று விவசாயிகளுக்குத் தெரிந்து வருகிறது. பவர் ஸ்ப்ரேயர் போன்ற கருவிகளை ஒவ்வொரு பிளாக்கிலும் 2–3 ஏற்படுத்தி, விவசாய இலாகாவின் பொறுப்பிலேயே கொடுத்து ஏக்கருக்கு இவ்வளவு என்று பணம் கட்டினால் அவர்களே போய் மருந்து அடிக்கவேண்டும் என்ற முறையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

ரூரல் ஹவுஸிங் ஸ்கீமின்கீழ் பெரிய ஊர்களில் கட்டிடங்கள் வருகின்றன, கிராமங்களில் ஒரு சில இடங்களில்தான் கட்டுகிறார்கள். கூட்டுறவு முறையில் அதிக கவனம் செலுத்தினால் கிராமங்களில் அதிக வீடுகள் கட்டக்கூடிய நிலைமை ஏற்படும். அதையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

DEPUTY SPEAKER: உங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த நேரம் ஆகிவிட்டது.

SRI G. VAGHEESAM PILLAI: அப்புறம் வில்லேஜ் ரோடு பராமரிப்பில் பிளாக் வந்த பிறகு லம்ப் ஸம் கிராண்ட் என்று 4 லட்சம் கொடுத்து அதையும் செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்னும் எல்.டி. ஒர்க்ஸுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது. இன்னும் அதிகமாக ஒதுக்க வேண்டும். இப்படி எல்லாத் துறையிலும் செய்தால்தான் அதிக ரோடுகள் போட வாய்ப்பு ஏற்படும். அதை நாம் தொடர்ந்து தனி கிராண்டாக கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெருஞ்சாலைகள் சம்பந்தமாக . . .

DEPUTY SPEAKER: நேரம் ஆகிவிட்டது. தயவுசெய்து முடித்துக்கொள்ளுங்கள்.

SRI G. VAGHEESAM PILLAI: அதோடு ஈஸ்ட் கோஸ்ட் ரோடும் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் பேச்சை நிறுத்திக்கொள்கிறேன்.

* SRIMATHI C. KOLANTHAI AMMAL: கனம் உதவி சபாநாயகர் அவர்களே நம்முடைய நிதி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும், தமிழ்நாட்டின் மூன்றாவது ஐந்தாண்டுத்

திட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்று ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வறண்ட பிரதேசமாக இருக்கக்கூடிய, பெரிய நீர்ப்பாசன வசதியைப் பெறாத மாவட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் அளவிலே சிறிய நீர்ப்பாசன வசதியை பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதற்கு நான் மிக்க மகிழ்ச்சி அடைவதோடு, நான் நன்றியும் செலுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று கேட்டால், கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து பெரிய நீர்ப்பாசன வசதி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய சில மாவட்டங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தினால், கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்வதைவிட பரவலான முறையிலே மழை குறைந்த இடங்களுக்கும், மேட்டுப் பிரதேசங்களுக்கும், வறண்டு இருக்கும்படியான இடங்களிலுமுள்ள விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி கொடுக்கக்கூடிய முறையிலே இந்தத் திட்டமானது பயன்படுகிறது. அதற்காக விவசாய பெருமக்கள் சார்பாக நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாதது மின்சாரம். இந்த மின்சாரத்தை உற்பத்தி செய்வதிலே நாம் மின்வேகத்தில் செல்கிறோம். ஆனால் விநியோகம் செய்யும்போது, விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் வழங்கும்போது காலதாமதமாகிறது என்று சொன்னால், அது மின்சாரத்தினால் அல்ல. விநியோகிக்கக்கூடிய முறையிலே அவர்களுக்கு கம்பிகள், கம்பங்கள் போன்றவைகள் கிடைக்காத காரணத்தினாலே, மின்சாரம் வழங்குவதற்கு சாங்ஷனாகி 1½ அல்லது 2½ ஆண்டுகள் ஆகியும்கூட, கனெக்ஷன் கொடுக்க முடியாத அளவிலே விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, மின்சாரத்தை உபயோகித்துக் கொள்வதற்கு துணைக் கருவிகளாக உள்ளவைகளையும் நாம் இந்த நேரத்திலே உற்பத்தி செய்யவேண்டும். அதற்கான வாய்ப்பையும் இந்த திட்ட காலத்திலேயே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, என் தொகுதியைப் பொறுத்த வரையில் இயற்கையாகவே அது மேட்டுப் பிரதேசமாக அமைந்துவிட்டது. பெரிய நீர்ப்பாசன வசதி பெறாதது. ஆனால் இப்போது தாராளமாக மழை பெய்துகொண்டு வருகின்ற காரணத்தினாலும், குந்தா கழிவு நீர்த் திட்டமானது சாத்தியப்படும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றமையாலும் சற்று மகிழ்ச்சியடைய வேண்டியிருக்கிறது. ஆகவே, பல்லடம், தாராபுரம், கோயம்புத்தூர் போன்ற தாலூகாக்களுக்கு குந்தா கழிவு நீர்த் திட்டத்தை விஸ்தரிப்பதற்கான வாய்ப்பை மேலும் பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்தச் சமயத்திலே ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். அதோடுகூட, பரம்பிக்குளத் திட்டத் தண்ணீரானது 2, 3 தாலூகாக்களுக்கு பயன்பட இருக்கிறது. அதில் துரதிஷ்டவசமாக என்னுடைய தொகுதிக்கு தாழ்வாக இல்லை என்று

[Srimathi C. Kolanthai Ammal] [11th November 1961

சொல்லி, ஒருசில கிராமங்களை மட்டும்தான் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற கிராமங்களுக்கும் பயன்படுவதற்கு குழாய் திட்டங்களை கொண்டுவந்து, அதன் மூலம் பாம்பிக்குள தண்ணீரை மேட்டான பிரதேசங்களுக்கும் இழுத்துச் செல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த இடத்திலே ஞாபகப்படுத்திக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, தொழிலாளர்கள் நலன் என்ற தலைப்பிலே இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே உள்ளதை எடுத்துக் கொண்டால், தொழிற்சாலைகளிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு போனஸாக ஒரு கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், முதலாளிகள் பெறக்கூடிய பெரும் லாபத்திலும், தொழிலாளர்களுக்கு பங்கு இருக்க வேண்டுமென்பதை நாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே நல்ல முறையிலே வற்புறுத்த வேண்டும். அவர்கள் பெரும்படியான லாபத்திலே தொழிலாளர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தாய் சேய் நல விடுதி என்ற தலைப்பிலே பார்ப்போமானால், இந்த சென்டிரல் சோஷியல் வெல்பேர் போர்டிலிருந்து கொடுக்கக்கூடிய தொகையானது நகரப் பிரதேசங்களுக்கும், இன்னும் சில ஊர்களுக்கு மட்டுமே தாராளமாக விநியோகிக்கப்படுகின்றது. கிராமத்திலே இருக்கும்படியான பல தாய் சேய் நல விடுதிகளுக்கு மானியங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பின்தங்கியுள்ள பிரதேசங்களிலே இருக்கும்படியான தாய் சேய் நல விடுதிகளுக்கு நல்ல முறையிலே மான்யங்கள் கொடுக்கப்பட்டு, திட்டங்கள் நல்ல முறையிலே நடப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே இன்னொரு யோசனையும் கூற விரும்புகிறேன். ஜில்லாவாரியாக என்.ஜீ.ஓ.க்கள் தங்குவதற்கு ஆங்காங்கு குறைந்த கட்டணம் வசூலித்துக்கொண்டு தங்க விடுதிகள் இருப்பதுபோல், ஆசிரியர்களுக்கும், குமாஸ்தாக்களுக்கும் ஆஸ்டல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே ஞாபகப்படுதிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது ஆஸ்டல் என்று எடுத்துக்கொண்டால், கடந்த காலத்தில் 25, 30 ரூபாயில் ஆஸ்டல் நடத்திக்கொண்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு அதை ஒரு வியாபாரமாகக் கருதி நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஒரு ஆசிரியரின் சம்பளம் 75 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், அவர் ஆஸ்டலுக்கே 50 ரூபாய் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படி 50 ரூபாய் கொடுத்து விட்டால், அவர் குடும்பத்தை நடத்துவது எப்படி? ஆகவே, ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள் போன்ற நடுத்தர வர்க்கத்தினர் தங்குவதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஆங்காங்கு ஜில்லாவாரியாக, 2, 3 ஆஸ்டல்களை ஏற்படுத்த வேண்டும். அதிலும் குறிப்பாக பெண்களுக்கு இதிலே மிகவும் கஷ்டமேற்படுகிறது. அந்தக் காரணத்தினாலே அவர்களுக்கும்

11th November 1961] [Srimathi C. Kolanthai Ammal]

மிகவும் அவசியமாக ஆஸ்டல் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பதை, இந்த நேரத்திலே ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நேற்று பேசிய எதிர்க்கட்சி அம்மையார் அவர்கள் ஹரிஜன மக்களுக்கு குறைந்த அளவு அதாவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே செலவழிக்கப்பட்ட தொகையைவிட, மூன்றாவது திட்டக் காலத்திலே குறைக்கப்பட்டுவிட்டதாகச் சொல்லிக்கொண்டார்கள். ஆனால் அதில் உண்மை இல்லை என்பதை இந்த சபையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று கேட்டால், ஹரிஜன மக்களுடைய நலனைப் பாதுகாப்பதற்காக இரண்டாவது திட்டக் காலத்திலே பரவலாக சலுகைகள் தனியாக வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டிலே இருந்து ஹரிஜன மக்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கிறோம் என்று சொன்னால், அது டெவலப்மெண்டு ஸ்கீமோடு சேர்க்கப்பட்டு விடுகிறது. அதாவது ஆங்காங்குள்ள பஞ்சாயத்து அதற்கான அக்கறை எடுத்துக்கொள்கிறது. அதேபோல், ஹரிஜனங்களுக்கு விளக்குப் போடுவதற்கு மின்சார வசதி வேண்டுமென்றால், அதை மின்சார போர்டு கவனித்துக்கொள்கிறது. அதேபோன்று அவர்களுக்கு வீடுகள் கட்ட வேண்டுமென்றாலும், அதுவும் பஞ்சாயத்தாலும், பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலாலும் பார்த்துக் கொள்ளப்படுகிறது. அப்படி அவைகள் எடுத்துக்கொள்வதாலே, இன்றைக்கு இந்த துறைக்கு வழங்கப்பட்டுள்ள மான்யம் ஹரிஜன மக்கள் படிப்பதற்கு உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. தவிர, மதிய உணவுத் திட்டத்திற்காக கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்த கிராமப் புறத்து திட்டங்களின் பங்கு இதிலே அடங்கவில்லை. இதை அந்த அம்மையார் அவர்களுக்கு இந்த நேரத்திலே தெளிவாக எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்கள் நகரப்புறத்தில் இருக்கிறபடியால், கிராமத்தைப்பற்றி அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆகவே, கிராமப்புறத்து அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாம் இந்தத் தொகையிலே சேர்க்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

SRIMATHI SATHIYAVANIMUTHU : On a point of order, சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, நேற்று பேசியபோது ஹரிஜனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை குறைந்திருக்கிறது என்று சொன்னதற்குக் காரணம், சர்க்காரால் தரப்பட்டுள்ள மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட சம்பந்தமான புத்தகத்திலே கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரத்தைத்தான் எடுத்துக் காட்டினேனே தவிர, என்னுடைய சொந்தமான கருத்தல்ல என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நான் தவறாக ஒன்றும் சொல்லவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : இது எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆகும்?

[11th November 1961

12-37 p.m. * SRIMATHI C. KOLANTHAI AMMAL: சபைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரைக்கும் சில வார்த்தைகள் சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். நொய்யல் நதிக் கரையிலே கிணறுகள் வெட்டி அந்தக் கிணறுகள் மூலம் நீர்ப்பாசன வசதி பெறுவதற்கு விவசாயிகளுக்கு மான்யமாகவும் கடனாகவும் உதவுவதற்கு பணம் ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். கோவை, பல்லடம் தாலுகாக்களில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயிகளுக்கு ஒரு கிணறு வெட்டுவதற்கு 2,000 ரூபாய் கொடுக்கிறோம் என்று வற்புறுத்தியிருக்கிறோம். ஆனால் அங்கே ஒரு கிணறு வெட்டுவதற்கு விவசாயிக்கு ரூ. 10,000-க்கு மேல் செலவாகிறது. ரூ. 10,000, 15,000 செலவு செய்து கிணறு வெட்ட வேண்டியிருப்பதால் நாம் விவசாயிகளுக்கு போதுமான அளவு கடன் தொகை ஒதுக்கினால்தான் உணவு உற்பத்தியை அதிகரிக்க முடியும். கோவை ஜில்லாவில் ஒரு பல்கலைக்கழகமும், ஒரு மருத்துவக் கல்லூரியும் வரவேண்டும் என்பதை மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளுகிறேன். பல்வேறு ஸ்தாபனங்கள் அங்கு இருக்கின்றன. எந்த அளவுக்கும் அது பிற்பட்ட ஜில்லா என்று சொல்ல முடியாது. மருத்துவக் கல்லூரியும் பல்கலைக்கழகமும் அங்கு வந்தால், அவைகளை நல்ல முறையில் நடத்திக் காட்ட திறமை இருக்கிறது என்றுசொல்லிக்கொண்டு, அவை அங்கே வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

SRIMATHI A. S. PONNAMMAL: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தனிப்பட்ட முறையில், ஆளும் கட்சியைச் சேர்ந்தவள் என்ற அந்த அளவில் மட்டும் ஆதரிக்காமல், குறிப்பாக அது தமிழ் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக்கூடிய காரணத்தினால் அதை முழுமனதோடு ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அன்று வெள்ளைக்காரர் ஆட்சியின் போதுகூட ஒரு சிலர் பாடினார்கள், 'போகாதே, போகாதே வெள்ளையப்பா' என்று. இன்றைக்கு அதையே திருப்பிப் பாடக் கூடிய நிலைமையில் 'போதாது, போதாது வெள்ளையப்பன்' என்று அந்த பிளேட்டை திருப்பிப் போடுகிறார்கள். எதை எடுத்தாலும், போதாது, போதாது என்று கூறக்கூடிய நிலையில் இருக்கிறது. இருநூற்று தொண்ணூறு கோடி ரூபாய்க்கு திட்டம் போட்டு, இன்னும் 450, 500 கோடி ரூபாய் அளவுக்கு நாம் திட்டத்தை நிறைவேற்றுகிற அளவில், அதுவும் குறிப்பாக மற்ற மாகாணங்கள் தமிழ் மாகாணத்தைப் பார்த்து அதைப் பின்பற்ற வேண்டும் என்ற அடிப்படையில் பல காரியங்களை செய்துகொண்டு வருகிறோம். இப்படிச் செய்துகொண்டிருக்கிற காலத்தில், மின்சார இணைப்பு என்ன ஆயிற்று, நெய்வேலி நிலக்கரித் திட்டம் என்ன ஆயிற்று, சேலம் இரும்புக்கனித் திட்டம் என்ன ஆயிற்று என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுதொண்ணூற்று ஒன்பதாவது பக்கத்தை குறை கூறும் அங்கத்தினர்கள் திருப்பிப் பார்க்க

11th November 1961] [Srimathi A. S. Ponnammal]

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கு மத்திய அரசாங்கம் நேரடியாக என்னென்ன திட்டங்களை எடுத்துக் கொள்ள இருக்கிறார்கள் என்பது நன்கு தெரியும்.

இம்மாதிரி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மக்கள் முன்னிலையிலே வைத்து வோட்டுக் கேட்டால், நிச்சயம் ஆளும் கட்சித் தோற்றுவிடும் என்றுகூட கூறினார்கள். இதைப் பார்க்கும் பொழுது எப்படி இருக்கிறது என்றால், தென்னை மரத்தில் பின் மட்டையைப் பார்த்து முன்மட்டை சிரித்ததாம், இது விழப் போகிறது தெரியாமல். 15 எண்ணிக்கையில் வந்து, 4 ஆண்டுகளுக்குள் 15, 11½ ஆகக் குறைந்திருக்கிறது. வரப்போகும் தேர்தலில் 11½ எங்கே 5¼ ஆக குறைந்துவிடுமோ என்று அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் அவர்கள் ஆளும் கட்சி தோற்றுவிடும் என்று கூறினால், அதற்குத்தான் தென்னை மரத்தை உதாரணமாகக் காட்டினேன். ஆகையினால் இந்தத் திட்டத்தை வைத்துத் தான் மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஓரளவு உயர்த்த முடியும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவர முடியும் என்று நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய தலைவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இன்னொன்று கூற விரும்புகிறேன். கட்சிகள் பேசுவது ஒரு பக்கத்தில் இருந்தாலும், உணவு உற்பத்தித் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, மற்ற தொழில் துறையிலும் சரி, எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் இன்றைக்கு நாம் எந்த அளவுக்கு கணிசமாக முன்னேறியிருக்கிறோம் என்பதைப் புள்ளி விவரத்தோடு பார்த்தால் நன்றாகத் தெரியும். ஏதோ திட்டங்கள் போட்டு மக்களுக்கு எந்த அளவுக்கும் நன்மைகள் செய்யவில்லை என்று இங்கே வீணாகப் பேசிக்கொண்டிருப்பவர்களை இன்னும் ஒரு சில மக்கள் விஷயம் தெரியாமல் பின்பற்றிக் கொண்டிருக்கலாம். வெட்டினால் வெள்ளி, தட்டினால் தங்கம், இடித்தால் இரும்பு, அள்ளினால் அலுமினியம் என்று கூற ஒரு சிலர் புளுகை நம்பி கைதட்டிக் கொண்டிருக்கலாம். அந்த அளவுக்கு மக்கள் நம்பும் படியான நிலைமை இப்பொழுது இல்லை. சேலத்திலிருந்து இரும்புக் கனி எடுக்க வேண்டுமென்றால், அது எத்தனை மணலோடு கலந்திருக்கிறது. அதற்கு எத்தனை நிபுணர்கள் தேவை, எந்த முறையில் எடுத்து என்னென்ன காரியங்கள் செய்யலாம் என்பது பற்றி ஆராய்ச்சிக்குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்கையில் என்ன நடக்கிறது, என்ன செய்தீர்கள் என்று கேட்பார்களேயானால், அது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது.

அன்றைக்குக்கூட ஒரு நண்பர் பேசும்போது கூறினார். தலையிலே தடவிக் கொள்ள எண்ணெய்கூட இல்லாமல் பூ வைத்துக் கொள்ளுவதைப் பார்த்து காங்கிரஸ் கட்சி பெருமை அடித்துக் கொள்ளுகிறது என்று சொன்னார்கள். தலைக்கு எண்ணெய் இல்லாமல், கட்டிக் கொள்ளுவதற்கு துணி இல்லாமல், வயிற்றிற்கு கஞ்சி இல்லாமல் இருக்கும்பொழுது தலைக்கு பூ வைத்துக்கொள்ளுகிறார்கள் என்றால், அது பைத்தியக்காரன் செய்யக்கூடிய காரியமே

தவிர, அறிவாளிகள் செய்ய முடியாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மற்ற எல்லா சௌகரியமும் இருந்தால்தான் பூ வாங்கி தலையில் வைத்துக் கொள்ளுவார்கள்.

DEPUTY SPEAKER : ஐந்து நிமிஷம் ஆகிவிட்டது.

SRIMATHI A. S. PONNAMMAL : அதற்குள்ளவா ஐந்து நிமிஷம் ஆகிவிட்டது? சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

ஹரிஜன மக்களைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு வீடுகள் கூட கட்டிக்கொடுக்க வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக எங்கெல்லாம் அவர்களுக்கு வீட்டு மனைகள் தேவையோ அதைக் கொடுத்து உதவ முன்வரவேண்டும். எங்கு மின் வேண்டுமோ அங்கு மின்சாரக் கம்பத்தை யாரையும் கேட்காமல் ஊன்றுவது போல, எங்கெல்லாம் ஹரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் தேவையோ, அங்கெல்லாம் அவர்களுக்கு வீட்டு மனை அளந்து விடக்கூடிய முறையில் மூன்றாவது திட்டத்தில் திட்டம் வகுக்க வேண்டும். வீட்டு மனை யாருக்கும் கிடைக்கவில்லை என்ற பிரச்னையே வரக்கூடாது. அந்த முறையிலே அவர்களுக்கு வேண்டிய வீட்டு மனைகளை வழங்கவேண்டும்.

அடுத்தபடியாக, வெள்ளத் தடுப்பு. வைகையைப் பொறுத்த வரையில் ஒரு சின்ன ஸ்கீம் போட்டு, தனியாக பணத்தை ஒதுக்கி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு அவதிப்படுகிற மக்களுக்கு நிவாரண வேலைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக நான் எடுத்துக்கூற விரும்புவது என்னவென்றால், கல்வி சம்பந்தமாக இப்பொழுது செவிடர்களுக்கும், ஊமைகளுக்கும் தனியாக பணம் ஒதுக்கப்படுகிறது. அதேபோன்று முடவர்களுக்கும் ஒரு தனி பள்ளிக்கூடம் ஆரம்பித்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அநேக இடங்களில் கிராமப்புறங்களில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு உயர்நிலைப் பள்ளி கிடையாது. என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், குறிப்பாக சோழவந்தானில் ஒரு மைல் சுற்றளவில் 25,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை இருக்கிறது. சோழவந்தானில் உள்ள மாணவிகளின் எண்ணிக்கை 500 பேர்கள். ஆகையால் அங்கு கவர்ன்மென்டு ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டுமென்று நான் நிதி அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு 8-வது, 9-வது, 10-வது வரை படித்த பெண்கள் ஒரு தொழிலும் செய்யாமல் வீடுகளில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாலி டெக்னிக் ஸ்கூல்ஸ் ஏற்படுத்தப் போவதாக இருக்கிறது. ஆகையினால், இரண்டு ஜில்லாக்களுக்கு ஒன்றோ அல்லது மூன்று ஜில்லாக்களுக்கு ஒன்றோ பெண்கள் பாலி டெக்னிக் ஸ்கூல் ஏற்படுத்தினால், பெண்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவுக்கு ஒழியும்;

அவர்களும் தங்கள் வாழ்க்கைத் தரத்தை நல்ல முறையில் அமைத்துக்கொள்ள முடியும் என்பதை, இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, 'கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம்'. பூச்சிகள் பயிர்களை நாசம் செய்வதினால் அநேக இடங்களில் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, 'கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம்' 'காடில் இன்ஷூரன்ஸ்' திட்டம் இவைகளை மூன்றாவது திட்டத்தில் புகுத்துவோமானால், அது விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்படும்.

இன்னும் எதிர்க்கட்சி நண்பர்கள் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக நாம் எடுத்துக்கொள்வோமானால், உத்திரப் பிரதேசத்தில் ஜனத்தொகை இந்திய தேச ஜனத்தொகையில் 6-ல் ஒரு பங்காக இருந்துகொண்டிருக்கிறது. அந்த மாகாணத்திற்கு 470 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கணக்குப் பிரகாரம் பார்க்கப்போனால் கிட்டத்தட்ட அங்கே 630 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க வேண்டும். அந்த நிலைமையில் இல்லாமல் எங்கே பணம் ஒதுக்கவேண்டுவது அவசியமோ அந்த அடிப்படையில் மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள். ஏதோ நம்முடைய அமைச்சர்களுக்கு, ஆளும் கட்சிக்கு திறமை இல்லை, எங்களுக்குத்தான் திறமை இருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் ஜம்பம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மக்களிடையே நல்ல விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதைக் கேட்டு ஏமாறக்கூடிய ஏமாளிகள் அல்ல மக்கள் என்பதை அவர்கள் நன்றாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏதோ திட்டங்கள் போட்டிருக்கிறோம், சர்வ கட்சிகளும் ஒன்றாக இணைந்து காரியங்களைச் செய்வோமானால் மக்களுடைய கஷ்டத்தைப் போக்க முடியும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும் என்பதை நல்ல முறையில் தெரிந்து கொள்ள வேண்டும்.

கனம் அம்மையார் அவர்கள் சொன்னார்கள் எம். ஸி. ராஜா ஹாஸ்டலில் ஏதோ இரண்டு கரண்டிதான் குழம்பு போடுகிறார்கள் என்று சொன்னார்கள். இது ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது. வெளியிலே நடத்தக்கூடிய ஹாஸ்டலில் ஒரு மாணவனுக்கு 15 ரூபாய் கிராண்டு வாங்கி ரொம்ப நல்ல முறையில் நடத்திக் கொண்டு வருகிறார்கள். எம். ஸி. ராஜா ஹாஸ்டலில் ஒரு மாணவனுக்கு 36 ரூபாய் கிராண்டு கொடுக்கப்படுகிறது. முப்பத்தாறு ரூபாய் கிராண்டு கொடுத்து என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்துகொண்டிருக்கிறார்கள். அதைப் பார்த்து, ஏதாவது மாணவர்கள் படித்து முன்னுக்கு வந்துவிடப் போகிறார்களே என்று. அவர்களைப் படிக்க விடாமல் வேறு விதத்தில் தூண்டுவதில் சில எதிர்க்கட்சிகள் ஈடுபடுகிறார்கள். படிக்கும் மாணவர்களை படிக்காமல் தடுக்க வேண்டாம் என்று நான் மற்ற கட்சிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அவர்களை இதிலே ஈடுபடுத்தி, படிக்கக்கூடியவர்களை படிக்க வொட்டாமல் செய்வது அநியாயம் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[11th November 1961

(மணியடிக்கப்பட்டு அடுத்த அங்கத்தினர் அழைக்கப்பட்டார்.)

SRI A. GOVINDASAMY : சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, மூன்றாவது திட்ட முடிவின் பேரில் கனம் நிதி அமைச்சர் முன்னுரையாக வழங்கும்போது, கிராமங்களைக் கேந்திரமாக எடுத்து கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, மூன்றாவது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அவர்களிடத்தில் அதிகாரம் கொடுத்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். இன்றைய தினம் எப்படியிருக்கிறது? நாம் இந்த அவையில் நிறைவேற்றிய பஞ்சாயத்து சட்டத்தின் மூலம் பஞ்சாயத்துக்கள் இயங்குகின்றன. நாங்கள் அன்றைக்குச் சொன்னபோது, அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தபோதிலும், இன்றைக்கு பஞ்சாயத்துத் தலைவர்கள் தேர்தல்கள் எப்படி நடந்து வந்திருக்கின்றன? பொதுமக்கள் ஆதரவு இல்லாதவர்களும், ஏராளமான பணத்தைச் செலவு செய்து பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக வந்திருக்கிறார்கள் என்பதையும், தலைவர்களுக்கும், கமிஷனர்களுக்கும் ஒத்துழைப்பு இல்லாததால், திட்டங்கள் தடைப்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மகாநாட்டிற்கு பஸ்களில் அழைத்துவரப் பட்டவர்களும், வழியிலேயே இரங்கிப் போனதும், திரும்பிப் போனவர்களில் சில பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தூக்கிச் செல்லப்பட்டதும் அமைச்சரவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அங்கத்தினர்கள் விலைக்கு வாங்கும் நிலைமையும், காங்கிரஸ்குள்ளேயே போட்டி ஏற்படுவதும், அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள். ஆகவே, இந்த நிலையிலேயாவது, மக்களால் நேரடியாக தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நிலைக்கு மீண்டும் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று வற்புறுத்தத்தான் நான் இதைச் சொல்ல வந்தேன்.

அடுத்தபடியாக, ப்ளானிங் கமிஷன் ஒரு "சூபர் காபினெட்" அல்ல என்ற கருத்தை அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதே நேரத்திலே அந்தக் குழுவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அங்கத்தினர்கள் சிலர், ஸ்ரீமான் நாராயணன், ஸ்ரீ தேபர் போன்றவர்கள் . . . (குறுக்கீடு), ஸ்ரீ தேபர் அல்ல, ஸ்ரீமான் நாராயணன் மட்டும்தான் என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அதில் அங்கம் வகிக்கக்கூடாது. ஏற்கனவே ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரி இருந்தார்கள். அவர்களுக்கு அங்கு இடம் இருந்திருக்கக்கூடாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் அங்கு இருக்க வேண்டும். இந்த மன்றத்தில் நேற்று கனம் நிதி அமைச்சரவர்கள் பேசிய மாதிரியைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைந்தேன். அந்த ப்ளானிங் கமிஷன் அங்கத்தினர்கள் ப்ளான் விஷயங்களில் குறுக்கிடக்கூடாது, அவர்கள் இஷ்டம்போல் பேசக்கூடாது என்று அவர்கள் சொன்ன தைரியத்தைப் பாராட்டுகிறேன். அந்தத் தைரியமும் எங்களால் வந்தது. (குறுக்கீடு.) ஆமாம், எங்களிடத்தில் கற்ற பாடம், அவர்கள் டெல்லிக்குப் போகும் போது எவ்வளவு உதவும் என்பதை உணருவார்கள்.

11th November 1961] [Sri A. Govindasamy]

1959-ல் கிட்டத்தட்ட 600 கோடி ரூபாய்க்கு பல செயற்குழுக்களால் திட்டம் போடப்பட்டது. பிறகு, இந்த சட்டசபை அங்கத்தினர்களைக் கொண்ட குழுவை அமைத்து, திட்டங்களை மாற்றி அதை 390 கோடியாகச் செய்யப்பட்டது. அது இன்றைக்கு மீண்டும குறைக்கப்பட்டு 291 கோடியாக வந்திருக்கிறது. இப்படிக் குறைந்ததற்குக் காரணம் யார்? திட்டக் கமிஷனில் கொடுத்திருக்கும் ஆதாரங்களைக் கொண்டு குறைத்திருக்கிறோம் என்கிறார்கள். இங்கே திட்ட கமிஷனுக்கு அதிகாரம் இல்லை என்று அமைச்சர் சொல்லுகிறார்கள். இதனால்தான் திட்ட கமிஷனில் மக்களால் தேர்தெடுக்கப்படாதவர்கள் இடம் பெறக்கூடாது என்று சொல்லுகிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு திட்டங்களையும் பார்த்தால், சுகாதாரத் தலைப்பில் பார்த்தால், 324 லட்சம் என்றிருந்தது, இன்றைக்கு 150 லட்சம் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. கிராமக் குடிதண்ணீர் திட்டங்களுக்கும் ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கும் பல கிராமங்களில் நல்ல குடிதண்ணீர் இல்லாததன் காரணமாக, நரம்புச் சிலந்தி போன்ற வியாதிகள் ஏற்பட்டு வருகின்றன. ஓவர்-ஹெட் டாங்குகள் அமைக்க முடியாமல் இருப்பதால், நல்ல தண்ணீர் வழங்க முடிவதில்லை. மக்கள் தங்கள் பங்குத் தொகையைக் கொடுக்க முடியாமல் இருப்பதன் காரணமாக, பல திட்டங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. அதனால் அவர்களுக்கு நல்ல தண்ணீர் இல்லை, நரம்புச் சிலந்தி போன்ற வியாதிகளுக்கு உள்ளாகிறார்கள். இதுபற்றி இன்று காலைகூட நண்பர் திரு. செல்வராஜ் கேள்வி நேரத்தில் கேட்ட கேள்விக்கு, நேரிடையாக பதில் சொல்லாமல், அமைச்சர் சட்டசபை அங்கத்தினர் அந்தப் பகுதிக்கு போவதில்லை என்று சொன்னார்கள். காங்கிரஸ் அங்கத்தினர்களோ, மற்றவர்களோ தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு எத்தனை தடவை போகிறார்கள் என்பது அவர்களுக்கும், மக்களுக்கும்தான் தெரியும். அமைச்சர் கேள்விக்கு நேரிடையாகப் பதில் சொல்லாமல், தாறுமாறாக ஏதோ சொன்னார்கள் . . .

DEPUTY SPEAKER : அங்கத்தினர் "தாறுமாறாக" என்று சொல்லக்கூடாது.

THE HON. SRI C. SUBRAMANIAM : "தாறுமாறாக" சொன்னார்கள் என்பது சரியல்ல அப்படியென்றால், அத்தகைய பதில்களை அனுமதித்திருக்கும் சபாநாயகர் தன்மைக்குக் குறை கூறுவதாக ஆகும். மேலும், கேள்வி நேரத்தில் நடந்ததை இப்பொழுது இந்த விவாதத்தில் கொண்டு வருவது, பத்து வருஷ அனுபவம் பெற்ற கனம் கோவிந்தசாமிக்குத் தக்கதல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI A. GOVINDASAMY : சபாநாயகர் அவர்களுடைய தன்மைக்கு ஒரு அணு அளவுகூட குறைகூற வேண்டும் என்ற நோக்கம் எனக்குக் கிடையாது. ஆனால், அமைச்சர் நேரிடையாகப் பதில் சொல்லவில்லை என்பதையாவது கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு உபகாரம் கொடுக்கும் திட்டத்திலும் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதனால் மாணவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதுகூட பாதிக்கப்படும்.

விவசாயத்துறைக்கு 26 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனால், 16.5 லட்சம் டன் உபரியாக உற்பத்தி பெருகும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இரண்டாவது திட்டத்தில் உபரியாக 12 லட்சம் டன் கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆனால், கடைசியில் கிடைத்தது, 8 லட்சம் டன்தான். அதற்குக் காரணம் ரசாயன உரம் போதுமான அளவு கிடைக்காததுதான் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது இருக்கும் நிலையில்கூட அம் மாதிரி உரங்கள் நல்ல அளவில் கிடைக்குமா—எதிர்பார்க்கும் அளவு உற்பத்திப் பெருக்கம் ஏற்படுமா என்று பார்க்க வேண்டும். ஆகவே மூன்றாவது திட்டக் காலத்துக்குள் நெய்வேலியில் உர உற்பத்தி தொழிற்சாலை உண்டாக்கி குறையை போக்க வேண்டும்.

நீர்ப்பாசன திட்டங்களுக்காக 27 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே 21 கோடி அளவுக்கு பரம்பிகுளம்—அலியார் திட்டத்திற்குப் போய்விடுகிறது. பாக்கி இருக்கும் 6 கோடிதான் மற்ற திட்டங்களுக்குக் கிடைக்கும். இதைவைத்துக் கொண்டு தென்னார்காடு, கள்ளக்குறிச்சி வட்டத்தில் மணிமுத்தார், கோமுகி நதிகளில் அணைகள் முதலிய திட்டங்களை எப்படிச் செய்ய முடியும்? வெகுகாலமாக நந்தன் கால்வாய் திட்டம் இருந்தபோதிலும் அது எடுக்கப்படவில்லை. விருத்தாசலம் பகுதியில், வெலிங்டன் ரிஸர்வாயர் 8 அடி மண் மேடு இட்டிருக்கிறது. அவைகளெல்லாம் இதுவரை கவனிக்கப்படவில்லை. குளித்தலை அங்கத்தினர் மு. கருணாநிதி குடகனார் திட்டம்பற்றி 4 ஆண்டுகளாகச் சொன்னார்கள். இதுவும் கைவிடப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிக்கு ஏன் ஓட்டுப் போட்டீர்கள், அதனால்தான் இவைகளை எடுக்கவில்லை என்று அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்தின்போது சொல்லுகிறார்கள் . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : எந்த அமைச்சர் சொன்னார்கள் என்று சொன்னால், அதை வாபஸ் வாங்கச் செய்கிறோம்.

SRI A. GOVINDASAMY : அமைச்சர் திரு. மாணிக்கவேலு நாயகர் விருத்தாசலத்தில் தெரிவித்து இருக்கிறார்கள். அதே நேரத்தில், நந்தன் கால்வாய் திட்டம் ஒன்பது ஆண்டு காலமாக வற்புறுத்தி வந்திருக்கிறேன். அதை எடுத்துக்கொள்ளவில்லை. இப்பொழுது காங்கிரஸ் ஓட்டு கிடைத்திருக்கிறது. அதே இடத்தை கனம் முதல் அமைச்சரும், அமைச்சர் திரு. கக்கனும் சென்று நேரிடையாகப் பார்த்து, மக்கள் குறைகளைத் தெரிந்து கொண்டும், அது ஒரு உண்மையான திட்டம் இல்லை என்று கைவிட்டு விட்டார்கள். அந்த திட்டத்தை நிறைவேற்றினால், 20,000 எக்கர் பாசனத்திற்கு வரும் என்று இந்த மன்றத்தில் எத்தனையோ தடவைகள் வற்புறுத்தியிருந்தும், அது கவனிக்கப்படவில்லை.

மூன்றாவது திட்டம் நிறைவேற 35 கோடி அளவுக்கு வரி போடுவார்கள் என்று தெரிகிறது. வரி போடும்போது அது ஏழைகளைப் பாதிக்காமல், பணக்காரர்கள் தலையில் விழும் அளவுக்குப் போடவேண்டும்.

ஆதி திராவிடர்களுக்கு 20 கோடி என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மனைக் கட்டு, குடி தண்ணீர் வசதி, சுடுகாட்டுக்குப் பாதை முதலிய பல வசதிகள் செய்யவேண்டும். அதற்கெல்லாம் இந்த 20 கோடி போதவே போதாது. நேற்றைய தினம் கனம் அன்பழகன் 'காகிதப்பூ வைத்திருக்கிறார்கள், அது முன்னேற்றம் இல்லை' என்று சொன்னார்கள். அவர்கள் நல்லவேளையாக யார் என்று சொல்லவில்லை. ஆனால், இன்றைக் அம்மையார் அது யார் என்று சொன்னார்கள். திரு. அன்பழகன் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதற்காகச் சொல்ல வந்ததை அம்மையார் தவறாக எடுத்துக்கொண்டு பேசிவிட்டார்கள்.

சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை ஏற்படவேண்டுமானால் நெய்வேலியில் மூன்றாவது திட்ட காலத்தில் 4.8 மிலியன் டன் நிலக்கரி அதிகமாகக் கிடைக்க வேண்டும் என்கிறார்கள். அதற்கு வேண்டிய, போதுமான தொகை மத்திய சர்க்கார் ஒதுக்கியிருக்கிறார்களா என்று அமைச்சர் விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI C. R. RAMASWAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மீது நடக்கும் விவாதத்திலே பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்புக் கிடைத்ததற்காக, நான் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பின், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 152 கோடி ரூபாய் செலவு செய்வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், 186 கோடி ரூபாய் அளவுக்குச் செலவு செய்ய வேண்டியிருந்தது. இப்பொழுது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏறக்குறைய 290 கோடி ரூபாய் செலவு செய்வதற்குத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். இப்படி நல்ல முறையில் நமது மாகாணம் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. நமது மாகாணம் மாத்திரமல்ல. தேசமே முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதைப் பற்றி யாரும் மறுக்கவே முடியாது. தேசிய வருமானம் அதிகரித்திருக்கிறது என்பதைப்பற்றியும் சந்தேகம் இல்லை. நிபுணர்களே அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். தேசிய வருமானம் மாத்திரமல்ல. ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பொருளாதார வளர்ச்சியும் அமோகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதையும் யாரும் மறுக்கவே முடியாது. வேண்டுமானால் ஓரளவு வெறுப்பின் காரணத்தாலோ, பொறாமை (ஜெலஸி)-யின் காரணத்தாலோ சொல்லலாம், காங்கிரஸ் அரசாங்கம் ஒன்றும் சாதிக்கவில்லை என்று, திட்டம் அடியோடு வேண்டவே வேண்டாம் என்று சிலர் சொல்கிறார்கள். திட்டத்தின் மூலமாகத்தான் எந்தக் காரியமும் செய்ய முடியும் என்பதைப்பற்றி யாரும் மறுக்கவே முடியாது. "மேற்கு ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் திட்டம் இருக்கிறதா? திட்டம் இல்லாமலேயே முன்னேற்றம் ஏற்படவில்லையா? அமெரிக்கா தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கே திட்டம் கிடையாது. திட்டம் இல்லாமலேயே முன்னேற்றத்தை காணலாம். எதற்காகத் திட்டம்? திட்டம் வேண்டுமென்றால் கட்டுப்பாடு வருகிறது.

[Sri C. R. Ramaswami] [11th November 1961

ஆகவே, திட்டமே கூடாது" என்று சொல்கிறார்கள். ஆனால், நம் தேசத்தைப் போன்ற தேசம் 'அன்-டெவலப்ட் கண்ட்ரீ' ஆக இருக்கும் தேசம், மிகவும் மோசமான பொருளாதார நிலையில் இருக்கும் நம்மைப் போன்ற தேசங்களில் திட்ட அடிப்படையில் தான் வளர்ச்சி ஏற்பட முடியும். ஒருவிதமான கட்டுப்பாடு (கண்ட்ரோல்) இல்லாவிட்டால் எந்தவிதமான வளர்ச்சியும் பெருக முடியாது. எல்லாத் துறைகளிலும் என்னென்ன செய்ய முடியும் என்பதற்கு ஒரு ஆராய்ச்சி வேண்டும். ஆராய்ச்சியின் மூலமாகத் திட்டம் இடப்படவேண்டும்.

நம்முடைய நாட்டின் பொருளாதார நிலைமையை நன்றாகச் சீர்தூக்கி, அலசிப் பார்த்து, எந்த எந்தத் துறையில் எதை எதைச் செய்யலாம், வருமானம் என்ன வரும், என்ன செலவு செய்ய முடியும் என்று சரியான முறையில் பார்த்தால்தான் திட்ட அடிப்படையில் வளர்ச்சி காண முடியுமே தவிர, திட்டம் இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. திட்டமே வேண்டாம், செலவு செய்துகொண்டு போகலாம், அப்போதைக்கப்போது இருக்கும் வருமானத்தை வைத்துக்கொண்டு காலத்திற்குரிய திட்டத்தைச் செய்தால் போதும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். அதை அனுசரித்துச் செய்தால், ஏழை ஏழையாகத்தான் இருப்பான், பணக்காரன் பணக்காரனாகத்தான் இருப்பான். இந்த இரண்டையும் சரிக்கட்ட வேண்டுமானால் திட்டம் இருக்கவேண்டும். சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்பதைப்பற்றி யாரும் மறுக்கவே முடியாது. இதை ஏற்றுக்கொண்டுதான் தீர வேண்டுமே தவிர, திட்டமே வேண்டாமென்று சொல்வது மிகவும் தவறு என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் நாம் இருக்கிறோம். நமது மாகாணத்தைப் பொறுத்தவரை, உணவுப் பொருள் உற்பத்தி அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. திட்ட ஆரம்பத்தில் 44 லட்சம் டன் அரிசி உற்பத்தி இருந்தது. இப்பொழுது 53 லட்சம் டன் அரிசி உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. இதைத்தான் முக்கியமான அளவாகப் பார்க்க வேண்டும். இருபது சத விகிதம் உணவு உற்பத்தியில் உயர்வு ஏற்பட்டிருக்கிறது. இதன் மூலமாகத்தான் மற்ற பொருளாதார வளர்ச்சியெல்லாம் நாம் பார்க்கவேண்டும். இந்த ஒரு அடிப்படையை எடுத்துக்கொண்டால் போதும். நமது நாட்டில் உணவு உற்பத்தி அதிகமாகப் பெருகியிருக்கிறது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படவேண்டிய விஷயம்.

உணவு உற்பத்திக்கு மூல காரணமாக இருப்பது மின்சார அபிவிருத்தி. இந்தத் துறையிலும் நமது மாகாணம் முன்னேற்றமடைந்திருக்கிறது. திட்ட ஆரம்ப காலத்தில் 256 மெகவாட்டாக மின்சார உற்பத்தி இருந்தது. இப்பொழுது 571 மெகவாட்டாக உயர்ந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் ஏறக்குறைய 951 மெகவாட் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிறார்கள்.

11th November 1961] [Sri C. R. Ramaswami]

தொழில் துறையில் நமது மாகாணத்தில் அதிகமான வளர்ச்சியை நாம் காண்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல புதிய தொழிற்சாலைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. அலுமினியம் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை இவைகளைத் துவக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்னும் பல பெரிய பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் நம் மாகாணத்தில் ஏற்பட்டுள்ளன. இவைகளைத் தவிர, சிறிய தொழிற்சாலைகள் அதிகமாக அமைக்கப்பட்டு வருகின்றன. ஒரே ஒரு குறையை எல்லோரும் சொல்கிறார்கள். தொழில் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமானால் அதில் பெரிய சிக்கல்கள் அதிகமாக இருக்கின்றன என்று. இப்பொழுது இண்டஸ்ட்ரீஸ் ரெகுலேஷன் ஆக்ட் இருக்கிறது. இதன்படி எந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமானாலும், அதன் அடிப்படையில் ஒரு லைசன்ஸ் வாங்கியாக வேண்டியிருக்கிறது. இந்த லைசன்சை டில்லிக்கு அடிக்கடி போய் வாங்கவேண்டியிருக்கிறது. இது கஷ்டமாக இருக்கிறது. இப்படிப்பட்ட குறை இருப்பதாகத் தொழில் செய்கின்றவர்கள் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் முக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு, வெளி நாட்டுச் செலாவணி (பாரெய்ன் எக்ஸ்சேஞ்ச்) பற்றித்தான் இருக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அவர்கள் வைத்துக் கொள்ளலாமே தவிர, சாதாரணமாக தொழிற்சாலை வைக்க லைசன்ஸ் கொடுப்பது பற்றியும், எந்த ஊரில் வைப்பது என்பது பற்றியும் தீர்மானிக்க வேண்டியதை ராஜ்ய அரசாங்கங்களுக்கு விட்டுவிடலாம் என்று நான் நினைக்கிறேன். 'டிசென்ட்ரலைஸேஷன் ஆப் பவர்' இருக்குமானால் தொழில்கள் வளர்ச்சி அடைய அனுகூலமாக இருக்கும். அன்னியச் செலாவணி ஒன்றில் மாத்திரம் மத்திய அரசாங்கம் பொறுப்பை வைத்துக் கொண்டு, சாதாரணமாக தொழில்கள் ஆரம்பிக்கவேண்டியதைப் பற்றியும் 'காபிடல் கூட்ஸ் இம்ப்போர்ட்' செய்வது பற்றியும் உள்ள பரிசீலனையை ராஜ்ய அரசாங்கங்களுக்கு விட்டுவிடலாம். ராஜ்ய அரசாங்கம் பரிசீலனை செய்து, மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாமே தவிர, இன்டஸ்ட்ரியலிஸ்டுகள் அடிக்கடி டில்லிக்குப் போய் லைசன்ஸ் வாங்குவது என்பது கஷ்டமான காரியம். அது சரியான நிலைமை இல்லை என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதை மாற்றியமைக்க வேண்டும். டில்லிக்குக் கட்டுப்பட்டு இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை. இந்தியா தேசம் பூராவின் வளர்ச்சிக்கு அவர்கள் திட்டம் போடும் முறையில் அவர்கள் எந்தெந்த ஏற்பாடுகள் செய்கின்றார்களோ, அதையெல்லாம் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஓரளவு டிசென்ட்ரலைஸேஷன் இருக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்டு, அடுத்த திட்டத்தின் ஆரம்ப காலத்திலேயே டிஸென்ட்ரலைஸேஷன் செய்துவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். அன்னியச் செலாவணி ஒன்றில்தான் மத்திய அரசாங்கத்திற்குப் பொறுப்பு இருக்கவேண்டும். தவிர, பாக்கிக்கு எல்லாம் ராஜ்ய அரசாங்கங்களுக்குப் பொறுப்பு இருக்க வேண்டும்.

[Sri C. R. Ramaswami] [11th November 1961

'ரா மெட்டீரியல்ஸ் அலொகேஷன்' சம்பந்தமாகவும் மத்திய அரசாங்கம் பூராப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ராஜ்ய அரசாங்கங்களுக்கும் ஓரளவு பொறுப்பு இருக்கவேண்டும். அவர்கள் மூலப் பொருள்களைக் கொண்டு வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். போக்கு வரத்துச் சாதனை தற்போது மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறது. ஜாம்ஷெட்பூர், பீஹார், பிரதேசங்களிலிருந்து நமது மாகாணத்திற்கு கரி, இரும்பு முதலிய முக்கிய மூலப்பொருள் வருவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஒரே ரயில் பாதை தான் இருக்கிறது. கோஸ்டல் ஸ்டீயரில் மிகவும் குறைந்த அளவுக்குத்தான் டன்னேஜ் இருக்கிறது. இவையெல்லாம் சற்று அதிகப் படுத்தி மூலப்பொருள்கள் கொண்டுவருவதற்கு வேண்டிய கவனத்தை நமது அரசாங்கம் செலுத்த வேண்டும். இல்லா விட்டால் தொழில்களை ஆரம்பிப்பதினால் நிறைவேறவேண்டிய அபிவிருத்திகள் பூர்த்தியாகாது. ஏறக்குறைய பெரிய பெரிய தொழிற்சாலைகளையெல்லாம் மூடிவிடக்கூடிய நிலைமை வரும். ஏனென்றால் முக்கியமான மூலப்பொருள் வருவதற்குக் கொஞ்சங் கூட சாதனம் இல்லை. ரயில் வசதி குறைவாக இருக்கிறது. கப்பல்களும் கிடைப்பதில்லை. பெரிய தொழிற்சாலைகளெல்லாம் பாதி நாட்கள்தான் ஓடுகின்றன. அது அரசாங்கத்திற்கும் தெரியும்.

சென்னைநகர அபிவிருத்திக்கு அதிகமாகக் கவனம் செலுத்தப் படவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. சென்னை நகரில் நாற்பது வருஷ காலமாக நான் இருக்கிறேன். இந்த ஊரிலிருக்கும் கஷ்டங்களையெல்லாம் நான் அறிவேன். அதிலும் முக்கியமாக தென் பகுதியில் ஏழைகள், குடிசைவாழ் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். 'ஏன் குடிசை போட்டார்கள்? யாரைக் கேட்டுக்கொண்டு போட்டார்கள்? அவைகளை ஏன் அப்புறப்படுத்தக்கூடாது?' என்று அரசாங்கம் அடிக்கடி சொல்கிறது. இருக்கிற இடத்தில் குடிசையைப் போட்டுக்கொண்டால் வாடகை இல்லாமல் வசிக்கலாமே, என்ற எண்ணத்தில் குடிசை போட்டுக்கொள்கிறார்கள். குறைந்த செலவில் சிக்கனமாக வாழலாமே என்ற நம்பிக்கையில் குடிசை போட்டுக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் எல்லாம் மாதம் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் வாடகைக்குள்ளாக வீடுகளைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வது கடமையாகும். அப்படிச் செய்தால், ஏழைகள் நிச்சயமாக வாழ்த்துவார்கள்; குடிசைகளையும் இஷ்டம் போல் போட்டுக்கொள்ளமாட்டார்கள். குடிசையும் போடக் கூடாது, நானும் வீடுகள் கட்டிக் கொடுக்க மாட்டேன் என்று சொல்வது சரியல்ல. ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட்டார் கட்டிக் கொடுக்கிறார்களே அம்மாதிரிதான் கட்டிக்கொடுப்போம் என்றால் அது சரியல்ல, ஸிட்டி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட் செய்கின்ற வேலை அவ்வளவு சரியாக இல்லை. யாருக்காகவோ அவர்கள் வீடு கட்டுகிறார்கள். யாருக்கோ கொடுக்கிறார்கள். முக்கியமாக ஸாந்தோம் பகுதியில் ஸிடி இம்ப்ரூவ்மெண்ட் ட்ரஸ்ட் மீனவர்களுக்கு என்று வீடுகள் கட்டினார்கள். ஆனால், அவைகளில் அவர்கள் குடியிருக்க

11th November 1961] [Sri C. R. Ramaswami]

மாட்டோம், வாடகை அதிகமாக இருக்கிறது என்று சொல்லி விட்டார்கள். கடைசியில் அரசாங்க ஊழியர்களுக்கு அந்த வீடுகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, குறைந்த பட்ச வருவாய் உள்ளவர்களுக்கு மாதம் ஐந்து அல்லது பத்து ரூபாய்க்குள் வாடகை இருக்கும்படியாக வீடுகள் நிறையக் கட்டிக் கொடுக்கவேண்டும். அந்த வகையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகமாகச் செலவு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

DEPUTY SPEAKER : The hon. Member Sri C. N. Annadurai will now speak. I think he will take thirty minutes. Then the hon. Member Sri V. K. Ramaswamy Mudaliyar will speak for thirty minutes. The Hon. Leader of the House will begin his reply at 12-00 noon.

Sri C. N. ANNADURAI : சட்டமன்றத் துணைத் தலைவர் 11-00 p.m. அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற பல்வேறு திட்டங்களை இந்த மன்றம் ஏற்றுக்கொள்கிறது, சம்பிரதாயத்திற்காக அது தன்னுடைய ஒப்புதலையும் அளிக்கிறது என்ற முறையில் இன்று கனம் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களால் ஒரு திருத்தம் பிரேரேபிக்கப்பட்டிருப்பதோடு, அதில் சேர்க்கப்படவேண்டிய திட்டங்கள் இன்ன இன்ன, அவை சேர்க்கப்படாதது ஒரு பெருங்குறை என்று எதிர்க்கட்சிக்காரர்களாலும் சில திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு வருகிறது. இதிலே நேற்றைய தினத்தில் இருந்து நடந்துகொண்டிருக்கும் விவாதத்தைக் கவனித்துக் கொண்டிருக்கையில் எனக்கு ஏற்படுகின்ற எண்ணம், "இதனால் உண்மையில் ஏதாவது பயன் ஏற்படுமா?" என்பதுதான் இங்கே இப்போது இந்த மூன்றாவது திட்டத்தைப் பற்றி விவாதிப்பதன் மூலம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதாவது மாறுதல் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். என்னுடைய எண்ணத்தை உறுதிபடுத்திக்கொள்வதற்காக கனம் நிதி அமைச்சர் அவர்களிடம் கூடக்கேட்டு அறிந்து கொண்டேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இப்போது அமுலில் இருக்கிறது. ஏப்ரல் முதலே அது நடைமுறைக்கு வந்துவிட்டது. நடைமுறையில் இருந்து வருகிற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இப்போது நாம் சபையில் விவாதிப்பதன் மூலம் அந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போக்கை மாற்றியமைக்க முடியுமா என்ற ஐயப்பாடு உறுதியாகியிருக்கிறது. ஏனென்றால் இதற்கு முன்னாலே மூன்றாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தை நாம் இந்தச் சபையில் விவாதித்திருக்கிறோம். இன்ன இன்ன திட்டங்கள் தேவை என்று அப்போது எதிர்க்கட்சியினரால் தங்கள் கருத்துக்கள் வலியுறுத்திக் கூறப்பட்டிருக்கின்றன. ஆளும் கட்சியில் உள்ளவர்களும் அமைச்சர்களும் 400 கோடி ரூபாய்க்கு பல திட்டங்களை அமைத்துக்கொண்டு இதுதான் நல்ல திட்டம், இதற்குச் சபை அனுமதி அளிக்கவேண்டும் என்று கோரி சபையின் அனுமதியையும் ஒருவகையில் பெற்றுச் சென்றார்கள். இந்த மன்றத்தின் ஒப்புதல் அப்போது 400 கோடி

[Sri C. N. Annadurai] [11th November 1961]

ரூபாய்க்கு அறிவிக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சு மட்டும் அல்ல, அந்தப் பேச்சோடு அவர் வெளியிட்ட பாவங்களும் கூட எனக்கு இப்போது நினைவிருக்கிறது. பரிட்சைக்குச் செல்லும் மாணவனுக்கு சகுனம் பார்த்து அனுப்பி வைப்பது போல, நமது நிதி அமைச்சர் அவர்களும் டெல்லிக்குச் சென்றபோது சகுனம் பார்த்து, சபையின் ஏக ஒப்புதலோடு கூட, "சென்று வாருங்கள், வென்று வாருங்கள்" என்று அனுப்பினோம். அந்த இடத்தில் 400 கோடி ரூபாய்க்கு இந்தச் சபை அங்கீகாரம் அளித்திருக்கிறபோது அவர்கள் 291 கோடிக்குத்தான் அனுமதித்தார்கள் என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொண்டு வந்தார்களே அது சரியா என்ற சட்டப் பிரச்சனையையே கூட இங்கே எழுப்ப விரும்புகிறேன். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள பிரதிநிதிகள் அடங்கிய சட்டமன்றத்திலே 400 கோடி ரூபாய்க்கு என்று ஒரு திட்டத்தை அங்கீகரித்திருக்க—சபையில் விவாதிக்கப்பட்டு ஒரு முடிவுக்கு வந்திருக்க—டெல்லியில் உள்ள ப்ளானிங் கமிஷன் 291 கோடிக்குத்தான் அனுமதித்தது என்றால் உடனே திரும்பவும் அதற்கு இந்தச் சபையின் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டாமா? ப்ளானிங் கமிஷன் நாட்டின் பெரிய மந்திரி சபையா? சூப்பர் காபினெட்டா? இல்லையென்றால் அது 291 கோடி என்று நமது ராஜ்ய திட்டத்தைக் குறைத்தவுடனே நமது நிதி அமைச்சர் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? உடனடியாக இங்கே வந்து, "அவர்கள் 291 கோடிக்குத்தான் அனுமதி அளிப்போம் என்கிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன" என்று இந்த மாமன்றத்திலே கேட்டிருக்க வேண்டும். அப்போது உண்மையில் ப்ளானிங் கமிஷன் is not a super cabinet என்ற வாதம் எப்படிப் பொருத்தமாக இருக்கும்? ஆனால் இங்கே 400 கோடிக்கு என்று வகுத்த திட்டத்தை—அவர்கள் 291 கோடி என்று குறைத்தவுடனே இந்தப் பணத்திற்கு ஏற்றவகையில் சில பல திட்டங்களை விட்டுவிட்டு, லட்சிய அளவுகளையும்கூட குறைத்து விட்டிருக்கிறார்கள். இந்தச் சபையின் அனுமதியைப் பெறாவிட்டாலும் அமைச்சர் அவையையாவது உடனடியாகக் கூட்டி இதைப் பற்றி ஆலோசித்தார்களா என்று அறிய விரும்புகிறேன். அப்படி அவர்களே பார்த்து முடிவு செய்து, கடந்த எட்டு மாதங்களாக அதை அமுல் நடத்திக் கொண்டிருக்கிறபோது இன்றையதினம் இந்தச் சபையிலே அதைப்பற்றி விவாதிப்பதும், இந்தச் சபை அதற்கு ஒப்புதல் அளிக்கிறது என்று சம்பிரதாயத்திற்குத்தான் என்றாலும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதும் உண்மையில் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. கல்யாணமாகாத ஒரு ஆணும், பெண்ணும் புருஷன் பெண்சாதியாகப் பெற்றோர்களுக்கே தெரியாமல் வாழ ஆரம்பித்தவுடன்—ஏதோ தங்களுடைய முகத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்பதற்காக, அவர்களுடைய திருமணத்திற்கு என்று ஒப்புக்காக ஒப்புதல் அளிப்பதுபோல இன்றையதினம் இந்தச் சபையிலே ஆளும் கட்சியினரைச் சேர்ந்தவர்களும்கூட 400 கோடி ரூபாய்க்கு என்று திட்டத்தை அமைத்து ஒத்துக் கொண்டிருக்கிறபோது அதை

11th November 1961] [Sri C. N. Annadurai]

291-க்காக சபை அங்கத்தினர்களைக் கேட்காமலே குறைத்துவிட்டபோதிலும்—இப்போது ஒப்புக்கொள்கிறோம் என ஒப்புக்காகத் தெரிவிக்க வேண்டியது அவசியமா என்று எனக்குப் புரியவில்லை. இந்த விவாதம் அந்தவகையில் அமைவது என்றால் உண்மையில் பயன் அற்றதாகவே ஆகும். அதற்கு மாறாக "291 கோடிக்கு நாங்கள் ஒப்புக் கொண்டாலும் சபை ஒப்புக் கொள்ளவில்லை, இந்தத் திட்டங்களை எல்லாம் ஏற்றுக் கொள்ளாதது வருந்தத்தக்கது என்று திருத்தங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே இவற்றையும் ஒப்புக்கொள்ளவேண்டும்" என்று ஒருகால் மத்திய அரசினிடம் வற்புறுத்திக் கேட்பதற்கு இந்தத் திருத்தங்களை விவாதித்து ஏற்றுக்கொள்வது உபயோகமாகக்கூட இருக்கும். அப்படியில்லையென்றால் இந்த விவாதம் உண்மையில் பயன் அற்றதாகத்தான் இருக்கிறது என்பது என்னுடைய வாதம். பயன் அற்றது என்று சொல்கிறபோது எதிர்க்கட்சியில் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் குறைந்தது, அதனால் பயனில்லை என்ற கருத்தில் சொல்லவில்லை. பெருவாரியாக இந்த இரண்டு நாட்களாக இங்கே நடக்கிற விவாதத்தைப் பார்க்கிறபோது—கூவம் ஆற்றிலிருந்து கொள்முதல் விலையைக் குறைக்கவேண்டும் என்பது வரையில் பல திட்டங்களை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆற்றுக்கு அணைகட்டுவதிலிருந்து, மனைக்கட்டு வழங்கவேண்டுமென்ற திட்டங்கள் வரைச் சொன்னார்கள். இதற்கு அவசியம் இப்போது இங்கே என்ன இருக்கிறது? நடைமுறையில் இருந்து வருகிற திட்டத்தை இதனால் மாற்றி அமைக்கப் பயன்படப் போகிறதா? அல்லது இங்கே விவாதித்து ஒப்புதல் அளிக்கவேண்டும் என்ற சம்பிரதாயம்தான் நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிற ஒரு திட்டத்திற்கு அவசியமா? ஆகவேதான் பயன் அற்றது இந்த விவாதம் என்று சொன்னேன். அன்றைக்கு 400 கோடிக்கு நகல் திட்டத்தை அமைத்து இந்த மன்றத்திலே விவாதித்தபோது—ஆகா இது தான் உயர்ந்த திட்டம், இந்தத் திட்டத்தை நாங்கள் தயாரித்திருக்கிறோம் என்று பெருமையோடு பேசி ஆதரவு கொடுத்த ஆளும் கட்சியினர்கள், இன்று அத் திட்டம் 291 கோடியாகக் குறைக்கப்பட்டு, முன்பு தீர்மானித்துள்ள பல திட்டங்கள் கைவிடப்பட்டு இன்றைக்குச் சபையில் வந்திருக்கிறபோது—ஐயோ இப்படிக் குறைந்துவிட்டதே என்று கொஞ்சம்கூட வருந்தாது, இதுதான் உயர்ந்த திட்டம் என்று பேசுகிறார்கள் என்றால்—இதுதான் அரசியல் தலையெழுத்தாகும். இது துரதிருஷ்டவசமாக இன்னும் குறைக்கப்பட்டாலும்கூட "இப்போதுதான் இது சிறந்ததாக இருக்கிறது. சிறுகக் கட்டிப் பெருக வாழ் என்றுதானே சொல்லியிருக்கிறார்கள்" என்று தங்களையே சமாதானம் செய்துகொண்டு பாராட்ட வேண்டிய நிலை ஆளும் கட்சியினர்களுடையது. அதுவும் தேர்தல் நெருங்கிவிட்ட நேரம். ஆகவே, இப்போது இதைக் கண்டித்துப் பேசினால் என்ன ஆகுமோ என்று அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டியதுதான்.

ஆனால் கடந்த இரண்டு நாட்களாக இங்கே நடக்கிற விவாதத்தைப் பார்க்கிறபோது, "ஆகா இந்தத் திட்டத்தைப்போல்

உண்டா? இதைக் குறை சொல்கிறார்களே, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள்" என்று அவர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறபோது ஏதோ அவர்களும் வாதத்திற்காகப் பேசுகிறார்களே தவிர கொஞ்சமாவது சிந்தித்துப் பேசுகிறார்கள் என்று சொல்ல முடியாது. காரணம் திட்டத்தை யார் குறை சொன்னார்கள்? இந்த மன்றத்திற்கு வெளியே இருக்கிற ஒரு கட்சியினர் இந்தத் திட்டத்தை எதிர்ப்பதாகப் பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறதே தவிர இங்கேயுள்ள அத்தனை கட்சிகளும் திட்டமிட்ட வாழ்க்கையையே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் இந்தப் பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு திட்டமிட்ட வாழ்க்கையே சிறந்த ஆட்சிக்கு இலக்கணமாக அமைந்துவிட்டிருக்கிறது. ஆனால் "போடப்பட்டுள்ள திட்டம் எவ்வாறு இருக்கிறது, இந்தத் திட்டத்தின் பலனை யார் அனுபவிக்கிறார்கள்?" என்றெல்லாம் ஆராய்வது திட்டத்தையே வெறுப்பதாகாது. ஆகையால் திட்டத்தின் குறைபாடுகளை எடுத்துச் சொல்கிற நேரத்தில் அந்தக் கண்ணோட்டத்தோடு இதைக் கவனிக்கவேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எனக்கு முன்னாலே பேசிய மைலாப்பூர் தொகுதி அங்கத்தினர் திரு. ராமசாமி அவர்கள் மின்சாரம் எந்த அளவுக்கு இங்கே உற்பத்தியாகிறது என்பதை மிகவும் ஆர்வத்தோடு சொன்னார்கள். அவர்களேதான் நகல் திட்டம் பற்றி விவாதிக்கையில் இதைச் சொன்னார்கள்.

"The mere electrification of all villages was not an index of prosperity. Every unit of power should be directed towards increasing the production of wealth."

மின்சாரத்தை உற்பத்தி செய்துவிட்டோம் என்று பாராட்டிக் கொண்டிருக்கிற நேரத்தில் நானே சொன்னேன். சும்மா வெளிச்சம் போட்டுக் காட்டினால் போதாது. தொழில் துறையில் ஒவ்வொரு சிறுசிறு தொழிலுக்கும்கூட எத்தனை யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய அளிக்கப்படுகிறது என்று பார்க்க வேண்டும். தொழில் துறையில் அதிகமான அளவுக்கு எப்போது மின்சாரம் உபயோகப்படுத்த ஆரம்பிக்கிறோமோ அப்போதுதான் உண்மையான வளர்ச்சி என்று சொல்ல முடியும் என்றேன். இது தெரிந்தோ தெரியாமலோ இதே கருத்தைத்தான் அப்போது திரு. ராமசாமி சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் 400 கோடி என்பது 291 கோடியாகக் குறைந்துவிட்டபோது—எவ்வளவு வெளிச்சம் போட்டிருக்கிறோம், எத்தனை கிராமங்களுக்கு விளக்குப் போட்டாகிவிட்டது, இது அபிவிருத்தியில்லையா என்று பேசினார்கள். இது எனக்கு புரியவில்லை. தேர்தலுக்கு முன்னாலே பேசுகிற பேச்சு என்று மட்டும் புரிகிறது. இன்றையதினம் உற்பத்தியான மின்சாரம் எவ்வளவு? விவசாயத்திற்கு, இதர தொழில்களுக்கு எவ்வளவு உபயோகப்படுத்துகிறோம்? இதைக் கவனிக்க வேண்டாமா?

இன்றையதினம் நம்முடைய கனம் அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்கள்? இதுவேண்டும், அதுவேண்டும் என்று கேட்டார்கள், இது சரியல்ல, என்று பேசினார்களே என்று சொல்லிவிட்டு புள்ளிவிவரங்களைக் காட்டினார்கள். நம்முடைய லட்சிய அளவுகள்தான் அதில் குறைந்துவிட்டனவே! கனம் ராமசாமி அவர்களும் இப்படி இத் திட்டத்தைக் குறைகூறுகிறார்களே என்று தொடங்கி இப்படியே போனால் இங்கே தொழில்துறை வளராது, நிலக்கரி கிடைப்பது இல்லை, இதை யோசித்துப் பார்க்கவேண்டும் என்றுதான் பேசினார்கள். அந்த வகையிலே பார்க்கும்போது நான் உள்ளபடியே என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திட்டமிட்டவர்களுடைய நோக்கம் நிச்சயமாக நிறைவேற்றப்படவில்லை. புள்ளிவிவரங்களைக் காட்டி, 14 லட்சம் டன் உணவு உற்பத்தி 16 லட்சமாக உயர்ந்துவிட்டது என்ற புள்ளிவிவரங்களைக் காட்டுவதில் பயனில்லை. உங்களுடைய புள்ளிவிவரங்களை விவசாய நிபுணர்கள் ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். உங்களுடைய புள்ளிவிவரத் தயாரிப்பிலேயே நிறையத் தவறுகள் இருக்கின்றன என்று பெரிய நிபுணர்கள் வலியுறுத்திக் கூறி வருகிறார்கள். ஆகையால் அந்தப் புள்ளி விவரங்களை வலிவு குறைந்தவன் கைத்தடியை ஊன்றி நடப்பதைப் போல் உங்களுக்கு உதவுகின்றனவே தவிர, நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமையில் எந்தவிதமான மாற்றத்தையும் அது தெளிவுபடுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய கனம் அம்மையார் அவர்கள் ஆரம்பத்தில் எங்களைக் கண்டித்துவிட்டு பிறகு என்ன சொன்னார்கள். இது வேண்டும், அது வேண்டுமென்று சொன்னார்கள். இது சரியல்ல, அது சரியல்ல என்று பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் பேச ஆரம்பிக்கும்போது பிள்ளையார் குட்டாக, "இந்தத் திட்டத்தை வரவேற்கிறேன்" என்று சொல்லிவிட்டு அதற்குப் பிறகு "ஐயோ, அதைச் செய்யவில்லையே, இதைச் செய்யவில்லையே" என்று கூறினார்கள். கனம் ராமசாமி அவர்கள் இந்தத் திட்டத்தின் குறைகளைக் கூற ஆரம்பித்து, அதற்குப் பிறகு பெரிய தொழில்கள் எல்லாம் வளர்ந்திருக்கின்றன என்று தம்மைத்தாமே உற்சாகப்படுத்திக்கொண்டு, அடுத்த நிமிஷத்திலேயே மூடப்படும் தருவாயில் இருக்கக்கூடிய தொழில்களை எடுத்துக் காட்டுகிறார். என்ன மனப்பான்மையிலே இவர்கள் நடக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் யோசித்துப் பார்க்கத்தான் செய்வார்கள் என்பதைக் கூற விரும்புகிறேன். பெரிய தொழில்கள் வளர்ந்திருக்கின்றன என்றும் சொல்லும்போது அவருடைய நெஞ்சின் அடிமனம், அவர் தொழில் அதிபராக இருக்கின்ற காரணத்தால், அவர் உண்மையை அறிந்திருக்கிற காரணத்தால், உண்மையை உணர முடிகின்ற காரணத்தால், பெருந்தொழில்கள் வளரவில்லை என்று தெரிவதோடு, இருக்கக்கூடிய தொழில்களும் மூடப்படக்கூடிய நிலையில் இருக்கின்றன என்பதை அவர் எடுத்துக்காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. 'நிலக்கரி போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை, உற்பத்திச் சாதனங்கள் போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை' என்று

பேசினார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒவ்வொரு அங்கத்தினரும் தங்களுடைய 10 நிமிஷப் பேச்சை வீட்டுக்குச் சென்று அவர்களே ஆழ்ந்து படித்துப் பார்த்தால், 2 நிமிஷம் எதிர்க்கட்சிக்கு என்று ஒதுக்கிவிட்டு, 4 நிமிஷம் தொகுதிக்கென்று ஒதுக்கிவிட்டு, கடைசியில் போகிற போக்கில் எங்கே மறந்து விடுவார்களோ என்று 2 நிமிஷம் எங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுகிறார்கள். அவ்வாறு நீங்கள் கூறும் யோசனைகள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இணைக்கப்படுமா? எங்களுடைய அபிப்பிராயத்தை விட்டுவிடட்டும், உங்களுடைய அபிப்பிராயம் மதிக்கப்படுகிறதா? ஏற்றுக் கொள்ளப்படுகிறதா?

இந்த மன்றத்திலே 400 கோடி ரூபாய்த் திட்டத்தை வைத்து விவாதிக்கும்போது ஐந்து முக்கியமான திட்டங்கள் வலியுறுத்தப்பட்டன. தமிழ் நாட்டுக்கு அணு உலைக் கூடம் தேவையென்று கூறியிருக்கிறோம். அதுபற்றி வாய் திறந்து பேசுகிறதா, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம்? அதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறார்களா? இதுபற்றி வெளியிலே உள்ளவர்கள் கேலி செய்வார்களே என்பதற்காக "நாங்கள் அதற்கான பூர்வாங்க வேலையைத் துவக்க இருக்கிறோம்" என்று சொல்கிறார்கள். சேலத்தில் இரும்பு, எஃகு தொழிற்சாலைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 25 கோடி ரூபாய் போதுமா? அந்தத் தொகையைக் கொண்டு அந்தத் தொழிலை நடத்த முடியுமா? ரூர்கேலாவும், துர்காபூரும் எந்த அளவுக்கு வளமாக இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியாதா? இருபத்தைந்து கோடி ரூபாய் செலவில் சேலத்தில் இரும்பு, எஃகு தொழிலை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்வது வேண்டுமானால் தேர்தலுக்காகப் பயன்படலாமே தவிர உண்மையிலேயே அந்தத் தொழிலைத் திறம்பட நடத்தப் போதுமானதா? கனம் அம்மையார் அவர்கள் "இடித்தால் இரும்பு கிடைக்கும், தோண்டினால் தங்கம் கிடைக்கும்" என்று பேசினார்கள். "நாங்கள் இடித்துக் கொண்டும் தோண்டிக் கொண்டுந்தான் இருக்கவேண்டும். இரும்பையும் தங்கத்தையும் வெளியே எடுத்துக்கொண்டு வர வேண்டியவர்கள் பின்னாலே வர இருக்கிறார்கள்" என்ற உண்மையைத்தான் மறைமுகமாக அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இங்கு நிறைவேற்றப்பட்ட அந்தத் திட்டத்தின்படி கேட்கப்பட்ட ஐந்தில் இரண்டு கேட்பாரில்லாமல் இருக்கின்றன. "இண்டர் ஸ்டேட் வாட்டர் சப்ளை" பற்றி அந்த நேரத்தில் மந்திரியவர்கள் பன்னிப் பன்னிப் பேசினார்கள். கிருஷ்ணா-பெண்ணாறு திட்டத்தைப் பற்றித் திரும்பத் திரும்பப் பேசினார்கள். இந்தியா ஒன்றாக இருக்க வேண்டுமென்பதிலே அதிக அக்கறை கொண்ட அவர்கள் கங்கையையும், காவிரியையும் இணைக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். அதற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கிறதா? அதற்குக் கொஞ்சம் இடமாவது கொடுத்திருக்கிறார்களா? அதே போன்று மின்சார உற்பத்தியை அதிகப்படுத்துவது அணு மூலமாகத்தான் முடியும் என்று ஒவ்வொரு உறுப்பினரும் வலியுறுத்திப் பேசினார்களே! அது இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறதா? ஆகவே, 400 கோடி ரூபாய்த் திட்டமானது 291 கோடியாகக் குறைக்கப்பட்டதோடு மட்டுமல்லாமல், "பினான்ஷியல் டார்ஜெட்" குறைக்கப்பட்டிருப்பதோடு மட்டுமல்லாமல் "பிசிகல் டார்ஜெட்"-டும் குறைக்கப்பட்டு, பல திட்டங்கள் வெட்டப்பட்டு, குறைக்கப்பட்டுள்ளன என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தத் திட்டத்திலே மகிழ்ச்சியடைய என்ன இருக்கிறது? அனைவரும் கூடி ஒரு நாள் அழ வேண்டுமானால், அழலாமே தவிர, சந்தோஷப்பட என்ன வழி இருக்கிறது? "கிடைத்தது கிடைக்கட்டும்" என்று திருப்திபட்டுக்கொள்ள முடியுமா என்றால்—என்னைப் பற்றிக் கனம் நிதி மந்திரியவர்கள் முன்னர் பண்டாரம் என்று சொன்னார்—பண்டாரங்களாக இருந்தால் திருப்தியடையலாமே தவிர, பாதுஷாக்கள் எப்படித் திருப்தியடைய முடியும்?

ஆகவே, 400 கோடி ரூபாய்த் திட்டத்தை மறுபடியும் வலியுறுத்தும் வகையில், இந்த 291 கோடி ரூபாய்த் திட்டத்தை ஏற்றுக் கொண்டோம் என்ற தீர்மானத்தைப் போடாமல், 400 கோடி ரூபாய்த் திட்டத்தைப் ப்ளானிங் கமிஷன் நீக்காமல் இருந்தால், குறைக்காமல் இருந்தால் நாட்டுக்கு மேலும் சில பல நன்மைகள் கிடைத்திருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டும் முறையில் "எங்கள் நாட்டு மக்கள் இந்தத் திட்டங்களையெல்லாம் வலியுறுத்திக் கேட்கிறார்கள்" என்று எதிர்த்தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் அதனை டெல்லி வட்டாரத்தில் எடுத்துச் சொன்னால் தக்க பலன் கிடைக்கும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, நம்முடைய திட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றி அறிய வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். திட்டம் என்பது, இன்னின்ன இடத்தில் விதைப் பண்ணைகள் ஆரம்பித்தோம், இவ்வளவு பொலிக் காளைகள் வாங்கிக் கொடுத்தோம், இவ்வளவு உரங்கள் சப்ளை செய்திருக்கிறோம் என்று சுட்டிக் காட்டப் போடப்படக்கூடிய ஒரு வரவு-செலவு ஏடல்ல. நாங்கள் இன்னின்ன வகையில் நாட்டைத் திருத்தியமைக்க விரும்புகிறோம், மக்கள் வாழ்க்கையை இந்த அளவுக்கு முற்போக்காகச் செய்ய விரும்புகிறோம் என்ற "மெஷினரி ஸ்பிரிட்" மனோபாவந்தான் திட்டத்திற்கு அடிப்படையாகும். அவ்வாறல்லாமல் செய்யப்படும் காரியங்களைச் சொல்ல ஐந்து வருஷத் திட்டம் என்ற ஒரு ஐங்கணக்கைப் போடுவதைவிட வருஷத்திற்கு ஒரு முறை இன்னின்ன இடத்திலே இன்னின்ன செய்திருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கலாம். மக்களுடைய வாழ்க்கையை இப்படித் திருத்தியமைக்க விரும்புகிறோம் என்பதுதான் திட்டத்தின் அடிப்படை. அதனால்தான் திட்டத்தைப் பற்றிப் பிரதமர் நேரு அவர்கள் பேசுகிற நேரத்தில் ஏறக்குறைய கவிதா வாக்கியத்தைப் பயன்படுத்துகிறார். "மக்கள் முகத்தைப் பாருங்கள்! கிராமப் புறத்தைப் பாருங்கள்! அவர்களுடைய முகத்திலே தோன்றும் புதிய ஒளியைப் பாருங்கள்!" என்று பேசுகிறார். சாதிக்க முடியாத காரியங்களையெல்லாம் திட்டத்தால் சாதிக்க முடியும் என்று கூறும் நேரத்திலே இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு

முக்கியமான கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. **Eradication of economic disparity not only between individuals but also between regions.** தனிப்பட்ட ஆட்களுக்குள்ளே உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மட்டுமல்ல, பிரதேசங்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதும் போக்குவதும் மூன்றாவது திட்டத்தின் நோக்கமாகும் என்று சொல்கிறார்கள். நெஞ்சிலே கை வைத்துப் பார்த்து, இன்று வேண்டாம்—நாளை, என் எதிரிலே வேண்டாம்—தனியாக, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் யோசித்துப் பார்ப்பார்களேயானால் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் பிரதேச வேற்றுமை போக்கப்பட்டிருக்கிறதா, அந்த வேற்றுமை போக்கப்படுவதற்கேற்ற வகையிலே திட்டங்களை விரிவுபடுத்தியிருக்கிறார்களா என்றால், இல்லையே! வடநாட்டுத் திட்டங்களோடு தென்னாட்டுத் திட்டங்களை ஒப்புவமை காட்டிப் பேசும் நேரத்தில் 'ஏன் வடக்கு, தெற்கு என்று பேசுகிறீர்கள்' என்று கேட்கும் நீங்கள் தேசிய அபிவிருத்திக் கூட்டத்தில் இந்தக் கருத்தைப் பேசவில்லையா? நிதி மந்திரியின் பார்வை பேசுகிறது. 'இந்தியாவில் இருந்துகொண்டு நான் பேசுகிறேன்; நீ ஓடிப் போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டு பேசுகிறாய்" என்று. பத்து வருஷமாக இந்த நிலை என்றால் ஓடாமல் என்ன செய்வது? பதவி வேண்டுமென்றால் ஓட்டிக்கொண்டிருக்கலாம். அவரது கருத்து மதிக்கப்பட்டதா? "மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். நானூறு கோடித் திட்டத்தை நாட்டு மக்கள் கோருகிறார்கள் என்று சொல்லி, திரும்பத் திரும்ப வற்புறுத்தி அமைச்சர் அவர்கள் வாங்கி வருவதாக இருந்தால் அவருக்குக் கொடி தூக்கும் தொண்டராக மாறி டில்லிக்கு அனுப்புவோமே!

தொழில் துறையைப் பொறுத்தவரையில் இந்த மூன்றாவது திட்டத்தில் சர்க்கார் என்ன செய்திருக்கிறார்கள்? ஸ்டீல் ரீரோலிங் மில்லுக்கு ஒரு கோடி ரூபாய், இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷனுக்கு ஒரு கோடி ரூபாய் என்று பெருமை பட்டுக்கொள்ளுகிறார்கள். கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 50 லட்சம் ரூபாய். பெருமைப்படக்கூடிய காரியமா இது? நீங்கள் கொடுத்திருக்கும் பட்டியலைப் பார்த்தால் முதலாளிமார்களை ஆதரிக்கக்கூடிய சர்க்கார் என்பதற்குத்தான் ஆதாரமிருக்கிறதே தவிர, பாட்டாளிகளின் சர்க்கார் என்பதற்கான ஆதாரம் இல்லையே! "காகித ஆலையா?—சேஷசாயி கம்பெனி. ரேயான் தொழிற்சாலையா?—வெங்கடசாமி நாயுடு. அலுமினியம் தொழிற்சாலையா? "வெங்கடசாமி நாயுடு" என்று ஒவ்வொரு தொழிலையும் ஒவ்வொரு முதலாளிகளிடத்திலே கொடுத்திருக்கிற நீங்கள் எதற்காக இங்கே ஒரு ஆட்சியை நடத்துகிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். முதலாளிக்கும் தொழிலாளிகளுக்கும் தகராறு வந்தால் போலீசைக் கொண்டு தொழிலாளரை உதைக்கச் செய்து 'விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது' என்று சொல்லிக்கொண்டிருக்கவா நீங்கள் ஆட்சி நடத்துகிறீர்கள்? இந்தத் தொழிலை நடத்த ஆட்சியில் இருப்பவர்களுக்கு திறமையே இல்லையா? எடுத்து நடத்துவதற்குப் போதுமான ஆட்கள்தான் இல்லையா? அல்லது நமக்கு அனுபவம்தான் இல்லையா? இந்தாலி நாட்டுக் கம்பெனியோடு ஒப்பந்தம் பேசி, வெங்கடசாமி அலுமினியம் தொழிற்சாலை ஆரம்பிக்க இருக்கிறார் என்றால், அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்கும் அதிகாரம் நம்மிடம் இல்லாமல் போய் விட்டதா? நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதே மன்றத்திலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்—"அலுமினியத் தொழிற்சாலை பப்ளிக் செக்டாரில்தான் வரும்—[illegible]யில்தான் வரும்—கவலைப் படாதீர்கள்; மத்திய சர்க்கார் [illegible] கொடுக்காவிட்டாலும் நாங்களே கார்ப்பொரேஷன் ஆரம்பித்துப் பணம் சேர்ப்போம்"—என்று, இந்த மன்றத்திலே கொடுத்த வாக்குறுதி என்ன ஆயிற்று? மன்றத்திற்குக் கொடுத்த வாக்குறுதியை மீறி, வெங்கடசாமி ஆரம்பிக்கிறார் என்று அதற்கு நீங்கள்—வைதீக பாஷையில் சொல்லவேண்டுமானால்—ததாஸ்து என்று அவர்கள் தலையில் அட்சதை போடுகிறீர்களென்றால், எதற்காக நீங்கள் ஆட்சி பீடத்தில் இருக்கிறீர்கள்? நீங்கள் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவது இப்படித்தானா? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தொழில் துறையில் பின் தங்கியிருக்கிற நம் நாட்டை முன்னுக்குக் கொண்டுவரத் தவறி விட்டீர்கள். தவறி விட்டது மட்டுமல்லாமல், உங்கள் தவறை மறுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மறுத்துக் கொண்டிருப்பது மட்டுமல்லாமல், தவரைச் சுட்டிக் காட்டக் கூடியவர்களைப் பொது மக்கள் மன்றத்தில் மிகக் கேவலமாகப் பேசிக்கொண்டு வருகிறீர்கள். ஆகவே நாடு முழுவதும் தொழில் துறையில் ஒரே மாதிரி முன்னேற வேண்டும், ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது என்று நீங்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறீர்களே தவிர, செயலில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? வேறு ஒரு இடத்தில் பேசி இருக்கிறார் நமது நிதி அமைச்சர்—10 வருஷமாக இந்த எண்ணம் எனக்கு உண்டு. **"It is unfortunate, that I have not succeeded so far',** எனக்கு பிரதேச வேற்றுமைகளை ஒழிக்கவேண்டும் என்ற எண்ணம்தான்; ஆனால் வெற்றி பெற முடியவில்லை" என்று பேசியிருக்கிறார். எங்களில் சில பேர் தேர்தலுக்கு நின்று தோற்றதற்குச் சொல்லுவதுண்டு, "வெற்றி இழந்தோம்" என்று—தோற்றோம் என்று சொல்லுவதற்குக் கூச்சம். அதேபோல் நிதி அமைச்சருக்கு இருக்கிற கூச்சத்தினால் வெற்றி பெறவில்லை என்று சொன்னார்களே தவிர, தோற்று துயருற்றுத் திரும்பியிருக்கிறார்கள் . . . .

THE HON. SRI C. SUBRAMANIAM : அதுமாதிரி சொல்லும் நிலை எனக்கு வேண்டாம்.

SRI C. N. ANNADURAI : நீங்கள் விரும்புகிற இது பிப்ரவரி மாதத்தில் நடைபெறவேண்டிய காரியம்—இப்போது இருக்கிற நிலையில் அல்ல. ஆகையால் அந்த முதல் நோக்கம்—பிரதேச வேற்றுமைகளைத் தீர்த்துக் கட்டுவது—நிறைவேற்றப்படவில்லை. இரண்டாவது தனிப்பட்டவர்களுக்குள் வரக்கூடிய வருவாயில் இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்திருக்கிறீர்களா என்றால் இந்திய யூனியன் நிதி அமைச்சர் அவர்கள்—மொரார்ஜி

தேசாய் அவர்கள்—தெளிவாகச் சொல்லிவிட்டார். I cannot guarantee என்று. ஐந்து வருஷத்தில் முடியுமா ? " I cannot promise what I cannot achieve "; ஏழு வருஷத்தில் முடியுமா ?—" நான் சொல்ல முடியாது " ; பத்து வருஷத்தில் முடியுமா ?—" நான் சொல்ல முடியாது.

இப்படி " என்னாலே முடியாது ", " நான் வாக்குறுதி அளிக்க விரும்பவில்லை ", " தனிப்பட்டவர்களுக்குள் இருக்கும் இக்கனாமிக் டிஸ்பாரிட்டி—பொருளாதார ஏற்றத் தாழ்வு—குறையும் என்று சொல்ல முடியாது " என்று சொல்லி விட்டார். எனக்கும் நிதி அமைச்சருக்கும் ஒப்புவமை பார்க்கும் நேரத்தில் அவர் மேதை—நான் எதுவும் அறியாதவன். ஆனால் மொரார்ஜி தேசாய்க்கும் நம்முடைய நிதி அமைச்சருக்கும் ஒப்புவமை பார்க்கும் நேரத்தில், குறைந்தது இந்த அளவுக்காவது இவர்களுக்கு அறிவு இருக்கும் என்று நான் கருதுகிறேன். மொரார்ஜி தேசாய் வெளிப்படையாக " என்னால் முடியாது, ஏற்றத் தாழ்வுகள் குறையாது " என்று சொன்ன பிறகு திட்டத்தின் இரண்டாவது நோக்கம் எங்கே ? இரண்டாவது நோக்கம் எங்கே ஈடேறிற்று ? அவர்களை விட்டு விடுங்கள்—ஓய்வு பெற்றிருக்கிற—முன்னாள் நிதி அமைச்சராக இருந்த—திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி ஒரு இடத்தில் தெளிவாகப் பேசியிருக்கிறார். " ரூபாயின் மதிப்பு குறைந்து விட்டது, மக்களில் நூற்றுக்கு 90 பங்கு " On marginal or sub-marginal level " வாழ்க்கையின் எல்லைக் கோட்டிலே—ஏன் ? எல்லைக் கோட்டுக்கும் அப்பாலே கூட—இருக்கிறார்கள் " என்று பேசியிருக்கிறார். மிகச் சிலர் இடத்தில் பணம் குவிகிறது என்று நிதி அமைச்சராக இருந்த திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி சொல்லியிருக்கிறார். இன்னும், அமெரிக்காவிலிருந்து வந்திருக்கிற கால் பிரெய்த் " நீங்கள் நடத்துகிற சமதர்மம் போஸ்ட்-ஆபீஸ் சோஷலிஸம் " என்று குறிப்பிட்டுப் போயிருக்கிறார். தனியார் துறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற தொழிலில் லாபம் வருகிறது, ஆனால் பொதுத் துறையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற தொழில்களில் போடப்பட்டிருக்கின்ற மூலதனத்துக்கு வட்டிக்குக் கூடக் கட்டவில்லை என்று குறிப்பேடுகள் குறிப்பிடுகின்றன. எங்கே நீங்கள் இரண்டாவது நோக்கத்தை நிறைவேற்றினீர்கள் ? முதல் நோக்கமே பாழ்பட்டு விட்டது. இரண்டாவது நோக்கம் நிறைவேற்றுவதற்கில்லை என்று சொன்ன பிறகு, நிதி அமைச்சர் அவர்கள் தனக்கே உரிய பாஷைப்படி " முயற்சி எடுப்போம், எல்லோரும் ஒத்துழைத்தால் நடக்கும் " என்று சொல்லுகிறார். இப்படிச் சொல்லிவிட்டு பிப்ரவரி ஆனதும் வேறு திக்கை நோக்கி ஓடப் போகிறார். இங்கே யாரை உட்கார வைக்கப் போகிறார்களோ தெரியாது. என்னையே இங்கே இருக்க விடப் போகிறார்களோ இல்லையோ, அதுவே அவர் கையில்தான் இருக்கிறது. இப்படி இவர்கள் தனிப்பட்டவர்களுடைய வருவாயில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதாக உத்திரவாதம் தந்தார்களே, குறைத்துக் காட்டினார்களா ? ஆசியாக் கண்டத்திலே இருக்கக் கூடிய பல நாடுகளிலுள்ளவர்கள்—பொருளாதார நிபுணர்கள்—மாநாட்டில் இந்தியாவிலே இரண்டு இந்தியக் குடும்பங்களிடத்தில் 500 கோடி

ரூபாய் மூலதனம் சிக்கிக் கொண்டிருக்கிறது என்று பேசியிருக்கிறார். இவருக்கும் இந்தப் பேச்சுக்கும் என்ன பொருத்தம் இருக்கிறது ? இதுதான் சமதர்மம் என்றால் சமதர்மத்தை எழுதியவன் நாம் அந்தக் காலத்தில் எப்படி இருந்தது என்பதற்காகக் கல்லறைகளைத் தோண்டிப் பார்ப்பதுபோல—கல்லறையிலிருந்து எழுந்து வந்து அந்தக் காலத்தில் நாம் எழுதிய சமதர்மம் நாட்டில் எப்படி இருக்கிறது என்று பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தால், அவன் எழுதிய சமதர்மத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லாததைத் தான் காண நேரிடும். இதுதான் சமதர்மமா ? எந்த வகையிலே இந்த சமதர்மத்தை ஏற்படுத்த திட்டத்தின் கீழ் தனியார் துறையில் இருக்கிற லாபத்தை ஒழிக்கப் பார்த்தீர்கள் ? நம்முடைய நிதி அமைச்சர் இந்த மன்றத்தில் சொன்ன இன்னொரு லட்சியம் என்னவென்றால், தொழிலாளிகளை தொழிலில் பங்காளிகளாக ஆக்கிவிட வேண்டும்—ஷேர் ஹோல்டர்களாக ஆக்கிவிட வேண்டும்—என்பது. இது சொல்லி ஒரு வருஷத்திற்கு மேல் ஆயிற்று என்று நான் கருதுகிறேன்—என்ன முயற்சி எடுத்தீர்கள் ? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட நகலில் இதற்கான வரி என்ன இருக்கிறது ? முதலாளிகளுக்கு வரக்கூடிய லாபத்தை அப்படியே விட்டு விட்டால் அது தவறான வழியில் போகிறது, அதுவும் கள்ள மார்க்கெட்டில் வரும் லாபத்தைத் திரும்பப் பிடித்து உறிஞ்சி இழுக்க வேண்டும், அதற்குத் தொழிலாளிகளுக்கு அதிகமாகப் பணத்தை கொடுத்தால்தான் வருமானம் பரவி இருக்கவேண்டும் Disposal of income என்று நிதி அமைச்சர் பேசினாரே, அந்த முறையில் தொழிலாளிகளை தொழிலில் பங்காளிகளாக்க இந்தத் திட்டத்தில் என்ன வழி இருக்கிறது ? நேர் மாறாக நீங்கள் புதுப் புது முதலாளிகளையும் தொழிலதிபர்களையும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். இந்த நாட்டிலே இருக்கிற தொழில் வளத்தை மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால் நெய்வேலி நிலக்கரி மத்திய சர்க்கார் நிர்வாகத்தில், பெரம்பூர் கோச் ஃபாக்டரி மத்திய சர்க்கார் நிர்வாகத்தில், புதியதாக அமைக்க இருப்பது ஸர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் ஃபாக்டரி—அதாவது அறுவைக்கான கருவிகள் தயாரிக்கும் தொழிற்சாலை. இவை தவிர உங்களுக்குக் கிடைத்தது என்ன ? ஏராளமான நல்லெண்ணம், மிகுந்த பாராட்டுதல், நல்ல நேசம்—இவைகளை இல்லை என்று நான் சொல்லவில்லை. இவைகள் தவிர இந்த நாட்டுக்குக் கொண்டு வந்தது என்ன ? சேது சமுத்திரம் உண்டா ? " சேர்க்கப்பட்டிருக்கிறது, நிறைவேறும் என்று எதிர்பார்க்கிறோம் " என்று ஒருவரும், இன்னொரு இடத்தில் மத்திய சர்க்காரில் அமைச்சராக இருக்கக்கூடிய திரு. சுப்பராயன் அவர்கள் ஒரு இடத்தில் " சேர்க்கப்பட்டிருக்கிறது, நிறைவேற்றப்படத் தான் போகிறது, ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதை சேர்ப்பது யோசிக்கப்படவேண்டிய விஷயம் " என்று ஆருடம் பார்ப்பது போலப் பேசியிருக்கிறார்கள். நேற்று பேசும் போது கனம் அங்கத்தினர் சீனிவாச அய்யர் கிழக்குக் கரைக்குச் சாலை அமைக்க முடிந்தால் நல்லது என்று பேசியிருக்கிறார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலை வேண்டும் ; தொண்டி துறைமுகத்தை

ஆழப்படுத்த வேண்டும்; கடலூர், போர்ட்டோ நோவோ துறைமுகங்களை விரிவுபடுத்த வேண்டும்; சிறு துறைமுகங்களை அபிவிருத்தி செய்து அவைகளைத் தூர்வாரி விரிவுபடுத்த வேண்டும்—இதற்கெல்லாம் என்ன வழி செய்திருக்கிறீர்கள்? நினைத்த நேரத்தில் கண்டலாவைத் தோண்டினார்களே மண் சரிகிறது—அதை வாரிக் கொட்டிவிட்டு, தோண்டி, அதிலும் கட்டணம் இல்லாமல் ட்யூட்டி இல்லாமல்—வரலாம் என்று அந்தத் துறைமுகத்தை இன்றைய தினம் மிகுந்த பரபரப்புள்ளதாக ஆக்குகிறார்கள்.....

DEPUTY SPEAKER: The hon. Member may finish his speech within two minutes.

SRI C. N. ANNADURAI: உலக பாங்க் கடன் கொடுக்காமலிருந்தால் சென்னைத் துறைமுகம் கேட்பாரற்றுப் போயிருக்கும். தொழில் வளத்தைப் பெருக்கத் தவறிவிட்டீர்கள். ஆக உண்மையிலேயே இந்தத் திட்டத்தின் மூலம் சமதர்மம் நிறைவேற்றப்படவில்லை, விலைவாசி குறைக்கப்படவில்லை, வேலையில்லாத் திண்டாட்டம் நீக்கப்படவில்லை, கிராமப்புறத்திற்கும், நகரப் புறத்திற்கும் இருக்கக்கூடிய பேதங்கள் போக்கப்படவில்லை, பிரதேச வேற்றுமைகள் நீக்கப்படவில்லை—இவைகள் அத்தனையும் உங்களால் செய்ய முடியவில்லை. நான் சொன்னவைகளையெல்லாம் நிறைவேற்ற, ஒவ்வொன்றுக்கும் ஆகக்கூடிய செலவுத் தொகையைப் போட்டு கூட்டிப் பார்த்துத்தான் நமது மாநிலத்திற்கு, 1,000 கோடி ரூபாய் ஆகும் என்று குறிப்பிட்டேன். அதற்கு "ஐயோ, ஆயிரம் கோடியா" என்று கேட்டார்கள். அதே நேரத்தில் நிபுணர்கள் சொல்லியிருப்பது 600 கோடி. இப்போது இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் சொன்னதை யெல்லாம் வைத்துக் கொண்டு வீட்டுக்குப் போய், புள்ளிவிவரக் கணக்கிட்டு, 600 கோடி ரூபாயோடு கூட்டிப் பார்த்தால் அது 6,000 கோடியாகத்தான் இருக்கும். நாங்கள் மிகச் சிறிய எண்ணிக்கையுள்ள கட்சியில் இருப்பதால் அல்பமாகப் போட்டிருக்கலாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் 11,000 கோடி அளவு என்றால், 1,000 கோடி ரூபாய் இந்த மாநிலத்திற்குத் தருவதில் என்ன தவறு இருக்கிறது?

11-30 a.m. இதிலும் நமது நிதி மந்திரி அவர்கள் மூன்று விதமாக இது பிரிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதாவது சென்டர் செக்டார், ஸ்டேட் செக்டார், பிரைவேட் செக்டார் என்று சொல்லப்படுகிறது. இதை நான் பார்த்திருக்க மாட்டேனென்று நமது நிதி மந்திரி அவர்கள் கருதியிருக்கலாம். அவ்வாறு அவர்கள் என்னைப் பொறுத்த அளவிலே கருதியிருக்க மாட்டார்களென்றே நம்புகிறேன். அப்படி அவர்கள் கருதியிருந்தாலும், அவர்களுடைய அரசியல் அப்படி எண்ண வைத்திருக்கும்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் பேசுகிறபோது நீங்கள் இல்லை.

SRI C. N. ANNADURAI: எனக்கு 2, 3 நாட்களாக உடல் நலம் சரியில்லை. அதற்கு நான் ரொம்பவும் வருத்தப்படுகிறேன். இப்போது அதற்குப் பதிலாக நமது நிதி மந்திரி அவர்கள் மீண்டும் பேசும்போது அதைக் கேட்பதற்கான வாய்ப்பு கிடைக்கப் போவதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆகவே, இந்தத் திட்டம் போட்டிருக்கக்கூடிய முறை, அதன் குறிக்கோள் ஆகியவை நல்லமுறையில் நடத்தப்படவில்லை என்பதுதான் என் கருத்து. அதற்காகத்தான் நான் ஆயிரம் கோடி ரூபாய் கேட்டேன். எதற்காக ஆயிரம் கோடி ரூபாய், அண்ணாதுரை குழந்தையைப் போல் கேட்கிறாரே என்று சொன்னார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் சொல்லவில்லை. ஸ்ரீ ராஜாஜி அவர்கள்தான் சொல்லி இருக்கிறார்.

SRI C. N. ANNADURAI: அதனால்தான் நானும் சொன்னார்கள் என்று சொன்னேன். இவரும் சொன்னார்; அவரும் சொன்னார். ஆகவே, இருவரும் சொன்னதால்தான் நான் பன்மையிலே பேசினேன். எனக்கு ஒரு சந்தோஷம். முதலிலே நான் 1,000 கோடி ரூபாயை கேட்டபோது, நான் பண்டாரமாகக் காட்சியளித்தேன். இப்போது பண்டாரமில்லை, குழந்தையாகி இருக்கிறேன். குழந்தையைச் சாதாரணமாகத் தாயானவள் இடையிலே தூக்கிக் கொள்வாள். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், நமது நிதி மந்திரி அவர்களுக்கு மத்திய சர்க்காரில் இடம் கிடைத்து, அவர் உட்காரக்கூடிய இடத்திற்கும் இட நெருக்கடி ஏற்படாமல் இருந்து, அவர் சொல்லக்கூடிய குறைபாடுகளை யெல்லாம் ஏற்றுக் கொள்வதாக இருந்து, அப்படி அங்கே போன பிறகு, அவருக்கு இந்த இடத்து நினைப்பு இருந்து, இந்த இடத்தைப் பற்றிச் சற்று சிந்தித்து, அதற்கான வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டுமென்று நினைப்பு வந்தால், அப்போது தாயானவள் குழந்தையை இடையிலே தூக்கிக்கொண்டு கொஞ்சுவதுபோல், அதாவது குழந்தையாகிய என்னை தூக்கிக் கொண்டு கொஞ்சுவதுபோல், என்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொள்வார்களானால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன் என்பதைச் சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

***SRI V. K. RAMASWAMY MUDALIYAR:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி அநேக அங்கத்தினர்கள் பலவிதக் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆகவே, என்னுடைய முக்கியமான சில கருத்துக்களை மட்டும் இங்கு சொல்லிக்கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் சுமார் 11,600 கோடி ரூபாய் செலவழித்து திட்டத்தை நிறைவேற்றப்போவதாக மத்திய சர்க்கார் ஒரு திட்டத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதிலே 1,200 கோடி ரூபாய் நிர்வாகச் செலவுக்கு என்றும், பொதுத் துறைக்கும், தனியார் துறைக்குமாக 200 கோடி என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது, இதனால் மேலும் அதிகமான வரிகளைப் போட்டு, மக்களை கஷ்டப்படுத்தி, அவர்கள் எல்லோரையும் ஓட்டாண்டிகளாக்கப் போகிறார்கள் என்பதுதான் தெரிகிறது. நான் பின்னால் சொல்லப் போவதிலிருந்து இது நன்கு புரியும். இதிலே முக்கியமாக, இதன்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th November 1961]

(Srimathi T. N. Anandanayaki in the chair.)

காரணமாக ஒரு சர்வாதிகார ஆட்சிதான் வருமே தவிர, நீங்கள் நினைக்கிறபடி சோஷியலிச சமுதாயம் உருவாக்கப் போவதில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இவர்கள் சர்வாதிகார ஆட்சியைத்தான் புகுத்தப் பார்க்கிறார்கள். மேலும் சோஷியலிச சமுதாயம் அமைக்கப் போவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆகவே இதன் மூலம் இவர்கள் போடக்கூடிய திட்டமே தோல்விதான் அடையப் போகிறது. அதே சமயத்தில் தனியார் துறையானது வளர்ச்சி அடையாமல் நசுக்கப்படப்போகிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். தவிர, அதிகமான வரி போடுவதோடு அல்லாமல், நோட்டுகள் அச்சடிப்பதின் மூலம் பண வீக்கம்தான் அதிகமாகப் போகின்றது. அதன் காரணமாக அந்நியச் செலாவணிதான் குறையப் போகின்றது. ஏற்கனவே, 2,600 கோடி ரூபாய் அந்நிய கடன் வாங்கி இருக்கிறோம். இவ்வளவையும் எப்போது திருப்பித் தரப் போகின்றோம் என்பதே இப்போது சந்தேகமாக இருக்கிறது. இதைப்பற்றிச் சற்றுச் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இதைத் தவிர, மத்திய இலாகாவில் இருக்கும் நிதி மந்திரி அவர்கள் சில நாட்களுக்கு முன் சொல்லி இருக்கிறார்கள். அதாவது ஏழைகளை பாதிக்கக்கூடியதான மறைமுகமான வரிகளை அவர்கள் செலுத்தும்படிச் செய்வதாகும். இப்படி வரி போட்டால், என்ன ஆகுமென்பதைப் பற்றி சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இம்மாதிரி வரி போடுவதன் மூலமாக "பர்ச்சேசிங் பவர்" அதாவது வாங்கும் சக்தி குறையும். தவிர, இதனால் கட்டுப்பாடு, கோட்டா, பர்மிட் இவைகள் எல்லாம்தான் தலை தூக்க ஆரம்பிக்கும். இந்தக் கட்டுப்பாட்டின் காரணமாகவும், இந்த மறைமுகமான வரியின் காரணமாகவும், விலைவாசி இன்னும் ஏறிக்கொண்டேதான் போகப் போகின்றது. அதே சமயத்தில் அந்நிய செலாவணியும் குறையப் போகின்றது. சுபிட்சம் ஏற்படாது. இதன்காரணமாக, ஏழைகளும், மத்தியதர வகுப்பாரும்தான் கஷ்டப்படப்போகிறார்கள். இப்போதே கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். இன்னும் அதிகமாக கஷ்டப்படுவார்கள். ஆனால் இவர்கள் சோஷியலிசம் பேசிக்கொண்டு, அதே சமயத்தில் அநீதியான சர்வாதிகாரத்தைத்தான் வளர்க்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அநேகம் பேர் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறோம் என்று சொல்லாமல், சோஷியலிசம், சோஷியலிசம் என்றுதான் பேசிக்கொண்டு வருகிறார்கள். முக்கியமாக, இந்த திட்டத்தின் காரணமாக தனி மனிதனுடைய சுதந்திரம் கண்டிப்பாக பாதிக்கப்படுகின்றது. இந்த உலகில் எல்லாவித முன்னேற்றத்திற்கும், தனி மனிதனுடைய அறிவு, அவனுடைய முயற்சிகள்தான் காரணமாக இருக்கிறது. அப்படிக்கு இல்லாமல் வரிகளை அதிகமாகப் போட்டு, மக்களை கசக்கிப் பிழிந்து வருவதால், அவர்களிடையே உற்சாகம் குறைந்து வருகிறது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதிலே அநேகம் பேர்கள் ஏதோ சில வகுப்பார் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வில்லை என்று சொல்லி விட்டார்கள். திட்டத்தை ஒருவருமே போடக் கூடாது என்று சொல்லவில்லை. திட்டம் இருக்க வேண்டியது அவசியம் என்றுதான் நாங்கள் எல்

11th November 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

லோரும் சொல்லுகிறோம். முக்கியமாக, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு திட்டம் இருக்கவேண்டும். மொத்த வருமானம் எவ்வளவு, எவ்வளவு செலவு செய்ய வேண்டுமென்று ஒவ்வொரு வருஷத்திற்கும் கணக்குப் போடுவது அவசியம். அதைப்போல், திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் ஒரு கணக்கு, திட்டம் போடுவது அவசியம். இதற்கு யாரும் ஆட்சேபணை சொல்ல முடியாது. இதிலே நான் சொல்வது என்னவென்றால், இந்தியா பூராவுக்கும் திட்டம் நிறைவேற்ற 11,600 கோடி என்று போட்டு, அதிலே நமக்கு 291 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. 35 கோடி ரூபாய் வருமான வரி போட்டு வசூலிக்கப்போவதாகச் சொல்கிறார்கள். இதற்கு காபாசிடி Capacity) இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். 'Beyond our capacity' என்ற அளவிலேதான் இது இருக்கிறது. இவ்வளவுக்கும் எங்கிருந்து ரூபாய் சம்பாதிக்கப் போகிறார்கள்? எல்லாவற்றிற்கும் அந்நிய நாட்டை நம்பிக் கொண்டிருக்க முடியுமா? அப்படி இருந்தால் நம் நாட்டை மார்ட்கேஜ் செய்வதுபோல் ஆகிவிடாதா? அதாவது அவர்களிடத்திலே நாட்டை அடகு வைப்பதுபோல் ஆகிவிடுமே? தவிர, கடன் வாங்கிக்கொண்டே போனால், அவற்றை எப்படி திருப்பிக் கொடுப்பது என்றாவது சிந்திக்க வேண்டாமா? இதைப்பற்றி திட்டவட்டமாக எதுவும் குறிப்பிடவில்லை. பின்னால் இதனால் சங்கடந்தான் வரும். வட்டியாக கொடுக்க வேண்டியதே 550 கோடி ரூபாய் இருக்கிறது. எப்படிக் கொடுக்கப் போகிறார்கள்? இதைப்பற்றி யோசிக்க வேண்டும். முன்பு சொன்னதுபோல், இதனால் சாதாரண மனிதன்தான் அதிகமாக பாதிக்கப்படுவான். ஏழைகள் பாதிக்கப்படுவார்கள். நடுத்தர மக்கள் பாதிக்கப்படுவார்கள். இந்தத் திட்டத்தின் காரணமாக பணவீக்கம் அதிகமாக ஏற்படப் போகின்றது. பண வீக்கம் அதிகமாக ஏற்படுவதன் காரணமாக மக்கள் கஷ்டப்படுகிறார்கள். அதிலும் அன்னிய நாட்டு உதவி எவ்வளவு காலம் கிடைக்கும், எவ்வளவு வருஷங்களுக்கு வரும், எவ்வளவு வரும் என்பதையெல்லாம் பற்றி சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். தவிர, இப்பொழுது இருக்கும் international situation எங்கு பார்த்தாலும் மேல் நாடுகளில் சூழ்நிலை நன்றாக இல்லாததன் காரணமாக எப்பொழுது திடீரென்று அன்னிய நாட்டு உதவி நின்றுவிடுமோ என்ற ஒரு பயம் நம் மனதில் வந்திருக்கிறது. அப்படியெல்லாம் இருக்க, அன்னிய நாட்டு உதவியைக் கொண்டு திட்டத்தை வகுப்போமானால், திட்டம் சரிவர நடக்குமா என்பதைப்பற்றி சற்று சிந்திக்கவேண்டும். அதன் காரணமாக நாம் பயப்படுவது என்னவென்றால் திடீரென்று இந்தத் திட்டமானது முடிவடைந்து விடுமோ என்பதுதான். அன்னிய நாட்டு உதவி சரியாக கிடைக்காவிட்டால், அன்னியச் செலாவணி குறைந்துபோகும் காரணத்தினால் திட்டம் நல்ல முறையில் நிறைவேறாமல் போய்விடுமோ என்ற பயம் தோன்றுகிறது.

முக்கியமாக இந்தத் திட்டத்தை ஆட்சேபனை செய்பவர்கள் நாங்கள் அல்ல. பொதுவாக சுதந்திரா பார்ட்டி 'மானிபெஸ்டோவில்' என்ன சொல்லியிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். (ஜனாப் ஸ்ரீ வி. சுப்பிரமணியம்: சுதந்திரா பார்ட்டி

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th November 1961]

ரெப்ரெஸெண்டேடிவாக பேசுகிறீர்களா?) அதனால் என்ன? 1946-ம் ஆண்டில் கம்யூனிஸ்டுகூட இங்கேயும் இருந்தார்கள், அங்கேயும் இருந்தார்கள்.

'The Swatantra Party rejects the current pattern of centralised and top heavy planning of the Soviet type involving series of targets that are not achieved and all restrictions which are intolerable and which are calculated to perpetuate the rigid regime of the party in power. The Swatantra Party stands for planning carried out within the limits of the freedom guaranteed by the Constitution to develop the growth of conditions in which the people's enterprise will find full and unfettered scope. It believes that the appropriate organisation for such planning of the affairs of the nation and for submitting the annual programme is the Cabinet responsible to Parliament and through it to the people; and that while the Government may resort to such expert assistance as it desires, there should be no other body which in effect usurps the power of making policy affecting the life of the nation.

திட்டத்தை வேண்டாம் என்று சொல்லுபவர்கள் யாருமே இருப்பார்களா என்பதை சற்று யோசிக்கவேண்டும். ஒருவரும் இருக்கமாட்டார்கள். இப்பொழுது சமீபத்தில் நமது பிரதம மந்திரி அவர்கள்கூட சொன்னார்கள், திட்டங்கள் எல்லாம் சரிவர நிறைவேறியிருக்கிறதா என்பதைப் பார்க்க ஒரு 'revaluation Committee' போட்டு நடத்த வேண்டும் என்று. முக்கியமாக ஒரு 'இம்பார்ஷியல் எவால்யுவேஷன்' கமிட்டி போட்டு திட்டங்கள் சரிவர நடைபெறுகிறதா என்பதைப் பார்த்தால், திட்டங்கள் எல்லாம் சரிவர நடைபெறவில்லை என்றுதான் சொல்லுவார்களே தவிர, சரிவர நடைபெறுகிறது என்பதைப்பற்றி அதிகமாக ஒருவரும் சொல்ல முடியாது. லோகநாதன் கமிட்டியும் சுற்றிப்பார்த்து அவர்களும் (ஒபீனியனும்) கருத்தும் கொடுத்திருக்கிறார்கள்.

பிளானிங் காரணமாக 'டெபிஸிட் பினான்ஸிங்' ஏற்படுகிறது, பற்றாக்குறை மதிப்பீடு ஏற்படுகிறது. விலைவாசிகளெல்லாம் அதிகமாகிக்கொண்டே போகிறது. இன்னும் அதிகமாக ஏறிக்கொண்டே போகிறது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காரணமாக. காங்கிரஸ் சர்க்காரும் அதைப்பற்றி சொல்லுகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காரணமாக 'இன்டைரக்ட் டாக்ஸேஷன்' வரும், 'ஹை பிரைஸ்' வரும், 'ரெஜிமெண்டேஷன்' கருப்பு மார்க்கெட் வரப்போகிறது அதை எவ்வளவு தூரம் தடுப்பதற்கு முடியுமோ அவ்வளவு தூரம் தடுப்போம் என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு தூரம் அவைகள் தடுக்கப்பட்டு நல்ல முறையில் திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் பிளானிங் கமிஷன் என்ற ஒரு 'அட்வைஸரி பாடி' வேறு ஒன்றும் இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் பிளானிங் கமிஷன் போட்டிருந்த திட்டங்களில் ஒன்றையாவது மத்திய சர்க்கார் நிராகரித்தார்களா என்றால், பிளானிங் கமிஷன் போட்டதை அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அது 'ரெகமண்டேஷன்' தான் என்று கருதி ஒன்றைக் கூட தள்ளாமல் அதை அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அதை 'அட்வைஸரி பாடி' என்று எப்படி சொல்ல முடியும்? பிளானிங் கமிஷன் 'இர்ரெஸ்பான்ஸிபிள் பிளானிங் கமிஷன்' (Irresponsible). அதில் பிரதம மந்திரி இருக்கிறார். அது ஒரு ஸூப்பர் காபினெட்டாக இருந்துகொண்டு அதன் மூலம் திட்டங்கள் நம்மிடையே திணிக்கப்பட்டு வருகின்றன. ஸ்ரீமன் நாராயணன் அவர்கள் 15 வருஷங்களுக்குக்கூட திட்டம் நிற்காமல் நடக்கப்போகிறது என்று சொன்னதாக பத்திரிகையில் பார்த்தோம். ஆகையால், இந்தத் திட்டமானது கம்யூனிஸ்ட் பாடர்னில் ஒரு சோவியட் திட்டத்தின்கீழ் திணிக்கப்பட்டு அதன் காரணமாக எவ்வளவு தூரம் மக்கள் துன்பத்திற்கு ஆளாகப் போகிறார்கள் என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும்.

கனம் நிதி அமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துகள் மூலம் பஞ்சாயத்து ராஜ்யம் கொண்டு வந்திருக்கிறோம், பஞ்சாயத்து சட்டம் கொண்டு வந்து எங்கு பார்த்தாலும் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் ஏற்படுத்தப்பட்டு, தேர்தல் நடத்தப்பட்டு, அவர்கள் மூலமாக 'டெமாக்ரடிக் டிசெண்ட்ரலைசேஷன்' நடக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் மூலம் திட்டங்கள் நிறைவேறுவதற்கு திட்டங்களையெல்லாம் போட்டிருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். உண்மை. முக்கியமாக, சிறிய நீர்பாசன வசதிகள் செய்து கொடுக்கும் வேலைகள் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. எலெக்ஷன் எல்லாம் எந்த விதத்தில் நடைபெற்றது, அதில் எவ்வளவு தூரம் ஊழல்கள் எல்லாம் இருந்து வருகிறது என்பதையெல்லாம் பார்க்கவேண்டும். பஞ்சாயத்துக்கள்கூடாது என்று சொல்லுபவர்களில் நான் ஒருவன் அல்ல. பஞ்சாயத்துக்கள் இருக்கவேண்டும். ஆனால், அவைகள் நல்ல முறையில் நிர்வகிக்கப்படவேண்டும். அதில் நிறைய 'அட்மினிஸ்டிரேடிவ் காஸ்டு', 'அட்மினிஸ்டிரேடிவ் ஓவர்ஹெட் சார்ஜஸ்' எல்லாம் அதிகமாகிக்கொண்டே போகிறது. அதன் காரணமாக சில ஊழல்கள் இருக்கின்றன. பஞ்சாயத்துக்கள் பொறுப்புக்களை சரிவர ஏற்றுக்கொண்ட பின், கொஞ்ச நாளைக்குப்பிறகு இந்தத் திட்டங்களை இவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அப்படி ஒப்படைக்கப்பட்டு நல்ல முறையில் நடத்தப்படாவிட்டால் இந்தத் திட்டங்களினால் பின்னிட்டு எவ்வளவோ கஷ்டங்களுக்கு ஆளாகப் போகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்பு ஜில்லா போர்டு, தாலுகா போர்டு இருந்தபோது, கட்சி மனப்பான்மை வந்தால், சில ரோடுகளை நிறுத்திவிடுவார்கள். ஆனால் இப்பொழுது 'எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்', பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இவர்களுக்கெல்லாம் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு அவர்களுக்கு இருப்பதினால் அவர்கள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும். என்ஜினியர்களுக்கு அதிகாரத்தை யெல்லாம் சரிவர பிரித்துக் கொடுக்கவேண்டும். சரிவர 'ஸூபர்விஷன்' இல்லை பஞ்சாயத்துகளிலெல்லாம். எங்கு பார்த்தாலும் 'டிபால்கேஷன்ஸ்' ஊழல்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் நல்ல

11th November 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th November 1961

முறையில் இயங்க ஏற்பாடுகள் செய்து, அமைச்சர் அவர்கள் கண் டிப்பான உத்தரவுகள் போட்டு, அதிகாரங்களை நல்ல முறையில் பிரயோகப்படுத்தும்படிச் செய்து திட்டங்கள் நல்ல முறையில் பஞ்சாயத்துக்கள் மூலம் நிறைவேற்றப்படுவதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற் காகவும் இந்தத் திட்டத்தில் அதற்கு வேண்டிய 'ப்ரொவிஷன்' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதுவரையில் பல ஆண்டுகளாக கூட்டுறவு முறையைப் பற்றி அமைச்சர்கள் அநேக இடங்களில் சொல்லி வந்திருக்கிறார்கள். இங்கும் இதைப்பற்றி அன்று ஆரம்ப உரையில் சொன்னார்கள். எத்தனையோ கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். நான் படித்துப் பார்த்த வரையிலே 'Tenant Farming Society' தஞ்சை ஜில்லாவில் ஒன்றுதான் இருக்கிறது.

(Deputy Speaker in the Chair.)

அதுவும் தேவஸ்தான நிலங்கள் நான் அந்த முறையின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கோவை ஜில்லாவில் மேட்டுப்பாளை யத்தில் ஒரு பண்ணையை நாங்கள் போய் பார்த்தோம். ரிஜிஸ்டர் பண்ணாமல் அதில் அநேக கோரிக்கைகளை விடுத்திருக்கிறார்கள். தனியார் துறையில் கூட்டுறவு ஸ்தாபனம் மூலம் ஒரு அதிகாரியை வைத்து, அவர் மூலம் கண்ட்ரோல் மாதிரியாகக் கொண்டு வந்து, நல்ல முறையில் தனியார் துறையில் அப்படி எடுக்கப்பட்டு கூட்டுறவு ஸ்தாபனம்மூலம் நடத்துவதன் காரணமாக உற்பத்தி பெருகுமா என்பதைப்பற்றி சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இவ்வளவு நாட்களாக கூட்டுறவு ஸ்தாபனங்கள் பற்றி சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு 'ரெஸ்பான்ஸ்' இருப்ப தாகத் தெரியவில்லை. கோவாபரேடிவ் ஜாயிண்டு பார்மிங் சொஸைடீஸ் எந்த மாவட்டத்தில் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டு எப்படி வெற்றிகரமாக நடக்கும் என்பதை திட்டவட்டமாக நிரூ பிக்க வேண்டும். இல்லாவிட்டால் கூட்டுறவு ஸ்தாபனம் சரிவர நடக்காது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். உதாரணமாக சர்க்கார் துறையில் எடுத்துக்கொண்டால், விதைப் பண்ணைகள் சம்பந்தமாக நடைமுறைகளை மாற்றி அமைத்திருக் கிறார்கள். முக்கியமாக நிதி அமைச்சர் அவர்கள் இதைச் செய்தார் கள். அங்கே அநேகவித ஊழல்கள் இருந்து, சுமார் 1-½ லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருந்ததை 'பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி யில்' சுட்டிக்காட்டியிருக்கிறோம். அம்மாதிரி இல்லாமல், நல்ல முறையில் நடக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். முக்கியமாக விவசாயத்திற்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இண்டஸ்ட்ரியில் சிறிய தொழிற் சாலைகள் வந்த போதிலும், கனரகத் தொழிற்சாலைகள் 'side by side' போது வந்தபோதிலும், விவசாயத்திற்கு மான உதவி கொடுக்கப்படவில்லை. ஆதலால், விவசாயிகள் உற்சாகம் குன்றி இருக்கிறார்கள். அதனால் உற்பத்தி ஒரு பக்கம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கஷ்டங்கள் தொடர்ந்து

11th November 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

இருந்துகொண்டே இருக்கிறது. இப்பொழுது சூபர் பாஸ்பேட் டைப் பற்றிச் சொல்லப் பட்டது. உண்மையாகவே, மூன்றாவது திட்டத்தில்கூட நம் மாகாணம் ஸெல்ப்-ஸபிஷியண்டாக இருக் குமா என்று தெரியவில்லை. வரப்போகும் பாக்டரிகளை எடுத்துப் பார்த்தாலும், போதுமான உரம் கிடைக்குமா என்று திட்டவட்ட மாகத் தெரியவில்லை. போதுமான மழை இல்லாததாலும், இன் டஸ்ட்ரியல் ஏரியாக்கள் பக்கத்தில் வருவதாலும், கூலி உயர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. அநேக மக்கள் கிராமப் பகுதிகளைப் புறக் கணித்து, அர்பன் ஏரியாக்களுக்கு போய்விடுவதால், கூலிக்கு ஆள் கள்கூட கிடைப்பது இல்லை. ஆகவே, விவசாயத்திற்கு வேண்டிய உதவிகளைச் சர்க்கார் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் உணவு உற்பத்தி சரியான அளவில் ஏற்படும். பைனான்ஷியல் டார்ஜெட் அசில் financial target achieve ஆகி இருக்கலாம், ஆனால், பிஸிகல் டார்ஜெட் physical target எல்லா செக்டாரிலும் அடைந் திருக்கிறோமா என்று பார்க்கவேண்டும். அதைப்பற்றி கனம் நிதி அமைச்சர் தன் பதிலில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அநேக அங்கத்தினர்கள் இண்டர்-ஸ்டேட் வாட்டர் பற்றிப் பேசினார்கள். சில ப்ராஜக்ட்கள் வந்தபோதிலும், தீவிரமாக, உடனடியாக, மத்திய சர்க்கார் மூலமோ அல்லது வேறு வகை யிலோ நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்து நம் வாட்டர் ஸோர்ஸ்களை டாப் செய்து, சென்னை நகரத்திற்கு குடி தண்ணீர் வசதியும் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கோதாவரி, கிருஷ்ணா தண்ணீர் கொண்டு வருவதுபற்றியெல்லாம் சொன்னார்கள். அதைப்பற்றியே மறுபடியும் பேசி நான் டயத்தை வீணாக்க விரும்பவில்லை. இதன் மூலமெல்லாம் கூடுமான வரை எலெக்ட்ரிஸிடியை டெவலப் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இதிலே, நமக்கு ஹைட்ரோ எலக்ட்ரிக் பவர் மட்டும் போதாது. நமக்கு தர்மல் ஸ்டேஷன்களும் வேண்டும். குறைந் தது ஒன்று, இரண்டாவது வேண்டும். அதற்கு ஒரு 10 கோடி யாவது வேண்டியிருக்கும் என்று நினைக்கிறேன். அதிகமாக ஆகுமோ என்னவோ தெரியாது. நமக்கு தர்மல் ஸ்டேஷன்களும் இருந்தால்தான் அநேக துறைகளிலும் விருத்தி ஏற்பட சாதகமாக இருக்கும். அதைப் பற்றியும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீர்பாசன வசதிகள் செய்வதில், கெனால்களுக்கு லைனிங் செய் வது மிகவும் சிறந்ததாக இருக்கிறது. சமீபத்தில் பாம்பிகுளம் ப்ராஜெக்ட்டை போய்ப் பார்த்தேன். அங்கு இஞ்ஜினியர்கள் வெகு திறமையாக கெனால்கள் வெட்டி, அவற்றிற்கு லைனிங் செய்கிறார்கள். அதனால், எவாபரேஷனையும், சீபேஜையும், தவிர்க்க முடியும். அதே மாதிரி எல்லாப் பிராந்தியங்களிலும், எல்லா மாவட்டங்களிலும் திட்டங்களை வகுத்து, அதற்கான அதிகப் பணத்தை ஒதுக்கி காரியங்கள் செய்ய வேண்டும். அந்தத் துறையில் தொகை ஒதுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [11th November 1961

ஸில்ட் க்ளியரென்ஸும் ஸைட் பை ஸைட்டாக மேஜர், மைனர் டாங்குகளுக்கு செய்யப்பட வேண்டும். இதிலே, ஸில்ட் க்ளியரன்ஸ் வேலை வருஷத்தில் 3, 4 மாதங்களுக்குத்தான் செய்ய முடிகிறது. மற்ற காலங்களில், டாங்குகளில் தண்ணீர் இருக்கிறது, அல்லது மழைகாலமாக இருக்கிறது. அப்பொழுது டி-ஸில்டிங் செய்ய முடிவதில்லை. அன்னியச் செலாவணிக் குறைவு காரணமாக மெஷினரிகளும் கிடைப்பதில்லை. அதற்கான ஏற்பாடுகள் செய்து, அப்படி மெஷினரிகளை வைத்து உடனடியாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஸில்ட் க்ளியரன்ஸ் செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நமக்கு ட்ரான்ஸ்போர்ட் பெரிய பாட்டில்நெக். அதனால் ஏற்படும் கஷ்டம் சொல்லிமுடியாது. அதன் காரணமாக மக்கள் கஷ்டப்படுகிறார்கள். லார்ஜ், மீடியம் இண்டஸ்ட்ரீஸ் அண்ட் ட்ரான்ஸ்போர்ட், டெக்னோ-எகனமிக் சர்வே செய்த டாக்டர் லோகநாதன் அவர்கள் தன் ரிபோர்ட்டில் எழுதியிருக்கிறார்கள் :

" Even a preliminary look at the resources picture made it evident that the approach to the problem in Madras had to be somewhat different. The physical basis of the State is ostensibly weak. It is deficient in key materials essential for a rapid economic development on modern lines. Of coal, there is none; iron available is not of high grade; other metallic minerals are not plentiful. Forest sources too are meagre. Power development is reaching or soon will reach, the point of saturation. The centres of industry in the region, such as they are, are far from the main field of raw materials supplied. A chronic transport bottleneck perpetually menaces all attempts at a rapid economic transformation of the region."

ஆகவே, ட்ரான்ஸ்போர்ட் பாட்டில்நெக் இருந்துகொண்டே இருக்கிறது. அதை நாம் எப்படி தவிர்க்கப்போகிறோம் என்று புரியவில்லை. நமக்கு வட இந்தியாவிலிருந்து இரும்பு வரவேண்டும். எல்லாவற்றையும்விட முக்கியமாக போக்குவரத்தை இம்ப்ரூவ் செய்தாலொழிய, வேறு வழியில்லை. அதற்கு உடனடியாக ரெயில் பாதைகளுக்கும் முக்கியமான இடங்களில் டபிள் லைனைப் போட வேண்டும். இன்றைக்குகூட டபிள் லைன் பற்றி பேசப்பட்டது. ஆனால், அது ஆமை வேகத்தில்தான் போகிறது. முக்கியமாக நான்கு பக்கமும் கோயம்புத்தூர்வரை டபிள் லைன் போட்டும், அரக்கோணம் வரை மின்சார லைன்கள் போட்டும், விழுப்புரம் வரை அதேமாதிரி மின்சார லைனும் போட உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். வண்டலூர் வரை வருவதால் மட்டும் பிரயோஜனமில்லை. முக்கியமாக கிராமப் பகுதிகளுக்கு சாலைவசதிகள் செய்து கொடுக்க வேண்டும். சாலை இல்லாமல், அவர்களுடைய விளைபொருள்களை மார்கெட் செய்ய கஷ்டப்படுகிறார்கள். ஆகவே கிராமப்புறச் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரங்கள் கொடுத்து, மாச்சிங் கிராண்ட் (matching grant) கொடுத்தும் ஏற்பாடுகள் செய்கிறோம். ஆனால், எலெக்ஷன் வருவதால், அநேக பஞ்சாயத்துக்களில் வரிகளை விதிக்கமாட்டார்கள்.

11th November 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

போகப் போகத்தான் அவர்கள் தங்கள் சாலைகளை எவ்வளவு தூரம் விருத்தி செய்யப்போகிறார்கள் என்று பார்க்க வேண்டும். ஆனாலும் உடனடியாக ஏதாவது செய்ய வேண்டும். துறைமுகங்கள், பக்கிங்காம் கெனால் முதலியவற்றிற்கு ஏதாவது செய்ய வேண்டும். மருத்துவ சாலைகள் அதிகமாக இல்லாததால் மக்கள் அதிகமாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மருத்துவ சாலைகள் இருந்தாலும், அவற்றில் டாக்டர்கள் இருப்பதில்லை. ஆகவே மக்கள் பலவித கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள்.

பள்ளிக்கூடங்களைப் பொருத்த வரையில், இன்றைக்கு நாம் (Quantity) க்வாண்டிடியைத்தான் பார்க்கிறோம், க்வாலிடியைப் (Quality) பார்ப்பதில்லை. இன்றைக்கு 26,500 பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்திவிட்டோம் என்று சொல்லுகிறோம். முக்கியமாகக் கல்விக்காக 21 கோடி ரூபாய் வரை நாம் செலவு செய்கிறோம். அதைப்பற்றிப் பெருமைப்படுகிறோம். இருந்தபோதிலும் நம் பள்ளிக்கூடங்கள் சரிவர பரிபாலிக்கப்படுவதில்லை. முக்கியமாக மாதமேடிக்ஸ் போன்ற டீச்சர்கள், போர்ட் பாரத்திலிருந்து இல்லாமல் பல பள்ளிக்கூடங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இதற்கும் ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பள்ளிக்கூடங்கள் நல்ல முறையிலே நடத்தப்படவேண்டும். இன்ஸ்பெக்ஷன்கள் இப்பொழுது நல்ல முறையில் நடப்பதில்லை. அதற்கும் நல்ல ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

முக்கியமாக இந்த காஸ்ட் ஆப் லிவிங்-ஐ குறைக்க ஏதாவது திட்டம் வகுத்து இருக்கிறார்களா என்று பார்த்தால், ஒன்றும் தெரியவில்லை. அதைப்பற்றி திட்ட வட்டமாக அமைச்சர் தன் பதிலில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்குச் சொல்லுகிறார்கள் ப்ரசெண்ட் ஜெனரேஷன் ப்யூசருக்காக ஸாக்ரிபைஸ் பண்ண வேண்டுமென்று. ஆனால், இந்த ப்ரசெண்ட் ஜெனரேஷன்தான் நமக்கு வோட்டுக் கொடுத்து இம்மாதிரிச் செய்திருக்கிறார்கள். ஆகவே, ஸாக்ரிபைஸ் பண்ண வேண்டும் என்று சொல்லும்போது, எவ்வளவு தூரம், எவ்வளவு நாட்களுக்கு என்று யோசிக்க வேண்டும்.

இந்தத் திட்டம் பற்றி அநேகம் பேர்கள் அநேக குறைகளைப் பற்றிச் சொன்னார்கள். அந்தக் குறைகளைப் போக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். முக்கியமாக வேஸ்டேஜைத் தவிர்க்க வேண்டும். " If only we avoid wastage and corruption, there will be no need for fresh taxation " என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

திட்டங்களையெல்லாம் ஒரேயடியாக இவ்வளவு நாட்களுக்குள் முடிக்க வேண்டும் என்கிற நிலையில் பணம் விரயமாகிறது. ஆகையால், விரயத்தை எப்படித் தவிர்ப்பது 'கரப்ஷனை' எப்படி ஒடுக்குவது என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். வாழ்க்கைச் செலவைக் குறைக்கவேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும். இம்மாதிரி செய்து மக்களுக்குத் திருப்தியை அளிக்காவிட்டால் திட்டம் வெற்றிகரமாக நடைபெறாது என்று சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

[11th November 1961

12·00 * THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி சட்ட சபையிலே இருக்கும் பல்வேறு கட்சித் தலைவர்களும், கனம் அங்கத்தினர்களும் அவரவர்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் தம்முடைய பேச்சைத் தொடங்கும் காலத்திலேயே, இந்த விவாதத்தினால் ஏதாவது பலன் இருக்குமா, அதுவும் ஏப்ரல் 1-ந் தேதியன்றே ஆரம்பித்திருக்கும் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இப்பொழுது விவாதிப்பதனால் என்ன பயன் ஏற்படும் என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இதனால் பலன் ஏற்பட முடியும் என்பதைத்தான் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தாலுங் கூட, ஒவ்வொரு ஆண்டும் அவ்வப்போது இருக்கும் சூழ்நிலையை அனுசரித்து, இந்தத் திட்டத்தை எந்த முறையிலே மாற்ற வேண்டும், எந்த அளவுக்கு மாற்ற வேண்டும் என்பதையெல்லாம் நாம் ஆலோசனை செய்து அந்த முறையிலே மாற்றியமைத்துக் கொள்ளலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட அனுபவத்தை நாம் வைத்துக்கொண்டு பார்த்தால், வருஷா வருஷம் இந்தப் பரிசீலனையின் காரணமாகப் பல முன்னேற்றகரமான மாறுதல்களை நாம் செய்திருக்கிறோம் என்று நான் சொல்ல முடியும். அந்த முறையில்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதென்று நமக்கான ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டிருக்கின்றோம். அந்தத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருகிற காலத்திலே நம்முடைய அனுபவத்தை அனுசரித்து, நமக்கு ஏற்படுகிற வசதிகளை அனுசரித்து காலப் போக்கிலே அதை மாற்றிக்கொள்ள முடியும். ஆகையால், விவாதங்கள் நடப்பது வீண் என்கிற கருத்தை அவர்கள் விட்டு விடவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பொழுது ஏற்படுகிற விவாதம் மட்டுமல்ல பட்ஜெட் விவாதங்களும் கூட நாம் எந்தப் பாதையிலே முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதற்கு வழிகாட்டக்கூடிய முறையில் அமைந்திருக்க முடியும். அந்த விவாதங்கள் மூலமாகப் பலனும் ஏற்பட முடியும் என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு அடிப்படையான கேள்வியைப் போட்டார்கள். நகல் திட்டத்தை இந்தச் சட்டசபையிலே பரிசீலனை செய்து, 400 கோடி ரூபாய் என்று குறிக்கோள் சொல்லி—நான் சகுனம் பார்க்கவில்லை —அவர் சகுனம் பார்த்து அனுப்பியதாகச் சொல்கிறார். அதற்காக அவருக்கு நன்றி—சகுனம் பார்த்து கனம் நிதி மந்திரியை டில்லிக்கு அனுப்பி வைத்தோம். அவர்கள் எப்படி இந்தச் சட்ட சபை ஆலோசனை சொல்வதையும் மீறி 291 கோடி ரூபாய் அளவை ஒப்புக்கொண்டு வரலாம்? சட்ட ரீதியாக அவர்களுக்கு அதிகாரம் உண்டா? என்று அடிப்படையான சட்டப் பிரச்சினையையும்கூட அவர்கள் கிளப்பினார்கள். நாம் 400 கோடி ரூபாய் அளவுக்குப் போட்ட திட்டத்தை அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றால் சகுனம் பார்த்து அனுப்பவேண்டிய அவசியம் இல்லை.

11th November 1961] [Sri C. Subramaniam]

தீர்மானத்தைப் போட்டு, 'இது எங்களுடைய திட்டம், அதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும்' என்று சொல்லிவிட்டு அதோடு இருந்து விடலாம். என்னை அனுப்பி வைத்ததற்கே காரணம், இம்மாதிரி நம்முடைய கருத்து இருக்கிறது, அங்கே போய் அங்கு இருக்கும் நிலையை அனுசரித்து, எவ்வாறு முடிவு செய்யவேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான். இல்லாவிட்டால் என்னை அனுப்பியிருக்க வேண்டிய அவசியமில்லை. காகிதத்தில் எழுதி அனுப்பியிருக்கலாம். அதுவும் நம்முடைய அரசியல் முறையிலே இதுமாதிரி அதிகாரத்தில் இருக்கும் மந்திரி சபைக்கு ஒரு காரியத்திலே முடிவு எடுப்பதற்கும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டாலுங்கூட, அங்கிருக்கும் சூழ்நிலையை அனுசரித்து ஒரு முடிவு எடுப்பதற்கும், பிற்பாடு இம்மாதிரி இருக்கும் சூழ்நிலையில் முடிவு செய்து இருக்கிறோம், இதற்கு உங்கள் ஆதரவு வேண்டுமென்று கேட்பதற்கும் சட்ட ரீதியாக இடம் இருக்கிறது. அது தான் பார்லிமெண்டரி ஜனநாயக முறையில் அரசாங்கம் நடைபெறுவதற்கு அடிப்படையாக இருக்கக்கூடியது. அதை ஒத்துக்கொள்ள முடியவில்லையென்றால், அந்த மந்திரிசபை பேரிலே நம்பிக்கை இல்லையென்றால் வீட்டுக்கு அனுப்பிவிடுவதற்கும் இதிலே இடம் இருக்கிறது. "அங்கே சட்ட ரீதியாக நிதி மந்திரி 291 கோடி ரூபாய் ஒப்புக்கொண்டு வருவதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? என்று கேட்பது தவறான கருத்து என்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். 291 கோடி ரூபாயை ஒத்துக்கொண்டு வந்தது தப்பு என்று வாதாடுவது வேறு விதம். "அதற்கு அதிகாரமே இல்லை. எந்த அதிகாரத்தின் மூலமாக, எந்தச் சட்ட அடிப்படை மூலமாக ஒப்புக்கொண்டீர்கள்?" என்று கேள்வி கேட்பதற்கு நம்முடைய அரசியலமைப்பிலே இடம் இல்லை. அந்த அதிகாரம் நிர்வாகத்தை நடத்திச்செல்லும் மந்திரி சபைக்கு இருக்கிறது என்று நான் வலியுறுத்துகின்றேன்.

அந்த அடிப்படையில்தான் இங்கு பல்வேறு கருத்துக்களைச் சொல்லி, 400 கோடி ரூபாய் அளவிலே திட்டம் இருக்கவேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டாலுங்கூட, அங்கு போய்—நான் ஆரம்ப உரையிலேயே சொன்னதுபோல, நம்முடைய தமிழ் நாட்டின் திட்டம் மட்டுமல்ல, மற்ற ராஜ்யத் திட்டங்களும், மத்திய அரசாங்கம் மூலமாக நிறைவேற்றக்கூடிய திட்டங்கள், அவற்றிலே நமக்கு எந்த அளவுக்கு வசதி கிடைக்க முடியும் என்று இவையெல்லாம் வைத்துக்கொண்டு நாம் திட்டத்தினுடைய அளவை நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. இன்னும் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இடம் இருக்கிறதே என்று சொன்னால், இடம் இருக்கும் அளவு தொடர்ந்து அந்த வசதியைப் பெருக்கச் செய்ய முடியுமானால் செய்ய வேண்டும் என்ற முறையிலேதான் இந்த விவாதம்கூட நடைபெற வேண்டும், இன்றைக்கு 291 கோடி ரூபாய் என்று நிர்ணயித்துக் கொண்டிருந்தாலும், அந்த அளவிலேயே நிற்கவேண்டிய அவசியம் இல்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அதற்கு விளக்கமாக எடுத்து, 152 கோடி ரூபாய் என்று கணக்கிட்டிருந்தாலுங்கூட, 187.4 கோடி ரூபாய் அளவிற்கு நிறைவேற்றி

யிருக்கிறோம். 'இன்றைக்கிருக்கும் அளவில் இது சரி' என்று ஒப்புக்கொண்டு வந்தாலுங்கூட, நமக்கு வசதி பெருகும் அளவிலே இதை நாம் ஏற்றுக்கொண்டு போக முடியும். இன்றைக்கே உயர்த்திக்கொண்டு போகக்கூடிய அனுகூலமான சூழ்நிலை இருக்கின்றது என்பதைப்பற்றி இந்த ஆண்டிலே எடுத்திருக்கும் திட்டத்தின் அளவை நாம் ஆரம்ப உரையிலே எடுத்துச் சொன்னேன்.

SRI C. N. ANNADURAI: தேவையான நேரத்தில் முடிவு எடுக்கின்ற வழிவகை கனம் அமைச்சருக்கு இருக்கிறது என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அறிந்துகொள்ள விரும்புவது—400 கோடி ரூபாய் 291 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டதே, அதுபற்றி 'காபினெட்' கூடி முடிவு எடுத்ததா? அல்லது ஒரு அமைச்சர் மட்டும் முடிவு எடுத்தாரா? என்பதுதான்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த மந்திரிசபைக்குள்ளே இருக்கும் விவகாரம் பற்றியது. ஒரு மந்திரி முடிவு எடுத்தாலும் மந்திரி சபைக்காகத்தான் அவர் முடிவு எடுக்கிறார். 'ஜாயின்ட் ரெஸ்பான்ஸிபிலிடி' இருக்கிறது. நான் அவர்களுக்கு இப்பொழுது சொல்கிறேன்—மந்திரி சபையும் இதைப்பற்றி பரிசீலனை செய்தது என்று. முதல் மந்திரி முடிவு எடுத்திருந்தாலும் சரி, நிதி மந்திரி முடிவு எடுத்திருந்தாலும் சரி, மந்திரிசபையின் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு முடிவு எடுக்கும் அதிகாரம் எந்த ஒரு மந்திரிக்கும் இருக்கிறது நம்முடைய அரசியல் அமைப்பிலே என்று நான் அவர்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதோடு மட்டுமல்ல, இந்த அளவைப் பெரிதுபடுத்திக்கொள்ள முடியும். வேண்டுமானால் அளவிலேகூட மாறுதலைச் செய்துகொள்ள முடியும் என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் காரணத்தால்தான் இந்த விவாதம் மட்டுமல்ல, இங்கு தொடர்ந்து விவாதங்கள் நடந்துகொண்டு வரும்போது அந்த அடிப்படையிலே மாறுதல் ஏற்படவேண்டுமென்ற நிலை ஏற்படுமானால் அந்த மாறுதல்கள் செய்துகொள்ள முடியும் என்பதை மனதிலே கொள்ள வேண்டும்.

அதற்கடுத்தபடியாக இந்த விவாதத்தைப் பொறுத்த வரையில் எனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஏதோ ஒரு சிறு பகுதியினராவது இந்தத் திட்டமெல்லாம் தேவையில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். இன்றைக்கு அவர்கள் அதிகார அடிப்படையில் இங்கு சுதந்திராக் கட்சியினுடைய பிரதிநிதியாக இல்லாமலிருந்தாலுங்கூட, அவர்கள் சுதந்திராக் கட்சியினுடைய தேர்தல் விக்ஞாபனத்தைப் படித்துக் காண்பித்து, இன்றைக்கு சுதந்திராக் கட்சிகூட திட்டத்தை ஒப்புக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்கிறது என்று எடுத்துக் காட்டினார்கள். அது உண்மையிலேயே எனக்குப் பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது. சுதந்திராக் கட்சியும் ஓரளவு முன்னேற்றக் கருத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலே மாறுபட்டு வருகிறது என்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சியுற்றேன். ஏனென்றால் திட்டமே கூடாது என்று பிடிவாதமாகச் சொல்லி

வந்தவர்கள் இன்றைக்குத் தேர்தல் விக்ஞாபனத்திலாவது இதைச் சேர்க்கவேண்டுமென்று வந்திருக்கிறதே என்றால், அது நாட்டிலே இருக்கும் சூழ்நிலையே அவர்களை மாற்றக்கூடியதாக இருக்கிறது என்பதைத்தான் நான் உணருகிறேன். அவர்களாக ஒப்புக்கொண்டிருக்காவிட்டாலும், தேர்தலுக்கு நின்றாகவேண்டும், தேர்தல் விக்ஞாபனத்தில் திட்டமே இல்லை என்று சொன்னால் மக்கள் முடிவு எவ்வாறு இருக்குமோ என்ற அந்த நிலையிலே, 'திட்டத்தை ஏற்றுக்கொள்கிறோம், திட்டமிடுகிற தத்துவத்தை ஏற்றுக்கொள்கிறோம்' என்று தேர்தல் விக்ஞாபனத்திலாவது குறிப்பிட முன்வந்திருப்பது போற்றத்தக்கது ஆகும்.

ஏனென்று சொன்னால் மக்கள் என்ன நினைத்தாலும் நான் சொல்வதுதான் சரி என்று பிடிவாதம் பிடிக்கக்கூடிய நிலைமை மாறி, மக்கள் என்ன நினைக்கிறார்கள், என்ன வேண்டும் என்கிறார்கள் என்பதை உணர்ந்து செயலாற்ற முன் வருவதையே முன்னேற்றம் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு திட்ட அடிப்படையில்தான் நாம் முன்னேறவேண்டுமென்ற ஒன்றுபட்ட கருத்து நம் சட்டசபையில் ஏற்பட்டிருப்பதைப் பார்த்து உண்மையில் நாம் மகிழ்ச்சி அடையவேண்டும். இது வரவேற்கத்தக்கது. திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றுவதற்கு அரசாங்கத் தரப்பில் இருப்பவர்கள் முயற்சி செய்யவேண்டும். மற்றவர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும்.

திட்டமிட்டு, திட்ட அடிப்படையில்தான் முன்னேறவேண்டும் என்ற கருத்தை எல்லோரும் ஒப்புக்கொண்டாலும் அந்தத் திட்டம் எவ்வாறு அமையவேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் எல்லோரும்கூட ஒரே விதமான கருத்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அவர்களுக்குள்ளும் திட்டம் எவ்வாறு அமையவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் அந்தக் கருத்து வேறுபாடுகளை மட்டும் நினைத்துக் கொண்டிருந்தால் இன்றைய தினம் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வரமுடியாது. இன்றைக்கு எதுவாக இருந்தாலும் யோசனை செய்து, திட்டமிட்டுக் காரியம் செய்து, முடிக்க வேண்டியிருக்கிறது. திட்டம் என்று தீட்டுகிறபோது ஒருவர் இந்தத் தொழில்கள் எல்லாம் பொதுத்துறையில்தான் இருக்கவேண்டும் என்பார், இன்னொருவர் தனியார் துறையில்தான் இருக்கவேண்டும் என்பார். நாம் பொதுவாக நமக்கு இந்தத் தொழில்கள் எல்லாம் வேண்டுமா, வேண்டாமா என்பதை முடிவு செய்துகொள்ளவேண்டும். அப்புறம் அது பொதுத்துறையிலா, தனியார் துறையிலா என்பதைக் கவனிக்கலாம். வெறும் குழப்பமான நிலையில்—அதையும் சொல்லி, இதையும் சொல்லி ஒரேவிதமான முடிவும் எடுக்காமல் குழம்பிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. ஆகவேதான் இன்றைக்கு ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தக் கொள்கையைக் காங்கிரஸ் கட்சியே வகுத்திருக்கிறது. அதைப் பார்லிமெண்டும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. நாமும் அந்த அடிப்படையில்தான்

[Sri C. Subramaniam] [11th November 1961

இன்றைக்கு தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இந்தக் கொள்கை தவறு என்று இன்னொரு கட்சி நினைக்கலாம். அப்படி நினைக்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது. நான் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தேன். கம்யூனிஸ்டுக் கட்சியைப் பொறுத்தவரையில் தனிப்பட்டவர்களுக்கே அங்கே உரிமை இல்லை. ஒரு பிடிக் கடை என்றால்கூட அது சர்க்கார் கடை. அங்கே இருப்பவன் சர்க்கார் சிப்பந்தி. அப்படி அவர்கள் ஓர் கொள்கையை வகுத்துக்கொண்டு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். அமெரிக்காவுக்குப் போய்ப்பார்த்தால் அவர்களுக்கு சர்க்கார் துறை என்றாலே சந்தேகம்தான். சர்க்கார் துறையில் செய்வது என்றால் எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்ய முடியாது என்பது அவர்கள் சித்தாந்தம். தவிர்க்க முடியவில்லையென்றால் தான் பொதுத்துறையில் அதை ஏற்று நடத்துவார்கள். இந்த இரண்டு நாட்டுக் கொள்கையும் நம் முன் இருக்கிறது. இந்தக் கொள்கைப்படியோ, அந்தக் கொள்கைப்படியோ நாம் நடக்கவில்லை. இரண்டு எக்ஸ்ட்ரீமும் நமக்கு வேண்டாம் என்று நாம், நம்முடைய முன்னேற்றத்திற்காக, நமக்கு உகந்தபடி ஒரு மத்தியக் கொள்கையை வகுக்க முடியும் என்ற அடிப்படையில் நமது தொழில் கொள்கையை வகுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதுதான் சரியான கொள்கை என்று நாங்கள் நினைக்கிறோம். இதில் கருத்துமாறுபாட்டுக்கு இடம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இதைச் செய்வதா, அதைச் செய்வதா என்று தயங்கிக் கொண்டிருந்தால் நான் முன்பே சொன்னபடி ஒன்றும் செய்ய முடியாது போய்விடும். உதாரணமாக அலுமினியத் தொழிற்சாலையைப் பற்றிச் சொன்னார்கள். அலுமினியத் தொழிற்சாலை ஏற்படவேண்டும், அதுவும் அது பொதுத்துறையில் ஏற்படவேண்டும் என்ற கருத்தை உடையவன் நான். ஆனால் பொதுத் துறையில் ஏற்படுவதற்கு இடமில்லை, என்கிறபோது அந்தத் தொழிற்சாலையே வேண்டாம் என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுத் துறை இல்லாவிட்டால் தனியார் துறையிலாவது உண்டாகட்டும் என்றுதான்—நாட்டில் தொழில் வளர வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் நினைக்கிறோம். அலுமினியத் தொழிற்சாலை பொதுத்துறையில் வந்தால் வெகுவாக அதன் லாபநஷ்டம் பாதிக்கும், தனியார் துறை என்றால் அந்நியச் செலாவணி ஒதுக்க முடியும் என்றார்கள். ஆகவே இன்றைய தினம் அது தனியார் துறைக்கு விடப்பட்டிருக்கிறது. வந்தால் பொதுத் துறையில் வரட்டும், இல்லாவிட்டால் வரவே வேண்டாம் என்ற முடிவு சரியல்ல. அப்படித்தான் முடிவு செய்வோம், அதுவே சரியென்றால் அப்படி நினைத்துக்கொள்ள அவர்களுக்கு உரிமையிருக்கிறது என்றுமட்டும் சொல்லி அந்த அளவில் விட்டுவிடுகிறேன்.

தமிழ்நாடு சர்க்காரும் தாம் வகுத்துக்கொண்ட தொழில் கொள்கையை பிரசாரம் செய்வதற்கும் அதை மக்களிடத்தில் பரப்புவதற்கும் உரிமை கொண்டிருக்கிறது. பொதுத்துறையில் இல்லாவிட்டால் தனியார் துறையிலாவது ஒரு தொழில் வந்துதான்

11th November 1961] [Sri C. Subramaniam]

ஆகவேண்டும் என்று முடிவு எடுத்த பிறகு அரசாங்கம் அதற்கு வேண்டிய வசதிகள், உதவிகள் அத்தனையும் தனியார் துறைக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. தனியார் துறையில் வரலாம் என்று முடிவு செய்துவிட்டு, அவர்களுக்கு எந்தவிதமான உதவியோ, வசதியோ அளிக்காமல் அத்துறை வளர்ச்சி பெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கவேண்டும் என்ற கொள்கை சரியானதல்ல. ஆகவேதான் தமிழ்நாடு சர்க்கார் பொதுத்துறையில் வருவதற்கு வசதி அல்லாத தொழில்களை தனியார் துறைக்கு ஒதுக்குவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். தனியார் துறைக்கு விடுவது என்று முடிவு செய்திருப்பதோடு அத்தொழிலை தனியார் ஆரம்பிப்பதற்கு என்ன என்ன உதவிகள் வசதிகள் எல்லாம் தேவைப்படுகிறதோ அதை அளிக்கவும் முடிவு செய்திருக்கிறார்கள். அதுதான் இந்தச் சர்க்காரின், இந்த மந்திரி சபையின் கொள்கை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இது வரவேற்கத் தகுந்த கொள்கை அல்ல என்று மற்ற கட்சிகள் நினைக்கலாம். ஆனால் காங்கிரஸ் கட்சி இந்த முடிவை எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் தான் அலுமினியத் தொழிற்சாலையைத் தனியார் துறையில் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. உரத்தொழிற்சாலையாக இருந்தாலும் அப்படித்தான். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தக் கொள்கை பிடிக்கவில்லையென்றால் அதை நாட்டில் எடுத்துச் சொல்லி மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்கு அவர்களுக்கு பூரண உரிமையிருக்கிறது.

தொழில் வளர்ச்சிக்கு அடுத்தபடியாக விவசாய அபிவிருத்திக்கு திட்டமிடவேண்டும் என்பதில் கருத்துவேறுபாடு கிடையாது. தொழில் வளர்ச்சி இல்லாமல் விவசாய வளர்ச்சி இருக்காது. இரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்திருப்பது. விவசாயத் துறையில் நவீன முறைகளைக் கையாளவேண்டுமென்றால் அதற்கான நவீன இயந்திரங்கள், சாதனங்கள் எல்லாம் தொழில் துறையில்தான் செய்தாக வேண்டியிருக்கிறது. தொழில் துறையில் முன்னேற்றமுள்ள பகுதிகளில்தான் விவசாயம் நல்ல வளர்ச்சி அடைந்திருக்கிறது. இதற்கு எத்தனையோ உதாரணங்கள் சொல்லலாம். கோயம்புத்தூர் ஜில்லாவையே எடுத்துக் கொள்ளலாம்.

இன்றைக்கு கோயம்புத்தூர் ஜில்லாவில் மற்ற இடங்களைவிடத் தொழில் வளம் ஓரளவு வளர்ந்திருக்கிறது. அதன் காரணமாகவே அங்கு விவசாயமும் வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்க முடியும். எல்லாருமே விவசாயத்திலே ஈடுபட வேண்டுமென்பதற்குப் பதிலாக விவசாயத்தில் ஒருசிலரும் மற்றவர்கள் தொழிலிலும் ஈடுபடக்கூடிய நிலைமை அங்கு இருக்கின்ற காரணத்தால் அங்கு இரண்டுமே நல்ல முறையில் வளர்ச்சி பெறும் நிலைமை ஏற்பட்டது. அதன் காரணமாக விவசாயத்தில் தீவிரமாக ஈடுபட்டு உழைப்பதின் காரணமாக பலன் அதிகமாகக் கிடைப்பதை நாம் பார்க்கிறோம். எப்படித் தொழிலில் முதலீடு செய்ய வேண்டுமென்ற மனப்பான்மை ஏற்படுகிறதோ அதேபோன்று விவசாயத்

திலும் முதலீடு செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி இன்று கோயம்புத்தூர் ஜில்லாவில் மக்களிடையே ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். ஒரு கிணறு வெட்ட ஒரு லட்சம் ரூபாய் ஆனாலும் தயங்குவதில்லை. எப்படித் தொழிலில் முதலீடு செய்கின்ற அளவுக்குத் திரும்பக் கிடைக்குமா என்று பார்க்கிறார்களோ அதே போல் இதிலும் பலன் வருமா என்று பார்த்து முதலீடு செய்கிறார்கள். பல்வேறு இயந்திரங்களை வாங்கவேண்டுமானாலும் தயங்குவதில்லை. அதற்குக் காரணம் தொழில் வளர்ச்சி அங்கு ஏற்பட்டிருப்பதுதான். ஆகையால்தான் இன்றைக்கு விவசாய வளர்ச்சிக்கு அது அடிப்படையாக இருப்பது தொழில் வளர்ச்சி என்று நாங்கள் கூறுகிறோம். அந்த அடிப்படையில்தான் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. விவசாய வளர்ச்சி மட்டும் ஏற்பட வேண்டுமென்று ஒரு சமயத்தில் பேசினோம். தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று பின்னர் பேசினோம். நமக்கு ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாக இரண்டையும் பிரித்து வைக்க முடியாது, இரண்டையும் இணைதனுத்தான் செய்ய வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்.

ஆகவே, தமிழ்நாட்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்க்கும்போது—புள்ளி விவரங்களை வேண்டுமானால் நம்ப வேண்டாம், தயவுசெய்து கிராமத்திற்குச் சென்று அங்குள்ள குடியானவர்களைச் சந்தித்துப் பேசிப் பாருங்கள்—கணிசமான அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பது புரியவரும். இன்றைய தினம் விவசாய வளர்ச்சிக்கு அடிப்படையான திட்டங்களை, நீர்ப்பாசன வசதிகளைச் செய்து கொடுக்கிறோம். பெரிய அளவில் கட்டக்கூடிய அணைகள் ஒரு புறம் இருக்க, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்து அதன் மூலமும் உற்பத்தி பெருகியிருப்பதை நாம் பார்க்கிறோம். முன்பே நீர்ப்பாசன வசதிகள் இருக்கும் இடங்களில்கூட புதிய விதைகளை, கருவிகளை உபயோகப்படுத்துவதன் காரணமாக விவசாய உற்பத்தி பெருகியிருப்பதைக் காண முடியும். அந்த உற்பத்திப் பெருக்கின் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கைத்தரமும் உயர்ந்திருப்பதைக் காண முடியும். திட்டத்தில் நாம் போட்ட "பிசிகல் டார்ஜெட்"-டை அடைந்திருக்கிறோமா என்று பார்த்தால் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அந்த அளவைவிடக் கொஞ்சம் அதிகமாகவேகூட வளர்ச்சி கண்டிருக்கிறோம் என்பதை நான் புள்ளி விவரங்கள் மூலம் மட்டுமல்லாது நேரடியாக விவசாயப் பண்ணைக்குச் சென்றும் நிரூபித்துக் காண்பிக்க முடியும்.

திட்டத்தின் அடிப்படையான நோக்கம் என்ன என்பதைப் பற்றித் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். "பிராந்தியங்களுக்குள்ள ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும், தனி மனிதனுக்குள் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும்—இது மாதிரி ரீஜனல் டிஸ்பாரிடி நீக்கப்பட்டிருக்கிறதா?" என்று கேட்டார்கள். அதற்கு ஆதாரமாக நான் நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் பேசிய பேச்சை

எடுத்துக் காட்டினார்கள். நான் இன்றைக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—இன்றைக்கு இந்தியாவில் ஒரு சில பகுதிகள், மற்றப் பகுதிகளை விட முன்னேற்றம் அடைந்த பகுதிகள் பம்பாய்ப் பகுதியும், வங்காளப் பகுதிகளும் ஆகும். மற்ற எல்லாப் பகுதிகளையும் விட தொழில் வளர்ச்சியில் இவை முன்னணியில் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். இன்று ஏற்பட்ட நிலைமை அதற்குக் காரணமல்ல. அந்நிய ஆட்சிக் காலத்திலேயே அங்கு ஓரளவு தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. சுதந்திரம் அடைந்த பிறகு பெரும் அளவு வளர்ச்சியடைந்திருக்கிறது. நம் வளர்ச்சியின் வேகம் மேலும் மேலும் அதிகப்பட்டு அவர்களைப் பிடிக்கக்கூடிய அளவுக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறோமா என்று பார்க்கவேண்டும். நாம் அவர்களை ஓடிப் பிடிக்க முடியாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தின் கடைசி இரண்டு மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட அனுபவம் நமக்குப் புதிய நம்பிக்கையைக் கொடுக்கிறது. மற்ற இடங்களைப்போல் நாமும் முன்னேற்றம் அடைந்து விடுவோம் என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறது. நான் நம்மை விடக் கீழே இருப்பவர்களை ஒப்பிட்டுப் பார்க்க விரும்பவில்லை. உத்திரப் பிரதேச மாகாணத்தையும், மத்திய பிரதேசத்தையும், பீகார் கிழக்குப் பகுதியையும் பார்த்தால் பொதுவாகத் தொழில்துறையில் பின் தங்கியிருக்கின்றன. நான் வங்காளத்துடனும், பம்பாயுடனும் ஒப்பிட்டுப் பார்க்கத் தயாராக இருக்கிறேன். அவ்வாறு பார்க்கும்போது இரண்டு விஷயங்களைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஒன்று, அடிப்படையாகத் தொழிலுக்கு உபயோகப்படக் கூடிய மின்சார சக்தி எந்த அளவுக்கு நம் ராஜ்யத்தில் வளர்ந்திருக்கிறது என்று பார்த்தால் நம்முடைய முன்னேற்ற வேகம் அதிகரித்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இந்த இரண்டாவது திட்ட முடிவு காலத்திற்குள்ளாக ஐந்து லட்சத்து எழுபத்தி ஓராயிரம் கிலோ வாட்ஸ் மின்சக்தியைப் பெருக்கியிருக்கிறோம். இதற்கு முன்பு 2½ லட்சத்திற்கு குறைவாக இருந்தது. மற்ற இடங்களில் இந்த அளவுக்கு மின்சார சக்தியைப் பெருக்கியிருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை. தமிழ் நாட்டில் மின்சார உற்பத்திக்கு முதலிடம் கொடுத்தோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 52 கோடி ரூபாய் அளவுக்கு மின்சார உற்பத்திக்காக செலவு செய்யத் திட்டம் போட்டிருந்தோம். தொழில் வளரவேண்டுமானால் மின்சார உற்பத்தி அதிகமானால்தான் முடியும். நிலக்கரியை 1,200 மைலுக்கு அப்பாலிருந்து கொண்டு வந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் அதிகச் செலவாகும். இங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அதிகமான அளவுக்குச் செலவழித்தோம். ஐம்பத்திரண்டு கோடி திட்டம் போட்டு எழுபத்தி எட்டு கோடி வரை செலவு செய்தோம். இருபத்தைந்து கோடி அதிகமாகச் செலவு செய்தோம். அது முழுவதும் விளக்கு எரிவதற்காக உபயோகப்படுத்தப்பட்டது என்று கனம் அண்ணாதுரையவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த இடத்திலே நாம் வெளிச்சத்தைத்தான் பார்க்கிறோம். மின்சாரம் தொழிலுக்காக உபயோகப்படுத்தப்படுகின்ற இடங்களுக்

[Sri C. Subramaniam] [11th November 1961

குச் சென்று பார்க்க கனம் அண்ணாதுரையவர்களுக்கு அவகாசம் இருக்காது. இன்றைக்குப் புள்ளி விவரத்தை எடுத்துப் பார்த்தால் விளக்கு எரிவதற்கு 100-க்கு 3 அல்லது 4 பங்குக்கு மேல் போவதில்லை. அதற்கு மேல் தொழில் துறையிலும் தண்ணீர் இறைக்கவும் பயன்படுகிறது. தண்ணீர் இறைக்க, மற்றும் கிராம சிறு கைத் தொழில்களுக்குப் பயன்படுவது எவ்வளவு என்று பார்த்தால் 100-க்குப் 18 பங்குதான். இதர மின்சக்தி முழுவதும் தொழில் 12-30 p.m. துறைக்குத்தான் பயன்படுகிறது. ஆக, கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு மின்சார உற்பத்தி இவ்வளவு பெருகியிருந்தும் போதிய அளவிலே வேண்டிய தொழில்களுக்குக் கொடுக்க முடியாமல் இன்னும் பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. தொடர்ந்து இந்த பற்றாக்குறை இருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

இதிலே இன்னொரு புள்ளிவிவரம் பார்க்கலாம். தொழில் வளர்ச்சி என்றால் தனியார் துறையாக இருந்தாலும், பொதுத் துறையாக இருந்தாலும் தனித்தனியாக கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு, மூலதனம் போட்டு, அதன் மூலமாகத்தான் முன்னேற வேண்டும். எந்தத் துறையிலிருந்தாலும் எந்த அளவுக்கு மூலதனம் பெறப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஓரளவுக்கு கணக்குப் பார்க்கும்போது மொத்தத்திலே ஏற்பட்டிருக்கக் கூடிய வளர்ச்சி ஓரளவுக்கு புலப்படும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட இந்தியா முழுவதிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட—கம்பெனிகளின் எண்ணிக்கை 6,039. இதிலே புள்ளிவிவரத்தைப் பொறுத்த வரையில் யார் வேண்டுமானாலும் இது சரியா இல்லையா என்று பார்த்துக் கொள்ளலாம். இதிலே டோட்டல் பெய்ட்-அப் காப்பிட்டல், அதாவது மூலதனம் செலுத்தப்பட்டது—எத்தனை வேண்டுமானாலும் ரிஜிஸ்டர் செய்யப்படலாம், ஆனால் எவ்வளவு செலுத்தப்பட்டது என்பதைத்தான் முக்கியமாக கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும், அப்படி செலுத்தப்பட்டது—161,35 லட்சம்—இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே. இதிலே பெய்ட்-அப் காப்பிட்டல் ரெய்ஸ்ட் பை கவர்ன்மெண்ட் கம்பெனீஸ் 75.71 லட்சம் ரூபாய். பெய்ட்-அப் காப்பிட்டல் ரெய்ஸ்ட் பை நான்-கவர்ன்மெண்ட் கம்பெனீஸ் 75,64 லட்சம் ரூபாய். இதுதான் புள்ளிவிவரங்கள்—அகில இந்தியாவிற்குமான புள்ளிவிவரங்கள். இதிலே தமிழ் நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடியது என்ன என்று பார்க்கும்போது இந்தியாவிலே ஏற்பட்டிருக்கக் கூடிய 6,039 கம்பெனிகளில் 979 கம்பெனிகள் தமிழ்நாட்டிலே ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை. டோட்டல் பெய்ட்-அப் காப்பிட்டல் 161 கோடியில் 49.06 லட்சம் ரூபாய்—ஏறத்தாழ 50 கோடி ரூபாய் இங்கே செலுத்தப்பட்டது. அதே நேரத்தில் பெங்காலில் எவ்வளவு என்று பார்க்கும்போது, அங்கே கம்பெனிகளின் எண்ணிக்கை அதிகமாக ஆகியிருக்கிறது, ஆனால் அவர்கள் மொத்தம் முதலீடு செய்தது 15 கோடி ரூபாய்—நம்முடையது 49 கோடி. மகாராஷ்டிராவை எடுத்துக்கொண்டால் அங்கு 1,301 கம்பெனிகள், ஆனால் மொத்த முதலீடு 35 கோடி தான். இரண்டாவது திட்ட காலத்தில், அதுவும் கடைசி இரண்டு-மூன்று

11th November 1961] [Sri C. Subramaniam]

ஆண்டுகளில் ஏற்பட்டிருக்கிற கணிசமான மின்சார உற்பத்தியை வைத்துக்கொண்டு மட்டுமல்லாமல் கம்பெனிகள் ரிஜிஸ்டர் ஆனது, பங்குத் தொகை வசூலான பங்குத்தொகை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் பங்குத் தொகை மட்டும் முதலீடு அல்ல, இதோடு வெவ்வேறு இடங்களில் கடன் வாங்குகிறார்கள், இதெல்லாம் சேர்த்து ஒரு அளவைக் காண்பிக்கிறது. எந்த அளவுக்கு புதிய தொழில்கள் வந்திருக்கின்றன, எந்த அளவுக்கு முதலீடு வந்திருக்கிறது என்று காட்டுகிறது. ஆகையால், திராவிட முன்னேற்றக் கழக தலைவருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அவர்கள் நினைத்த மாதிரி தேய்ந்து போகவில்லை, கொஞ்சம் முன்னேறிக்கொண்டிருக்கிறோம். கொஞ்சம் வேகமாகவே முன்னேறிக்கொண்டிருக்கிறோம். இதே வேகத்தை அதிகப் படுத்திக்கொண்டு போனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் மற்றவர்களை எட்டிப் பிடிக்க முடியும்—ஏன்? அவர்களையும் தாண்டிப் போக முடியும். நமக்கு மூலப்பொருள்கள் இல்லாவிட்டாலும், இன்னொரு மூலப்பொருள் மனித சக்தியை ஆண்டவன் ஓரளவுக்கு நமக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறார், பல இடங்களில் இங்குள்ளவர்கள் அதிக அறிவு படைத்தவர்கள் என்று சொல்லப்பட்டு வருகிறது—நான் இதை தற்புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை—எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய விஷயம் கூட. தெற்கு தேய்ந்துக்கொண்டிருக்கிறது என்று சொல்லும்போது அது மைசூருக்குப் பொருந்துமோ என்னவோ தெரியாது, அல்லது ஆந்திராவிற்குப் பொருந்துமோ என்னவோ தெரியாது—தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் கணிசமான வேகத்தில் முன்னேறியிருக்கிறோம், வேகமும் வருஷாவருஷம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதே அடிப்படையில் தான் இன்றைக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிப் பேசும்போது அதைப் பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறது. அதிலே நீங்களே அறியாமல் முன்னேறி விட்டிருக்கலாம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோட்டை விட்டு விட்டீர்களே என்று கேட்கலாம். ஆகையால் அதையும் அலசிப் பார்க்க வேண்டியிருக்கிறது. அடிப்படையாகப் பார்க்கும்போது மின்சாரத்தைப் பொறுத்த வரையில் இரண்டாவது திட்ட முடிவு காலத்தில் 571 ஆயிரம் கிலோ வாட் சக்தி உற்பத்தி ஏற்பட்டிருக்கிறது. இதை தமிழ்நாட்டு எலெக்ட்ரிசிட்டி போர்டு மூலமாக 10,40 ஆயிரம் கிலோ வாட் அளவுக்கு உயர்த்த வேண்டும் என்று—அதாவது மேலும் 5 லட்சம் கிலோ வாட் அளவுக்கு—உற்பத்தி செய்ய வேண்டுமென்று இதிலே திட்டம் போடப்பட்டிருக்கிறது. இதற்காக நம்முடைய திட்டத்திலே 291 கோடி ரூபாயில் 100 கோடி ரூபாய்—அதாவது மூன்றில் ஒரு பங்கு—ஒதுக்கியிருக்கிறோம். தொழில் வரும்போது எங்களிடம் மின்சாரம் இல்லை என்று சொல்லக் கூடிய நிலை ஏற்பட்டு வேறு எங்காவது அந்தத் தொழில் போகின்ற நிலை ஏற்படக் கூடாது என்று இன்றைக்கு மற்ற எந்த ராஜ்யத்திலும் எடுத்துக்கொள்ளாத அளவு மின்சார உற்பத்தி நமது தமிழ் நாட்டிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதோடு

[Sri C. Subramaniam] [11th November 1961

மட்டுமல்ல. கனம் ராமசுவாமி முதலியார் குறிப்பிட்டுக்கொண்டிருந்தார் தெர்மல் பவர் நமக்கு வேண்டும் என்று. மழை பெய்யாமல் போனால் மின்சார தட்டுப்பாடு வருகிறது என்று குறிப்பிட்டார்கள். அதன் காரணமாக நெய்வேலியில் 4 லட்சம் கிலோ வாட் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டப்படி 2½ லட்சம் கிலோ வாட்டும், அதைக் கூட்டி 4 லட்சம் கிலோ வாட் அளவுக்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சாரம் உற்பத்தியாகவேண்டும். அங்கு ஏற்படுகின்ற தொழில்களுக்கும், நிலக்கரியை வெட்டி எடுப்பதற்கும் ஓரளவுக்கு அந்த மின்சாரம் அங்கேயே உபயோகப்படுத்தப்படும். அதற்கு மேல் 3 லட்சம் கிலோ வாட் அளவுக்கு நமக்குக் கிடைக்க இருக்கிறது. இதையெல்லாம் கணக்குப் போடும்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் 14 லட்சம் கிலோ வாட் நமக்கு உற்பத்தியாகக் கூடிய சக்தி ஏற்பட்டு, அதை உபயோகப்படுத்தக் கூடிய முறையில் திட்டம் போட்டிருக்கிறோம். இங்கு தொழில் அதிகமாகவில்லை என்றால், தொழில் வளர்ச்சி இல்லை என்றால் 5 லட்சத்திலிருந்து 14 லட்சத்திற்குப் போகும்போது, அதிகப்படியான மின்சாரத்தை நம்மால் உபயோகப்படுத்த முடியாத நிலை ஏற்படும். நான் ஒன்று உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏற்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளுக்கே இது சரியாகப் போய்விடும், அதோடு நமக்கு இன்னும் அதிகமாக வேண்டியிருக்கும். பின்னால் உற்பத்தியாகக் கூடிய மின்சாரம் மிச்சமாகப் போய்விடுமோ என்று எண்ணவேண்டிய அவசியமில்லை. இன்னும் அதிகமாக உற்பத்தி செய்தாலும் இன்னும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் அந்த அளவுக்கு இன்னும் அதிக வேகத்துடன் தொழில் துறையில் முன்னேற இடம் செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதிலே ஒரு நண்பர் பேசும்போது கணக்குக் கேட்டார்கள்—இதெல்லாம் சரி, மத்திய அரசாங்கத்தில் பல தொழில்கள் இருக்கிறதே அந்த கணக்குப் பிரகாரம் என்ன ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா என்று கேட்டார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதற்கான கணக்கு இப்போது இருக்கின்ற வரையில்—இன்னும் பல தொழில்கள் எங்கெங்கு அமைக்க வேண்டும் என்று முடிவு ஏற்படவில்லை—முடிவு ஏற்பட்டிருப்பதிலே புள்ளிவிவரங்களை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அதிலே பார்க்கும்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் தொழில்களில் நெய்வேலிக்கு 64 கோடி ரூபாய், ஸ்மல் ப்ளாண்டுக்கு 25 கோடி—ஸ்மல் ப்ளாண்ட் பற்றி தனியாக ஒரு அத்தியாயம் பேசுகிறேன்—ரா ஃபில்ம்ஸ் 5½ கோடி, டெலி ப்ரின்டர் 1½ கோடி. இன்னும் இரண்டாவது திட்டத்தில் போக பாக்கி சர்ஜிகல் இன்ஸ்ட்ருமெண்ட்ஸ் 5 கோடி, பாய்லர் ப்ளாண்ட் 20 கோடி, ஆக மொத்தம் 121 கோடி ரூபாய். இதிலே தொழில்களுக்கு மத்திய சர்க்காரிலே எத்தனை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள் என்றால் 1,450 கோடி ரூபாய்—அதாவது கனரகத்

11th November 1961] [Sri C. Subramaniam]

தொழில்களுக்கு. ஆகையால் 12-ல் ஒரு பங்கு வரக்கூடிய அளவுக்கு இப்போதே ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதோடு இன்னும் சில தொழில்கள் நமக்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. டாங்க் உற்பத்தி தொழிற்சாலையை இதிலே சேர்க்கவில்லை, ஏனென்றால் அது திட்ட வரம்புக்குள் வரவில்லை—திட்டத்திற்கு அப்பால் உள்ளது.

எப்போதும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சந்தேகக் கண்ணோட்டத்துடன் இல்லாமல் இருக்கமாட்டார்கள். இந்த சந்தேகப்படும் மனப்பான்மையோடு ஏன் அவர்கள் எப்போதும் இருக்கிறார்கள் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை. இந்த சந்தேகத்தை விட்டுவிட வேண்டுமென்று ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி அவர்களையும், அவரது கட்சியைச் சார்ந்தவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த டாங்கு உற்பத்தித் தொழிற்சாலை போய் விட்டது என்று பத்திரிகையிலே வெளிவந்தவுடன் அதிலே அவர்களுக்கு ஒரு கொண்டாட்டம். "பார்த்தீர்களா, கோட்டை விட்டு விட்டார்கள்" என்று உடனே கொண்டாடினர். மறு நாளே மறுப்பு விட்டவுடன், டாங்கு உற்பத்தி தொழிற்சாலை வரப்போகிறது என்று சொன்னவுடன், கொண்டாட்டம் அடைந்து கொண்டிருந்தவர்களுக்கு ஒரு திண்டாட்டமான நிலையைத்தான் அது ஏற்படுத்தியது. ஆகவே, "மந்திரிகள் ஒன்றும் சாதித்து விடவில்லை, அவர்களால் என்ன சாதிக்க முடியும்?" என்று சொல்லும் மனப்பான்மையை எல்லாம் அடியோடு விட்டு விடுங்கள் என்றுதான் நான் ஸ்ரீ. ஏ. கோவிந்தசாமி அவர்களையும், அவரது கட்சியைச் சார்ந்தவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இதைப் போன்ற ஒரு செய்தி வந்தவுடன், அவர்களையும் அறியாமல் இந்த மனோபாவம் வெளிப்படுகிறது. அவர்களுடைய கொள்கையின், லட்சியத்தின் காரணமாகவே இந்த மனப்பான்மை அவர்களிடையே வெளிப்படுகிறது. அதற்குத் தான் நான் உங்களுக்கு, இந்த சட்ட சபையில் நுழைந்தவுடன், முதல் பேச்சிலேயே இந்த மனப்பான்மையை விட்டு விடுங்கள் என்று சொன்னேன். இப்போதும் அதையே தான் திருப்பிச் சொல்கிறேன். அந்த மனப்பான்மையை அடியோடு விட்டொழியுங்கள். ஆனால், அதே மனப்பான்மையைத்தான் நீங்கள் திருப்பித் திருப்பி நிரூபித்துக் கொண்டு வருகிறீர்கள். நீங்களும் திட்டங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. திட்டத்திலே இது வேண்டும், அது வேண்டுமென்று சொல்லுங்கள். இதைச் சேர்க்கவில்லை, அதைச் சேர்க்கவில்லை என்று சொல்லவேண்டாம். இன்னும் பொதுத் துறையிலே பல கனரகத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டுக்கு வர இருக்கின்றன. ஆனால் இன்னும் அவைகள் முடிவு செய்யப்படவில்லை. ஆனால் செய்வதற்கான வாய்ப்புக்கள் எல்லாம் இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். அந்த அடிப்படையிலேதான் இதைச் சொல்லுகிறேன். நமக்கு இப்போது கிடைத்துள்ளதிலே டாங்கு உற்பத்தித் தொழிற்சாலையைச் சேர்க்கவில்லை. நமக்கு முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களிலே கிடைத்துள்ள அளவையும், இப்போது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கிடைத்துள்ள அள

வையும் பார்க்கும்போது கணிசமான அளவுக்கு நாம் முன்னேறி இருக்கிறோம் என்பது பற்றி நாம் கட்டாயம் திருப்தி அடையத் தான் வேண்டும். சொல்லப் போனால், சற்று அதிகமாகவே, வேகமாகவே முன்னேறி இருக்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், நானும் இன்னும் அதிகமான உதவிகள் வேண்டுமென்று சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த உதவிகளை வாங்குவதற்கு நாம் நல்லமுறையிலே முயற்சி செய்ய வேண்டும்.

முக்கியமாகச் சொல்ல வேண்டியது, இந்த இரும்புத் தொழிற்சாலையைப் பற்றியது. ஏனென்று சொன்னால், ஒவ்வொருவரும் பேசும்போது எவ்வளவுதான் சொன்னாலும்கூட, இத்தொழிற்சாலை வருவதற்கு யாரோ குறுக்கே இருந்து கொண்டு, இந்த தொழிற்சாலை இங்கு வாராமல் நிறுத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த எண்ணம், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு வேண்டுமென்றோ, வேண்டாமென்றோ உறுதியாக இருந்து கொண்டு வருகிறது. அதனாலே இதைப்பற்றி எப்போதும் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம், வடநாட்டிலே இருந்து யாரோ நிறுத்தி வைத்துக்கொண்டு வருகிறார்களெனச் சொல்லப்படுகிறது. "இங்கே மட்டும் ஏன் பரீட்சை செய்யவேண்டும்? ரூர்கேலாவில் பரீட்சை செய்யப்பட்டதா? பிலாயில் பரீட்சை செய்யப்பட்டதா? ஜெம்ஷெட்பூரில் செய்யப்பட்டதா? இதற்கு மட்டும் ஏன் பரீட்சை? பரீட்சையே வேண்டாம், அவசியமில்லை" என்று சொல்கிறார்கள். இங்கிருக்கக்கூடிய இரும்புக் கனிக்கும், அங்கிருக்கக்கூடிய இரும்புக் கனிக்குமுள்ள வித்தியாசம் தெரிந்தால் இப்படிச் சொல்ல மாட்டார்கள். அங்குள்ள இரும்பானது இதுவரையிலும் சாதாரணமாக உலகிலுள்ள எல்லா இடங்களிலும் உபயோகிக்கப்படுவது எல்லோரும் அறிந்த உண்மை. அதற்குத் தகுந்தாற்போல் அருகிலேயே நல்ல பழுத்த நிலக்கரியும் இருக்கிறது. ஆகவே, அதற்குப் பரீட்சை தேவையில்லை. ஆனால், துரதிருஷ்டவசமாக நமக்கு கிடைக்கக்கூடிய இரும்புக் கனியோ 38 சத விகிதம் தான் சத்துள்ளதாக இருக்கிறது. தவிர, நமக்கு கிடைக்கக்கூடிய நிலக்கரியோ பழுக்காத பழுப்பு நிலக்கரியாகும். இந்த இரண்டையும் சேர்த்து எப்படி இரும்பு செய்வது என்பது தான் நம்முடைய பிரச்னையாகும். இதற்கிடையே தான் இந்த கூப்பாடும், குழப்பமும். இதற்கும், அதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இதைப் பரீட்சை செய்து பார்க்கவேண்டும். பரீட்சை செய்து பார்த்துத்தான் இரும்பு உருக்கு எடுக்க முடியுமென்று முடிவு சொல்லப்படுகிறது. இந்த முடிவை வடநாட்டிலே உள்ளவர்கள் சொல்லவில்லை. கிழக்கு ஜெர்மனி, வெஸ்ட் ஜெர்மனி, நார்வே மற்றும் அமெரிக்காவிலுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். விஞ்ஞான முறைப்படி பரீட்சை செய்து பார்த்து முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. இந்த பரீட்சையின் முடிவு இன்னும் தெரிவிக்கப்படவில்லை. காரணம், இதற்குரிய நிலக்கரியை நாம் இங்கிருந்து அனுப்ப வேண்டியிருந்தது. கொஞ்ச நிலக்கரியை வைத்துக்கொண்டு இந்த காரியத்தை செய்துவிட முடியாது. இப்போது அந்த அள

வுக்கான நிலக்கரி வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. வெற்றி பெற முடியுமென்ற நம்பிக்கையும் ஓரளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இதை வைத்துக் கொண்டு மட்டும் எந்திரங்களை நாம் அமைத்துவிட முடியாது. பெரிய அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. இரண்டாயிரம் டன் லிக்னைட் இதற்குத் தேவைப்பட்டது. இருநூற்று ஐம்பது அடி வரைக்கும் கீழே தோண்டி இப்போது எடுக்கப்பட்டு, வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதை உடனடியாகச் செய்ய முடியவில்லை. இப்போது அங்கு பரீட்சை நடந்து கொண்டிருக்கிறது. சமீபத்திலே பத்திரிகையிலே இதைப் பற்றி ஒரு செய்தி வெளிவந்தது. இதை அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். திருப்தி அளிக்கக்கூடிய அளவுக்கு நமக்கு மகிழ்ச்சி கொடுத்திருக்கிறது. இது சாத்தியமானதாக தோன்றுகிறது. இன்னும் இதர பரீட்சைகள் முடிந்து கூடியசீக்கிரத்திலே முடிவு சொல்லப்படும். கிழக்கு ஜெர்மனியிலிருந்து இன்னும் இதற்கான அறிக்கை வரவில்லை. அமெரிக்காவிலே இன்னொரு புதிய முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையிலேயும் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமென்று நான் சமீபத்திலே அமெரிக்கா சென்றிருந்தபோது, அந்த ஆராய்ச்சி நிலையத்திற்கு சென்றே சொல்லியிருக்கிறேன். இந்த ஆராய்ச்சி தொழிற்சாலை சிறிய பைலட் பிராஜக்ட் போல் நடந்துகொண்டு வருகிறது. அதற்கான புள்ளி விவரங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, இத்திட்டம் வெற்றி பெறுமென்பதே என்னுடைய கருத்து. ஆகவே, வேறு யாரோ தடையாக இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். ஒரு லட்சம் என்றால் இதற்கான திட்டத்தை உடனடியாக போட்டு விடலாம். இருபத்தைந்து கோடி ரூபாய் அளவுக்கு இதற்கு மூலதனம் போடவேண்டியிருக்கிறது. இன்னும் சில கோடிகள் அதிகமாக போடும்படியும் நேரிடலாம். இதற்கான செலவை திட்டக் கமிஷன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறது. ஆகவே யாருக்கும் இதிலே அவநம்பிக்கை இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆராய்ச்சிகள் வெற்றிகரமாக நிறைவேறினால் உடனே திட்டத்தை நிறைவேற்றி விடலாம். ஆனால் ஆராய்ச்சி வெற்றி பெறாமல் யாரும் மந்திர சக்தியாலே இரும்பை உற்பத்தி செய்து விட முடியாது. ஆனால் அதை விட்டுவிட்டு, மத்திய மந்திரி ஸ்ரீ ஸ்வரன் சிங்கை இதைப்பற்றிக் கேட்டபோது, இன்னும் இதுபற்றி ஆராய்ச்சி நடந்து கொண்டு வருகிறது என்று பதில் சொன்னதை வீணாக திரித்துப் பேசுவதில் என்ன பிரயோஜனம்? வேறு என்ன செய்ய முடியும். தேர்தல் விஞ்ஞாபனத்தை வைத்துக்கொண்டு செய்துவிட முடியுமா? தொழில்நுட்ப சம்பந்தமாக விஞ்ஞான அடிப்படையில் இதை ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே இதிலே யாரும் குறுக்கே நிற்பதாக நினைப்பதற்கே இடமில்லை. அப்படிப்பட்ட எண்ணம் இருக்குமானால், தயவுசெய்து விட்டுவிட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போதுள்ள அடிப்படையிலே பார்க்கும்போது இந்த இரும்புத் தொழிற்சாலையை இங்கே ஏற்படுத்த முடியும். அப்படி சேலம் இரும்பை வைத்துக்கொண்டு, தொழிற்சாலை ஆரம்பிக்க

0-0 p.m. முடியாது என்று சொன்னால், தொழிற்சாலை வருமா, வாராதா என்று சந்தேகப்பட வேண்டாம். வேறு இடத்திலே இரும்புக் கனியை கொண்டு வந்து, அதாவது பக்கத்திலே உள்ள பெல்லாரியிலே இருந்து இரும்புக்கனி கொண்டுவந்து தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். அதிலே 100-க்கு 80 பங்கு சத்திருக்கிறது. ஆனால் கூடியவரைக்கும் நம்முடைய இரும்புக் கனியை உபயோகிக்க வேண்டுமென்பதற்காகவே இத்தனை ஆராய்ச்சியும். இல்லை என்றால் ஆராய்ச்சி தேவையில்லை. இதுவும் தவிர, நம்முடைய இரும்புக் கனியை உபயோகப்படுத்தச் செய்தால், விலையும் குறைவாக இருக்கும். அப்படி நிபுணர்கள் சாத்தியமில்லை என்று சொன்னால், அதனால் தொழிற்சாலை ஏற்படாமல் தடைபடப் போவதில்லை. அதற்குப் பதிலாக வேறு இடத்திலே இருந்து கொண்டு வரப்பட்டு, எப்படியும் தொழிற்சாலை ஏற்படும் என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஜப்பானிலே, இங்கிருந்து இரும்பு கொண்டு போகப்பட்டு அங்கு தொழிற்சாலை ஏற்படுத்தப்படுகிறது. அதுமாதிரி அங்கு செய்யும்போது, நாம் பெல்லாரியிலே இருந்துகொண்டு வந்து இங்கு தொழிற்சாலையை ஏற்படுத்துவது என்பதை ஒரு பெரிய காரியமல்ல. நமக்கு லிக்னைட் கிடைக்கக்கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டு விட்டது. அதில் வெற்றி பெற்று விட்டோம். ஆகவே, எப்படியும் எங்கிருந்தாவது இரும்புக்கனி கொண்டுவரப்பட்டு தொழிற்சாலை அமைக்கப்படும் என்பதை உறுதிப்படுத்த விரும்புகிறேன். ஆனால் அம்மாதிரியான ஒரு நிலைமை வரக்கூடாது என்பதுதான் என் அபிப்பிராயம். சேலம் இரும்புக் கனியைக் கொண்டே, தொழிற்சாலை அமைக்கப்பட்டால் மிகவும் வரவேற்கத் தக்கதாக இருக்கும். ஆகவே, யாரும் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருக்கிறார்கள் என்று நினைக்கவே வேண்டாம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நினைப்பதுபோல் நாம் தொழிற்சாலை வளர்ச்சியில் முன்னேறவில்லை என்று எண்ணவேண்டாம். அம்மாதிரியான எண்ணத்தை தயவுசெய்து விட்டு விடுங்கள். இப்படி ஒன்றும் நடக்கவில்லை, நடக்கவில்லை என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருப்பதாலேயே ஒருக்கால் நடக்காமல் போய் விடலாம். எதிலும் நடக்கும் என்று நினைத்து, நீங்களும் எங்களுடன் ஒத்துழையுங்கள். இப்படி நடக்கும் என்று சொல்லக்கூடிய வாய்ச் சொல்லையாவது அருளுங்கள் எனறுதான் நான் உங்களை கேட்டுக் கொள்கிறேன். வேறு உதவி ஒன்றும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. அதையும் அருள மாட்டோம் என்று சொன்னால் என்ன செய்வது? இதுதான் வருத்தம் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே, வாய்ச் சொல்லையாவது அருளி, எங்களுடன் ஒத்துழையுங்கள் என்றுதான் நான் உங்களை தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன். இது நம்முடைய திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு பெருமளவில் உதவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயத்திற்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைப்பற்றி அதிகமாகப் பேசப்பட்டது. முக்கியமாக நீர்ப்பாசன வசதிக்காக நம்மிடம் இருக்கக்கூடிய ஆறுகளையும், தண்ணீரையும் பயன்படுத்தியாகிவிட்டது. காவேரித் திட்டத்தைப் பற்றி பேசப்

பட்டது. புதுக்கோட்டைக்கு ஒரு கால்வாய் வெட்டவேண்டும், இன்னும் இரண்டு அணைகள் கட்டவேண்டும் என்று தாராளமாக நம்முடைய கருத்துக்களை தெரிவிக்கிறோம். அதைப்பற்றி ஆட்சேபிப்பதற்கு இல்லை. காவேரி நதியானது நமக்கும், மைசூர் ராஜ்யத்திற்கும் பயன்படுகிறது. காவேரியின் தண்ணீரை பயன்படுத்திக்கொள்ளுவது பற்றி நம்மிடையே ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறோம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் தண்ணீரை உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஏதோ சமீபத்தில் நாம் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாக அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். நல்ல வேளையாக நான் போனதடவை இங்கு பேசிய பிற்பாடு 'ஒப்பந்தத்தை மீறவில்லை, ஏதோ தண்ணீரை உபயோகப்படுத்துவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன' என்று சொல்லக்கூடிய அந்த அளவுக்கு வந்திருக்கிறார்கள். வெள்ளம் வரும்பொழுது ஒப்பந்தத்தை அனுசரித்து வருவதில்லை. சில வருஷங்களில் நிறைய தண்ணீர் வந்துவிடுகிறது. இந்த வருஷம் வந்த வெள்ளம் இதற்கு முன்னாலே எப்பொழுது வந்தது என்றால், 1924, 1925-ல் இந்த அளவுக்கு வந்தது. 20, 25 வருஷத்திற்கு ஒரு முறை இவ்வளவு பெரிய வெள்ளம் வருகிறது. சிறிய பெரிய வெள்ளம் அடிக்கடி வந்துவிடுகிறது. அந்தக் காலத்தில் தண்ணீரை வீணாக்காமல் நாமும், மைசூரும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். அதை நாம் உபயோகப்படுத்துவது குறித்து மைசூர் தடை சொல்ல முடியாது என்று நான் கருதுகிறேன். அதே மாதிரிதான் மத்திய குழுவில் இருக்கக்கூடிய நீர்ப்பாசன நிபுணர்களும் கருதுகிறார்கள். அதை எப்படி எந்த அளவுக்கு உபயோகப்படுத்துவது என்பது பரிசீலனையில் இருக்கிறது. ஹொகயநகலில் கட்டுவதா அல்லது வேறு இடத்தில் அணை கட்டுவதா என்பதை என்ஜினியர்கள்தான் முடிவு செய்யவேண்டும். அப்படிப்பார்க்கும் பொழுது மைசூரின் உரிமைகள், பாத்யதைகள் பாதிக்கப்படாமல் இன்னொரு அணை கட்டலாம் என்கின்ற ஓரளவுக்கு தற்காலிகமாக ஒரு முடிவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதற்காக மைசூர் சண்டைக்கு வந்துவிடக்கூடாது. அணை கட்டுவதற்கு முன்னால் மைசூரையும் கேட்டுத்தான் கட்டுவோம் என்று உறுதி சொல்லிக்கொள்ளுகிறேன். அவர்களுடைய உரிமை எந்த விதத்திலும் பாதிக்கப்படாது என்ற ஒரு எண்ணம் இருக்கிறது. அதை இன்னும் நல்ல முறையில் பரிசீலனை செய்து பார்த்து, அம்மாதிரி அணை கட்டும்பொழுது நீர்தேக்க திட்டமாக மட்டுமல்லாமல் பெரிய அளவிலே மின்சார சக்தி உற்பத்தி செய்ய முடியும் என்கின்ற முடிவுக்கு நம்முடைய என்ஜினியர்கள் வந்திருக்கிறார்கள். அதுவும் 7 லட்சம் கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்ய முடியும் என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதிலே இன்னொரு கஷ்டம் என்னவென்றால், இன்னொரு அணை கட்டினால் தஞ்சாவூர்க்காரர்கள் 'ஓ நீர்ப்பாசன வசதி குறைந்துவிடும்' என்று சத்தம் போடுகிறார்கள். வெள்ளம் வரும்போது அதைத் தடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இன்னொரு அணை கட்டினால் நீர்ப்பாசன உரிமைகள் பாதிக்கப்பட்டுவிடும் என்று சத்தம் போடுகிறார்கள். மேலே மைசூரில் சத்தம் போடுகிறார்கள். கீழே தஞ்சையில் இருப்பவர்

[Sri C. Subramaniam] [11th November 1961]

கள். இந்த விதமாக சத்தம் போடுகிறார்கள். இதையெல்லாம் அனுசரித்துத்தான் நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டியதாக இருக்கிறது. (குறுக்கீடு.) கனம் அங்கத்தினர் சீனுவாசய்யர் அவர்கள் மட்டும் அல்ல. கனம் அங்கத்தினர் கருணாநிதி அவர்களும் தேர்தலுக்கு அந்தப் பக்கம் நின்றால் அப்படிச் சொல்லக்கூடும். வேறு பக்கம் நின்றால் சொல்லாமல் விட்டுவிடலாம். ஆகையினால் அது இப்பொழுது பரிசீலனையில் இருக்கிறது, அந்த அளவுக்கு மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்பதை நாம் பார்க்கிறோம்.

இப்பொழுது அணுசக்தி நிலையம் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். நமக்கு மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு வேறு வழி இல்லை என்று சொன்னால்தான் அணு சக்தி மூலம் மின்சார உற்பத்தி செய்யவேண்டும். வேறுவகையில் உற்பத்தி செய்ய முடியும் என்று சொன்னால், அதன் மூலம் உற்பத்தி செய்யவேண்டும். அணு சக்தி மூலம் மின்சார உற்பத்தி செய்வதைவிட, மற்ற வகையில் செய்தால்தான் விலை கணிசமான அளவுக்கு குறையும். நாம் மின்சாரத்தை வேறுவகையிலே உற்பத்தி செய்யமுடியாது என்று சொன்னால் அணு சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டியிருக்கும். நமக்கு இருக்கக்கூடிய நிலையிலே அணு சக்தி உலைக் கூடம் வந்தால்தான் மேலும் மேலும் போகப் போக, வேண்டிய அளவுக்கு மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்ற காரணத்தினால், அதற்கான அடிப்படையிலே ஆரம்பப் பணியை நாம் இப்பொழுது செய்துகொண்டு வருகிறோம். எப்பொழுது அவசியம் ஏற்படுகிறதோ அப்பொழுது அணு சக்தியைக் கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டும் என்ற முறையில் நாம் திட்டம் போட்டிருக்கிறோம். அது மட்டுமல்லாமல், மற்ற ராஜ்யங்களில் அவர்களுக்கு தேவைக்கு மிகுதியாக இருக்கக்கூடியதை இங்கு கொண்டுவந்து சேர்க்கவேண்டும் என்று நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். திட்டங்களை உருவாக்குகிறவர்களும் அதைப்பற்றி பேசுகிறார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதைக் காணோமே என்று அண்ணாத்துரை அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். வாஸ்தவம், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கோதாவரி-கிருஷ்ணா திட்டம் இல்லை. ஏன் என்று சொன்னால், கோதாவரி-கிருஷ்ணா திட்டம் இந்த ஐந்து வருஷங்களுக்குள் இங்கு வந்து சேரக்கூடிய திட்டமல்ல. கோதாவரியில் பெரிய அணை கட்டி, கோதாவரித் தண்ணீரை கிருஷ்ணாவுக்குக் கொண்டுவந்து, கிருஷ்ணா நதியிலிருந்து எந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் பாய்ந்து கொண்டிருந்ததோ, அந்தப் பகுதிகளுக்கு கோதாவரித் தண்ணீரை பயன்படுத்திக்கொண்டு, மிகுதியிருக்கிற கிருஷ்ணா நதி தண்ணீரை இங்கு கொண்டுவரவேண்டும். கோதாவரித் திட்டம் நிறைவேறிய பிற்பாடுதான் கிருஷ்ணா தண்ணீரை இங்கு கொண்டு வர முடியும். காஞ்சீவரம் வரையிலும் தான் வரும். செங்கல்பட்டு ஜில்லாவோடு நின்றுவிடும். வேண்டுமானால் தென்னாற்காடு ஜில்லாவில் ஒரு சில பகுதிக்கு வரலாம். செங்கல்பட்டு பூராவும் வந்தாலே பெரிய காரியம். தென்னாற்காடு ஜில்லாவுக்கு வரும் அளவுக்கு தண்ணீர் இல்லை. தண்ணீர் வரக்கூடிய மட்டம் இருக்கிறது, ஆனால்

11th November 1961] [Sri C. Subramaniam]

தண்ணீர் குறைவு. செங்கல்பட்டு ஜில்லாவில் இப்பொழுது ஓரளவு குளங்கள், ஏரிகள் இருக்கின்றன. அவைகளுக்கு போதாத தண்ணீரை அதன் மூலம் கொண்டு வந்து கொடுக்க முடியும். அதனால்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது இடம் பெறவில்லை. கோதாவரித் திட்டம் போட்டபிற்பாடுதான் அதற்கு ஏற்பாடு செய்யவேண்டியிருக்கிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் மிகுதியாக இருக்கக் கூடிய தண்ணீரை நம் பக்கம் திருப்பவேண்டும். கேரளா உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும் தண்ணீரை இங்கே திருப்ப வேண்டுமென்று சொல்லவில்லை. வீணாகப் போகக்கூடிய தண்ணீரை நம் பக்கம் திருப்பவேண்டும் என்ற முறையில் தான் பேசிக் கொண்டிருக்கிறோம். மற்ற ராஜ்யங்களோடு பேசி முடிவு எடுக்கக் கூடிய விஷயத்திலே ஆத்திரப்பட்டு பிரயோசனம் இல்லை. சவுஜன்யமாகத் தான் அவர்களுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லி அங்கு வீணாகப் போகிற தண்ணீரை இங்கு திருப்பிக் கொண்டுவர வேண்டும். அந்த முறையில்தான் அரசியல் அமைப்பு இருக்கிறது. இந்தமாதிரி விஷயத்திலே ஒரு ராஜ்யத்தை இன்னொரு ராஜ்யம் நிர்ப்பந்தம் செய்ய முடியாது, மத்திய அரசாங்கமும் நிர்ப்பந்தம் செய்ய முடியாது. அந்த அளவுக்கு உரிமை தனிப்பட்ட ராஜ்யங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், கொஞ்சம் பொறுத்துத்தான் அவர்களிடத்திலே நியாயத்தை எடுத்துச் சொல்லி, அவர்களுடைய நன்மை எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை என்று உறுதிப்படுத்தித்தான் நம் பக்கம் தண்ணீரை திருப்ப வேண்டும்.

அடுத்தபடியாக சிறிய நீர்ப்பாசன திட்டங்களை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு நாம் அதற்கு ஓரளவுக்கு நிதி ஒதுக்கியிருக்கிறோம். இது சம்பந்தமாக இந்த உறுதியை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதைப் பொறுத்தவரையிலும், நிதித் தட்டு என்பது கிடையாது, அதை ஒரு எல்லையாக வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. எந்த அளவுக்கு வேண்டுமானாலும் சிறிய நீர்ப்பாசன திட்டங்களை எடுத்துச் செய்வதற்கு இடம் இருக்கிறது. இப்பொழுது 8 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். 5 வருஷங்களுக்கு ஒதுக்கியிருக்கக்கூடிய நிதியை 2 வருஷம், 3 வருஷங்களுக்குள் வேண்டுமானால் உபயோகப்படுத்தி விடலாம். அதற்கு மேலே வேண்டுமானால் நிதி ஒதுக்கப்படும் என்கின்ற உறுதியை இன்றைக்கு மத்திய சர்க்கார் நமக்கு கொடுத்திருக்கிறார்கள். ஆகையினாலே சிறிய நீர்ப்பாசன திட்டங்கள் சம்பந்தப்பட்டவரையில் நாம் நிதி அளவைப் பார்க்கவேண்டியதில்லை. சரியான திட்டங்களா என்பதைத்தான் பார்க்க வேண்டியது அவசியம். ஸ்ரீ. வி. கே. ராமசுவாமி முதலியார் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். குளங்களை சரிப்படுத்துவது என்றால், 3 மாதம், 4 மாதங்களுக்குத்தான் வேலை செய்யமுடிகிறது. மற்ற சமயங்களில் தண்ணீர் வந்துவிடுகிறது. நாம் நினைத்த அளவுக்கு வேகமாக திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. இருப்பினும், இயந்திரங்களை உபயோகப்படுத்தி குளம், குட்டைகளை

[Sri C. Subramaniam] [11th November 1961

சீர் செய்து, அதிலே தண்ணீரை பெருக்கி, அதன் மூலம் வசதியைப் பெருக்குவதற்கு நாம் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். எந்த அளவுக்கு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு, நமக்கு இருக்கக் கூடிய திறமை அளவுக்கு நிதி ஒதுக்க முடியும் என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்ளுகிறேன். அதிலே நிதிக் கட்டுப்பாடு என்பதே இருக்காது. அதற்காக எந்தத் திட்டத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்துவிடக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் பேசுகிறபொழுது மலையிலே தண்ணீர் வீணாகப் போகிறது என்று சொன்னார்கள். மழை பெய்து வெள்ளம் வரும்பொழுது பார்ப்பதற்கு தண்ணீர் வீணாகப் போவது போல்தான் தோன்றும். தண்ணீர் வீணாகப் போகிறதா, இல்லையா என்று எங்கு கணக்கிடவேண்டும் என்றால், சமுத்திரத்தில் எவ்வளவு வீணாகப் போய்விழுகிறது என்பதைக் கொண்டுதான் ஓரளவுக்கு கணக்கு எடுக்க முடியும். அநேக நீர் ஓடைகள் பெரிய ஆறுகளில் போய் சேர்ந்து, இப்பொழுதும் அந்தத் தண்ணீர் பயன்பட்டுக்கொண்டிருக்கிறது. இதை பரிசீலனை செய்யாமல் அந்த இடத்தில் கோடிக்கணக்கில், லட்சக்கணக்கில் செலவழித்து ஒரு அணையைக் கட்டி, இப்பொழுது இருக்கக்கூடிய நீர்ப்பாசன வசதியை குறைத்து விடக்கூடாது. வீணாக பணத்தையும் செலவழித்து இன்னொரு பக்கத்தில் நாசத்தை ஏற்படுத்தக்கூடாது என்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மேலாகப் பார்க்கும்பொழுது 10,000 ஏகரா, 20,000 ஏகரா பாசன வசதி அடையும் என்று வெகு சுலபமாகச் சொல்லிவிடலாம். பிறகு நன்றாக பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது 2,000 ஏகராவுக்குக் கூட வருவதில்லை; 5 வருஷங்களில் 2 வருஷங்களில்தான் பயன் இருக்கும். ஆகவே, எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்துத்தான் ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் நினைக்கிற பிரகாரம் எல்லா திட்டங்களையும் எடுத்துக்கொண்டுவிட முடியாது. வெள்ளத் தண்ணீர் எந்த அளவுக்கு வந்து சேருகிறது என்பதையெல்லாம் கணக்கெடுத்து, அதிலே என்ஜினியர்கள் பரிசீலனை செய்து சொல்லுவதைத்தான் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. மற்ற பிரதேசங்களுக்கு அந்த நீர் இப்பொழுது பயன்படுமேயானால், அந்த நீரை இன்னொரு பக்கத்திற்கு எடுத்துப் போவது என்பது முடியாத காரியம். பணத்தை செலவழித்து, ஒரு பக்கத்தில் நாசத்தை ஏற்படுத்தி, இன்னொரு பக்கத்தில் வளத்தை ஏற்படுத்துவது என்பது முடியாது. ஆகையால், இதையெல்லாம் மனதில் கொண்டுதான் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறோம்.

இன்றைக்கு வளர்ச்சிக்கெல்லாம் அடிப்படையாக இருக்கக் கூடியது கல்வி வளர்ச்சிதான், அறிவு வளர்ச்சிதான். அந்த
1-00 அடிப்படையில்தான் இன்றைக்கு முன்னேற்றம் காண முடியும்.
p.m. பெரிய அளவிலே முன்னேறியிருக்கிற நாடுகள் கூட அந்த முடிவுக்கு வந்திருக்கின்றன. நாம் இன்றைக்குக் கல்விக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

11th November 1961] [Sri C. Subramaniam]

நாட்டிலுள்ள எல்லோரும் கல்வி கற்றாக வேண்டும். அதே நேரத்தில் கல்வியின் தரமும் உயர வேண்டும். வெறுமனே 27,000 பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தி விடுவதால் மட்டும் என்ன பிரயோஜனம் என்று கேட்டார்கள். படித்த அளவுக்குப் பிரயோஜனம் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளத்தான வேண்டும். முன்னேற்றம் அடைந்திருக்கும் எந்த நாட்டை எடுத்துப் பார்த்தாலும், முதலில் கல்வி பரவலாகத்தான் இருக்கிறது. பின்னால் போகப் போக தரத்தை உயர்த்திப் படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அப்படித்தான் நடவடிக்கைகள் எடுக்க முடியும். இன்றைக்கு ரஷ்யாவை எடுத்துக் கொண்டாலும் சரி, ஜப்பானை எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது சைனாவை எடுத்துக் கொண்டாலும் சரி, அடித்தளத்தில் கல்வி பரவலாகத்தான் இருக்கிறது. கல்வி பரவலாக இருக்க வேண்டும் என்று சொல்லும்போது, எந்த அடிப்படையில் உயர் நிலைப் பள்ளிகளிலே, கல்லூரிகளிலே, தொழில் பள்ளிகளிலே, ஆராய்ச்சிக் கூடங்களிலே, தரம் குறையாமல் இருக்க வேண்டும் என்று பார்த்தாக வேண்டும். கீழே பரவலாக இருக்க வேண்டும்; மேலே போகப்போக மேலும் மேலும் தரம் உயரவேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த அடிப்படையில்தான் மூன்றாவது திட்டத்தில் கல்வி திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. பரவலாக ஐந்தாவது வரையில் இருக்க வேண்டும் என்றும், அதற்கும் மேலே, அது உயர்நிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, தொழில் பள்ளியாக இருந்தாலும் சரி, கல்லூரியாக இருந்தாலும் சரி, ஆராய்ச்சி நிலயமாக இருந்தாலும் சரி, தரம் அதிகப்பட்டதாக இருக்க வேண்டும். கல்வி திட்டமும் சரியான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் பள்ளிக்கூடங்களைக் காட்டி ஏதோ ஏமாற்று வித்தையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன அங்கத்தினரை இப்பொழுது இங்கே காணோம். அதேபோலத்தான் விவசாயத்திற்கு 27 கோடி என்று இருக்கிறதே, விளைச்சல் அதிகமாக இருக்கும் என்பது ஏதோ சரியா என்று கேட்டார்கள். அதற்காகத்தான் இந்த திட்டத்தை துருவி துருவி படிக்க வேண்டும் என்று சொன்னேன். துருவித் துருவி என்றால் பத்து தடவை படிப்பது என்று அர்த்தமல்ல. கண்காணிப்போடு படிக்க வேண்டுமென்ற கருத்தில் சொன்னேன். ஒரு இனத்தில் குறைவு என்றால், குறைச்சலுக்கு காரணம் என்ன என்று மூலத்தை எடுத்துப் பார்க்க வேண்டும். துருவித் துருவி என்றால் திருப்பித் திருப்பி என்று பொருள் இல்லை. எந்தெந்த முறையிலே உற்பத்தியைப் பெருக்க முடியுமோ, உடனடியாகப் பெருக்க முடியுமோ அந்த திட்டங்களில் குறைக்கப் படவில்லை என்பதைப் பார்க்க வேண்டும். நீண்டகால ஆராய்ச்சித் திட்டங்களாக இருந்தால், 10 வருஷகாலத்தில், அல்லது 5 வருஷகாலத்தில் பலன் அளிக்கக் கூடியதாக இருந்தால், அம்மாதிரித் திட்டங்களில் ஓரளவுக்குக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், உடனடியாக பலன் தரும் திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரை போதிய அளவுக்குப் பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது, அடுத்த ஐந்தாண்டில் நடைபெறக்கூடிய வாய்ப்பு உள்ளதாக

[Sri C. Subramaniam] [11th November 1961]

இருக்கிறது என்பது விளங்கும். முக்கியமாக உற்பத்தி பெருகக் கூடிய திட்டங்களுக்கு, எரு உற்பத்தி திட்டங்களுக்கு சிறிதளவு கூடக் குறைக்கப் படவில்லை. அதே மாதிரி நீர்பாசன திட்டங்கள், சிறு நீர்பாசனத் திட்டங்கள் இவைகளுக்கு அதிகமாகத்தான் ஒதுக்கி இருக்கிறோம், கம்மிப் படுத்த வில்லை.

இன்னொரு கணக்கும் சொன்னார்கள், ஐந்து லட்சம் டன் என்று சொல்லி இரண்டு பக்கமும், ஓவர்லாப்பிங்காக இருப்பதைக் கழிக்கவில்லை; ஐந்து லட்சத்திற்குப் பதிலாக 1.7 லட்சம் மட்டும் குறைத்தது தவறு, ஆகையினால், போதுமான நிதி ஒதுக்காமல், மக்களை மாயாஜாலப் புள்ளிவிவரங்களால் மயக்குகிறார்கள் என்று சொன்னார்கள். அது இதைச் சரியாகப் புரிந்துக் கொள்ளாததால் ஏற்பட்ட எண்ணம். இந்த திட்டத்தை நாம் மட்டும் பரிசிலனை செய்யவில்லை; உலக நிபுணர்கள் துருவித் துருவி பரிசீலனை செய்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நாம் மற்றவர்களை ஏமாற்ற முடியாது. நாம் கணக்குப் போடும்போது, நம் முன்னைய அனுபவத்தையும் வைத்துப் போடுகிறோம். மற்றவர்கள் அனுபவத்தையும் வைத்துக்கொண்டு போடுகிறோம். அந்த முறையில் இது மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது என்று தெரிவிக்கிறேன்.

SRI K. ANBAZHAGAN : கனம் அமைச்சர் புள்ளிவிவரத்தை தன் கருத்துக்களை ஒட்டி விவரிக்கிறார்கள். ஒரு கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஐம்பது ஏக்கர் என்று இருந்ததை இன்றைக்கு 100 ஏக்கர் என்று போட்டு......

THE HON. SRI C. SUBRAMANIAM : அதற்கு வருகிறேன். சொல்லுவார்கள் என்று தெரியும். அந்த அளவாவது பார்த்திருக்கிறார்களே, நல்லது. 50 ஏக்கர் இருந்ததை 100 ஏக்கர் என்று கிணறுகள் சம்பந்தப் பட்டவரை போட்டிருக்கிறோம். ஏற்கனவே கிணறுகள் வெட்டிய அனுபவம் நமக்கு இருக்கிறது. ஒரு கிணறு வெட்டினால் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவாகிறது. இன்னும் ஒரு 10 ஆயிரம் அதிகமாகச் செலவழித்து அந்தக் கிணற்றையே ஆழமாகவும், அகலமாகவும் செய்தால், இன்னுமொரு 50 ஏக்கருக்குப் பாசனவசதி கொடுக்கலாம் என்று அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால், சிறு சிறு கிணறுகளுக்குப் பதிலாக, இன்னும் கொஞ்சம் அதிகச் செலவில், அதிக ஆழமும் அகலமும் உள்ள கிணறுகளை வெட்டுவதனால், 50 ஏக்கருக்கு பதிலாக, 100 ஏக்கர்களுக்கு வசதி செய்ய முடியும் என்று செய்திருக்கிறோம். இதுவும் நிபுணர்கள் சொன்னதின் பேரில், சின்னக் கிணறுகளுக்குப் பதிலாகப் பெரிய கிணறுகள் என்று செய்கிறோம். மேலும் இன்னொன்று. முன்பெல்லாம் கிணறு வெட்டுவதென்றால் அதிகச் செலவு ஆகிவந்தது. இன்றைக்கு அன்னிய நாடுகளிலிருந்து பவர் டிரில் முதலிய இயந்திரங்களைக் கொண்டு குறைந்த செலவில் போட முடிகிறது. அப்படித்தான் தென் ஆற்காட்டில் செய்தோம். அது அங்கிருப்பவர்களுக்குத் தெரியும். அவ்வளவு அதிகச் செலவு இன்றைக்குச் செய்ய வேண்டியதில்லை என்று

11th November 1961] [Sri C. Subramaniam]

தெரிந்துக் கொண்டோம். இன்னும் சில இடங்களில் 100 என்பதற்குப்பதிலாக, 125, 150 ஏக்கராக்கள் கூட வசதிபெற முடியும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அந்த முறையில் கணக்குகள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் உற்பத்திக் குறைவும் ஏற்படாது. ஆகவே அந்த முறையில் கிணறுகள் நம் அனுபவத்தின் பேரில், தென் ஆற்காடு ஜில்லாவில் வெட்டப்படுகின்றன என்பது கனம் கோவிந்தச்சாமிக்குத் தெரியும். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைவார்கள் என்று நம்புகிறேன். இதையே பரீட்சார்த்தமாகச் செய்யவும் திட்டத்தில் இடம் கொடுத்திருக்கிறது.

இதிலே நமக்குத் திட்ட அளவில் குறைந்து விட்டது என்று ஒரு கணக்குச் சொன்னார்கள். மாநில ரீதியாக ஜனத்தொகை அளவில் பார்த்தால், தெரியும். அந்தக் கணக்கைக் காண்பிக்க முடியும். அதைப் பார்த்தால் மற்ற ராஜ்யங்களுக்கு குறைவாகத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் விளங்கும். இன்றைக்கு உத்தரபிரதேசத்தை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கு 497 கோடி ரூபாய் அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஜனத்தொகை அளவில் கணக்குப் பார்த்தால், அவர்களுக்கு 621 கோடி கொடுத்திருக்க வேண்டும். அது ஜனத்தொகை விதாசாரப்படி. அப்படிக் கொடுக்கப்படவில்லை. அதேபோலத்தான், பீஹார் மாகாணத்திற்கு 337 கோடி கொடுக்கப் பட்டிருக்கிறது; ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால், 395 கோடி கொடுக்க வேண்டும். மேற்கு வங்காளத்தை எடுத்துக் கொண்டால், கொடுத்திருப்பது 250 கோடி, ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்க வேண்டியது 298 கோடி. அந்த முறையில் நாம் பார்க்கும் போது, இங்கே தெற்கே உள்ள ராஜ்யங்களுக்கு ஓரளவு அதிகமாகவே கொடுத்திருக்கிறார்கள். கேரளாவிற்கும், மைசூருக்கும், நமக்கும் ஜனத்தொகை அளவில் இல்லாமல், அதிகமாகவேதான் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். உத்தரப் பிரதேசம் எவ்வளவு நிதி திரட்ட வேண்டும், நாம் எவ்வளவு திரட்ட வேண்டும் என்பதிலும் வித்தியாசம் என்று சொன்னார்கள். அவர்கள் 147 கோடி நிதி திரட்ட வேண்டும்; அவர்களுக்கு 497 கோடியளவில் தொகை அளிக்கப் பட்டிருக்கிறது, திட்டங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. நாம் 100 கோடி நிதி திரட்ட வேண்டும். அதற்கு நமக்கு 291 கோடி அளவுக்குத்தான் திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்பட்டது. மத்திய சர்க்கார் உதவி கொடுப்பதில் இரண்டு விதம் உண்டு. ஒன்று மான்யமாகவே (கிராண்ட்) கொடுத்துவிடுவது. இன்னொன்று கடனுதவி. இப்படி இரண்டு விதமான உதவிகள் இருக்கின்றன. ஆராய்ச்சித் திட்டங்களுக்கும் முன்னோடித் திட்டங்களுக்கும் மான்யமாக (கிராண்ட்) வழங்கப்படுகிறது. எந்த அளவுக்கு அந்த மான்யத்தைக் கொடுக்க வேண்டுமென்பது பற்றி இப்பொழுது நிதிக் கமிஷன் (பைனான்ஸ் கமிஷன்) வந்து பரிசீலனை செய்து, ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் எந்த அளவு திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று அவர்கள்

[Sri C. Subramaniam] [11th November 1961

முடிவு சொல்வதற்கு இருக்கிறார்கள். திட்டத்திலே ஒரு வரையறை செய்யப்படவில்லை. நிதிக் கமிஷன் தான் வரையறுத்து பின்னால் சொல்ல இருக்கிறது.

ஆனால், கடன் வாங்குவது என்பது இரண்டு விதமாக இருக்கிறது. ஒன்று—நாமாகக் கடன் எழுப்பிக் கொள்ளலாம். இரண்டாவது—மத்திய அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கலாம். நம்மைப் பொறுத்தவரையில், முதல் திட்டத்திலும் இரண்டாவது திட்டத்திலும் அதிகமாக மத்திய அரசாங்கத்திலிருந்து கடனைப் பெறுவதற்குப் பதிலாக நாமாகவே பொதுமக்களிடத்திலிருந்து கடன் எழுப்புகிற முறையை மற்ற ராஜ்யங்களைவிட நாம் ஓரளவு அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டு வந்திருக்கிறோம். 101 கோடி என்று சொல்லும்போது, 191 கோடி மற்றவர்களுக்கு அதிகமான உதவி என்று சொல்லும்போது கடன் உதவியையும் தான் வைத்துச் சொல்கிறோம். யாரிடம் கடன் வாங்கினாலும் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கும்போது கால் சதவிகிதம் அதிகமாக வட்டி கொடுக்க வேண்டும். பொது மக்களிடமிருந்து வாங்கினாலும் அதற்கும் வட்டி கொடுக்கவேண்டும். அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடன் வாங்கும் போது வட்டி கொடுத்து ஆகவேண்டும் என்பதுதான் திட்டத்தின் சித்தாந்தமாக அமைந்திருக்கிறது. நாமாகக் கடன் எழுப்பிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் பேரில் நாம் 101 கோடி எழுப்ப உத்தேசித்துள்ளோம். இதைப் பெறுவதற்குப் பதிலாக பாரபட்சம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. என்னைப் பொறுத்த வரையில், எந்த அளவுக்கு இன்னும் அதிகமாகக் கடன் திரட்ட முடியுமோ அதை நாமாக எழுப்பி சக்தியைப் பெருக்கிக் கொள்வதுதான் நல்லது என்பது என்னுடைய கருத்து. அந்த அடிப்படையில்தான் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நிதி வசதிகளைப் பெருக்கிக்கொண்டு வந்திருக்கிறோம். இம்மாதிரி கொள்கையைத்தான் எனக்குப் பின்னால் வருகிறவர்களும் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறேன். இதிலே நமக்குக் குறைந்துவிட்டது என்று சொல்வதற்கு இடமில்லை.

முக்கியமாக இருக்கக் கூடியவைகளுக்கெல்லாம் என்னால் இயன்ற அளவு பதில் சொல்லியிருக்கிறேன். மற்றவை சிறிய விஷயங்கள், முக்கியமானவை அல்ல என்று நான் சொல்ல முன் வரவில்லை. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒரே சமயத்தில் பதில் சொல்வது முடியாத காரியம். பல சமயங்களில் இதைப் பற்றி விவாதித்திருக்கிறோம். அதிலும் முக்கியமாக தேர்தல் நெருங்குகிற காலத்திலே ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் தங்களுடைய தொகுதிகளில் ஏற்பட வேண்டிய வேலையைப்பற்றி அக்கறை எடுத்துக் கொள்வது இயற்கை. அதற்கு முன்னாலேயே அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். தேர்தல் காலத்தில்தான் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது அல்ல. இப்பொழுதாவது அக்கறை எடுத்துக்கொள்கிறார்களே ஒருசிலர் என்

11th November 1961] [Sri C. Subramaniam]

பதில் எனக்குச் சந்தோஷம். அந்த அடிப்படையில் அவர்களுக்கு இருக்கும் அபிவிருத்தித் திட்டங்களைப்பற்றி, அங்கு நடைபெற வேண்டிய வேலைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருப்பது பொருத்தம் தான். இருந்தாலும் இவைகளைப் பட்ஜெட் விவாதத்தின்போது சொல்வது இன்னும் கொஞ்சம் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கூடிய சீக்கிரத்தில் பட்ஜெட்டும் வருவதற்கு இருக்கிறது. பட்ஜெட்டிலே சொல்ல வேண்டியவற்றைச் சொல்வார்களானால் அதையும் கவனித்துப் பார்க்கலாம். வருகிற பட்ஜெட் இடைக்கால பட்ஜெட்டாகத்தான் இருக்கும். பின்னால் வருகிற பிரதிநிதிகள் இதை நல்ல முறையிலே ஏற்று இன்னும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்கோ திறமையாக நடத்துவதற்கோ முயற்சி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பூரணமாக இருக்கிறது. அந்த நம்பிக்கைக்கு முக்கியமான காரணம் தமிழ் மக்களுடைய ஆற்றல், தமிழ் மக்களுடைய அறிவு, தமிழ் மக்களுடைய பண்பு இவை தான் நம்முடைய முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கக் கூடியவை. அந்த அறிவும் பண்பும் ஆற்றலும் இருக்கிற வரையில்—நான் இந்த உறுதியை அவர்களுக்குச் சொல்கிறேன்—யாரும் நம்மை வஞ்சிக்க முடியாது, நாம் வஞ்சிக்கப்பட மாட்டோம், நாம் ஏமாளிகள் அல்ல என்கிற உறுதியை அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன், அந்த அடிப்படையிலே இந்த அறிவு வளருவதற்கு, ஆற்றல் வளருவதற்கு, பண்பு வளருவதற்கு நாம் உதவி செய்வதன் மூலமாகத்தான் நல்லதொரு எதிர்காலத்தை நாம் அமைத்துக்கொள்ள முடியும் என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். அதிலே நாம் அதிகக் கவனம் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். கிளர்ச்சிகள் அடிப்படையிலே முன்னேற முடியாது. அறிவைப் பயன்படுத்தி, உழைப்பு அடிப்படையில் தான் எந்த நாடும் எந்த சமுதாயமும் எந்தப் பகுதியும் முன்னேற முடியும். அந்த அறிவை வளர்ப்பதற்கு, அந்த உழைப்புக்கு மதிப்பு கொடுப்பதற்கு நாம் முன்வரவேண்டும். அப்பேர்ப்பட்ட மதிப்பு ஏற்படுவது அவசியம். புதிய சமுதாயத்திலே இன்னும் பல வசதிகள் வரவில்லை என்று சொன்னார்கள். நான் ஒத்துக்கொள்கிறேன் இன்னும் அநேக வசதிகள் வந்து சேரவில்லை என்பதை. ஆனால் வசதி பெருகவில்லை என்றால், அதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. உணவு உற்பத்தி பெருகியும் அது யாருக்குப் போய்விட்டது என்ற கேள்வியைக் கேட்டார்கள். நானும் அதே கேள்வியை அவர்களிடம் கேட்கிறேன். யாருக்குப் போய்ச் சேர்ந்திருக்கும்? இதுவரை அரை வயிற்றுக்குச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்களே அவர்களுக்குத்தான் இந்த அதிக உற்பத்தியெல்லாம் போய்ச் சேர்ந்திருக்கிறது. இரு நேரமும் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கே இந்த உணவுப் பெருக்கம் போய்ச் சேர்ந்திருக்க முடியாது. அப்படியென்றால், உற்பத்தியானதெல்லாம் தேங்கிப் போயிருக்கும் அமெரிக்காவைப் போல. ஆகவே, உணவு உற்பத்தி அதிகமானது எங்கு, யாருடைய நன்மைக்காகப் போயிற்று என்றால், பட்டினி கிடந்தவர்களுக்கும், அரை வயிறு சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கும்தான் போய்ச்

[Sri C. Subramaniam] [11th November 1961

சேர்ந்திருக்கிறது. இந்த அளவு போதாது என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். வசதி பெருகவேண்டும். ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் தீர்ந்துவிட்டதாகச் சொல்ல முடியாது. ரஷ்யாவிலே கூட இன்னும் பெரிய ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. அந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதற்காகத்தான் எல்லா சமுதாயமும் இன்றைக்குப் பாடுபட்டுக்கொண்டு வருகிறது. அப்பேர்ப்பட்ட ஒரு ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை ஏற்படுத்துவதற்காக நாமெல்லோரும் கூடி முயற்சி செய்யவேண்டும். அதிலே குழப்பங்கள் தேவையில்லை, கலவரங்கள் தேவையில்லை, கிளர்ச்சிகள் தேவையில்லை என்ற கருத்தை வலியுறுத்திக்கொண்டு அப்பேர்ப்பட்ட ஒத்துழைப்பு, ஒற்றுமைச் சக்தி தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு வளருகிறதோ அந்த அளவுக்கு திட்டமும் வளர முடியும். திட்ட வளர்ச்சியும் ஏற்பட முடியும், மக்களுடைய வாழ்க்கைத் தரமும் வளரமுடியும். ஆகவே, எல்லோரும் அதற்கேற்ற முறையில் உழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

கடைசியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். பல திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திருத்தங்களைப் பார்த்ததற்குப் பிற்பாடு நான் கீழ்கண்ட திருத்தத்தைப் பிரேரேபிக்கலாம் என்று நினைக்கின்றேன். நான் கீழ்க்கண்ட திருத்தத்தைப் பிரேரேபிக்கின்றேன் :

" *Add* at the end the following :—

'and while on such consideration, this House gives its general approval and acceptance of the programmes embodied in the Third Five-Year Plan for the Madras State, this House also recommends that the Government should give special importance to the following schemes and projects :—

(1) Inter-State Irrigation Schemes for the utilization of surplus waters of the rivers flowing in the adjoining States;

(2) Steel Plant utilising Salem ore and Neyveli lignite;

(3) Establishment of a Nuclear Power Station;

(4) Sethusamudram Project and the development of Tuticorin as a major Port;

(5) Extension of Railway lines in this State; and

(6) Exploration of oil and establishment of an oil refinery in this State; ' "

இந்தத் திருத்தத்தைச் சபை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

The amendment of Sri S. M. Annamalai was put and lost.

The amendment of Sri K. Anbazhagan was by leave withdrawn.

11th November 1961]

The amendment of Sri N. K. Palanisami was put and lost.

The amendment of Sri V. K. Ramaswamy Mudaliyar was by leave withdrawn.

The amendment of Sri K. Sattanatha Karayalar was by leave withdrawn.

The amendment of Sri R. Krishnasami Naidu was by leave withdrawn.

DEPUTY SPEAKER : I will now put the amendment moved by the Hon. Leader of the House.

The question is—

Add at the end the following :—

" and while on such consideration, this House gives its general approval and acceptance of the programmes embodied in the Third Five-Year Plan for the Madras State, this House also recommend that the Government should give special importance to the following schemes and projects :—

(1) Inter-State Irrigation Schemes for the utilization of surplus waters of the rivers flowing in the adjoining States;

(2) Steel Plant utilising Salem ore and Neyveli lignite:

(3) Establishment of a Nuclear Power Station;

(4) Sethusamudram Project and the development of Tuticorin as a major Port;

(5) Extension of Railway lines in this State; and

(6) Exploration of oil and establishment of an Oil Refinery in this State.

The amendment was put and carried.

DEPUTY SPEAKER : I will now put the original motion as amended, to the vote of the House.

The question is—

" That, the Third Five-Year Plan for the State of Madras be taken into consideration
and while on such consideration, this House gives its general approval and acceptance of the programme embodied in the Third Five-Year Plan for the Madras State, this House also recommends that the Government should give special importance to the following schemes and projects :—

(1) Inter-State Irrigation Schemes for the utilization of surplus waters of the rivers flowing in the adjoining States;

(2) Steel Plant utilising Salem ore and Neyveli lignite;

(3) Establishment of a Nuclear Power Station:

(4) Sethusamudram Project and the development of Tuticorin as a major port;

(5) Extension of Railway lines in this State; and

Serial number and name of works. (1)	Stage. (2)
GOVERNMENT WORKS—*cont.*	
Nagapattinam Division—	
16 Construction of a bridge across Vettar at M. 21/8 of Mayuram-Muthupet road.	Work in progress.
Thanjavur Division—	
17 Improving the bridge at M. 33/5 to 33/7 of Kumbakonam - Mannargudi-Adirampattinam road.	Investigation completed. Technical sanction to be accorded.
18 Constructing a submersible bridge at M. 20/2 of Pattukottai-Arantangi road (via) Nagaram.	Work completed.
South Arcot Division—	
19 Constructing a bridge at M. 6/3 of Sankarapuram-Mungilthuraipatti road.	Work transferred from District Board. Contract to be settled for the balance work left by the District Board.
Chingleput Division—	
20 Constructing a causeway across Killingar river at M. 9/0-9/2 of Uthiramerur-Acharapakkam road.	Work in progress.
21 Constructing a causeway at M. 37/2-4 of Tirumushi-Satyavedu road.	Work completed.
District Board Works—	
22 Constructing a bridge across Araniar at M. 8/4 of Minjur-Kattur-Tripalavanam road.	Work in progress.
23 Blacktopping Nelvoy - Tirukalikundram road M. 0/0-20/0	Work completed.
24 Constructing of a high level causeway across Kiliyar river Thatchur on Cheyyar-Padalam road.	Do.
South Arcot Division—	
25 Constructing a bridge across Pambai channel at M. 35/2-3 of Villupuram-Mambalapattu road near Mambalapattu Railway Station.	Do.
26 Constructing a causeway across Gadilam river in Narimedu-Pallipattu road.	Do.
Thanjavur Division—	
27 Contructing a bridge across Vembar at Kumbanandangudi village limit.	Work in progress.
28 Constructing bridges on the four rivers in Papanasam-Kabistalam road.	Work nearing completion.
29 Constructing a bridge across Cauvery river at M. 1/2 of Ayyampet-Ganapathi Agraharam road.	Work completed.
30 Constructing causeway across Maharajasamudram and Agniar rivers at M. 1/7-8 and 4/1-2, respectively of Pattukottai-Sethubavachatram road.	Work in progress.
Ramanathapuram Special Division—	
31 Constructing a submersible bridge across river Vaigai between Pannaikulam and Alangulam with approach road on either side to connect the main road.	Work completed.
32 Improvements to the road from Ramanathapuram-Mandapam road N.H. 49 to District limit (via) Uthirakosamangai, Sikkal, Sayalgudi and Sevalpatti including construction of bridges, culverts and causeways.	Improvement work completed. Cross drainage works in progress.

Serial number and name of works. (1)	Stage. (2)
GOVERNMENT WORKS—*cont.*	
Ramanathapuram Special Division—*cont.*	
33 Construction of a causeway across river Vaippar at M. 7/1 of Emyapuram-Aruppukottai road.	Work completed.
Dindigul Division—	
34 Constructing a high level causeway across river Vaigai at Bholavandan.	Work in progress.
35 Constructing a submersible bridge across river Arjuna in Sattur-Menmeni road.	Work nearing completion.
Tirunelveli Division—	
36 Forming a road from Kailasapuram Railway Station to Oranuthur.	Land acquisition pending with Revenue Department.
37 Constructing a bridge across Karamaniar at Manapad.	Work completed.
38 Forming and metalling Naraikinar Railway Station to Sevalapari.	Land acquisition pending with Revenue Department.
39 Forming a road from Karivalamvandanallur to Royagiri and construction of a causeway.	Work completed.
40 Forming a road from Tharuvailkulam to Soorangudi and on to District limit including construction of culverts, soil stabilisation, metalling.	Formation work completed.
41 Constructing a causeway across Thambaraparani between Melanatham and Karuppanthurai.	Work completed.
42 Constructing a causeway across Thamaraparani river at Chermadevi.	Work not started.
Tenkasi Division—	
43 Constructing a bridge across Goutma river at M. 3/5 of Alwarkuruchi-Sivasailam road.	Work completed.
Salem Division—	
44 Construction of a causeway at M. 4/5 of Vaikuntam-Kallipatty road.	Work in progress.
45 Construction of causeway at M. 4/4 of Mailasamudram-Vaippamalai road.	Do.
Krishnagiri Division—	
46 Constructing bridges at M. 5/4 and 7/1 or Denkanikottah-Gundukottah road.	Work in progress.
47 Constructing bridges at M. 2/5 and 6/3 of Mettur-Kolathur road.	Work completed.
48 Construction of bridges at M. 4/3-4 and 20/3 of Hanumantheerthan-Kottapalli road.	Bridge at M. 20/3 completed. Bridge at M. 9/3-4 in progress.
Erode Division—	
49 Constructing a Bridge across Amaravathi river at the junction of Erode-Oddanchatram road M. 6/5, of Village road Vellakoil to Mullanur.	Work in progress.
50 Constructing a bridge at M. 4/5 of Alangulam-Dharapuram road.	Work commenced.
Coimbatore Division—	
51 Constructing a bridge across Aliyar linking Annamalai-Sethumadai road with Pollachi-Annamalai Hills road (via) Ponnalavai at M. 2/2 of Kothur-Thengaparai road.	Work is in progress.

[11th November 1961

Serial number and name of works. (1)	Stage. (2)
GOVERNMENT WORKS—*cont.*	
Nilgiris Division—	
52 Blacktopping Ootacamund-Kolacombai road.	Work nearing completion.
Tirunelveli Division—	
53 B.T. Tirunelveli-Pottalapudur road M. 12/0–23/4.	Work completed.
Tiruchirappalli Division—	
54 Cement concreting Thanjavur-Tiruchirappalli road M. 2/1-26/0.	Do.
Krishnagiri Division—	
55 Blacktopping to gaps in Dharmapuri-Hogainakkal road.	Do.
56 Constructing bridges at M. 20/1 of Dowlatabad-Cuddalore road.	Do.
North Arcot Division—	
57 Constructing a bridge across Cheyyar at M. 31/4-5 of Wandiwash-Polur road.	Do.
Salem Division—	
58 Constructing a bridge at M. 14/8 of Attur-Veerayanur road.	Do.
South Arcot Division—	
59 Reconstructing the bridge at M. 102/1 of V. L. A. road.	Do.
60 Constructing a causeway across Malattar at M. 103/2 of V. L. A. road.	Do.
Highways Research Station—	
61 Construction and equipment of Highways Research Station.	Do.
Thanjavur Division—	
62 Constructing a submersible bridge at M. 23/5 of Mahanjasamudram	Do.
63 Constructing a bridge at M. 16/4 of Pattukottai-Arantangi road.	Do.
64 New mettalling Mannargudi-Muthupet road, 0/1-2/4 and 5/0-11/6.	Do.
65 Improvements to the road on the left bank of (Grand Anicut Canal).	Work in progress.
Villupuram Division—	
66 Constructing a submersible bridge across Ponniar at M. 104/2—6 of V. L. A. road.	Do.
Chingleput Division—	
67 Constructing bridges at M. 5/1, 3/6, 8/4, 8/8, 10/3, 10/6, 11/1 and 11/3 of Ponneri-Pulicat road.	Do.
Nagapattinam Division—	
68 Completing the construction of a bridge across Kaduvayar at Vadakkupoyur village limits.	Work completed.
Tiruchirappalli Division—	
69 Constructing a causeway across Ayyar River at M. 5/6 of Musiri-Velakkantham road.	Do.
70 Constructing a bridge at M. 4/1 of Pallambadi-Sirugalappur road.	Do.
Salem Division—	
71 Constructing a bridge at M. 12/2 of Thidavoor-Thammanaickenpatti road (via) Gangavalli.	Do.
Nilgiris Division—	
72 Forming a road from Jayathala to Othanatty.	Do.

11th November 1961]

APPENDIX II.

[Vide answer to Starred Question No. 2012 asked by Sri V. K. Kothandaraman (on behalf of Sri M. Kalyanasundaram), Sri M. P. Sarathi and Sri T. T. Daniel at the meeting of the Legislative Assembly held on 11th November 1961, page 254 supra.]

A.—(*a*) About 3,000 acres were intensively affected.

(*b*) The relief measures which were taken by the Government to prevent the disease are as follows :—

(i) Sale of pesticides was ordered at the 50 per cent concessional rates to the affected potato growers.

(ii) Sixteen power sprayers, 274 hand operated sprayers and 20 dusters were put in operation.

(iii) Pesticides were moved to all village centres within the easy reach of farmers.

(iv) Additional staff of Agricultural Demonstrators, Demonstration Maistries and Mechanics attended to the work of plant protection. Three thousand two hundred acres were sprayed by the department and 2,681 metric tonnes of fungicides were supplied to the farmers.

(v) Methods of control were printed in leaflets and distributed all over.

SRI S. RANGANATHA MUDALIAR : Will the Hon. the Minister for Works be pleased to state at what stage the investigation for constructing a bridge across Ponnai stands.

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question to the Hon. Minister for Works.

Junior Technical Schools

*2040. *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of Junior Technical Schools already opened and the number yet to be opened in 1961;

(*b*) the number of students undergoing training as on 1st July 1961; and

(*c*) the details of training imparted?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) A statement[a] is placed on the table of the House.

Professional Colleges (Admissions)

* 2041 *Q.*—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of Harijans and Backward Class students selected for the Medical and Engineering Colleges for the last five years in the State;

a Printed as Appendix IV on page 460 infra.

[13th November 1961

(b) the number of students who are progressing in their respective studies without failing; and

(c) the nature of assistance given by Government to the students who are not progressing satisfactorily?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) & (b) A statement is placed on the table of the House.

(c) Additional coaching, tutorial, lecture and practical classes are given to all the failed students.

SRI K. VINAYAKAM: While going through the paper placed on the table of the House, I find that the percentage of failure of Scheduled Castes and Backward Community students who have taken the medical course is too much when compared to the failure of students who have taken the Engineering course. What is this mainly due to? Is it due to the fact that the students have not been given proper training or whether they did not care much for the development in the medical course? If the present state of affairs is allowed to continue, there will be great dearth of doctors in the years to come. Will the Government therefore take early steps to step up the standards in the Medical Colleges?

THE HON. SRI M. A. MANICKAVELU: One reason is that the medical course is more strenuous and more arduous. On the whole, the standard is being kept up. So, we cannot attribute the larger number of failures to any lowering of standards.

SRI T. S. RAMASWAMI: What sort of special coaching is given to the failed students?

THE HON. SRI M. A. MANICKAVELU: I have already stated that lectures, practical classes, tution, etc., are being conducted as a special coaching.

Bridge across the Memathur Supply Channel

*2038 Q.—SRI A. GOVINDASAMI (on behalf of SRI M. SELVARAJ): கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம்-சேலம் ரோடில் பாவலூர் கிராமம் ஹரிஜன காலனிக்குப் போகும் வழியில் குறுக்கே உள்ள மேமாத்தூர் சப்ளை சானலில் மேம்பாலம் கட்டுவதற்காக போடப்பட்டுள்ள எஸ்டிமேட் தொகை எவ்வளவு?

(இ) இந்த வேலை எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

THE HON. SRI P. KAKKAN: (அ) The work is included in the Third Five-Year Plan with a provision of Rs. 20,000.

(இ) The question of taking up the work is proposed to be considered in connection with the Budget for 1963–64.

* Printed as Appendix V on pages 461–642 infra.

13th November 1961]

The Nasurанniar river (breaches)

*2043 Q.—SRI A. R. MARIMUTHU (on behalf of SRI R. SRINIVASA IYER): Will the Hon. the Minister for Works be pleased to state:

(a) whether the fishermen of Athirampatnam and the Block Development Officer, Pattukkottai have represented to the Government the perennial inundation of the fishermen colony there due to breaches of Nasavanniar river consequent on the silting up of the river;

(b) if so, the action taken thereon;

(c) whether any silt clearance is being made in the bed of Nasavanniar River, North and South of the Mayavaram Karaikudi Railway line; and

(d) If so, the amount spent on this account during 1958–59, 1959–60 and 1960–61 up to date?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes, Sir.

(b) An estimate for 1.5 lakhs for forming flood banks to the tail end of Nasurvanniar river near Athirampattinam, Pattukkottai taluk, Thanjavur district, has been sanctioned by Government on 5th September 1961.

(c) No, Sir.

(d) Does not arise.

Lower Bhavani Project

*2044 Q.—SRI V. SUBBIAH: களம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர், கோபிசெட்டிபாளையம், பவானி தாலூகாக்களில் லோயர் பவானி திட்டத்தில் seepage water-ஐ விவசாயத்துக்கு உபயோகப்படுத்துவதற்கு ஏதாவது திட்டமுண்டா?

(இ) அப்படியானால், எந்த நிலையிலுள்ளது?

THE HON. SRI P. KAKKAN:—(a) Yes, Sir.

(b) Nineteen Schemes for utilizing the seepage water of the Lower Bhavani Project for irrigation purposes in Gobichettipalayam and Bhavani taluks have been considered and four of them have been approved by the Chief Engineer (Irrigation). But, these schemes have not been taken up for execution pending a decision on the Upper Kalingarayan Canal Scheme which also aims at full utilization of the seepage waters.

Teaching of English

*2045 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to introduce English from III Standard?

THE HON. SRI C. SUBRAMANIAM: Not at present, Sir.

[13th November 1961

District Library at Salem

* 2046 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the District Library at Salem has been sealed by the District Educational Officer, Salem;

(b) if so, the reasons therefor; and

(c) the steps taken to reopen it?

THE HON. SRI C. SUBRAMANIAM.—(a) to (c): Under the provisions of the Madras Public Libraries Act, 1948, the responsibility for maintaining the District Central Library at Salem vests in the Local Library Authority, Salem. It has been reported that the reading room section of the District Central Library has been functioning continuously. But as a number of books and periodicals in the lending section of the library were found missing the working of that section was suspended for about a fortnight for the purpose of stock verification. The working of the lending section was resumed on 18—12—1960 after the completion of the stock verification.

* 2047 Q.—DEPUTY SPEAKER: The question is postponed.

House-sites for Harijans

* 2048 Q.—SRI V. K. KOTHANDARAMAN: கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

1961-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 9-ம் தேதி Director of Harijan Welfare அவர்களுக்கு அனுப்பப்பட்ட ஹரிஜன் வீட்டுமனை சம்பந்தப்பட்ட மனுவின்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது? விவரமென்ன?

THE HON. SRI P. KAKKAN: The petition was forwarded by the Director of Harijan Welfare to the District Welfare Officer, North Arcot.

The facts are: The Government have issued a notification under section 4 (1) of the Land Acquisition Act and a declaration under section 6 of the Act for the acquisition of an extent of 3·28 acres of wet lands to provide house-sites to the Harijans of Sathampakkam village, Wallajah taluk, North Arcot district. The High Court has however stayed further action on a writ petition filed by the owner of the lands involved in the acquisition.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், இது ஒரு பீடி முதலாளி. மஹாராஜா பீடி முதலாளிக்கு சொந்தமாக இருப்பதன் காரணமாக, ஹரிஜனங்களுக்கு வீடு கட்ட மனைக் கட்டுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, பத்து வருஷகாலமாக . . . .

DEPUTY SPEAKER: When the matter is pending before the High Court, what is the use of the hon. Member putting a supplementary question on it? I disallow the question.

13th November 1961]

Harijan Welfare (Schools)

* 2049 Q.—SRI T. S. RAMASWAMI (on behalf of SRI K. SATTANATHA KARAYALAR): Will the Hon. the Minister for Works be pleased to state:

(a) the number of "adult literary schools" and the "Welfare Schools" run by the Harijan Welfare Department in this State;

(b) the number of persons instructed in these institutions, and

(c) the amount spent during 1959 and 1960?

THE HON. SRI P. KAKAN: (a) Number of Adult Literary Schools—35.

Number of Harijan Welfare Schools—844

(b) Adult Literary Schools—1,133 persons.

Harijan Welfare Schools—84,560 persons.

(c)—

		Harijan Welfare Schools	Adult Literary Schools.
1959	..	Rs. 21,95,170·74 n.p.	Rs. 7,251·45 n.p.
1960	..	Rs. 20,64,063·91 n.p.	Rs. 8,173·39 n.p.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Can the Minister tell us whether he is satisfied with working of the Adult Literary Schools?

THE HON. SRI P. KAKKAN: I think the Adult Literary Schools in the Kanyakumari district are being conducted satisfactorily.

SRI N. MARUDACHALAM: இந்த ஹரிஜன முதியோர் கல்வித் திட்டம் எந்த எந்த ஜில்லாக்களில் நடைபெறுகின்றன?

THE HON. SRI P. KAKKAN: கன்யாகுமரி ஜில்லாவில் நடைபெறுகிறது; இன்னும் சில ஜில்லாக்களிலும் நடைபெறுகின்றன. தனிக்கேள்வி போட்டால், விவரங்கள் கொடுக்கிறேன்.

SRI M. K. SOMASUNDARAM: ஸார், ஹரிஜன பள்ளிக்கூடங்களுக்காக சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட பணம் டைரக்டர் அவர்களால் செலவழிக்காமல், திரும்பவும், சர்க்காருக்கு ரிபண்ட் செய்யப்பட்டிருக்கிறதா? அப்படியானால், எவ்வளவு பணம் அப்படி ரிபண்ட் செய்யப்பட்டது?

THE HON. SRI P. KAKKAN: பொதுவாக கனம் அங்கத்தினர் கேட்கிறார்; மூலக் கேள்வி அடல்ட் ஸ்கூல், எலிமெண்டரி ஸ்கூல் பற்றியது. தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றிச் சொல்லுகிறேன்.

SRIMATHI SATHIAVANIMUTHU: ஸார், சுமார் எந்தனை வயசுக்கு உட்பட்டவர்கள் இந்த முதியோர் கல்வியால் பயன் அடைகிறார்கள்?

[13th November 1961

THE HON. SRI P. KAKKAN : *அநேகமாக 20, 21 வயதிற்கு மேல், 60 வயது வரைகூட, படிக்கவேண்டுமானால், படிக்கலாம்.*

SRI P. G. MANICKAM : *எந்தெந்த இடங்களில் ஹரிஜன நல பள்ளிக்கூடங்கள் சர்க்காரால் ஆரம்பிக்கப்பட்டன, அவற்றிற்கு எவ்வளவு மனுக்கள் அனுப்பப்பட்டன ?*

THE HON. SRI P. KAKKAN : *கேள்வி நடைமுறையிலே உள்ள பள்ளிக்கூடங்களைப் பற்றியது. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்லுகிறேன்.*

SRI T. IRUSAPPAN : *ஸார், ஹரிஜன ஸ்கூல்களில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கும், மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பள உயர்வு போன்று கொடுக்கப்பட்டிருக்கிறதா ?*

DEPUTY SPEAKER : The hon. Member may put a separate question.

SRI A. GOVINDASAMI : *முதியோர் பள்ளிக்கூடங்கள் இரவு நேரத்தில் நடத்துவதற்கு, விளக்கு வசதியும், ஆசிரியர்களுக்குப் போதுமான ஊதியமும் இல்லாததன் காரணத்தினால், பல பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அவைகளுக்கு வேண்டிய வசதிகள் சீக்கிரமாகவே செய்யப்படுமா ?*

THE HON. SRI P. KAKKAN : *என்னிடம் உள்ள லிஸ்டில் பார்த்தால், தென்னார்காட்டில் அப்படிப்பட்ட பள்ளிக் கூடங்களே இல்லை. ஆகவே, அந்தக் குறைகள் அங்கு இருக்க முடியாது என்று தெரிகிறது.*

SRI K. PONNIAN : *ஸார், ஜாதி ஒழியவேண்டும் என்று பாடுபடும் நம் சர்க்கார், ஹரிஜனப் பள்ளிகளை மேலும் மேலும் துவக்கிக் கொண்டே போய், ஜாதித் துவேஷத்தை வளர்ப்பதற்குப் பதிலாக, எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சர்க்காரே எடுத்து நடத்த முன்வருவார்களா ?*

THE HON. SRI P. KAKKAN : *அதைப் பற்றியும் அரசாங்கம் யோசித்தது. இப்பொழுது எந்த எந்த பள்ளிக்கூடங்கள் நடைபெற்று வருகின்றனவோ அவைகள் அப்படியே நடக்கும். ஆனால், புதிதாக நாம் ஹரிஜனங்களுக்காக தனியாகப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவதில்லை. எஜுகேஷன் டிபார்ட்மெண்டோ அல்லது இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பஞ்சாயத்து யூனியன்களோ நடத்த முடியாமல், வேறு வழியில்லாமல் இருந்தால், கலெக்டர் ஆலோசனையின் பேரில், துவங்கப்படும். ஆனால், புதிதாக இனிமேல் ஹரிஜனங்களுக்கென்று தனியாக பாடசாலைகள் வைப்பதில்லை என்பது கொள்கை.*

Literacy

* 2050 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state the percentage of literacy in the State in the year (i) 1946 and (ii) 1959?

13th November 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : The percentage of literacy for the intervening years between census years has not been worked out. The percentage of literacy for the Madras State according to the 1951 census, was 20.3 and according to the 1961 census provisional figures 30.2.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—CALLING ATTENTION TO THE NEED FOR FAMINE RELIEF WORK IN COIMBATORE DISTRICT.

DEPUTY SPEAKER : The next item relates to calling attention under rule 41. The hon. Members, Sri N. K. Palanisami and Sri A. Senapathi Gounder are not in their seats. The hon. Member, Sri K. G. Palaniswamy Gounder can read the notice.

SRI K. G. PALANISWAMY GOUNDER : *கனம் உதவி சபா* 9-30 a.m
நாயகர் அவர்களே, அசெம்பிளி விதிகள் 41-வது பிரிவின் கீழ் ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் ரெவன்யூ அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தாராபுரம், பல்லடம் தாலூகாக்களிலே வருடா வருடம் பருவ மழை தவறிக்கொண்டிருக்கிறது. இந்த வருடத்திலேயும் மழைக்குறைவினால் பல பகுதிகள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

DEPUTY SPEAKER : The hon. Member can read the notice and he need not make a speech.

SRI K. G. PALANISWAMY GOUNDER : *பருவ மழை தவறியதன் காரணத்தால் தாராபுரம், பல்லடம் வட்டாரங்களில் பஞ்ச நிவாரண வேலையை மேற்கொள்ளுவது சம்பந்தமான ஒரு அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் ரெவன்யூ அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, Palladam and Dharapuram taluks are known to be the distress pockets in the Coimbatore district. Even last year, distress conditions were reported and Government issued orders allotting sums of Rs. 2 lakhs and Re. 1 lakh respectively for execution of road and pond works in these taluks. Government also ordered the execution of the work of Parambikulam Main Canal in Dharapuram taluk. The Collector has since been permitted to draw upon the unutilised sum out of these 3 lakhs of rupees sanctioned last year during the current year 1961–62. Apart from this, another sum of Rs. 3 lakhs have been sanctioned during this year for deepening of drinking water wells in the district. Pond works which would ultimately increase the water level of adjacent irrigation wells have also been taken up under the Special Minor Irrigation Programme. As a substantial programme of permanent utility and of imme-

[Sri M. A. Manickavelu] [13th November 1961

diate employment potential, Government have recently ordered the execution of the excavation of the Parambikulam Main Canal from Palladam to Kangayam.

The Collector has toured this area intensively and is watching the situation closely and also keeping Government informed of the developments. As the hon. Members know, since this notice under rule 41 was given, there have been rains in these two taluks and the cultivators have started ploughing their lands.

Though there has been a partial failure of monsoon during the season and a dimunition in the area cultivated, famine conditions do not prevail in these taluks. There has been no marked increase in the foodgrain prices; nor any unusual movement of cattle, even though these two taluks are not surplus in fodder even in normal years. No unusual migration of people has taken place except the normal movement of agricultural labourers due to attractive wages for work at the Parambikulam Project. There has also been no perceptible contraction of credit.

It is a fact that the water-supply position, both for drinking as well as for irrigation, has not been satisfactory in these two taluks. This difficulty has been felt over the past few years. Government have taken immediate temporary measures necessary as well as permanent works to meet this problem. In Vellakoil and Palladam Panchayats where there was acute scarcity of drinking water, water-supply by lorries was arranged; 194 and 285 drinking water wells were deepened at a cost of Rs. 1.2 lakhs and Rs. 2.5 lakhs respectively during 1959–60 and 1960–61. This programme, as mentioned earlier, is being extended this year also. Apart from this, the Block Development Officers are taking up deepening of wells under the "Village Works Grant". The Collector has given directions to both the Development and Revenue Staff to go ahead with these works to the extent necessary. I have already referred to the programme of pond works taken up under the Special Minor Irrigation Programme to meet the conditions of poor water-supply in the irrigation wells.

I may tell the hon. Member that the Government are fully aware of and is watching the seasonal conditions and that all steps necessary to meet such distress conditions as may arise are being taken and will continue to be taken.

III.—GOVERNMENT BILL.

THE MADRAS BUILDING (LEASE AND RENT CONTROL) AMENDMENT BILL, 1961.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Deputy Speaker, Sir, I beg leave to introduce the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1961.

13th November 1961]

DEPUTY SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras Buildings (Lease and Rent Control) Amendment Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH: Sir, I introduce the Bill.

DEPUTY SPEAKER: The Bill is introduced.

IV.—GOVERNMENT MOTION.

NATIONAL INTEGRATION.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"That the Paper laid on the table of the House on the 11th November 1961 on 'National Integration' be taken into consideration."

உதவி சபாநாயகர் அவர்களே, நவம்பர் 11-ம் தேதியன்று இந்த தேசீய இணைப்பைப் பற்றிய ஒரு அறிக்கை இங்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு முன்பும் இது சம்பந்தப்பட்டவரை இன்னொரு அறிக்கை இந்த சபை முன்னாலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ராஜ்ய முதன் மந்திரிகள் மகாநாடு நடைபெற்று, அதிலே தேசீய இணைப்பைப் பற்றிய பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டு, அந்தக் கூட்டத்தின் அறிக்கை இந்த சபையின் முன்பு முதலிலே சமர்ப்பிக்கப்பட்டது. அதையொட்டி இன்னொரு விரிவான மகாநாடு டெல்லியிலே நடைபெற்றது. அந்த மகாநாட்டின் அறிக்கை தான் இப்பொழுது இங்கே வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, நாம் இதைப்பற்றி விவாதிக்கும்பொழுது, இந்த இரண்டு அறிக்கைகளையும் மனதிலே கொண்டு விவாதிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அது மட்டுமல்ல, இந்த மகாநாடுகள் கூடுவதற்கு அடிப்படையாக இருந்தது இன்னொரு கமிட்டி. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி இந்த தேசீய இணைப்பு விஷயங்களைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு ஸ்ரீமதி இந்திரா காந்தியின் தலைமையின் கீழ் ஒரு குழுவை அமைத்தது. அந்தக் குழு தொடர்ந்து பல விஷயங்களைப் பற்றிப் பரிசீலனை செய்து, சில சிபார்சுகள் செய்தது. முதன் மந்திரிகள் எல்லோரும்கூடி அவைகளைப் பற்றி ஆலோசிக்கவேண்டும்; அதற்குப் பிற்பாடு விரிவானதொரு மகாநாடு கூட்டவேண்டுமென்கிற ஆலோசனையை அந்தக் கமிட்டி கூறியது. அந்த அடிப்படையில்தான் முதன் மந்திரிகள் மகாநாடு நடைபெற்றது. இப்பொழுது இரண்டாவது விரிவான மகாநாடு டெல்லியிலே பல்வேறு தேசீயக் கட்சிகளையும், கல்வித்துறை நிபுணர்களையும், இன்னும் தேசீயத் தலைவர்கள் எல்லோரையும் கொண்டு நடைபெற்றது.

இந்த மாதிரி தேசீய இணைப்பைப் பற்றி கவனம் செலுத்தி, அதைப் பற்றி விவாதிக்க மகாநாடுகள் நடத்துவதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி பல பேரிடையே பல்விதமான கருத்து

[Sri C. Subramaniam] [13th November 1961

வேறுபாடுகள் இருக்கின்றன. கருத்து வேறுபாடுகள் மட்டுமல்லாமல், சில இடங்களிலே குழப்பமும் கூட ஏற்பட்டிருக்கிறது. ஏதோ நம்முடைய நாட்டிலே தேசிய ஒற்றுமை முழுவதும் சீர்குலைந்து விட்டது, அப்பேற்பட்ட சீர்குலைவைத் தவிர்ப்பதற்காக இந்த மகாநாடு ஏற்படுத்தப்பட்டது என்று ஒரு சிலர் கருதினார்கள்.

அவ்வாறு அடிப்படையாக இந்தச் சீர்குலைவு ஏற்படக்கூடிய நிலையில் இந்த மாநாடு கூட்டப்பட்டதா அல்லது ஆங்காங்கு தோன்றக்கூடிய சிறு சிறு பிரிவினை சக்திகள், பிளவு சக்திகள், வேற்றுமை சக்திகள், பிற்போக்கு சக்திகள் இவைகளைத் தடுத்து நாட்டிலே இன்னும் முன்னேறிச் செல்வதற்கு ஏற்பட்டதா என்பதைப்பற்றி நாம் முதலிலே கவனம் செலுத்தவேண்டியது மிகவும் அவசியம். அவ்வாறு கவனம் செலுத்த வேண்டுமென்றால், இதற்குப் பின்னணியாக இருக்கும் பல்வேறு விஷயங்களை நாம் கவனிக்கவேண்டும். அதிலும் முக்கியமாக நாடு சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பாடு நாம் எடுத்திருக்கக்கூடிய பல்வேறு தேசிய இணைப்பு நடவடிக்கைகளைக் கவனித்து அவைகள் எந்த முறையில் ஏற்பட்டன, அவைகளில் எத்தனை குற்றங்குறைகள் ஏற்பட்டிருக்கின்றன, அவைகளில் ஏதாவது சீர்திருத்தவேண்டியவையாக இருக்கின்றனவா என்பதை ஆலோசித்துப் பார்த்து, அவைகளில் அடிப்படையாக எந்தவிதமான தவறும் இல்லை, குறையும் இல்லை, ஆனால் மேலோடியாகச் சிறு சிக்கல்கள், சங்கடங்கள் தோன்றியிருக்கின்றன என்றால் அவைகளை எப்படித் தவிர்ப்பது என்பதை யோசிக்கவேண்டும்.

நான் ஒன்றைத்தான் சொல்லிக்கொள்கின்றேன். என்னுடைய கருத்திலே, இம்மாதிரி அடிப்படையாக இருக்கும் முறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கல்கள் இல்லை. அதற்குப் பதிலாக இந்தப் பத்து பதினைந்து ஆண்டுகளாக, நாம் சுதந்திரம் பெற்றதற்குப் பிற்பாடு, பல சாதனைகள் தேசிய ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கு எடுத்துக் காட்டாக ஏற்பட்டிருக்கின்றன என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. அதைப்பற்றித்தான் முதலில் நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால், அவ்வாறு உறுதி இல்லையென்றால் ஏதோ மேலோடியாக வெடிப்புகள் ஏற்பட்டிருப்பது அல்ல, கட்டிடத்தின் அஸ்திவாரமே ஆட்டம் கண்டிருக்கிறது என்றால் அதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் வேறு. ஆனால், மேலாக சிறு பிளவு ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்காக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் வேறு. ஆகையால்தான், இன்றைக்கு ஓரளவு ஆராயவேண்டிய அவசியம் என்ற முறையிலே சில கருத்துக்களை இந்தச் சபைமுன் நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

முதன் முதலிலே நமக்குச் சுதந்திரம் வந்த காலத்திலே நாட்டிலே ஒரு பிரிவினை ஏற்பட்டது நம் எல்லோருக்கும் தெரியும். அந்தப் பிரிவினையின் காரணமாக நாட்டிலே ஏற்பட்ட நிகழ்ச்சிகள், ஏற்பட்ட கலவரங்கள், குழப்பங்கள், அந்தச்

13th November 1961] [Sri C. Subramaniam]

சிக்கல்கள் எல்லாம் நமக்கு நன்கு தெரியும். இவைகளையெல்லாம் நாம் நல்ல முறையிலே சமாளித்து, அப்பொழுது ஏற்பட்ட கலகத்தை அடக்கியது மட்டுமல்ல, குழப்பமான நிலையையும் சீர்படுத்தி லட்சக் கணக்கான மக்களுக்கு, நாடு பெயர்ந்து இங்கு வந்திருந்தவர்களுக்கு—ஒரு புதிய வாழ்வைக் கொடுத்து, அப்பொழுது ஏற்பட்ட பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தப் பிரச்னைகளில் சில தீர்க்கப்பட்டிருந்தாலுங்கூட, பிரிவினையின் காரணமாக ஏற்பட்ட இன்னும் பல சிக்கல்கள் இருக்கின்றன, தொடர்ந்து நாம் முன்னேற்றப் பாதையிலே செல்லக்கூடியதைப் பாதிக்கக்கூடிய முறையிலே அந்தச் சக்திகள் இயங்கிவருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். நமக்கும் பாகிஸ்தானுக்கும் இருக்கக்கூடிய உறவு பல சிக்கல்களை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கிறது. அந்தத் தொடர்பு நல்ல முறையில் சினேக முறையில் ஏற்படாமல், இன்னும் அடிக்கடி பல சச்சரவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய வகையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய காரணத்தினால் இன்றைக்கு அந்தப் பிரிவினையின் காரணமாக சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலுங்கூட இன்னும் சில பிரச்சினைகள் தொடர்ந்து நம்மைப் பிடித்துக்கொண்டிருக்கின்றன என்பதைத்தான் நாம் மனதிலே கொள்ளவேண்டும். அதையும் தொடர்ந்து தீர்த்து வைக்கவேண்டியது நம்முடைய கடமை. அதற்காகத்தான் நம்முடைய தேசியத் தலைவர்கள் அந்தப் பிரிவினையினால் ஏற்பட்ட சிக்கல்களை விடுவிப்பதற்கு இன்னும் தொடர்ந்து முயற்சி செய்தும்கூட அதிலே வெற்றி காணாத முறையில் பல சங்கடங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. அவ்வப்போது நமக்கும் பாகிஸ்தானுக்கும் இருக்கக்கூடிய உறவு—உடனடியாக இருக்கக்கூடிய உறவு மட்டுமல்ல, உலக அரங்கில்கூட அதன் பிரதிபலிப்புக்கள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை அவ்வப்போது காண்கிறோம். அது ஒருபுறமிருக்க நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையிலே பல முக்கியமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதன் காரணமாக நாட்டினுடைய ஒற்றுமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

முதன் முதலாக நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை—சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் தலைமையின்கீழ் நம் நாட்டிலேயிருந்த பல்வேறு சிற்றரசுகளை நம்முடைய அரசியலமைப்பின்கீழ் கொண்டுவந்தது, ஒரு நாடு என்கிற முறையிலே ஒரு அரசியலமைப்பின்கீழ் கொண்டுவந்தது, உலகத்திலேயே, உலக வரலாற்றிலேயே மிகச் சிறந்த சாதனை என்று எல்லோராலும் போற்றக்கூடியதாக இருக்கிறது. பிரித்தவர்களை எப்பொழுதும் வரலாற்றில் பெரிதுபடுத்துவதில்லை. இணைத்தவர்கள்தான் உலக வரலாற்றிலே உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். அப்படி இணைக்கும் சக்தியாக, இணைக்கக்கூடிய ஒரு பெரும் ஆற்றலைப் பெற்றவராக விளங்கின சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள், அவர்கள் திறமையின் காரணமாக, அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, 500-க்கு மேல் இருந்த சிற்றரசுகள் நம்முடைய நாட்டின் அரசியலமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டு,

[Sri C. Subramaniam] [13th November 1961

ஒரு நாடு, ஒரு அரசியலமைப்பு என்ற முறையிலே ஏற்பாடு செய்யப்பட்டது முதலிலே நாம் சாதித்த காரியங்களில் பெரிய காரியம் என்பதை நாம் மனதிலே கொள்ளவேண்டும். இப்பொழுது நாம் அதை ஓரளவு மறந்துவிடுகிறோம். சிற்றரசுகள் இருந்ததெல்லாம் கூட நம் கவனத்தில் இருப்பதில்லை. ஆனால், அன்றைக்கு அந்தச் சூழ்நிலையில், அந்நிய ஆட்சியிலிருந்து நாம் விடுபட்ட நேரத்தில் 500-க்கும் மேற்பட்ட சிற்றரசுகளுக்குப் பூரண சுதந்திர வாழ்க்கை உண்டு என்று அவர்களை விட்டுவிட்டுச் சென்றதற்குப் பிற்பாடு அவர்களை ஒன்றுபடுத்தினோம்—அதுவும் சமாதான முறையில் ஒன்றுபடுத்தினோம். எந்தவிதமான சீர்குலைவும் நம் நாட்டிலே ஏற்படாமல், சமாதான முறையில் நாம் அதைச் சாதித்தோம். ஏதோ ஒரு பகுதியில் ஒரு சிறு போலீஸ் நடவடிக்கை, இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. அதுவும் ஒரு சிறு காலத்திற்குள்ளாக முடிந்துவிட்டது. ஆனால், பொதுவாக சமாதான முறையில் சமுதாயத்தில் எந்தச் சீர்குலைவும் இதன் காரணமாக ஏற்பட்டு விடாமல் அந்தப் பகுதிகளெல்லாம் ஒன்றாக இணைக்கப்பட்டது என்பது மாபெரும் சாதனை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அவ்வாறு செய்தது முதல் சாதனையாகும்.

இரண்டாவது சாதனை—இந்த நாட்டினுடைய நிர்வாகத்தை ஒன்றாக இணைத்தது. வெள்ளைக்காரர்கள் ஆட்சி இங்கு இருந்த வரையில் அவர்களுடைய ஆட்சியின்கீழ் நிர்வாக அமைப்பில் இணைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவர்கள் வெளியே சென்ற போது அந்த நிர்வாக அமைப்பு ஓரளவு முன்பு இருந்த பிரகாரம் இருக்க முடியவில்லை. ஆனால், அப்பொழுது உள்நாட்டு மந்திரியாக இருந்த சர்தார் வல்லபாய் படேல் அவர்கள்தான் அந்த நிர்வாக அமைப்பையும் சீர்படுத்தி, அகில இந்திய ரீதியில் இந்த அமைப்பை வைத்துக்கொண்டு, இணைக்கப்பட்ட ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கவேண்டுமென்று பல நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்கள். அப்பொழுது அதற்குப் பக்கபலமாக சட்டம் கூடக் கிடையாது. சட்டம் இயற்றாமலேயே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து அதன் மூலமாக இந்த நிர்வாக அமைப்பை ஒன்றுபடுத்தக்கூடிய நிலைமையிலே அவர்கள் சீர்படுத்தினார் என்பதைப் பார்க்கும்போது, இந்த இரண்டு துறைகளிலேயும் அவர்கள் சாதித்தவை உலக வரலாற்றிலேயே முக்கிய இடம் பெறக்கூடிய நிகழ்ச்சிகள் என்பதைத்தான் நாம் மனதில் கொள்ள வேண்டும்.

அதற்கடுத்தபடியாக நான் கூற விரும்புவது—நமது இராணுவ அமைப்பைப் பற்றி. தேசீய இராணுவம் ஒன்றை அமைத்து, அது அரசியலில் கலந்துகொள்ளாத முறையில், அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கும் அளவுக்கு, இராணுவ அமைப்பு ஏற்படுத்தி, இராணுவம் தேசீய ஒற்றுமைக்கு ஏற்றதொன்றாக அமைத்துக்கொண்டது நாம் அடுத்தபடியாக சாதித்த சாதனையாகும்.

சுதந்திரம் பெற்றவுடனே உடனடியாக நாம் இதிலே வெற்றி பெற்ற காரணத்தால்தான் மற்றவர்கள் எதிர்பார்த்ததுபோல நம் நாட்டிலே குழப்பம் ஏற்பட்டுவிடாமல், உள்நாட்டுக் கலவரங்கள்

13th November 1961] [Sri C. Subramaniam]

ஏற்பட்டுவிடாமல் தொடர்ந்து, அமைதியான முறையிலே நாம் பல காரியங்களைச் சாதிக்க முடிந்தது, பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்த முதலிலே எடுத்துக் கொண்ட இந்த நடவடிக்கைதான் அடிப்படைச் சாதனைகளாக அமைந்திருக்கின்றன என்பதுதான் எல்லோருடைய கருத்தும் இன்றைக்கு. இந்த அடிப்படையில்தான் மற்றவைகளையெல்லாம் நாம் சாதிக்க முடிந்தது. ஆகவே, நமக்குச் சுதந்திரம் கிடைத்ததற்குப் பிற்பாடு அந்நியப் பிடிப்பு நீங்கினதற்குப் பிற்பாடு, நெல்லிக்காய் மூட்டை போல் ஒவ்வொரு பக்கமும் ஓடிவிடாமல் ஒன்றுபட்ட அமைப்பிலே, ஒன்றுபட்ட இந்தியாவாக இருப்பதற்கு இந்த மூன்று சாதனைகள்தான் நமக்குச் சாதகமாக இருந்தன, ஆணியாக இருந்தன என்று நான் மறுபடியும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அடிப்படையில்தான் நம்முடைய நாட்டுக்கு எப்பேர்ப்பட்ட அரசியலமைப்பு இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் நாம் ஆலோசனை செய்தோம். இந்தச் சாதனைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய நேரத்திலே எப்பேர்ப்பட்ட அரசியலமைப்பு நமக்கு இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் ஆலோசனை செய்ய ஆரம்பித்து, 1950-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ம் தேதியிலிருந்து புதிய அரசியல் சட்டமும் இந்தியா முழுவதற்கும் பொருந்தக்கூடிய ஒரு அரசியல் சட்டமாக நிறைவேறியது, அடுத்தபடியாக ஏற்பட்ட பெரிய சாதனை. அதுவும் 1947-லே சுதந்திரம் பெற்று, 1949-க்குள்ளாக அந்தச் சட்டத்தை நாம் நிறைவேற்றியது உலகத்திலேயே வேறு எந்தக் காலத்திலும் எந்த நாட்டிலும் ஏற்படாத ஒரு மாபெரும் சாதனை என்பதை நாம் மனதிலே கொள்ளவேண்டும்.

உலகத்திலே முதன்முறையாக நாற்பது கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு மனித சமுதாயத்துக்கு ஜனநாயக அடிப்படையில் ஒரு அரசியல் அமைப்பை இவ்வளவு சீக்கிரத்தில் ஏற்படுத்திக் கொண்டது உண்மையிலேயே நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், ஏன் அமெரிக்காவிலும்கூட இதுபோன்று காலனி ஆட்சியை ஒழித்துவிட்டு விடுதலை அடைந்த பிற்பாடு ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு பல ஆண்டுகள் பிடித்தன. எத்தனையோ சங்கடங்கள் உண்டாயின. ஆனால் இந்தியாவிலோ எத்தனையோ சங்கடங்கள், சுதேச சமஸ்தானங்களின் சிக்கல்கள் எல்லாம் இருந்தபோதிலும் மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே அரசியல் அமைப்புச் சட்டத்தை ஏற்படுத்திக்கொண்டது, என்றைக்குமே எல்லோருமே பெருமைப்படக்கூடியதாகும். அந்த அரசியல் அமைப்பில் ஆங்காங்கு திருத்தங்கள் ஏற்பட்டாலுங்கூட பொதுவாக நாட்டினுடைய அமைப்பை நிலை நிறுத்துவதற்கு—ஸ்டீல் ப்ரேம் **(Steel frame)** என்று சொல்வார்களே, அதுபோல இந்த அரசியல் அமைப்புச் சட்டம் அமைந்திருக்கிறது. அதுவும்கூட உலகம் எல்லாம் போற்றக்கூடிய அளவில்--ஜனநாயகக் கொள்கைகள் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு

[Sri C. Subramaniam] [13th November 1961

அமைந்திருக்கிறது. வேறு எந்த நாடும் கண்டிராத அளவில்—வயது வந்த ஆண், பெண் எல்லோருக்கும் வாக்குரிமை என்று வழங்கப்பட்டிருக்கிறது. படித்தவர்களானாலும், படிக்காதவர்களானாலும், பணக்காரர்களானாலும், ஏழைகளானாலும் இந்த நாட்டில் பிறந்தவர்கள் 21 வயதை அடைந்தவுடன் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் வோட்டு அளிக்க உரிமை உண்டு என்று அளிக்கப்பட்ட சுதந்திரம் நம்முடைய மிகப்பெரிய சாதனைகளில் மற்றொன்றாகும். வயதுவந்தவர்களுக்கு எல்லாம் வோட்டுரிமை என்றவுடன் அது எப்படி சரியான முறையில் நடக்கும் என்று பலர் சந்தேகப்பட்டார்கள். 1950-ம் வருஷத்தில் அரசியல் அமைப்பு அமுலுக்கு வந்தது. 1952-லே முதல் தேர்தல் அதற்குப் பின் நடந்திருக்கிறது. 1957-லே இரண்டாவது தேர்தலும் நடந்து விட்டது. இந்த இரண்டு தேர்தல்களிலும் மிக அமைதியான முறையில் தேர்தலை மிக நன்றாக நடத்திக்காட்டியிருக்கிறார்கள் நம் மக்கள். கோடிக்கணக்கான மக்கள் பங்கெடுத்துக்கொண்ட அந்தத் தேர்தல் எவ்வளவு அமைதியான முறையில், நேர்மையான முறையில் வெகு சீக்கிரத்திலேயே நடந்திருக்கிறது என்பதைப் பற்றி—அப்போது இங்கே வந்திருந்த வெளிநாட்டு நிபுணர்களே பாராட்டியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் மூன்றாவது தேர்தலும் நடக்க இருக்கிறது.

இன்னொன்றையும் நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜனநாயக அடிப்படையில் அரசியல் அமைப்பை வகுத்துக் கொண்டபோது பெடரல் அமைப்பு முறையாக நம் நாட்டு நிர்வாகம் இருக்கவேண்டும், நாடு முழுவதற்குமாக ஒரு அரசாங்கம், ஒரு மூலையில்—இந்தப் பெரிய நாட்டுக்கு இந்தப் பெரிய ஜனப் பகுதிக்கு, பல்வேறு பழக்கவழக்கங்கள், மொழிகள் கொண்ட ஜனங்களுக்கு இருப்பது என்பது—யூனிடரி கவர்ன்மெண்டு என்ற முறையில் அமைப்பது சரியாக இருக்காது என்ற முடிவுக்கு வந்து—இது பெடரல் அரசாங்கமாக—சமஷ்டி அரசாங்கமாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த அந்தப் பகுதி மக்கள் அவரவர்களுடைய உரிமையைப் பெற்று அவர்களே வளம் செய்துகொள்வதற்கு பயன்படும் என்று இந்த முடிவு செய்யப்பட்டது.

இந்த அடிப்படையில் ஆரம்ப காலத்தில் ராஜ்யங்களை ஏ, பி, என்று பிரித்திருந்தோம். அதற்குப் பிற்பாடு இதே ராஜ்யங்களை மொழிவாரியாகப் பிரிக்கவேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப் பட்டது. மொழிவழி ராஜ்யங்களை அமைத்தபோது ஏ ஸ்டேட், பி ஸ்டேட் என்கிற நிலைமை எல்லாம் மாறி எல்லா ராஜ்யங்களும் ஒரே விதமான தகுதியைப் பெற்றிருக்கின்றன. இவையெல்லாம் ஒரே அரசியல் அமைப்புச் சட்டத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

இதோடு மட்டுமல்ல. நீதி நிர்வாகத்திலும் கீழ்க் கோர்ட்டில் இருந்து ஹைக்கோர்ட், சுப்ரீம் கோர்ட் என்று நீதி நிர்வாகத்தை—நிர்வாக அமைப்பில் இருந்து தனியாகப் பிரித்து இயங்கச் செய்திருக்கிறோம். இதன் காரணமாக நீதி ஸ்தலங்கள்

13th November 1961] [Sri C. Subramaniam]

இன்றையதினம் சுதந்திரமாக இயங்குகின்றன. நிர்வாகத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டாலும் நீதி ஸ்தலத்தில் அதை நிவர்த்தி செய்துகொள்ள வசதி இருக்கிறது. இவ்வளவு சீக்கிரமாக இவை யாவற்றையும் அமைத்துக்கொண்டு நாம் செயல்படுவதற்கு நாமே பெருமைப்படவேண்டும்.

அதற்கு அடுத்தபடியாக மொழிப் பிரச்சனை. நம்முடைய தேசம் பல மொழிகள் பேசுகின்ற தேசம் என்பதை நாம் முதலில் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். பலமொழிகள் பேசுகின்ற மக்கள் அத்தனைபேரும் ஒரு நாட்டிலே சேர்ந்து இயங்கி வருகிறபோது மொழிப் பிரச்சனை ஒரு சிக்கலாகவே இருந்து வருகிறது. அந்நியர்கள் ஆண்டபோது ஆங்கில மொழியை ஆட்சிமொழியாக வைத்து ஆண்டுவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் நிர்வாக அமைப்பை வகுத்த ஒரு திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்கள்.

இன்றைக்கு நாம் சுதந்திரம் பெற்ற பிறகு—பல்வேறு பகுதி மக்களும், பல மொழி பேசக்கூடிய மக்களும் ஓர் அரசின் கீழ் இருக்கவேண்டுமென்றால் எல்லோருக்கும் பொதுவான மொழி ஒன்று இருக்கவேண்டும் என எண்ணப்பட்டது. எல்லாவற்றையும் யோசித்தபொழுது அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்துக்கொண்டபோது 1965 வரையில் ஆங்கிலமே நிர்வாக மொழியாக இருக்கட்டும் என்று தீர்மானித்தோம். அப்படி முடிவு எடுத்த காலத்தில் இருந்த சூழ்நிலையை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது இருந்த சூழ்நிலை அந்நிய மொழி போய் நம் நாட்டு மொழி ஒன்று நமக்குப் பொதுமொழியாக அமைய வேண்டும் என்பதுதான். இந்தக் கருத்து பரவலாக இருந்து வந்தது. அந்தச் சமயத்தில் சமயோசிதமாக ஆங்கிலமே 1965 வரையில் நிர்வாக மொழியாக இருந்துவரட்டும் என்று முடிவு எடுத்ததற்கு முக்கியமானவராக இருந்தவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஸ்ரீ என். கோபாலசாமி ஐயங்கார் அவர்கள்தான். அது குறித்து நாம் பெருமைப்படுகிறோம். 1965 வரையிலும் தொடர்ந்து 10 a.m.
ஆங்கிலமே நீடித்திருக்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது அவர்களுடைய முயற்சியின் காரணமாகத்தான். அவர்களுடைய சாமர்த்தியம், அறிவின் காரணமாகத்தான் இந்தத் திட்டம் அன்றைக்கு வகுக்கப்பட்டு ஒருவரைத் தவிர மற்ற எல்லோராலும் அன்று ஒப்புக்கொள்ளப்பட்டது. 1965-ல் நிர்வாக மொழியாக இந்தி வரவேண்டுமென்று முடிவு செய்யப்பட்ட காலத்திலேயே மற்ற மொழிகளைப் பற்றியும் ஆலோசித்து, ஒரு மொழி மட்டும் தேசிய மொழி என்று இல்லாது எல்லா மொழிகளும் தேசிய மொழிகள் என்ற முறையில், அவைகளில் முக்கியமான 14 மொழிகளை அரசியல் சட்டத்திலேயே குறிப்பிட்டிருக்கிறோம். அப்போது அந்த முறையில் மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண முற்பட்டோம். அதற்குப் பிற்பாடு எந்த முறையில் அமுல்படுத்துவது என்பதற்காகவும் ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை ஒரு கமிஷன் நியமிக்கப் பட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அவ்வாறு ஒரு மொழிக் கமிஷன் நியமிக்கப்பட்டு இது பற்றிப் பரிசீலனை செய்யும்

போது, 1965-க்குப் பிறகு இந்தி ஆங்கிலத்திற்குப் பதிலாக நிர்வாக மொழியாக வரவேண்டுமென்று முடிவு எடுத்து சட்டத்திலேயே இடம் பெற்றிருந்தபோதிலும்கூட, அதனால் பல சிக்கல்கள் ஏற்படும் என்ற காரணத்தால், மீண்டும் புனராலோசனை செய்து அதை மாற்றி, தொடர்ந்து 1965-க்குப் பிற்பாடும் ஆங்கில மொழியும் நிர்வாக மொழியாக இருந்து வரும் என்ற முடிவை எடுத்திருக்கிறோம். இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமையை உத்தேசித்தே அந்த முடிவை எடுப்பதற்கு எதிராகப் பல்வேறு வாதங்கள், கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டிருந்தபோதிலும்கூட, தொடர்ந்து ஆங்கிலம் நீடிப்பது எத்தனை காலத்திற்கு அவசியமோ அத்தனை காலத்திற்குத் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குச் சட்ட உருவம் கொடுக்கவேண்டுமென்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னொரு முக்கியமான விஷயமும் அப்போது ஒப்புக்கொள்ளப்பட்டது. எந்தக் கால அளவிற்குத் தொடர்ந்து ஆங்கிலம் இருக்கவேண்டுமென்பதைப் பற்றி யார் முடிவு செய்வது என்பது பற்றியும் எல்லோராலும் ஒப்புக் கொள்ளக்கூடிய கருத்து ஏற்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், இந்தக் கால அளவை நிர்ணயிக்கக்கூடியவர்கள் இந்தி பேசுகின்றவர்கள் அல்ல, இந்தி பேசாத மக்கள்தான். ஆங்கிலத்தை விட்டுவிடலாமா, கூடாதா என்பது பற்றி முடிவு செய்யக்கூடிய பொறுப்பும் அதிகாரமும் இந்தி பேசாத மக்களிடந்தான் இருக்கவேண்டுமென்ற இந்தக் கருத்து இன்றைக்கு அநேகமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலே ஒருசில கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் கூட அந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மொழிப் பிரச்னை சம்பந்தப்பட்ட வரையில் இன்றையதினம் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், பாட மொழியைப் பொறுத்தவரையில் பல்வேறு கருத்துக்கள் இருந்து வருகின்றன. இன்றைக்கு ஆங்கிலம் பாட மொழியாக இருக்கிறது. ஆங்கிலம் பாட மொழியாக இருக்கும் வரையில் வேறு பிரச்சினை இல்லை. ஆங்கிலத்தைத் தவிர்த்து வேறு மொழியில் பாடம் சொல்லிக்கொடுக்கவேண்டுமென்று சொல்லும்போது எந்த மொழியைப் பயன்படுத்துவது என்பதில் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. அதிலே, ஒரு கருத்து அகில இந்தியாவிலும் பாட மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை எடுத்துவிடும்போது, ஒரு மொழிதான் பாடமொழியாக இருக்கவேண்டும், அது இந்தி மொழியாகத்தான் இருக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அந்தக் கருத்து சரியான கருத்தல்ல. ஆங்கிலத்தை நீக்கிவிட்டு நம் நாட்டு மொழியிலே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அது பிராந்திய மொழியாகத்தான் இருக்கவேண்டுமென்ற கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு சிலர் வேறு கருத்துக்களைச் சொல்லிவந்த போதிலும், அந்தந்த "பிராந்திய மொழி" தான் இருக்கவேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

நிர்வாக மொழி ஒருபுறமிருக்க, பாட மொழி ஒருபுறமிருக்க, ஒரு பகுதிக்கும் இன்னொரு பகுதிக்கும் இணைப்பாக ஒரு மொழி இருக்க வேண்டியது அவசியம். தற்போது அந்த மொழி ஆங்கிலமாக இருக்கிறது. அதற்கு மேல், ஒருவருக்கொருவர் பேசித் தெரிந்துகொள்ள, நம்முடைய நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செல்லும்போது மொழி பெயர்ப்பாளர்களைக் கொண்டு பேசிக் கொள்ளவேண்டிய நிலைமையைப்போல இல்லாமல், இணைப்பாக ஒரு மொழி இருக்கவேண்டுமென்றும், ஆங்கிலம் போகின்ற காலத்திலே வேறு ஒரு பொது மொழி வேண்டுமென்ற காரணத்தால் இணைப்பு மொழியாக இந்தி இருக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இந்த முறையில் நாம் இன்றைக்கு மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண முடிவு செய்திருக்கிறோம். இந்த முறையில் மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காணக்கூடிய முறையில்தான், மொழிவாரி மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதுதான் இந்தத் துறையில் நாம் அடைந்திருக்கும் கட்டம்.

இதற்கு மேலாக இன்றைக்கு நாட்டை இணைக்கக்கூடிய அளவுக்கு மாபெரும் சக்தியாக இருப்பது "எகனாமிக் டெவலப்மெண்ட் த்ரூ ப்ளானிங்"—திட்டமிட்ட அடிப்படையில் பொருளாதார வளர்ச்சியை அடைவது என்பதுதான். இன்றைக்கு நாடு முழுவதும் திட்டத்தைப் பற்றி விவாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமான அளவுக்குத் திட்டம் வேண்டுமென்று கேட்கக்கூடிய நிலைமை எங்கும் ஏற்பட்டிருக்கிறது. சட்டசபையில் மட்டுமல்ல, சிறு சிறு கிராமங்களில்கூட விவசாயிகள், தொழிலாளர்கள், பாமர மக்கள் திட்டத்தின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பேசவும், விவாதிக்கவுமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாட்டை ஒன்றுபடுத்தக்கூடிய பெரிய பொருளாதார சக்தியாகத் திட்டம் விளங்குகிறது என்பதை வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திட்டமானது பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதாக இருப்பினும், மற்றத் துறைகளிலும்கூட நாட்டை ஒன்றுபடுத்தக்கூடிய பெரும் சக்தியாக இன்றைக்கு விளங்குகிறது என்பதை உணருகிறோம். அந்த அடிப்படையில்தான் இன்றைக்குத் திட்டமிட முன்வந்திருக்கிறோம். நேற்று திட்டத்தைப் பற்றிப் பேசும்போது திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். "திட்டம் என்பது பட்டியல் போட்டுக் காட்டுவதல்ல, ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்" என்று கூறினார்கள். அதை நான் மிகவும் வரவேற்கிறேன். திட்டம் என்பது ஒரு அடிப்படையான நோக்கத்தை, லட்சியத்தை அடைவதற்காக அமைத்துக்கொண்ட பாதையாக இருக்க வேண்டும். இன்னொரு கருத்தையும் அவர்கள் சொன்னார்கள். அந்த மாதிரி நோக்கத்துடன் திட்டமிடும்போது "அதிலே ஏற்றத்தாழ்வுகள் இருக்கக் கூடாது, தனி மனிதனுக்கிடையேயோ, பிராந்தியங்களுக்கிடையேயோ ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது" என்று

[Sri C. Subramaniam] [13th November 1961

எடுத்துப் பேசினார்கள். அதையும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன். இதுதான் திட்டத்தினுடைய நோக்கம் என்று திட்டக் கமிஷன்கூட ஒப்புக்கொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது. திட்டத்தைப் பற்றி நம் சபையிலே வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலும் இந்தப் பொது நோக்கு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டுமென்று சொல்லும் போது, தனி மனிதர்களுக்கிடையே இருக்கக்கூடிய ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டுமென்றால் பிராந்தியங்களுக்கிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்காமல் முடியாது. அந்த முறையில்தான் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. எப்படி நாம் மூன்றாவது தேர்தலுக்குத் தயாராக இருக்கிறோமோ, அதேபோன்று பொருளாதாரத் திட்டத்திலும் இரண்டு திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, ஓரளவு வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டு, இன்றைக்கு மூன்றாவது திட்டத்தை உருவாக்கி அதை நிறைவேற்ற முன் வந்திருக்கிறோம். இந்தத் திட்டமானது நாட்டை இணைப்பதில் பெரியதொரு சக்தியாக அமைந்து நாட்டை ஒன்றுபடுத்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு ஒரு நாடு என்று சொல்லும் போது, அந்த நாடு தனித்து வாழ முடியாது. இன்றைக்கு உலக அரங்கில் ஏற்படும் நிகழ்ச்சிகள் காரணமாக எந்த நாடும் தனித்து இயங்க முடியாமல் உலக அரங்கில் பங்கு கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நாம் விரும்பினாலும்கூட இன்றைக்கு தனித்து வாழ முடியாது. அது இருக்கட்டும். இன்றைக்கு பலம் பொருந்திய—ரொம்பவும் முன்னேறியிருக்கக் கூடிய எந்த நாடும் கூட, அமெரிக்காவை எடுத்துக்கொண்டாலும், ரஷ்யாவை எடுத்துக் கொண்டாலும் அவைகளும்கூட—எவ்வளவு பலம் இருந்தாலும்கூட பொருளாதார சக்தி இருந்தாலும்கூட—தனித்து வாழ முடியாது. இன்றைக்கு எல்லா நாடுகளும் உலக அரங்கில் சேர்ந்து இயங்கியாக வேண்டியிருக்கிறது. அந்த முறையிலே உலக அரங்கிலே 10 ஆண்டுகளுக்குள், சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு நாம் சாதித்திருப்பது என்ன, நமது வெளி நாட்டுக் கொள்கை எந்த முறையில் அமைந்திருக்கிறது என்று பார்க்கும்போது இன்றைக்கு—இதைப் பற்றி, கொஞ்சகாலத்திற்கு முன் நமக்குள் கருத்து வேற்றுமை இருந்தாலும்—பொதுவாக வெளிநாட்டுக் கொள்கை எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் அமைந்திருப்பது மட்டுமல்ல, நல்ல முறையில் வெற்றி பெற்று வருகிறது. சமீபத்தில் நமது நாட்டுப் பிரதமர் பெல்கிரேட் சென்றிருந்தபோது, ரஷ்யா சென்றிருந்தபோது, இன்று அமெரிக்கா சென்றிருக்கும்போது, இன்றைக்கு எவ்வளவு உன்னதமான வெற்றியடைந்திருக்கிறது என்பதில், நம் நாட்டின் பெருமை உலக அரங்கில் எந்த அளவு உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இதற்கு தனிப்பட்ட முறையில் நமது பிரதமர் பெரும் பொறுப்பு என்று இருந்தாலும், இது தனிப்பட்டவர் என்ற முறையில் ஏற்பட்ட சிறப்பு என்று மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது. முக்கிய காரணம், அவர்கள்

13th November 1961] [Sri C. Subramaniam]

உருவாக்கிய, பொதுவாக இருக்கக்கூடிய வெளி நாட்டுக் கொள்கையாகும். உலக அரங்கில் ஏற்பட்ட சிக்கல்களுக்கு தீர்வு காணவும், நாடுகளுக்குள் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் நம் கொள்கை உதவியது என்று பார்க்கும்போது இன்றைக்கு உள் நாட்டிலே நாம் எடுத்த பல்வேறு முயற்சிகள், ஆற்றிய பல்வேறு சாதனைகள் ஒருபுறம் இருக்க, உலக அரங்கிலேயும் இன்றைக்கு இந்தியா என்று சொல்லக்கூடிய ஒரு நாடு ஒன்றுபட்ட சக்தியாக, ஒன்றுபட்ட சமுதாயமாக இருந்து, அதனுடைய வெளி நாட்டுக் கொள்கை அமைந்து, உலக அரங்கில் நல்லதொரு விளைவைக் கொண்டுவர இயங்கி வருகிறது என்று பார்க்கிறோம். இவைகளெல்லாம் நாம் சாதித்த சாதனைகளின் அடிப்படையாக இருக்கக் கூடியவை.

அடிப்படை கருத்துக்களில் ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டனவா, தவறுகள் ஏற்பட்டு விட்டனவா, சிக்கல்கள் ஏற்பட்டனவா என்று பரிசீலனை செய்து பார்க்கும்போது, அடிப்படையான சாதனைகளால், அடிப்படையாக ஏற்படுத்தியிருக்கக்கூடிய அமைப்புகளால்—பல நிபுணர்கள், உலகத்தில் பல பகுதியில் இருப்பவர்கள் இதை ஆராய்ந்து அலசிப் பார்த்திருக்கிறார்கள்—எந்தவிதமான குறைபாடும் இல்லை, எந்தவிதமான கோளாறுகளும் இல்லை என்றுதான் அவர்களும் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இவ்வாறு அடிப்படையாக நாம் தேசீய ஒற்றுமையை அதிகப்படுத்தக்கூடிய முறையிலே சாதனைகளைச் சாதித்திருந்தாலும், பல்வேறு அமைப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தாலும், சில சக்திகள் ஆங்காங்கு நாட்டிலே இருக்கக்கூடிய சூழ்நிலையைப் பாதிக்கக் கூடிய முறையிலே இயங்கி வந்திருக்கின்றன என்பதை ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும். நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் காரணமாகவே இந்த சக்திகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பழைய காலம் மாதிரி அடிமைகளாகவே இருந்திருந்தால் இந்தப் பிரச்சினைகள் தோன்றியிருக்காது. சுதந்திரம் பெற்ற பிறகு பல காரியங்களைச் சாதித்ததன் காரணமாக, எடுத்த முயற்சிகளின் காரணமாக, அதிலிருந்து பல புதிய பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன என்று நாம் பார்க்கிறோம். அது வளர்ச்சியின் இயற்கை, வளர்ச்சியின் தத்துவம், வளர்ச்சியின் இயற்கை விதி என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

வளர்ச்சி காரணமாகவே பல பிரச்சினைகள் பொருளாதாரமானாலும் சரி, தனி மனிதன் ஆனாலும் சரி, தோன்றுகின்றன. பிரச்னை இல்லாமலிருந்தால் வளர்ச்சி இருக்காது. பிரச்னை இல்லாமல் வளர்ச்சி ஏற்படவேண்டுமென்று சொல்லுவது இயற்கைக்கு விரோதமானது. வளர்ச்சி என்றால் மாறுதல் ஏற்பட்டுத்தான் ஆகவேண்டும்—அதற்கான பிரச்சினைகளும் ஏற்பட்டுத்தான் தீரும். பிரச்சினைகள் இல்லாது மாற்றங்கள்—முன்னேற்றங்கள்—ஏற்படவேண்டுமென்று சொன்னால், அது முடியாது. ஆகவே, எடுத்த முயற்சிகள்

[Sri C. Subramaniam] [13th November 1961

காரணமாகவே, நாம் சாதித்த சாதனைகள் காரணமாகவே, ஆங்காங்கு சில பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. உதாரணமாக இன்றைக்கு மொழிப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளுங்கள். ஜனநாயக அடிப்படையில் நம் அரசாங்கம் நடைபெறவேண்டுமென்று சொன்னால் மொழி அடிப்படையில் நம் ராஜ்யங்களை மாற்றி அமைக்கவேண்டுமென்று நாம் முயற்சி செய்தோம். இது தவறான கருத்து என்று யாரும் சொல்ல முடியாது. இது பல ஆண்டுகளுக்கு முன் மகாத்மாஜி அவர்கள் வற்புறுத்தியது. இதிலே தனித்தனி மொழி ராஜ்யங்கள் அமையவேண்டுமென்பதில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இது முழுவதும் தவறு என்று யாரும் சொல்லமுடியாது. அதுவும் மொழிப் பிரச்னை தீர எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. இந்தக் காரணத்தினால் இன்றைய தினம் பல பிரச்சினைகள் வந்திருக்கின்றன. என்ன பிரச்சினை ? இப்போது நம் சென்னை ராஜ்யத்தை எடுத்துக்கொள்ளுங்கள். முன்பு ஆந்திராப் பகுதி இங்கு சேர்ந்திருந்தது, கன்னடப் பகுதி சேர்ந்திருந்தது, மலையாளப் பகுதி சேர்ந்திருந்தது, நம் தமிழ்நாடும் சேர்ந்திருந்தது. இது நான்கு மொழி ராஜ்யமாக அமைந்திருந்தது. அப்போது நான்கு மொழிகள் பேசுகிறவர்களுக்கும் பொதுவான ராஜ்யமாக அமைந்திருந்தது. இன்றைக்கு தமிழ்நாடு என்று பிரித்தவுடனே இங்கே கன்னடம் பேசுகிறவர்கள் இல்லாமல் போய்விடவில்லை—இருக்கிறார்கள். கன்னடம் பேசுகின்றவர்கள் சிறுபான்மையாக இருக்கக்கூடிய நாடாகிவிட்டது தமிழ்நாடு; மலையாளம் பேசுகிறவர்கள் சிறுபான்மையாக இருக்கக்கூடிய நாடு தமிழ்நாடு; தெலுங்கு பேசுகிறவர்கள் சிறுபான்மையாக இருக்கக்கூடிய நாடு தமிழ்நாடு, மொழிவாரி ராஜ்யம் அமைந்த காரணத்தினால் சிறுபான்மையினராகிவிட்டார்கள் தெலுங்கு பேசக் கூடியவர்கள்; சிறுபான்மையினராகிவிட்டார்கள் கன்னடம் பேசக்கூடியவர்கள்; சிறுபான்மையினராகிவிட்டார்கள் மலையாளம் பேசக்கூடியவர்கள். ஆக இந்தப் பிரச்சினை இங்கு வந்ததற்குக் காரணமே மொழிவாரி ராஜ்ய அமைப்புத்தான். இது இல்லாமலிருந்தால் இவர்களெல்லோரும் இங்கே நம் மொழியும் ராஜ்யத்தின் பொது மொழிகளுள் ஒன்று என்ற முறையிலே முன்பு இருந்த மாதிரி இருந்துகொண்டிருப்பார்கள். இந்தப் பிரச்னை ஏற்படுவதற்கு அது காரணமாக இருந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு ஆங்காங்கு எல்லை வகுக்கவேண்டுமென்பதில் தகராறுகள் ஏற்பட்டிருக்கின்றன. சில இடங்களில் அவைகள் இன்னும் தீராமல்கூட இருக்கின்றன. எல்லைக்கோடு எப்படிப் போடவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன—இதனால் சர்ச்சைகள் ஏற்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் மொழிப் பிரச்னை காரணமாக சிறுபான்மை மொழியினர் இருப்பதால் அவர்களுடைய உரிமைகள் என்ன, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய தெலுங்கர்களின் அதிகாரங்கள் என்ன, உரிமை என்ன, அதே மாதிரி கன்னடக்காரர்களின் உரிமை உரிமை என்ன, அதே மாதிரி மலையாளம் பேசுகின்றவர்களின் உரிமை என்ன என்ற பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

13th November 1961] [Sri C. Subramaniam]

அஸ்ஸாம் நாட்டை இன்றைக்கு எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கக்கூடிய வங்காளி பேசுகின்றவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, அஸ்ஸாமீஸ் பேசுகின்றவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது, இரண்டு பேர்களுக்கும் மத்தியில் உள்ள தொடர்பு என்ன என்ற முறையில் இம்மாதிரி சிக்கல்கள் ஏற்படுகின்றன. மொழிவாரி மாகாணங்கள் ஏற்பட்ட காரணத்தினால் தம் தம் மொழியின் பேரில் பற்று அதிகமாக ஏற்படுகின்ற நிலைமையும் ஏற்பட்டது. அதோடு, அது பற்றோடு இருந்து விடாமல் வெறியாகவும் சில இடங்களிலே மாறியது. மொழி வெறி காரணமாக கலவரங்கள் ஏற்படக்கூடிய நிலைமையும் ஏற்பட்டது. மற்ற இடங்களில் சிறு சிறு கலவரங்கள் ஏற்பட்டுக்கொண்டு இருந்தாலும் சமீபத்தில் அஸ்ஸாமில் மொழி அடிப்படையில் சில கலவரங்கள், மொழிப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை என்று தோன்றக்கூடிய நிலையில் அங்கு ஏற்பட்டது மாத்திரமல்லாமல், பெரிய கலவரமாக ஏற்பட்டு, அதோடு ஆங்காங்கு குழப்பமான நிலைமையும் ஏற்பட்டு மொழிப் பிரச்சினை நாட்டுப் பிரச்சினையாகத் தென்படக்கூடியதாக ஏற்பட்டது.

அதேமாதிரி இன்றைக்கு அதிகாரத்தை மக்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறோம்—21 வயது வந்த ஆண்களிடத்திலும், பெண்களிடத்திலும் ஒப்படைத்திருக்கிறோம். இருபத்தொன்று வயது வந்த ஆண்கள், பெண்கள் எல்லோருக்கும் ஓட்டு உரிமை உண்டு என்று சொல்லும்போது அவர்களுடைய பெருவாரியான ஆதரவைப்பெற்றுத்தான் சட்டசபைக்கு வரமுடியும். யார் சட்ட சபையில் பெரும்பான்மையினராக இருக்கிறார்களோ அவர்கள்தான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்தவுடனே, அவர்களுடைய ஆதரவை எப்படிப் பெறுவது என்ற முறையில் பல்வேறு சிக்கல்கள் கிளம்ப ஆரம்பித்தன. சாதியை ஒழிக்கவேண்டுமென்று அந்தப் பணியில் நாம் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். சாதியை ஒழிக்கவேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம். இருந்தாலும் எல்லோருக்கும் உரிமை--வாக்குரிமை—கொடுத்ததன் காரணமாக, எப்படி சட்டசபைக்கு வருவது, எப்படி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற அடிப்படையில் புதிய சிக்கல் ஏற்பட்டு சாதி அடிப்படையில் ஜெயிக்க முடியுமா என்று ஒரு சிலர் நினைப்பது இயற்கைக்கு விரோதம் என்று சொல்ல முடியாது—ஆனால் தவறு என்று சொல்ல விரும்புகிறேன். அந்த அடிப்படையில் ஆரம்பித்து சாதியை ஒழிப்பதற்குப் பதில் ஜனநாயக அடிப்படையில் எல்லோருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் இயங்க ஆரம்பித்தபோது சாதி வேறு ரூபத்தில், அரசியல் ரூபத்தில், தலை காட்ட ஆரம்பித்திருக்கிறது. அதற்கு ஜனநாயகத்தை குறை கூற முடியுமா—எல்லோருக்கும் வாக்குரிமை கொடுத்ததுதான் தவறு என்று சொல்ல முடியுமா ? இப்போது போகக்கூடிய போக்கைத் தடுத்து அதைத் தவிர்க்க வேண்டுமென்று சொல்லுவதுதான் சரியாகும்.

அதோடு மட்டுமல்ல, மத அடிப்படையிலும் இன்றைக்கு பிளவு சக்திகள் ஏற்பட்டிருக்கின்றன. இன்றைக்கு முஸ்லீம்கள் பிரிந்துபோய் பாகிஸ்தான் அமைத்துக் கொண்டபோதிலும்கூட, இன்னும் பல பகுதிகளிலே அவர்கள் வாழ்கிறார்கள். சில பகுதிகளிலே பெரும்பான்மையினராகவும் வாழ்கிறார்கள். ஜாதியின் அடிப்படையிலே, மதத்தின் அடிப்படையிலே ஓட்டு கேட்கப்படுகின்றது. இப்படி ஓட்டுக் கேட்கும்போது, சமூகத்திலே கலவரங்கள் ஏற்படுகின்றன. இதை விளக்கக்கூடிய முறையிலே ஜபல்பூரிலே இந்து-முஸ்லீம் கலவரங்கள் ஏற்பட்டன. இதைப்போல் இன்னும் வேறு சில இடங்களிலேயும் கலவரங்கள் ஏற்பட்டன. ஆகவே, இன்றைக்கு மொழிப் பிரச்னை, ஜாதிப் பிரச்னை, மதப் பிரச்னை ஆகியவைகளின் அடிப்படையிலே ஆங்காங்கு கலவரங்கள் நிகழ்ந்து கொண்டு வருவதை நாம் பார்க்கின்றோம். ஆனால் இதிலே நாம் எடுத்துக்கொண்ட முயற்சி தவறல்ல. அதன் காரணமாக பல போக்குகள், சக்திகள் கிளம்பியிருக்கின்றன. இத்தகைய சக்திகள் கிளம்புவது இயற்கையே. இந்த தீய சக்திகளை அடக்குவது எப்படி என்பதுதான், ஒழிப்பது எப்படி என்பதுதான் இன்றைக்கு நம் முன்னுள்ள பெரும் பிரச்னை. முக்கியமாக தேர்தல் காலங்களிலேதான் இந்த தீய சக்திகள் அதிகமாகத் தலை தூக்குகின்றன. அப்படி தேர்தல் காலங்களிலே ஏற்படக்கூடியது சரியான போக்கல்ல. இந்தப் போக்கு நாட்டை சீர்குலைக்கக் கூடியதே.

இந்த முறையிலே நாட்டில் சில கிளர்ச்சிகள் ஏற்பட்டபோதிலும், இவை சமுதாயத்தை எப்படி பாதிக்கின்றது என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். சமுதாயம் எப்படி அமைகின்றது என்பதைப் பார்க்க வேண்டும். மக்கள் எப்படியோ, அப்படித்தான் சமுதாயம் உருவாகின்றது. இந்த சமுதாயத்தை வருங்காலத்திலே அமைக்கக் கூடியவர்கள் நம் நாட்டிலே உள்ள குழந்தைகள், இளைஞர்கள். இந்த இளைஞர்களை நாம் எப்படி உருவாக்குகின்றோமோ, அந்த வகையிலேதான் சமுதாயம் அமையப் போகின்றது. ஆனால் இப்போதுள்ள சமுதாயத்திலே இம்மாதிரியான பல நிகழ்ச்சிகளும் அவர்களிடையேயும் பிரதிபலிக்க ஆரம்பித்து விட்டன. கல்வி நிலையங்களிலேயும் இந்த மொழிச் சண்டை, ஜாதிச் சண்டை, மதச் சண்டை ஆகியவை தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றன. இதன் காரணமாக நம்முடைய தமிழ் நாட்டிலே பெரிய நிகழ்ச்சிகள், பெரிய சம்பவங்கள் நடைபெறாவிட்டாலும் வடக்கிலே பல சர்வகலாசாலைகள் மூடப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதேபோல் இன்னும் சில மாகாணங்களிலேயும் இவ்வித நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. அதைப் பார்த்து இங்கும் ஒரு சில இடங்களிலே வேலை நிறுத்தம் போன்றவைகள் செய்யப்பட்டன. இந்த விதத்திலே இங்கும் சமுதாயத்திலே பிற்போக்கு சக்திகள், பிற்போக்கு நிகழ்ச்சிகள் தலைகாட்ட ஆரம்பித்திருக்கின்றன. வளர்கின்ற சமுதாயத்திலேயே இவ்வித கிளர்ச்சிகள் ஏற்படுமானால், தொடர்ந்து சமுதாயம் வளரும்போதும் இவ்வித மனப்பான்மைதான் வளர்ந்துகொண்டு போகும்.

கல்விப் பிரச்னையின் மூலம்தான் நாட்டைச் சீர்படுத்த முடியும். அதற்காகத்தான் இதிலே முக்கிய கவனம் செலுத்தவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். இந்த நிலைமையிலே எப்படி இதற்குத் தீர்வு காண்பது என்பதுதான் . இப்போது பிரச்னையாக இருந்து வருகிறது.

ஆகவே, அஸ்திவாரத்தைப் பலப்படுத்த வேண்டுமானால், அடிப்படையிலேயே இவ்வித பிளவு சக்திகளை வளரவொட்டாமல், ஆரம்ப காலத்திலே இவற்றையெல்லாம் எப்படி அடக்குவது என்பதற்கு தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்காகத்தான் இந்த மகாநாடுகள் அவ்வப்போது கூட்டப்படுகின்றன. இதற்கு எப்படித் தீர்வு காணவேண்டுமென்பதுதான் முக்கியமாக நாம் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது. அதைத்தான் நாம் முக்கியமாக முதலிலே யோசிக்க வேண்டியிருக்கிறது.

முதலிலே எடுத்துக் கொண்டால், ராஜ்ய பஸ்களுக்கு ராஜ்யங்களிடையே இன்றைக்கு பலத்த போட்டி இருந்து வருகிறது. ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய பிராந்தியங்களை, ராஜ்யங்களைப் பற்றித்தான் நினைக்கிறார்கள். அப்படி நினைக்கும்போது, அதன் காரணமாக பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இங்கு தமிழ் நாட்டைப் பொறுத்த வரையிலே பார்ப்போமானால், தமிழ் நாட்டிலே நான் மந்திரியாக இருக்கிறேன், என்னுடன் நீங்களும் இந்த சபையின் அங்கத்தினர்களாக இருந்து, நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து பல அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்தி, தமிழ் நாட்டை நாம் வளப்படுத்த வேண்டுமென்று நினைக்கிறோம். அப்படி நினைப்பதிலே தவறு ஒன்றுமில்லை. அப்படி நினைக்காமல் இருந்தால்தான் தவறு. ஆனால் அவ்வாறு நினைக்கின்ற காரணத்தினாலே, மற்ற ராஜ்யங்களின் மேல் வெறுப்போ, துவேஷ மனப்பான்மையோ ஏற்படக் கூடாது. அப்படி ஏற்பட்டால், அதுதான் சிக்கல் ஏற்படக்கூடிய நிலைமையை உண்டாக்குகின்றது. அப்படி ஒரு மனப்பான்மை ஏற்பட்டு இயங்குமானால், அப்போதுதான் நம் நாட்டின், நம் ராஜ்யத்தின் பேரில் நமக்கு இருக்கக்கூடிய ஆக்க சக்தியே, அழிவு சக்தியாகவும் ஆகிறது. நாம் அப்படி நினைக்கும்போது, மற்றவர்களும் அப்படி நினைக்காமலா இருப்பார்கள்? அப்படி நினைக்கும் போதுதான் இரண்டுக்கும் மோதல் ஏற்பட்டு, அதன் காரணமாக நாட்டை முன்னேற்ற வேண்டுமென்கின்ற எண்ணமே, அழிவுச் சக்தியாகவும் ஆகிவிடுகின்றது. இதைப் போக்குவது எப்படி என்று பார்க்கும்போது, பல பேர் பலவிதமான பரிகாரங்களைச் சொல்கிறார்கள். அதிலே ஒரு சிலர், இப்படி பல பகுதிகளாக இருப்பதுதான் இதற்கெல்லாம் காரணம். ஆகவே, சமஷ்டி அடிப்படையில் யில்லாது இந்தியா பூராவுக்கும் ஒரே அரசாக ஏற்படுத்தவேண்டுமென்று சொல்கிறார்கள். அதாவது டெல்லியிலே மட்டும் ஒரு அரசாங்கம் நடந்து வந்தால் போதுமென்று சொல்கிறார்கள். இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன் உலகத்திலே நம்முடனேயே நம் காலத்திலேயே பல நாடுகள்

[Sri C. Subramaniam] [13th November 1961

சுதந்திரம் பெற்று இன்றைக்கு இயங்கிக்கொண்டு வருகிறது. அங்கெல்லாம் சமஷ்டி அடிப்படையில் நடந்துகொண்டுவரும் அரசாங்கங்களையும் பாருங்கள், நம் நாட்டையும் பாருங்கள். நம் நாட்டிலே இந்தியாவானது பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் தனியாக சட்டசபை ஏற்படுத்தி, தனித்தனியாக நிர்வாகம் ஏற்படுத்தி, பரவலான முறையிலே ஆட்சி நடைபெற்றுவருகிறது. இப்படி பரவலான முறையிலே ஆட்சி நடக்கின்ற காரணத்தினாலேதான், நம்முடைய நாட்டிலே ஒரு உறுதியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எங்கெங்கெல்லாம் இது தேவையில்லை என்று எண்ணப்பட்டு ஒன்றுபட்ட அரசாங்கம் அமைக்கப்பட்டனவோ, அங்கெல்லாம் இன்றைக்கு ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டுக்கொண்டு இருப்பதைக் காண்கிறோம். உதாரணமாக, இந்தோனேஷியாவை எடுத்துக் கொண்டாலும் சரி, கிழக்கு நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவைகளை எடுத்துக் கொண்டாலும், அங்கெல்லாம் இப்போது குழப்பமான நிலைமைதான் இருந்துகொண்டு வருகிறது. அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு பாகிஸ்தானை எடுத்துக்கொண்டால், முதலிலே நம்மைப் பின்பற்றுவதாக இருந்தும், பின்னாலே ஒரு ராஜ்யமாக ஏற்படும் நிலைமை ஏற்பட்டதால், இப்போது என்ன ஆயிற்று? இப்போது முன்பிருந்த அரசாங்கம் மாறி, ராணுவ சர்வாதிகார ஆட்சியே அங்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு ஜனநாயக அடிப்படையிலே வாழ வேண்டுமானால், தொடர்ந்து அரசாங்கம் நடக்க வேண்டுமானால், அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, அந்தந்தப் பிரதேசத்திலே இருக்கக்கூடிய சூழ்நிலைக்குத் தகுந்தபடி ராஜ்யங்களைப் பிரித்து அமைக்கவேண்டுமே தவிர, ஒன்றுபட்ட அரசாங்க முறையில் **(Unitary State)** அமைப்பது சரியான முறையல்ல என்பதை உலக நிகழ்ச்சிகள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றன.

இன்றைக்கு காங்கோவை எடுத்துக் கொண்டால், அங்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சிக்கலுக்கு ஓர் தீர்வு காண முடியாமல், ஒரு பெரும் போரே நடந்துகொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று பார்க்கும்போது, ஒன்றுபட்ட அடிப்படையில் ராஜ்யத்தை அமைக்கவேண்டுமென்பதே யாகும். அப்படியில்லாமல், பரந்த ஒரு நாடு ஒரே ராஜ்யமாகத்தான் இயங்கவேண்டுமென்று, அந்த நோக்கத்தோடு இயங்கி வருமானால், அந்நாடு கண்டிப்பாக பல கஷ்டங்களுக்கு உள்ளாக நேரிடும். என்று திட்டவட்டமாக நாம் சொல்லலாம். ஒரு பரந்த நாட்டை ஒன்றுபட்ட அரசாங்கமாக ஒரே ராஜ்யத்தின்கீழ் கொண்டு வந்தால் நல்லது என்று சொல்லக்கூடியவர்கள் நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்க வேண்டுமென்று சொல்லக்கூடியவர்களாகவே இருப்பார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நல்ல வேளையாக அந்தக் கொள்கையை உடையவர்கள் நம் நாட்டிலே சிறுபான்மையினராகத்தான், சிறு சக்தியாகத்தான் விளங்கி வருகிறார்கள். இது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் இதற்குத் தீர்வு காண நாட்டைப் பிரிக்கவேண்டுமென்று சொல்லக்கூடி-

13th November 1961] [Sri C. Subramaniam]

யவர்களும் இருக்கிறார்கள். அதாவது மூன்று நான்கு ராஜ்யங்களைச் சேர்த்து ஒரு நாடாக பிரிக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். மற்றொரு சாரார், அப்படிக் கூடாது தமிழ் நாடு தனியாக பிரியவேண்டுமென்று சொல்கிறார்கள். எப்படி நாடு முழுவதும் ஒன்றாக ஒரு அரசின்கீழ் இருந்தால், அதனால் நாட்டிலே சீர்குலைவுகள் எல்லாம் ஏற்படுமோ, அது போல் இப்படி தனித்தனியாக பிரிக்கவேண்டுமென்று சொல்லுபவைகளும் காலப் போக்கிலே அழிந்துவிடும். **10-30 a.m.**

அதிருஷ்டவசமாக இந்த சக்திகள் என்னுடைய கருத்திலே குறைவான சக்திகள். ஒரு சிலர் மட்டும் தான் இவ்வாறு பேசுகிறார்கள், இவ்வாறு நினைக்கிறார்கள். எப்படி ஒரே அரசின் கீழ் வருவது முடியாத காரியமோ அதே போல் நாட்டை பிரிப்பது என்பது முடியாத காரியம் என்பதை உறுதியாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த இரண்டு சக்திகளுக்கும் மத்தியிலே சமஷ்டி அடிப்படையிலே அந்தந்த பிரதேசங்களுக்கு உரிமைகள் கொடுத்து, அந்தந்த பிரதேசங்கள் வளர்வதற்கு என்ன செய்யவேண்டுமென்ற அடிப்படையில் அதைப்பற்றி ஏதாவது பரிசீலனை செய்யவேண்டுமென்றாலும், மத்திய அரசாங்க அமைப்பில், ராஜ்ய அரசாங்க அமைப்பில் அவைகளுக்குள்ளே உள்ள தொடர்புகளில் காலப்போக்கிலே மாறுதல் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று சொன்னாலும், அது பரிசீலிக்கத் தக்க விஷயம். நாட்டின் ஒற்றுமையை சீர்குலைக்கும் முறையிலே ராஜ்யங்களையே எடுத்து விடவேண்டுமென்று சொன்னாலும் சரி, அல்லது நாட்டை பிரிக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, அது ஒப்புக்கொள்ளக்கூடியது அல்ல, நாடும் அதை ஒப்புக்கொள்ளாது என்ற கருத்தை வலியுறுத்துகிறேன். இந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது, இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் மத்தியிலே தீர்வு காணும்பொழுது, சமஷ்டி அடிப்படையிலே ஒன்றுபட்ட இந்தியாவாகத்தான் தொடர்ந்து நடத்திச் செல்ல முடியும்.

அதேமாதிரி தான் மொழிப் பிரச்னையும். ஒரு பக்கம் இந்தி எல்லாவற்றிற்கும் வந்துவிட வேண்டுமென்ற வெறி, இன்னொரு பக்கம் இந்தி இந்தப் பக்கமே வரக்கூடாது என்று எதிர்ப்பு வெறி. இந்த இரண்டுக்கும் மத்தியிலே நம்முடைய மொழி வளரக்கூடிய முறையிலே, உரிமைகள் பாதிக்கப்படாத வகையிலே, உரிமைகள் பாதுகாக்கப்படக்கூடிய முறையிலே நாட்டிற்கு ஒரு பொது மொழியை ஏற்படுத்திக்கொள்ள முடியுமா, உலகத்தில் வேறு இடங்களில் இந்த மாதிரி நடந்திருக்கிறதா என்பதைப் பார்த்து நாம் அந்த முறையில் தீர்வு காணவேண்டும். இதிலும் இரண்டு கோடியிலும் இல்லாமல் மத்தியில் இருந்து சுமுகமான முறையில் தீர்வு காணமுடியும். நிர்வாக மொழியிலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒன்றுபட்ட கருத்து. அதேமாதிரி பாட மொழியிலே நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றுபட்ட கருத்து; அதே முறையில் என்னென்ன, மொழி படிக்க வேண்டும் என்பதிலும் எல்லோரும் உட்கார்ந்து பரிசீலனை செய்து மும்மொழிக் கொள்கையை ஒப்புக்கொண்டிருக்கிறோம். மொழிப் பிரச்னையின் காரணமாக நாம் ஒன்றுபட்டு இருக்க முடியாது, அல்லது ஒரு மொழிதான்

எல்லோர் பேரிலும் திணிக்கப்படவேண்டும் என்ற முறையிலே நினைப்பது தவறு. நாடு ஒன்றாக இருக்கக்கூடிய முறையில், எப்படி ராஜ்யங்களை ஏற்படுத்தி, அவைகளில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்திருக்கிறோமோ, அதேபோல வெவ்வேறு மொழிகள் வளர்வதற்கு வாய்ப்பு கொடுத்து, அந்தந்த மொழிகள் அவைகளுக்குண்டான உரிமைகளை ஆங்காங்கு பெறமுடியும் என்ற முறையில் மொழிப் பிரச்னைக்கு தீர்வு காணமுடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டின் ஒற்றுமையை சிதரடிக்காமல், கலவரம், குழப்பம் ஏற்படாமல் அதற்கும் தீர்வு காண முடியும்.

இவ்வாறு பல்வேறு விஷயங்களிலே தீர்வு காணமுடியும் என்று சொல்லும்பொழுது, திட்டத்தின் மூலம் பிரதேச ஏற்றத்தாழ்வுகளை நீக்கவேண்டும் என்று நினைக்கிறோம், தனி மனிதர்களுக்குள்ளே இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகளை நீக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். ஆனால், இவைகளெல்லாம் உடனடியாக மந்திர சக்தியால் அல்லது மாயா ஜாலத்தால் ஒரே நாளில், ஒரே வருஷத்தில் ஏற்படக்கூடியது அல்ல. தொடர்ந்து திட்டம் போட்டு அந்த லட்சியப்பாதையில் செல்லக்கூடியவர்களாக இருக்கிறோம். இப்பொழுது அதற்கு உடனடியாக எடுக்கக் கூடிய பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். அதுவும் பல அடிப்படையிலே எடுத்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய நாட்டில் தொழில்கள் வளர வேண்டும் அன்னிய நாடுகளை என்றைக்கும் எதிர்பார்த்து இருக்கக் கூடாது, நம்முடைய சக்தியை பெருக்கியாக வேண்டும். அதற்கு வசதியாக இருப்பதற்கு கனரகத் தொழில்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று நடவடிக்கை எடுக்கிறோம். ஒரு சில பகுதிகளில் அதிகமாக தொழில் வளர்ச்சி தற்போது ஏற்படுகிறது என்ற காரணத்திற்காக நாட்டை பிரித்துவிடவேண்டும் என்று சொன்னால் அதுவும் சரியல்ல. அல்லது பொருளாதார உயர்வுக்கு ராஜ்யங்களைப்பற்றி நாம் கவலைப்படக்கூடாது. எங்கே அதிகமாக பொருள்கள் இருக்கின்றனவோ எங்கே அதிக வசதி இருக்கிறதோ அங்கே தொழில்களை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்கின்ற ஒரு வாதத்தையும் ஒப்புக்கொள்ள முடியாது. இரண்டுக்கும் மத்தியில் ஒரு முடிவு எடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் முடிவு எடுத்து, நமக்கு வேண்டிய அடிப்படையான தொழில்களை இன்றைக்கு அமைத்துக்கொண்டு வருகிறோம். அதே நேரத்தில் பிராந்தியங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகளையும் நாம் நீக்கக்கூடும் என்ற முறையிலே முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். முன்னேற்றம் அடைந்திருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் ஒதுக்கித்தள்ளி விட்டு, நாம் பிரிந்துவரவேண்டும் என்ற ஒரு கருத்து சிலர் சொல்லிக்கொண்டிருப்பது. திராவிட நாடு பிரிந்துவரவேண்டும் என்று எந்த அடிப்படையில் சொல்லுகிறார்கள் என்றால், வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்ற முறையில், அதாவது வளர்ந்த பகுதியை வெட்டவேண்டும், தேய்ந்த பகுதியை பிரித்து வளர்க்க வேண்டும். அப்படி திராவிட நாடு அமைகிறது என்று வைத்துக்கொண்டாலும், அதற்

குள்ளே தமிழ் நாட்டை பார்க்கும்பொழுது, 4 பகுதிகளுக்குள்ளே தெற்கு பகுதி, தென்கிழக்கு பகுதி மற்ற 3 பகுதிகளை விட வளர்ந்திருக்கிறது, ஆகவே இதிலிருந்து நாம் கத்தரித்துக் கொண்டு போய் விடுவோம், தமிழ்நாடு மட்டும் தனியாக இருக்கலாம் என்று சொல்லும் பிரிவினை மனப்பான்மை ஏற்படலாம். அதேமாதிரி கோவை ஜில்லா மற்ற ஜில்லாக்களைவிட அதிகமாக வளர்ந்திருக்கிறது, ஆகையினாலே கோவை மற்ற பகுதிகளிலிருந்து பிரிந்துபோக வேண்டும் என்று சொல்லி, இப்படி பிரிவினை மனப்பான்மை வளர்ந்துகொண்டே போய், கடைசியிலே ஊருக்கு ஊர் போய், ஆளுக்கு ஆள் வரையில் வந்துசேரும். பிரிவினை என்று ஏற்பட்டு விட்டால், அது எங்கு போய் நிற்கும் என்று சொல்ல முடியாது.

திட்ட அடிப்படையில் நம்முடைய நாட்டு வளர்ச்சியை, நம்முடைய பகுதி வளர்ச்சியை நாம் அடைய முடியுமா, முடியாதா என்று பார்க்கிறபொழுது, திட்ட அடிப்படையில் அதற்கு தீர்வு காண முடியும் என்பதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நிரூபித்துக் காண்பித்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் நிரூபித்துக் காண்பிக்கப் போகிறோம். ஒன்றுபட்ட இந்தியாவில், சமஷ்டி அடிப்படையில் திட்ட அடிப்படையில் பிரதேச ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதற்கு நாம் காரியங்களை சாதிக்க முடியும் என்பதை சாதித்துக் காண்பித்திருக்கிறோம். வெறும் வாயளவில் பேசாமல், சாதிக்க முடியும் என்பதை செயலில் நிரூபித்துக் காண்பித்திருக்கிறோம். திட்டத்தை வேண்டாம் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். வேறு காரணத்திற்காக அவர்கள் திட்டம் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள். யோசித்துப் பார்ப்போமானால், நாம் திட்ட அடிப்படையில் தான் முன்னேற முடியும், திட்ட அடிப்படையில் தான் நாட்டினுடைய ஒற்றுமையை உறுதியாக்க முடியும், அந்த முறையில் தான் திட்டம் நடந்து வருகிறது என்று நான் முதலிலேயே வலியுறுத்திச் சொன்னேன். அதே மாதிரி தனிப்பட்ட நபர்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வு நீக்கப்படவேண்டும் என்ற முறையிலேயும் முயற்சி எடுத்திருக்கிறோம். ஆனால், அது இப்பொழுது உடனடியாக ஏற்படுவதற்கு சாத்தியக்கூறு இல்லாமல் இருக்கிறது. ஏனென்று சொன்னால், தொழில்களை வைக்கவேண்டும் என்று சொல்லும்பொழுது, தனியார் துறையை விட்டு, பொதுத் துறையிலே தொழில்களை அமைப்பதாக வைத்துக்கொண்டாலும், ஒரு சிலருக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது, மற்றவர்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வு உடனடியாக நீக்கக்கூடியது அல்ல. 30, 40 வருஷங்களாக கம்யூனிஸ பாதையில் சென்றிருக்கக்கூடிய ரஷ்யாவில் கூட ஏற்றத்தாழ்வு இன்னும் குறையவில்லை. பெரிய அளவில் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. இன்றைக்கு பெரிய பணக்காரர்கள் என்று சொல்லக்கூடிய ஒரு பகுதியினர்கள் இருக்கிறார்கள். சாதாரண சம்பளம் வாங்கக்கூடியவர்கள் பலர் இருக்கிறார்கள். அமெரிக்காவை எடுத்துக்கொண்டாலும், இன்றைக்கு கம்யூனிஸப்

[Sri C. Subramaniam] [13th November 1961

பாதையில் செல்லும் நாட்டைவிட அங்கே ஏற்றத் தாழ்வுகள் குறைவாக இருக்கின்றன என்பது புள்ளி விவரங்களிலிருந்து தெரியவரும்.

பொருளாதார வளர்ச்சி அடிப்படையில், தொழில் வளர்ச்சி அடிப்படையில் தானாகவே அடித்தளத்தில் இருக்கக்கூடிய மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துதான் ஆகவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பெரிய தொழில்கள் ஏற்படுத்தி பெரிய அளவில் உற்பத்தி அதிகரிப்பதற்கு, வளர்ச்சி ஏற்படுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் வருஷம் ஒன்றுக்கு 65 லட்சம் கார்கள் உற்பத்தி செய்கிறார்கள். 10,000 கார்கள் உற்பத்தி செய்கிறார்கள் என்றால் 10,000 கார்கள் வாங்கக்கூடியவர்கள் இருந்தால் போதும், அந்தத் தொழிலை நடத்த முடியும். ஆனால் வருஷம் ஒன்றுக்கு 65 லட்சம் கார்கள் உற்பத்தி ஆகிறது என்று சொன்னால், அந்த அளவுக்கு வாங்கக்கூடிய சக்தி சமுதாயத்தில் இருந்தால் தான், தொழிலை தொடர்ந்து நடத்த முடியும். தொழில் வளர்ச்சி ஏற்படும்பொழுது, பெரிய அளவில் உற்பத்தி ஏற்படும். அப்பொழுது தொழில் மட்டும் வளர்ந்து பிரயோசனம் இல்லை. வாங்கக்கூடிய சக்தி பெரும்பாலான மக்களிடையே பரவலாக சமுதாயத்தில் ஏற்பட்டால் தான் அந்தத் தொழில் இயங்க முடியும். தொழில் வளர்ச்சி அடைய அடைய ஒரு சிறு பகுதியினர் பெரிய பணக்காரர்களாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள். பெரும் பகுதியினர் மேலும் மேலும் தரித்திரர்களாக போய்க்கொண்டிருக்கிறார்கள் என்ற மார்க்ஸீய தத்துவம் இன்றைய தொழில் வளர்ச்சிக்கு உகந்தது அல்ல என்பதை உலக நிகழ்ச்சிகளும், தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கக்கூடிய நாடுகளும் இன்றைக்கு நமக்கு நிரூபித்துக் காண்பிக்கின்றன.

இன்றைக்கு தொழில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்கின்ற முறையிலே தொழில் வளர்வதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறோம் தொழில் வளர்ச்சி ஏற்பட ஏற்பட தானாக சமுதாயத்திலே உள்ள ஏற்றத்தாழ்வுகள் மாறித் தான் ஆகவேண்டும், அடித்தளத்தி லுள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்துதான் ஆக வேண்டும். இன்றைக்கு அம்மாதிரி உயர்ந்து கொண்டு வருகிறது, உயர்ந்திருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். மக்களுடைய சக்தி, மக்களுடைய அறிவு எந்த அளவுக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்குத் தான், ஒற்றுமை சக்தியாக இருந்தாலும் சரி, பொருளாதார வளர்ச்சி சக்தியாக இருந்தாலும் சரி, அமையும். அதெல்லாம் அவர்களுடைய அறிவைப் பொருத்திருக்கிறது, வளர்ச்சியைப் பொருத்திருக்கிறது. அதனால் தான் நாம் கல்விக்கு முதல் இடம் கொடுத்திருக்கிறோம். நாட்டின் ஒற்றுமையை இன்றைக்கு உறுதிப்படுத்தும் முறையில் கல்வி முறையும் அமையவேண்டும். ஆகவேதான் இந்த விஷயங்கள் எல்லாம் இந்த மகாநாட்டில் ஆராயப்பட்டு சில யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து பல்வேறு துறையிலே செயல்பட்டு அந்த ஆலோசனைகளையெல்லாம் மேலும் மேலும் பரிசீலனை செய்து நாட்டினுடைய ஒற்றுமையை வளர்ப்பதற்கு நாம் என்னென்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் என்பதைப்பற்றி நாம் இன்றைக்கு முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

13th November 1961] [Sri C. Subramaniam]

இதிலே, நாட்டின் ஒற்றுமையைப் பற்றிப் பேசும்போது, நாட்டுப் பிரிவினை அடிப்படையில் நினைக்கிறவர்கள் என்ன கருத்துக்களைச் சொல்லமுடியும் என்று சந்தேகம் ஏற்படலாம். நாடு ஒற்றுமையாகத்தான் இருந்து வந்திருக்கிறது; இனி மேலும் ஒற்றுமையாகத்தான் இருக்கப் போகிறது. ஒற்றுமை நீங்கிப் பிரியும் காலத்தில் அவர்கள் யோசனைகளுக்கு இடம் ஒருவேளை இருக்கலாம். ஆனால், இன்றைக்குச் சொல்ல வேண்டியது ஒற்றுமையாக இருக்கும் காலத்தில், ஒற்றுமை அடிப்படையில் நாட்டை எப்படி இன்றைக்கு முன்னேற்றம் அடையச் செய்வது என்பது பற்றித்தான். அதற்கான யோசனைகளைச் சொல்லவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நாட்டை இன்னும் ஒற்றுமைப் படுத்த என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். இதிலே பிரிவினையில் நம்பிக்கை இருக்கிறவர்களும் யோசனைகள் கூற இடம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு கருத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புவார்கள். இதிலே, நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லும் எங்கள் நிலைமை என்ன என்று கேட்கலாம். அதைப் பற்றியும் இந்த அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. இதிலே, என்னுடைய கருத்தில், அதைக் குற்றம் என்று சட்டம் செய்து, அதைக் குற்றமாக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுதே அதைக் குற்றம் என்று சட்டம் செய்திருப்பதாகச் சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன சட்டம் என்று கூட படித்துப் பார்க்காமல், "நாட்டுப் பிரிவினை என்பதே" குற்றம் என்று செய்திருக்கிறார்கள் என்று குறை கூறுகிறார்கள். அப்படி இப்பொழுது சட்டம் ஒன்றும் இல்லை. அப்படிச் சட்டம் செய்ய வேண்டும் என்பதும் எங்கள் கருத்தல்ல. எங்கள் கருத்து, அதைப்பற்றி மக்களே சரிசெய்து கொள்வார்கள் என்பதுதான்; பொருத்திருந்து பார்க்க வேண்டும். அதைப் பற்றி எந்த விதமான சட்ட நடவடிக்கையும் இன்று எடுக்கவில்லை. அதைப் பொது மக்களுக்கு விட்டு விடலாம் என்று விட்டுவிடப் பட்டிருக்கிறது. அந்த சோதனையும் வருகிற பெப்ரவரி மாதத்தில் வர இருக்கிறது. ஆகவே, எல்லாகட்சியாளரும் அவர்கள் தங்கள் யோசனைகளைச் சொல்லத் தயங்க வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த அறிக்கையைச் சபைமுன் விவாதத்திற்கு வைக்கிறேன். இதில் எல்லோரும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். கட்சித் தலைவர்கள் மட்டும் கலந்துகொண்டு, அவர்கள் யோசனைகள் சொன்னதன் பிற்பாடு—இதற்கு பதில் சொல்லும் விஷயம் அல்ல—இருந்தாலும், ஏதாவது பதில் சொல்ல வேண்டியிருந்தால், எல்லோரும் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொன்ன பிறகு, நான் சொல்லுகிறேன்.

[Sri C. Subramaniam] [13th November 1961

இது இன்றைக்கே முடிவு செய்யக்கூடிய காரியம் இல்லை. சொல்லப்படும் பல்வேறு கருத்துக்களையும் பரிசீலனை செய்து பார்க்க வேண்டிய விஷயம். திடீரென்று முடிவுகள் எடுக்க முடியாது.

நாட்டை ஒற்றுமை உள்ள நாடாக, செழிப்பு வளரும் நாடாக, மக்கள் வளம்பெறும் நாடாக முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்ல எல்லோரும் முயற்சிகள் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டு, இந்தப் பிரேரணையை சபைமுன் வைக்கிறேன்.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Paper laid on the table of the House on the 11th November 1961 on 'National Integration' be taken into consideration."

SRI N. K. PALANISAMI: Sir, as this is a very important subject, I request that we may continue the discussion in the afternoon also and if it is not possible to conclude the discussion to-day, we can have the discussion to-morrow also.

DEPUTY SPEAKER: I don't think it is necessary. Anyway, let us see.

SRI K. VINAYAKAM: Sir, I rise on a point of order. I would like to know from the Hon. Finance Minister whether it would be possible under the present constitutional set-up obtaining in the country to vivisect the country into Dravidasthan and so on, by entering the Legislature and working for the same under the Constitution as in force to-day?

THE HON. SRI C. SUBRAMANIAM: அவர்கள் சொல்லுவார்கள்; நானும் கேட்கத்தான் உட்கார்ந்திருக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், என்பேரில் உள்ள கீழ்க்கண்ட திருத்தங்களைப் பிரேரேபிக்கிறேன்; அவைகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்:

"(1) மதவாதிகளால் நடத்தப் படும் எல்லா பாடசாலைகளையும் ஆஸ்பத்திரிகளையும் சர்க்காரே மேற்கொள்ள வேண்டும்.

(2) கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கவேண்டும்"

SRI N. MARUDACHALAM: இந்தப் பிரேரணைகளை ஆதரிக்கிறேன்.

DEPUTY SPEAKER: The Motion as well as the amendments are now before the House for discussion. The hon. Member Sri V. K. Ramaswamy Mudaliyar will initiate the discussion. He can take thirty minutes. Then, the hon. Members Sri V. K. Kothandaraman, Sri P. S. Chinnadorai and Sri D. S. Authimoolan may each take twenty minutes and Sri C. N. Annadurai may take thirty minutes. The Hon. Minister may take thirty to forty minutes for his reply.

SRI V. K. KOTHANDARAMAN: ஒவ்வொரு அங்கத்தினருக்கும் குறைந்தது அரை மணியாவது கொடுத்தால்தான், இந்த விவாதத்தில் பேசமுடியும் . . . .

13th November 1961]

DEPUTY SPEAKER: Let the hon. Member Sri Ramaswamy Mudaliyar begin his speech. Then we shall see whether the time allotted for the discussion needs extension.

***SRI V. K. RAMASWAMY MUDALIYAR:** கனம் உபதலைவர் சபா நாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் "தேசீய ஒருமைப் பாடு" ஒரு முக்கியமான விவாதம். சுமார் ஒரு மணி நேரமாக கனம் நிதி அமைச்சர் அவர்களால் விவரமாக எடுத்துச் சொல்லப்பட்டது. முக்கியமாக இந்த தேசீய ஒருமைப்பாடு என்பதோடு இன்னும் "இமோஷனல் இன்டக்ரேஷன்" உணர்ச்சியுடன் சேர்ந்திருக்கிறது.

(Sri A. Govindasami in the Chair)

இந்த விஷயத்தை இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய காரணம் என்ன? சுதந்திரம் பெறுவதற்கு முன்னால், அது வெள்ளையர் ஆட்சிகாலமாக இருந்தாலும் சரி அல்லது அதற்கு முன்பாக இருந்தாலும் சரி, இம்மாதிரியான ஒருமைப்பாடு இல்லையா? அப்படியில்லாவிட்டால், இப்பொழுது மட்டும் ஒருமைப்பாட்டைப்பற்றி பேசவேண்டிய சச்சரவுகளும் பேச்சுக்களும் அகில இந்திய ரீதியிலும் பேசுவதற்கு காரணம் என்ன? இதன் லட்சியத்தைப் பற்றி தெளிவாக இல்லை. இது என்ன திடீரென்று ஏற்பட்டு விட்டதா? அல்லது சமீப காலத்தில் சில விஷயங்கள் காரணமாக பிரிவினை மனப்பான்மை ஏற்பட்டதா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எதாவது பிரிவினை மனப்பான்மை சில வருஷகாலமாக வளர்ந்து வருகிறது என்றால், அதற்கு ஆளும் கட்சியில் இருந்து வந்திருக்கும் காங்கிரஸ் சர்க்கார் செய்து வந்திருக்கும் சில காரியங்களால்தான் ஏற்பட்டது. கனம் கல்வி அமைச்சர் இப்பொழுது செய்த பிரசங்கத்தில், மொழிவாரிப் பிரிவினை செய்ததுதான் காரணம் என்று சொன்னார்கள். உண்மைதான். இன்றைக்கு சென்னையை எடுத்துக் கொண்டால், முன்பு அது சென்னை, ஆந்திரம், கேரளாவில் மலபார் மாவட்டம் முதலியவை சேர்ந்ததாக இருந்தது. அப்பொழுதும் நாம் ஒற்றுமையாக வாழவில்லையா? அம்மாதிரி இருக்கும் போது, இப்பொழுது திடீரென்று இந்தமாதிரி வருவதற்குக் காரணம் என்ன? நான் பல இடங்களில் கேள்விப் படுகிறேன், சில அரசியல் நிபுணர்கள் கருத்து என்ன வென்றால், மாகாணங்களை மொழிவாரியாகப் பிரித்ததுதான் இம்மாதிரியான "ஸெபரேடிஸ்ட் டென்டன்ஸி" வளர்ந்ததற்குக் காரணம் என்று. இதிலே கல்வி மிகவும் முக்கியமானது. அந்தக் கல்வி சம்பந்தமாக, அரசியல் சட்டத்தில் என்ன சொல்லப் பட்டிருக்கிறது?

"Article 29 (1). Any section of the citizens residing in the territory of India or any part thereof havnig a distinct language, script or culture of its own shall have the right to conserve the same."

அப்படி இருக்கிறது. அப்படி இருக்கும் போது, சில பிராந்தியங்களில், மைனாரிடிகளாக இருப்பவர்களுக்கு போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு வேண்டிய கல்வி வசதிகள் செய்து தரப்படவில்லை. ஒன்று சொல்ல முடியும். என்னைப் பொருத்த மட்டில், நான் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஜில்லா போர்டு தலைவராக இருந்த போது ஆந்திராவிலிருந்து இன்றைக்கு நம் மாநிலத்தோடு சேர்ந்திருக்கும் அநேக கிராமங்களில், அநேகம் பேர்கள் தமிழர்களாக இருந்தார்கள். அப்பொழுது ஜில்லா போர்டு தலைவர்களாக இருந்தவர்கள், சித்தூரிலும், நெல்லூரிலும், அந்த மக்கள் தமிழ் பயிலுவதற்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்க வில்லை, தமிழ் உபாத்தியாயர்கள் இல்லை.

இந்தமாதிரியான பிரச்னைகள் வந்ததன் காரணமாகத்தான் எங்கு பார்த்தாலும் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அதன் காரணமாகத்தான் பிரியவேண்டுமென்ற மனப்பான்மை வளர்ந்து வந்தது. முக்கியமாக, அகில இந்திய ரீதியிலே இப்பொழுது பார்த்தால், இந்தியை எப்படியாவது திணிக்கவேண்டுமென்று சமீப காலமாக ஒரு முயற்சி இருந்து வருகிறது. அதை எதிர்த்து தென்னகத்திலும், வங்காளத்திலும் கிளர்ச்சி ஏற்பட்டது. அதே மாதிரி அஸ்ஸாம் பிராந்தியத்திலும் கிளர்ச்சி ஏற்பட்டது. எப்படியாவது அகில இந்திய ரீதியிலே இந்தியை ஆட்சி மொழியாகத் திணிக்க வேண்டுமென்ற முயற்சி தென்னகத்திலே இருக்கிற மக்களிடையே பீதியை உண்டுபண்ணியிருக்கிறது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் என்ன ஆகுமோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அதுவும் ஒரு முக்கிய காரணமாக எனக்குத் தோன்றுகிறது. இந்தி திணிக்கப்படவில்லை என்று இப்பொழுது சொல்ல முடியாது. கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் நமது சர்க்காரின் கொள்கை என்னவென்று பார்த்தால், ஆங்கில மொழி படிக்க வேண்டும், ஒரு பிராந்திய மொழி படிக்கவேண்டும், "Anyone of the other Indian languages" என்று போட்டிருந்தாலுங்கூட, இந்தி தவிர வேறு எந்த மொழியையும் அந்தப் பிரிவின்கீழ் படிக்க முடியாது. "வேறு ஏதாவது இந்திய மொழி" என்று சொன்னால், வங்காளம் கற்றுக்கொள்ள முடியுமா அல்லது மகாராஷ்டிராம் கற்றுக்கொள்ள முடியுமா? இதை "indirect imposition of Hindi" என்றுதான் சொல்ல வேண்டும். நேரடியாக இந்தியைப் படிக்கவேண்டுமென்று சர்க்கார் சொல்லாமல் இருந்தபோதிலும், இம்மாதிரியான பீதி மக்களிடத்திலே பரவலாக ஏற்பட்டிருக்கிறது. கல்வி வளர்ச்சி அவசியம்தான். மக்களிடையே கல்வி அறிவு எவ்வளவு சீக்கிரமாகப் பரவவேண்டுமோ, அவ்வளவு சீக்கிரம் பரவவேண்டும். அதற்காக நமது மாகாண சர்க்கார் ஏராளமான பணம் செலவழித்து, எங்கு பார்த்தாலும் பள்ளிகளைத் துவங்கியிருக்கிறார்கள். சுமார் 26,000 ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது நடைமுறையில் செயல்பட்டு வருகின்றன. அகில இந்திய ரீதியிலே பார்த்தால், 1951-ல் படித்தவர்களின் எண்ணிக்கை ஜனத்தொகையில் 16.6 சதவிகிதமாக இருந்தது. 1961-ஐ எடுத்துக் கொண்டாலும், இன்னும் கிட்டத்தட்ட 76 சதவிகிதம் கல்வி அறிவில்லாமல் இருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. நமது கல்வி அமைச்சர் அவர்கள், 1961-ம் வருஷ சென்ஸஸ் கணக்குப்படி, படித்தவர்களின் எண்ணிக்கை 30 சத விகிதம் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கணக்குப்படி பார்த்தாலும், கல்வி வளர்ச்சி இன்னும் பரவலாக ஏற்படவில்லை என்றுதான் தோன்றுகிறது. மலபாரிலே படித்தவர் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். அதிலேயும் "ரீஜனல் டிஸ்பாரிட்டி" இருந்துகொண்டிருக்கிறது. அரசியல் சட்டத்திலே, 1950-ம் வருஷத்திலிருந்து 10 வருஷங்களுக்குள் 14-வயதுக்கு உட்பட்டவர்களுக்கு கட்டாயக் கல்வி, இலவசக் கல்வி அளிக்கப்படவேண்டுமென்று போடப்பட்டிருந்தும், அந்தத் திட்டம் இன்னும் நடைபெறவில்லை. நான் நம்முடைய மாகாணத்தைப் பற்றிப் பேசவில்லை. அகில இந்திய ரீதியில்தான் பேசுகிறேன். எங்கு பார்த்தாலும் கனரகத் தொழில்கள், மற்றும் சாதாரணத் தொழில்கள் எல்லாம் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய வழிகள் செய்தோமே தவிர, கல்வி வளர்ச்சியை விருத்தி செய்வதற்குப் போதுமான நடவடிக்கை எடுக்காததன் காரணமாகத் தான் இந்த மாதிரிக் கோளாறுகள் வருகின்றன. கல்வியின்மை, ஏழ்மைத்தனம், அறிவு இல்லாமை இவைகள்தான் இந்தமாதிரிக் கிளர்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணங்கள். அதோடு, சமீபத்தில் தேவநாகரி லிபியை "அடாப்ட்" செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. இதுவும் கிளர்ச்சிக்கு ஒரு காரணமாகும். நமது கல்வி அமைச்சர் இவர்கள் சமீபத்திலே ஒரு இடத்திலே பேசியிருக்கிறார்கள், ஸ்டேட் லெவலிலே ஆங்கிலம் இருக்க வேண்டும், ஜில்லாக்கள் லெவலிலே பிராந்திய மொழி இருக்கவேண்டும், அகில இந்திய ரீதியிலே இந்தியும், ஆங்கிலமும் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உப ஜனாதிபதியாகிய டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், இந்தி அகில இந்திய ரீதியிலே நேஷனல் மொழியாக இருந்த போதிலும், ஆங்கிலமும் தொடர்ந்து இருக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எது எப்படியிருந்த போதிலும் தேவநாகரி ஸ்கிரிப்டை கண்டிப்பாகத் திணிக்கப் போகிறார்கள். இதைப் பற்றி நமது பிரதம மந்திரி அவர்கள் தென்னகத்திற்கு வந்திருந்தபோது பேசியிருக்கிறார்கள். வடக்கேயுள்ளவர்கள் நாங்கள் தென் பிராந்திய மொழியாகிய தமிழைக் கற்றுக்கொள்ளப்போகிறோம் என்று பேச்சளவில் சொல்லுகிறார்களேயொழிய இது நடைமுறையில் சாத்தியமா என்பதைப் பற்றி நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும். தேவநாகரி லிபியைப் புகுத்துவது பற்றி நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காருக்கு என்ன எழுதியிருக்கிறார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்களின் பதிலில் திட்டவட்டமாகச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

லிங்விஸ்டிக் மைனாரிட்டிகளின் நலன்கள் இதன் காரணமாகவெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வடநாட்டிலிருந்து வரும் உத்தரவுகளுக்கு நம்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th November 1961

முடைய பிராந்தியத்தில் என்னவிதமான மனப்பான்மை இருக்கிறது, பின்னிட்டு அவைகள் எந்த விபரீத விளைவுகளுக்குக் கொண்டுபோய்விடும் என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, நமது சர்க்கார் மத்திய சர்க்காருடன் பேசி திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமது தமிழ் மக்கள் எல்லோருமே ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில், ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும். நம்முடைய பிராந்திய மொழியாகிய தமிழ் நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கவேண்டும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஆங்கிலத்தை நாம் கைவிட முடியாது. எவ்வளவு காலம் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பதைப் பற்றி வருங்கால சந்ததியார்கள் தான் நிர்ணயிக்க முடியுமே தவிர, நாம் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதுதான் என்னுடைய அபிப்பிராயம். இதைப் பற்றியும் சர்க்கார் திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது அமைச்சர் அவர்கள் அஸ்ஸாம் (Assam) மாகாணத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஜபல்பூர் கலவரத்தைப் பற்றிச் சொன்னார்கள். முக்கியமாக, அஸ்ஸாமை எடுத்துக்கொண்டால், வங்காளிகள் இவ்விடம் சரிவர நடத்தப்படாததன் காரணமாகத்தான் இந்த மாதிரிக் கோளாறுகள் ஏற்பட்டன. அவைகளை எல்லாம் சமாளித்துவிட்டதாகச் சொல்லலாம். இதற்கு அரசியல் சட்டத்தைத் திருத்தவோ, ரெப்பிரசென்டேஷன் ஆப் பீப்பிள் ஆக்டைத் திருத்தவோ அல்லது இந்தியன் பீனல் கோடைத் திருத்தவோ முயற்சித்தால் போதாது. இந்த முறையில் ராஜ்ய சர்க்கார்களும், மத்திய சர்க்கார்களும் நடப்பார்களேயானால், ஒரு பெரிய தவறைச் செய்வார்கள் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அம்மாதிரி நடவடிக்கைகளைக் கைவிடவேண்டும்.

11-00 a.m. ஆனால், அதைப்பற்றி இன்னும் முடிவாக ஏதும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் ஆரம்ப உரையில் சொன்னார்கள். அதை நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். முக்கியமாக திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கள் நினைப்பதற்கு ஒரு இடம் இருக்கிறது. எல்லோரும் சஞ்சலப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். நாங்களும் அம்மாதிரி நினைத்தோம். இம்மாதிரி சட்டங்களைத் தேர்தலுக்கு முன்னால் திருத்தியமைப்பதென்றால் ஏதோ ஒரு தனிப்பட்ட பார்ட்டிக்காகவோ வேறு எதற்காகவோ செய்வதாகத்தான் அர்த்தமாகும். நல்ல எண்ணத்துடன் சர்க்கார் செய்தபோதிலும் இம்மாதிரி எண்ணுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். நான் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில்தான் சொல்கிறேன். இதை நான் துணிந்து சொல்ல விரும்புகிறேன். இம்மாதிரி நடவடிக்கை சட்டத்தைத் திருத்துவது—ஒரு பார்ட்டியையோ மற்றொரு பார்ட்டியையோ, லிங்விஸ்டிக் மைனாரிடியையோ பாதிக்கக்கூடியதாக இருந்தாலும், அகில

13th November 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

இந்திய ரீதியில் எல்லாப் பார்ட்டிகளையும் வரவழைத்து, அவர்களுடைய அபிப்பிராயங்களையும் கேட்டு, தேர்தலுக்குப் பின்னிட்டு மாற்றியமைக்கலாம். எல்லா மாகாணங்களும் ஒத்துழைத்து நல்லபடியாக ஆட்சியை நடத்த வேண்டுமானால், தேர்தலுக்குப் பிறகுதான் இவைகளையெல்லாம் வைத்துக்கொள்ள வேண்டுமே தவிர, தேர்தலுக்கு முன்பாக இம்மாதிரியான சட்டங்களைக் கொண்டுவருவது அவ்வளவு உசிதம் அல்ல என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இம்மாதிரி மேலும் மேலும் சட்டத்தைத் திருத்தி போலீசுக்கு அதிகாரம் கொடுப்பதன் காரணமாக ஒரு போலீஸ் ராஜ்யம்தான் வருமேயொழிய நல்லபடியாக அமைதியான சர்க்கார் வராது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

காங்கிரஸ் எலெக்ஷன் மானிபெஸ்டோ, தேசிய ஒற்றுமை (நாஷனல் இன்டெக்ரேஷன்) பற்றியெல்லாம் ஆலோசிப்பதற்கு ஸ்ரீமதி இந்திரா காந்தியின் தலைமையில் குழு அமைத்தார்கள். பார்ப்பவர்களுக்கு என்ன தெரிகிறது என்றால், காங்கிரஸ் கட்சி மட்டுந்தான் தேசிய ஒற்றுமைக்காகப் பாடுபடுவதாகவும் மற்றக் கட்சிகளெல்லாம் எதிலும் அக்கறை கொள்ளாதது போலவும் தெரிகிறது. தேசிய ஒற்றுமைக்காக ஒத்துழைக்க எல்லாக் கட்சிகளுக்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது. தேசம் நன்றாக இருக்க வேண்டும், ஒற்றுமையுடன் இருக்கவேண்டும், எல்லாப் பிராந்தியங்களும், எல்லா ஜாதியார்களும், எல்லா வகுப்பார்களும் ஒற்றுமையாக நல் வாழ்க்கை நடத்தவேண்டும், எல்லா மாநிலங்களும் பொருளாதாரத் துறையில் முன்னேறவேண்டும், அதற்கு எல்லோரும் பாடுபடவேண்டும் என்பதை எல்லாக் கட்சியினரும் ஒத்துக் கொள்கிறார்கள். அம்மாதிரி இல்லை என்று ஒருவரும் சொல்ல முடியாது. அதையும் ஆளுங் கட்சியில் உள்ளவர்களும் அமைச்சர்களும் மனதில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

'இந்தியன் பீனல் கோட்' திருத்தத்தைப்பற்றி சில கட்சிகள் பொது மேடைகளில் பிரசங்கம் செய்து சில அபிப்பிராயங்களை எடுத்துச்சொல்லும்போது அரசாங்கம் திடீரென்று 144-வது செக்ஷன்படி தடை உத்தரவு போட்டு நிறுத்துவதன் காரணமாகத்தான் அநேக கட்சிகளுக்கு மனக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் விஸ்தாரமாகப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருக்கவேண்டும். பேசியதில் குறை இருந்தால், குற்றம் இருந்தால், தலைவர்களை வரவழைத்து அடிக்கடி பேசவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சியிலே பிராந்தியத்திற்குப் பிராந்தியம் வேற்றுமை இருக்கிறது என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் கூட, நேற்றையதினம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பேசுகிறபோது, குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநிலம் சில வருஷங்களாக ஐம்பது சத விகிதத்திற்கு மேலே தொழில் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்றெல்லாம் புள்ளி விவரங்கள் கொடுத்தார்கள்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [13th November 1961

உண்மை. ஆனால், சமீபத்தில் நான் சில சட்டசபை அங்கத்தினர்களுடன் வடக்கே சென்று அங்குள்ள சில தொழிற்சாலைகளைப் பார்த்தேன். அங்கே பார்த்ததில், அனேகமாக மகாராஷ்டிரம், வங்காளம், உத்தரப் பிரதேசம் இப்படிப்பட்ட அனேக இடங்களில் கன ரகத் தொழில்களைப் போன்று முக்கியமான துறைகளில் பெரிய அளவுக்குத் தொழில் அபிவிருத்தி அடைந்திருப்பதைப் பார்த்தேன். அதை ஒருவருமே மறுக்க முடியாது. அவர்கள் அபிவிருத்தி அடையக்கூடாது என்று நினைக்கக் கூடியவர்களில் நான் ஒருவன் அல்ல. இருந்தாலும், முக்கியமாக தென்னகத்தை எடுத்துக்கொண்டால், இங்கே தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு இன்னும் அனேக இடையூறுகள் இருக்கின்றன என்பதைத்தான் நாம் பார்க்கிறோம்.

போக்குவரத்துச் சாதனங்களைப் பொறுத்தவரையில் நாம் இன்னும் போதுமான அளவு முன்னேற்றம் அடையவில்லை. போதுமான ரயில் பாதைகள் அமைக்கப்படவில்லை. துறைமுகங்கள் அபிவிருத்தியைப் பொறுத்தும் இங்கு அதிக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்படியெல்லாம் 'ட்ரான்ஸ்போர்ட் பாட்டல்நெக்' இருப்பதால்தான், நாம் அனேக துறைகளிலே தொழில் அபிவிருத்தி அடைய முடியவில்லை. விவசாயத் துறையிலே கணிசமான அளவுக்கு உணவு உற்பத்தி செய்து இருந்த போதிலும் நம்முடைய பிராந்தியத்தைப் பொறுத்த வரையில் சுய நிறைவு (ஸெல்ப்-ஸபிஷியன்ஸி) அடையவில்லை. இவைகளையெல்லாம் சற்று யோசிக்கவேண்டும்.

நம்முடைய சர்க்காரின் முயற்சியினாலும், தனியார் துறையினரின் முயற்சியினாலும் நாம் ஓரளவு முன்னேறியிருந்தபோதிலும், அகில இந்திய ரீதியில் நமக்குக் கொடுக்கப்பட வேண்டிய பொருளுதவி மற்றும் சகாயங்கள் யூனியன் சர்க்காரால் கொடுக்கப்படவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. அதனால் மற்றப் பிராந்தியங்களுக்குக் கொடுக்கவேண்டியதில்லை என்று நான் சொல்லத் தயாராயில்லை. ஆனால், நமக்கு வேண்டிய பொருளுதவி, இன்னும் சகாயங்கள் எல்லாம் வேண்டிய அளவுக்கு அவர்கள் செய்து கொடுக்கவில்லை. அப்படிக் கொடுத்தால்தான் இந்த மனப்பான்மை மாறும். திராவிட நாடு பிரியவேண்டுமென்று சில பேர் சொல்வார்கள். எது எப்படியிருந்தாலும், இம்மாதிரி மனப்பான்மை மாறுவதற்கு வேண்டிய வழி முறைகளை மத்திய சர்க்கார் செய்து, இந்த மனப்பான்மையை மாற்றுவதற்கு அவர்கள் ஆவன செய்யவேண்டும். இதைப்பற்றி ஏதோ சில கட்சி பேசுகின்றார்கள் என்று பேசுவதில் பிரயோஜனம் இல்லை. நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் அடுத்தபடியாக மத்திய சர்க்காருக்குப் போக இருக்கிறார். ஆனால், என்னைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கஷ்டம்தான், அவர்கள் நம்மைவிட்டு அங்கு போகிறாரே என்பதற்காக. ஆனால், மத்திய சர்க்காருக்குப் போனதும் அவர்கள் அங்கிருந்து நமது ராஜ்யத்திற்கு இன்னும் சலுகைகளை வாங்கிக் கொடுக்க முடியும் என்கிற மகிழ்ச்சி ஏற்படுகிறது. எது எப்படி

13th November 1961] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

யிருந்தாலும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் இம்மாதிரியான உணர்ச்சி, மனப்பான்மை மாற்றப்படவேண்டுமானால், மத்திய சர்க்காருடன் நம்முடைய சர்க்கார் வாதித்து, எவ்வளவு பொருளுதவிகள் நமக்குக் கிடைக்கவேண்டுமோ அதைப் பெற முயற்சிக்கவேண்டும். முக்கியமாக ரயில் பாதைகள் அமைப்பது, மின்சார அபிவிருத்தி செய்வது, நீர்ப்பாசன வசதி செய்துகொடுப்பது, 'இன்டர்-ஸ்டேட்ஸ் டிஸ்பாரிடி' யைப் போக்குவது இப்படிப்பட்ட துறைகளில் செய்யவேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் வேற்றுமை மனப்பான்மை நீங்கி ஒற்றுமை வளரும் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இதற்கெல்லாம் காரணம் " Act of omission and commission on the part of present Government" என்றுதான் நான் சொல்வேன். ஜாதி வேற்றுமை போகவேண்டுமென்று எல்லோரும் சொல்கிறார்களே யொழிய எங்கு பார்த்தாலும் ஜாதி வெறிதான் தலை விரித்தாடுகிறது. தேர்தல் வரப்போகிறது; முக்கியமாக, ஆளுங் கட்சியை எடுத்துக்கொண்டால், தேர்தலுக்கு அபேட்சகர்களைப் போடும்போது கூட ஜாதி மனப்பான்மை காட்டப்படுகிறது. எல்லாக் கட்சிகளிலும் ஓரளவுக்கு இருக்கிறது என்றாலும் ஆளும் கட்சியைப் பொறுத்த வரையில் இந்த உணர்ச்சி அதிகமாக இருக்கிறது. ஒரு வட்டாரத்தில் எத்தனை பேர் ஒரு குறிப்பிட்ட இனத்தவர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து, வேறு இனத்தவர்களை அங்கு போட்டால் அவர்கள் ஜெயிக்க முடியாது என்ற மனப்பான்மையில் தேர்தலுக்கு அபேட்சகர்களை எடுக்கிறார்கள். அந்த முறையில்தான் 'ஸெலக்ஷன் ஆப் காண்டிடேட்ஸ்' இருக்கிறதே யொழிய வேறு விதமான மனப்பான்மை இல்லை. ஆக, ஜாதி மனப்பான்மை வளர்ந்துகொண்டே போகிறது. அதைப் பார்க்கும்போது நாம் ரொம்பவும் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே இதைப் போக்குவதற்கு முக்கியமாக வழிவகை செய்யவேண்டும். இதைத்தடுப்பதற்கு அரசியல் கட்சிகள் எல்லாம் ஒத்துழைக்கவேண்டும். அதிகாரபூர்வமாக மற்ற மாநில சர்க்கார்களும், மத்திய சர்க்கார்களும் ஒன்று சேர்ந்து இந்த நிலையைக் களைந்து ஒற்றுமை ஏற்படுவதற்கும், ரீஜனல் டெஸ்பாரிட்டியை ஒழிப்பதற்கும் பாடுபடவேண்டும். கல்வித்துறையில் பல முன்னேற்றங்களைக் காண்பதற்கும் முயற்சி செய்யவேண்டும். இப்படி பலவகையிலும் பாடுபட்டு தேசீய ஐக்கியத்தை, ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : சார், தேசீய ஐக்கியம் மிக மிகப் பிரதானமானது. அந்த தேசீய ஐக்கியத்தை கம்யூனிஸ்டுக் கட்சி சார்பிலே எப்போதுமே வரவேற்கிறோம். இன்றைக்கும் கம்யூனிஸ்டுகள் அதை வரவேற்கின்றார்கள். அதற்குக் காரணம் பல்வேறு பகுதியைச் சேர்ந்த மக்கள் இருக்கக் கூடிய நமது நாட்டிலே தேசீய ஐக்கியத்தைப் பலப்படுத்துவதன் மூலமாகத்தான் பரஸ்பரம் நன்மை அடையக்கூடிய சூழ்நிலையை உண்டாக்க

முடியும். பொருளாதாரத்துறையிலும், அரசியல் துறையிலுமே நாம் முன்னேற முடியும். அப்படிப்பட்டதொரு ஐக்கியம் ஏற்படவில்லையென்றால், பொருளாதாரத்துறையில் பின்தங்கிப் போய்விடுவோம். அரசியல் துறையிலும் பலவிதத்தில் சிக்கல்களும், குழப்பங்களும் உண்டாகிவிடும். ஒரு ராஜ்யத்தில் உணவுப்பொருள்களோ, மற்ற பொருள்களோ அதிகமாக உற்பத்தியாகலாம். மற்றொரு ராஜ்யத்தில் குறைவாக இருக்கலாம். தேசிய ஒற்றுமை நிலவியது என்றால் இருக்கிற ராஜ்யம் இல்லாத ராஜ்யத்திற்குக் கொடுத்து உதவி செய்ய முடியும். ஆனால் இன்றையதினம் எல்லா ராஜ்யங்களுக்குமிடையே ஒரு சுமுகமான உறவு உண்டாவதற்குத் தடையாக இருப்பது என்ன என்பதையும் நாம் இந்த நேரத்தில் சிந்திக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் இந்த தேசத்தை 200 ஆண்டுகாலம் அடக்கி ஆண்டது. அவர்களுடைய ஆட்சியை எதிர்த்து அன்றையதினம் நாம் போராடினோம். சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழர்கள், தெலுங்கர்கள், மராட்டியர்கள், வடநாட்டவர்கள், தென்னாட்டவர்கள் என்கிற பாகுபாடு எதுவும் இன்றி ஒன்றுசேர்ந்து போராடினோம் அப்படி ஒன்றுசேர்ந்து போராடும்படியாக நம்மிடத்தில் தேசீய ஒற்றுமை எதனால் வந்தது? ஆங்கிலம் பொது மொழியாக ஏற்பட்டதனால் என்று சிலர் சொல்லக்கூடும். ஆங்கிலம் தெரியாதவர்கள் பலர் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்கள். பிராந்திய அடிப்படையிலே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, ஆந்திர காங்கிரஸ் கமிட்டி என்பதைப் போலத்தான் ஸ்தாபனங்களை அமைத்துக்கொண்டு அவரவர்கள் மொழியிலேயே அன்றையதினம் பேசி, மக்களிடத்தில் சுதந்திர தாகத்தை உண்டாக்கி, தேசீய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக்கொண்டு விடுதலை அடைந்தோம். அன்றையதினம் ஜனகனமன என்ற வங்காளிப் பாட்டையாகட்டும், வந்தே மாதரம் என்ற தமிழ் கீதத்தையாகட்டும் எல்லோரும் ஒரே குரலில்தான் சொன்னார்கள். மகாத்மா காந்திக்கு ஜே, ஜவஹர்லால் நேருவுக்கு ஜே என்று ஜே போட்ட மக்கள் அவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்கள் என்று அன்றையதினம் பார்க்கவில்லை. விடுதலை அடைந்த பிற்பாடு மொழி அடிப்படையில் ராஜ்யங்களைப் பிரித்தார்கள். மொழி அடிப்படையில் ராஜ்யங்களைப் பிரித்தாலும்கூட எந்த எந்த வகையில் எல்லா ராஜ்யங்களுக்கும் இடையே ஒரு ஒற்றுமை எல்லாக் காலத்திலும் இருக்கும்படியாகச் செய்யமுடியும் என்பதை நாம் சிந்தித்தேயாகவேண்டும். ஆனால் இன்றுவரை ஆளும் கட்சியினராகட்டும், அவர்களுடைய சர்க்கார்களாகட்டும் மொழிப்பகை, சாதிப்பகை உண்டாகும்படியாக, தேசிய ஒற்றுமை குலையும்படியாகத்தான் காரியங்களைச் செய்துவந்திருக்கிறார்கள். அந்தத் தவறுகளை எதிர்க்கட்சிக்காரர்கள் சுட்டிக்காட்டினால் அவர்களிடம் கோபம் அடைவதும், அவர்களுடைய மனச்சாட்சியே அவை தவறு என்று சுட்டிக்காட்டும்போதுகூட அதை மறைத்துப் பேசுவதும்தான் இதுவரை அவர்களுடைய வழக்கமாக இருந்திருக்கிறது. என்றைக்குமே அவர்கள் தேசீய ஒற்றுமைக்கு உலை வைக்கும் முறையில் அவர்களுடைய கட்சிக்கு என்றால்

ஒருவிதம், மாற்றுக் கட்சிகளுக்கு என்றால் ஒருவிதம் என்றுதான் நடந்து வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் தேசீய ஒருமைப்பாடு வரவேண்டும் வரவேண்டும் என்று சொன்னால் அது எவ்வாறு சாத்தியம் என்று பார்க்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஒரு பிராந்தியத்திற்கும், இன்னொரு பிராந்தியத்திற்கும், காட்டப்படுகிற வேறுபாடு, தொழில் வளர்ச்சிக்கான திட்ட வேறுபாடு நிச்சயமாக அங்கங்கே பிளவைத்தான் உண்டாக்கும். இன்றைக்கு ஒரு குடும்பத்தை எடுத்துப் பார்த்தாலே போதும். ஐந்து பேர்கள் அண்ணன் தம்பி இருக்கிறார்கள் என்று சொன்னால் சம அடிப்படையில்தான் அவர்களிடத்தில் சொத்து பிரிவினை செய்யப்படவேண்டும். இல்லாவிட்டால் வெட்டு குத்துதான் ஏற்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். அதேபோன்று, தகப்பனார் தன்னுடைய சொத்தை தன் குழந்தைகளுக்கு சமமாகப் பிரித்துக் கொடுக்கவில்லையென்றால், அந்தத் தகப்பனாருக்கு எதிராக குழந்தைகள் சண்டைபோடுவதைப் பார்க்கிறோம்.

அதைத்தான், பஞ்சபாண்டவர்களுக்கும் துரியோதனாதியருக்கும் நடந்த யுத்தம் கூடக் காட்டுகின்றது. பொருளாதார அடிப்படையிலே பங்கு கொடுக்காத காரணத்தினால்தான் அந்த யுத்தம் எல்லாம் நடந்தது. ராஜ்ய அடிப்படையில் மட்டும் அல்லாமல் போகப் போக எங்களுடைய ஜில்லாவில் தொழில் வளர்ச்சி இல்லை, எங்களுடைய தாலுகாவில் தொழில் வளர்ச்சி இல்லை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி போன்ற ஜில்லாக்களில் மட்டுந்தான் தொழில் வளர்ச்சி இருக்கிறது என்று ஜனங்களுடைய மனோபாவம் வளரக்கூடிய அளவுக்கு இன்றைய நிலைமை வளர்ந்திருக்கிறது. சென்னையில்தான் திறமை படைத்தவர்கள் இருக்கிறார்கள், தொழிலாளர்கள் மதுரையில்தான் இருக்கிறார்கள், தொழில் அதிபர்கள் கோயம்புத்தூரில்தான் இருக்கிறார்கள், என்று கனம் நிதியமைச்சர் அவர்கள் கூறலாம். ஆனால் இன்றையதினம் வகுப்புவாதமும், ஜாதி வெறியுமே தொழில் வளர்ச்சி சம்பந்தப்பட்டவரை வளர்ந்து வருகின்றது என்பதை கனம் நிதியமைச்சர் அவர்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது போன்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால்தான் சில முக்கியமான தொழில்களை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று சொல்கிறோம். வெற்றிலை பாக்குக் கடை முதற்கொண்டு அணு சக்தி நிலையம் வரை அரசாங்கமே நடத்த வேண்டுமென்று சொல்லவில்லை. சோவியத் ரஷ்யாவில் வெற்றிலை பாக்குக் கடையிலும் அரசாங்கமே ஒரு ஆளை வைத்துச் சம்பளம் கொடுத்து நடத்தப் படுவதைக் கேட்டுப் பெருமைப்படுகிறேன். அதற்குக் காரணம் அங்கே அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது. இங்கு நம்பிக்கை ஏற்படவில்லை. இந்த நாட்டிலே, ஒரு நாயுடு மில்லை வைத்தால் நாயுடுகளாகவே அங்கு வேலைக்கு அமர்த்துகிறார். முதலியார் ஆரம்பித்தால் முதலியார்களாகவே வேலைக்கு அமர்த்துகிறார்கள். இந்த நிலைமை இருக்கிற காரணத்தால் மைனாரிடி மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கு, இத்தனை சதவிகிதம் அந்தத் தொழிற்சாலைகளில் வேலை கிடைக்க வழி செய்ய வேண்டு

[Sri V. K. Kothandaraman] [13th November 1961

மென்று கேட்கிறார்கள். இதற்காக ஏன் ஒரு சட்டம் கொண்டு வரக் கூடாது என்று நாங்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் கேட்கிறார்கள். ஆகவே இது போன்று ஜாதி வெறியை வளர்க்கும் போக்கில் தனியார் துறைத் தொழில்கள் இருக்கும் காரணத்தால் அரசாங்கமே முக்கியமான தொழில்களையெல்லாம் ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் இன்றையதினம் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே நியாயமான போராட்டம் ஏற்படக் கூடிய காலத்திலே கூட, அந்த இடத்திலே ஜாதி வெறியையும், மத வெறியையும் உண்டாக்கக் கூடிய அளவுக்கு, அந்த முதலாளிகள் சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

மொழி சம்பந்தப்பட்டவரை பார்த்தால் இன்றைக்குத் தேவநாகரி லிபியைத் திணிக்க முயற்சிக்கிறார்களேயொழிய மொழி ஒற்றுமையை உண்டாக்கக்கூடிய நிலைமையை உண்டாக்கவில்லையே! சம அந்தஸ்து கொடுக்கும் தன்மையிலே போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மொழிப் பிரச்னையில் குழப்பங்கள் இருக்கிற காரணத்தால் சுதந்திரத்திற்குப் பிறகு ஆந்திரத்திலே, மைசூர் ராஜ்யத்திலே, இன்னும் பல ராஜ்யங்களிலே ஒருவருக்கொருவர் சச்சரவுகளும் குழப்பங்களும் ஏற்படுவதைப் பார்க்கிறோம். ஆந்திராவில் ரெட்டியார்களா, கம்மாளர்களா என்று சண்டை போடுகிறார்கள். இந்த நிலைமை மாற மொழி அந்தஸ்திலும், தொழில் வளர்ச்சி அடிப்படையிலும் சம அந்தஸ்து கொடுக்கக் கூடிய தன்மையிலே கவனம் செலுத்தப்படவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் இந்தப் பிரச்னைகளைத் தீர்க்கக் கூடிய அளவுக்குக் கவனம் செலுத்தப்படவில்லை. இந்த முறையில் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டால், எனது மதிப்பிற்குரிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மெம்பர்கள் கூட பிரிவினை கோஷத்தை எழுப்ப மாட்டார்கள் என்று நம்புகிறேன். பிரிவினை கோஷத்தை மேலும் வலியுறுத்தக் கூடிய தன்மையை, அதற்கு ஒரு சக்தி ஏற்படக் கூடிய வகையில், அந்தச் சக்தியை ஊட்டக் கூடியவர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் தான். இதற்காக ஒரு மகாநாட்டை, பார்லிமெண்டில் இருக்கும் பல்வேறு கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பி நடத்தினார்கள். அதற்கு, திருவாங்கூர் ராஜ்யம் தனியாகத்தான் இருக்க வேண்டுமென்று வாதிட்ட சர் சி. பி. ராமசாமி அய்யர் போன்றவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பப்பட்டது. ஒரு கட்சி அடிப்படையில் பார்லிமெண்டில் இருக்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், தமிழ் தேசீயக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தால் குடியா முழுகிவிடும்? அந்த விவாதத்தில் அவர்களும் பங்கெடுத்துக் கொள்ளுவதன் மூலமாக ஒருவருக்கொருவர் விஷயங்களைப் புரிந்து கொள்ளுவதற்கு உதவிகரமாக இருந்திருக்கலாம். அவர்கள் சொல்வதில் நல்ல கருத்துக்கள் இருந்தால் மற்றவர்கள் எடுத்துக் கொள்ளலாம். மற்றவர்கள்

13th November 1961] [Sri V. K. Kothandaraman]

சொல்வதிலே கருத்துக்கள் இருந்தால் அவர்களும் எடுத்துக் கொள்ளத் தயாராக இருப்பார்கள். அவர்களை இந்த மகாநாட்டுக்குக் கூப்பிடாதது துரதிருஷ்டவசமானது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மதுரையில், நேரு அவர்கள் பிரிவினை கோஷத்தைக் கண்டு சீறி விழுவதும் உள்நாட்டுக்கலகம் ஏற்பட்டாலும் சமாளிப்போம் என்று சொல்வதும், உடனே நம்முடைய மதிப்புக்குரிய அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், இதை நாங்களே அடக்கி விடுவோம் என்று சொல்வதும் எதைக் காட்டுகிறது? இந்தச் சிக்கலான பிரச்னை பற்றித் தீர்க்கமாகப் பரிசீலனை செய்து முடிவெடுப்பதில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, ஒரு யுத்தம் என்ற நிலைமைக்கு வருவது அவ்வளவு சரியானதல்ல. (கனம் ஸ்ரீ. சி. சுப்பிரமணியம் சைஞை பற்றிச் சொல்லுங்கள்). எல்லாவற்றைப் பற்றியும் சொல்கிறேன். இன்றைக்கு வகுப்பு வாதம் ஜாதி, மத, இன அடிப்படையிலே வளர்ந்து வருகிறது என்று சொன்னால் அதற்குக் காரணம் ஆளும் கட்சியினர்தான். உதாரணமாக, கேரளத்திலே ஒரு அரசியல் கட்சியைக் கவிழ்ப்பதற்காக, பிற்போக்கு சக்திகளுடன், முஸ்லீம் லீகுடன் ஒன்றுபட்டதன் விளைவை, இந்த ஒரு வருஷ காலத்திலேயே பார்க்கிறோம். மத அடிப்படையிலே கலகங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அதற்குப் பொறுப்பாளிகள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 11-30 a.m. அன்றைக்கு நாங்கள் எடுத்துக் கூறினோம் என்று சொன்னால், அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லாத நிலைமையில்தான் அதனுடைய பலனைக் கூட இன்றைக்கு அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். அன்றைய தினம் வெள்ளையன் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட எப்படியெல்லாம் ஜாதி வெறி, இன வெறி, மத வெறி இவைகளைத் தூண்டிவிட்டார்களோ, கலகத்தை உண்டாக்கிக்கொண்டு இருந்தார்களோ, அதேமாதிரித்தான் இன்றைய தினம் காங்கிரஸ் கட்சி தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நாட்ட பல ரூபத்தில் தூண்டிவிடக் கூடிய நிலைமையில் இருக்கிறது என்று நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதை நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரே கட்சியிலே கூட பொருளாதார அடிப்படையிலே, உத்தியோக அடிப்படையிலே, 1937-ம் ஆண்டிலே எடுத்துக்கொண்டால் நமது மதிப்புக்குரிய ராஜகோபாலாச்சாரி அவர்கள் முதல் மந்திரியாக இருந்த காலத்தில் இது போன்ற குறைபாடுகள் இருந்தன. ஆந்திராவுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்படவில்லை என்று ஆந்திராவிற்கு அவர் சென்றபோது கருப்புக் கொடி காட்டப்பட்டது. கருப்புக்கொடி காட்டப்பட்டது என்றால் சாதாரண தொண்டர்கள் இதைக் காட்டவில்லை. பெரும் தலைவர் பட்டாபி சீதாராமையா அவர்கள் தலைமையில் கருப்புக்கொடி காட்டப்பட்டது என்று சொன்னால் இது எதைக் காட்டுகிறது. ஆகவே சுதந்திரம் அடைந்த பிறகு நாம் பார்க்கிறோம் பல ராஜ்யங்களிலே ஒரே கட்சியில் பல குழப்பங்கள்—பல தகராறுகள்—ஏற்படக்கூடிய அளவில் நிலைமை இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே . . . .

[13th November 1961

TEMPORARY CHAIRMAN (SRI A. GOVINDASAMY): அங்கத்தினருக்கு அதிகமாகவே 5 நிமிஷம் ஒதுக்கப்பட்டது—அதுவும் முடிந்து விட்டது.

SRI V. K. KOTHANDARAMAN: ஆகவே, இந்தத் தீர்மானத்திலே குறிப்பாக பல தீர்மானங்கள் போடப்பட்டிருக்கின்றன. இதில் குறிப்பாக 22-வது பாராவில் 6-வதாக Political power, at any level, should not be used for furthering the personal interests of members of one's own party or to harm the interests of members of other parties என்று இருக்கிறது. ஆனால் இது போல் ஆளும் கட்சி நடந்து கொண்டது உண்டா என்பதுதான் எனது கேள்வி. பொதுக் கூட்டங்களை எடுத்துக்கொண்டாலும், ஊர்வலம் நடத்துவதை எடுத்துக் கொண்டாலும் பல விதங்களில் பாகுபாடுகள் செய்யப்படுகின்றன. காங்கிரஸ் மாநாடு அல்லது எக்ஸிபிஷன் நடக்கும் போது சர்க்கார் மூலமாக பல விதத்தில் பொருளாதாரங்களை உண்டாக்கக் கூடிய தன்மையில் எப்படியெல்லாம் வந்திருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதே போன்று போலீஸ்காரர்கள் மூலமாக மற்றவர்களுக்கு ஒரு விதம், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒருவிதம்—இப்படி நடக்கிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமென்றால் ஒரு ராஜ்யத்தின் முதன் மந்திரியாக இருந்த திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்கள் வேலூருக்கு வந்த காலத்தில் அங்கே அன்றைய தினம் ஒரு காங்கிரஸ் கூட்டம் இருந்தது என்ற காரணத்தினால், ஏக காலத்தில் 2-3 கூட்டங்கள் நடக்கக் கூடாது ஒரு டவுனில் என்று, அன்றைய தினம் காங்கிரஸ் கூட்டம் நடக்கப் போகிறது, ஆகையால் வேறு எந்தக் கூட்டமும் நடக்கக்கூடாது என்று மறுக்கும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டது என்பதைப் பார்க்கிறோம். இதே போன்று எத்தனையோ உதாரணங்களைக் கொடுக்க முடியும். இன்றையதினம் அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக விவசாயத் தொண்டர்களை ஜெயிலில் அடைத்து சரியான உணவு கொடுக்காமல், கல்லும் மண்ணும் கலந்த உணவைக் கொடுத்து, வீரப்பன் என்ற தொண்டர் வழக்குப் போட்டார் என்று அவரை அடித்திருக்கிறார்கள். அதோடு இல்லாமல் தொண்டர்களை தெரியாது செய்து விட்டோம், இனிமேல் அந்த மாதிரி செய்ய மாட்டோம் என்று கவர்னருக்கு மன்னிப்புக் கடிதம் எழுதி வாங்கும் அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, தேசீய ஐக்கியம் ஏற்படவேண்டுமானால் என்னுடைய அபிப்பிராயம் மொழிகளுடைய வளர்ச்சிக்கு சம அந்தஸ்து கொடுக்கவேண்டும், தொழில் வளர்ச்சிக்கு சம அந்தஸ்து கொடுக்க வேண்டும்.

TEMPORARY CHAIRMAN (SRI A. GOVINDASAMY): கனம் அங்கத்தினருக்குக் கொடுத்த நேரத்திற்கு மேல் ஆகி விட்டது.

SRI V. K. KOTHANDARAMAN: ஜாதி வெறி, இன வெறி, மத வெறி இவைகளை வளர்க்காமல் சகல துறைகளிலும் கவனம் செலுத்தவேண்டும். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்க

13th November 1961] [Sri V. K. Kothandaraman]

வேண்டும். மத அடிப்படையில் இயங்கக் கூடிய பாடசாலைகளையும் ஆஸ்பத்திரிகளையும் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். மாணவர்களுக்கான புத்தகங்களை சர்க்காரே தயாரிக்க வேண்டும் . . . . .

TEMPORARY CHAIRMAN (SRI A. GOVINDASAMY): அடுத்து ஸ்ரீ பி. எஸ். சின்னதுரை அவர்கள் பேசலாம்.

SRI P. S. CHINNADURAI: மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, எனக்கு குறைந்தது அரை மணி நேரம் அனுமதிப்பீர்கள் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் அதிக அவகாசம் இருக்கிறது, கனம் நிதி அமைச்சரும் தனக்கு பதிலளிப்பதற்கு அரை மணி நேரம் போதும் என்று சொல்லி விட்டார்கள்.

தேசீய ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக இன்றைக்கு நாம் இங்கே கூடியிருக்கிறோம். இந்த நேரத்திலே நிறைந்த பொறுப்பு ஆளும் கட்சியைச் சேர்ந்ததாக இருக்கிறது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை சபை விவாதிக்கும் போது கலந்துகொள்ளவேண்டுமென்ற ஒரே காரணத்திற்காக நான் கோயம்புத்தூரிலிருந்து இன்றைக்கு இங்கே வந்திருக்கிறேன். ரயிலடியிலிருந்து விடுதிக்குப் போய் குளிக்காமல் கூட நேராக இங்கே வந்து சபைக்குள் அமர்ந்திருக்கிறேன். இரண்டு அங்கத்தினர்கள்தான் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியில் இருந்தாலும் அந்த இரண்டு பேர்களும் நூற்றுக்கு நூறு பிரசன்னமாக இருக்கிறோம். ஆனால் ஆளும் கட்சியில்—அடிக்கடி கனம் நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய எண்ணிக்கையைக் குறித்து மிகவும் பெருமையோடு சொல்லிக்கொள்வார்கள், அவர்களை நான் கேட்க விரும்புகிறேன்—தேசீய ஒற்றுமையைக் குறித்த இந்த மிகவும் முக்கியமான தீர்மானத்தை நிறைவேற்றும் இந்த நேரத்தில், இந்தத் தீர்மானத்தை விவாதிக்கும் இந்த நேரத்தில், உங்களுடைய அந்த மதிப்புக்குரிய எண்ணிக்கை எங்கே போயிருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தை வலியுறுத்துவதிலும், இதனைக் குறித்து பிரிவினைதான் வேண்டும் என்று தங்கள் வாதத்தை எடுத்து உரைக்கும் தருணத்திலும் அப்படிப்பட்ட விவரங்களை பூர்ணமாக அறிந்துகொள்ள, அதிலே தங்களுடைய கருத்துக்களை உருவாக்கிக்கொள்ள ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் அத்தனை பேரும் கூடியிருப்பது ஒன்றுதான் சரியானதாக இருந்திருக்கும். இப்படிப்பட்ட பலவீனமான நிலையில் 15 ஆண்டு காலத்திற்கு முன் காங்கிரஸ்தான் பாகிஸ்தான் ஏற்பட அனுமதித்தது. காங்கோவில் இன்றைக்கு நாம் என்ன பார்க்கிறோம். கடாங்கா என்ற பகுதி பிரிந்து போக நினைக்கிறது. அங்கே இது வரையில் ஆட்சி புரிந்த பெல்ஜியம் பிரிந்து போகிறவர்களுக்கு துணை புரிய மறைமுகமாக பல விதமான சதிகள் புரிந்துகொண்டிருக்கின்றன. அப்படி காங்கோவிலிருந்து ஒரு பகுதி பிரிந்து போவது தவறு என்று நாம் நினைக்கிறோம்—உலகத்திலிருக்கின்ற ஜனநாயக நாடுகள் நினைக்கின்றன. அப்படி பிரிந்து போகக் கூடாது, அந்தப் பகுதியைச் சேர்த்தே காங்கோவில் வைத்திருக்க வேண்டும் என்று நம் நாட்டிலிருந்து சிறந்த துருப்புக்களை

[Sri P. S. Chinnadurai] [13th November 1961

அனுப்பியிருக்கிறோம் — அங்கே சண்டையிடுகிறார்கள் — அதிலே சிலர் மடிகிறார்கள்—நமது துருப்புக்களிலே. இந்திய மக்களுடைய ரத்தம் காங்கோவிலே சிந்தப்படுகிறது பிரிவினையை எதிர்த்து. நாம் என்ன செய்தோம்—15 ஆண்டுகளுக்கு முன்னால்? ரத்தம் சிந்த பயந்து பிரிவினைக்கு ஒப்புக்கொண்டோம். தடுக்க முடிந்ததா ரத்தம் சிந்துவதை? பிரிவினை ஏற்படவேண்டியதன் காரணமாக வேண்டுமானால் ரத்தம் சிந்தாமல் இருந்திருக்கலாம்—ஆனால், ரத்தம் சிந்துவதைத் தவிர்க்க முடிந்ததா? பிரிவினையை எதிர்த்து சிந்தக் கூடிய ரத்தத்தைக் காட்டிலும் அதிக ரத்தத்தை இந்திய மக்கள் இந்தியாவின் பகுதியிலும் சரி, பாகிஸ்தான் பகுதியிலும் சரி சிந்தினார்கள். அதற்கு பதிலாக பாகிஸ்தான் பிரிய வழியில்லாமல் உறுதியாக இன்றைய ஆளும் கட்சியும் அன்றைய மக்களின் பொது ஸ்தாபனமாக இருந்த காங்கிரஸும் வைராக்கியத்துடன் நின்றிருந்தால், இந்த நாடு பிரிவினையாகி இரண்டு நாடுகளாக ஏற்பட்டதைத் தடுத்திருக்க முடியும்.

அன்றைக்கு அதிலே கவனம் செலுத்தவில்லை. உடனடியாகப் பலனை விரும்பினார்கள். சுதந்திரம் கிடைப்பதற்கு சுருக்கு வழியை நாடியதன் விளைவாக பாகிஸ்தான் பிரிந்தது. இன்றைக்கு ஜனாதிபதியாக இருக்கின்ற ராஜன் பாபு அவர்கள் "பிரிக்கப்படாத இந்தியா" என்பது குறித்து மிகப் பெரிய புத்தகம் ஒன்று எழுதி யிருக்கிறார்கள். அப்போது இந்தியா என்னவாக இருந்தது? இப்போது என்னவாக இருக்கிறது? யார் அந்தப் புத்தகத்தை எழுதினாரோ, அவரே பிரிக்கப்பட்ட இந்தியாவின் முதல் ஜனாதிபதியாக இருக்கின்ற நிலைமையைத்தான் உண்டாக்கி இருக்கின்றது. இது மிகச் சிறந்த படிப்பினையாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்குப் பிறகு இனி நாட்டை எந்த வகையிலே பிரிக்காமல் ஒற்றுமையோடு வைத்துக்கொள்வது என்பதுபற்றி காங்கிரஸ் இப்போதாவது 15 ஆண்டுகள் கழித்து, ஓரளவுக்கு இந்த நினைப்பு வந்ததற்கு நான் மகிழ்ச்சி தெரிவிக்க வேண்டும். இந்த 15 ஆண்டு காலத்திற்குப் பிறகு இன்றைக்கு நாட்டிலே பல்வேறு பகுதிகளிலே மொழி வெறி சிக்கல்கள் உண்டாகியிருப்பதற்கு யார் காரணம்? இதற்கு காங்கிரஸ்காரர்கள்தான் என்பதை நான் மிகப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மொழிவாரி ராஜ்யம் அமைப்பது என்பதுதான் காங்கிரசின் முன் நாளைய கொள்கையாக இருந்தது. அதனால் அப்போது மக்களுக்கு இவர்கள் மொழிவாரி உணர்ச்சியை ஊட்டி, அந்த அடிப்படையிலே நாடு பிரிய வேண்டுமென்று மக்களுடைய கருத்திலே படும்படியாக அன்றைக்குச் செய்தவர்கள் காங்கிரஸ்காரர்கள்தான். ஆனால் இன்றைக்கு சுதந்திரம் ஏற்பட்ட பிறகு, அந்தமாதிரியான கருத்துகளுக்கு இடமளிக்க மாட்டோம் என்று மறுத்தார்கள். இதற்கு காரணம் என்ன என்று தெரியாது மக்கள் விழித்தார்கள். ஆனால், அன்றைக்கு மொழிவாரி அடிப்படையில் நாடு பிரிய வேண்டுமென்று கிளர்ச்சி செய்ததின் விளைவு என்ன? மக்கள் மனதிலே நன்றாக இந்த உணர்ச்சி பரவி, கிளர்ச்சியைத் துவக்கினர். ஆகவே, இந்த

13th November 1961] [Sri P. S. Chinnadurai]

வகையிலே மக்களுடைய கவனத்தை ஒருங்கு சேர்த்து, நாட்டிலே மொழிவாரி கிளர்ச்சிகள் ஏற்படும்படிச் செய்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதை நான் மறுபடியும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொட்டி ஸ்ரீராமுலு உயிர் துறந்ததற்குப் பிறகுதான், ஆந்திர ராஜ்யம் ஏற்பட்டது. ஏன் அப்படி ஏற்பட்டது என்பதை நாம் நன்றாக சிந்தித்துப் பார்க்க வேண்டும், நினைத்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் தமிழ் நாடு என்பதற்கும் ஒரு கிளர்ச்சி நடந்தது. இந்த கிளர்ச்சிக்கு கடைசியாக சம்மதம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கு முன்னரே சம்மதம் கொடுத்திருப்பார்களேயானால், திரு சங்கரலிங்க நாடார் இறந்திருக்க வேண்டிய அவசியமேற்பட்டிருக்காது. அதே போல், மகாராஷ்டிராவை எடுத்துக் கொள்ளுங்கள். மகாராஷ்டிரமும், குஜராத்தும் ஒருபோதும் பிரிக்க முடியாது என்று நமது பாரதப் பிரதமர் உறுதியாகத் தெரிவித்தார். ஆனால் அதன் முடிவு என்னவாயிற்று? அதே மகாராஷ்டிரத்தையும், குஜராத்தையும் பிரித்து வைத்து, அதைத் தானே சென்று அங்கூரார்ப்பணம் செய்துவிட்டு வரவேண்டிய முறையில்தான் நாட்டின் விதி அமைந்திருந்தது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விதிகளிலே எனக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும், நாட்டிலே நடந்துள்ள சம்பவங்களைப் பற்றி எல்லோருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காகக் கூறுகிறேன். மகாராஷ்டிரத்தையும் குஜராத்தையும் அன்றையத் தினமே பிரிவினை செய்திருப்பார்களானால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு, அவர்கள் கேட்டு, அதன்பின் ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்து, பொதுத் தேர்தலை முன்னிட்டு அல்லது வேறு காரணத்திற்காக கொடுக்க வேண்டிய அவசியமேற்பட்டிருக்காது. நூற்றுக்கணக் காவலர்கள் இறந்திருக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்காது. பல நூற்றுக்கணக்கானவர்கள் பலவித கஷ்ட நஷ்டங்களுக்கும் ஆளாகி இருக்க வேண்டியதில்லை. இதனையெல்லாம் நன்றாக இப்போது நினைத்துப் பார்க்க வேண்டும். அதேபோல்தான் தமிழ்நாடு கிளர்ச்சி. இப்படி ஒவ்வொன்றையும் நினைத்துப் பார்த்தால், மொழிவாரிக் கிளர்ச்சியின் மூலம் மக்களுடைய கவனம் பூராவுமாக அதிகமான அளவிலே ஈடுபடுத்தக்கூடிய நிலையை ஏற்படுத்தியவர்கள் உண்மையாக காங்கிரஸ்காரர்களே என்பது தெரிய வரும். ஆகவே, இந்தக் கிளர்ச்சிகளுக்கு முதல் முதலில் வழி வகுத்தவர்களே இவர்கள்தான். இதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இன்றைக்கு நாம் என்ன பார்க்கிறோம். தேசிய ஒற்றுமைக்காக வழிகாண வேண்டுமென்று நம்மிடையே சொல்லப்படுகிறது. நாடெங்கும் தேசீய ஒற்றுமை குறித்து பேசுகின்ற அதே நேரத்திலே, தேர்தலுக்கு மாத்திரம் ஜாதியின் அடிப்படையிலே, நிற்பதற்குத்தான் நாம் பார்க்கிறோம். தேர்தலிலே யார் யார் எந்தெந்தத் தொகுதிகளில் நிற்பது என்று முடிவு செய்வதற்கு முன்னால், எந்தத் தொகுதியிலே எந்த ஜாதியினர் அதிகமாக இருக்கிறார்கள், யாரைப் போட்டால் ஜெயிப்பார்கள் என்பதிலே தான் அதிகமான கவனம் செலுத்தப்படுகிறது. ஆனால் ஜாதியைப் பற்றி பேசக்கூடாது, நினைக்கக்கூடாது என்று மட்டும் நாம்

எல்லோரும் பேசிக் கொண்டு வருகிறோம். தேசிய ஒற்றுமை பற்றி பேசிக்கொண்டே, அதே நேரத்திலே ஜாதியின் பேராலே தேர்தல் நடப்பதைத்தான் நாம் பார்க்கின்றோம். இதனை வளர்க்கக் கூடாது என்றுதான் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் இதிலே நம்பிக்கை உடையவன். இதற்கு முன் மாதிரியாகக்கூட, கனம் நிதி அமைச்சர் அவர்கள் விளங்குவதற்கு முடியும். நாட்டுப் பிரிவினை பற்றிய எண்ணமானது சென்னையிலே தான் பெருமளவுக்கு வலியுறுத்தப்பட்டு வருகிறது. இதையே தேர்தல் பிரச்னையாக வைத்து, சென்னை மாகாணத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தேர்தலிலே போட்டியிட இருக்கின்றனர். இதை அவர்கள் சொல்லிக் கொண்டும் வருகிறார்கள். ஒரு பக்கத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நாட்டைப் பிரித்தாக வேண்டுமென்று சொல்கிறார்கள். இதுதான் அவர்கள் கொள்கை என்பது வெளிப்படை. மற்றொரு பக்கத்திலே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு நாங்கள் விட மாட்டோம் என்று சொல்கிறார்கள். இந்தச் சமயத்திலே என் கட்சியின் சார்பாக கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு ஒன்றை சொல்லிக் கொள்ள் விரும்புகிறேன். இதையே ஒரு பிரச்னையாக வைத்து சென்னை நகரத்திலே தேர்தலுக்கு நில்லுங்கள், சட்டசபைக்கு நின்றாலும் சரி, அல்லது பார்லிமெண்டுக்கு நின்றாலும் சரி, உண்மையாகவே பிரஜா சோஷியலிஸ்டு கட்சியானது தனது முழு ஒத்துழைப்பையும் கொடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கொள்கையை அடிப்படையாக வைத்து, இந்த ஒன்றை மாத்திரம் பிரச்னையாக வைத்து தேர்தலுக்கு நின்றால் பிரஜா சோஷியலிஸ்டு கட்சி தன் ஒத்துழைப்பை நிச்சயமாக கொடுக்கத் தயாராக இருக்கிறது. ஆனால், நான் இங்கு நிற்க மாட்டேன், பொள்ளாச்சியில் தான் நிற்பேன், அதற்கு ஆதரவு கொடு என்று சொன்னால் அப்போது முடியாது. காரணம் என்ன? அங்கே அந்தப் பிரச்னைக்கு முக்கியத்துவம் இல்லை. அங்கே ஜாதிக்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஏன் இதை ஒரு குறிப்பாகச் சொல்கிறேன் என்றால், இதைப் போல் மற்ற இடங்களிலேயும்கூட, எல்லாக் கட்சிக்காரர்களும், இந்த ஜாதி அடிப்படையிலே அபேட்சகர்களை அந்தந்தத் தொகுதிக்கு நிறுத்தும் முயற்சியைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காகவே தான். ஆகவே, தேர்தலிலே இந்த ஜாதிக்கு முதலிடம் கொடுக்க வேண்டாமென்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிக முக்கியமான ஒரு விஷயத்தை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேசிய ஒற்றுமை ஒற்றுமை வேண்டுமென்று பேசுகின்றோம்.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : On a point of information, Sir : இந்த ஒற்றுமையானது ஒரு கட்சிக்கு மட்டுமா? எல்லாக் கட்சிகளும் இம்மாதிரி செய்ய வேண்டாமா? அதற்குத் தயாரா? என்று கேட்க விரும்புகிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri A. GOVINDASAMY) : கனம் அங்கத்தினர் ஸ்ரீ சின்னதுரை அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

Sri P. S. CHINNADURAI : தேர்தலிலே அப்படி இருக்க வேண்டுமென்று சொல்லும்போது, அது ஒரு கட்சிக்கு மட்டும் என்று அர்த்தமல்ல. எல்லாக் கட்சிகளுக்கும் தான். என்னுடைய கட்சிக்கும் தான் உண்டு என்று நான் சொல்லிக்கொள்கிறேன். ஏற்கனவே நின்ற தொகுதியிலே தான் நான் மீண்டும் தேர்தலுக்கு நிற்கப் போகின்றேன். என்றாலும், ஜாதி அடிப்படையை வைத்துப் பார்க்கும்போது, என்னுடைய ஜாதியினர் அந்தத் தொகுதியில் ஒரு சதமானத்திற்கும் குறைவாகவே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்தச் சந்தேகம் தங்களுக்கு வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மிக முக்கியமான தேசிய ஒற்றுமை குறித்து நாம் பேசுகின்ற நேரத்திலே, ஒன்றிலே நாம் கவனம் செலுத்த வேண்டும். நம் நாட்டிலே இன்றைக்கு மத ரீதியாக மைனாரிட்டியாக இருக்கக் கூடிய முஸ்லீம்களையும், கிறிஸ்துவர்களையும் நாம் புறக்கணித்து விட்டு, தேசீய ஒற்றுமையை கொண்டு வரவேண்டுமென்று நினைத்தால், அதிலே ஒருபோதும் நாம் வெற்றி பெற முடியாது என்று மட்டும் நான் எச்சரிக்க விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்திலே என்ன நடந்திருக்கிறது? முஸ்லீம்களே கிடையாதா? தவிர, மந்திரி சபையிலே என்ன காண்கிறோம்? அதற்கு முஸ்லீம்கள் இல்லை என்ற காரணமா? தகுதியுள்ள முஸ்லீம்கள் சட்டசபைக்கு வந்திருக்கிறார்கள். அதிலும், ஆளும் கட்சியிலேயே வந்திருக்கிறார்கள். ஆனால், அமைச்சராக அமரவில்லை. ஆனால் நாங்கள் ஜாதி அடிப்படையிலே பார்க்கவில்லை என்று மட்டும் சொல்கிறீர்கள். எது எப்படி இருந்தாலும், உண்மை நிலை என்ன என்பதை மட்டும் ஆராய்ந்து பார்க்க மக்கள் தவறி விடமாட்டார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மொழிவாரியான மைனாரிடி குறித்து நாம் அதிகமாக பொருட்படுத்தாதபோனாலும், மதரீதியான மைனாரிடியைக் குறித்து நாம் மிகுந்த கவனம் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். முஸ்லிம் லீக்குக்கு ஏற்கனவே ஒரு கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய இயக்கத்தின் காரணமாக நாட்டுப் பிரிவினை ஏற்பட்டு, பாகிஸ்தான் ஏற்பட்டது. பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டாலும், அதற்குப் பின்னாலும் கூட 4 கோடி முஸ்லீம்கள் பாகிஸ்தான் போய் விடவில்லை, இங்கே தான் இருக்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டை தாயகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(Dputy Speaker in the Chair.)

பிரித்துவைக்கிற முறையிலே நாம் நடந்துகொள்ளுவோமானால், அது ஒருபோதும் தேசீய ஒற்றுமைக்கு துணையாக இருக்காது என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

மத அடிப்படையிலே கட்சிகள் இயங்கக்கூடாது என்பதில் நிச்சயம் ஒற்றுமைப்பாடு உண்டு. மத அடிப்படையில் இயங்குகின்ற கட்சிகள் எல்லாம் அடியோடு அரசியலில் பங்கு எடுக்கக் கூடாது என்று தடை போடுவதற்கு துணிவு அகில இந்திய அரசுக்கு ஏற்பட்டாலொழிய, முஸ்லிம் லீக்கை மட்டும் தனியாக

தடைபோட்டு தடுத்துவிடமுடியாது. ஹிந்து மகாசபை, ஜன சங்கம், தாழ்த்தப்பட்டோர் லீக் இவைகளைத் தடுத்துவிட்டு, முஸ்லிம் லீக்கை தடுக்க வேண்டும். அந்த அளவிலே அது சாத்தியமே தவிர வேறு இல்லை. தாழ்த்தப்பட்டோர் லீக் கூட்டத்தில் தலைமை வகித்துக்கொண்டே ஒரு அமைச்சர் தேசிய ஒற்றுமையைப் பற்றி பேசினால் அல்லது இதர மைனாரிடியைப் பற்றி தாக்கிப் பேசினால் அதில் பலன் ஏற்படப்போவதில்லை. நாம் சொல்லுகிற சொல்லுக்கும், செய்கின்ற செயலுக்கும் சம்பந்தம் இல்லை. படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில் என்று மற்றவர்கள் பேசுவார்கள். தேசிய ஒற்றுமையில் அக்கறை இருக்குமேயானால், மதசார்பற்ற அரசியலை நாட்டிலே நிர்மாணிப்பதிலே நம்முடைய எண்ணமும், அக்கறையும் இருக்குமானால், மத சார்புள்ள கட்சி அரசியலில் தலையிடுவதை பகிரங்கமாக தடைப்படுத்துவதற்கு முயற்சி செய்ய முன்வரவேண்டும். அல்லது ஒரு கட்சிக்கு மட்டும் தடை போடுவதை விட்டுவிடவேண்டும், எல்லா கட்சிகளையும் செயல்பட விடவேண்டும். எல்லாக் கட்சிகளுக்கும் தடை போடும்போது, இந்த மகாசபை இல்லாமல் போகலாம். அப்பொழுதும் கூட தாழ்த்தப்பட்டோர் லீக், முஸ்லிம் லீக் தங்களுடைய சமூகத்தின் நலனுக்காக சிறிது காலத்திற்கு செயல்பட்டுத்தான் தீரவேண்டியிருக்கும். அரசியல் ரீதியில் இல்லாமல், மற்ற ரீதியில் அவர்கள் பாடுபடவேண்டும் என்பதில் ஐயப்பாடு கிடையாது. இன்னும் சில காலத்திற்கு முஸ்லிம் லீக், தாழ்த்தப்பட்டோர் லீக் இந்த நாட்டில் இருந்துதான் தீரும். அரசியல் ரீதியில் சமத்துவம் அடையும் வரையில், பொருளாதார ரீதியில் சமத்துவம் அடையும் வரையில் அந்த ஸ்தாபனங்கள் தனியாக செயல்படுவதை நாம் எதிர்த்துப் பேசுவோமானால், நான் நினைக்கிறேன் மைனாரிடியினர் தங்களுக்கு நியாயம் வழங்கப்பட்டதாக ஒருபோதும் கருதமாட்டார்கள். கம்யூனிஸ்ட் கட்சியானாலும் சரி, பிரஜா சோஷலிஸ்டு கட்சியானாலும் சரி, காங்கிரஸ் கட்சியானாலும் சரி, யார் என்ன பேசினாலும் மைனாரிடியினரைப் பொறுத்த வரையில் மெஜாரிடி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை நசுக்குவதற்காக தேசிய ஒற்றுமை என்ற போர்வையிலே, மதசார்பற்ற சமுதாயம் என்ற போர்வையிலே செயல்படுகிறார்கள் என்று கூறுவார்களே தவிர, வேறு வகையிலே சொல்லமாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பல்வேறு கட்சிகளும் தங்களுக்கு விருப்பமான இடங்களிலே மதஸ்தாபனங்களுக்கு ஆதரவு கொடுப்பதைக் குறித்து எனக்கு முன்னாலே பேசிய நண்பர் அவர்கள் சொன்னார்கள். முஸ்லிம் லீக்குக்கு ஒரு வகையிலே இடம் கொடுப்பவர்கள் மைனாரிடிக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு, நம்பிக்கை ஊட்டுவதற்கு அதைச் செய்கிறோம் என்று சொல்லலாம். மகாராஷ்டிரத்தில் கம்யூனிஸ்ட் கட்சியோடு இந்துமகா சபா செயல்படுகிறார்கள். மகாராஷ்டிரம் ஏற்பட்டுவிட்டாலும் கூட மகாராஷ்டிர சமிதி என்று ஒரு ஸ்தாபனத்தை வைத்துக்கொண்டு, இந்து மகாசபையோடு இணைந்து செயல்படுகிறார்கள். அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. இந்து மகாசபா இருக்கவேண்டிய அவசிய

மே இருக்காது. யாருடைய நலனை பாதுகாப்பதற்காக அந்த ஸ்தாபனம் இயங்கவேண்டும்? மிகப் பெரிய சமூகத்தினரான இந்துக்களுக்கு யாரிடமிருந்து ஆபத்து வந்திருக்கிறது? யாரிடமிருந்தும் ஆபத்து வரவில்லையே? அப்படியிருக்கும்பொழுது இந்து மகாசபா இருக்கவேண்டிய அவசியமே இல்லையே? இந்து மகாசபா தனியாக ஒரு கிளை ஸ்தாபனத்தை மகாராஷ்டிரத்தில் வைத்துக்கொண்டு, அகில உலக ஸ்தாபனம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற கம்யூனிஸ்டு கட்சியை ஏன் சார்ந்திருக்கவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. நாட்டிலே இம்மாதிரி எத்தனையோ விதமான காரியங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களெல்லாம் தேசிய ஒற்றுமை மகாநாட்டில் பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

என்னுடைய அபிப்பிராயம் தேசிய ஒற்றுமை மகாநாட்டிற்கு திராவிட முன்னேற்றக் கழகமும் அழைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது தான். திராவிட முன்னேற்றக்கழகம் பிரிவினையை வற்புறுத்தி வந்தபோதிலும் கூட, அவர்கள் அப்படிப்பட்ட மகாநாடுகளில் கலந்துகொள்ளுவதின் மூலம், கருத்துக்களை பரிமாரிக்கொள்ளுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். என்னுடைய ஆசை ஒன்று உண்டு. திராவிட முன்னேற்றக் கழகத்தில் தேர்ச்சி அடைந்த வாலிபர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய சக்தியெல்லாம் இன்றைக்கு விரயமாகிக்கொண்டிருக்கிறது. எங்கேயோ பாழும் நிலத்தில் கொண்டுபோய் விதைத்தால், பாரையில் கொண்டுபோய் நல்ல வித்துக்களைப் போட்டால் அது முளைக்குமா? முளைக்காது. அதுபோல நல்ல வித்துக்களை பாழும் நிலத்தில் விதைக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த நிலைமை மாற வேண்டுமென்ற ஆசை எனக்கு உண்டு. திராவிட முன்னேற்றக் கழகமாக மாத்திரம் அல்லாமல் பாரத முன்னேற்றக் கழகமாக அது வளர்ச்சியடையவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அதுதான் என்னுடைய மனதில் இருப்பதே தவிர, அவர்கள் நாட்டுப்பிரிவினை வேண்டும் என்ற குறுகிய எண்ணத்தைக் கொண்டவர்களாக இருந்தால் அது சரியானது அல்ல என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடிக்கடி சமீபகாலத்தில் பேசப்பட்டு வருவது உள்நாட்டு யுத்தம் என்பது பற்றி. அதற்கு ஆதாரம் உண்டா, இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இங்கு யார் யுத்தம் செய்ய பழகிக்கொண்டிருக்கிறார்கள். உள்நாட்டு யுத்தம் வந்தாலும் வரும் என்று ஒருவர் கூறுவதும், உள்நாட்டு யுத்தம் வந்தாலும் வரட்டும், பார்த்துவிடுவோம் அதற்கு விடமாட்டோம் என்று இன்னொருவர் கூறுவதும், ஆக இப்படிப்பட்ட நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். உள்நாட்டு யுத்தம் வருவதற்கு ஒருபோதும் சந்தர்ப்பம் கிடையாது. யுத்தத்தை சாதாரணமாகவே மக்கள் ஆதரிப்பதில்லை. அதுவும் உள்நாட்டு யுத்தத்தை நிச்சயம் ஆதரிக்கமாட்டார்கள். இந்த நிலைமையில் உள்நாட்டு யுத்தம் செய்வோம் என்று எவரேனும் சொல்வார்களேயானால், நாட்டுப் பிரிவினைக்கு உள்நாட்டு யுத்தம் வரும் என்று திராவிட முன்னேற்

[Sri P. S. Chinnadurai] [13th November 1961

12 noon. றக் கழகத்தினர் சொல்வார்களேயானால், நான் நினைக்கிறேன் அதற்கு மக்கள் சரியான பதில் அளிக்கத் தவறமாட்டார்கள். நாட்டைப் பிரிவினை செய்வதற்காக ஏற்படும் சாதாரணமாக கிளர்ச்சிகளுக்குக்கூட இனிமேல் இடம் இல்லை. இப்படியே பேசிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமையை மாற்றிக்கொண்டு நாட்டின் நலனில் கவனம் செலுத்தவேண்டியது அவசியமாகிறது. தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த, சமுதாயத்தை உயர்த்துவதுற்கு எல்லோரும் பாடுபட வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, பிரிவினை எண்ணத்தில் வீணாக நம்முடைய காலத்தை போக்காமல் ஒற்றுமை உணர்ச்சியை வளர்ப்பதற்கு பாடுபடவேண்டும். உலகத்தில் பல்வேறு நாடுகள் முன்னேறிக்கொண்டே போகின்றன. வேறு நாடுகளின் சரித்திரத்தைப் பார்த்தால், நிச்சயம் பிரிவினை எண்ணத்திற்கு அதிகமாக ஆக்கம் இல்லை. சின்னச் சின்ன நாடுகளாக பிரிந்து இருப்பதற்குப் பதிலாக, சின்னச் சின்ன தனி அரசு இருப்பதற்குப் பதிலாக ஒரே உலகம், ஒரே உலக அரசு ஏற்பட வேண்டும் என்ற எண்ணம், மனோபாவம் ஆங்காங்கு அதிகமாக மக்களால் போற்றப்பட்டு வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

DEPUTY SPEAKER : The hon. Member has got only two minutes more.

SRI P. S. CHINNADURAI : அரைமணி நேரம் பேசலாம் என்று இருந்தேன். அரை மணி நேரம் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : It is not possible to allot more than 20 minutes for the hon Member. நான் முதலிலேயே ஒவ்வொருவருக்கும் 20 நிமிஷங்கள் என்று அலாட் செய்து அனௌன்ஸ் செய்தேன்.

SRI P. S. CHINNADURAI : இன்னும் இரண்டு நிமிஷ நேரமாவது கொடுப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

DEPUTY SPEAKER : சரி சீக்கிரம் முடியுங்கள். The hon. Member will have to adjust his speech according to the time allotted.

SRI P. S. CHINNADURAI : நேரம் இருக்கிறது என்று நினைக்கிறேன். நேரம் வீணாகப் போகக் கூடாது. 1½ மணிக்கு முன்னால் சபை எழுந்திருப்பதை நான் ஒருபோதும் விரும்பமாட்டேன்.

DEPUTY SPEAKER : இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் பேசவேண்டும், ஸ்ரீ ஆதிமூலம் அவர்கள் பேச வேண்டும், கனம் மந்திரி அவர்கள் பேசவேண்டும். ஆகவே, நேரம் போதாது. 1-30 மணி வரைக்கும் சபை இருக்கும்.

SRI P. S. CHINNADURAI : தேசிய ஒருமைப்பாட்டைப்பற்றி பேசும்பொழுது, இன்னொரு விஷயத்தை முக்கியமாக நான் மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். கங்கை-காவேரி இணைப்பைப்பற்றி ஏற்கனவே நான் இந்தச் சபையில் கூறியிருக்கிறேன். கங்கை, காவேரியை இணைப்பதால் பல்வேறு பிரச்னைகளை தீர்த்துக்

13th November 1961] [Sri P. S. Chinnadurai]

கொள்ள முடியும். ஒரு ராஜ்யத்தில் ஓடும் நதி தன்னுடைய நதிதான் என்று சொல்லிக்கொண்டு, நாட்டுக்குப் பொதுவான சொத்து என்பதை மறந்து செயல்படுகிறார்கள். அந்த நிலைமையை மாற்றுவதற்குக் கங்கை காவேரி இணைப்பு பெரும் துணையாக இருக்கும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேசலாம். ஆனால், நேரம் இல்லை. பொதுவாக தேசிய ஒற்றுமையைப் பற்றிப் பேசும்போது, இனி இந்த நாடு பிரியக் கூடாது என்ற நிச்சயமான எண்ணம் பிரஜா சோஷலிஸ்ட் கட்சிக்கும் மற்றக் கட்சிகளுக்கும் உண்டு. மற்றக் கட்சிகளை விட அதிகத் திறமையும், சாதனங்களும் பலமும் உள்ள காங்கிரஸ் கட்சி அதைப் பயன்படுத்தி ஒற்றுமையை வளர்க்க இனித் தவறக் கூடாது என்று எடுத்துச் சொல்லி, என் உரையை முடிக்கிறேன்.

SRI D. S. AUTHIMOOLAM : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர், ஸார், இந்த விதமான தீர்மானம் இன்று இங்கே வர வேண்டிய அவசியம் என்ன வென்றால், இப்பொழுது இந்தியாவுக்கு விசேஷ அபாயம் எதுவும் இல்லை; ஏதோ நமது பிரதம மந்திரி எப்பொழுதுமே அவர்களைப் பற்றிப் பலபேர் கேட்பார்கள், அவர்கள் எவ்வளவு காலம் பதவியில் இருக்கப் போகிறார்கள், எப்பொழுது விலகப் போகிறார்கள் என்று நாம் ஒருகால் விட்டுவிட்டால், இந்த தேசம் ஐக்கியமாக, ஒரே நாடாக, ஒழுங்காக நடக்குமா என்ற கவலை; அந்தக் கவலை ஏற்கனவே இருக்கும்போது, சில புதுக் கஷ்டங்களும் ஏற்பட்டன. ஜப்பல்பூரில் ஹிந்து-முஸ்லிம் கலகம், அதற்குப் பின்னால், அஸ்ஸாமில் மொழிப் பிரச்சினை, கலகம்; இதன் மத்தியில் பார்லிமெண்டுக்கு ஒரு உபதேர்தல்; அதில் ஜனசங்கம் காங்கிரஸை வீழ்த்தி விட்டது. இன்னும் சில சில்லரை சில்லரையான பூசல்கள். ஆகவே, இதையெல்லாம் பார்த்த நம் பிரதம மந்திரி நம் தேசத்தை ஒரு பலம் பொருந்திய நாடாகச் செய்ய வேண்டுமென்று எண்ணி, இந்த இண்டக்ரேஷன் கான்பரன்ஸைக் கூட்டினார்கள். நாட்டிலே ஏதோ விசேஷ நெருக்கடி ஏற்பட்டு விடவில்லை. இது முக்கியமாக "நாஷனல் இண்டக்ரேஷன்" என்று சொல்வதற்குப் பதிலாக, "ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை" என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப் பச்சையாகச் சொல்ல முடியாது என்று பாலிஷாக சொல்வதுபோலத் தெரிகிறது. இந்த முஸ்லிம்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஊடே சச்சரவு ஏற்படுவது ஒரு முக்கியமான விஷயம். கனம் கல்வி அமைச்சர் பேசும்போது, பாரதத்தை இணைத்த சர்தார் படேல் அவர்களின் வலிமை, திறமைகள் பற்றியும், அடல்ட் ப்ரான்சைஸ் கொடுத்த சாதனையையும், இவைகளையெல்லாம் பற்றிச் சொன்னார்கள். இதெல்லாம் காங்கிரஸுக்குப் பெருமைதான். ஆனால், காங்கிரஸுக்குப் பதவி வெறி ரொம்ப இருக்கிறது. (சிரிப்பு) சாதாரணமாக நாட்டில் துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளுக்குக் காரணம் என்ன? இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

முன்பு நடந்த திருவாங்கூர், கேரள எலெக்ஷனை எடுத்துக் கொண்டால், இந்த நாட்டில் 5 கோடி முஸ்லிம்களுக்குப் பிரதிநிதித்துவம் என்று சொல்லக் கூடிய ஒரு முஸ்லிம் லீகோடு சேர்ந்து

[Sri D. S. Athimoolam] [13th November 1961

கொண்டது காங்கிரஸ். அது ஒரு பெரிய, "ஹிமாலயன் ப்ளண்டர்". அதே மாதிரி என்றைக்குமே முஸ்லிம்கள் உணர்ந்ததில்லை. பாகிஸ்தானுக்குப் பிறகு செத்துக்கொண்டிருந்தது அந்த லீக். அங்கே கம்யூனிஸ்ட் சர்க்காரை விரட்டிய பிறகு, பழையபடி காங்கிரஸ் எல்லா ஸ்தானங்களையும் பிடிக்க வேண்டுமென்று, அந்த அடிப்படையில், வேலை செய்வதைப் பற்றித் தப்புச் சொல்லவில்லை. பிரஜா சோஷலிஸ்ட் கட்சியோடு ஒப்பந்தம் வைத்துக் கொண்டு எலெக்‌ஷனை நடத்தியிருக்கலாம். ஆனால், அவர்கள் முஸ்லிம் லீக் காரர்களைச் சேர்த்துக் கொண்டு, செத்துக் கிடந்த லீகிற்கு ஒரு புத்துயிர் கொடுத்தார்கள். மூலையில் கிடந்த அந்த லீகின் தலைவர் என்பவர் உடனே திக் விஜயம் புறப்பட்டார். பம்பாயில், அலிகாரில் சென்று வேலைசெய்ய ஆரம்பித்தார். அகில இந்தியக் கதை என்ன? லட்சக்கணக்கான ஹிந்துக்களும் கொலை செய்யப்பட்டு உயிரை விடவில்லையா? வேண்டுமென்றால், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியோடு மறுபடியும் ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடாதா? இல்லை, சாதகமாகத் தீர்ப்பு வரவில்லை யென்றால், மறுபடியும், கேரளாவில், ஒரு ஸ்பெஷல் ஆர்டினன்ஸ் போட்டு, சர்க்காரை சென்ட்ரல் கையிலேயே வைக்கக் கூடாதா? அது ஜனநாயகத்திற்குச் சரியல்ல என்று, முஸ்லிம் லீகோடு சேர்ந்து கொண்டு, செத்த பாம்புக்கு உயிர் கொடுத்து விட்டார்கள். விளைவு என்ன? ஜப்பல்பூரிலும் அலிகாரிலும் கலகங்கள் ஏற்பட்டன. இந்த மாதிரித் தவறுகள் இனி காங்கிரஸ் கட்சி செய்யக் கூடாது. வழிகாட்டியாக இருக்க வேண்டிய கட்சி, இந்த மாதிரி நடந்ததால்தான் இந்தக் கேடுகள் விளைந்தன. நாஷனல் இண்டிக்ரேஷன் என்ன காரணத்திற்காக? டாக்டர் ஸி. பி. ராமசாமி அய்யரும் மற்றவர்களும் என்ன விசேஷமான யோசனைகள் சொல்லிவிட முடியும்? அதெல்லாம் ஒன்றுமில்லை. சமாசாரம் வேறே. காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, பூசல்கள். தெளிவான கொள்கையை வகுக்க வேண்டும். ரொம்பக் கேவலமான உணர்ச்சிகள் வந்து விட்டன. முன்பெல்லாம், நம் தேசம், நம் நாடு, நம் மாகாணம் என்று சொல்லக் கூடிய உணர்ச்சிகள் இருந்தன. இன்றைக்கு, அதெல்லாம் போய், எல்லாம் "என்" என்ற முறையிலே, என் தேசம், என் நாடு, என் மாகாணம் என்றாகிவிட்டது. அது சரி இல்லை. ஆகவே, நீங்கள் உங்கள் கட்சியின் கொள்கையைச் சரியாக வகுக்க வேண்டும். ஜனநாயகம் என்று பேசிக்கொண்டு, காரியங்கள் சரிவரச் செய்வதில்லை. பார்டி வெறி ரொம்ப வந்து விடுகிறது. ஓரிசாவை எடுத்துக் கொண்டால், திருவாங்கூரில் கம்யூனிஸ்ட் சரியாக ராஜ்யம் நடத்தவில்லை என்று ஒழித்தாற் போல, மகாத்மா காந்தியின் பெயரால் வோட்டு வாங்குகிறவர்கள், ஒரு கட்சியோடு கோயலிஷன் செய்துகொண்டு மந்திரி சபை அமைத்தார்கள். பின்னால், எலெக்‌ஷன் வருவதற்கு முன்னாலேயே, மந்திரிசபையை ஒழித்து விட்டார்கள். ஜெனரல் எலெக்‌ஷனுக்கு முன்பாக காங்கிரஸே பதவியில் இருக்க வேண்டுமென்று பெயர் ஏற்படவேண்டும் என்று, அப்படிச் செய்தார்கள். ஆகவே, எதை எடுத்துக் கொண்டாலும், 100-க்கு 100 தன் கட்சியாகவே இருக்கவேண்டும் என்று தேசத்தை நடத்துகிறார்கள்.

13th November 1961] [Sri D. S. Athimoolam]

உங்கள் கொள்கைதான் என்ன சரியாகவா இருக்கிறது? தங்கள் கட்சிக்கு ஆதரவு கொடுக்கிறார் என்பதற்காக, பிராமணர்களை ஏசிக் கொண்டே இருக்கும் ஒருவருக்கு 35,000 ரூபாயில் மோட்டார் வான் வாங்கிக் கொடுத்திருக்கிறது. நான் காங்கிரஸ் தலைவர் சஞ்சீவி ரெட்டிக்கு எழுதினேன். முஸ்லிம்களைப் பற்றிப் பேசுகிறார்களே அடிக்கடி, 37-ல் ராஜாஜி மந்திரி சபைக்குப் பிறகு—அந்த மந்திரி சபையில் கனம் யாகுப் ஹாஸன் ஒரு மந்திரி பதவி வகித்தார்—எந்த முஸ்லிமுக்காவது கொடுத்திருக்கிறீர்களா என்று. கனம் சின்னதுரை சொன்னார்கள். இந்த தேசத்தில் ஹரிஜனங்கள் வோட்டர்களாக இருக்கிறார்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்காகத் திட்டங்கள் போடுகிறார்கள். ஆனால், 37-க்குப் பிறகு, இந்திய யூனியனில் சில முஸ்லிம்களைத் தவிர, ஹைதராபாத்தில் தவிர, எங்குமே முஸ்லிம்களுக்கு மந்திரி பதவி கொடுத்ததில்லை. இப்படிச் செய்கிறீர்கள் நீங்கள் காரியங்களை. மந்திரி சபையிலே முஸ்லிம்களுக்கு இடம் கொடுத்தார்களா என்று கேட்கிறேன். எங்கே பார்த்தாலும், ரெட்டியார், கவுண்டர், நாயுடு என்றுதான் போடுகிறார்கள். இப்பொழுது தேர்தலுக்கு நான்கு மாதத்திற்கு முன்னால் இதற்குப் பரிகாரம் கேட்கிறார்கள். நாங்கள் பரிகாரம் சொல்லி என்ன நடக்கப் போகிறது? பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்தான் இதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டும். அவர் தலைமையைக் கொண்ட காங்கிரஸ்தான் இதற்கு வழி வகுக்க வேண்டும். நாங்கள் என்ன பண்ண முடியும்? தேசிய ஒருமைப்பாடு இப்பொழுது ஒன்றும் கெட்டுப் போகவில்லை. "ஆப்டர் அவர் நேருஜி" என்ன நடக்கும் என்பதுதான் இப்பொழுதுள்ள பெரிய பிரச்னை. இப்பொழுதே அஸ்திவாரம் போட்டு வேலை செய்ய வேண்டும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி விட்டார்கள். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நீங்கள் மக்கள் முன்னால் வைக்க வேண்டும். எந்தத் தொகுதியிலே முஸ்லீம்கள் ஜாஸ்தியோ அங்கே ஹிந்து அபேட்சர்களையும், எந்தத் தொகுதியில் கவுண்டர்கள் அதிகமோ அங்கே நாயுடு அபேட்சகரையும், எந்தத் தொகுதியிலே நாடார்கள் அதிகமாக இருக்கிறார்களோ அங்கே ரெட்டியார் அபேட்சகரையும்,—இந்த அடிப்படையிலே தேசம் பூராவும் அபேட்சர்களை—தேர்தலில் நிறுத்த வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒரு issue -ஆக வைத்து, அதிலே மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா என்று தேர்தலில் நிற்க வேண்டும். காங்கிரஸ் என்றும் இல்லாத பலத்தில் இன்று இருந்து வருகிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இந்த முறையிலே தேர்தலுக்கு ஒரு வருஷத்திற்கு முன்பே, ஆலோசனை பண்ணி, அபேட்சகர்கள் பட்டியலைத் தயார் செய்திருக்க வேண்டும். தேர்தல் பிப்ரவரி மாதம் வருகிறது. இப்பொழுது முக்கால் வாசிப் பட்டியல் ஜாதி அடிப்படையிலே தயாராகி விட்டது. ஆகவே இப்பொழுது பேசி என்ன பண்ண முடியும்? இதற்கெல்லாம் ஒரு "டர்னிங் பாயின்ட்" கொடுத்திருக்க வேண்டாமா? இந்த தேசத்தை நீங்கள் நல்ல முறையிலே நடத்த முடியும். ஒரு சிற்பி மாதிரி எல்லா விஷயங்களிலும் வேலை செய்ய வேண்டும். நான் சமீபத்தில் சஞ்சீவி ரெட்டி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன். பெரியார் ஈ.வே.ரா.-வுக்கு உங்கள்

[Sri D. S. Athimoolam] [13th November 1961

கட்சியைச் சேர்ந்த ஒருவர் 35,000 ரூபாயில் ஒரு "வேன்" வாங்கிக் கொடுத்தார்கள் என்று எழுதினேன். இந்த தேசத்திலுள்ள பிராமணர்களை அவர் ஏசுவதற்கு இது பரிசா என்று கேட்கிறேன். அந்தக் காலத்தில் நடந்த தேசீய போராட்டத்திலே, சுயராஜ்யம் பெற நடந்த போராட்டத்திலே, பிராம்மணர்கள் எவ்வளவோ பாடுபட்டார்கள். சுயராஜ்யப் போராட்டத்திற்கு அன்று நின்று வேலை செய்தது யார் என்று கேட்கிறேன். "பார்ப்பான் வீட்டைத் தீயை வைத்துக் கொளுத்து" என்று சொல்லி, கோர்ட்டுக்குப் போய் அங்கே தண்டனை விதிக்கப்பட்டு, அதற்குப் பிற்பாடு ஹெல்த் கிரௌண்டில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு கடைசியாக அவரை வெளியே விட்டுவிட்டார்கள். இவ்வாறு பிராம்மணர்களை ஏசுவது ஒருபுறமிருக்க, மற்றொரு புறம் "மதுரை வைத்தியநாதய்யரைப் போல் உண்டா" என்றும் பேசுகிறார்கள். சொல்வது ஒன்று, செய்வது ஒன்று. இந்த மாதிரி நிலைமையிலே 100-க்கு 100 வீதம் நீங்களே உங்களைச் சுத்தி செய்துகொள்ள வேண்டும். ஆகவே, காங்கிரஸ்தான் இதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் சொல்லுகிறேன். பாகிஸ்தான் பிரிந்து போனது போகட்டும். அது அகில இந்திய ரீதியிலே, ஜின்னா தலைமையிலே பிரிட்டிஷார் சூழ்ச்சியினால் நடந்தது. பாஷாவாரி மாகாணங்கள் காங்கிரஸ் விஞ்ஞாபனத்திலே இருக்கிறது என்று சொல்லிப் பிரிக்கப்பட்டன. அதிலும் சில ராஜ்யங்களுக்குப் பிரித்து விட்டு, பம்பாயை "பை-லிங்குவல் மாகாணமாக" வைத்து அதன் காரணமாக ஆமதாபாத்திலே 100 பேர் சுடப்பட்டனர். கடைசியில் பம்பாய் மாகாணத்தையும் பிரித்தாகி விட்டது. இனிமேல் இந்த தேசத்திலே பிரிவினை சக்திக்கு இடமில்லை என்ற வகையிலே வழிகாட்ட வேண்டும். இப்பொழுது மாகாணங்கள் விண்ணப்பங்கள் போடுகிற நிலைமைக்கு வந்துவிட்டன. இருபத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் ஒரு கல்வெர்ட் கட்டவேண்டுமென்று சொன்னால், அதற்கும் மத்திய சர்க்காருக்கு விண்ணப்பம் போட்டு, திட்டக் கமிஷனுக்குப் போக வேண்டியிருக்கிறது. "புரொவின்ஷியல் ஆட்டானமி" அடிபட்டுப் போய்விட்டது. மாகாண சர்க்காருக்கு அதிக அதிகாரத்தைக் கொடுக்கக்கூடிய வகையில் நீங்கள் திட்டங்கப் போட வேண்டும்.

இன்னொரு முக்கியமான விஷயத்தைப் பற்றியும் சொல்ல விரும்புகிறேன். அதாவது மொழிகளைப் பற்றியது. ஆங்கிலம் கற்றுக் கொள்வதற்கே 10 வருஷம் ஆகிறது. மூன்றாவது பாஷையும் படிக்க வேண்டும், தேசத்திற்கு காமன் லாங்க்வேஜ் தேவை என்று சொல்லி, இல்லாத பாஷைகளை எல்லாம் உண்டாக்கிவிடக் கூடாது.

மற்றொரு விஷயம். அது சின்ன விஷயமாகவும் இருக்கிறது. பெரிய விஷயமாகவும் இருக்கிறது. (சிரிப்பு). தேசம் பூராவும் ஒற்றுமை ஏற்படுவதற்கு இன்னொன்று செய்ய வேண்டும். சுதந்திர தினத்தன்று நாமெல்லோரும் வீட்டுக்குள்ளேயிருந்து ஒளிந்து கொள்கிறோம். எதற்காக அப்படி ஒளிந்து கொள்கிறோம்? நேஷனல் பிளாக்கைப் பிடித்துக்கொண்டு போனால், நீங்கள் காங்கிரஸ் கட்சியிலே சேர்ந்துவிட்டீர்களோ என்று கேட்கிறார்கள்.

13th November 1961] [Sri D. S. Athimoolm]

ஒவ்வொரு தேசத்திலுள்ளவர்களுக்கும் சுதந்திரம் பிறப்புரிமை. எந்தக் கட்சியில் ஒருவர் சேர்ந்திருந்தாலும் சுதந்திர தினத்தை அவர்கள் ஆனந்தத்துடன் கொண்டாட வேண்டும். நாற்பது கோடி மக்களும் தேசீயக் கொடிக்கு வணக்கம் செலுத்த வேண்டும். இதில் யாருக்கும் விருப்பு, வெறுப்பு ஏற்படக்கூடாது. நான் சொல்வதற்குள்ளேயே நீங்கள் எல்லோரும் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். (சிரிப்பு). தேசீயக் கொடியும், காங்கிரஸ் கொடியும் ஒன்றாக இருக்கிறது. ரஷ்யாவிலே கம்யூனிஸ்ட் நாட்டிலே அந்த மாதிரி இருக்கலாம். ஆனால் இந்தியா ஒரு ஜனநாயக நாடு. ஆனால் இங்கே ஒரே கொடியை வைத்துவிட்டு, மற்ற கட்சிக்காரர்கள், கம்யூனிஸ்ட் கட்சிக்காரர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர், சுதந்திரக் கட்சிக்காரர், எல்லோரும் அந்தக் கொடியைப் பிடித்துக் கொண்டு போவதற்கு லஜ்ஜைப் படுகிறார்கள். இது நம்முடைய தேசம். இன்றைக்கு யார் வேண்டுமானாலும் பதவியிலிருக்கலாம். நாளை, தெருவிலே போகிறவனுக்கு யோகம் வந்தால் அவனும் பதவியில் இருக்கலாம். தேசீயக் கொடிக்கு எல்லோரும் மரியாதை செய்யவேண்டும். தேசீய விழாவை எல்லோரும் ஒரு பெரிய திருவிழாவாகக் கொண்டாட வேண்டும். இதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும். இதன்மூலம் ஒற்றுமை வளரும். அதை யார் போய் தைரியமாக எடுத்துச் சொல்லுவது? தேசீயக் கொடியை மாற்ற வேண்டுமென்று சொன்னால், அடிதான் கிடைக்கும். அப்படி தேசீயக் கொடியை மாற்ற முடியாவிட்டால், காங்கிரஸ் கொடியை மாற்றிக் கொள்ள வேண்டும். ஆகவே, தேசிய ஒற்றுமைக்கு நீங்கள் எல்லாவிதத்திலும் வேலை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

Sri C. N. ANNADURAI: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நாடு எங்கிலும் பேசப்பட்டு வருகிற "தேசிய ஒருமைப்பாடு" என்கின்ற பிரச்னையாகக்கூடிய ஒரு மாநாட்டின் நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்பேட்டின் பேரில், இன்றைய தினம் இங்கே ஒரு விவாதத்தை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். நடைபெற்ற மாநாட்டிலே பல்வேறு கட்சிகள் அழைக்கப்பட்ட போதிலும், நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கட்சி அழைக்கப்படவில்லை என்பதைப் பல அங்கத்தினர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டினர். ஆனால் நான் அதை ஒரு குறையாக எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால், தேசீய ஒருமைப்பாடு மாநாடு என்று அவர்கள் கூட்ட ஆரம்பித்தது, இன்று காலையிலே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்தின்படி பார்த்தால், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் நடவடிக்கையின் தொடர்ச்சியாக, மூன்றாவது கட்டமாக, அது நடைபெற்றிருக்கிறது. நாட்டிலே இருக்கிற ஒரு ஆளும் கட்சியின் நடவடிக்கைகளிலே இது ஒரு தனியான கட்டமாக அமைந்திருப்பதால், அதிலே நாங்கள் அழைக்கப்படாததைப் பற்றி உள்ளபடியே வருத்தப்படத் தேவையில்லை. ஆனால், 'தேசீய ஒருமைப்பாடு' என்று எடுத்துச் சொல்லப்பட்டு வந்ததை நம்முடைய நிதி

அமைச்சர் அவர்கள் இங்கே 'தேசிய இணைப்பு' என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். வார்த்தைக்குவார்த்தை நான் பொருள் பிரித்துப் பார்க்கிறேன் என்று யாரும் என் பேரில் வருத்தப்பட்டுக்கொள்ள வேண்டாம். 'ஒருமைப்பாடு' என்பதற்கும் 'இணைப்பு' என்பதற்கும் அடிப்படையிலே வித்தியாசம் இருக்கிறது. 'இணைப்பு' என்பது—தனித்தனி உருவங்களைப் படைத்த பல்வேறு உருவங்களை ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக இணைத்து வைப்பது இணைப்பாகும். 'ஒருமைப்பாடு' என்பது—தனித் தனியாக இருக்கிற உருவங்களாக இருந்தாலுங்கூட, அவைகளையெல்லாம் ஒன்று கூட்டி ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது ஒருமைப்பாட்டின் பால் சேர்ந்ததாகும்.

'இந்த மாநாட்டை நடத்தியவர்கள் தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க விரும்பினார்கள்' என்று ஏடுகளெல்லாம் எழுதின. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 'இது தேசிய இணைப்பு' என்றார்கள். 'இன்டெக்ரேஷன்' என்பதற்கு அகராதியில் தரப்பட்டிருக்கிற பொருள்—'துண்டுபட்டிருக்கின்ற பொருள்களை ஒரு பொருளாகக் குவிப்பது அல்லது சேர்ப்பது' என்பதாகும். ஆகவே, இந்த மாநாட்டை நடத்தியவர்கள் 'இன்டெக்ரேஷன்' என்பதற்கான நல்ல விளக்கத்தையும், அதற்கும் முன்னாலே 'நாஷனல்' என்பதற்கான விளக்கத்தையும், எது 'நேஷன்' என்பதற்கான இலக்கணங்களையும், இந்தியாவில் உள்ளவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரே நேஷனைச் சேர்ந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்களையும் விரிவாகக் கொடுத்திருப்பார்களானால் விவாதம் கட்சி அரசியலுக்கு மட்டும் பயன்படாமல் இன்னும் சற்று உயிருள்ளதாக அமைந்திருக்கும். அதற்கு நம்முடைய துரைத்தனத்தார் தந்திருக்கிற இந்த ஏட்டோடுகூட, அதிலே கலந்து கொண்டவர்கள் அங்கே எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் அவர்கள் தொகுத்துக் கொடுத்திருப்பார்களானால் அவரவர்கள் உள்ளத்தில் தேசிய ஒருமைப்பாடு என்பது என்ன என்ன வகையிலே வடிவம் எடுத்தது என்பதை நாம் ஓரளவு தெரிந்து கொண்டிருக்கலாம். அதை அவர்கள் செய்யத் தவறிவிட்டார்கள்.

ஆனால் நம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற இந்த அறிக்கையிலே பார்க்கின்ற நேரத்திலே, இதில் முதல் இரண்டரை பக்கங்களில், இந்தியா என்பது பல்வேறு வகையான இனங்களையும் பல்வேறு வகையான மொழிகளைப் பேசுகின்ற மக்களையும் கொண்ட ஒரு முரண்பாடு நிறைந்த இடம் என்றாலும், அந்த முரண்பாட்டுக்கிடையே ஒரு ஒருமைப்பாட்டை ஏற்படுத்த நெடுங்காலமாக இந்த நாட்டிலே முயற்சி செய்து பலர் அதில் வெற்றியும் கண்டிருக்கிறார்கள் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு இந்தியத் துணைக் கண்டத்தினுடைய குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் தம்முடைய அரிய உரையில் ஆதாரமாகக் காட்டியிருப்பதாவது : 'If you look into the Mahabharata, you will find there that almost all the representatives from the north and the extreme south are said to haye been present at the Kurukshetra war.' அரசியல் பிரச்சினைகளை

விவாதிக்கின்ற நேரத்தில் பாரதக் கதையை ஆராயலாமா என்று கேட்டால், டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடாமல் இருந்திருப்பாரானால் நானும் அதைக் குறிப்பிடத் தயக்கப்பட்டிருப்பேன். ஆனால், டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களே இதை ஒரு அரசியல் பிரச்சினைக்கு ஆதாரம் அளிக்கக்கூடியது என்று எடுத்திருக்கிறார். நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்வேன். இதிலே குறிப்பிட்டிருப்பதில் **Extreme South** என்று இருக்கிறது. அங்கே வந்திருந்தவர்கள் தென் கோடியிலேயிருந்து வந்திருந்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்களே என்று நான் நம்முடைய சங்க இலக்கியங்களைப் பார்த்தேன். அப்படிப் பார்க்கிற நேரத்தில், அவர்கள் பாரதப் போரில் எந்தப் பக்கத்திலேயும் சேராமல் சண்டையில் ஈடுபட்ட இருவருக்கும் சோறு அளித்தார்கள் என்று நம்முடைய சங்க இலக்கியம் சொல்கிறது. அதிலே 'குருக்ஷேத்திரம்' என்ற அபாயகரமான வார்த்தையை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் உபயோகப்படுத்தியதிலேயிருந்து, பாரத காலம் முதற்கொண்டு அடிதடிச் சண்டை நடந்துகொண்டு வந்தது என்பது அதிலே ஆதாரமாக இருப்பதுதான் என்னைப் போன்றவர்களுக்குத் தெரிகிறது.

ஆனால், பலர் இந்தியத் துணைக் கண்டத்தை ஒன்றாக இணைக்க முயற்சி எடுத்துக்கொண்டார்கள். "**unity in diversity**" முரண்பாடுகளுக்கிடையே ஒருமைப் பாட்டைக் காண விரும்பினார்கள் என்று குறிப்பிட்டிருப்பது அத்தனையும் எந்தெந்த நேரத்தில் எந்தெந்தப் பகுதியில் உள்ளவர்கள் வலிவு பெற்றிருக்கிறார்களோ அவர்கள் இந்தியா முழுவதையுமே தங்களுடைய ஒரு குடையின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டு, இக்காலத்தில் அமைக்கப்படுகிற சாம்ராஜ்யங்களைப் போல், முன்னே சில சாம்ராஜ்யங்களை அமைத்தார்கள் என்பதைத் தவிர, தேசிய ஒருமைப்பாடு என்பதற்கு இன்று அளிக்கப்படுகிற இலக்கணத்தையொட்டி இந்தியத் துணைக் கண்டத்திலே அமைந்திருந்த ஒரு அரசை அருள் கூர்ந்து எனக்குக் காட்டுங்கள். இங்கே குப்த சாம்ராஜ்யத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்பருடைய மனப்பான்மையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அசோகனுடைய சாம்ராஜ்யத்தைப் பற்றியும் இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவை அத்தனையும் நர்மதையாற்றுக்கு மேலேயே தவிர, நர்மதையாற்றுக்குக் கீழே இல்லை என்பதை வரலாறும் பூகோளமும் ஒருசேரக் கூட்டிப் படிப்பவர்கள் நன்றாக உணர்ந்து கொள்வார்கள். ஆனால், அசோகன் அக்பர் இப்படிப்பட்ட பரந்த மனப்பான்மை படைத்தவர்கள் எந்தக் கோடியிலே இருந்தாலும், அவர்களை வாழ்த்த வேண்டியதும் வணங்க வேண்டியதும் தமிழகத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, தரணியில் உள்ள அனைவருக்குமே கடமையாகும். அந்த வகையிலே அசோகன் புகழ் பெற்றிருக்கிறார் என்றால், அந்த வகையிலே அக்பர் புகழ்பெற்றிருகிறார் என்றால், அவர்கள் துவக்கிய, அவர்கள் அமைத்த அரசு ஏன் நிலைக்கவில்லை? நிலைக்காததற்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

[Sri C. N. Annadurai] [13th November 1961

இன்றையதினம் காஷ்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரையில் நாங்கள் ஒரே பேரரசை அமைத்துவிட்டிருக்கிறோம் என்றும், அது அமைத்தது மாபெரும் சாதனை என்றும், அதைப் படிப்படியாக எப்படி அமைத்திருக்கிறார் என்பதைத் தங்களுடைய சாதனையாக நம்முடைய நிதி அமைச்சர் எடுத்துச் சொல்லிக் கொண்டு வந்ததையும் அவர்கள் ஆராய்ந்து பார்ப்பார்களானால் இந்த வழிமுறைகளெல்லாம் அசோகருக்கும் அக்பருக்கும் தெரிந்திருக்காது என்று கருதிக் கொண்டிருக்கிறீர்கள்? கனிஷ்கன், ஹர்ஷன் இவர்கள் அதை அறியமாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள்? அல்லது குப்த, மௌரிய சாம்ராஜ்யத்திலே இப்படிப்பட்ட இராஜதந்திர நிபுணர்கள் இருந்ததில்லை என்று எண்ணுகிறீர்கள்? இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால், அவர்கள் அத்தனை பேரும் எதை நம்பி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை அமைத்து, கடைசியில் எது இல்லாததால் அந்த சாம்ராஜ்யம் அழியப்பட்டதோ, அதைப் போலவே இன்றையதினம் நீங்கள் எதை நம்பி இந்த சாம்ராஜ்யத்தை அமைக்கின்றீர்களோ, அது எது இல்லையோ அதனால் அழிக்கப்படப் போகிறது என்பது காலம் அளிக்கும் தீர்ப்பாக இருக்கப் போகிறது.

'பிப்ரவரி மாதத்திலே பார்' என்கிறார் நிதி அமைச்சர். பிப்ரவரி மாதத்தோடு பிரச்சினை தீர்ந்துவிடுவதில்லை. தேர்தலில் ஏற்படுகின்ற விளைவுகளையொட்டி உடனே இந்தப் பிரிவினைப் பிரச்சினை விட்டுவிடுவார்கள் என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதுவார்களானால், அவர் பெரிதும் ஏமாற்றத்திற்கு உள்ளாவார்கள். 'இதைப் போலவே கடுமையான சட்டத்தைக் கொண்டு வந்து நாங்கள் அடக்க முடியும், ஆனால், பொறுத்திருக்கிறோம், மக்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று இருக்கிறோம்' என்று இருபொருள் படும்படியாக நிதி அமைச்சர் பேசுகிறார் என்றால்—நான் தெளிவாக அவருக்குச் சொல்கிறேன்—எங்களுடைய கொள்கைகளை நீங்கள் மதிக்காது இருக்கலாம். எங்களுடைய வாதங்களை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், எங்களுடைய தூய்மையான இருதயத்தைத் தயவுசெய்து சந்தேகப்படாதீர்கள். நாங்கள் இந்தக் கொள்கையில் எங்களை ஈடுபடுத்திக் கொண்ட நேரத்தில் இழிமொழியும் பழிச்சொல்லும் எங்களை வந்து தாக்கும் என்று உணர்ந்த பிறகுதான் ஈடுபடுத்திக் கொண்டோம். அதை அடக்கப் போலீசும் படையாட்களும் பயன்படுத்தப்படும் என்பதை ஒரு துளியும் அறியாமல் அல்ல அந்த
12-30 a.m. நேரத்தில் ஈடுபட்டது. இப்படிப்பட்ட, ஒரு பிரிவினைச் சக்தி என்று உங்களால் அழைக்கப்படுகிற சக்தியைத் தேர்தலிலே இலட்சக் கணக்கான பணத்தைச் செலவழித்து ஒழித்துக் கட்டலாம் என்று திட்டம் இடுவீர்கள் என்பதும் நாங்கள் அறியாததல்ல. ஆனால், நாங்கள் கேட்கிற அந்தக் கோரிக்கை இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது. இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது என்றால், நாங்கள் அத்தனை பேர்களும் எங்களுடைய இரத்தத்தைச் சிந்தி அடையவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். அந்த இரத்தமும் உங்கள் கரத்திலே இருக்கும் கத்தி

13th November 1961] [Sri C. N. Annadurai]

யால் வெளிப்படவேண்டும் என்று நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆகையால், கத்தி இருந்தால் கூர்மையாகத் தீட்டிக் கொள்ளுங்கள். சட்டம் இருந்தால் விரைவில் அமுலுக்குக் கொண்டு வாருங்கள். எப்படிப்பட்ட பயங்கரமான நடவடிக்கைகளிலே ஈடுபடுவதானாலும் அவைகளுக்கெல்லாம் சளைக்காமல் இருப்பதற்குக் காரணம்—தனிப்பட்ட முறையில் நாங்கள் பெரிய துணிச்சல்காரர்கள் என்பது அல்ல—நாங்கள் அந்த லட்சியத்தை அவ்வளவு பரிபூரணமாக நம்பிக்கை கொண்டிருக்கிறோம். 'இது என்ன பயித்தியக்காரத்தனம்!', என்று நிதி அமைச்சர் அவர்கள் கருதலாம். 'இது என்ன பயித்தியக்காரத்தனம்!' என்றுதான் சுயராஜ்யத்திற்காகப் போராடிய நேரத்திலும் பல பெரியவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். அது இன்றிருக்கும் பல காங்கிரஸ்காரர்களுக்கு விளங்காமலிருக்கலாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நீங்களே நினைத்தீர்கள்.

SRI C. N. ANNADURAI: நானும் நினைத்ததாக நம்முடைய நிதி அமைச்சர் சொல்கிறார். எனக்கும் திராவிடக் கழகத் தலைமைக்கும் ஏற்பட்ட கருத்து மாறுபாட்டுக்குக் காரணமே சுயராஜ்யத்தைப்பற்றி நான் கொடுத்த விளக்கத்திற்கும் திராவிடக் கழகத் தலைமை கொடுத்த விளக்கத்திற்கும் அடிப்படையில் இருந்த வித்தியாசம் தான் என்பதை நாடு அறியும். ஆனால், உலகம் சுற்றுகிற அமைச்சர் இந்தச் சின்ன விஷயத்தை அறியமாட்டார்.

இதிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையே பார்க்கட்டும். இந்தியா எந்தக் காலத்திலாவது ஒரே அரசிலமைப்பின் கீழ் இருந்ததுண்டா? அதற்கான ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால்—இரண்டொரு சமஸ்கிருத ஸ்லோகங்கள் ஆங்கிலத்தில் போடப்பட்டிருக்கின்றன. அவற்றுக்குப் பொருள் விளங்கவில்லையே தவிர, மற்றவைகளுக்கு நன்றாகப் பொருள் விளங்குகின்றது—இந்தியா ஒரு அரசிலமைப்பின் கீழ் எந்தக் காலத்தில் இருந்தது என்பதற்கான ஆதாரங்கள் ஒன்றுமே இல்லை. He was impressed by the toleration of the people', என்று மக்களுடைய சகிப்புத் தன்மையை அவர் பாராட்டினார் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். சகிப்புத் தன்மை இப்போதுதான் இருக்கிறது என்று அல்ல. அந்தக் காலத்திலிருந்து இன்று வரை தமிழகத்தில் அந்தச் சகிப்புத் தன்மை எப்போதும் தலை நிமிர்ந்து நிற்கிறது. வட நாட்டில் ஏற்படக்கூடிய கலகங்கள் இங்கே நடந்ததில்லை. அலிகாரில் ஏற்பட்டது போல, அஸ்ஸாமில் ஏற்பட்டதுபோல, இங்கே ஏற்பட்டதில்லை. நேரு பண்டிதரை 90 நிமிஷங்கள் பேசவிடாது ஆமதாபாத்தில் தடுத்து நிறுத்தியதைப் போல இங்கே நடைபெறுவதில்லை. இது தமிழகத்திற்கேயுரிய தலைசிறந்த பண்பாடாகும்; தமிழர்களுக்கே அத்தகைய பண்பாடு உண்டு. ஆனால் இதைத் தவறாக அவர்கள் எடுத்துக்கொண்டு, 'தமிழர்கள்தானே, அடங்கிக் கிடப்பார்கள்', என்ற எண்ணத்தில் நடந்து கொள்வார்களேயானால் இந்திய ஒற்றுமை என்ற பேச்சு

[Sri C. N. Annadurai] [13th November 1961

எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை நான் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு பெரியவரே என்னிடம் சொன்னார். "நான் அங்கேயே நாட்டைப் பிரிப்பது அண்ணாத்துரையல்ல, உத்திரப் பிரதேசக்காரர்கள்தான் தென்னாட்டுப் பிரிவினையைச் செய்துவிடப் போகிறார்கள் என்பதைச் சொல்லி வந்தேன்" என்று அந்தக் காங்கிரஸ் பிரமுகர் சொன்னார். நிதியமைச்சரவர்கள், "அவர் யார்" என்று என்னிடத்தில் கேட்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கேட்காமலேயே அவருக்குத் தெரியும். இன்றைக்குக் காங்கிரஸ் வட்டாரத்தில் உள்ளவர்களே, குறிப்பாக டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் பாராளுமன்றத்திலே India that is Bharath, Bharath that is U.P. என்று குறிப்பிட்டிருக்கிறார். அவர் ஏன் இப்படிப் பேசவேண்டும்? இன்றையதினம் நமது நிதியமைச்சரவர்கள், இந்திய ஒருமைப்பாடு குறித்துப் பேசும்போது, பழைய சாதனைகளைப் பற்றி, யார் யார் எதையெதை விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்பதைப் பற்றிப் பேசினார். எல்லாச் சிற்றரசுகளையும் ஒன்றாகச் சேர்த்தது மாபெரும் சாதனை என்று குறிப்பிட்டுக் கொண்டார்கள். உண்மையில் அவர் அதை அப்படிச் சொல்லிக்கொண்டது சர்தார் பட்டேலுக்குப் பெருமையளிக்கக் கூடியதா அல்லது சிறுமையளிக்கக்கூடியதா என்பதை யோசிக்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தில் இருந்த அத்தனை சிற்றரசர்களும் அன்றையதினம் வெறும் ஜரிகைச் சட்டை குல்லா அணிந்த உல்லாச பேர்வழிகளாக இருந்த நேரத்தில், குதிரையில் ஏறுவதற்கு அஞ்சி, குதிரையில் ஏறி வந்தவர்களைத் தூர இருந்து கண்டு களித்த நேரத்தில், மக்கள் புரட்சி செய்துவிட்டால் என்ன செய்வது என்று அரண்மனையைச் சுற்றி எட்டு மதில் சுவர்கள் எழுப்பிக்கொண்டு வாழ்ந்த நேரத்தில்—இப்படி உளுத்துப் போய் சீட்டுக் கட்டு ராஜாக்களைப் போல் வாழ்ந்து கொண்டிருந்தவர்களை டில்லிக்கு அழைத்தவுடனே 'போனது போகட்டும், மிச்சம் என்ன', என்று கை நீட்டியவர்களின் அரசுகளை ஒன்று சேர்த்தது பெரிய சாதனை என்றால் அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதைப் பெரிய சாதனை என்றே வைத்துக் கொள்வோம். அதனால் நிதியமைச்சரவர்கள் சந்தோஷப்படலாம் என்றால் அதைப் பெரிய சாதனை என்றே சொல்கிறேன். அந்தப் பெரிய சாதனைக்கு சர்தார் வல்லபாய் பட்டேலுக்கு உறுதுணையாக இருந்தவர் திரு. வி. பி. மேனன் என்பதை யாரும் அதற்குள் மறந்திருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். சிற்றரசுகளை ஒன்றாகச் சேர்ப்பதற்குப் பட்டேலுக்கு வலதுகரம்போல இருந்தவர் வி. பி. மேனன். என்றைக்குமே இந்தியா ஒரு நாடாக இருக்கவேண்டுமென்பதில் அவருக்குள்ள ஆர்வம் குறைந்ததல்ல. இன்றையதினம் அவர் டில்லியில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டைப்பற்றி 'It was a mountain that brought forth a mouse. One is forced to conclude that it was nothing more than a Congress election stunt.' என்று, "மலையைக் கெல்லி எலியைப் பிடித்தார்கள், இது காங்கிரஸ் கட்சி கையாள்கிற தேர்தல் தந்திரம்" என்று சொன்

13th November 1961] [Sri C. N. Annadurai]

னார். அவர் எங்களைப் போல் பிரிவினைக் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல. பதவி கிடைக்காத "ப்ரஸ்ட்ரேஷனில்" பேசுகிறார் என்று சொல்ல முடியாது. அவர் மிகப் பெரிய பதவியெல்லாம் வகித்தவர். அவரே தேசிய ஒருமைப்பாட்டு மகாநாட்டைப்பற்றி இப்படிப் பேசியிருக்கிறார் என்றால், அதைக் கவனிக்க வேண்டும். ஆச்சாரிய கிருபாளனி அவர்கள் "பாவிகள் எல்லாம் ஒன்றாகக் கூடிப் பேசினார்கள், பரிகாரம் தேடுவதற்காக" என்று பேசியிருப்பதும் இந்த மகாநாட்டைப் பற்றித்தான். தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி பிரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள் என்றால் எங்களுக்காக மட்டுமல்ல காங்கிரஸ் கட்சிக்கும் சொல்லியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தான். "இந்தியா முழுவதற்குமே ஒரே ஒரு சர்க்கார்தான் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். சிலர் தனித் தனியாகப் பிரிந்து போய்விட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நாங்கள் இரண்டுக்கும் நடுவில் போகிறோம்" என்று அவர்கள் சொன்னார்களே, பொருளாதார அடிப்படையில், அரசியல் அடிப்படையில் எல்லாத் துறைகளிலும் அவர்கள் நடுவில் போகிறோம் என்று சந்து கண்ட இடத்தில் நுழைகிற தன்மைதான் இந்த அவல நிலைக்குக் காரணம் என்று குறிப்பிட விரும்புகிறோம். இது எந்தப் பிரச்னையையும் தீர்ப்பதற்குப் பயன்படாது. பிரச்னைக்குத் தீர்வாக அமையாமல் பிரச்னையை ஒத்திப் போடுவதற்குப் பயன்படுமே தவிர, வேறு எவ்வித பயனும் கிடையாது. எந்தப் பக்கம் சாய்கிறதோ அந்தப் பக்கத்தில் சேர்ந்து கொள்ள இந்தக் கொள்கையை நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். உண்மையில் உங்களுக்கு இந்த இரண்டு கொள்கையிலும் நம்பிக்கை கிடையாது.

நான் உள்ளபடியே சொல்கிறேன். இந்தியா ஒரே ஒரு நாடாகத்தான் இருக்கவேண்டுமென்று சொன்னால் இந்த ஒருமைப்பாடு தேவை என்று சொன்னால்: தமிழ் மொழி அதற்கு இடையூறாக இருக்குமென்றால் அதைக்கூட விட்டுக் கொடுத்தால் என்ன? தமிழ் மொழியினால் தேசிய ஒற்றுமை குலையும் என்று சொன்னால் தேசிய ஒற்றுமைக்காக அதை விட்டுக் கொடுத்து விடுவார்களா, உங்களுக்குச் சிலப்பதிகாரமும் வேண்டும்; மனுதர்மமும் வேண்டும்; தேவநாகிரியும் வர வேண்டும்; தமிழும் தேவை; கூழும் வேண்டும்; மீசையும் வேண்டும், எத்தனை காலத்திற்கு இந்தப் போக்கு? தேசீய கவுன்சில் கூட்டத்திலே நம்முடைய நிதியமைச்சரவர்கள் இந்தியை வரவிட மாட்டோம், எங்கள் தமிழ் மொழியை அழிக்க இடம் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், அதைத்தான் நான் நாட்டுப் பற்று, மொழிப்பற்று என்று கூறுகிறேன். அதுதான் இனவுணர்ச்சி, அந்த மொழிப்பற்று இருக்கிற வரையில், நாட்டுப் பற்று இருக்கிற வரையில், தமிழ் உணர்ச்சி இருக்கிற வரையில், இலக்கியம் இருக்கிற வரையில், "தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு" என்று நாமக்கல் கவிஞர் பாடிய கவிதா தத்துவம் உள்ளத்தில் இருக்கிற வரையில் எவ்வளவு தேர்தல் வந்தாலும்,

[Sri C. N. Annadurai] [13th November 1961

எங்களை அழித்து அடைத்துவிடாது; எவ்வளவு சட்டம் வந்தாலும் அழித்துவிட முடியாது. பிப்ரவரியில் பார்த்து விடலாம் என்கிறார் நமது நிதி அமைச்சர். பிப்ரவரியிலே பார்க்கலாம்; தேர்தலைப் பொறுத்தா எங்கள் கட்சியிருக்கிறது? அரசியல் வாழ்வு என்பது ஐந்து வருஷத்திற்கு ஒருமுறை அளிக்கப்படுகிற மரண சாசனமா? தேர்தலிலே தோற்றார் என்பதற்காக உள்துறை அமைச்சர் பக்தவத்சலத்தின் அரசியல் வாழ்வு அதோடு அழிந்து போய்விடவில்லை. தேர்தலில் தோற்றதினால் திரு. கோபால் ரெட்டி அரசியல் வாழ்வை விட்டு ஓடிப்போய் விடவில்லை. இன்று டில்லி அமைச்சராக இருக்கிறார். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அங்கே போகிறபோது அவர் விட்டுக் கொடுப்பாரா மாட்டாரா என்று தெரியவில்லை. திரு. குமாரசாமி ராஜா தேர்தலில் தோற்றுப்போன பிறகுதான் கவர்னர் கிரீடம் அவரைச் சேர்ந்தது. தேர்தல் யாரையும் சாகடித்து விடவில்லை. ஆகவே, அந்தப் பூச்சாண்டியை எங்களிடம் காட்ட வேண்டாம் என்று நிதி அமைச்சர் அவர்களிடம் சொல்ல விரும்புகிறேன். இதுவரை நிதி அமைச்சராக இருந்தவர் ஆல மரத்தடியில் உட்கார்ந்து ஆருடம் சொல்பவரைப் போல் யாரை மிரட்டப் பேசுகிறார்கள்? அவருக்கு நிச்சயமாகச் சொல்கிறேன். எங்களுடைய நாட்டுப் பிரச்னை தேர்தலோடு இணைக்கப்படவில்லை. தேர்தலோடு இணைக்கப்பட்டதல்ல திராவிட நாட்டு விடுதலை இயக்கம். தேர்தலுக்குப் பிறகும் கட்சியின் கருத்து ஊடுருவி நிற்கும்.

வேண்டுமானால் அவர் வாதத்திற்காக இன்றைக்குத் தமிழ் நாடு கேட்பார்கள். நாளைக்குக் கோவையைக் கேட்பார்கள் என்று கேலி பேசுவதில் ஒன்றும் சிரமமில்லை. நான்கூடச் சொல்வேன்-- இன்றைக்கு இந்திய தேசிய ஒற்றுமை என்பவர்கள் இமயத்தை எல்லைக் கோடாக ஏன் சொல்லக்கூடாது? மெசபொடோமியாவை எல்லைக் கோடாக ஏன் சொல்லக் கூடாது? மெசபொடோமியாவையும் சேர்த்துக் கொள்ளலாமே! சீனா பக்கத்திலும் ஏன் போகக் கூடாது? இப்படி நானும் கூடப் பேசிக்கொண்டே போகலாம்.

இன்னும் அவர்கள் இந்த தேசிய ஒருமைப்பாட்டுக்காகக் கூட்டப்பட்ட மகாநாடே தேசிய ஒருமைப்பாடு இருப்பதைக் காட்டவில்லை என்று சொல்கிறார்கள். இதுவரையில் எல்லா ஏடுகளும் எழுதிக் கொண்டு வந்ததையும், எல்லாத் தலைவர்களும் எடுத்துப் பேசிக்கொண்டு வந்ததும் 'நாட்டிலே ஒரு சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது, அதைச் சரிப்படுத்தத்தான் நாங்கள் இதைச் செய்கிறோம்' என்று சொன்னார்கள். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பின்னால் அதைப் படிப்படியாக மாற்றிக்கொண்டு வந்ததைப்போல், இவ்வளவு வெடிப்பும் அடிப்படையில் இல்லை, மேலேதான் இருக்கிறதென்று சொன்னார்கள். யாராவது கட்டிட நிபுணரைக் கேளுங்கள். அடிப்படை சரியாக இல்லாமல் போனால்தான் மேலே வெடிப்பு ஏற்படுமே தவிர அடிப்படை சரியாக இருந்தால் மேலே வெடிப்பு இருக்காது. ஆகவே மேலே வெடிப்பு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் அடிப்படை சரியாக இல்லாததுதான்.

13th November 1961] [Sri C. N. Annadurai]

ஆகையால்தான், இந்தியா ஒரே நாடு என்று சொல்லப்படும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும் அரசியல் சட்டமானது மிக விரைவிலே நிறைவேற்றப்பட்டதாகப் பெருமை பட்டுக்கொண்டார்கள்—வந்த ஆபத்தே அதிலேதான் இருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தியத் துணைக்கண்டத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தன்னுடைய பிடியிலேயிருந்து நீக்குவது என்று தீர்மானித்த நேரத்தில் இங்கே அரசியல் திட்டங்கள் பற்றிப் பேசப்படவில்லையா? 'குக்' திட்டம் பற்றிப் பேசப்படவில்லையா? ஐந்து ராஜ்யத் திட்டங்கள் பற்றிப் பேசப்படவில்லையா? அதிலிருந்து என்ன நமக்குப் புரிகிறது? இருக்கும் வரை ஒரே அமைப்பாக இருக்க வேண்டுமென்பதை மட்டுந்தான் நாட்டிலேயுள்ளவர்கள் கவனித்தார்கள் என்பது அல்ல. நீங்கள் சொன்னதற்கு மதிப்புக் கிடைத்ததா? அரசியல் தத்துவவாதிகள் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்றா கருதுகிறீர்கள்? "பெடரேஷன்" என்று நிதியமைச்சரவர்கள் வாதாடினார்கள். பெடரேஷனுக்குள்ள இலக்கணத்தின்படி இந்திய பெடரேஷன் இருக்கிறதா? "யூனியன் ஆப் இண்டியன் ஸ்டேட்ஸ்" என்று போடப்பட்டிருப்பதில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகார வரம்பைப் பார்க்கும்போது, நல்ல பெடரேஷன் என்றால் மிச்ச அதிகாரத்தைத்தான் (Residuary Powers) அங்கே கொடுத்து விடுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் மத்திய சர்க்காருக்கல்லவா அந்த அதிகாரம் இருக்கிறது. தேசிய ஒருமைப்பாடு மகாநாட்டிலே கூட, ஒற்றுமைக்கு வழி என்ன என்று கேட்கும்போது, கல்வியை "concurrent subject" ஆக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. "Education is strictly a State subject" ராஜ்ய சர்க்காருக்குத் தனியாக இருக்கின்றபோது ஒருவர் யோசனை சொல்கிறார்—"அதை (Residuary powers) ஆக்கலாம்" என்று. அதைப் போல்தான்— "It was felt that this link must ultimately be Hindi" இங்கே நிலைத்துப் போய்விட்டது. கடைசியாக இணைப்புச் சங்கிலி இந்திதான். "இப்போது விழித்துக் கொண்டிருக்கிறார்கள், நன்றாகத் தூங்கட்டும்" என்றும் சொல்லும் தன்மைக்கும் this link must ultimately be Hindi என்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது, என்பதை அறிய விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஆட்சியிலிருக்கும் வரையில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவருந்தான், பாவம்--எத்தனை காலத்திற்குத்தான் சண்டைபோட்டுக் கொண்டிருப்பார்கள்? என்னைப்போல் பதவிக்காக ஆசைப்படாமலோ, பதவியைப் பற்றி எண்ணிப் பார்க்காமலோ, மேலே ஆகாயம், கீழே பூமி என்று இருந்தால் பரவாயில்லை. அப்படி இருந்தால் இருப்பது ஒன்றும் போகாது. நம்முடைய நிதிமந்திரி சற்றுத்துணிந்தால் உள்ளது அல்லவா பறி போகும். எப்படி அவர் அந்தத் தியாகத்திற்குத் தயாராக முடியும்? ஏற்கனவே பெரிய தியாகத்தைச் செய்து விட்டவர்களாயிற்றே அவர்கள். அவர் அந்தத் துணிச்சலுக்கு வர மாட்டார் என்பதுபற்றி ஆச்சரியப்படவில்லை. ஆனால் துணிவு பெற்றிருப்பவர்களைத் தயவு செய்து இழிவாகக் கருதாதீர்கள்.

அவர்கள் அறிந்துதான், விளைவுகள் என்னென்ன ஏற்படும் என்பதைத் தெரிந்துதான் இதிலே ஈடுபட்டிருக்கிறார்களே தவிர, நீங்கள் கருதுகிறபடி சிறுபிள்ளைத்தனமாக இதிலே ஈடுபடவில்லை. இங்கே இருக்கின்றவர்கள் ஏதோ நீங்கள் துப்பாக்கியைத் தூக்கியவுடன் அதை எதிர்த்து நிற்க முடியாதவர்கள் என்று கருதாதீர்கள். இருக்கின்ற உள்ளமே ஒன்றுதான். அது போகப்போவதும் ஒரு தடவைதான். அவ்வாறு போவது பிரிவினைப் பிரச்னைக்காகப் போகட்டும் என்ற உணர்வில்தான் எங்கள் பக்கத்தில் இருக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அந்த உணர்வு எங்களோடு பிறந்தது. அவர் பழகும் இடத்தில் அப்படிப்பட்ட தியாகிகள் வரிசை ரொம்பவும் குறைந்து, மற்றவர்கள் அதிகமாக இருக்கும் நேரத்தில் அவர் காங்கிரஸ் கட்சியில் இருப்பதால் அந்தப் பக்கத்தில் இருக்கும் வீரமும் இன்றையதினம் அவருக்குப் புரியாது.

இன்னொன்றையும் நான் கேட்க விரும்புகிறேன். பெரிய நாடாக ஏன் இருக்க வேண்டும்? எதற்காக இருக்கவேண்டும்? ஒரு நாடு பெரிய நாடு, சின்ன நாடு என்பதற்கு என்ன அடையாளம் வைத்திருக்கிறார்கள்? ஒரு நாடு, இத்தனை மைல் நீளம், இத்தனை மைல் அகலம் இருக்க வேண்டுமென்ற கணக்கு இருக்கிறதா? சிறு பிள்ளையை ஏமாற்றுவதுபோல், இரண்டு வெல்லக் கட்டியை எடுத்துக்கொண்டு இது பெரிதா, அது பெரிதா என்று ஏமாற்றும் தகப்பனைப்போல், இந்தியா வரையில் காட்டி இவ்வளவு இருக்க வேண்டுமென்கிறீர்களா? எந்த அர்த்தத்திலே பேசுகிறீர்கள்? "Economic viability" பேசுகிறீர்களா? "Political viability" பேசுகிறீர்களா? அல்லது "Military viability" பேசுகிறீர்களா? எதிலே பேசுகிறீர்கள்? அப்படிப் பார்க்கப்போனால் ஒவ்வொரு நாட்டின் எல்லையையும் அழித்து இன்னின்ன அளவில்தான் நாடு இருக்க வேண்டும், அப்போதுதான் தேசிய நாடாகும் என்று சொல்லுங்கள். நம்முடைய பண்டித நேரு அவர்கள் அடுத்து ஐரோப்பாக் கண்டத்தில் நடக்கும் மகாநாட்டில் ஐரோப்பாவிலுள்ள சிறு சிறு நாடுகளின் எல்லையைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லலாமே. அவருக்கு அந்த அலுவல் இல்லையென்றால் நம்முடைய நிதியமைச்சர் அங்கு போய் வந்த பழக்கமுள்ளவர் சொல்லிவிட்டு வருவார். அவர்களும் கேட்டுக் கொள்ளுவார்கள். உலகமே ஒன்றாக ஆகவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். உண்மை. என்னுடைய நாடு என்னிடத்தில், நாம் எல்லோரும் சேர்ந்து ஒன்றாகலாம். யார் எல்லைக் கோட்டைக் கலைக்கிறார்கள்? ஆகையால் இந்திய ஒற்றுமை, இந்தியா என்று சொல்வது கட்டுப்பட்டுப் போயிருக்கும் ஒரு இடத்தில் இருப்பதால்—ஆங்கிலத்தில் சொல்வதானால் "They are maintaining the *status quo*" இருப்பதை ஆதரிக்கிறார்கள். இருப்பதை ஆதரிப்பதிலே சுவை இருக்கிறது, பலன் இருக்கிறது. சில வேளைகளிலே எளிதாகவும் இருக்கிறது. ஆனால், தேவைப்படுவதைக் கேட்பதில்தான் எரிச்சலை மூட்டவேண்டி வரும், பல பேருடைய பகை வரும். பழிச் சொல் வரும். தேவைப்படுவதைக் கேட்பவர்கள் இருப்பதைக் கொண்டு திருப்தியடைய மாட்டார்கள் என்பதை நான் கனம் நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உலகத்தின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், சிறிய நாடுகளால் உலகத்தின் பண்பாடு வளர்ந்திருக்கிறதா, பெரிய நாடுகளால் வளர்ந்திருக்கிறதா என்று பார்த்தால், உயர்தரமான தத்துவத்தை, இன்றும் போற்றத்தக்க நல்ல பண்பாட்டினை, கலையை, அரசியல் தெளிவை, இவை அத்தனையும் பெற்றிருந்தது ஐரோப்பா நாட்டிலுள்ள அந்த வரலாற்றின் படி "க்ரிக் சிடி ஸ்டேஸ்"-லேயே தவிர ஐரோப்பாக் கண்டம் என்று வளர்ந்த பிறகு அல்ல. நம்முடைய நாட்டை எடுத்துக் கொண்டாலும், தமிழகம் தனியாக இருந்தபோதுதான் திருக்குறளை இயற்றிய வள்ளுவர் பிறந்தார். அப்போதுதான் நம்முடைய நாட்டிலே அகமும் புறமும் இயற்றப்பட்டன. எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் அந்தக் காலத்திலேதான் தோன்றின. ஆகவே, விரிவாக இருந்தால்தான் அறிவு பரவும் என்று பொருளல்ல. அதேபோன்றுதான் சிறு நாடாக இருந்தபோதுதான் ரோம் நாட்டில் வல்லமை மிக்கோர் இருந்தனர். ஜூலியஸ் சீசருக்குப் பிறகு ரோமன் எம்பயர்—சாம்ராஜ்யமான பிறகு விரிவாக விரிவாகப் பல இடங்களில் வல்லமை குறைந்ததால் நாளாவட்டத்தில் உடைபட்டுப் போய்விட்டது என்பதைத்தான் நமக்கு உலக வரலாறு காட்டுகிறது. ஏன் உலக வரலாறு தரும் பாடத்திற்கு முரணாக அரசியல் அமைப்பை ஏற்படுத்திப் பார்க்க வேண்டும்? அதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். சிறிய நாடுகள் இன்றையதினம் உலகத்தில் இல்லையா? சைப்ரஸ் நாட்டின் அகல நீளம் எவ்வளவு? மால்டா தீவு எவ்வளவு சிறியது? அது தனியரசாக வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கவில்லையா? இங்கிலாந்தின் பக்கத்திலுள்ள அயர்லாந்து தேசம் எதற்காகத் தனி நாடாக இருக்க வேண்டும்? இங்கிலாந்துடன் இணைந்திருந்தால் என்ன கஷ்டம்? அங்கு தோன்றிய தலைவர்கள் எல்லாம் தற்குறிகளா? பேசப்படும் பொருளும் வாதங்களும், அவர்கள் ஏற்ற தியாகமும் வீணுக்காகவா? இவைகளையெல்லாம் நீங்கள் நிச்சயமாக யோசித்துப் பார்க்க வேண்டும்.

இன்றைய தினம் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் 101 நாடுகள் இடம் பெற்றிருக்கின்றன. நூற்று ஒன்று தனித் தனி நாடுகள் தங்களுடைய உறுப்பினர்களை—தங்கள் தங்கள் பிரதிநிதிகளை—ஐக்கிய நாடுகள் மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால் அத்தனை நாடுகள் தனி நாடுகளாக இருக்கின்றன என்பதுதான் அதன் உட்பொருள் ஆகும். இதைப் பற்றி எடுத்துச் சொல்லுகிற நேரத்தில், கனம் நிதி அமைச்சர் அவர்கள் எங்களை 'இது மிகவும் சின்ன கூட்டம்' என்றார்கள். உண்மை—இல்லை என்று யாரும் மறுக்கவில்லை. நூற்றைம்பது பேர்களை பின்னால் வைத்துக் கொண்டிருக்கிற நிதியமைச்சரோடு முன்னால் 10-12 பேர்களை வைத்துக்கொண்டிருக்கிற நான் ஒரு பெரிய கூட்டம் என்று வாதிட முடியாது. இனிமேல் நாட்டிலே பிரிவினையே கூடாது, உள் நாட்டு யுத்தமே வந்தாலும் கூட பிரிவினைக்கு ஒப்புக் கொள்ள முடியாது என்று பண்டித நேரு அவர்கள் பேசியிருப்பதை வைத்துக் கொண்டு கனம் சின்னதுரை அவர்கள் நாட்டைப் பிரிவினை செய்ய வேண்டும் என்று சொல்லுகின்ற நாங்கள் உள் நாட்டு யுத்தத்தைத் துவக்கி விடுவோம் என்று எண்ணிக்கொண்டு பேசினார்கள்.

[Sri C. N. Annadurai] [13th November 1961

நாங்கள் யாரும் அப்படி ஆரம்பிக்கப் போவதாக இல்லை. எங்களில் யார் யாராலாவது கொல்லப்பட்டாலும் இறக்கச் சித்தமாக இருக்கிறோமே தவிர, யாரையும் சாகடிக்க வந்தவர்களல்ல. செத்த பிறகு . . .

SRI A. MARIAPPAN : இதை உங்கள் சரித்திரமே சொல்லுகிறது.

SRI C. N. ANNADURAI : என்ன . . . என்ன . . . சரித்திரம் படிக்க வேண்டுமோ? . . . உன் கிட்டே கத்துக்கிறேன் அப்பா . . . உன் கிட்டே கத்துக்கிறேன். . .

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, let this not become a street-quarrel.

SRI C. N. ANNADURAI : I wish the Hon. Leader of the House controlled his own party-men instead of others.

DEPUTY SPEAKER : Order, order. The hon. Member may continue his speech. I am here to control the proceedings in the House.

SRI C. N. ANNADURAI : Sir, I am not concerned with the 'thorn' aimed at me. I am only concerned with the hon. Member's cutting the flow of my thought.

THE HON. SRI C. SUBRAMANIAM : சரி, பேசுங்கள்.

SRI C. N. ANNADURAI : So, the Hon. Minister, as the Leader of the House, is prepared to advise me only, and not his party-men?

THE HON. SRI C. SUBRAMANIAM : The advice applies to both sides. But, as the Leader of a Party, the hon. Member Sri Annadurai has to set up a proper pattern and standard in the discussion. If he uses the 'singular' form while addressing another hon. Member, does he not expect it back himself?

SRI C. N. ANNADURAI : Did I use the 'singular' form?

THE HON. SRI C. SUBRAMANIAM : Certainly, the hon. Member did.

SRI C. N. ANNADURAI : Only when the hon. Member opposite said that I should learn history or some such thing, I think I said like that and not otherwise.

Sri P. U. Shanmugam rose.

DEPUTY SPEAKER : Order, order. I appeal to the hon. Members to maintain discipline and order within the House. The hon. Member may continue his speech.

SRI C. N. ANNADURAI : We shall forget that, Sir.

THE HON. SRI C. SUBRAMANIAM : Very generous of you!

13th November 1961] [Sri C. N. Annadurai]

SRI C. N. ANNADURAI : உள் நாட்டு யுத்தத்தை நாங்கள் ஆரம்பிப்போம் என்று யாரும் தவறாக எண்ணிக்கொள்ளத் தேவையில்லை. இந்தியாவின் மிகப் பெரிய தலைவர் இப்படிப் பேசினார் என்றால் விரோதத்தை உண்டாக்குவதற்குப் பேசினாரே தவிர, நாங்கள் அல்ல உள் நாட்டுப் போரைத் துவக்கப்போவது. உள் நாட்டு யுத்தத்தைப் பற்றி மதுரையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் பேசியதைப் பார்த்தேன். அமெரிக்காவை நினைவுபடுத்தி நாடு பிரியவேண்டுமென்று சொல்லி உள் நாட்டு யுத்தத்தை அமெரிக்காவில் நடத்தினார்கள் என்று சொன்னார்கள். அமெரிக்க போராட்டத்திற்கு அடிப்படை காரணம் ராஜ்ய சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் ஏற்பட்ட தகராறு அல்ல. அமெரிக்காவில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்திற்குக் காரணம் வடக்குப் பகுதிக்கும் தெற்குப் பகுதிக்கும் அடிமை வியாபாரப் பிரச்னையில் ஏற்பட்ட தகராறு காரணமே தவிர, ஒருவருக்கொருவர் ராஜ்ய அதிகாரத்திற்காக உள்நாட்டு யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. அமெரிக்க வரலாற்றை—அமெரிக்காவிற்கே போய் வந்திருந்தாலும் கூட—படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது என்று நினைக்கிறேன்—படித்துப் பார்த்து அடிமை பிரச்னைக்கும் உள் நாட்டு யுத்தத்திற்கும் உள்ள தொடர்பை அறிந்து மற்றொரு இடத்தில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்கா ஐக்கியப்பட்டதாகச் சொன்னாலும் அடிமைப் பிரச்னை வரும்போது—நீக்ரோ பிரச்னை வரும்போது—வடக்கே இருக்கிறவர்களுடைய மனப்பான்மை வேறாக இருக்கிறது, தெற்கே உள்ளவர்களுடைய மனப்பான்மை வேறாக இருக்கிறது, ஆகையால் ரேஷயல் இண்டெக்ரேஷன்—இனங்களை எப்படி இணைப்பது—என்ற அந்த வேலையில் அவர்கள் இன்று ஈடுபட்டிருக்கிறார்கள். அமெரிக்காவைக் காட்டி உள் நாட்டு யுத்தம் இங்கே நடக்கும் என்று சொல்லுவதைப் போல நான் அமெரிக்காவை ஆதாரத்திற்கு அழைக்கிறேன். அமெரிக்காவில் தோன்றிய உட்ரோ வில்ஸன் தான் "The principle of self-determination" சுய நிர்ணய உரிமை ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டுமென்ற ஒரு முக்கியமான உண்மையை நாட்டுக்கும் உலகத்திற்கும் அளித்தார்கள். ஆகையால் அமெரிக்காவிலிருந்து எடுக்கக் கூடியது உள் நாட்டு யுத்தம் மாத்திரமல்லாமல் உட்ரோ வில்ஸன் பேசியிருக்கிற "The principle of self-determination"—சுய நிர்ணய உரிமை—அதைப் பற்றியும் அவர்கள் எடுத்துக் கொள்ளலாம். ஆகையால் சுய நிர்ணய உரிமை என்ற அடிப்படையில் நாங்கள் தனி நாடு அமையவேண்டும், நாம் தனிப்பட்ட பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில், பிரிவினை என்று நீங்களாக தப்பு அர்த்தம் எடுத்துக் கொண்டு "ஐயையோ, உள்ளதிலிருந்து பிரிக்கலாமா" என்று நீங்களே எடுத்துக்கொண்டு அடிப்படையை ஆராய மறுக்கிறீர்கள். பொதுப்படையாகப் பேசும்போது கொச்சை மொழியில் பிரிவினை என்று சொல்லப்பட்டாலும், இருப்பதிலிருந்து பிரித்து எடுப்பது அல்ல. தனியாக இருந்ததை யாரோ எடுத்துக்கொண்டுபோய் இணைத்து விட்டிருக்கிறார்கள், அந்த இணைப்பு நல்லதல்ல என்று தோன்றியிருப்பதால் அதிலிருந்து விலகவேண்டும், தனித்து

[Sri C. N. Annadurai] [13th November 1961

இயங்கவேண்டும், தனி அரசாக வேண்டும் என்று சொல்லுகிறோம். அதை விட்டு உடனே பிரிவினையினால் ஏற்பட்ட பாகிஸ்தானைப் பார்ப்போம் என்று சொல்லுகிறார் கனம் நிதி அமைச்சர். பாகிஸ்தானைத்தான் பார்ப்போம். பாகிஸ்தான் பிரிவினையினால் ஏற்பட்ட பயங்கர சம்பவத்திற்குக் காரணம், ஏற்பட்ட சோகத்திற்குக் காரணம், பிரிவினையினால் ஏற்பட்டதல்ல--பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் இருக்கவேண்டியவர்கள் ஹிந்துக்கள் பாகிஸ்தானத்திலும், பாகிஸ்தானுக்குச் சொந்தக்காரர்கள் என்று நீங்கள் சொல்லுகிற முஸ்லீம்கள் இந்தியாவிலும் இருந்த காரணத்தினால் இந்தக் கலவரங்கள் ஏற்பட்டன. அங்கு ஏற்பட்டது பிரதேசப் பிரிவினையே தவிர மக்கள் பிரிவினை அல்ல. இன்றைய தினம் திராவிட நாட்டுப் பிரிவினை வேண்டுமென்று சொல்லும்போது 10 மைல் கூட்டினாலும் குறைத்தாலும் எந்த வெளி நாட்டுக்காரர்கள் உள்ளே வந்து அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்? இதனால் என்ன பயங்கரமான கலவரம் வந்துவிடும் என்று பயமுறுத்துகிறார்? இங்கு கலவரம் வரும் என்று சொல்லும்போது, பார்வை தெரியாத குருடன் ஒரு குழந்தை செத்துவிட்ட வீட்டின் தெருத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு "குழந்தை என் செத்துவிட்டது" என்று கேட்டு, "பால் குடித்துச் செத்து விட்டது" என்று ஒருவன் சொல்ல, "பால் எப்படி இருக்கும்?" என்று அந்தக் குருடன் கேட்டு, "அது கொக்கு
1-00 p.m. போல் இருக்கும்" என்று கதை சொல்ல, "கொக்கு எப்படி இருக்கும்?" என்று குருடன் கேட்க, அதற்கு அவன் கையை வளைத்துக் காட்ட, அதைத் தடவிப் பார்த்த குருடன் "இப்படிப்பட்டது தொண்டைக்குள் போனால் பிழைக்கவா பிழைக்கும்" என்று சொன்னதுபோல பாகிஸ்தானை இதற்குக் காரணம் காட்டுகிறார்கள். வெள்ளைக்காரர்கள் ஆட்சி காலத்தில் இருந்து இந்திய தேசீய ஒற்றுமை என்று பேசப்பட்டது இல்லை என்று என்னைப் போன்றவர்கள் சொன்னால் கனம் நிதி அமைச்சர் நம்ப மாட்டார். நிதி அமைச்சர் அவர்களால் நல்லவர்கள் என்று ஏற்றுக்கொள்ளக் கூடிய சிலருடைய கருத்துக்களிலிருந்து ஆதாரங்களை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

" At the time of shaking off of the British yoke. there was a natural passion for emphasising the oneness of India. It was good and necessary, but perhaps the North is rather overdoing it today.

As I see it, India having obtained her freedom from Western domination is now beginning to feel the re-awakening of her many different areas. This is really a healthy sign of redawning self-expression and the Centre would do well to humble its pride and remember that this is only the beginning of the redawning which unless accepted as a natural pphenomenon and handled sympathetically will end in breaking up the very unty aimed at.

To go from the North right down to the South of India is like entering another World. "

13th November 1961] [C. N. Annadurai]

இதைச் சொன்னவர்கள் காந்தியாருடைய பிரதம சிஷ்யராக இருந்து வந்த மீரா பென் ஆகும் அவருக்குக் கூடவா திராவிடப் பித்து பிடித்து விடும்? அவர்கள் நாட்டை சுற்றிப் பார்த்தார்கள். சுய ராஜ்யத்திற்குப் பிறகு பத்து ஆண்டுகளுக்குப் பிறகு—மக்களுடைய சுய உணர்ச்சியைப் பார்த்தால் புதிதான மன எழுச்சி பெற்றிருக்கிறார்கள்—தன்னைத் தான் அறிந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்று அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல "Unity without willing co-operation between the groups and the Central power is worse than open separation." என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்களாகப் பிரிந்து போகலாம் என்று சொன்னால் குற்றம் சாட்டுகிறார்கள். இருந்துகொண்டிருக்க வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் நடந்துகொண்ட முறை என்ன? நம்மைத் தள்ளி விடுங்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் உலகத்திற்கே வழி காட்டும் அளவுக்கு நாம் பண்போடு நடந்துகொண்டு வந்திருக்கிறோம்.

அஸ்ஸாம், வங்காளத்திலே நடந்த மொழிப் போராட்டத்தைப் 1-00 p.m.
பற்றி நமது நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை ஒரு ஆதாரமாக வைத்துக்கொண்டே ஒற்றுமை மனப்பான்மையைப் பெற முடியவில்லை என்று சொல்வது அவ்வளவு தெளிவான கருத்தல்ல. அவர்களுக்கு பெற முடியவில்லையென்றால், நமக்கும் அவர்களுக்கும் ஈராயிரம் ஆண்டுக் காலமாக பண்பாட்டிலே வெவ்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அந்த ஆதாரத்தை இன்றையத் தினம் நடைமுறை அளவுக்குக் கொண்டுவந்து தேசீய ஒற்றுமைப் பாடுக்கு ஆதாரமாகக் காட்டுவது நல்ல அடிப்படையில் அல்ல, தாகூர் பல அரிய கவிதைகள் பாடியிருக்கிறார். அதேபோல் தேசீயக் கவிஞராகிய பாரதியார் மிகச் சிறந்த கவிதைகளை நாட்டுக்கு இயற்றிக் கொடுத்திருக்கிறார். இவைகளைத் தவிர வேறு ஏதாவது நல்ல கருத்துக்களையோ, கவிதைகளையோ எழுதி வைத்திருக்கிறீர்களா? இன்றைக்கு அவர்களைக் காட்டிலும் மேலான கவிதைகள் இயற்றக்கூடியவர்கள் இனி தோன்றப் போகிறார்களா? அப்படிப்பட்டவர்கள் யாரையேனும் நீங்கள் ஒளித்து வைத்திருக்கிறீர்களா? பண்டித ஜவஹர்லால் நேருவைக் காட்டிலும் நாட்டை நல்ல முறையில் இறுக்கிப் பிடிக்கக்கூடிய தலைவர்கள் யாரையேனும் இன்னும் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா? அப்படி ஒருவரும் இருப்பதாகத் தெரியவில்லை. பண்டித ஜவஹர்லால் நேரு முயற்சி செய்தால் நாட்டைப் பிரிக்காமல் இறுக்கி வைத்திருக்கமுடியும். ஆனால் அவரே ஓரளவுக்கு நாட்டின் ஒற்றுமைக்காகவும், தர்மத்திற்காகவும் அனாவசியமான கிளர்ச்சி நாட்டிலே கூடாது என்பதற்காகவும் எல்லாவற்றையும் காட்டிலும் இயற்கைக்கு ஒவ்வாத முறையில் நடந்துகொள்வது நியதி அல்ல என்ற முறையில் நடந்துகொண்டு வருகிறார். இயற்கையான வரலாற்றுக்கு முன் இறுக்கிப் பிடிப்பதென்பது முடியாத காரியம். ஆகவேதான், இனியும் இறுக்கி வைத்துப் பிடிப்பதில் அவர் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அந்த அடிப்படையில் தான் அவ்வப்பொழுது, அந்தந்த இனத்துக்கு ஒரு தனி அரசு

அமைத்துக் கொடுத்துக்கொண்டு வருகிறார். ஆகவே அந்த முறையில் இதைக் கவனித்து ஆராய்ந்து பார்த்தால் ஒரு நல்ல முடிவைக் காண முடியும். 'இந்தியன் யூனியன்' அமைந்து இருக்கிறதென்று சொல்லப்படுகின்றது. இந்த இந்தியன் யூனியன் காமன்வெல்த்தில் ஒரு நாடாக இருப்பதுபோல், பல நாடுகள் பிரிக்கப்பட்ட பின்னரும்கூட, காமன்வெல்த்திலே எப்படி பல நாடுகள் அங்கம் வகித்துக்கொண்டு வருகிறதோ அதைப்போல நம் நாட்டிலும் ஆங்காங்கு தனி அரசுகள் ஏற்பட்ட பிறகும் காமன்வெல்த்திலே அங்கம் வகிக்கக்கூடிய நாடுகளாக அவைகளும் திகழலாம். அப்படி ஒவ்வொன்றும் ஒரு உறுப்பினராகச் சேர்ந்து உலகம் பூராவும் ஒன்று என்று நினைக்கக்கூடிய வகையிலே சேர்ந்து கொள்ளலாம். ஆகவே பிரிந்து போகிறோம் என்று யாரும் கருதத் தேவையில்லை. நம்முடைய உரிமையை நாம் கேட்கிறோம். அதுவும் வரலாற்றின் அடிப்படையிலே, பண்பாட்டின் அடிப்படையிலே கேட்கிறோம். எங்களால் முடிந்தால் பெறுகிறோம். இல்லையென்றால் இந்த முயற்சியில் தோல்விகண்டு மடிந்து போகிறோம். ஆனால் நாங்கள் மடிந்து போனாலும் இந்த உணர்ச்சி மட்டும் என்றைக்கும் மடிந்து விடாது என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே தெளிவாக, திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் இதன் உண்மையை உணராத காரணத்தால்தான் இவ்வளவு தூரம் சொல்லவேண்டியிருக்கிறது. இதற்காக ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இரண்டு நாடுகள் ஒன்றாக இணைந்து நல்ல முறையிலே ஆட்சி நடைபெற முடியுமா என்பதைச் சமீபத்திலே நடைபெற்ற சம்பவம் ஒன்றை எண்ணிப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். 1958-லே எகிப்துக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய சிரியா என்ற நாடும் எகிப்தும் சேர்ந்து 'யுனைடெட் அராபிக் ரிபப்ளிக்'—அதாவது 'அராபிய தேசீயம்' என்ற வகையில் இணைந்து ஆட்சி புரிந்தது. அப்படி இரு நாடுகளும் ஒன்றாக இணைந்தபோது, நம் நாட்டுத் துணை ஜனாதிபதி அவர்களும், குடியரசுத் தலைவர் அவர்களும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பினர். பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் எழுதின. மூன்று ஆண்டுக் காலமாக சிரியா, எகிப்து ஆகிய நாடுகளிலே 'அராபிய தேசீயம்' என்ற பெயரிலே ஆட்சி நடந்தது. ஆனால் சிரியாவில் எகிப்தின் ஆதிக்கம்தான் நடைபெற்று வந்ததால் நேற்றையத் தினம் பிரித்துக் கொண்டார்கள். ஆகவே இரண்டு நாடுகள் ஒன்று சேர்ந்து ஆட்சி நடத்த முடியவில்லை என்பது இதிலிருந்து நன்கு தெரிந்த விஷயம். ஆனால் உதாரணத்திற்கு சேர்ந்தவர்கள் பிரிவதற்கும், பிரிந்தவர்கள் சேருவதற்கும் சொல்லவேண்டுமென்றால் நிரம்ப இருக்கின்றன. ஆகவே இந்த உதாரணத்தைக் காட்டி, அதை மறுக்கவோ அல்லது அந்த உதாரணத்தைக் காட்டி இதை மறைக்கவோ செய்யலாம் என்று நினைத்தால் அது தவறான கருத்தாகும். அந்த ஆராய்ச்சிக்கு இப்போது நாம் இறங்கத் தேவையில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக ஒரு விஷயத்தைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னபோது நேரு அவர்களின் குரல் என் காதில் கேட்பதுபோல் தொனித்தது. அதாவது "இனி பிரிவினை இல்லை" என்று அவர் சொன்னார். அப்படி அவர் சொன்னதி

லிருந்து பார்க்கும்போது முன்பு ஏதோ ஒரு பிரிவினைக்கு வழி இருந்தது போலவும், அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள் என்றும் ஊகிக்க முடிகிறது. எது எப்படியிருந்தாலும், என்றைக்காவது ஒரு நாள் சூழ்நிலை இவர்களை நிச்சயம் இணங்க வைக்கத்தான் போகின்றது. நாங்கள் அந்தச் சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டு வருகிறோம். நேரம் வருகின்ற காலத்தில் அது தானாகவே பயனைக் கொடுக்கும். ஆனால் இன்றைக்கு இப்படி பேசிவிட்டு, இனி பிரிவினை கிடைக்காது என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. **'In this age of atomic bomb and the rapidly changing world, problems like that of Pakistan have no bearing and meaning.'** நம்முடைய பண்டித நேரு அவர்கள் சொன்னதுதான் இது. 'அணுகுண்டு சகாப்தத்திலே அற்பத்தனமாக பகுதிகள் கேட்கிறார்கள்' என்று சொல்லி, அதற்குப் பதிலாக இதிலே எவ்வித பலனும் இல்லை; மீனிங்கும் இல்லை என்று சொல்லப்படுகிறது. அதாவது இதிலே எவ்விதப் பொருளும் அர்த்தமும் இல்லையென்று சொல்லப்பட்டது. அதுமட்டுமல்ல. கனம் நிதி அமைச்சர் அவர்கள் மதுரையிலே பேசுகையில் பண்டித நேருவை நேரில் வைத்துக்கொண்டு பேசியிருக்கிறார்கள். 'Americans who fought the Civil War to keep their Union together can appreciate how a proposal to divide the country is resented by vast numbers of the Indian people.' உள்நாட்டு யுத்தத்தை நடத்தியாகிலும் அமெரிக்கர் தங்களை, தங்கள் நாட்டைக் காப்பாற்றிக் கொண்டார்கள் என்பதை மட்டும் உணர்ந்துள்ளார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இங்கே மட்டும் ஒரு சிலரை அடக்கி விட்டால் போதும்; மற்றவர்களைப் பற்றி எந்தவிதமான கவலையும் இல்லை என்று நினைக்கிறார்கள். இப்படித்தான் பண்டித நேரு அவர்களும் முதலிலே பேசினார். ஆனால் கடைசியில் பாகிஸ்தான் பிரச்னை வலுவடைந்து, பாகிஸ்தான் தனியாகப் பிரிந்தது. இதுபற்றி பிறகு நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்வார் என்று கருதுகிறேன். இதற்கு கனம் அமைச்சர் அவர்கள் ஒரு பதில் சொல்லக்கூடும். ஆனால் அது சரியல்ல. அதாவது வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள்; அது நடந்தது என்று சொல்லக்கூடிய ஒரே ஒரு பதிலைத்தான் அவர்கள் வைத்திருக்கக் கூடும். ஆனால் வெள்ளைக்காரர்கள் இருந்தார்கள். அதனால் கொடுத்து விட்டோம் என்று சொல்வதை விட நம்முடைய நண்பர் கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் சொன்னது போல் இவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்ற ஓர் எண்ணம் இருந்திருக்குமானால் இரத்தம் சிந்தியாவது இதைத் தடுத்திருக்க முடியும். ஆனால் அவர்களுடைய கொள்கை அது அல்ல என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பாகிஸ்தான் பிரச்னை வலுவடைந்தவுடன், 'In this age of Atomic bomb, there is no place for Pakistan' என்ற அதே நேரு அவர்கள் ஒருதரம் 'The Congress position was that India should remain a National Unit. But at the same time if the population of a unit specifically declared that they would not be in the Common unit,

[Sri C. N. Annadurai] [13th November 1961

then the Congress would not compel them to stay in the unit. Thus the Congress recognized the right of separation or self-determination.' என்று சொல்லியிருக்கிறார். நான் இந்த நேரு அவர்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் உள்நாட்டு யுத்தம் வந்தாலும் தடுத்துத் தீரவேண்டுமென்றார்கள். ஆனால் அப்படிப்பட்ட நேருவை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இப்போது நான் சொன்ன நேருவைத்தான் நம்புகிறேன். காலம் தான் வர வேண்டுமென்ற அருமையான கருத்தை பண்டித நேரு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ளவர்களோ, எங்கள் கட்சியிலே உள்ள முக்கியமான 10, 15 பேர்களை ஒழித்துக் கட்டிவிட்டால், பிரச்னை தீர்ந்தது என்று நினைக்கிறார்கள். இத்தகைய அடக்கு முறையைத்தான் செய்ய வேண்டுமென்று இவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பிரச்னை, இந்த லட்சியம் நாங்களாக எடுத்துக்கொண்டதல்ல; அல்லது உங்களைப் புண்படுத்த வேண்டுமென்றோ, விரோதித்துக்கொள்ள வேண்டுமென்றோ நாங்கள் ஏற்படுத்திக் கொண்டதல்ல. உங்களிடத்திலே நட்பாக இருக்க வேண்டும், நேசமாக இருக்கவேண்டுமென்ற நல்லெண்ணம் எங்களுக்கெல்லாம் இருக்கிறது. உங்களுடன் ஒத்துழைத்து உங்களுடைய நல்லெண்ணத்தையும், மகிழ்ச்சியையும் நாங்களும் பெற வேண்டுமென்றுதான் நினைக்கிறோம். இப்போது நான் பேசுகின்ற அத்தனை பேச்சுக்களையும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவ்வளவு அருவருப்போடு கேட்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் அதையும் நான் தாங்கிக் கொள்கிறேன். உங்களையெல்லாம் நான் மதிக்கிறேன்; அதைவிட மேலாக நான் எங்கள் உரிமையை மதிக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* THE HON. SRI C. SUBRAMANIAM: உதவி சபாநாயகர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் கொஞ்ச அதிக நேரம் எடுத்துக்கொண்டு விரிவாகப் பேசியதற்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் பல பேருக்கு எந்த அடிப்படையிலே இந்த இந்திய தேசிய ஒருமைப்பாடு கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்கிறார்கள் என்பதைப்பற்றி விளக்கம் இல்லாமல் இருந்தது. இதற்கு அவர்கள் இன்று விளக்கம் தந்து இருக்கிறார்கள். இந்த விளக்கம் வரலாற்று அடிப்படையிலே ஸ்ரீ ராதா கிருஷ்ணன் அவர்கள் தன்னுடைய உரையில் குருக்ஷேத்திரம்' என்று குறிப்பிட்டுச் சொன்னது முதல் அதிலேயிருந்து எடுத்து இன்றைக்கு இந்தியா ஒரு அரசியல் ஆட்சியின்கீழ், உள்ளது நல்லதா என்ற ஒரு கேள்வியைப் போட்டு அதற்கு வரலாற்றிலே இந்தியா என்றைக்குமே ஒரு கொடியின்கீழ் இல்லாமல் இருந்திருக்கிறதென்றும், என்றைக்குமே ஒரு எல்லைக்கோட்டுக்குள், அடங்கி இருக்கவில்லையென்றும் எடுத்துச் சொன்னார்கள். இதற்கெல்லாம் வரலாற்றின் அடிப்படையிலே ஆதாரத்தை எடுத்துக் காண்பித்தார்கள். ஆனால் இவ்வளவு பேசிய அவர்கள் இன்றைக்கு இந்தியா

13th November 1961] [Sri C. Subramaniam]

ஒரே ஆட்சியின்கீழ் இருப்பதினால் என்னென்ன தடைகள், என்னென்ன குறைகள் நமக்கு இருக்கின்றனவென்பதை மட்டும் பேசவில்லை.

என்றைக்கும் இல்லாத அரசியல் ஒற்றுமை, ஒரு அரசின்கீழ் எதற்காக இன்று வரவேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் உலகத்தில் இன்றைக்கு ஒன்றாக இருக்கக்கூடிய எந்த நாட்டையும் எடுத்துக்கொள்ளுங்கள். முதலில் பிரிட்டிஷ் நாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு பிரிட்டன் ஒரே அரசாங்கத்தின்கீழ் வருவதற்கு முன்னால் வேல்ஸ், ஸ்காட்லாந்து, இங்கிலாந்து ஒன்றாக இணைந்திருந்ததா? ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியுடன் சண்டை போட்டுக் கொண்டுதான் இருந்தார்கள் ஒரு பக்கத்தில் இருக்கும் அரசர் இன்னொரு பக்கத்தில் இருப்பதைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சாம்ராஜ்ய அடிப்படையில் சண்டை போட்டுக்கொண்டிருந்தார்களே தவிர, ஒன்றுபட்டிருந்ததை அங்கு காண முடியாது. இன்றைக்கு அந்த நாடு ஒன்றாக இருந்து, ஒரே அரசியலின் கீழ் நடைபெற்று வருகிறது என்கிற காட்சியைக் காண்கிறோம். ஆயிரம், 2,000 வருஷங்களுக்கு முன்பு பிரிந்து சண்டை போட்டுக் கொண்டிருந்த நிலை இருந்திருந்தாலும், பிரிந்து போக வேண்டும் என்ற ஒரு உணர்ச்சி ஒரு சிலருக்கு ஏற்பட்டாலும்கூட, ஒன்று கூடி இருந்தால் நல்லது என்று உணர்ந்து ஒன்று சேர்ந்ததால், அதன் காரணமாக இன்றைக்கு உலகத்தில் முன்னுக்கு வரக்கூடிய நிலைமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அந்த நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக ரஷ்யாவை எடுத்துக் கொள்ளுவோம். ரஷ்ய வரலாற்றிலே முற் காலத்தில் அது ஒரு ஆட்சியின்கீழ் இருந்திருக்கிறதா என்று பார்த்தால், கிடையாது. நம் நாட்டிலாவது கலாசார ஒற்றுமை, பண்பு, ஒற்றுமை, மத ஒற்றுமை ஓரளவுக்கு இருந்து வருகிறது. பரந்த அந்த நாட்டில் ஒரு இனத்திற்கும், இன்னொரு இனத்திற்கும் தொடர்பே கிடையாது. தொடர்பு ஏற்பட்டிருந்தால் சாம்ராஜ்ய அடிப்படையில், ரஷிய 'எம்பையர்' என்ற அடிப்படையில் ஒரு சில காலத்தில் ஏற்பட்டிருந்தாலும், மற்ற காலத்தில் ஏற்படவில்லை. ரஷ்ய மக்கள் தொன்று தொட்டு நாங்கள் பிரிந்து வாழ்ந்திருக்கிறோம், எதற்காக இன்று ஒற்றுமையாக ஒரே அரசியலின்கீழ் இருக்க வேண்டும் என்று கேட்கக் கூடிய நிலைமை இல்லை. அதேமாதிரி அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், முதன் முதலில் தனித்தனி ராஜ்யமாக அமைந்திருந்தது. வெவ்வேறு மொழிகள் பேசப்படும் பகுதிகள் ஐரோப்பாவிலிருந்து பல நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்பதை நாம் பார்க்கிறோம். ஆனால் இன்று ஐக்கியப்பட்டு நாடாக அமைந்து உலகத்திலேயே முதன்மைபெற்று விளங்குகிறது. மனித சமுதாயத்தில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற காலத்தில் நாம் வாழ்கிறோம். ஆரம்ப காலத்தில் ஒரு குடும்பம், குடும்பமாக கூடியிருந்தால் போதும் என்று நினைத்திருக்கலாம். ஆனால், இன்று சமுதாயம் வளர்ச்சி அடைந்து கொண்டே வந்திருக்கிறது என்பதை பார்க்கிறோம். ஆகையினாலே,

தொன்றுதொட்டு வரலாற்றைப் பார்த்தால் நாடு பிரிந்திருந்தது, ஆதலால் அது இன்றும் பிரிந்துதான் இருக்கவேண்டும் என்கிற வாதம் பொருந்தாது என்பதை அவர்களுக்கு பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படி அவர்களுடைய வாதத்தை ஒப்புக்கொண்டு எடுத்துக் கொண்டாலும், வரலாற்று அடிப்படையில் பார்த்தால் எந்தக் காலத்தில் திராவிட நாடு ஒன்றாக ஒரே அரசியலின்கீழ் இருந்திருக்கிறது? வரலாற்றைத் திருப்பித் திருப்பி பார்ப்போமானால், வேண்டுமானால் ஒரு பக்கத்தில் விஜயநகர மன்னன் சில பகுதிகளை சேர்த்துக்கொண்டிருக்கலாம், இன்னொரு பக்கத்தில் சேர, சோழ அல்லது பாண்டிய மன்னன் வேறு சில பகுதிகளைச் சேர்த்துக் கொண்டிருக்கலாம். அந்த அடிப்படையில் ஒரு சில பகுதிகள் சேர்ந்திருக்கலாமே ஒழிய, திராவிட நாடு எக்காலத்திலும் ஒன்றாகச் சேர்ந்திருந்ததில்லை.

வரலாற்றில் தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், தமிழ் நாடு என்றைக்கு ஒரே அரசியலின்கீழ் இருந்திருக்கிறது? மூவேந்தர்கள் ஆண்ட நாடுதானே இது. அதன் காரணமாக வரலாற்றின் அடிப் படையிலே பாண்டிய நாடு, சேர நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு என்று பிரிக்கப் போகிறார்களா? இதை நான் கேலிக்காகச் சொல்லவில்லை. வரலாற்று அடிப்படையில் உங்களைக் கேட்கிறேன்? என்றைக்கு தமிழ் நாடு ஒரே அரசியலின்கீழ் இருந்தது? என்றைக்கும் மூவேந்தர்கள் ஆண்டுவந்தார்கள். ஒருவருக் கொருவர் சண்டை போட்டுக்கொண்டிருந்த நிலைமை இருந்ததே தவிர, ஒரே ஆட்சியின்கீழ் இருந்ததில்லை. வரலாற்று அடிப் படையில் தனியாகப் பிரியவேண்டும் என்று வாதம் செய்வார்களே யானால், திராவிட நாடு அமைந்திருக்கக்கூடிய காலத்தில் அண்ணா துரை பிரதம மந்திரியாக உட்கார்ந்திருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். வரலாற்றில் என்றைக்கு இந்திய நாடு ஒன்றாக இணைந்திருந்தது. ஆகவே, திராவிட நாடு பிரிய வேண்டும் என்று சொல்லும்பொழுது, வரலாற்றின் அடிப்படையில் தமிழ் நாடும் பிரிந்துதானே இருந்தது, சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு என்று பிரிந்து தனித்தனி அரசாகத்தான் இருந்தது. ஆகவே, இதையெல்லாம் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அப்பொழுது அண்ணாதுரை அவர்கள் சோழ நாட்டை பிரித்துக் கொடுத்து விடுவார்களா, பாண்டிய நாட்டை பிரித்துக் கொடுத்து விடுவார்களா? அப்பொழுது அவர்களுடைய விடை என்னவாயிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். இதிலே இருக்கக் கூடிய முக்கியமான கஷ்டம் இதுதான். இன்றைக்கு கழகத்தினர் கேட்கிறார்கள், ஏன் இமயமலையை எல்லையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று, நானும் கேட்கிறேன், ஏன் ஹைதராபாத்தை எல்லையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று. இம்மாதிரி இரண்டு பக்கமும் வாதம் செய்யலாம். வரலாற்றை வைத்துக்கொண்டு யாரையும் ஏமாற்ற முடியாது. வரலாற்றின் அடிப்படையில் பார்த்தால் எந்தப் பகுதியும் சேர்ந் திருக்கவே முடியாது, கிராமமும், கிராமமும் சேர்ந்திருக்க முடியாது, ஊரும் ஊரும் சேர்ந்திருக்க முடியாது, பிறகு குடும்பமும் குடும்பமும் சேர்ந்திருக்க முடியாது என்று சொல்லிக்கொண்டே போகலாம். இன்றைக்கு மனித சமுதாயம் வளர்ச்சி அடைந்து வருகிறது. பழைய காலத்தில் அவ்வாறு பிரிந்து இருந்தது. ஆகவே அதை முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. இன்றைக்கு சமுதாயம் வளர்ந்துக்கொண்டே போகிறது. இமயத்தைத் தாண்டுவது மட்டுமல்ல, நாம் வேண்டும் என்று சொன்னாலும், வேண்டாம் என்று சொன்னாலும் ஒரு காலத்தில் தற்காலத்திய நாட்டு எல்லைகளெல்லாம் இருக்கப் போவதில்லை. அந்த முறை யில் மனித சமுதாயம் வளர்ச்சியுற்று வருகின்றது.

இந்திய ஒற்றுமை என்று சொன்னால் அதற்காக தமிழை விட்டுக்கொடுக்க தயாராக இருக்கிறீர்களா என்று அண்ணாதுரை அவர்கள் கேட்டார்கள். திராவிடத்தில் நான்கு மொழிகள் இருப்பதால் திராவிட ஒற்றுமை என்று வரும்பொழுது தமிழை விட்டுக் கொடுக்க தயாராக இருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். (ஆரவாரம்) திராவிட ஒற்றுமைக்காக தமிழ் மொழியை தியாகம் செய்வதற்கு தயாராக இருக்கிறார்களா? உயிரைக் கொடுப்பதற்கு தயாராக இருப்பவர்கள் தமிழ் மொழியை விட்டுக்கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம் என்கிற முறையில் சொல்ல முடியுமா? ஆனால் அதற்கு அவசியம் இல்லை என்பதை விளக்க விரும்புகிறேன். பன்மொழி பேசுகின்ற நாடு கள் இணைந்திருக்க முடியும் என்பது எங்கள் கருத்து.

இதுவரையில் கொஞ்சம் எனக்கு மனதில் சந்தேகம் இருந்தது. எந்த அடிப்படையில் திராவிட நாடு வேண்டும் என்று நினைக்கிறார் கள் என்பதுபற்றி. இன்றைக்கு அதுபற்றி விளக்கம் கொடுத்திருக் கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள். அதற் காக அவர்களுக்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம், மக்கள் கடமைப் பட்டிருக்கிறார்கள், நாடு கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வரலாற்று அடிப்படையில், 1,000, 2,000 வருஷங்களுக்கு முன்பு இருந்த நிலைமையை எடுத்துச் சொல்லி, அந்த அடிப்படையில் வாழ விரும்புகிறோம் என்று சொன்னால், அதைப்பற்றி நான் என்ன சொல்லுவது என்பது எனக்குப் புரியவில்லை. மற்றவர்கள்தான், மக்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

இன்னொன்று கூற விரும்புகிறேன். அந்தக் காலத்தில் வள்ளுவர் தோன்றினார். ஆகவே, அந்த முறையில் வாழ விரும்புகிறோம் என்றால், அன்று இருந்த சூழ்நிலை வேறு, இன்று இருக்கும் சூழ்நிலை வேறு. அந்நிய நாட்டு ஆட்சி இருந்த காலத்தில் பாரதி தோன்றினார். அதற்காக அன்னிய ஆட்சி தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்ல முடியுமா? இந்தக் காலத்திலும் கலைஞர்கள், மேதாவிகள், நிபுணர்கள், அறிஞர்கள் தோன்றியிருக் கிறார்கள். ஏதோ ஒரு நிலையில்தான் இவர்கள் தோன்ற முடியும், ஆகையினால் அந்த நிலைக்குப் போக விரும்புகிறேன் என்று சொல்லுவது சரியல்ல. வள்ளுவர் தோன்றிய சூழ்நிலையை வருத்து, அந்த சமுதாயத்திலே வாழ விரும்புகிறார் தி.மு.க. தலை வர்கள். அந்தக் காலத்தில் இருந்த அளவிலே, இருந்த சூழ்நிலை

யிலே அவர்கள் வளமாக, செழிப்பாக அன்றைக்கு வளர்ந்து வாழ்ந்திருக்கலாம். ஆனால், அன்றைக்கு இருந்த சூழ்நிலை வேறு, இன்றைக்கு இருக்கிற சூழ்நிலை வேறு. ஆயிரம், 2,000 வருஷங்களுக்கு முன்பு இருந்த சூழ்நிலை வேறு. மனித சமுதாயம் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்துகொண்டே வந்துள்ளது. பின்னோக்கி போகக்கூடிய காலம் அல்ல இது, முன்னோக்கி போகக்கூடிய காலம் இது என்பதை அண்ணாதுரை அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தி.மு.க. தலைவர் ஐ.நா-வுக்குச் சென்று திராவிட நாட்டுப் பிரிவினையைப்பற்றி வாதாடுவேன் என்று சொன்னதாக கேள்விப்பட்டேன். வரலாற்று அடிப்படையில் 1,000 வருஷங்களுக்கு முன் இருந்த நிலை அடிப்படையில் திராவிடநாடு கேட்பதாக தயவுசெய்து ஐக்கிய நாட்டுச் சபையில் சொல்லிவிடாதீர்கள். அங்குபோவதற்குள்ளாக வேறு ஏதாவது வார்த்தை தேடி வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட நாட்டிற்காக உள்நாட்டுக் கலகம் செய்யப்போவதில்லை என்று சொன்னார்கள். எனக்குத் தெரியாதா யார் உள்நாட்டுக் கலகம் செய்யக்கூடியவர்கள் என்று. நேருஜி அவர்களிடமே சொன்னேன் 'அவர்கள் எனக்குப் பழக்கம் உண்டு, அவர்களெல்லாம் இப்படி செய்யக்கூடியவர்கள் அல்ல' என்று. அப்படி வந்தாலும் சமாளிப்பதற்கு தயாராக இருக்கிறோம், உள்நாட்டுக் கலகம் வரும் என்ற பூச்சாண்டிக்காக யாரும் பயப்படபோவதில்லை.

உரிமை, உரிமை என்று பேசுகிறார்கள். உரிமையை யார் நிர்ணயிப்பது? அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன், மக்கள் தீர்ப்பு அளித்தாக வேண்டும், மக்கள் தீர்ப்பு அளிப்பார்கள் என்று. அப்படி மக்கள் தீர்ப்பு அளித்தாலும் ஒப்புக்கொள்ள முடியாது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொல்லுகிறார்கள். இன்றைக்கு மக்கள் முன்னிலையில் பிரிவினை அடிப்படையில் தேர்தலுக்கு வாருங்கள். பிரிவினையை ஒப்புக்கொள்ளாத ஒரு கட்சியோடு கூட்டு சேர்ந்துக்கொண்டு, திராவிட பிரச்சினையை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு தேர்தலுக்கு நின்று மக்களை ஏமாற்றக்கூடாது. திராவிட நாடு பிரிவினை அடிப்படையில் இன்றைக்கு தேர்தலுக்கு நிற்கட்டும்; அதன் முடிவை தெரிந்து கொண்டு விடலாம். பிரிவினையை தி.மு.க. கட்சி ஒன்று மட்டும்தான் விரும்புகிறார்கள். மற்ற எந்தக் கட்சியும் ஆதரிப்பது இடையாது. ஆகையினால், இன்றைக்கு மற்ற எல்லோரும் சொல்லுவதெல்லாம் சரி அல்ல, அவர்கள் சொல்லுவதெல்லாம் நியாயம் அல்ல, நான் ஒருவன் சொல்லுவது மட்டும்தான் நியாயம் என்று சொல்லுவது சர்வாதிகாரத்திற்கு ஒக்குமே தவிர, நாட்டிலுள்ள ஜனநாயக முறைக்கு ஒத்துக்கொள்ளாது என்பதை வலியுறுத்துகிறேன். ஆகவே இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நேருவுக்கல்ல பதில்சொல்ல வேண்டியது: மற்றவர்களுக்கு அல்ல பதில் சொல்ல வேண்டியது. அவர்கள் பதில் சொல்ல வேண்டியது, தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு, தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு. அவர்கள் உங்கள் பக்கம் இருக்கின்றார்களா என்று பாருங்கள். ஆதரவு இருக்கிறதா என்று பாருங்

கள். மக்கள் ஆதரவு இல்லையென்றால், நீங்கள் மைனாரிடிதான். ஒரு சிலர்தான் என்ற நிலைமை ஏற்படுமேயானால், பெரும்பாலான மக்கள் பிரிவினை எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லும்போது, இன்றைக்கு இருக்கும் ஜனநாயக அடிப்படையில், பெரும்பாலான மக்கள்தான் தங்கள் உரிமை என்ன என்று தீர்மானிக்க வேண்டும் என்று இருக்கும் நிலையில் "நான் அறிஞராக இருப்பதால் நான் சொல்லுவதுதான் சரி" என்று சொல்ல முடியாது. மக்கள் சொல்லுவதுதான் சரி. நான் சொல்லுவது அல்ல, காமராஜ் சொல்லுவது அல்ல, அண்ணாதுரை சொல்லுவது அல்ல, தமிழ் மக்கள் சொல்லுவதுதான் சரி. அந்த அடிப்படையில் தான் நான் சொன்னேன், தேர்தலைப்பற்றி ஏதோ சட்டசபையில் பதவியைப்பற்றி யல்ல, இன்றைக்கு உங்கள் கருத்துக்கு தமிழ் மக்கள் எதிர்ப்பு பெருமளவில் இருக்கிறது என்றாலும் ஆதரிப்பவர்கள் ஒரு சிலர்தான் என்றாலும், திராவிட நாடு வந்துதான் ஆகும், மற்றவர்கள் சொல்வது சரியல்ல என்று சொல்வது சரியல்ல. நாங்கள் சொல்வதுதான் சரி என்று ஒரு சிறுபான்மையோர் உரிமை கொண்டாடுவது ஜனநாயக அடிப்படையில் நடைபெறாது. அவர்கள் ஒரு சர்வாதிகாரியாக இருந்து, ராணுவ உடையில் வந்து, ஆட்சி செலுத்தி, மக்களை அடக்கி ஒடுக்கினால், அப்பொழுது அவர்கள் என்னுடைய சக்தி இருக்கிறது, நான் சொல்வதுதான் சரி என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால், நாம் இன்றைக்கு வாழ்வது ஜனநாயக அடிப்படையில். அதில் மக்கள் ஆதரவு இருந்தால்தான், ஒரு கட்சிக்கு அவர்கள் ஆதரவு இருந்தால் தான், ஒரு லட்சியத்திற்கு அவர்கள் ஆதரவு இருந்தால்தான் அதற்கு நாட்டில் இடம் உண்டு. இல்லையென்றால், அந்த லட்சியம் அழிந்து ஒழிய வேண்டும். அதைத்தான் கழகத்தினரைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயவு செய்து அதை மறைக்க முயற்சிக்க வேண்டாம், ஒளிக்க வேண்டாம். உங்கள் லட்சியத்தை எத்தனை பேர்கள் ஆதரிக்கிறார்கள்? எத்தனை பேர்கள் எதிர்க்கிறார்கள்? அந்தக் கணக்குப் போடும்போது, திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன், உங்கள் எண்ணிக்கை சட்ட சபையில் 15-லிருந்து 12-ஆகக் குறைந்த பிறகும், என்ன நிலை என்று பாருங்கள் என்று. இல்லை, இல்லை, நாங்கள் சொல்லுவதுதான் சரி என்று மேலும் மேலும் சொல்லுவது, தமிழர்கள் ஒப்புக் கொள்ளாத விஷயம். மேடைக்கு வேண்டுமானால் உதவலாம்; நாடக மேடைக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம்; சட்ட சபைக்கு அது ஒவ்வாது; மக்களுக்கு அது ஒவ்வாது. நான் ஓட்டுக்கு விட்டுப் பார்க்கலாம் என்று சவால் விடவில்லை; மக்கள் திராவிட நாட்டுப் பக்கம் இருந்தால், பெரும்பாலான மக்கள் இன்றைக்கு திராவிட நாடு வேண்டுமென்றால், இன்றைக்கு நான் அரசியலிலிருந்து விலகிக்கொள்ளத் தயார். அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள், தியாகம் செய்வேன் என்று. தியாகம் செய்வேன் என்று வெறுமனே வாயில் சொல்லும் நிலைமையில் தான் இருக்கிறார்கள். கொஞ்சம்கூட தியாகத்தில் பழக்கம் இல்லாதவர்கள். நாங்கள் தியாகத் தீயில் குளித்து, தியாகத்தில் வாழ்ந்தவர்கள்; எங்களுக்குத் தியாகத்தைப்பற்றிச் சொல்ல திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன வாய்

இருக்கிறது? (குறுக்கீடு.) தியாகத்தில் வாழ்ந்தவர்கள் எவரும் தி.மு. கழகத்தில் இருப்பதாக எனக்குத் தெரியாது. இப்பேர்ப்பட்டவர்களா எங்களிடம் தியாகத்தைப் பற்றிச் சொல்ல வருகிறார்கள்? யாரிடத்தில் அவர்கள் பேசுகிறார்கள்? தங்களையே உணராமல் பேசுகிறார்கள்; மற்றவர்களை ஏமாற்றச் சொல்லும் வார்த்தைகளை இங்கும் சொல்லவேண்டாம் என்று சொல்லுகிறேன்.

SRI A. GOVINDASAMY: ஆத்திரப்படாதீர்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆமாம், ஆத்திரம் தான், நாட்டைத் துண்டுபோடவேண்டும் என்றால்? இதிலே இரண்டில் ஒன்றைப் பார்த்துவிடுவோம், மக்கள் ஆதரவு யாருக்கு இருக்கிறது என்று. பலாத்கார அடிப்படையில் நான் இதைச் சொல்லவில்லை. மக்கள் ஆதரவு யாருக்கு இருக்கிறது என்று பார்த்து முடிவு செய்யவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

பண்டித ஜவஹர்லால் நேருவை எடுத்துக் காட்டி Self determination -ஐப் பற்றிச் சொன்னார்கள். பிப்ரவரி மாதத்தில் Self determination -ஐப் பார்ப்போம் என்று சொல்லுகிறேன். யார் திராவிட நாடு வேண்டும் என்று சொல்லுகிறார்கள், யார் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம். மக்கள் முடிவை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். "நாங்கள் மக்கள் முடிவை ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை" என்று திராவிட முன்னேற்றக் கட்சி தலைவர் வீண் வாதம் செய்கிறார்; அந்த வாதம் இந்த நாட்டுக்கு ஒவ்வாத வாதம் என்று சொல்ல விரும்புகிறேன் . . .

SRI C. N. ANNADURAI: நம்முடைய கனம் நிதி அமைச்சர் இரண்டு நாட்களாகவே ரொம்ப சுறுசுறுப்புக் குறைந்து இருந்தார்கள்; இன்றைய தினம் அவர் ஆத்திரத்தோடு பேசுகிறார்கள். ஆத்திரத்தோடு பேசுவது அழகாக இருக்கிறது. ஆனால், எண்ணிக்கொண்டு பேசும் எண்ணம் தவறாக இருக்கிறது. இன்றைக்கு மக்கள் தீர்ப்பு அளிக்காவிட்டாலும், ஒரு முறையல்ல, இன்னொரு முறை, இன்னுமொரு முறை பார்ப்போம் என்றேன். மக்களை ராணுவ உடையில் மிரட்டுவேன் என்று அவர்கள் அஞ்ச வேண்டாம்.

THE HON. SRI C. SUBRAMANIAM: மிரட்டினாலும் அந்த உடையில் யார் இருக்கிறார் என்று தெரியும், பயப்படமாட்டேன் என்ற உறுதியைத் தெரிவிக்கிறேன்.

ஆகையால், இந்த நாட்டுப் பிரிவினை உண்மையிலேயே உடனடியாக முடிவு செய்ய வேண்டிய காரியம் என்று சொல்ல விரும்புகிறேன். அந்தப் பிரச்னை ஒரு போராட்டமாகவே நடந்து கொண்டு இருக்கும் வரையில் வேறு காரியங்களில் நமது முழு கவனத்தைச் செலுத்த முடியாது.

இன்றைக்கு "ஸ்டேடஸ்கோ" (Status quo) பற்றிச் சொன்னார்கள். இருப்பது இருக்கின்றபடியே இருப்பதற்கு என்ன காரணம் என்று கேட்டார்கள். "ஸ்டேடஸ்கோ" இருப்பதற்குக் காரணம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. ஒன்றுபட்ட நாடாக இருப்பதை ஏன் பிரிக்க வேண்டும் என்பதற்குத்தான் அவர்கள் காரணம் கொடுத்தாகவேண்டும். அன்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் திட்டத்தைப்பற்றிப் பேசும்போது, பிரான்சின் வளர்ச்சிக்குக் காரணம் அது ஒரு சிறிய நாடாக இருப்பதுதான் என்று சொன்னார்கள். இன்றைக்கு ஐரோப்பிய நாடுகள் வளர்ந்திருப்பது எந்த அடிப்படையில்? சிறு நாடுகளாக இருப்பவைகளும், பெரிய சாம்ராஜ்யத்தை வைத்து வாழ்ந்தார்கள். சாம்ராஜ்யம் போனவுடன், இன்றைக்கு ஐரோப்பிய நாடுகளையெல்லாம் கூட்டுச் சேர்த்து ஒன்றாக இணைக்க முடியுமா என்று பார்க்கிறார்கள். பொருளாதார இணைப்பு மட்டுமல்ல, அரசியல் இணைப்பும்கூட. சிறிய நாடான பிரிட்டனும், பெரிய சாம்ராஜ்யம் இருந்ததால், தனித்து வாழ முடிந்தது. இன்றைக்கு சாம்ராஜ்யம் போய் விட்டது. ஒரு சிலர் வேண்டாம் என்றாலும், அவர்களும் இந்தக் கூட்டில் ஒட்டிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் உணர வேண்டும். தொழில் புரட்சிக்குப் பிறகு, என்ன நிலைமை என்று உணரவேண்டும். பண்டித ஜவஹர்லால் சொன்னார்கள், அணுசக்தி வந்த பிறகும் பழைய வாதங்களைச் சொல்வது சரியல்ல என்று. இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், மாறுதல்கள், உற்பத்தி சாதனங்கள் எந்த முறையில் இருக்க வேண்டும் என்று ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, தயவுசெய்து வரலாற்றைக் கூறி இந்தப் பிரிவினையைக் கேட்க வேண்டாம். நாம் அந்தக் காலத்தில் வாழவில்லை. இன்றைக்கு நாம் முன்னேற்றப் பாதையில், மாறுதலான சூழ் நிலையில், இன்னும் பொருளாதார மாறுதலை நோக்கிப் போகிறோம். பழைய முறையில், விவசாய அடிப்படையில் வாழ்க்கை நடத்தலாம் என்றோ, அதற்கும் முன்னால் இருந்த நாடோடி வாழ்க்கை நடத்தலாம் என்றோ, அதையெல்லாம் எடுத்துக்காட்டி, அந்த முறையில் நினைப்பது சரியல்ல. நாடுகள் ஒன்றாக்கப்பட வேண்டும், உலகமே ஒன்றாகப்படவேண்டும் என்ற முறையில் உலகத்து நாடுகள் போகின்றன. அந்தப் போக்கை மாற்றினால், உலக முன்னேற்றமே தடைபடும். ஆகவே, நான் சொல்லுகிறேன்—தாழ்மையாகச் சொல்லுகிறேன்—காரசாரமாகச் சொல்லவில்லை—அடி பணிந்து சொல்லுகிறேன், வரலாற்று அடிப்படையில் திராவிட நாடு அமைக்க முயலவேண்டாம், இந்த நாட்டின் மொழியைத் தியாகம் செய்கிறோம் என்றும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஒன்றாக இயங்கும் நாடுகளிலும் பலமொழிகள் இருக்கின்றன. வேண்டுமானால், திராவிட முன்னேற்றக் கட்சித் தலைவருக்கு பாஸ்போர்ட் வாங்கித் தருகிறேன், அவர்கள் கொஞ்சம் உலகத்தைச் சுற்றிப் பார்க்கட்டும். அப்போது ஒரு நாடாக உலகத்தில் நிலைப்பது எப்படி என்று கவனம் செலுத்த முடியும்.

அதற்காக, ஒற்றுமைக்காக, இந்தியைப் பூராவும் விட்டுவிடலா 1 30
மென்று சிலரும், இன்னும் சிலர் பேசுவதுபோல் ஆங்கிலத்தைப் p.m

பூராவும் ஏற்றுக்கொள்ளலாம் என்ற முறையிலும் பேசவேண்டிய அவசியம் இல்லை. நாட்டிலுள்ள எல்லோரும் புரிந்துகொள்ளுவதற்கு ஒரு பொது மொழி அவசியம். அதற்காக நம்முடைய மொழியையோ, அல்லது பண்பாட்டையோ விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. புதிதாக, சமஷ்டி முறை ஏற்பட்டது எதற்காக? வெவ்வேறு பகுதிகளிலே இருக்கிற மக்கள், வெவ்வேறு பண்புகளைக் கொண்ட மக்கள், வெவ்வேறு மொழிகளைக் கொண்ட மக்கள், இவர்களுக்கிடையே, அரசியல் துறையிலே இணைப்பு ஏற்பட முடியுமா என்பதைப்பற்றி, மனித வளர்ச்சி அடிப்படையிலே, பண்பு வளர்ச்சி அடிப்படையிலே, ஆராய்ச்சி செய்து சமஷ்டியை ஏற்படுத்தினார்கள். அதற்காக, 2,000 வருஷங்களுக்கு முன்பு இருந்ததையே இப்பொழுது கடைப்பிடிப்பதிலே அர்த்தம் இல்லை, பிரயோஜனம் இல்லை.

DEPUTY SPEAKER : I think the House has no objection to sit for ten minutes more.

THE HON. SRI C. SUBRAMANIAM : I shall finish my speech in ten minutes.

DEPUTY SPEAKER : All right.

THE HON. SRI C. SUBRAMANIAM : உண்மையான சமஷ்டி என்று சொன்னால்; மீதமுள்ள அதிகாரம் (Residuary power) ஸ்டேட்டில்தான் இருக்க வேண்டுமென்ற கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் சொன்னார்கள். ரெஸிடியுவரி பவர்ஸ் மத்திய அரசிடம் இருப்பதாலேயே சமஷ்டி அமைப்பில் குறைவு ஏற்பட்டு விடுவதில்லை. இந்திய அரசியல் அமைப்பைப் படித்துப் பார்த்தால் எனக்குத் தெரிந்தவரையில் எந்த ஸப்ஜெக்ட் ஆக இருந்தாலும் சரி, அதை விட்டுவிடவில்லை. ஒரு பட்டியலிலே இல்லாவிட்டாலும் இன்னொரு பட்டியலிலே போட்டிருக்கிறோம். எதிர்பாராத விதமாக ஒரு பட்டியலிலேயும் சேர்க்காத ஏதாவதொரு அதிகாரம் இருக்குமேயானால், அதை மத்திய அரசாங்கத்திற்கு விட்டுவிட வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டம் சொல்லுகிறது. அது எந்த அளவுக்கு ராஜ்யங்களைப் பாதிக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இந்தப் பட்டியல்களைப் பார்த்த பிற்பாடு, இவ்வளவு முக்கியமான அதிகாரம் விட்டுப் போய் இருக்கிறது, மத்திய அரசாங்கத்திற்குப் போயிருக்கிறது என்று சொன்னால், அதற்கு நான் பதில் சொல்லத் தயாராய் இருக்கிறேன். அன்றைக்கு உட்கார்ந்து பரிசீலனை செய்த அரசியல் நிபுணர்களுக்குத் தெரிந்தவரையில், வரையறுக்கப்படாத அதிகாரம் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, இதை வைத்துக்கொண்டு, இது சரியான சமஷ்டி அல்ல என்று சொல்வது சரியல்ல.

நமது வரலாற்றைப் பார்ப்போம். நாம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் வாழ்ந்து வந்தோம். அன்றைக்கு நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, ஒன்றாக்கப்பட்டோம். ஒரு சில சமஸ்தானங்கள் சில மன்னர்கள், சிறுசிறு பகுதிகள் விடப்பட்டிருந்தாலும் கூட, வேறு என்ன பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் நடந்திருந்தாலும் கூட, பிரிட்டிஷார் இந்தியாவை ஒரு குடையின்கீழ் கொண்டு

வந்தது ஒரு பெரிய சாதனை. ஆனால் அன்றைக்கு ஏன் எல்லோரும் ஒரு குடையின்கீழ் இருக்க வேண்டுமென்று கேட்பதற்கு யாருமில்லை. வரலாற்றின் அடிப்படையிலே--ஒரு வருஷம் அல்ல, 10 வருஷங்கள் அல்ல, 100 வருஷங்கள்—பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் ஒன்றுபட்ட இந்தியாவாக வாழ்ந்து வந்திருக்கிறோம், சுதந்திரம் பெறுவதற்கு முன்பாக. ஆனால், பழங் காலத்தில் கனம் அங்கத்தினர் அண்ணாத்துரை அவர்கள் சொன்னதைப்போல் சாம்ராஜ்ய அடிப்படையில் தமிழ்நாட்டு மன்னர்கள் இமயமலை வரை தங்கள் ராஜ்யத்தை பரப்ப முயன்றார்கள், வடக்கேயுள்ள மன்னர்கள் கன்னியாகுமரிவரை செல்ல முயன்றார்கள். அது கைகூடவில்லை. சம்மதத்தின் பேரில் நமக்கு சுதந்திரம் கிடைத்ததால் எந்தவிதமான குறையும் ஏற்படவில்லை, எந்த விதமான உரிமையும் பறிபோய் விடவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உரிமை பறிபோய் விட்டது, அந்த உரிமையைக் காப்பாற்ற வந்திருக்கிறோம் என்று பேச வேண்டிய அவசியமே கிடையாது. அன்றைக்கு தமிழ் மக்கள் ஒப்புக்கொண்டுதான் தமிழ்நாடு இந்தியாவுடன் இணைந்திருக்கிறது. ஒப்புதலுடன்தான் இணைந்திருக்கிறது. ஆனால், இன்றைக்கு வடக்கே போயிருக்கக்கூடிய இரண்டு தி.மு.க. பிரதிநிதிகளில் பிரிய வேண்டுமென்று சொல்வதிலேயும் கட்சி ஏற்பட்டுவிட்டது. ஒருவர் தான் பிரியவேண்டுமென்று சொல்கிறார். மற்ற தமிழ் பிரதிநிதிகள் அத்தனை பேரும் இந்தியாவின் ஒற்றுமையை நீடிக்க விரும்புகின்றனர். நம்முடைய உரிமையை வேறு யாரும் பறித்துக்கொண்டு போய்விடவில்லை. நாமே ஒப்புக்கொண்டுதான் இன்றைக்கு இந்திய யூனியனிலே இருக்கிறோம். யாரோ உரிமையைப் பறித்துக்கொண்ட மாதிரியும், தாங்கள் ஏதோ இதைக் காப்பாற்றுவதற்காக அவதரித்த அவதாரங்கள் என்று திராவிட தலைவரோ, அவருடைய தம்பிகளோ பேச வேண்டிய அவசியம் கிடையாது. (குறுக்கீடு.) நீங்கள் பேசுவது மட்டமானால், நான் பேசுவது மட்டமென்று எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்னொரு விஷயத்தைப்பற்றி ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதாவது, இந்தி திணிப்புப்பற்றி.

SRI C. N. ANNADURAI : நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், நான் தமிழ்நாடு தனி நாடாக இருந்த காலத்தைக் காட்டியதை வைத்துக்கொண்டு, அதே முறையிலே அமைக்க வேண்டுமென்று சொல்வதாக தப்பு அபிப்பிராயத்துக்கு வந்துவிட்டார்கள். நெடுங் காலத்திற்கு முன்பே தனி நாடாக இருப்பதற்கு தகுதி பெற்றது என்பதற்கான காரணத்தைத்தான் வரலாற்றிலிருந்த ஆதாரத்தைக் காட்டினேனே தவிர, பண்டைக் காலத்தைப் போல் பட்டாடை அணிந்துகொண்டு, உடைவாளை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இந்தியா ஒன்றாக இருந்தால் தமிழை விட்டுக்கொடுத்து விடவேண்டுமென்று சொல்லுவது நீங்கள் எப்படி இந்திக்காக எதையும் விட்டுவிடத் துணிகிறீர்கள் என்று சுட்டிக்காட்டுவதற்காகச் சொன்னேனே தவிர, எங்களுக்காக அல்ல.

[13th November 1961

THE HON. SRI C. SUBRAMANIAM: நீங்கள் இவ்வாறு சொல்வீர்கள் என்றுதான் நானே குறிப்பு எழுதி வைத்துக்கொண்டிருக்கிறேன். அங்கே என்ன பதிவாயிருக்கிறது என்பதைப் பார்க்கலாம். அவர்கள் என்னுடைய நிலையிலிருந்தால், இந்திய ஒற்றுமை வேண்டுமென்று நினைக்கக்கூடிய நிலையிலிருந்தால், இதற்காக தமிழையும் விட்டுக்கொடுப்பதற்குத் தயாராயிருப்பேன் என்று சொன்னீர்கள்.

SRI C. N. ANNADURAI: "டபிள் நெகடிவ்" உபயோகப்படுத்துகிறீர்களே.

THE HON. SRI C. SUBRAMANIAM: டபிள் நெகடிவ் போட்டாலும் சரி, ஸிங்கில் நெகடிவ் போட்டாலும் சரி, தாங்கள் சொன்னதைத்தான் நானும் திருப்பிச் சொல்லுகிறேன். திராவிட நாடு ஒற்றுமைக்காக, தமிழை விட்டுக்கொடுக்கத் தயாரா இருப்பீர்கள் போலிருக்கிறது என்று கேட்டேன்.

SRI C. N. ANNADURAI: திராவிட நாடு ஒற்றுமையிலே தமிழ் மொழிப் பிரச்னை வரவில்லை.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஏன் வரவில்லை? திராவிடநாடு நான்கு மொழிகள் பேசும் நாடாயிற்றே?

SRI C. N. ANNADURAI: உலகப் பொது மொழியாகிய ஆங்கிலம் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்படுமென்று நம்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: ஆங்கிலத்திற்குத்தான் நீங்கள் போவீர்கள். அப்பொழுது, நான்கு மொழி பேசக்கூடியவர்கள் ஒன்றாக இருக்க முடியுமா? அப்படியானால், ஏன் 7 மொழிகள் பேசுகிறவர்கள், 10 மொழிகள் பேசுகிறவர்கள் ஒன்றாக இருக்க முடியாது? திராவிடத்திலே அன்னிய மொழியை ஏற்றுக்கொண்டால், ஏன் இந்தியாவின் ஒற்றுமைக்காக, வேறொரு மொழியை பொது மொழியாக ஏற்றுக்கொள்ளக்கூடாது? ஆங்கிலம் என்ன இனிக்கிறதா? மற்ற மொழிகள் இனிக்கவில்லையா? தமிழைப்பற்றி எனக்கும் அவருக்கும் ஒரே கருத்துத்தான். ஆங்கிலத்திலே அவருக்குத் தனி மோகம். எனக்கு அது இல்லை. அவருக்கு அது நெடுங்காலம் பழக்கம். ஆங்கில ஆதிக்கம் ஏற்பட்டது என்றால், அது நல்லது என்று அவர் நினைக்கிறார். நான், அந்த ஆதிக்கம் இருந்தாலும், எந்த அளவிற்கு அதை வைத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த அளவுக்குத்தான் வைத்துக் கொள்ளலாம் என்று நினைப்பவன். தமிழுக்குப் பூரண உரிமை கொடுத்து அந்த அடிப்படையிலே ஒன்றுபட்ட இந்தியாவில் நாம் வாழ முடியுமென்று நான் கருதுகிறேன். தமிழை விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்த சபையிலே நடவடிக்கை நடத்துவதற்கு இந்தி வேண்டிய அவசியம் கிடையாது. அரசாங்க நிர்வாகத்தை நடத்த இந்தி வேண்டிய அவசியம் கிடையாது. ஆங்கிலமும் வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய நிலையில் ஆங்கிலத்தை

13th November 1961] [Sri C. Subramaniam]

ஓரளவுக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அந்த அளவுக்குத் தமிழ் வளரவில்லை என்பதால்தான். இன்று பட்டப் படிப்புக்குக்கூட நான் விரும்புவது தமிழ். திரு. அண்ணாதுரை வேண்டுமானால் ஆங்கிலத்தை விரும்பலாம். தமிழுக்கு உயர்வு ஏற்படவேண்டும்; தகுதி ஏற்படவேண்டும், என்று வாயளவில் சொல்வதோடு மட்டுமல்லாமல், அதற்கு முயற்சியும் செய்கிறேன். அவர்கள் நினைப்பதுபோல், திராவிட ஒற்றுமைக்காக இருந்தாலும் சரி, இந்திய ஒற்றுமைக்காக இருந்தாலும் சரி, தமிழை தியாகம் செய்து கொடுக்க வேண்டிய அவசியமில்லை. என்னைப் பொறுத்தவரையில், நான் தமிழைத் தியாகம் செய்யமாட்டேன் என்றும் உறுதி சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தி திணிப்பைப் பற்றிச் சொன்னார்கள். திரும்பத் திரும்ப அதைப்பற்றிச் சொல்லியாய்விட்டது. அதைப் பொறுத்த வரையில் 1965-க்குப் பிற்பாடும் ஆங்கிலமும், இந்தியும் தொடர்ந்து இருக்கவேண்டும். இந்தியைப் படிக்க முடியவில்லை, ஆங்கிலத்திலேதான் நாம் தகுதி பெற்றிருக்கிறோம். ஆங்கிலம் இருக்கத்தான் போகிறது. அதை யாரும் இன்று மறுக்க முடியாது. நாட்டினுடைய ஒற்றுமைக்காக, இந்தி வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்தி திணிக்கப்பட்டால் நாட்டின் ஒற்றுமை பாதிக்கப்படுமென்பதை வடக்கே இருக்கிறவர்கள் உணரவேண்டும் என்பதுதான் எனது வாதம். இருசாராருக்கும்தான் எடுத்துச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில்தான் ஆங்கிலம் நீடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேமாதிரி, தேவநாகரி லிபியைப்பற்றித் திருப்பித் திருப்பி ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். பிரதம மந்திரிகளே இதற்கு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதிருக்கும் தமிழ் எழுத்தை எடுத்துவிட்டு, தேவநாகரி லிபியில் தமிழ் படிக்க வேண்டும் என்ற ஏற்பாடு எப்போதும் கிடையாது. இப்பொழுதிருக்கும் தமிழ் இலக்கியம் தேவநாகரி லிபியில் வருவது என்ற பிரச்சினையும் இல்லை. மற்ற பகுதியிலே இருக்கிறவர்கள் தேவநாகரி லிபியில் தமிழ் படிக்கிறோம் என்று சொல்வார்களானால் அதற்கு நாம் குறுக்கே நிற்கப்போவதில்லை. இதற்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லியிருக்கிறேன். தேவநாகரி இங்கு வரப்போவதில்லை. வருவதற்கும் யாரும் விடமாட்டார்கள். யார் இங்கு அதிகாரத்தில் இருந்தாலும் அது வருவதற்கு இடமளிக்கமாட்டார்கள். தேவநாகரி பொது லிபியாக வந்து தமிழ் எழுத்தை அழித்துவிடப் போவதில்லை என்று உறுதியை நான் சொல்கிறேன். தேவநாகரி லிபி வந்துவிடும், அதற்காக திராவிடநாடு பிரித்துக்கொண்டுவிட வேண்டும் என்று அந்தப் பூச்சாண்டியைக் காட்டிச் சொல்ல வேண்டாம்.

தமிழை வேறு லிபியில் கற்றுக்கொள்வதானால் அதற்கு சொல்வதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இல்லை. ரோமன் ஸ்க்ரிப்டுக்கும் ஆங்கிலத்திற்கும் சம்பந்தமே இல்லை. தயவுசெய்து அதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஸ்க்ரிப்டுக்கும்

ஆல்பபட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒலி வேறு; எழுத்து வடிவம் வேறு. எழுத்து வடிவம் மாறிக்கொண்டே வந்திருக்கிறது. ஒலி வேண்டுமானால் மாறாமல் இருக்கலாம். ஒலி வடிவத்தில் மாறுதல் இல்லை. அந்த ஒலியை எப்படி வேண்டுமானாலும் எழுத்து வடிவில் போட்டுக்கொள்ளலாம். இருநூறு, 300 வருஷங்களாக ஒரே வடிவாக தமிழ் எழுத்து இருந்திருக்கிறதா என்றால் இல்லை. அது மாறிக்கொண்டு வந்திருக்கிறது. ஒலி வேறு; எழுத்து வடிவம் வேறு. எழுத்து வடிவம் மாறினாலும் ஒலி வடிவத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அப்படி வடிவத்தை மட்டும் மாற்றிக்கொண்டவர்கள் தங்களுடைய அனுபவத்தை நமக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

கனம் திரு. சின்னதுரை அவர்களும் மற்றவர்களும் பேசும்போது காங்கிரஸ் செய்திருக்கும் தவறுகளை எடுத்துக் கூறினார்கள். தவறுகளை எடுத்துச் சொல்லும்போது அவைகளை ஒப்புக்கொள்ள என்றைக்கும் தயாராயிருக்கிறேன். காங்கிரஸ் செய்ததெல்லாம் நூற்றுக்குநூறு சரி அதில் எந்தவிதமான குற்றமும் இல்லை, தவறும் இல்லை என்று நான் சொல்ல முன்வரவில்லை. தவறு இல்லாமலேயே நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. பல குற்றங்கள் நடைபெற்றிருக்கலாம். பல தவறுகள் நடைபெற்றிருக்கலாம். நான் முன்பு சொன்னதுபோல், தவறுகளை நீக்கிக்கொள்ள முயற்சி செய்ய வேண்டியதுதான். ஒன்றைச் செய்துவிட்டோம் என்பதற்காக அது தவறாக இருந்தாலும் அதையே தொடர்ந்து செய்துகொண்டு போகக்கூடாது தான். முஸ்லிம் லீகுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது தப்பு என்றால் அதைத் திருத்தத் தயார். ஒரு தடவை பண்ணிவிட்டோம் என்பதால் தொடர்ந்து அம்மாதிரியே செய்துகொண்டு போகவேண்டும் என்ற அடிப்படையில் அல்ல நாங்கள் இயங்க விரும்புவது. ஆகையால்தான், நாடு ஒற்றுமைப்பட வேண்டுமென்றால், அதற்கு என்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தயாராயிருக்கிறோம். தவறு செய்தாலும் அதைத் திருத்திக்கொள்ளாமல், ஒரு தடவை சொன்னதுதான் முடிவு என்ற முறையிலே நாங்கள் எண்ணுவது இல்லை. தவறுகள் ஏற்பட்டிருந்தால் அவைகளைத் திருத்திக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன்.

கனம் திரு. அண்ணாதுரை அவர்கள் சொன்னார்களோ, மற்றவர் சொன்னார்களோ ஞாபகம் இல்லை. இந்த ஒருமைப்பாடு மகாநாடு 'ஒரு தேர்தல் நாடகத்திற்குப் போட்டது' என்று சொன்னார்கள்.

SRI D. S. AUTHIMOOLAM : ரிபோர்ட்டிலே இருக்கிறது என்று சொன்னார்கள்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து வந்தவர்கள், பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியிலிருந்து வந்தவர்கள், ஜன சங்கத்திலிருந்து வந்தவர்கள், சுதந்திராக் கட்சியிலிருந்து வந்தவர்கள் எல்லோரும் ஏமாளிகள் அல்ல. அத்தனைக் கட்சிப் பிரதிநிதிகளும் வந்திருந்தது எங்கள் தேர்தல் நாடகத்திற்கு என்று சொல்வார்களானால், அத்தனை கட்சிகளையும் ஏமாற்றக் கூடிய ஆற்றலும் அறிவும் எங்களுக்கு இருந்திருக்கிறது என்று ஆகிறது. அப்படியானால், நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தாரையும் ஏமாற்ற முடியாதா என்ன? அப்படி ஒன்றும் ஏமாற்றக் கூடிய முறையில் அல்ல நாங்கள் செய்தது. உண்மையிலேயே நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டும், நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மகாநாடு கூட்டப்பட்டது.

இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். நான் கடைசியாக இங்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டிலே ஒரு புதிய சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று விரும்புகிறேன். நாட்டிலே வறுமை, பிணி, அறியாமை இவைகளையெல்லாம் போக்க வேண்டும், ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்று நினைக்கிறோம். திராவிட நாடு அமைந்துதான் அதெல்லாம் வரவேண்டும் என்பது அல்ல. இன்றைக்கு உலக நிகழ்ச்சிகள், உலக அனுபவம், மனித அனுபவம் அம்மாதிரி இருக்கிறது. ஆகவே, ஆகாத ஒன்றை, பல பேர் விரும்பாத ஒன்றை, ஒருசில சிறுபான்மையினர் பிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்களே அவர்கள் வீண் பாதையில் போய்க்கொண்டிருக்காமல், சக்தியையெல்லாம் ஒன்று கூட்டினால் அதன் காரணமாக நாம் இன்னும் சிறந்த காரியங்களைச் சாதிக்கமுடியும். நான் ஒப்புக்கொள்கிறேன்—இந்தி எதிர்ப்பு இல்லாமலிருந்தால் காரியங்களை நாம் இன்னும் திறமையாகச் செய்ய முடியும். அப்பேர்ப்பட்ட சக்தியைக் கொடுக்க எல்லோரும் திரண்டு வாருங்கள் என்று நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அப்படி எல்லோரும் ஒன்றுபட்ட சக்தியைக் கொடுப்பதன் மூலமாகத்தான் தமிழ்நாட்டில் புதியதொரு வளத்தை ஏற்படுத்த முடியும், புதியதொரு சமுதாயத்தை ஏற்படுத்த முடியும், மக்களுடைய குறைகளைத் தீர்க்க முடியும். அவ்வாறு அல்லாது நீங்கள் பேசும்போது நாங்கள் அருவருப்பு கொள்வதும், நாங்கள் பேசும்போது நீங்கள் அருவருப்பு கொள்வதும், அதைப் பார்த்து மற்றவர்கள் கேலி செய்வதும் ஆகிய நிலைமை இல்லாமல், இன்றைக்கு மக்களுடைய விருப்பத்தை ஒப்புக்கொண்டு, பெரும்பான்மையான மக்களுடைய விருப்பம் தெரிந்ததற்குப் பிற்பாடு, உண்மையான முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டும். அந்த முன்னேற்றப் பாதையில் சென்று வாழ்க்கை வளத்தைப் பெருக்குவதற்கு முன்வர வேண்டும். அப்படி முன்வந்து, தொடர்ந்து மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கவேண்டும் என்ற நிலைமை இல்லாமல், கஷ்டப்படுகிற மக்களுக்குப் புது வாழ்வு ஏற்படும் முறையில் எல்லோருடைய சக்தியும் பயன்படவேண்டும் என்று நான் உண்மையாகக் கோருகிறேன். எதிர் கட்சியிலுள்ளவர்களின் சக்தியும் பயன்பட்டு முன்னேற்றப் பாதையில் நாமெல்லோரும் கைகோர்த்து செல்லவேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த ஆகாத ஒன்றை, வேண்டாத ஒன்றையே நினைத்துக்கொண்டு வரலாற்றை நினைத்துக்கொண்டு, ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் இருந்ததையே நினைத்துக்கொண்டு இருக்காமல், இன்றைய நிலையில்

[Sri C. Subramaniam] [13th November 1961

நீங்களும் உடன் சேர்ந்து ஒன்றுபட்ட சக்தியாக நாட்டிலே பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு முன்வர வேண்டும் என்று உண்மையிலேயே அடி பணிந்து மிகப் பணிவோடு—என்றால் எவ்வளவு பணிய முடியுமோ அவ்வளவு பணிவோடு சொல்வது மட்டுமல்ல—வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The amendment of Sri V. K. Kothandaraman is deemed to have been withdrawn because I am not going to put the original motion to the vote of the House. The original motion is deemed to have been talked out.

SRI N. K. PALANISAMI: *ஸார், அடுத்த வருஷத்திற்கு புதிதாக எத்தனை எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதற்கு சர்க்கார் உத்தேசித்திருக்கிறார்கள்?*

DEPUTY SPEAKER: The hon. Member may put a separate question.

SRI K. VINAYAKAM: What are the rudimentary things necessary for introducing an express service? What should be the distance between the two places? Did the T.V.S. apply for per mission to ply express buses on that route?

THE HON. SRI V. RAMAIAH: In this particular case?

SRI K. VINAYAKAM: Yes.

THE HON. SRI V. RAMAIAH: The general principle to be borne in mind is that the express route should not be less than 75 miles. In this particular case, the operators in that sector have applied for permission to ply express buses on that route and this has been gone into by the Regional Transport Authority and the Regional Transport Authority has taken certain decision which has more or less appealed to State Transport Authority.

SRI T. S. RAMASWAMI: May I know whether any Inter-State express bus services are going to be started very soon?

THE HON. SRI V. RAMAIAH: Yes.

[14th November 1961

Drinking-water supply

DEPUTY SPEAKER: The hon. Member Sri T. S. Ramaswami has now come and he wants that his question No. 2068 be taken up now. With the permission of the House I shall now take up that question.

* 2068 *Q.*—Sri T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the year during which water-supply works (pipe line and taps) to Suchindram in Kanyakumari district was completed;

(*b*) the amount of contribution given by the Public for laying pipes and installation of street taps;

(*c*) whether water-supply has been given to the whole village during festival times and if so, how long; and

(*d*) whether water-supply has been given during ordinary times; if so, from when and if not, why not?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) All the works, viz., laying of pipe line and providing taps in public fountains were completed in October 1960.

(*b*) The Suchindram Panchayat has paid a sum of Rs. 10,000 as a contribution towards this work.

(*c*) During festival periods, water-supply has been given continuously for ten days for the whole village.

(*d*) Regular water-supply has not been given during ordinary times because the Suchindram Panchayat has not come to a settlement with the Nagercoil Municipality on the water charges to be paid.

Sri T. S. RAMASWAMI: Having laid the pipes and fittings they are all lying idle for the last four or five years. May I know whether the Government will pull up either the Panchayat or the officers concerned who have unnecessarily delayed the whole thing because this is bringing the Government into disrepute?

The Hon. Sri M. A. MANICKAVELU: There is no need for pulling up from here. The Suchindram Panchayat should come to certain agreement with Nagercoil Municipality. The Nagercoil Municipality is also in great arrears to Government. They want to collect their share of contribution. They are charging one rupee for one thousand gallons of water-supply. The Suchindram Panchayat say this is too much. It is between the Nagercoil Municipality and Suchindram Panchayat. I think the hon. Member can use his good offices.

Sri T. S. RAMASWAMI: May I know whether attention of Government was drawn to the fact that tentative agreement was arrived at between the Suchindram Panchayat and Nagercoil Municipality on these rates. They are prepared to give the rates and arrears provided orders are passed for giving water-supply. I understand that the papers are now delayed in the Secretariat.

14th November 1961]

The Hon. Sri M. A. MANICKAVELU: If it is pending here I will look into it. My information is, there is tussle between Suchindram Panchayat and Nagercoil Municipality.

Sri K. VINAYAKAM: In the absence of agreement between Suchindram Panchayat and Nagercoil Municipality and in view of the fact that the dispute has not yet been solved, what alternative procedure has been adopted by any agency like the Government or Public Health Department to provide drinking-water facilities for the large number of tourists and pilgrims that visit the famous temple in Suchindram?

The Hon. Sri M. A. MANICKAVELU: The difficulty is that Nagercoil Municipality has to pay much money to Government and Government is demanding money. In turn Nagercoil Municipality is asking Suchindram Panchayat for the money due from them. But they (Suchindram Panchayat) don't pay. It is like that. How can Government interfere and do anything?

DEPUTY SPEAKER: We shall now take up Question No. 2059.

Fertilizers

* 2059. *Q.*—Sri S. M. ANNAMALAI: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், போளூர் தாலூக்கா, களம்பூர் போலீஸ் ஸ்டேஷனில் 1961 ஆகஸ்ட் மாதத்தில் கள்ளத்தனமாக இரசாயன உரம் ஏற்றிச் சென்ற லாரியைக் கைப்பற்றினார்களா?

(இ) அப்படியானால், எத்தனை மூட்டைகள் கைப்பற்றப்பட்டன?

(உ) அவைகள் எங்கிருந்து கொண்டுவரப்பட்டன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir. The lorry was seized on 5th August 1961, by officers of the Customs Department and handed over to the Police at Kalambur Police station.

(*b*) Eighty bags.

(*c*) The accused are reported to have stated that the contraband was brought from Bavandavadi village in Chengam taluk

Sri S. M. ANNAMALAI: இதைக் குறித்து சார்ஜ்-ஷீட் போட்டாய்விட்டதா, வழக்கு தொடர்ந்தாய் விட்டதா என்று சொல்ல முடியுமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: சார்ஜ்-ஷீட் போட்டாய் விட்டது. மாஜிஸ்டிரேட் 'பெயிலில்' விட்டிருக்கிறார். லாரியையும் ரிலீஸ் பண்ணியாகிவிட்டது. மேலும் பரிசீலனை நடந்துகொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்ததும், கேஸ் தொடர்ந்து நடைபெறும்.

[14th November 1961

National Flag at Meenambakkam Air Port

* 2065 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the National Flag in the Meenambakkam Air Port was pulled down recently by sympathizers and supporters of a political party; and

(*b*) if so, the action taken against the offenders?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Crimes (increase in incidence in Tiruchirappalli district)

* 2067 *Q.*—Sri N. MARUDACHALAM (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government are aware that crimes such as house-breaking and theft are on the increase in the areas of Thillai Nagar, Tennur and Woriyur in Tiruchirappalli district:

(*b*) the number of crimes registered by the Police in Woriyur Police station limits, during the twelve months preceding 30th June 1961; and

(*c*) the number of crimes detected?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. The crimes such as house-breaking and theft are on a par with the figures of last year in the areas of Thillai Nagar, Tennur and Woriyur in Tiruchirappalli district.

(*b*) 51.

(*c*) 27.

Ferry Service (Dhanushkodi–Talaimannar)

* 2071 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have recommended to the Union Government for the continuation of the ferry service between Dhanushkodi and Talaimannar: and

(*b*) if so, the reply received from the Union Government?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The Railway Board and the General Manager, Southern Railway were addressed in the matter.

(*b*) The General Manager, Southern Railway, has furnished the following information received by him from the Railway Board :—

" In view of the heavy losses being incurred on running the ferry service and also in view of sea erosion at Dhanushkodi, it was decided in consultation with the Ministry of Transport and Communications that the Eastern Shipping Corporation which is

14th November 1961]

wholly Government-owned undertaking should run a passenger-*cum*-cargo service between Tuticorin and Colombo in replacement of the Dhanushkodi and Talaimannar ferry service. However, as the Eastern Shipping Corporation are not in a position to start a ferry service between Tuticorin and Colombo immediately, there is a proposal under consideration to hand over the existing assets of the Dhanushkodi–Talaimannar ferry service to the Eastern Shipping Corporation to run the service at present between Talaimannar and Dhanushkodi and later between Tuticorin and Colombo or otherwise as expedient to them. No final decision in the matter has so far been taken."

Sri A. A. RASHEED : Since this is the only link between Talaimannar and Dhanushkodi, will the Government insist on continuing this service in spite of the Railway Board incurring some losses in the interest of the public?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No doubt this is the only link between Talaimannar and Dhanushkodi. But this is not the only link between the Madras State and Ceylon. There are other links, for instance, Tuticorin to Colombo, Point Calimere to Kangeyanthurai. It is only 30 miles. But the Railway feel that this results in loss and cannot be improved and then again there is trouble of erosion in the Dhanushkodi peer. Therefore I cannot give an assurance to the hon. Member. But I would prevail on the Railway Board to continue this service irrespective of the losses.

Watchmen in Government Agricultural Farm, Coimbatore district (Holidays).

* 2073 *Q.*—Sri N. MARUDACHALAM : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள அரசினர் விவசாயப் பண்ணைகளில் வேலை செய்யும் காவலாளிகளுக்கு அரசாங்க விடுமுறைகள் அளிக்கப்பட்டனவா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Director of Agriculture has been addressed on the subject and his reply is awaited.

Sri N. MARUDACHALAM : சர்க்கார் விவசாயப் பண்ணைகளிலே 'கூர்க்கா' ஜாதியினர்களுக்கு மாத்திரம் அந்த சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. மற்ற காவலாளிகளுக்கு அரசாங்க விடுமுறைகள் கொடுக்கப்படாதது உண்மைதானா? அப்படி கொடுக்கப்படவில்லை என்றால், அவர்களுக்குக் கொடுப்பதற்கு எற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : விவசாய டைரக்டரை இதைப்பற்றி தகவல் கேட்டிருக்கிறேன். தகவல் வராமல், வேறு எதுவும் சொல்லுவதற்கு இல்லை.

[14th November 1961

Bullock cart (load)

* 2074 *Q.*—Sri V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

லாரி போன்ற வாகனுதிகளில் பாரம் ஏற்றுவதற்கு அளவு வைத்திருப்பதுபோல் மாட்டு வண்டிகளில் ஏற்றுவதற்கு அளவு ஏதாவது உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The Government have issued instructions that the following points may be taken as a guide in deciding whether there has been overloading or not :—

(i) the maximum load that can ordinarily be carried by an animal is half its own weight;

(ii) the maximum load that an animal can ordinarily pull is double its own weight, if the vehicle is iron-tyred, and four times its own weight if it is pneumatic tyred; and

(iii) the maximum loads referred to in (i) and (ii) have to be qualified by local conditions, for example, on the ghats.

Sri V. K. KOTHANDARAMAN : ஜீவகாருண்யத்தின் பெயராலே வண்டிமாடு கழுத்திலே புண் இருந்தால் மாத்திரம் நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு சட்டம் இருக்கும் பொழுது, இந்த 'லோடு' விஷயத்திலே இதுவரைக்கும் ஒருவர் பேரிலும் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. மதரூஸ் ஸிட்டியில் கண் முழி வெளியேவர, நாக்குத் தொங்கவிட பாரத்தை ஏற்றி வண்டியை ஓட்டக்கூடிய நிலைமை இருக்கிறதே, அந்த விஷயத்திலே என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதில்லை என்று சொல்லுவது சரியல்ல. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதாவது கவனித்திருந்தால், அம்மாதிரி திருஷ்டாந்தங்களை எனக்குத் தெரிவித்தால், மேலும் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமோ அதைச் செய்யலாம்.

Sri A. A. RASHEED : Sir, will the Government consider to fix a load limit for human being who draw handcarts like beast of burden in the City of Madras?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : That has to be abolished. That is a different question.

Increase of wagons for Southern Railways

* 2075 *Q.*—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have recommended to the Railway Board for the increase in the supply of wagons for Southern Railways; and

14th November 1961]

(*b*) if so, the reply received thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No general recommendation has been made by this Government to the Railway Board for increase in the supply of wagons for Southern Railways. However, with reference to the requirements in individual cases for additional wagons for the movement of foodgrains and other commodities, the railway authorities have been and are being addressed for allotment of adequate number of wagons and for high priority for movement of these commodities from place to place.

The question of addressing the Railway Board for general increase in the supply of wagons for Southern Railway is under consideration.

Sri A. A. RASHEED : Sir, may I know the present supply position of wagons in the Southern Railway? Is the Hon. Minister aware that due to shortage of such wagons, there is still shortage of coal in our State?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : There is no doubt that there is still a shortage of wagons. But I cannot say what exactly it is due to.

Sri K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, தென் பகுதியிலே ஓடிக்கொண்டிருக்கிற பல்வேறு பொருள்களைக் கொண்டு செல்லுகிற வாகன்கள் பெரும்பாலும் காலம் கடந்து ஓடிக்கொண்டிருக்கும் காரணத்தினுல் அவைகள் அடிக்கடி பழுதடைந்து போவது உண்மையா ? அவைகள் புதுப்பிக்கப்படுவதற்கு அரசாங்கம் ஏதேனும் வழி செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

Sri S. NAGARAJA MONIGAR : வாகன் தேவையின் அதிகரிப்பு வேகம் சப்ளை செய்வதனுடைய சாத்தியக்கூறுக்கு சரியாக இருக்கிறதா ? எதிர்காலத்தில் நமக்கு வேண்டிய வாகன்களுக்குத் தகுந்தபடி உற்பத்தி இருக்கிறதா ? நம் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இன்று உற்பத்தி நடந்துகொண்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : வாகன் உற்பத்தி இப்பொழுது அதிகப்பட்டுத்தான் வருகிறது.

Sri K. VINAYAKAM : Is it not a fact that acute shortage is felt in the supply position of wagons for the transport of goods from one place to another in our Southern Railway? Is it not due to the fact that more often rickety wagons are being allotted to the Southern Railway when compared to the other Railways in Northern India and our State being situated at the tail-end of

[14th November 1961

the continent our requests are not heeded by the railway authorities? If so, Sir, what steps would the Government of Madras take to redress this grievance?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is still no doubt a shortage of wagons. But the Government of India have been discussing this matter with the representatives of the railway now and then. I may tell the hon. Member that the situation has been improving and more wagons are made available.

DEPUTY SPEAKER: Questions are over.

[*Note.*—An asterisk * at the commencement of a speech indicates revision by the Member.]

II. ANNOUNCEMENTS.

(1) THE MADRAS GENERAL SALES TAX (THIRD AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 26 OF 1961).

DEPUTY SPEAKER: I have to announce to the House that the Governor has given his recommendation for moving the following amendments in the Legislative Assembly to the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 26 of 1961).

Clause 1.

For sub-clause (2), *substitute* the following:—

" (2) Section 3 shall be deemed to have come into force on 1st April 1961, in so far as it relates to the omission of items 23, 39 and 54."

Clause 3.

For the words and figures " items 23, 39 and 54 " *substitute* the words and figures " items 23, 39, 44 and 54."

III GOVERNMENT BILLS.

(1) THE MADRAS GENERAL SALES TAX (THIRD AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 26 OF 1961).

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Deputy Speaker, I beg to move—

" That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 26 of 1961), be taken into consideration ".

Under sub-section (3) of section 3 of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act I of 1959) the tax payable by a dealer in respect of any sale of goods mentioned in the First Schedule to the Act by such dealer to another for use by the latter as component part of any other goods mentioned in that schedule, which he intends to manufacture inside the State for sale shall be at the rate of only one per cent on the turnover relating to such sale. The term ' component part ' has not been defined in the Act. To remove difficulties arising on this account, it is proposed to define the term. Clause 2 of the Bill accordingly provides for the addition of an Explanation to section 3 (3) of the Act for the purpose.

14th November 1961] [Sri C. Subramaniam]

Under the provisions of the Madras General Sales Tax Act, 1959, dealers in goods liable to single point tax have to register themselves irrespective of the quantum of their turnover and if they are dealers at the point at which the goods are liable to tax, they have also to pay tax irrespective of the quantum of their turnover. The burden of proving that any dealer or any of his transactions is not liable to tax under the Act lies on such dealer. In the case of articles specified in items 23, 39 and 54 of the First Schedule to the Act, the above provisions have resulted in hardship to dealers in and manufacturers of those articles on a small-scale. The Government therefore decided to delete items 23, 39 and 54 from the First Schedule to the Act with effect from the 1st April 1961, and issued a notification in that behalf under section 59 of the Act. This notification came into force on the 1st April 1961.

Under section 59 (2) of the Act, the notification has now to be replaced by a law enacted by the Legislature. Clause 3 read with sub-clause (2) of clause 1 of the Bill accordingly contains the provision for deleting items 23, 39 and 54 from the First Schedule with effect from 1st April 1961.

Under item 44 of the First Schedule to the Madras General Sales Tax Act, 1959, upholstered furniture, sofa sets, dressing tables and furniture of all types including those made of steel and pile carpets (other than those mentioned in item 13) are liable to a single point tax of 6 per cent at the point of first sale in the State. The single point levy on furniture falling under this item has resulted in the following difficulties :—

(1) Small dealers having turnover of less than Rs. 10,000 have to pay tax and register themselves under the Act.

(2) They do not get the benefit of compounding sales tax even if their total turnover does not exceed Rs. 50,000.

(3) In respect of unfinished furniture bought by dealers and sold as finished furniture after fitting locks, handles, etc., tax has been levied on both finished and unfinished furniture causing hardship to the dealers.

(4) Second-hand furniture dealers are unable to prove that the article had already suffered single point tax and have to pay again 6 per cent tax on sales of such furniture at auctions.

It is therefore proposed to delete item 44 from the First Schedule to the Act, so that all articles falling under that item may be liable to multipoint tax of 2 per cent. Provision for this purpose also is proposed to be made in the present Bill itself. I will be separately moving an official amendment for the purpose when clause 3 of the Bill is considered by the House.

Cotton seed, which is an oil seed, is liable to a single point tax of two per cent at the point of first sale in the State under item 6 (*a*) of the Second Schedule to the Madras General Sales Tax Act, 1959.

[Sri V. Sankaran] [14th November 1961

மசோதா நிறை வேற்றப்பட்டாலுங்கூட பின்னர் இதைப் பரிசீலனை செய்து இந்தத் திருத்தம் அவசியமா என்று பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

9-33 a.m. THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think any reply is called. When clauses of the Bill are taken up for consideration, if any specific suggestion is made, I shall certainly consider it. But I do not think any amendments have been given notice of.

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 26 of 1961) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 3.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 3 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendment :

"*For* the words and figures, 'items 23, 39 and 54' *substitute* the words and figures 'items 23, 39, 44 and 54.'

The amendment was put and carried.

Clause 3 as amended was put and carried.

Clause 4.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 4 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I am opposing the clause.

Clause 4 was put and lost.

Clause 1.

3-30 p.m. DEPUTY SPEAKER : The question is—

'That clause 1 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendments :—

'*For* sub-clause (2), *substitute* the following :

"(2) Section 3 shall be deemed to have come into force on the 1st April 1961 in so far as it relates to the omission of items 23, 39 and 54."

14th November 1961

The amendment was put and carried.

Clause 1 as amended was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

'That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 26 of 1961) as amended be passed.'

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1961 (L.A. Bill No. 26 of 1961) as amended be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

II—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS CITY MUNICIPAL (AMENDMENT) BILL, 1961.

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration in the Legislative Assembly of the Madras City Municipal (Amendment) Bill, 1961.

III—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS CITY MUNICIPAL (AMENDMENT) BILL, 1961. (L.A. BILL NO. 35 OF 1961).

* THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON : Mr. Deputy Speaker, Sir, I beg to move—

'That the Madras City Municipal (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 35 of 1961) be taken into consideration.'

It is proposed to amend certain provisions of the Madras City Municipal Act, 1919 (Madras Act IV of 1919).

The White Paper on the Reform of Local Administration in Madras State included also proposals for the reform of the Madras City Municipal Administration. The changes contemplated in the White Paper in regard to the Corporation of Madras can be classified into three heads, namely :—

(i) Reform of the composition of the Council and the Council constituencies;

(ii) Reorganization of Standing Committees and resettlement of their functions; and

(iii) Reform of the system of appointment to key posts in the services of the Corporation.

A Legislature Committee consisting of hon. Members of both Houses of the Legislature was constituted to advise the Minister for Local Administration in finalizing the White Paper proposals and in pursuance of the decisions taken by the Legislature Committee regarding the reform of the composition of the Council and

[Srimathi Lourdammal Simon] [14th November 1961

the Council constituencies, the Madras City Municipal (Amendment) Act, 1958, was enacted. It is now proposed to give effect to the decisions of the Legislature Committee regarding the other recommendations.

The important changes proposed to be provided for are—

(i) Division of the Madras City into two parts called North Madras and South Madras;

(ii) Constitution of Central Committee and Circle Committee on a territorial basis in the place of the existing five functional standing committees, besides continuing the existing Accounts Committee (renamed as the Corporation Accounts Committee) and consisting a Contracts Committee to dispose of tenders for works and a licence appeals committee to deal with appeals against orders passed under the licensing provisions, etc.

(iii) Appointment of two Assistant Commissioners, one to be in charge of North Madras and the other to be in charge of South Madras, subject to the general superintendence, direction and control of the Commissioner.

(iv) Appointment of a Personal Assistant to the Commissioner to assist the Commissioner in the performance of his duties.

(v) Reorganization of the establishments under the Corporation by classifying the officers into four classes.

In order to carry out the above proposals, it is necessary to amend certain sections of the Madras City Municipal Act, 1919 (Madras Act IV of 1919). The Bill seeks to achieve the above objects.

DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras City Municipal (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 35 of 1961) be taken into consideration.

Sri S. M. ANNAMALAI: Sir, I move the following amendment:—

'That the Madras City Municipal (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 35 of 1961) be referred to a Select Committee consisting of . . . . Members of the Assembly (list of names to be furnished later).'

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER: The motion and the amendment are before the House for discussion.

Sri S. M. ANNAMALAI: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான மசோதா. அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, இது சம்பந்தப்பட்ட வெள்ளை அறிக்கையின்மீது விவாதம் நடந்தபொழுது ஒரு சட்டசபையை கமிட்டி நியமித்து அந்தக் கமிட்டி உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட

14th November 1961] [Sri S. M. Annamalai]

சில முடிவுகளை இப்பொழுது இந்த சபை முன்னர், தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை நகரைப் பொறுத்தவரையில் ஒரு மசோதாவாக, கொண்டுவந்திருப்பதாகச் சொன்னார்கள். வெள்ளை அறிக்கை 1958-ல் விவாதிக்கப்பட்டு, அப்பொழுதே ஒரு முடிவு எடுக்கப்பட்டது. இப்பொழுது ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் ஆகின்றன. மூன்று ஆண்டுகள் கழித்து, நாம் இந்தச் சபையிலிருந்து வெளியேறக்கூடிய நிலையில், அவசரம் அவசரமாக, 102 பிரிவுகளைக் கொண்டுள்ள இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது. மூல ஆக்டையும், இந்த மசோதாவையும் வைத்துப் பார்ப்போமேயானால், இதைப் புரிந்துகொள்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த மசோதாவினால் மக்களுக்கு என்ன நன்மை ஏற்படும், இந்த மசோதாவின் நோக்கம் என்ன என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறபொழுது, அவசரம் அவசரமாக, மூன்று ஆண்டுகள் கழித்து, செலக்ட் கமிட்டிக்கு விடாமலேயே, இந்த மசோதாவை நிறைவேற்றப் பார்க்கிறார்கள். அதே சமயத்தில் வேறு மூன்று மசோதாக்களை நமது ரெவென்யூ அமைச்சர் அவர்கள் பொறுக்குக் கமிட்டிக்கு விடுகிறார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல், இது ஒரு முக்கியமான மசோதா, ஒரு பெரிய மசோதாவுங்கூட. எனக்குத் தெரிந்த வரையில், இவ்வளவு பிரிவுகளைக் கொண்ட ஒரு மசோதா செலக்ட் கமிட்டிக்குச் செல்லாமல் சட்டமாக்கப்படுவதை நான் சென்ற ஐந்தாண்டுகளிலே பார்த்தது கிடையாது. இவ்வளவு அவசரமாக இந்த மசோதாவைக் கொண்டுவந்து சட்டமாக்க வேண்டுமென்று சொல்லும்பொழுது, அதிலே என்ன அவ்வளவு அவசரம் இருக்கிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பஞ்சாயத்துச் சட்டத்தில்—1958-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தில், பல கோளாறுகள் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. அப்போது அந்தச் சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்றினோம். இதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று அப்போதே நாங்கள் சொன்னோம். 'ஸ்லோ அண்ட் ஸ்டெடி வின்ஸ் தி ரேஸ்' என்பதுபோல, அதை நன்றாக ஆர அமர ஆராய்ந்து சட்டமாக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னோம். ஆனால், இதை அவசரமாக நிறைவேற்ற வேண்டும் என்ற முறையில், சட்ட மன்றத்தின் முன்னால் இதைக் கொண்டுவந்து நிறைவேற்றிவிட்டார்கள். இன்னும் விதிகள் பிறப்பிக்கப்படாமல் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அப்படியிருக்க இப்பொழுது இந்த மசோதாவைச் சட்ட மன்றத்தின் முன்னால் கொண்டுவந்திருக்கிறார்கள். தலை நகரத்தைப் பொறுத்த சட்டமாக இது இருப்பதால், இதை ஏன் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விடக்கூடாது என்று அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

வடக்கு, தெற்கு என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல இப்பொழுதிருக்கும் கமிஷனரோடு, அவருக்குக் கீழே பல உதவியாளர்களைப் போடும் வகையில் இதை மாற்றியமைக்கிறோம். இப்படி நிர்வாகத்தை மாற்றியமைக்கும்போது, தலை

நகரத்திலுள்ள பெருமக்களை அழைத்து அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு, இதிலுள்ள குறைபாடுகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். மாநகராட்சி மன்ற மேயர், கவுன்சிலர்கள், கமிஷனர் இவர்களையும் பொறுக்குக் குழுவின் முன்னால் அழைத்து அவர்களுடைய அபிப்பிராயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இப்படிச் செய்தால், இந்த மசோதாவில் உள்ள சில சிக்கல்களைத் தீர்க்கலாம். அரசாங்கம் கமிஷனருடைய அபிப்பிராயங்களை ஒரு வேளை கேட்டிருப்பார்கள். ஆனால், மேயர், கவுன்சிலர்கள் இவர்களையும் கலந்தாலோசித்தார்களா என்று தெரியாது. இதை அவசரமாகக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்குப் பதிலாக பொறுக்குக் குழுவை அமைத்து, வருகிற டிசம்பர் மாதத்திற்குள் அதனுடைய பரிசீலனையை முடித்து, அதன்பிறகு இந்த மசோதாவை டிசம்பர் மாதத்தில் சட்ட மன்றத்தின் முன்னால் கொண்டுவருவது நலமாக இருக்கும்.

இந்த மசோதாவில் கமிஷனருக்கு அதிகமான அதிகாரங்கள் தரப்படுகின்றன. லைசென்சை ரத்து செய்வதற்கும், புதிதாக லைசென்ஸ் கொடுப்பதற்கும் கமிஷனருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது. எஸ்டிமேட் சாங்ஷன் செய்வதற்குங்கூட, முன்பு இருந்த அதிகாரத்தைவிட இப்பொழுது அதிகமான அதிகாரங்கள் கமிஷனருக்குத் தரப்படுகின்றன. சென்ட்ரல் கமிட்டி, சர்க்கிள் கமிட்டி போன்றவைகளை அமைக்கும் போது, அவைகளுக்கு வேண்டுமானால் இந்த அதிகாரங்களைத் தரலாமேயொழிய, கமிஷனருக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. புதிய வீடு கட்ட, புதிய தெரு அமைக்க இப்படிப்பட்ட காரியங்களுக்கு அனுமதி வழங்குவதில் ஸ்டாண்டிங் கமிட்டிக்குச் சென்று, அவர்களுடைய அபிப்பிராயங்களைப் பெற்றுத்தான் செய்யவேண்டும் என்று முன்பு இருந்தது. இப்பொழுது இந்த மசோதாவில், சென்ட்ரல் கமிட்டிக்கோ, சர்க்கிள் கமிட்டிக்கோ செல்லவேண்டிய அவசியம் இல்லை. கமிஷனர் அதற்கு உண்டான அனுமதியைக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. இப்படிப் பல அதிகாரங்கள் கார்ப்பரேஷன் கமிஷனருக்குத் தரப்படுகின்றன. இதையெல்லாம் பரிசீலனை செய்வது அவசியம். சர்க்காருக்கு அதிகமான அதிகாரம் வேண்டும் என்பதற்காக கார்ப்பரேஷனுடைய அதிகாரத்தை இப்படி மறைமுகமாகப் பறிப்பதாக இந்த மசோதா இருக்கிறது. இந்த மசோதாவை பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட்டு பல திருத்தங்கள் இதில் செய்ய வேண்டியிருக்கிறது.

ஒன்றே ஒன்று சொல்கிறேன். சென்னை நகரக் கார்ப்பரேஷன் கொடுக்கும் விளம்பரங்கள் இதற்கு முன்பு இந்தி, தெலுங்கு போன்ற மொழிகளில்கூட கொடுக்கலாம் என்ற நிலைமை இருந்தது. அந்த உரிமை இதில் நீக்கப்பட்டிருக்கிறது. எல்லாக் கடிதப் போக்குவரத்தும், விளம்பரங்கள் போன்றவைகளும், தாய்மொழியிலோ, தமிழிலோ, ஆங்கிலத்திலோ இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஒன்றுதான் வரவேற்கத்தக்கதாக

இருக்கிறது. மற்றவைகளில் திருத்தங்கள் தேவைப்படும். ஆகவே, பொறுக்குக்குழுவுக்கு விட்டு, நகரத்திலுள்ள சில பெரிய மனிதர்களையும், நகராட்சி மன்ற நிர்வாகத்திலே பழக்கப்பட்டவர்களையும் வரவழைத்து, மேயர், கவுன்சிலர்களையும் வரவழைத்து, அவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, அதன்படி மசோதாவில் தேவையான திருத்தங்களைச் செய்து, அடுத்த டிசம்பரில் இந்தச் சட்ட மன்றத்தின் முன்னால் கொண்டுவந்து இந்த மசோதாவைச் சட்டமாக்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன். பொறுக்குக் குழுவுக்கு இந்த மசோதாவை விடவேண்டுமென்ற என்னுடைய யோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி மன்ற நிர்வாக முறையைச் சீர்திருத்துவதற்கான வகையில் இன்றையதினம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்த மசோதா பொதுவகையிலே வரவேற்கத் தக்கது என்றாலும் மேலும் ஆலோசிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றே ஆலோசிக்கப்படுவதற்கு இந்தச் சட்ட மன்றத்தினுடைய இன்றைய சூழ்நிலை அவ்வளவு ஏற்றதா என்பதைப்பற்றி நான் சிறிது கவலைப்படுகிறேன்.

ஏனென்றால், இங்குள்ளவர்கள், அமைச்சர்கள் உட்பட, வேறு பல பிரச்னைகளில் கவனத்தைச் செலுத்துகிற சூழ்நிலையில் இந்த மசோதாவில் உள்ள பல பகுதிகளில் தீவிர கவனம் செலுத்துவது சிறிது கடினம். அத்தகைய சூழ்நிலையில், நண்பர் திரு. அண்ணாமலை அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதுபோல், ஒன்று இதை ஒரு பொறுக்குக் குழுவுக்கு விடுவதன் மூலமாக ஒரு முழு அளவு பரிசீலனை செய்யலாம். அல்லது, எல்லாவற்றையும் நாங்கள் சிறப்பாகக் கவனித்துவிட்டோம் என்ற நம்பிக்கையோடு அமைச்சர் அவர்கள் இதை நேரடியாகச் சட்ட மன்றத்திலே நிறைவேற்ற வேண்டுமென்று கருதுவாரானால் மன்றத்து உறுப்பினர்களைக் கொண்டு முன்னால் பஞ்சாயத்துச் சட்டம் சம்பந்தமாகக் குழு அமைத்து அதைப் பரிசீலனை செய்ததுபோல, இந்த மசோதாவைப் பொறுத்தும், இதிலே அதிக ஆர்வம் உடையவர்களையெல்லாம் கூட்டி ஓரிரு நாட்கள் மாலை நேரத்திலாவது அதற்காக நேரம் ஒதுக்கி இதைப் பரிசீலனை செய்யலாம். அந்த வகையிலே ஒவ்வொரு பிரிவாகப் பரிசீலனை செய்ய கனம் அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும்.

இந்தச் சட்டம் மிக விரிவான சட்டமாக இருப்பதால், இதில் அதிகத் திருத்தங்கள் தேவைப்படலாம். இதிலேயுள்ள ஒவ்வொரு பிரச்சினையையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்த்து கருத்துக்கள் எடுத்துச் சொல்வதற்கும் சட்டமன்றத்தினர் அனைவருக்கும் வாய்ப்பு இல்லை. அத்தனை பேரும் இதிலே ஆர்வம் செலுத்த முடியவில்லை. மிக இன்றியமையாத சட்டம் என்ற காரணந்

[Sri K. Anbazhagan] [14th November 1961

காட்டி உடனடியாகச் சட்ட மன்றத்திலே எப்படியாவது நிறைவேற்றி விடவேண்டும் என்ற முறையைக் கையாளாமல் இதில் எத்தனையோ குறைகள் ஏற்பட்டுவிடலாம் என்பதை உணர்ந்து அவைகளைத் திருத்துவதற்கு வாய்ப்பளிக்க முயற்சிக்க வேண்டும். அதற்கு இன்று கூட இந்த மசோதாவைக் குழுவின் பரிசீலனைக்கு விடலாம்.

தேர்தல் சூழ்நிலையில் இந்தச் சட்டம் வருகிறது. மேலும் இந்தச் சட்டம் வந்தவுடனே நமக்கு அதனாலே உடனடிப் பலன் எதுவும் இல்லை. அடுத்த நகராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னாலேதான் இந்தச் சட்டத்தின் பலனை மாநகராட்சி மன்றம் அடைந்தாக வேண்டும். இதிலே இருக்கிற புதுமைகள் இப்பொழுது நிறைவேற்றப்படப் போவதில்லை. அடுத்த நவம்பர் வரையிலே மாநகராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அடுத்த ஆண்டு நவம்பர் மாதத்திலே நடைபெறுகிற தேர்தலுக்குப் பின்னால் நடைமுறைக்கு வரவேண்டியதை புதிய சட்ட மன்றத்திலே கூட நிறைவேற்றிக் கொள்ளலாம். நிதி அமைச்சர் கனம் திரு. சுப்பிரமணியம் அவர்கள், தாம் இங்கு இருக்கிறபோதே இதை நிறைவேற்றவேண்டுமென்று விரும்புவாரானால், டிசம்பரிலே இரண்டொரு நாட்கள் ஒதுக்கி வைத்து நிறைவேற்றிவிடலாம். அல்லது இதற்காகத் தனியாக, சிறப்பாக கவனம் செலுத்தக்கூடிய முறையில் ஆலோசிப்பதற்கு வழிவகைகளைக் காண்பது அவசியம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, இந்தச் சட்டம் நகராட்சி மன்ற அமைப்பில் ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்குகிற சட்டமாகும். ஏறத்தாழ 60, 70 உறுப்பினர்கள் இருந்த மன்றத்தில் 100 உறுப்பினர்கள் வந்துள்ள நிலையில் அதற்கேற்ப நிர்வாக மாற்றத்துக்கு இது வழி செய்கிறது. அதுபோல்தான், நிர்வாக முறையில் கமிஷனர்தான் இன்றைக்கு எல்லாப் பொறுப்புகளும் உடையவர் என்ற முறை இந்தாலுங் கூட, நகராட்சி மன்றத்துக்குக் கீழே பத்துத் தனிப்பட்ட வட்டக் குழுக்கள் பணியாற்றக்கூடிய நிலைமையிலே அந்த வட்டக் குழுக்களின் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய நிலையிலே வேறு சில அதிகாரிகள் ஏற்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. குறிப்பாக மாநகராட்சி மன்ற ஆணையாளரின் கீழ் இரண்டு துணை ஆணையாளர்கள் அமர்த்தப்பட்டு, தென் சென்னையை ஒரு துணை ஆணையாளரும், வட சென்னையை மற்றொரு துணை ஆணையாளரும் கவனிக்க வேண்டும், அவருடைய மேற்பார்வையில் இருக்க வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பத்து வட்டக் குழுக்கள் (சர்க்கிள் கமிட்டிகள்) அமைக்கப்படுகின்றன. அவை மூலமாக நிர்வாகம் நடத்தப்படுகிற நிலையில் ஒவ்வொரு வட்டக் குழுவுக்கும் ஒரு அதிகாரி அதன் மேற்பார்வையில் இருக்கும் சூழ்நிலையை உண்டாக்குவோமானால், அதுதான் செயலாற்ற சிறப்பே தவிர, ஐந்து வட்டக் குழுக்களை இணைத்து அதற்கு ஒரு துணை ஆணையாளர் என்ற முறையை ஏற்படுத்தும்போது ஒரு நிர்வாகத்தை வைத்து ஐந்து வட்டக் குழுக்களிலே

14th November 1961] [Sri K. Anbazhagan]

உள்ளவர்களோடு தொடர்பு கொள்வது சற்றுக் கடினமாக இருக்கும். கமிஷனருக்குக் கீழ் அடுத்த நிலையிலே இருக்கிற இரண்டு துணைக் கமிஷனர்களை நியமித்து அவர்களிடத்தில் தென் சென்னை, வட சென்னை என்ற இரண்டுபகுதிகளையும் ஒப்படைப்பதைவிட இன்னும் சற்று அடுத்த நிலையில் அதிகாரிகளை வைத்தாலும்கூட ஒவ்வொரு வட்டக் குழுவுக்கும் ஒரு அதிகாரியை நியமித்து அவர் மூலமாக அந்த வட்டத்தினுடைய நிர்வாகத்தை மேற்கொள்ளும் குழுக்கள், பணியாற்றுவதற்குத் தேவைப்படும். இவைகளை ஏற்படுத்துகிறபொழுது, நிச்சயமாக நிர்வாக இயந்திரத்தை ஒழுங்குபடுத்தாவிட்டால் ஒருவேளை இவ்வளவு சீர்திருத்தமும் வெறும் மேல் பூச்சாக நின்றுவிடக்கூடும். அந்த நிர்வாக இயந்திரத்தை ஒழுங்குபடுத்துகிறபொழுது ஒவ்வொரு வட்டமும் ஒரு துணை அதிகாரி பொறுப்பிலே ஒப்படைக்கப்பட வேண்டும். ஐந்து வட்டங்கள் சேர்த்து ஒரு துணையாணையாளர் பொறுப்பில் ஒப்படைக்கப்படுவதைவிட, தென் சென்னை, வட சென்னை என்று பிரிக்கப்படுகிறவகையிலே, தென் சென்னை ஒருவருடைய பொறுப்பிலும், வட சென்னை ஒருவருடைய பொறுப்பிலேயும் இருப்பதைவிட, ஒவ்வொரு வட்டக் குழுவுக்கும் நேரடியாக அட்மினிஸ்ரேடிவ் ஆபீஸர் என்ற முறையிலாவது ஒருவர் பொறுப்புடையவராயிருந்தால் இந்தப் புதிய முறை செம்மையாக இயங்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக நான் தெரிவிக்க விரும்புவது, இந்த வட்டக் குழுக்கள் அமைப்பது மூலமாக கட்சி உணர்ச்சிகள் மிகைப்படாமல் இருக்கத்தக்க சூழ்நிலை இதனாலேயே தோன்றும் என்று எதிர்பார்க்கிறேன். கட்சி உணர்ச்சிகள் அரசியலுக்காக எவ்வளவு தேவைப்பட்டாலும், நகராட்சி மன்றச் செயல்முறையிலே தேவையில்லை என்பதை எந்த நல்ல ஜனநாயகவாதியும் ஏற்றுக் கொள்வார். அதிலேயும் மாநகராட்சி மன்ற நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும் பெரும்பான்மைக் கட்சிக்கு இருக்க வேண்டிய இயல்பான உரிமைகளைச் சிறுபான்மைக் கட்சிகள் கொடுப்பதற்கு மறுக்கிற காரணத்தாலே ஒருவருக்கொருவர் குரோத உணர்ச்சி வளர இடம் ஏற்பட்டால், அதை நாடாளுகிற பெரும் கட்சியைச் சார்ந்தவர்கள் அந்த மாறுபட்ட உணர்ச்சி வளருவதைத் தடுப்பதற்கும், கட்சிகளிடையே ஒத்துழைப்பை நல்குவதற்கும்—தங்கள் கட்சி மாநில அரசில் பெரும்பான்மையாக இருக்கிற காரணத்தால் நகராட்சியில் கட்சி முக்கியமல்ல என்று கருதி—நிர்வாக முறையில் ஒத்துழைப்பதற்கு முன்வருவார்களேயானால் நிச்சயமாக இந்தப் புதிய சட்டத்தினாலே அதிகப் பலன் ஏற்படும் என்று நான் நம்புகிறேன். அதிலும் வட்டக் குழுக்கள் ஏற்படுகிறபொழுது, கட்சி வேற்றுமை உணர்ச்சி குறைந்து, பொதுநலம் போற்றப்படுவதற்கு வழி ஏற்படுமென்று நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

கடைசியாக இந்தச் சட்டத்தை அமுலாக்குவது பற்றி குறிப்பிடுகிறபொழுது, எந்தத் தேதியிலிருந்து இது அமுலாக்கப்படுகிறதோ அதிலிருந்து இப்பொழுதுள்ள (ஸ்டாண்டிங்)

நிலைக் குழுக்கள் கலைக்கப்பட்டு, புதிதாகச் சொல்லப்பட்டிருக்கிற கணக்குக் குழு முதலான குழுக்கள் ஏற்படுத்தப்படவேண்டுமென்று இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். எப்படியும் புதிய சட்டப்படி மன்ற முறை செயல்பட வேண்டுமானால், அடுத்த நவம்பரிலே வருகிற நகரசபை அதுபோல வேறு சில அதிகாரிகளும் நகர நிர்வாகத்திற்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சுகாதார அதிகாரியைப் போன்றவர்கள் திறம்பட செயலாற்றுவதற்கு வட்டத்திற்கு ஒருவராக அமைக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

நகராட்சி மன்ற ஆணையாளருக்குப் புது அதிகாரம் கொடுக்கப்படுவதனால் இவற்றையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டியதாக இருக்கிறது. இவைகளை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டியிருப்பதனால் திருத்தத் தீர்மானத்தில் கூறப்பட்டதுபோல இம்மசோதாவை ஓர் ஆய்வுக் குழுவுக்கு விடுவதில் தவறு இல்லை. காலம் இருக்கிறது. வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலை உடனடியாக இதை நிறைவேற்றுவதற்கு உகந்ததாக இல்லை. இதைச் செயல்படுத்த நகராண்மைக் கழகத்தின் அடுத்த தேர்தல் வருகிற நவம்பர் மாதம் வரையில் பொறுத்திருக்கவேண்டும். ஆகவே அடுத்து வருகிற சட்டசபையிலேயே நிறைவேற்றிக் கொள்ளலாம். இந்தச் சட்டசபையின் காலத்திலேயே நிறைவேற்றிவிட வேண்டும் என்றாலும் அடுத்த டிசம்பர் மாதக் கூட்டத் தொடரில் நிறைவேற்றிக் கொள்ளலாம். ஆகவே இதை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டும், நான் கூறிய விளக்கத்தின் அடிப்படையில் என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

SRI M. S. SELVARAJAN: கனம் தலைவர் அவர்களே, சென்னை மாநகர ஆட்சி சீர்திருத்தம் குறித்து கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதா முற்றிலும் வரவேற்கத் தகுந்தது. சென்னை மாநகரம் சமீப காலத்தில் தக்கவிதமாக வளர்ச்சி அடைந்து வருவது உண்மைதான். சென்னை நகரம் எப்பொழுதுமே இயற்கை எழில் வாய்ந்த நகரம். தெற்கு வடக்காகக் கடற்கரையையொட்டி மூன்று நான்கு மைல் அகலத்திற்குள்ளேயே நீண்டு இருக்கிற நகரம். இந்தத் தேசத்தில் மத்திய அரசாங்கத்தில் வேலை செய்கிற சிப்பந்திகள் யாராக இருந்தாலும் சென்னை நகரத்தில் வந்து வேலை செய்வது என்றால் ரொம்பவும் விரும்பி வருகிறார்கள். காரணம் முன்னே சொன்னேன். டெல்லி நகரத்தில் இல்லாத வாய்ப்பு, கல்கத்தா நகரத்தில் இல்லாத வாய்ப்பு இங்கே இருக்கிறது. சாதாரண மனிதன் முதற்கொண்டு, நடுத்தர மனிதர்கள் வரையில் கடற்கரைக் காற்றை அநுபவிக்க இங்கே வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த நகரத்தின் பொது சுகாதாரம் எல்லா வகையிலும் பாதுகாக்கப்படுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்தான்.

அதற்காக வேண்டி இந்த மசோதா கொண்டுவரப்பட்டதும், மசோதாவிலே சென்னை நகரத்தை வடக்கு, தெற்கு என்று பிரித்து இரண்டையும் தனித்தனியாக நிர்வாகம் செய்வதற்கு உதவி கமிஷனர்கள் என்று நியமனம் செய்ய உத்தேசித்திருப்பதும் வரவேற்கத் தக்கது. என்னுடைய அபிப்பிராயம் இதற்கு முன் தெரிவித்த கருத்துப்போல சிற்சில வட்டங்களின் பொறுப்பு மட்டும் அசிஸ்டெண்டு கமிஷனர் என்பவர்களிடம் இருப்பதோடு அல்லாமல் வார்டுதோறும் ஆங்காங்கு இருக்கக்கூடிய முனிஸிபல் அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீசுகளையும் அவர்கள்கீழ் வைக்கலாம். அப்படி வைப்பதில் தவறு இல்லையென்று கருதுவேன்.

கடந்த காலத்தில் சென்னை நகரத்தின் நிர்வாகம் நல்லமுறையில் நடந்திருக்கிறது என்றால் நிர்வாகஸ்தர்கள்தான் அதற்குக் காரணம் என்று நான் கருதவில்லை. இயற்கையாக சென்னை நகரம் வளர்ந்து வருகிறது. இந்த வளர்ச்சிக்கு ஏற்றவகையில் நிர்வாகத் துறை வளர்ச்சி அடையவில்லை. இன்னும் சற்று நல்ல முறையில் இயங்கக்கூடிய வகையில் அதை ஊக்குவிக்க முடியும். அந்த அளவுக்கு இது வளர்ச்சி பெறவில்லை என்று சொல்லவேண்டும். சென்னை நகரில் உள்ள இதர பல்வேறு ஸ்தாபனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஜில்லாபோர்டு நிர்வாகம், மற்ற முனிஸிபல் நிர்வாகங்கள் இவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது சென்னை நகரின் நிர்வாகம் சிறந்ததாக இல்லையென்ற குற்றச்சாட்டைச் சொல்ல முடியும். கடந்த காலத்திலும் சரி, இன்றும் சரி, எந்த அளவுக்குத் திறம்பட நிர்வாகம் இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு இல்லை, அதில் பல கோளாறுகள் இருக்கின்றன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவற்றைச் சீர்திருத்தும் முறையில் இந்த மசோதா வந்திருப்பதும், கவுன்ஸில் பிரதிநிதிகள் எண்ணிக்கையை 100-ஆக உயர்த்துவதும் இரண்டு உதவி ஆணையாளர், ஆணையாளருக்கு பி.ஏ. என்றெல்லாம் நிர்வாகத்தை அமைக்கிற முயற்சியைப் பாராட்டுகிறேன். இதுமட்டும்போதும் என்று நான் கருதவில்லை. பப்ளிக் ரிலேஷன் ஆபீசர் என்று அங்கும் ஒருவர் நியமிக்கப்பட்டால் சாதாரண மக்களும்கூட அங்கு சென்று கஷ்டமில்லாமல் பல காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியும், விவரங்களைப் பெற முடியும். இன்றைக்கு சென்னை நகரத்தில் சுகாதார வசதிகள் குறைந்து கொண்டே வருகின்றன. சுகாதார அமைப்பைச் சரியாகச் சீர்திருத்தத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்பொழுது அவற்றில் பல்வேறு விதமான சங்கடங்கள் வந்திருக்கின்றன. அதில் தகராறு ஏற்பட்டு அப்பீல் என்று வருமானால் அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட கமிட்டிக்கோ, அரசாங்கத்திற்கோகூட வரும்படியாக அமைப்பதுதான் சரி, அதுவன்றிக் கவுன்சில் கமிட்டி என்கிறபோது சரியாக அமையாது என்று சொல்ல விரும்புகிறேன். இன்றையதினம் தொழில் வரியாகட்டும், வீட்டு வரியாகட்டும் சரியான முறையில் வசூல் செய்யப்படவில்லை என்று சொல்ல முடியும். இன்றையதினம் ஐந்து வருஷங்களுக்கு முன்பு இருந்த வாடகை இப்போது சென்னை நகரத்தில் ஐந்து

[Sri M. S. Selvarajan] [14th November 1961

மடங்காக உயர்ந்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அதற்கேற்றபடி ஐந்து வருஷங்களுக்கு முன்னால் எத்தனை பணம் வீட்டு வரியில் வந்ததோ அதைப்போல ஐந்து மடங்கு அதிகமாக வருமானம் வரவேண்டும். ஆனால் அப்படி வரவில்லையென்றால் ஒன்று வரியை ஏமாற்றுகிறவர்கள் அதிகமாகிவிட்டார்கள், அல்லது வசூல் செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இன்றைக்கு சென்னை நகரில் வேலை செய்கிற சர்க்கார் சிப்பந்திகளிடத்தில் இருந்துகூட சரியான முறையில் தொழில் வரியை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று என்னால் சொல்லமுடியும்.
10-00 a.m. அவசியம் நேரிட்டால் ட்ரங்க் ரோடுகளையெல்லாம் சர்க்காருடைய நேரடியான பொறுப்பில் கொண்டுவருவதன் மூலமாக நல்ல முறையில் கவனித்துக் கொள்ள முடியும். இந்தத் திருத்த மசோதாவின் மூலமே அந்த இனங்களைச் சேர்த்துவிட முடியுமா என்று பார்க்க வேண்டும்.

கமிஷனரைப் பொறுத்த மட்டில் ஐ.ஏ.எஸ். ஆபிசரைத்தான் போடவேண்டுமென்ற நிலை இருந்தால் அதை மாற்றியமைக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் போன்ற நகரங்களில் பயிற்சி பெற்றவர்களுக்கு உயர்வு கொடுப்பதன் காரணமாக, நல்ல அனுபவம் பெற்றவர்கள் சென்னை நகரில் பணியாற்றும் நிலை பிறக்கும். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நல்ல நிர்வாகம் தெரிந்தவர்களாக இருந்தபோதிலும், இது போன்று மாற்றியமைப்பதால் மற்றப் பல நகரங்களில் இருப்பவர்கள் இங்கு வந்து பணியாற்ற உதவிகரமாக இருக்கும் என்பது என்னுடைய பணிவான கருத்து. மூன்று வருஷம் கழிந்த பிறகும் கமிஷனரையும் மறுபடியும் மூன்று வருஷங்களுக்கு அங்கேயே வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம் என்பதற்கு வசதி செய்வது அவசியமல்ல. மீண்டும் ஒருவரே அங்கு இருந்தாக வேண்டுமென்ற அவசியமே இருக்காது.

சுகாதாரச் சட்டத்தைப் பொறுத்த மட்டில் எடுத்துக்கொண்டால், அதை நியாயமாக அமல் நடத்துவதாக இருந்தால், நிச்சயமாக நகருக்குள்ளே விறகுக்கடை, கரிக் கடை ஆகியவற்றுக்கு அனுமதி கொடுக்க முடியாது. இன்றையதினம் இருக்கும் சிறு சிறு கடைகள் ஜனங்களின் வசதிக்காக ஆங்காங்கே இருக்க வேண்டியது அவசியந்தான். ஆனால் சுகாதாரச் சட்டத்தைச் சரியானபடி அமல் நடத்துவதாக இருந்தால், இந்தக் கடைகளில் பல இருக்க முடியாத நிலைமை ஏற்படலாம். சட்டத்தில் கோளாறு? அல்லது நிர்வாகத்தில் கோளாறு? இந்தச் சட்டத்தை எந்த அளவுக்குத் தளர்த்த முடியுமோ அந்த அளவுக்குத் தளர்த்தினால் ஜனங்களுக்கு உதவிகரமாக இருக்கும். இத்தகைய கடைகளுக்கு ஒரு அதிகாரியால் லைசென்ஸ் மறுக்கப்படுமானால், லைசென்ஸ் கமிட்டிகள் மூலமாகவோ, மற்றும் யாருடைய தயவின் மூலமாகவோ லைசென்ஸ் பெறும் சிறுமை இருக்கிறது. அதிகாரத்தின் மூலமாகத் தகாத காரியங்கள் நடப்பதைப் பார்க்கிறோம். இந்தச் சுகாதாரச் சட்டமானது சிறு சிறு தொழில்களைத் தொடங்கத் தடையாக

14th November 1961] [Sri M. S. Selvarajan]

இருக்கிறது. இவற்றையெல்லாம் யோசித்து, [illegible] ருந்த மாறுதல்களோடு கூடிய சட்டமாக இதை நாம் [illegible] ற்றவேண்டும். இரண்டு, மூன்று நாட்களுக்குள்ளாக இவற்றை [illegible] மாகப் பரிசிலனை செய்ய முடியாதென்றால், தவறுக்கு [illegible] லாத முறையில் இதை நிறைவேற்ற பொறுக்குக் கமிட்டிக்கு இதை அனுப்பி பரிசிலனை செய்தால்கூட அதிலே தவறு இல்லை. இதை இந்த சட்டசபைக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டிய அவசியத்தை அமைச்சரவர்கள் ஆரம்பப் பேச்சிலே குறிப்பிடவில்லை. ஒருகால் எங்களையெல்லாம் திருப்திபடுத்தக் கூடிய அளவில் காரணங்களைத் தெரிவித்தால் அந்தக் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க முடியும். அவ்வளவு அவசரம் இல்லையென்ற நிலைமையில் மேலும் மேலும் பரிசிலனை செய்து பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பி தகுந்த ஒரு சட்டமாக, கோளாறு இல்லாத சட்டமாக இதை நிறைவேற்ற வேண்டுமென்று பணிவான என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* SRI K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, I rise to oppose the amendment given notice of by Sri S. M. Annamalai requesting this House to refer this Bill to another Select Committee to go into the different provisions. This Madras City Municipal Act was first passed during 1919. Sufficient water has flown under the bridge and the Council as it is, is the body who are responsible for the administration of the City. The Councillors are men with long experience and it is only after working this Act for the past thirty or fourty years the necessity for amending this Act has been felt and an amending Bill has come before the House. I have been a Councillor of the Madras Corporation for well over 12 years and with the little experience I gained from that Council, I could well vouchsafe that there is immediate necessity toamend the old Act. This Bill which is now before us contains very good features and many points deserve consideration. In the first place, the first Act was passed in 1919 when the city was a small one and the population was considerably less, and the municipal needs of the people were also considerably less. The old Act was not very properly conceived and in the working of the Act we came across many difficulties. They have got to be solved quickly. It is only in the light of experience gained in the working of the previous Act, that this Bill is now being brought before us for discussion. The original Act contained a lot of defects.

The Constitution of the Corporation is as follows. There is a Council. There are many Standing Committees. There is the Commissioner who is in charge of administration. Proposals have got to emanate from Commissioner and they would be placed before the relevant Standing Committee and only after perusal by that Committee, the proposals will have to come to the Municipal Council in general. In practice we have found that it involves undue delay for a proposal to be finally passed by the Council. Such being the case we were beset with a lot of

[Sri K. Vinayakam] [14th November 1961

difficulties. Very many good proposals which had to be passed through quickly, were not passed through quickly because of all these steps which we had to get through before a proposal could come finally before the Council. The need for decentralization was felt and Government came to the conclusion that it should be possible to distribute these powers of administration to different agencies. As it is, the Corporation Council is entirely responsible for the administration of the entire City.

Unless the proposition is approved by the Council as a whole, the Commisioner is incapacitated to give effect to these proposals. There are lot of difficulties. The Corporation being a smaller Government, it controls finance to the extent of four to five crores. It is a smaller Government when compared to the State Government. It is an autonomous body and the Government do not interfere unless there is anything repugnant to the Constitution or to the Act. They have got complete powers to carry on the administration. Such being the case they are the lords of the situation. They take their own time to get things done.

For instance, suppose a contract has to be given for laying underground sewage in extended area like Kodambakkam, what happens? The Commissioner must conceive the idea. He will have to submit the proposals to the Government for approval. Government gives its final approval after a long time. This will have to be placed again before the Standing Committee and Works Committee. They take their own time. Finally the Taxation Committee has to see it. It takes a long time. If they differ in their views a joint Committee has to sit and consider. After their approval, it will be placed before the Council. The Council is more often engaged in different activities and they keep on adjourning it. I have been a Councillor and I know what it is. I am talking with a little experience. Any good proposition which is good to the public naturally takes two or three years. Sometimes it is shelved also and the Commissioner cannot do anything unless the Council approves. He cannot even report to the Government stating that the Council stands in his way and so he could not push through the scheme. That would be undemocratic. The Government does not interfere. In these circumstances nothing happens if the Council does not want it. If the Council has made up its mind not to push through any scheme, not even God can help us. The State Government will not interfere. In the ordinary situation it will not interfere. That has been the experience.

I am giving another face of it i.e., the new Bill. Regarding the Commissioner, he cannot punish anybody if he wants justly to punish his subordinates. All these officers, who are appointed in the Corporation administration have gained, whether we like it or not, and they have got some vested interests. They have got some in the Standing Committee to support them and also

14th November 1961] [Sri K. Vinayakam]

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

' In section 75 of the principal Act (Madras Act IV of 1919) in sub-section (1) (vide item (i) of clause 43) for the word ' two ' substitute the word ' one '.'

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : இதற்கு முன்னால் கமிஷனருக்கு 500 ரூபாய் வரையிலும்தான் அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. ஏலம் விடுவதற்கு, சொத்தை மாற்றுவதற்கு இப்போது 2,500 ரூபாய் வரையில் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஏற்கனவே நான் சொன்னபடி கமிஷனருக்கு எல்லா வகையிலும் அதிகமான அதிகாரம் கொடுக்கப்படுகிறது என்பதைத்தான் காட்டுகிறது. இப்படி அவருக்கு அதிகமான அதிகாரத்தைக் கொடுத்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் 1,500 ரூபாய் வரையில் என்று இதை லிமிட் செய்யவேண்டும் எனத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ' Subject to the provisions of section 80, the Commissioner may dispose by sale or exchange of any Corporation movable property, the value of which does not exceed five hundred rupees in each instance '.

இதையெல்லாம் கவனித்துப் பார்த்துத்தான் 500 ரூபாய் என்று இருந்ததை 2,500 ரூபாய் என்று திருத்தியிருக்கிறோம். ஆகையால் அது அப்படியே இருக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

The amendment was put and lost.

Clause 43 was put and carried.

Clause 44.

DEPUTY SPEAKER : The question is—

' That clause 44 do stand part of the Bill. '

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendments—

(1) " In the proposed new Section 78 of the principal Act (Madras Act IV of 1919) in sub-section (1) for the words 'twenty five ' substitute the word 'ten'. "

(2) " In the proposed section 78 of the principal Act (Madras Act IV of 1919) in sub-section (2) for the words 'twenty five' substitute the word 'ten'. "

The amendments were duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : ' The Commissioner may sanction any estimate, the amount of which does not exceed ten-thousand rupees '.

முன்பு பத்தாயிரம் வரையில் என்றுதான் இருந்தது. இப்போது 25 ஆயிரம் வரையில் கமிஷனரே எஸ்டிமேட்டுகளை சாங்ஷன் செய்யலாம் என்று இருக்கிறது. முன்பு சொன்னதுபோல இதுவும் கமிஷனருடைய அதிகாரத்தைத்தான் அதிகப்படுத்துகிறது ஆகவே, இந்தப் பத்தாயிரம் என்றே லிமிட் செய்ய வேண்டும் என்பதாகத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

SRI K. VINAYAKAM : முன்பு 10 ஆயிரம் வரையில்தான் கமிஷனர் சாங்ஷன் செய்யலாம் ஒரு இரண்டு ரூபாயோ, ஐந்து ரூபாயோ அதிகமானால்கூட கமிட்டிக்குப் போய், கவுன்சிலுக்குப் போய் அங்கீகாரம் பெறவேண்டும் என்று இருந்தது. இதில் ஏற்படக்கூடிய தொல்லைகள், கஷ்டங்கள் எல்லாவற்றையும் உணர்ந்துதான் இப்போது பத்தாயிரம் என்பதை 25 ஆயிரம் என்று செய்திருக்கிறோம். இது அதிகம் இல்லை. ஒரு பள்ளிக்கூடத்துக்கு நான்கு பெஞ்சுகள், ஐந்து நாற்காலிகள் என்று இப்படி வாங்கினாலே அந்தத் தொகையாகிவிடும். நான்கு கோடி, ஐந்து கோடி என்று பட்ஜெட் போட்டு செலவிடுகிற கார்ப்பரேஷன் கமிஷனருக்கு 25,000 வரயிலும் எஸ்டிமேட்டை ஒப்புக்கொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருப்பது தவறு ஒன்றும் இல்லை. டேடுடே அட்மினிஸ்ட்ரேஷன் செவ்வையாக நடைபெற வேண்டுமென்றால் அதிகாரிகளை நம்பத்தான் வேண்டும். கமிஷனர் ஒன்றும் அந்தப் பணத்தை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய்விட முடியாது. கமிஷனரைச் சந்தேகப்பட்டு கவுன்சிலுக்குக் கொடுத்தால் இங்கே

[Sri K. Vinayakam] [14th November 1961

யும் சந்தேகப்பட வேண்டிய நிலைமை நேரிடலாம். ஆகவே, இப்போது இருக்கிற லிமிட் சரியான லிமிட், இது அப்படியே இருக்கலாம் என்று சொல்ல விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி அதிகமாக விவாதம் இருந்தது. டெண்டர்களை எடுத்து கவனிப்பதில் உள்ள நிலைமைகளைப்பற்றி கனம் ராமசாமி அவர்களும் சொன்னார்கள், திரு. விநாயகம் அவர்களும் சொன்னார்கள். அப்போது ஒரு பிரபோசல் இருந்தது. பைனான்சு லிமிட் என்பதே இல்லாமல் கமிஷனரே பார்த்து எல்லா வேலைகளையும் நிறைவேற்றலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் கார்ப்பரேஷன் மேயர் முதலியவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. கவுன்சிலுக்கே பவர் இல்லாமல் போய்விடும், ஒரு லிமிட் இருக்கட்டும், அது 25,000 ரூபாய் வரையில் இருக்கலாம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னபடியேதான் இப்போது செய்யப்பட்டிருக்கிறது. இது சரியானது, அப்படியே ஒப்புக்கொள்ளப்படலாம் என்று சொல்லுகிறேன்.

The first amendment was put and lost.

DEPUTY SPEAKER : The second amendment is a consequential one and the House has given its verdict already. So I am not putting it to vote.

Clause 44 was put and carried.

Clause 45.

DEPUTY SPEAKER : The question is—

" That clause 45 do stand part of the Bill ".

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the follow- amendments; viz :—

After sub-clause (ii) add the following :—

" (iii) in sub-section (2), in clause (*a*) for the words ' two and half lakhs of rupees ', the words ' five lakhs of rupees ' shall be substitued."

SRI K. ANBAZHAGAN : அந்தத் திருத்தத்தைப்பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டரை லட்சத்தை ஐந்து லட்சமாக மாற்ற வேண்டுமென்பதுதான் திருத்தம்.

The amendment was put and carried.

Clause 45, as amended, was put and carried.

Clause 46.

DEPUTY SPEAKER : The question is—

" That clause 46 do stand part of the Bill ".

14th November 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move :—

For the clause 46 substitute the following :—

" 46. *Amendment of section* 80, *Madras Act IV of* 1919. In sub-section (2) of section 80 of the Principal Act—

(i) in clause (*b*), after word ' sanction ' in both the places where it occurs, the words ' or approval ' shall be inserted;

(ii) clauses (*c*) and (*d*) shall be omitted;

(iii) for clause (*e*) the following clause shall be substituted, namely :

" (e) every contrac made by the Commissioner shall, within fifteen days after it has been made, be reported to—

(i) the circle committee concerned, if the expenditure involved exceeds one thousand rupees but does not exceed ten thousand rupees, and

(ii) the central committee if the expenditure involved exceeds ten thousand rupees ".

The amendment was put and carried.

Clause 46 as amended was put and carried.

Clause 47 was put and carried.

Clause 48.

DEPUTY SPEAKER : The question is—

" That clause 48 do stand part of the Bill ".

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

In the proposed new sub-section (1) of section 82 for the word ' ten ' substitute the word ' five '.

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : பழைய சட்டத்தில் 3,000 ரூபாய்க்கு உட்பட்டதைத்தான் விளம்பரம் செய்து நடத்தலாம் என்று இருக்கிறது. அந்த அதிகாரம் இப்போது 10,000 ஆகத் திடீரென்று ஆக்கப்பட்டிருக்கிறது. ஒரேயடியாக 7,000 ரூபாயை அதிகமாக்குவது உசிதமல்ல. ஐய்யாயிரம் என்று இருக்கலாம் என்ற என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,.

THE HON SRI C. SUBRAMANIAM : பத்தை ஐந்தாகப் பண்ணுவது, மூன்றை ஐந்தாகப் பண்ணுவது எல்லாம் பற்றிக் கவனித்துத்தான் இந்தத் தொகைகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்போது கொடுத்திருக்கக்கூடிய தொகையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

[14th November 1961

The amendment was put and lost.

DEPUTY SPEAKER : The other amendment of which Sri S. M. Annamalai has given notice is out of order.

Clause 48 was put and carried.

Clause 49.

DEPUTY SPEAKER : The question is—

" That clause 49 do stand part of the Bill ".

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendments :—

For section 93 as proposed to be substituted, substitute the following :—

" 93. *Appointments Committee.*—(1) There shall be established an appointments committee which shall consist of the Mayor, the Chairman of the Central Committee and the Commissioner; and the Mayor shall be the Chairman of the appointments committee.

(2) Save as otherwise provided in this Act, appointments for all posts in Class III and in Class IV under the Corporation, the pay or the maximum pay of which exceeds one hundred rupees per mensem, shall be made by the Commissioner from the list of candidates approved by the appointments committee and in the order of preference indicated in that list. Appointments to all other posts in Class III an Class IV under the Corporation shall be made by the Commissioner subject to the bye-laws made by the Council :

Provided that in case of emergency—

(a) the Commissioner may appoint temporarily such officers and servants as may, in his opinion, be required for the purposes of this Act and the employment of whom for any particular work has not been prohibited by any resolution of the council ; and

(b) every such appointment made under clause (a) shall be reported by the Commissioner to the appointments committee at its next meeting ".

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இப்போது அரசாங்கத்தின் சார்பிலே தரப்பட்டுள்ள திருத்தத்தில் இந்தப் பணியாளர்களை நியமிக்க வேண்டிய குழுத் தலைவராக மேயர் இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பணியாளர் குழுவுக்கும் மத்தியக் குழுத் தலைவர், தலைவராக இருப்பது தான் இயற்கை. பல்வேறு குழுக்களின் முழுப் பொறுப்புமுள்ள அவர் இந்தப் பணியாளர் தேர்வுக் குழுத் தலைவராக இருப்பாரானால் இன்னும் சீர்பட இயங்க முடியும் என்ற கருத்தைத் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

14th November 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no amendment like that.

DEPUTY SPEAKER : The hon. Member Sri Anbazhagan is trying to move an amendment to Government's amendment.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கமிட்டியைப் பொறுத்தவரை, மேயர், சேர்மன் ஆப் தி சென்ட்ரல் கமிட்டி, கமிஷனர் மூன்று பேரும் இருக்க வேண்டுமென்பதில் வேறுபாடில்லை. மேயர் பொதுவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால் அவர் சேர்மனாக இருப்பதுதான் பொருத்தம். ஆகவே, மேயருக்கு அந்தப் பதவியைக் கொடுப்பது சரி என்பது என்னுடைய கருத்து.

The amendment was put and carried.

Clause 49 as amended was put and carried.

Clause 50.

DEPUTY SPEAKER : The question is—

" That clause 50 do stand part of the Bill ".

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

" In sub-clause (ii), in line 16, for the words " District Board " substitute the words ' Panchayat Union Council '.

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : இங்கே "டிஸ்ட்ரிக்ட் போர்டு" என்று இருக்கிறது. இப்போது டிஸ்ட்ரிக்ட் போர்டு என்பது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் என்று ஆகிவிட்டதால் அந்த இடத்தில் "பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்" என்று சேர்க்க வேண்டுமென்று கூறியிருக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த ஒரு திருத்தத்தையாவது ஒத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். தற்போது டிஸ்ட்ரிக்ட் போர்டு என்று இல்லாததால் "பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்" என்று மாற்றிவிடலாம்.

The amendment was put and carried.

Clause 50 as amended was put and carried.

Clauses 51 to 58 were put and carried.

Clause 59.

DEPUTY SPEAKER : The question is—

" That clause 59 do stand part of the Bill ".

SRI S. M. ANNAMALAI : Sir, I move the following amendment :—

In sub-clause (i) in line 45, for the word " Commissioner " substitute the words " Central Committee " and omit sub-clauses (ii) and (iii).

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI S. M. ANNAMALAI : இதற்கு முன்னால் ஸ்டாண்டிங் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி தற்போது கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கமிட்டிக்கு இருந்த அதிகாரத்தை மாற்றிக் கமிஷனருக்குக் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அதற்குப் பதில் சென்ட்ரல் கமிட்டிக்கு அதிகாரம் கொடுக்கலாம் என்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸ்டாண்டிங் கமிட்டிக்கு இருந்த அதிகாரம் சென்ட்ரல் கமிட்டிக்குப் போக வேண்டுமா அல்லது கமிஷனருக்குப் போகவேண்டுமா என்று பரிசீலனை செய்து பார்த்து, கமிஷனருக்கே அந்த அதிகாரம் இருந்தால் போதுமென்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, இதை "சென்ட்ரல் கமிட்டி" என்று மாற்ற வேண்டிய அவசியமில்லை.

The amendment was put and lost.

Clause 59 was put and carried.

Clauses 60 to 82 were put and carried.

Clause 83.

11-30 a.m. DEPUTY SPEAKER : The question is—

' That clause 83 do stand part of the Bill.'

SRI S. M. ANNAMALAI : நான் 83-வது பிரிவைப்பற்றிச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

' Provide for the procedure to be followed at meetings of the Contracts Committee, the Licence Appeals Committee and Appointments Committee and for the conduct of business and the number of members which shall form a quorum at such meetings '.

இதை சர்க்கார் நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முக்கியமாக கோரம், கமிட்டிகள் எப்படியெப்படி இயங்க வேண்டும் என்பவைகள் போன்ற முக்கியமான விஷயங்கள் குறித்து இந்த மசோதாவிலே குறிப்பிட்டிருக்க வேண்டும். ரூல்ஸ் மூலமாக, விதிகள் மூலமாக சர்க்கார் நடத்தலாம் என்பது உசிதமல்ல. இவ்வளவு பெரிய விஷயங்களை விதிகளின் மூலமாக நடத்த வேண்டுமென்று சொல்லுவது உசிதமல்ல. ஆக, இதைப் பரிசீலனை செய்து சர்க்கிள் கமிட்டி போன்றவைகள் எப்படி இயங்க வேண்டுமென்ற

விஷயங்களெல்லாம் இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டால் நலமாக இருக்கும். இதை சர்க்கார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : Procedure எப்போதும் ரூல்ஸிலே இருப்பதுதான் நல்லது. இல்லாவிட்டால் சிறு மாறுதல் செய்ய வேண்டுமானாலும் அதற்காக ஒரு மசோதா கொண்டுவந்து இங்கே நிறைவேற்ற வேண்டிய நிலைமை ஏற்படும். "ப்ரொஸீஜர்" பொறுத்த வரையில் ரூல்ஸிலே இடம் செய்வதுதான் வழக்கம். இதிலே தவறு ஒன்றும் கிடையாது.

Clause 83 was put and carried.

Clauses 84 to 94 were put and carried.

Clause 95.

DEPUTY SPEAKER : The question is—

' That clause 95 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

For clause (vi) substitute the following :—

(vi) For rule 20, the following rule shall be substituted, namely :—

" 20 (1) Any member of the Central Comittee or the Corporation Accounts Committee other than the Mayor who fails to attend four consecutive meetings shall cease to be a member of the Committee concerned.

(2) Any person who, under sub-rule (1) has ceased to be a member of the Central Committee may be restored to office by the Central Committee or re-elected by the Circle Committee concerned.

(3) Any person who, under sub-rule (1) has ceased to be a member of the Corporation Accounts Committee may be restored to office by the Corporation Accounts Committee or re-elected by the Council ".

The amendment was put and carried.

Clause 95 as amended was put and carried.

Clauses 96 to 101 were put and carried.

Clause 102.

DEPUTY SPEAKER : The question is—

' That clause 102 do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

In sub-clause (i) for the words " or the Corporation Accounts Committee " substitute the words " the Corporation Accounts Committee, the Contracts Committee, the Licence Appeals Committee or the Appointments Committee ".

The amendment was put and carried.

Clause 102 as amended was put and carried.

SCHEDULE. I.

DEPUTY SPEAKER : The question is—

'That Schedule I do stand part of the Bill.'.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

In Schedule I in column (3) for the words "Central Committee" occurring against entries "239, sub-sections (1) and (2)", "240" "251" sub-sections (1) and (2)", "252", "255", sub-section (2)" and "257-BB, sub-section (2)", in column (1) substitute the words "Licence Appeals Committee".

The amendment was put and carried.

Schedule I as amended was put and carried.

SCHEDULE. II.

DEPUTY SPEAKER : The question is—

'That Schedule II do stand part of the Bill.'

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

In Schedule II for rule 1 substitute the following :—

"1. All Standing Committees, Additional Standing Committees, and the Accounts Standing Committee constituted under the provisions of the Principal Act are hereby abolished with effect from the commencement of this Act and the Central Committee, every Circle Committee, the Corporation Accounts Committee or the Licence Appeals Committee constituted in accordance with the provisions of the Principal Act, as amended by this Act, shall elect its Chairman, as soon as may be, after the commencement of this Act."

The amendment was put and carried.

Schedule II as amended was put and carried.

Clause I and the Preamble were put and carried.

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : Sir, I move—

'That the Madras City Municipal (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 35 of 1961) as amended be passed.'

DEPUTY SPEAKER : Motion moved—

'That the Madras City Municipal (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 35 of 1961) as amended be passed.'

SRI S. M. ANNAMALAI : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார், 114-வது விதியின்படி, சர்க்காரே இதற்கு பலவித திருத்தங்கள் கொடுத்த காரணத்தினால் இந்த மசோதாவை "ஸப்ஜெக்ட் மீட்டிங்கில்" எடுத்துக்கொள்ளலாம் என்ற பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன். இதை உதவி சபாநாயகர் கவனித்து அடுத்த கூட்டத்தில் பாஸ் செய்யும் முறையில் இதை ஒத்திப்போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : They are only verbal amendments and not very substantial amendments. I think we need not postpone this to to-morrow. That is my ruling.

If the hon. Member wants, he can speak on the motion now.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் புதிய திருத்த மசோதாவை ஒரு ஜாயிண்ட் கமிட்டி போட்டு அவர்கள் அதை தீர ஆலோசித்து, பின்னரும் கார்ப்பொரேஷனைக் கேட்டு, புது உருவம் எடுத்து வந்திருக்கிறது. ஐம்பது டிவிஷன் கவுன்சிலாக இருந்துகொண்டு நடந்த வேலையைக் காட்டிலும் 100 டிவிஷன் கவுன்சிலாக ஆன பிறகு கூட்டம் அதிகரித்ததே தவிர வேலை ஒன்றும் நல்ல முறையில் நடைபெறவில்லை. இருந்தபோதிலும் இதை ஏற்றுக்கொண்டோம்—நடத்தி வருகிறோம். இதிலே நாம் ஒரு மாபெரும் மாறுதலை சர்க்கிள் கமிட்டி மூலம் கொண்டு வந்திருக்கிறோம். இந்த மசோதாவை முதலில் கொண்டு வந்தபோதே சட்டசபை அங்கத்தினர்களை எக்ஸ்-அஃபிஷியோ மெம்பர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டோம். அப்படி சேர்த்துக்கொண்டால் டிஸ்ட்ரிக்ட் போர்டு, பஞ்சாயத்து யூனியன் இவைகளெல்லாம் தொல்லை தரும் என்ற காரணத்தினால் வேண்டாம் என்று கூறி விட்டார்கள். நகரப் பிரதிநிதிகளின் கஷ்டங்களை உணரவேண்டும் என்ற காரணத்தினால் இந்த மூன்றாவது ரீடிங்கில் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நகரத்தில் இருக்கும் சட்டசபை உறுப்பினர்கள் மற்ற மாவட்ட உறுப்பினர்கள் மாதிரி வேறு துறைகளில் வேலை செய்ய இயலாது. காரணம், வீதி போடுவது, பாலம் கட்டுவது, இன்னும் இதே போன்று ஆஸ்பத்திரி ஆரம்பிப்பது, பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது போன்ற இப்படிப்பட்ட பொறுப்புகளெல்லாம் கார்ப்பொரேஷன் கையில்தான் இருக்கிறது. ஆகையால் அந்தத் தொகுதி அங்கத்தினர் ஏதாவது செய்ய வேண்டுமானாலும் கவுன்ஸில் மூலமாகத்தான் செய்யவேண்டியிருக்கிறதே தவிர வேறு வழி கிடையாது. அப்படி இருக்கும்போது எங்களை அங்கத்தினர்களாகப் போடாவிட்டால் ஒன்றும் செய்ய முடியாத நிலை ஏற்படும். அது மாத்திரமல்லாமல், எங்கள் தொகுதியிலே நடக்கக்கூடிய முக்கிய காரியங்களில், ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பிப்பது, ஒரு புதிய பள்ளிக்கூடத்தை துவக்குவது, ஒரு பாலம் கட்டுவது போன்ற ஒரு நிகழ்ச்சி நடக்கும்போது கார்ப்பொரேஷன் அதிகாரிகளோ மற்றவர்களோ அங்கத்தினர்களுக்கு மதிப்புக் கொடுப்பது கிடையாது. இப்படி இருந்தால் நாங்கள் எப்படி-

பொதுமக்களின் பிரதிநிதிகளாக வேலை செய்ய முடியுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார்கள்; ஆஸ்பத்திரியைக் கட்டினார்கள். ஆனால் அந்த அந்தத் தொகுதியிலுள்ள எம்.எல்.ஏ.வுக்கு அழைப்பு அனுப்பப்பட்டதா, அல்லது தர வேண்டிய இடத்தைக் கொடுத்தார்களா என்றால் இல்லை. அதிலே பங்குகொள்ளும்படியான வாய்ப்பைக் கொடுக்காமல், எப்படி நாங்கள் 75,000 மக்களின் பிரதிநிதிகளாக நகரத்தில் சட்டசபை உறுப்பினர்களாக எங்கள் பணியை உணர்ந்து வேலை செய்ய முடியுமென்று கேட்க ஆசைப்படுகிறேன். கார்ப்பொரேஷன் தொகுதியிலே நடக்கின்ற வேலைகளுக்கெல்லாம் அவர்கள் அரசாங்கத்திடம் கடன் வாங்காமலா இருக்கிறார்கள். அரசாங்கத்தின் உதவியோ, கடனோ பெற்றுத்தானே வேலைகள் நடத்தப்படுகின்றன. அப்படி அரசாங்கத்தின் உதவி பெற்று, பள்ளிக்கூடமோ, ஆஸ்பத்திரியோ, பாலமோ கட்டப்படும்போது, அதன் திறப்பு விழாக்களிலே மட்டும் ஏன் அந்தந்தத் தொகுதி எம்.எல்.ஏக்கள் பங்கு கொள்வதற்கு வாய்ப்புக் கொடுக்கப்படுவதில்லை. இப்படி நடந்துகொண்டு போனால், மக்கள் ஆட்சிக்கு இந்த முறை நல்லதா என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். என் தொகுதியிலே நடந்த ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். எம்.எல்.ஏ.-க்கு ஸீட் (seat) கொடுக்கலாமா, வேண்டாமா என்பதிலே மேயருக்கும், கமிஷனருக்கும் வாதம் நடக்கக்கூடிய முறையிலேதான் இன்றைக்கு நிலைமை இருந்து வருகிறது. இப்படி அனுமதி தரலாமா, வேண்டாமா என்று நினைப்பது மக்கள் ஆட்சிக்கு ஏற்ற நிலைமை ஆகுமா? ஆகவே, இதை இங்கு எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், மக்களின் பிரதிநிதிகளாக விளங்கக்கூடிய அந்தந்தத் தொகுதி எம்.எல்.ஏ.க்களுக்கு இப்படிப்பட்ட விழாக்கள் நடக்கும்போது, அவர்களுக்குரிய இடம் கொடுக்க வேண்டுமென்பதை அறிய வேண்டுமென்பதற்காகவே இதை இந்த நேரத்திலே எடுத்துக் காட்டுகிறேன். இப்போது மாபெரும் திருத்தங்களை எல்லாம் செய்யும் நாம், இந்த நேரத்திலே இதையும் மாறுதல் செய்ய வேண்டுமென்பதற்காகவே இச்சமயத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அப்போதுதான் மக்களின் பிரதிநிதிகளாக விளங்கக் கூடியவர்கள் நாட்டிலே என்ன நடைபெறுகின்றது என்பதை அறிந்துகொள்ள முடியும். இப்போது நாம் புதிதாக சர்க்கிள் கமிட்டி, சென்ட்ரல் கமிட்டி, கான்ட்ராக்ட் கமிட்டி என்று எல்லாம் பல கமிட்டிகள் அமைக்க இருக்கிறோம். இதை நான் வரவேற்கின்றேன். அதேபோல் நகரசபையிலே வேலை செய்யக்கூடிய அதிகாரிகளை யெல்லாம், ஸ்டேட் கவர்ன்மென்ட் சர்வீசோடு இணைக்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி நகரசபைக்கும், அரசாங்கத்திற்கும் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நினைக்கும்போது, சென்னை நகரத்து எம்.எல்.எக்களுக்கும், அங்கு நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கு மட்டும் ஏன் தொடர்பு இருக்கக்கூடாது? ஆகவே, இந்த இலாகாவின் அமைச்சர் அவர்கள் நகரசபை அதிகாரிகளுக்கும் நகரத்தின் பிரதிநிதிகளுக்

கும் அவரவர்களுடைய தொகுதிகளிலே நடக்கக்கூடிய இப்பேர்ப்பட்ட டெவலப்மெண்ட் ஆக்டிவிடிகளுக்கு அழைப்புக் கொடுக்கும்படி கட்டளை பிறப்பிக்க ஒரு சுற்றறிக்கையின்மூலம் அனுப்பினால் அது மக்கள் ஆட்சியை மதிப்பதாகும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொண்டு, இந்தத் திருத்தத்தை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை வரவேற்கிறேன். இதிலே எவ்வளவு நன்மைகள், தீமைகள் ஏற்படும் என்பதை இதை அமுல் நடத்திய பிறகுதான் தெரிந்துகொள்ள முடியும், இப்போது சொல்வது அவ்வளவு சுலபமல்ல என்று சொல்லிக்கொண்டு இத்துடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI: தலைவர் அவர்களே, இந்த நகரசபை மசோதாவை நாம் சட்டமாக்கப் போகிறோம். இதைச் சட்டமாக்குவதற்கு முன்னாலே, பல பிரச்னைகள் நம் முன்னால் நிற்கிறது. கார்ப்பரேஷன் மேயருக்கு உண்டான அதிகாரம் அதாவது இதர நாடுகளிலே இருக்கிற மாதிரியான அதிகாரம் நாம் ஏன் இன்னும் கொடுக்க முடியவில்லை. கமிஷனருக்கு உண்டான முழு அதிகாரம் இப்போது இருக்கிறதா? இதர கார்ப்பரேஷன்களிலே இருக்கிறபடி கமிஷனருக்கு அதிகாரம் இருக்கிறதா? இப்போது கமிஷனருடைய அதிகாரம் எல்லாம், அரசாங்கத்தாரை அடிக்கடி ஆலோசித்து, அவர்களுடைய ஆலோசனையின் பேரிலே நடக்கும்படியான நிலைமையில்தான் இருந்துக்கொண்டிருக்கிறது இந்த முறை மாறி, மேயருக்கு உண்டான அதிகப்படியான கௌரவமும், அவருக்குண்டான அதிகாரமும் நம்முடைய நாட்டிலேயும், சென்னை நகரத்திலே உள்ள நகராட்சி மன்றத்திற்கும் ஏற்பட வேண்டுமென்பதுதான் நம்முடைய குறிக்கோளாக இருக்க வேண்டும். ஆனால் இப்போது நாம் என்ன பார்க்கிறோம்? நகரத்திலே வரும்படியான வருமானத்தையெல்லாம், அரசாங்கம் எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். அதனாலே நகராட்சி மன்றம் நாம் செய்யவேண்டிய வேலைகளை யெல்லாம் பணம் இல்லாத காரணத்தினாலே, இப்போது அரசாங்கத்தைக் கடன் கேட்டோ அல்லது உதவி கேட்டோ அவர்களுடைய தேவையை பூர்த்தி செய்துகொள்ள வேண்டிய நிலைமையில்தான் இருக்கிறது. அரசாங்கத்தினுடைய தொடர்பு இருக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. எவ்வளவுக் கெவ்வளவு அதிகாரங்கள் கார்ப்பரேஷனுக்கு இருக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு அதிகாரம் இங்கே இருக்கிறதா, என்று பார்க்க வேண்டும். மேல் நாடுகளிலே உள்ள இதர கார்ப்பரேஷன்களுக்கு இருக்கும்படியான அதிகாரம், அதிலே உள்ள சிப்பந்திகளுக்கு உள்ள அதிகாரம், அதிலே உள்ள மேயருக்குள்ள அதிகாரம் எல்லாம், இங்கிருக்கக்கூடிய சென்னை நகராட்சி மன்றத்திற்கு இருக்கிறதா என்று பார்த்து, இருக்கும்படி நாம் செய்ய வேண்டும். 1919-லே சிடி முனிசிபல் ஆக்ட்டை உண்டாக்கினோம். பதினேழு வருஷம் கழிந்த பிறகு, 1936-லே அதைத் திருத்தி அமைத்தார்கள். அதன் பிறகு 25 வருஷம் கழித்து, இப்போது 1961-லே திருத்தி அமைத்திருக்கிறோம். இப்படி 25 வருஷம் கழித்து ஒரு திருத்தம் ஏற்படுகிறது என்று சொன்னால்,

[Sri S. Pakkirisami Pillai] [14th November 1961

கூடிய சீக்கிரத்திலே கொடுக்க வேண்டிய முழு அதிகாரத்தையும் கொடுக்கக்கூடிய முறையிலே அமைக்க வேண்டும். அதேபோல் மேயருக்கு உண்டான அதிகாரத்தைக் கொடுத்து மேயரைத் தேர்ந்தெடுக்கும் முறையையும், இப்போது ஜாதிவாரியாக கான்ஸ்டிட்யூஷனுக்கு விரோதமாக இருந்தாலும், பழக்க வழக்கத்திலே வந்துவிட்டதால், இதை மாற்றியமைக்க முடியாது என்று சொல்லாமல், பழக்கத்தை மாற்றி யார் திறமையுள்ளவர்களோ, யார் நன்றாக அட்மினிஸ்டர் செய்யக்கூடியவர்களோ அவர்களைத் தேர்ந்தெடுக்கும்படியான நிலைமையில் மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இன்னொரு திருத்தத்தை சீக்கிரத்திலே கொண்டுவந்து இந்த மாதிரியான அதிகாரம் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* SRI K. VINAYAKAM : Mr. Deputy Speaker, Sir, we are in the third reading stage. I do not know whether any useful purpose will be served by giving some suggestions for incorporation in the Bill at this stage. I have been feeling pertinently for some time in the past that in the city of Madras, the Councillors of the Corporation are in a position to do much better work from the point of view of the rate-payer than the Member of the Legislature elected from the City constituency. Of course, as Members of the Legislature, we are guiding the destinies of the State Government. We are given opportunities to take part in the discussions of various Bills that come up before the State Legislature. That apart, from the point of view of the citizens of the City, it is the City Councillor that comes into greater contact with the rate-payer than the Legislator. A Legislator may shape a Bill and he may be in a better position so far as legislation is concerned. But the ordinary rate-payer has got a soft corner for the City Councillor, because he is responsible for giving good drinking water, he is responsible for giving under-ground drainage facilities and he is in a position to reduce the property tax if ever it was raised beyond any reasonable limit. Considering all these things, the City Councillor is placed in a very enviable position. He is in a position to do something good to the electorate rather than the Legislator of the State. That is the reason why I have been harping now and then, in season and out of season, upon the necessity of associating Legislators with the affairs of the Municipal. Administration. I have been telling the Hon. Finance Minister who is solely responsible for the shaping of this amending Bill that in consonance with the District Development Councils functioning in the State and in which the Members of the Legislature have been co-opted, the Members of the Legislature may also be co-opted to the municipal councils also. At present, the Members of the Legislature take part in the discussions of the District Development Councils and their suggestions are being taken into consideration. I do not know whether they have any voting right or not. Whatever it is,their views are heard and respected and they are given sufficient opportunities to express their view-points and to put forward

14th November 1961] [Sri K. Vinayakam]

the wishes and demands of the people. More often, these are the powerful Legislators who shape things. I have been repeatedly requesting that in the same way, the Legislators who are elected representatives of the people should be co-opted as members of the municipal councils. I do not grumble even if they are refused voting rights.

It is not the vote that glamours me to be in the City Corporation. When compared to 100 members in the Corporation, 10 Legislators representing the City are not going to change the flow of events in the Corporation Administration and that is not the main consideration . These 10 Legislators will have their say on the floor of this (?) House on problems affecting the common folk but that is not keenly felt by the rate-payers in the City. My voter who has elected me to this House does not care whether I speak vociferously here or whether I use a proper language or whether I contribute to the discussions here. He does not worry much about it. If I give him facilities like water tap or neon(?) light or small things like that, he comes directly in touch with me and I also earn his goodwill for my success in the coming Elections.

THE HON. SRI C. SUBRAMANIAM : Then why does the hon. Member stand for the Assembly? He could stand for the Corporation of Madras.

SRI K. VINAYAKAM : I have taken note of what the Hon. Minister has stated for future guidance but that is a different matter. At the same time I must point out that in the Legislation concerning District Development Councils, we have allowed legislators representing the districts to be there and they could give their suggestions. Similarly I request the State Government to make such a provision in this Bill also. I know it is futile on my part to suggest it at this late hour. We are in the stage when the Bill is going to be passed into law.

The hon. Member Sri Pakkirisami Pillai, has thrown a very good suggestion regarding the election of Mayor. We are having a secular State and we do not elect people on the basis of caste or creed. In the case of the Scheduled Castes, we give some preferential treatment for ten years more. Nowhere in our country or in the world Mayors are elected on the basis of their caste or religion. But such an awful thing we are having in a metropolitan City like Madras, in the form of a convention. Mayors are elected every year on the basis of caste and creed—Mussalman, Non-Brahmin, Brahmin, Harijan, Indian Christian and like that. It is high time that the Corporation should be advised to give up this communal rotation basis so that they could set up a very good example to the rest of the country to follow. I hope the State Government will bear this in mind and if necessary instruct the Corporation authorities to give up this outmoded system of electing Mayors on the basis of caste. As I have stated in the

[Sri K. Vinayakam] [14th November 1961

beginning, I do not know whether it would be possible to incorporate these suggestions in the Bill but still I feel that it would be in the interest of the Government if they ponder over them and do their best. With these words, I whole heartedly commend this Bill for the acceptance of this House.

* **Sri R. SRINIVASA IYER:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1919-ம் வருஷத்திலே ஏற்பட்ட இந்தச் சட்டம் 42 வருஷங்களுக்குப் பிறகு அனுபவத்தை ஒட்டி, ஏற்கனவே பல திருத்தங்கள் ஏற்பட்டிருந்தாலும், பெரும்பாலான 102 கிளாஸ்கள் போட்டு ஒரு திருத்த மசோதாவை இப்பொழுது சட்டமாக நிறைவேற்ற இருக்கிறோம். அதை மூன்றாவது தடவை படித்து நிறைவேற்றும் தருவாயில் இருக்கிற தருணத்திலே, ஏற்கனவே சில காலம் முனிசிபாலிடியில் இருந்து வசித்து வாழ்ந்து வந்தவன் என்ற முறையில் சில வார்த்தைகள் சொல்ல முன்வருகிறேன்.

எனக்கு முன்பு பேசிய நண்பர்கள், முனிசிபாலிடி, கவுன்சில் இவைகளைப்பற்றியும், மேயர் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் இந்த மசோதாவை மூன்றாவது தடவை படிக்கும் தருவாயில் பேசினார்கள். எனக்கு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. சேதுபாவா சத்திரத்திற்கு தஞ்சாவூரிலுள்ள டிரஸ்டி ஒரு மானேஜரை நியமித்தால் அவர் தஞ்சாவூரிலிருந்து சேதுபாவா வரும்பொழுது திரும்பிப் பார்த்துக்கொண்டே வருவார். ஏனென்றால் அந்த உத்தரவு மாறி வேறு உத்தரவு போட்டு இன்னொரு மானேஜர் பின்னாலேயே வரலாம். சேதுபாவா சத்திரம் வருவதற்குள்ளாக உத்தரவு மாறி வேறு மானேஜர் வந்து, இந்த முதல் மானேஜரின் பதவி காலம் ஆரம்பித்து முடிவடைந்துவிடும். அது போல வருஷத்திற்கு ஒரு முறை மேயர் போட்டால் ஒரு வருஷத்திற்குள்ளாக மேயர் எலக்ஷன் நடந்து, பாராட்டு விழாக்கள் முடிந்து, என்ன செய்யலாம் என்று ஆலோசிப்பதற்குள் 6 மாதம், 7 மாதம் ஆகிவிடுகிறது. அதற்குள் ஏதாவது ஒரு முக்கியமான காரியம் கார்ப்பரேஷனுக்கு செய்து முடித்துவிட்டுப் போகவேண்டுமென்றால் கூட முடிவதில்லை. அதற்குள் அடுத்த எலெக்ஷனுக்கு யாரைப்போடலாம் என்று அரசியல் யோசனை ஆரம்பித்து விடுகிறது. 1919-ம் வருஷத்தில் இருந்ததைப் போல இப்பொழுது கார்ப்பரேஷன் 4 பங்கு இருக்கிறது, 40 பங்கு வரும்படி இருக்கிறது. புதியதாக ஏராளமான ஏரியாக்கள் கார்ப்பரேஷனில் சேர்க்கப்பட்டிருக்கின்றன . கார்ப்பரேஷன் எல்லை சைதாப்பேட்டை வரையில், அந்தப் பக்கம் கோடம்பாக்கத்திற்கு ஒரு மைல்வரையில் போயிருக்கிறது. வீடுகள் ஏராளமாக கட்டப்பட்டிருக்கின்றன. 1919-ம் ஆண்டில் இருந்ததைவிட இப்பொழுது 'டோடல் பாபுலேஷன்' இரண்டு மடங்கு இருக்கும். இங்கு வாழக்கூடிய மக்களுக்கு சுகாதாரம் நல்ல முறையில் இருக்கிறதா, ரோடு வசதி நல்ல முறையில் இருக்கிறதா, ஆஸ்பத்திரிகள் இருக்கின்றனவா என்று எந்த வகையில் பார்த்தாலும், 4 பங்கு அந்த வசதிகள் பெருகியிருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. எந்த வகையிலே செய்வது என்று ஒரு திட்டம் போட்டு செய்வதாயிருந்தாலும், 5 வருஷ காலத்திற்காவது மேயர்

14th November 1961] [Sri R. Srinivasa Iyer]

பதவிகாலம் நீடிக்கவேண்டும். பஞ்சாயத்து போர்டு தலைவர் பதவி காலம் 5 வருஷங்களாக இருக்கும்பொழுது, சென்னை மேயர் பதவி காலம் 5 வருஷங்களுக்கு இல்லாவிட்டாலும், மூன்று வருஷங்களாவது இருந்தால்தான் எந்தவிதமான காரியத்தையும் நடத்த முடியும். ஜாதிப் பிரச்னையைப் பற்றி நான் பேச விரும்பவில்லை. மெஜாரிடி எத்தனை பேர்கள் கவுன்சிலர்கள் இருக்கிறார்களோ அவர்கள் அபிப்பிராயப்படி மேயர் இருக்கலாம். ஒரு பீரியட், இரண்டு பீரியட் இருக்கலாம். திட்டம் போட்டுச் செய்வதாயிருந்தால், 365 நாள் 365 நாழிகை மாதிரி போய்விடும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திரு. விநாயகம் அவர்கள் சொன்னதுபோல மேயர் எலக்ஷனைப்பற்றிய கன்வென்ஷனை மாற்ற வேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1½ கோடி ஒதுக்கி ரோடுகள் போட்டு வசதி பண்ணலாம் என்று இருக்கும்பொழுது, ரோடு பற்றி என்ன செய்வது என்று யோசனை பண்ணி முடிவதற்குள் ஒரு மேயர் ஒரு வருஷம் பதவியில் இருந்துவிட்டுப் போய்விடுவார். அது சரியல்ல. நான் யாருக்கும் சிபார்சு பண்ண வரவில்லை. நான் மதராஸ் முனிஸிபாலிடியின் பிரஜையும் அல்ல, **City beautiful** என்ற பெயர் மாறி, துர்நாற்றமடிக்கிற அழகில்லாத கெட்டுப்போன நகரம் என்று பெயர் வரவேண்டுமானால், இப்பொழுது இருக்கிற முறை நீடித்து நடப்பது சரி. இல்லையென்றால், அந்த முறை மாறவேண்டும்.

இவ்வளவு பிரயாசைப்பட்டு இரண்டு சபைகள் சேர்ந்து ஒரு கமிட்டி போட்டு பரிசீலனை பண்ணி 3, 4 வருஷங்களாக மெனக்கிட்டு செலக்ட் கமிட்டிக்கு போகவேண்டாத முறையிலே நல்ல முறையில் இந்த பில் தயாரிக்கப்பட்டிருப்பதற்காக லா டிபார்ட்மெண்டுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 102 செக்ஷன்களில் 10, 12 திருத்தங்கள்தான் வாதாடப்பட்டது, அதுவும் **formal amendments** நல்ல முறையில் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. 'பில்லும்' நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த முறையில் நிர்வாகம் சம்பந்தமாக இன்னும் சில சௌகரியங்கள் செய்வது அவசியமாக இருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தில் பேசும்பொழுது மதராஸ் ஸிடி பற்றி பேசினேன். இன்னும் அதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எவ்வளவு கோடி ரூபாய் ரோடு வசதி செய்வதற்குக் கொடுத்தாலும், இப்பொழுது மதராஸ் ஸிடியில் போய்க்கொண்டிருக்கிற மாதிரி சீர்திருத்தம் பண்ணிக்கொண்டு போனால் பிரயோசனம் இல்லை. ரோடுகளில் அநேக பள்ளம், படுகுழி இருப்பதினால், 'ஆக்ஸிடெண்ட்ஸ்' ஏற்படுகின்றன. பெரிய பஸ் ரோடில் உட்கார்ந்து விடுகிறது, அடியோடு வீல் உட்கார்ந்துவிடுகிறது. ரோடுகளின் நிலைமை கெட்டிருந்தால் இம்மாதிரி கெடுதல்கள் ஏற்படாமல் இருக்கவே முடியாது. அதற்குத்தான் 'டிபார்ட்மெண்டல் வொர்க்' நடந்தாலொழிய, நிலைமை சீர்படாது. மவுண்டு ரோட்டைத் தவிர வேறு ஒரு ரோடு

[Sri R. Sriniavsa Iyer] [14th November 1961

மதுரையில் இருக்கிறதா என்று அதிகாரிகளுக்கோ, அல்லது கவுன்ஸிலர்களுக்கோ அல்லது பிரஜைகளுக்கோ தெரியவில்லை. என்ஜினியர்களுக்கும், வேலை செய்பவர்களுக்கும் கூட தெரிய வில்லை. இதைச் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. தவறுதலைச் சொன்னால்தான், எந்த இடத்தில் தவறு இருக்கிறது என்று பார்த்து சீர்திருத்த முடியும். கொஞ்சகாலமாக நான் இந்த மெட்ராஸ் ஸிடியை நாலு பக்கங்களிலும் பார்த்திருக்கிறேன். பார்க்க வேண்டுமென்றே சுற்றி யிருக்கிறேன். இன்றைக்கு
12-00 noon. கோடம்பாக்கம், சைதாப்பேட்டை, வெஸ்ட் மாம்பலம் முதலிய பகுதிகளில் பார்த்தால், வீட்டு வரி, முன்பு 10 ரூபாயாக இருந்தது இன்றைக்கு 110 ரூபாயாக இருக்கிறது. பிரஜைகளுக்கு எந்தவித மான அதிகச் சௌகரியமும் ஏற்பட்டு விடவில்லை. என்ஜினியர்கள் ரோடுகள் போடுகிறார்கள் என்றால், யார் அதை மேற்பார்வை பார்த்து தணிக்கை செய்கிறார்கள்? பாதசாரிகள் போவதற்காக ஏற்பட்டிருக்கும் பாதையில் குண்டும் குழியும் இருந்து நடப்பதே அபாயமாக இருக்கிறது. ரோடுகளில், அடியில் கற்களும், அதன் மேலே தாரும், அதற்கும் மேலே சிமெண்டும் போடுகிறார்கள். ஆனால் அதில் ஏற்படும் பள்ளமும் படுகுழியும், அதனால் ஏற்படும் ஆக்ஸிடெண்டுகளும் கொஞ்சநஞ்சமல்ல. இந்த அட்மினிஸ்ட்ரேஷனைப் பார்த்தால், இந்த ஸிடி முனிசிபாலிடியை அடியோடு எடுத்து விட்டு, ஒரு ஸ்பெஷல் ஆபீஸரைப் போட்டு வேலை செய்தால் கூட நலமாக இருக்கும் போல் தெரிகிறது. ஆனால், நான் ஏதோ ஜனநாயகத்திற்கு விரோதமாகப் பேசுகிறேன் என்று சொல்லுவார்கள். ஜனநாயகத்தையும் வைத்துக் கொண்டு, கோடிக்கணக்கான ஜனங்களிடம் வசூல் செய்யும் வீட்டு வரி, சாக்கடை வரி, கக்கூஸ் வரி, இன்னும் லேடிங் டாக்ஸ் இவைகளெல்லாம் சரியான முறையில் மக்களுக்குப் பயன் படும் முறையில் நிர்வாகம் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இதை நல்ல முறையிலே ட்ராப்ட் பண்ணினவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

SRI M. S. SELVARAJAN: துணைத் தலைவர் அவர்களே, இந்த சிடி முனிசிபல் திருத்த மசோதா முடிவாக சட்டமாகும் இந்தத் தருணத்தில், இந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது என்ற வார்த்தையால், இந்த நகர முழுவதிலும், மூலை முடுக்குகளில் கூட இருக்கும் ஏழை எளியவர்களும், எல்லோரும் இந்த அரசாங்கத்தை வாழ்த்துவார்கள் என்பதில் ஐயமில்லை. புதிய வாழ்வு ஏற்படும் என்ற நம்பிக்கை வரும். இத்தகைய புதிய சீர்திருத்தப் பட்ட சட்டத்தின் மூலமாக, இன்றுள்ள பல குறைபாடுகளும் நிவர்த்திக்கப் படும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது.

நிர்வாகத்திலுள்ள பல குறைகளையும் போக்க இன்னும், நிர் வாகத்தைப் பொறுத்த மட்டில் பலமாதிரிப்பட்ட திருத்தங்கள் தேவை என்று நண்பர்கள் எடுத்து சொன்னார்கள். அவைகளை யெல்லாம் ஜாக்கிரதையாகப் பரிசீலிக்க வேண்டும். அப்படிப் பரிசீலனை செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன். இந்த சென்னை

14th November 1961] [Sri M. S. Selvarajan]

நகரத்தில் வாழ்பவர்களில் பாதிப்பேர் ஹோட்டல்களையே நம்பி வாழ்பவர்கள். வந்து போகக் கூடியவர்கள் ஆயிரம் ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். இத்தகைய தலைநகரம் பெருமைக்குரியதாக இருக்கவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. சென்னை நகரம் இது வரைக்கும் குறிப்பிட்ட கட்டடங்களாலும், ரஸ்தாக்களாலும் அழகுப் பெயருக்கு உரித்தானதாக இருந்தது. ஆனால், வளர்ந்து வந்துகொண்டிருக்கும் சென்னை இனிமேல்தான் எந்த அளவுக்கு புதிது புதிதாக தோன்றி வரக்கூடிய தெருக்களும், பேட்டைகளும், அவசர அவசரமாக ஜனங்கள் குடியேறிவரும் இடங்கள், இன்றைக்கு நரகம்போல் இருக்கும் குடிசைவாழ் மக்களின் வாழ்வு வாழ்பவர்களுக்கு நல்வாழ்வு கொடுக்கும் இடங்களாகப் போகும் நிலையைப் பார்க்கப் போகிறோம். இன்றைக்குக் குளங்களும் குட்டைகளும் மேடிடப் படுகின்றன. பள்ளப் பகுதிகள் குப்பை கூளங்களால் அவசர அவசரமாக புதிது படுத்தப் படுகின்றன. ஆனால், அந்தக் காரியத்தை பாழாக்குவது மழைகாலம்தான். அப்பொழுது இந்தத் தெருக்களிலும், ஊர்களிலும், பாதியளவு தண்ணீரில் மூழ்கியிருக்கின்றன. அதை ஒரு சிடி கார்ப்பொரேஷன் தனித்து இருந்து தானே கவனிக்க முடியும் என்று நான் நம்பவில்லை. அரசாங்கம் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து பெரிய ரஸ்தாக்களைப் போடுவதிலும், சரி செய்வதிலும், அரசாங்கமும் பங்குபெற்று, சிடி கார்ப்பரேஷன் நிர்வாகிகளோடு, அரசாங்க எஞ்ஜினியர்களும் சேர்ந்து இந்த விஷயங்களில் கவனம் செலுத்த முடியுமா என்று ஆராயவேண்டும். ரஸ்தாக்கள் அமைப்பது போன்ற காரியங்கள் இவர்களின் ஜாயிண்ட் பொறுப்பாக இருக்க வேண்டும். அது மிகவும் அவசியம். இன்று பார்க்கக் கூடிய குறைகளை நீக்கி நல்லமுறையில் பணி செய்ய அது ஒன்றுதான் வழி என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

ஆயிரம் ஆயிரம் மக்கள் வந்து போகும் இந்த ராச்சியத் தலைநகரில், குக்கிராமங்களில், சாதாரண முனிசிபல் நகரத்தில்கூட இல்லாத குறைகள் இருக்கின்றன. இங்கே "புட் அடல்டரேஷன்" எல்லை மீறி யிருக்கிறது. சாதாரண முனிசிபாலிடி கவனிக்கும் அளவில் கூட இங்கே கவனிக்கப் படுவதில்லை; கேசுகளும் போடவில்லை, குற்றவாளிகளும் தண்டிக்கப் படுவதில் கவனம் செலுத்தப் படவில்லை யென்ற குற்றச் சாட்டுக்கு கார்ப்பொரேஷன் நிர்வாகம் இலக்காகி இருக்கிறது. நகர சுகாதாரத்தை, பல ஹெல்த் ஆபீசர்கள் சேர்ந்து பார்க்க வேண்டும். இன்றையதினம், உணவு கலப்படத்தைத் தடுக்க, அவசியமானால் தனிப்பட்ட அதிகாரிகளை நியமித்து ஜாக்கிரதையாகப் பார்த்து நல்ல நிலைமையை உண்டுபண்ண வேண்டும். ஒரு காபி அருந்துவதைக் கூட விஷம் அருந்துவதுபோல், குடிக்க வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு உணவுப் பண்டத்திலும் கலப்படம் இருக்கிறது. இவை யெல்லாவற்றையும் சுகாதார ஆபீசர்கள் கவனித்து மக்களுக்குப் புது வாழ்வு அளிக்க வழிவகை செய்ய வேண்டும். இதற்கென்று

[Sri M. S. Selvarajan] [14th November 1961

தனித்தனியாக அதிகாரிகள் நியமித்தாகிலும் கவனம் செலுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும், என்பது எனது பணிவான வேண்டுகோள்.

இன்றைக்கு இந்த மசோதா சட்டமாகும் வேளையில், இந்த ராஜ்யத்தில் இருக்கும் 3 கோடி மக்களுக்கும், நகரில் இருக்கும் பல லட்சக்கணக்கான மக்களுக்கும் ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. உண்மையாகவே இந்தச் சட்டத்தினால் நல்ல பலன் கிடைக்கும், கார்ப்பொரேஷன் நிர்வாகம் திருந்தும் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, இந்த மசோதா நிறைவேறுவதை நான் பெரிதும் ஆதரிக்கிறேன்.

* **Sri K. ANBAZHAGAN:** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகராட்சி நிர்வாக திருத்தச் சட்டம் இங்கே நிறைவேற்றப்படும் நேரத்தில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்; அவை இந்தச் சட்டத்திலே இடம் பெறும் என்ற நம்பிக்கையோடு அல்ல, பல்வேறு கருத்துக்களையும் சொல்லுவதால், இந்தச் சட்டத்தை நடைமுறையில் கொண்டுவந்து நிர்வகிப்பதில் இதை கவனிக்கப்படும் என்று எதிர்பார்க்கின்ற காரணத்தினால் ஏறத்தாழ, இரண்டு மூன்று ஆண்டுகளாகவே இந்த மசோதா பல்வேறு கட்டத்தில் பரிசீலனை செய்யப்பட்டு நிறைவேறுகிறது என்றாலும், இது சட்ட மன்றத்தின் முழுப் பரிசீலனை பெற்று விட்டது என்று இன்றையதினம் குறிப்பு எழுதிக்கொள்ள முடியும் என்றாலும், மனசாட்சிக்குத் தோன்றும் வகையில், இது முழுப் பரிசீலனை பெறமுடியவில்லை என்றுதான் கருதுகிறேன். ஏன் முழு பரிசீலனை பெறவில்லை என்று கருதுகிறேன் என்றால், அரசாங்கச் சார்பில் கூட இன்றைக்குத் திடீரென்று பல திருத்தங்கள் தரப்பட்டு, அவைகளிலே அதிகக் கருத்து வேறுபாடு இல்லை, உடன்பட்ட கருத்துக்கள்தான் உள்ளன என்று சொன்னாலும், அவைகளைத் தெளிவாக ஆராய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. வார்த்தை திருத்தங்கள் ஒரு புறம் இருக்க, நிர்வாக முறையில் செய்துள்ள முக்கியமான திருத்தங்கள் போதுமா அல்லது இன்னும் அதிகத் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமா என்று ஆராயவேண்டும். அப்படி ஆராய்கிற வகையில், ஆலோசனைகள் சொல்வதற்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்று கருதுகிறேன்.

மற்றொன்று, சென்னை நகரில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நகராட்சி நிர்வாகப் பொறுப்பில் இடம் அளிக்க வேண்டும், வாக்கு அளிக்கும் உரிமையோடு இடம் இல்லாவிட்டாலும், வோட்டு செய்ய உரிமை இல்லை என்று சொன்னாலும், ஆலோசனை சொல்லக்கூடிய இயல்பான வாய்ப்பாவது இருக்க வேண்டும். அதற்கு, சென்னை நகராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையோடு, சட்ட மன்ற உறுப்பினர்களையும் சேர்த்து குழு அமைப்பது இயற்கை. இதை ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டும் எடுத்துச் சொல்லவில்லை; எல்லாக் கட்சியினரும் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். கனம் நிதி அமைச்சர் சொல்லலாம், அடுத்த தடவை இருக்கப்போகிறவர்கள் அதை கவனிக்கட்டும் என்று எப்படி எண்ணிப் பார்த்தாலும், சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், சட்டமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி மன்றத்துடன் தொடர்பு பெற்றுப் பணி செய்ய வாய்ப்பு வேண்டும். இதனால் நகராட்சி நிர்வாகம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் தடுத்துக்கொள்ள முடியும். இவர்களுக்கு ஆலோசனை கூறவும் வாய்ப்பு அளிக்க முடியும். ஏற்கனவே ஒரு கருத்து இருந்தது, இப்படிப்பட்ட வட்டக் குழுக்களில் ஒரு பெண்மணியாவது இடம் பெற வாய்ப்பு இருக்கவேண்டும் என்று; எப்படி தாழ்த்தப்பட்ட மக்கள் இயல்பாக தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், அவர்களில் ஒருவர் பிரதிநிதியாக இருக்கவேண்டும் என்ற கருத்து இருக்கிறதோ, அதைப்போலவேதான் எந்தப் பகுதிகளிலும் போட்டியிட்டு வரா விட்டாலும் பெண்களில் ஒருவர் மாநகராட்சி மன்ற வட்டக் குழுவில் இடம் பெறுவது எந்தவிதத்திலும் பயனுள்ளதாக இருக்குமே தவிர, இடையூறு ஆகாது. என்ன காரணத்திற்காகவோ ஆளும் கட்சித் தலைவர் அவர்கள் அவைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

14th November 1961] [Sri K. Anbazhagan]

உண்மையாகவே இன்றையதினம், சென்னை நகராட்சி மன்ற உறுப்பினர்கள் மீது, நகராட்சி மன்ற நிர்வாகத்தைப்பற்றி அதிகமாக, ஆத்திரப் படுகிறார்கள் ஆளுங்கட்சி அங்கத்தினர்கள். என்ன காரணத்தினாலோ, எந்தக் கட்சி ஆட்சியில் இருக்கிறது என்ற உணர்ச்சியால் அவர்கள் இப்படிக் குறைப்படுகிறார்கள் என்று எண்ணுகிறேன். எல்லாக் குறைகளையும்விட நிதி போதுமான அளவு இல்லாததால்தான் எந்த அளவு மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமோ அந்த அளவு வசதிகள் செய்து தர முடியவில்லை யென்பதை புள்ளிவிவரங்களைப் பார்த்தால் எவரும் ஏற்றுக் கொள்ளுவார்கள். அந்த வகையிலேதான் இன்று காலையிலே பேசிய நண்பர் திரு சி. ஆர். ராமசாமி அவர்கள்கூட என்ன இருந்தாலும் மாற்றாந்தாய் என்று சொல்லுகிற முறையிலே நான் அரசாங்கத்தாலே மாநகராட்சி மன்றம் நடத்தப்பட்டு வருகிறது என்ற கருத்தைத் தெரிவித்தார். மாநகராட்சியினர் எடுத்துச் சொன்ன பல திட்டங்களை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால்தான் இந்தக் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. பெரிய திட்டங்களைத் தானே நிறைவேற்றுவதற்கான வசதி அந்த நிர்வாகத்திற்கு இல்லை என்பதைத் தெரிவித்தார். எந்தக் குறையைப்பற்றி பேசுவதாயிருந்தாலும், அந்தக் குறையை போக்கும் முழு பொறுப்பும் மாநகராட்சி மன்றத்திற்குத்தான் இருக்கிறது என்று தீர்மானிக்க முடியுமா? அப்படித் தீர்மானிக்க வேண்டுமானால் சென்னை அரசாங்க நிர்வாகத்திலே இருக்கிற தலைசிறந்த இரண்டு அல்லது மூன்று அதிகாரிகளை இவைப்பற்றி ஆராய்வதற்கென்று ஒரு குழுவாக நியமித்து ஆராய்ந்துப் பார்த்து தீர்மானிக்கலாம்.

மற்றொன்று, மாநகராட்சி மன்ற நிர்வாகத்திலே பெரும் பொறுப்புள்ளவர் ஆணையாளர்தான். அந்த நிர்வாகத் துறையில் அதிக அக்கரை எடுத்துக்கொள்ளக்கூடியவரோ, அதைப்பற்றி 24

மணி நேரம் சிந்திக்கக் கூடிய வாய்ப்பு உள்ளவர்களோ வேறு யாரும் இல்லை. எனவே அவருக்கு சற்று அதிக அதிகாரம் இருப்பதில் தவறு இல்லை. ஆனால் அந்த அதிகாரங்கள் இருந்தும் கூட, நகராண்மைக் கழகத்தின் பல நிர்வாகக் குழுக்களுடன் நன்றாகச் செயல்பட வேண்டும் என்றால் ஸ்டாண்டிங் கமிட்டிகள் இருந்தது போல, ஏற்படவிருக்கும் மத்திய கணக்குக்குழு ஆகியவற்றோடும் வட்டக்குழுக்களோடும் மாநகராட்சி மன்ற ஆணையாளர் எந்த அளவுக்கு ஒத்துழைக்கக் கூடிய நல்வாய்ப்பு ஏற்படுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் நிர்வாகம் சிறக்க முடியும். மாநகராட்சி ஆணையாளர் சிலர் நல்ல முறையிலே ஒத்துழைக்கப் பழகியிருக்கிறார்கள். ஆனால் அப்பதவிக்கு வரக்கூடிய எவரும் அந்த முறையிலே நடந்துக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னராக உள்ள நிர்வாக முறையில் ஸ்டாண்டிங் கமிட்டிகளுக்கு நிலைக்குழுக்களுக்கு செல்வாக்கு மிக அதிகமாயிருந்தது. ஒரு குழுவுக்கு மிகுந்த அதிகாரம் இருந்த காரணத்தினால் சில குறைபாடுகள் ஏற்படுகிற பொழுது அந்தக் குறைபாடுகளை நிறைவு செய்வதற்கு அந்த ஸ்டாண்டிங் கமிட்டி தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி தன் கருத்தை வற்புறுத்த முடிந்தது. இப்பொழுது ஏற்பட்டிருக்கிற சீர்திருத்தத்தின் காரணமாக அந்தத் தொல்லைக்கு இடமிராது என்று நம்புகிறேன். மத்திய குழுவாக இருந்தாலும் அதன் அதிகாரம் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய குழுவினுடைய தலைவராக வருபவரும், சென்னை மாநகராட்சி மேயராக வருபவரும், ஆணையாளராக உள்ளவரும், இந்த மூன்று பேர்களுக்கும் இடையிலே நல்ல ஒத்துழைப்பு இருக்குமேயானால், அந்த மூன்று பேரும் ஒருவருக்கொருவர் கலந்து பேசி கடமைகளை நிறைவேற்றுவதானால் மாநகராட்சி மன்றத்திலே எந்தத் தனிப்பட்ட குழுவும் அதிக செல்வாக்குப் பெற்று பொதுவான கடமைகளைத் தடுத்து நிறுத்த முடியாது என்ற நல்ல நிலைமை தோன்றியிருப்பதை நான் உளமாற வரவேற்கின்றேன். மாநகராட்சி மேயராக இருப்பவர் ஒரு குழுவுக்கு—பணியாளர் குழுவுக்கு—ஏன் தலைவராக இருக்கவேண்டுமென்று நான் கேட்டது மேயர் தகுதியைக் குறைப்பதற்காக அல்ல. மேயர் என்று சொன்னால் நகரத்தின் தலைவர் என்ற முறையில், பொது மக்களுக்கான பொதுவான கடமைகளை அதிகாரிகளுக்கு அறவித்து நிறைவேற்றும்படி தூண்டுவதற்கும் மாநகரின் தந்தையாக, பிரதிநிதியாகப் பல பொதுக்கடமைகளை ஏற்கிறார். ஆனால் ஒவ்வொன்றையும் கவனித்து சீர்தூக்கிப்பார்த்து, ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்யவேண்டிய கட்டத்திலே அமையக்கூடியவர் இப்பொழுது மத்திய குழுவின் தலைவராக வருகிறவர். அவர் ஏறத்தாழ மூன்றாண்டு காலமாக தொடர்ந்து தலைவராக இருக்கக்கூடும் என்ற காரணத்தினாலே, நிர்வாகத்துடன் அதிகத் தொடர்பு கொண்டு தொடர்ந்து பணி ஆற்றுவதற்கான வழி வகையினை மத்தியக்குழு தலைவர் கவனிக்க முடியும். ஏறத்தாழ எந்த அளவுக்கு முனிசிபல் சேர்மன் செயலாற்றுகிறாரோ அந்த அளவு செயலாற்றும் வாய்ப்பு மத்தியக்குழு தலைவருக்குக் கிடைக்கும். மேயர் நகரத்தின்

தந்தை, நகரத்தின் பெருமைக்கு அடையாளமாக விளங்குபவர், நடைபெறும் முக்கியமான பொதுக்காரியங்களை செயல்படுத்தி தூண்டுபவராக அமைய முடியும். கமிஷனர் இந்தப் பொறுப்புக்களை நிறைவேற்றுகிறவராக இருக்க முடியும். எனவே இப்படிப்பட்ட சீர்திருத்தம் வருகிறபொழுது, இந்தமாதிரி குறைகள் இருக்குமேயானால், அந்தக் குறைகள் களையப்படும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனால் ஒத்துழைப்பு மிக மிக முக்கியம். அந்த ஒத்துழைப்பு வளர வேண்டுமானால் தமிழ்நாடு அரசாங்கம் மாநகராட்சி மன்றத்திற்கு எவ்வளவு அதிகமாக உதவி செய்ய முன்வருகிறதோ எந்த அளவிற்கு புதிய திட்டங்கள்—அதிகாரிகள் மூலமாக பரிசீலிக்கப்பட்டு தரப்படுகிற பணிகள்—நிறைவேற்றப்படுவதற்கு ஒத்துழைக்கிறார்களோ அந்த அளவுக்கு நிர்வாகம் குறைவற்றதாகும். மேலெழுந்தவாரியாக இந்தச் சீர்திருத்தங்கள் நடைபெற்றால் மட்டும் போதாது. அங்கே நிர்வாகத்தில் பணியாற்றுகிறவர்கள் பல்வேறு குறையுடைய நிலையில் இருக்கிறார்கள். அந்த நிர்வாக அமைப்பு முழுவதும் சீர்திருத்தப்பட்டு ஆகவேண்டும். அதைத்தான் நான் **" Re-organisation of the Corporation Machinery "** என்று சொல்ல விரும்புகிறேன். நிச்சயமாக அது சீர்திருத்தப்பட்டு ஆக வேண்டும். பத்து வட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆங்காங்கே ஆலோசனை நடைபெறும் கட்டத்தில் அந்த ஆலோசனைகளை நிறைவேறுவதற்கு தனித்தனி செயலாக அமைப்புகள் பணியாற்றுகிற அமைப்புகள், ஏற்பட வேண்டும். அவைகளுக்குக் கட்டிட வசதிகள் தேவைப்படும். கட்டிட வசதிகள் மட்டுமல்லாமல் ஆங்காங்கே தனி நிர்வாக நிலைமை ஏற்பட்டால் ஏறத்தாழ பத்து இடங்களில் கமிஷனருடைய நேரடி நடவடிக்கைகள்—நேரடி நடவடிக்கை என்று நான் சொல்வது நேரடி அரசியல் நடவடிக்கை அல்ல நேரடியாக நிர்வாகப் பொறுப்பை நிறைவேற்றுவதைக் குறிப்பிடுகிறேன்—தக்க பயனளிக்க முடியும். அப்படிப்பட்ட நேரடி மேற்பார்வையால் முழுப்பயன் ஏற்படவேண்டுமானால் ஒவ்வொரு வட்டக் குழுவுக்கும் ஒரு அதிகாரி, ஏறக்குறைய அஸிஸ்டண்ட் கமிஷனர் என்று குறிப்பிடப்படுகிற அந்தப் பெயரோடு அல்லது அதற்கு அடுத்த நிலையில் உள்ள அதிகாரியின் பெயரோடு, நிர்வாக உரிமையோடு இருக்கவேண்டும். அப்படி இருக்கவேண்டுமானால் இந்தச் சட்டத்திலே திருத்தங்கள் செய்தாகவேண்டும்.

கமிஷனருக்குத் துணை செய்வதற்கு வேண்டுமானால் ஒரு டெபுடி கமிஷனரையோ, அல்லது வட சென்னை, தென் சென்னை என்று பிரிப்பதாக இருந்தால் இரண்டு டெபுடி கமிஷனர்களோ துணை செய்வதற்கு இருக்கலாம். ஆனால், நிர்வாக முறையிலே ஏறத்தாழ அஸிஸ்டெண்ட் கமிஷனர் என்ற நிலையில் உள்ளவர்கள் பெரும்பாலும் ஒரு வட்டத்திற்கு ஒருவர்—வட்டம் என்றால் டிவிஷனை நான் சொல்லவில்லை—இப்பொழுது அமைக்கப்படுகிற பத்து வட்டங்களுக்கும் ஒவ்வொருவர் அமர்த்தப்படவேண்டுமென்று விரும்புகிறேன். தேர்தலுக்குப் பின்னர்தான் இது செயல்படுவது இயற்கை. அதற்கு முன்னாலே இருக்கிற குழுக்களை கலைப்பதானால்

[Sri K. Anbazhagan] [14th November 1961

அதற்குரிய எல்லா முன்னேற்பாடுகளையும், என்னென்ன கடமைகளை அரசாங்கம் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் செய்துவிட்டுத்தான் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் மாற்றத்தை எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்படுத்தலாம் என்ற கருத்துக்குச் சட்டத்திலே இடமிருக்கிறது. மறுபடியும் ஒரு தேர்தல் எதிர்பார்க்கப்படும் கட்டத்தில், நாட்டிலே நடக்கப்போகும் பொதுத் தேர்தலைப் பற்றி நான் சொல்லவில்லை; மாநகராட்சி மன்றத் தேர்தலைப்பற்றியே சொல்லுகிறேன். அடுத்த நகரசபை தேர்தல் 1962-வது ஆண்டு ஏப்ரல் மாதத்திலே நடைபெற வேண்டியது. தள்ளிப் போடப்பட்டு 1962 நவம்பரிலே நடைபெற இருக்கிறது. ஏறத்தாழ இன்னும் ஓராண்டு காலம் இருக்கிறது. அந்தத் தேர்தலை ஒட்டியே இந்தத் திருத்தச் சட்டத்தை அமுல் படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கமும், அரசாங்கத்தின் ஆலோசனை மீது மாநகராட்சி மன்றமும் எடுத்துக்கொள்வதே முறையாகும். சட்டம் திருந்திய முறையிலே வருகிறதென்று சொன்னாலும், அதைச் சிறந்த முறையிலே நிறைவேற்றும் பொறுப்பு அரசாங்கத்திற்கே. அதற்கான தக்க ஏற்பாடுகளைச் செய்வதற்கு அவர்கள் முன்வரவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Madurai and Tiruchi Co-operative Societies have asked for this. Now there is a proposal coming from the private sector. So the Government have to examine and decide whether the private sector could take it up because the allotment under the Third Plan is not adequate for this purpose.

SRI P. S. CHINNADURAI : *இந்த தொழிற்சாலையை கூட்டுறவு முறையில் அமைத்தால் நலமாக இருக்காதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : *கூட்டுறவு முறையில் அமைப்பது என்றால் அரசாங்கமே அந்தச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டும். கடனாகவோ, மான்யமாகவோ, ஷேர் காப்பிட்டலாகவோ மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு 15 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு பிளாண்டுக்கே 30 லட்சம் ரூபாய் வேண்டியிருக்கிறது.*

---

[a] Printed as Appendix V on page 646 infra.

15th November 1961]

Rubber plantations

* 2103 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) Area of rubber planted by the Forest Department during the last three years;

(b) the cost per acre; and

(c) the revenue from the Kumri lease per acre in the areas where rubber has been planted per year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Madras Forest Department began planting of rubber in the forests of Kanyakumari district only from 1960–61. An extent of 149 acres was planted with rubber during 1960–61 and another area of 446 acres has been planted by the middle of August 1961.

(b) The following is the expenditure incurred per acre of Rubber Plantations (raised departmentally) during 1960–61 :—

In Kumri area—Rs. 235 per acre.

In non-Kumri area—Rs. 410 per acre.

(c) An avearge revenue of Rs. 5 per acre and Rs. 8.73 per acre was realised from Kumri leases in 1960–61 and 1961–62 respectively.

SRI T. T. DANIEL : May I know the total estimated cost of each of the rubber plantations and also whether the 3,000 acres will be planted during the course of the Third Plan period?

THE HON. SRI M. BHAKTAVATASALAM : I have indicated the cost of plantation per acre and 600 acres have been cultivated. Ultimately 3,000 acres will come under rubber plantation.

Recommendations of the Indian Central Oilseeds Committee

* 2104 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state the steps taken to implement the recommendations of the Indian Central Oilseeds Committee for—

1. The sanction of the scheme for large scale multiplication of improved stains of castor; and

2. The extension of the scheme Intensive Breeding of Groundnut in Madras State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The scheme was sanctioned in June 1960 and started in October 1960.

(b) The extension of the scheme has been sanctioned at a total cost of Rs. 65,844 for a period of three years from 30th June 1960.

[15th November 1961

Financial assistance to Ceylon repatriates

* 2105 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the allotment made for rendering financial assistance to barbers, washermen, tailors, soap-makers and artisans district-wise repatriated from Ceylon;

(*b*) when it was sanctioned; and

(*c*) the amount utilised so far?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The allotment for grant of loans to artisan-repartiates from Ceylon was Rs. 500 in 1959-60 and Rs. 37,500 in 1960-61. District-wise allotment is not made. The artisans among the Ceylon Repatriates, wherever settled, are eligible for the loan.

(*b*) Orders were issued in June 1959 authorising an advance of Rs. 500 to each of the artisans among the repatriates from Ceylon, namely, tailors, blacksmiths, soap-makers, barbers and dhobies to enable them to pursue their skilled avocations in India. This concession was extended to goldsmiths and sculptors in April 1960.

(*c*) A sum of Rs. 36,785 has been utilised so far.

SRI M. S. SELVARAJAN : On what basis is the loan given?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The idea is whatever be the requirements, these loans could be given up to Rs. 500 so that they might be able to carry on the avocations which they were carrying on before.

SRI M. S. SELVARAJAN : Is it not the intention of Government to disburse these loans on personal security and has it been done or have the officials insisted upon getting other securities also instead of personal security?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information about all these. If the hon. Member could give me particulars, I will look into it.

Chillies (export)

* 2106 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri   கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இலங்கைக்கு மிளகாய் வத்தலுக்கு தாராள ஏற்றுமதி (free export) கொடுத்திருப்பதால், மிளகாய் வத்தல் விலை குறைந்து விவசாயிகளுக்கு ஏராளமாய் நஷ்டமேற்பட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா?

(இ) இனிமேல் மிளகாய் வத்தலுக்கு ஏற்றுமதி லைசென்சு (restricted export)-ன் கீழ் கொண்டுவரப்படுமா?

15th November 1961]

(உ) அந்த ஏற்றுமதி லைசென்சு கூட்டுறவு சங்கங்களுக்கும் கொண்டு வரப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) This is a matter for the Central Government to decide and

(உ) Does not arise.

Temples (renovation)

* 2107 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) எத்தனை கோவில்களில் திருப்பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) அவைகளின் வேலை என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) *and* (இ) For 254 temples Thiruppani Committees have been constituted. These committees attend to the repairs and renovation of temples.

SRI K. VINAYAKAM : In the matter of renovation of the temple at Tiruvalangadu, Tiruttani taluk, when would the work be started? Was the necessary amount made available for this purpose? Was any committee constituted for this purpose?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No committee has been constituted. The Endowments Board and the Board of Trustees will take it up. There is a Tiruppani Committee and the Hon. Leader of the Opposition is a member of that committee. The taking up of the work has been delayed on account of want of an engineer who could prepare the plans and scrutinze them. The service of an Assistant Engineer has been asked for from the Public Works Department. As soon as the Engineer is made available, the work will be taken up.

SRI K. B. S. MANI : ஸார், இந்தத் திருப்பணி குழுக்களுக்கு 9-00 a.m.
போர்டார் ஏதாவது இப்படி எந்தெந்தக் காலத்திலே, எதை எதைச் செய்ய வேண்டுமென்று அந்தந்தக் கோயில்களுக்கு குறிப்புக்கள் கொடுத்து இருக்கிறார்களா? அப்படி கொடுத்திருந்தால், அந்தக் குறிப்புகளிலே சாஸ்த்ரீய முறைப்படி அதாவது கோயில்களிலே அமைக்கப்பட்டிருக்கின்ற சாதாரண மண்தரைகள், மற்றும் உருவச் சிலைகள் செய்யப்படுகின்ற மாடல் போன்றவைகளை மாற்றுவது போன்றவைகளைத் தடுக்க வேண்டுமென்று குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பழைய சிற்பங்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதுதான் முக்கியமான கருத்து. அதற்குக் குந்தக இல்லாமல் பழுது பார்க்கும் வேலை செய்யத்தான் இப்போது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதன் மேல் பார்வையை அறநிலைய பாதுகாப்பு இலாகாவினர் பார்த்துக் கொண்டு வருகிறார்கள். அந்த வகையிலேதான் இது கவனிக்கப்பட்டு வருகிறது.

[15th November 1961

SRI N. MARUDACHALAM: ஸார், இந்தத் திருப்பணி கமிட்டியிலே எத்தனை பேர் அங்கம் வகிக்கிறார்கள்? யார் யார் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: திருப்பணி கமிட்டி என்று ஒன்றில்லை. அந்தந்த தேவஸ்தானங்கள் இருக்கக்கூடிய இடங்களைச் சார்ந்தவர்கள் சிரத்தை எடுத்துக்கொண்டு, அந்த தேவஸ்தான தர்மகர்த்தரின் மேல் பார்வையில் அங்கீகரிக்கப்பட்டு திருப்பணி கமிட்டி அமைக்கப்படுகிறது. அவர்கள் இந்த வேலையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

SRI K. VINAYAKAM: Generally speaking most of the ancient temples in our state carry some of the ancient writings on their walls which indicate when it was constructed, for whom was it constructed; thus the age of the temple is indicated. Would the Government pass on instructions to these Tiruppani Committees not to spoil those writings by white-wash which is the order of the day and which is now fast running in practice.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Strict instructions have been issued and the concerned authorities are reminded about them now and then not only that those ancient writing should not be covered by white-washing but that our sculptural works also should not be affected by white-washing. Apart from this, so far as inscriptins are concerned I may tell the hon. Member that these inscriptions have almost been taken out. Only they have to be edited and published.

SRI K. B. S. MANI: இந்த கோயில்களிலே இருக்கின்ற சிற்பங்களை மாற்றியமைக்காமல், இப்போதுள்ள கலாசார முறைப்படி, சாஸ்திரிய முறைப்படி அதைக் கற்றுணர்ந்த கல் தச்சரை வைத்துத்தான் செய்யப்பட வேண்டுமே அல்லாது, இப்போது நவீன முறைப்படி செய்யக்கூடிய விதத்தில் செய்தால், அந்த பழைய கலாசார முறை கெட்டுவிடும் என்பதை அனுசரித்து, அவர்களை உபயோகித்து இதைச் செய்வதற்கான உத்திரவை போர்டார் இந்த பரிசீலனைக் குழுவிற்கு அனுப்புவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படி ஒன்றுமில்லை. பழைய சிற்பக் கலைகள் சீராகப் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது தான் இதிலே முக்கியம். அதை யார் செய்கிறார்களோ, அவர்களை வைத்து இதைச் செய்யலாம்.

SRI M. D. THIAGARAJA PILLAI: தலைவர் அவர்களே, இப்போது அநேக திருப்பணி கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே எஸ்டிமேட் தயார் செய்வதற்கு என்ஜினியர்கள் இல்லாததால், டிபார்ட்மெண்டிலே உள்ளவர்களால் இந்த வேலையைச் செய்ய முடியாததால், காலதாமதமாகிறது. ஆகவே, ஒரு என்ஜினியரை இதற்கென்று நியமித்தால், எல்லாத் திருப்பணி வேலைகளையும் சீக்கிரத்தில் செய்வதற்கு முடியும்.

15th November 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: சற்று முன்பு இதைத் தான் கூறினேன். பி.டபிள்யூ.டி. இலாகாவிலிருந்து ஓய்வு பெற்ற என்ஜினியர்களை எடுத்துக்கொள்ளாமல்; இப்போது சர்விசிலே உள்ளவர்களை எடுத்துக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி பி.டபிள்யூ.டி. இலாகாவைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் கிடைத்ததும், அதே மாதிரி செய்யப்படும்.

Industrial Co-operative Bank

* 2108 *Q.*—SRI M. KALYANASUNDARAM, SRI S. M. ANNAMALAI, SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) when the Industrial Co-operative Bank would commence functioning; and

(*b*) what would be its functioning?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*): The Madras State Industrial Co-operative Bank has been registered and it has started working with effect from 13th September 1961. The Bank will function effectively from 1st April 1962 after the formalities regarding the nomination of Directors, etc., are finalized. Its main function will be to finance the existing Industrial Co-operatives and those to be started in future, as well as small-scale industrialists, artisans and entrepreneurs in the State, who are eligible for assistance under the State Aid to Industries Act. The financial assistance to be given by the Bank will be in the shape of loans. The bank will also carry on general banking business.

SRI S. M. ANNAMALAI: ஸார், சர்க்காருடைய உதவி எந்த அளவில் இருக்கும் என்று சொல்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதிலே மொத்த ஆதரைஸ்ட் ஷேர் காபிடல் 30 லட்சம் ரூபாய். 100 ரூபாய்க்கு ஒரு ஷேர் மேனிக்கு 30,000 ஷேர். 100-க்கு 51 ஷேர் கொடுக்கப்படுகிறது. அதாவது 15,30,000 ரூபாய். இதை சென்னை அரசாங்கம் அளிக்கக்கூடும்.

Public meetings

* 2109 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொதுக்கூட்டங்கள் போட என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன?

(இ) அதற்கான காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) According to section 71 (xv) of the Madras City Police Act, 1888 and section 3 (10) of the Madras Towns Nuisances Act, 1889, a licence is

[15th November 1961

necessary for the use of loudspeakers in public places. There is no restriction on public meetings as such, apart from the conditions attached to loudspeaker licences.

(b) Does not arise.

SRI K. VINAYAKAM: At present according to the Police Standing Orders, only one public meeting could be conducted in one police division. One police division comprises about 10 corporation divisions. The Hon. Minister for Home was pleased to assure us in this House previously that that rule would be relaxed and more meetings could be conducted in one division. Was this assurance given effect to? Were instructions passed on to the concerned authorities to give licences for more meetings in one division at one time?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: முன்பு 10 இடங்களிலே ஒரே சமயத்தில் கூட்டங்கள் நடத்தலாம் என்றிருந்ததை, இப்போது 40 இடங்களிலே கூட்டங்கள் ஒரே சமயத்தில் நடத்தலாம் என்று செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த விதிகள் தளர்த்தப்பட்டுத்தான் இருக்கிறது.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, கூட்டம் நடத்துவதற்கு போலீசாரிடம் அனுமதி பெறவேண்டியது ஒரு முறையாக இருக்க, ஒலிபெருக்கி வைத்துக்கொண்டு கூட்டம் நடத்துவது என்று சொன்னால், ஒலிபெருக்கியைக் கொண்டுவந்து வாடகைக்கு தருகிறவர்கள் தனியாக அனுமதி பெறவேண்டியிருக்கிறது. இரண்டு பேர்களும் அனுமதி பெற்றால்தான் கூட்டத்திற்கு ஒலிபெருக்கி கிடைக்கும் என்ற நிலைமை இருக்கிறது. கூட்டம் நடத்துகிறவர்களே ஒலிபெருக்கி வைத்துக்கொள்ளுவதற்கு அனுமதி கேட்டால், அதை வழங்குவதற்கு போலீஸ் இலாகாவினர் முன்வருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதைப்பற்றி எனக்கு விவரம் தெரியாது. கனம் அங்கத்தினர் அதைப்பற்றி எழுதி அனுப்பினால், அதை கவனித்து என்ன செய்யக்கூடுமோ அதைச் செய்யலாம்.

SRI P. U. SHANMUGAM: வெளி நகரங்களில் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு 'டிஒய்.எஸ்.பி.' உத்தரவு பெற்று லைசென்ஸ் பெறவேண்டியிருக்கிறது. அதை எஸ்.ஐ. அளவிற்கு குறைப்பதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் இருக்கிறதா? காரணம் எஸ்.ஐ. சிபார்சு செய்தால்தான் லைசென்ஸ் கொடுப்பார்கள். சில வேலைகளில் 'டிஒய்.எஸ்.பி.' ஊரில் இல்லாத காரணத்தினால் தாமதம் ஏற்படுகிறது. எஸ்.ஐ.-யே லைசென்ஸ் கொடுப்பதற்கு சர்க்கார் அனுமதி தருவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் இதைப்பற்றி எழுதி அனுப்பினால், அதை கவனித்து என்ன செய்யக் கூடுமோ அதை செய்யலாம்.

15th November 1961]

SRI K. ANBAZHAGAN: சென்னை நகரத்தில் ஏற்கனவே இருந்த விதிமுறைக்கு ஏற்ப சிற்சில இடங்களில் கூட்டங்கள் நடத்தலாம் என்ற ஏற்பாடு இருந்தது. இப்பொழுது 40 இடங்களில் கூட்டம் நடத்தலாம். சற்று தொலைவாக கூட்டம் நடத்துவதற்கு வசதியாக உள்ள சில இடங்கள் இருந்தால், அந்த இடங்களில் கூட்டம் நடத்துவதற்கு அனுமதி தருவதற்கு அதைப்பற்றி போலீஸ் இலாகாவினருக்கு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அதை நான் கூற வேண்டிய அவசியமில்லை. போலீஸ் இலாகாவே இதை கவனிக்கும்.

SRI V. K. KOTHANDARAMAN: தேர்தலை ஒட்டி. தேர்தலுக்கு முன்பு ஒரு மாத காலத்திற்காவது இந்த நிபந்தனைகளை யெல்லாம் தளர்த்துவதுபற்றி யோசிக்க முடியுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தேர்தலை ஒட்டி இந்த நிபந்தனைகள் கட்டாயம் இருக்கும். ஆகவே, அவைகளை எடுப்பதற்கில்லை. தேர்தல் நெருங்க நெருங்கதான் அதிக பரபரப்பும், தகராறும் வருகிறது.

SRI A. A. RASHEED: Sir, will the Government take pity on the peace-loving citizens and ban holding of public meetings in residential areas?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Restrictions on the use of loudspeakers are being enforced only with that view.

Tuticorin murder case

* 2110 Q.—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether all the culprits of the sensational Tuticorin Doctor family murder case were apprehended and taken into custody;

(b) if not, the reasons for the delay;

(c) whether the persons involved in the case has been charge-sheeted; and

(d) if not, the reasons for the delay?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a), (b), (c) & (d) The case is *sub-judice*.

Skimmed milk powder (malpractices in supply)

* 2111 Q.—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether any complaint was received by the Government regarding the allotment of skimmed milk powder to a non-existent ice-cream factory in a village in Kovilpatti taluk, Tirunelveli district.

(b) whether any enquiry was conducted in the matter; and

(c) if so, the findings thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) & (c) The matter is under investigation.

Caterpillar menace

* 2112 *Q.*—SRI P. K. MOOKIAH THEVAR : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இவ்வருடத்தில் (1960) எந்தெந்த ஜில்லாக்களில் எத்தனை ஏக்கர் நிலக்கடலைப் பயிர்கள் கம்பளிப்பூச்சி படையெடுப்பால் பாதிக்கப்பட்டன?

(இ) இதனால் எவ்வளவு நஷ்டம்?

(உ) இது விஷயமாக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) to (உ) A paper* is placed on the table of the House.

Misappriation of funds (Government Khadi Department).

*2113 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க கதர் இலாகாவில் பணம் கையாடல் நடைபெற்றதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

(இ) எவ்வளவு பணம் கையாடப்பட்டது?

(உ) எத்தனைபேர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Disciplinary proceedings have been and are being taken against Government servants in the Khadi department for misappropriation of Government funds.

(இ) The total amount involved in the misappropriation cases was about Rs. 22,280.

(உ) Disciplinary action has been and is being taken against 35 Government servants of the Khadi department who were involved in the cases referred to in the preceding clause.

SRI K. VINAYAKAM. Sir, apart from taking departmental disciplinary action against those who were responsible and punishing them for this misappropriation, would the Government think of the possibility of instituting criminal proceedings against them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Wherever it is necessary, criminal proceedings are also being taken.

* Printed as Appendix VI on pages 646-648 infra.

SRI K. B. S. MANI : இந்தப் பணக்கையாடலிலே ரூ. 22,000 சொச்சத்திற்கு, எத்தனை பேர்கள் அதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்? அதிலே கலந்திருப்பவர்கள் அத்தனை பேர்கள்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 35 பேர்கள் என்று முன்னமே சொன்னேன். நான் கொடுத்த புள்ளிவிவரப்படி இந்தப் பணக்கையாடல் ரூ. 22,280. லட்சக்கணக்கான ரூபாய்க்கு விற்பனை நடக்கிறது, விலை கொடுக்கிறதை வாங்கிக்கொண்டு கொடுக்கவேண்டும். அப்படி ஏராளமான டெபோக்கள் இருக்கின்றன. அவைகளில் விற்பனை செய்யும்பொழுது ரூ. 22,000 கையாடல் பற்றி கண்டிப்பாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இதை பெரிதுபடுத்துவதும் சரியல்ல.

Loans to Corporation of Madras

*2114 *Q.*—SRI M. D. THIAGARAJA PILLAI (on behalf of SRI N. R. THIAGARAJAN) : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை கார்ப்பரேஷனுக்கு சர்க்கார் கடனாகவும் மான்யமாகவும் 1959 ஏப்ரல் 1-ம் தேதி முதல் இதுவரை எந்தெந்த இனத்திற்காக எவ்வளவு பணம் கொடுத்தது?

(இ) அதில் செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (அ) & (இ) Particulars are being collected. A statement containing the particulars will be placed on the table of the House.

Corporation of Madras (shifting of Divisional Office, Saidapet).

* 2115 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether any mahazars have been received by the Government objecting to the shifting of the Divisional Office of the Corporation of Madras from Car Street, Saidapet, to K. P. Koil street, Saidapet?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : No mahazar in the matter has been received by the Government. However a report from the Commissioner, Corporation of Madras, has been called for and it is awaited.

SRI K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that the original Divisonal Office situated in Car street belongs to the Corporation and now there is a proposal to shut the Divisional Office to K.P. Koil street, which is a rented house?

[15th November 1961

The Corporation is incurring expenditure by vacating their own buildings and going to a new rented house at the instance of the Divisional Councillor, who is interested in getting that rent?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : I hear the information only now from the hon. Member. I have stated earlier that we have called for a report from the Commissioner and only after that I will be able to give a definite reply.

Government college (working hours)

* 2116 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of Government colleges which have changed over the working time to 9 a.m.?

THE HON. SRI C. SUBRAMANIAM : So far as information is available, nine Government colleges have changed over the working time to 9 a.m. Reports from other colleges are awaited.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware, Sir, that the students in the colleges welcome this changeover in the working hours since they get more hours for study in the evenings and if so, will the Government consider to extend the change to other colleges and schools also?

THE HON. SRI C. SUBRAMANIAM : On the basis of the experience gained during this year, this may be reviewed and decision taken next year.

Development of music and drama (First Five-Year Plan)

*2117 *Q.*—SRI A. R. MARIMUTHU : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) முதலாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் சங்கீத, நாடக வளர்ச்சிக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டது ?

(இ) எந்தெந்த வகையில் செலவு செய்யப்பட்டது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No amount was allotted.

(இ) Does not arise.

Roads (Udayarpalayam taluk)

*2118 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI T. K SUBBIAH) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூக்காவில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயும் எந்தெந்த ரோடுகள் போடத் திட்டமிடப்பட் டிருந்தன ?

(இ) அதன் மொத்த மதிப்பீடு தொகை எவ்வளவு ?

15th November 1961]

(உ) இதுவரை பூர்த்தியான ரோடுகள் எவை ?

(எ) மற்றவை எப்போது போடப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) to (எ) : A statement is placed on the table of the House.

SRI R. SRINIVASA IYER : Sir, is the Government aware that because of the non-bifurcation of these two panchayats, the working of the panchayats is at a standstill and even the Panchayat Union Council and the two panchayats have passed resolution requesting such bifurcation and because of the new Act there is some delay in passing orders? May I know, Sir, whether the resolution will be given effect to as early as possible?

THE HON. SRI C. SUBRAMANIAM : Decision has been taken that no bifurcation will take place till the next elections. Elections have taken place and panchayats have been constituted on the present basis. If bifurcation has to take place that will be just done before the Panchayat election.

House-sites for Harijans (Udayarpalayam Taluk)

*2119 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of Sri T. K. SUBBIAH : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 30—4—1959-ல் 329-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலை யொட்டி உடையார்பாளையம் தாலூகாவிலுள்ள 38 கிராமங்களில் எந்தெந்த கிராம ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகளு பட்டா வழங்கப்பட்டுள்ளன ?

(இ) இதுவரை கொடுபடாத கிராம ஹரிஜனங்களுக்கு எப் போது பட்டா வழங்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : A statement[b] is placed on the table of the House.

Kilapalur Panchayat (Udayarpalayam Taluk)

*2120 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of Sri T. K. SUBBIAH) : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூகா கீழப்பழூர் பஞ்சாயத்திலிருந்து கீழையூரையும் மேலப்பழூரையும் பிரித்து கீழையூர் பஞ்சாயத்தாக ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(இ) எப்போது இது விஷயமாக அரசாங்கம் உத்திரவு பிறப் பிக்கும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) No, Sir.

(இ) Orders have since been issued negativing the request of the villagers of Kilapalur revenue village.

a Printed as Appendix VII on pages 648-651 infra.
b Printed as Appendix VIII on pages 651-652 infra.

[15th November 1961

Schools (levying of fees)

* 2121 *Q.*—SRI N. MARUDACHALAM (on behalf of SRI N. K. PALANISAMI) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of fee levying schools in this State;

(*b*) number of teachers working in such schools;

(*c*) whether the revised scales of pay have been given to them; and

(*d*) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 44, Sir.

(*b*) 393, Sir.

(*c*) & (*d*) : It is not obligatory on the part of managements of fee levying schools to adopt the revised scales of pay prescribed by Government. However, 20 schools have adopted revised scales from 1st June 1960 and five other schools from 1st June 1961.

SRI K. VINAYAKAM : Sir, it is not obligatory upon the Government also to give the management teaching grant for teachers employed in the fee-levying schools because the fee-levying schools collect their own fees. Does it not amount to undercutting the wages if the Government allow the management to pay as they like without even falling in line with the new scales of pay that is now allowed to the teachers employed in Government schools?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no minimum wage application to the teachers. It is purely a question of contract as between the two parties. Nobody compels any teachers to go to fee levying schools.

Panchayat employees (salaries)

* 2122 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI K. R. VISWANATHAN) : Will the Hon. the Chief Minister be pleased to state the reason for not implementing the revised scale of pay for the Panchayat servants?

THE HON. SRI C. SUBRAMANIAM : Orders directing revision of scales of pay of the staff in Town Panchayats have already been issued by the Government.

Students from other countries

*2123 *Q.*—SRIMATHI S. HEMALATHA DEVI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

மலேயா, சிலோன், ஜாவா இதுபோன்ற வெளி நாடுகளிலிருந்து நம் மாகாணத்தில் (1) இஞ்ஜினீரிங், (2) மெடிகல், (3) இதர கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகள் எத்தனை பேர்?

15th November 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : The particulars are being gathered and they will be placed on the Table of the House as soon as possible.

SRIMATHI HEMALATHA DEVI : தலைவர் அவர்களே, இம்மாதிரியாக வெளிப் பிரதேசங்களில் உள்ளவர்கள், நம் மாகாண விலாசத்தை கொடுத்துவிட்டு, அவர்கள் அதிகம் எண்ணிக்கையைப் பெறுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதனால் நம் மாகாணத்திற்கு எண்ணிக்கை குறைந்து போகிறது என்பதனால், அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் சர்க்கார் எடுப்பார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரிப் புகார் சர்க்காருக்கு வரவில்லை. ஏதாவது கனம் அங்கத்தினரிடம் இருந்தால், அதைக் கொடுத்தால் பார்க்கலாம்.

SRI K. VINAYAKAM : As our Government have been kind enough to allot a few seats for students coming from Ceylon, Burma and other adjoining countries, will the Government consider the possibility of setting apart a few seats to the South Indian nationals of South Africa as they are not given any seats now?

THE HON. SRI C. SUBRAMANIAM : There are no Indian Nationals in South Africa. They are all South African Nationals.

SRI K. VINAYAKAM : Some of the Indian nationals who have been in our country had migrated and got settled in South Africa. They are now treated almost as foreigners in that country. May I know whether children of such nationals would be given some seats in our Colleges?

THE HON. SRI C. SUBRAMANIAM : If the hon. Member wants that some seats should be set apart for the Indians who have settled in South Africa and who are South African Nationals. I think some seats are already allotted to them.

DEPUTY SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II. CALLING ATTENTION TO SLUMP IN JAGGERY.

SRI R. CHIDAMBARA BHARATHI : ஸார், பெருமளவு வெல்லம் தேங்கிக் கிடப்பதாலும், வெல்லத்தின் விலை குறைந்துவிட்டதாலும், வெல்ல உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டங்கள் குறித்த—அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதோடுகூட . . . .

DEPUTY SPEAKER : அவ்வளவுதான், உட்காருங்கள்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker I would like to make the following statement about this matter.

[Sri M. Bhaktavatsalam] [15th November 1961

Representations were received by Government from agriculturists in April this year drawing attention to the decrease in jaggery prices and the resulting hardship to jaggery manufacturers. In these representations, it was generally submitted that export restrictions on jaggery should be removed by Government of India in order to alleviate the hardship. Inquiries were therefore made and it was learnt that there is no restriction imposed by Government of India on the export of jaggery but that restrictions have been imposed by the importing countries, mainly Ceylon, on import of jaggery. Ceylon has imposed restrictions on imports of other things from India also mainly due to its adverse balance of trade with our country. Under these circumstances, it was not possible for getting any relaxation on import restrictions imposed by a foreign country. The only alternative appeared to be to explore the possibilities of other markets for jaggery. The Government of India was addressed in this connection and that Government consulted their trade representatives abroad. The Central Government informed us that replies received from their trade representatives were not so encouraging as to enable marketing of jaggery in foreign countries.

The price of cane jaggery was maintaining a rising trend from 1956 till December 1960. The price started declining from January 1961 onwards. During the period the price was rising, the ryots planted large areas under sugarcane.. The price had in fact reached a stage where cultivators showed a preference for manufacturing jaggery rather than selling sugarcane to sugar mills. It was unlikely that this price level could have been maintained for very long, but the slump has been accentuated by import restrictions in other countries. The Government of India have recently promulgated an ordinance for reducing the production of sugar during the 1961–62 season due to surplus sugar stocks on hand in the country. We fear that this ordinance will further aggravate the position in the jaggery market. The implications of that ordinance are however being considered by Government separately.

III.—GOVERNMENT BILLS

(1) THE MADRAS GIFT GOODS (UNLAWFUL POSSESSION) BILL, 1961.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, I move—

"That leave be granted for the introduction of the Madras Gift Goods (Unlawful Possession) Bill, 1961."

DEPUTY SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras Gift Goods (Unlawful Possession) Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI C. SUBRAMANIAM: I introduce the Bill, Sir.

DEPUTY SPEAKER: The Bill is introduced.

15th November 1961]

(2) THE MADRAS HILL STATIONS (PRESERVATION OF TREES) AMENDMENT BILL, 1961 (L.A. BILL NO. 53 OF 1961).

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Deputy Speaker, Sir, I beg to introduce the Madras Hill Stations (Preservation of Trees) Amendment Bill[a] 1961 and move—

"That the Bill be taken into consideration."

Sir, the existing provisions of the Madras Hill Stations (Preservation of Trees) Act, 1955 (Madras Act XVII of 1955) do not permit the cutting or pruning of the branch of any tree for the purpose of providing proper shade for coffee or tea plantation. Under the provisions of the Act, the Collector may grant permission to cut trees only subject to the condition that provision is made for effective regeneration of an equal number of the same or other suitable species of trees.

It has been represented to Government that in the interests of improving coffee crops, permission should be granted for enabling the cutting down of silver oak trees in the coffee plantations in Yercaud panchayat area in Salem district and also to the lopping of branches of trees for providing proper shade for coffee or tea plantations. It is therefore proposed to amend the Act suitably.

It has also been represented to the Government that permission may be granted to clear lands by felling trees for growing coffee or tea, so that the development programme in regard to these crops approved by the Coffee or Tea Board may be completed. It is therefore considered that provision should be made in the Act to clear fell areas for purposes of planting coffee or tea.

With these words, I request the House to accept the motion.

DEPUTY SPEAKER: Motion moved—

"That the Madras Hill Stations (Preservation of Trees) Amendment Bill, 1961 (L.A. Bill No. 53 of 1961), be taken into consideration."

SRI J. MATHA GOWDER: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த திருத்த மசோதாவை ஆதரித்து, சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இது மலைப் பிராந்தியங்களிலே மரங்களை வெட்டுவது சம்மந்தமானது. ஒரிஜினல் சட்டத்திலே, காபித் தோட்டங்களிலே கூட மரங்களை வெட்டக் கூடாது என்று காணப்பட்டது. இதே மன்றத்திலே நாம் லாண்ட் இம்ப்ரூவ்மெண்ட் போர்ட் ஆக்ட் என்று ஒரு சட்டம் நிறைவேற்றி இருந்தோம். அந்த சட்டத்திலும், மரங்களை வெட்டுவது குறித்து செலக்ட் கமிட்டி சுற்றுப் பிரயாணம் செய்து, எல்லா மாவட்டங்களிலும் உள்ள தோட்டங்களைப் பார்த்து அங்கே உள்ள நிலைமையை அறிந்த பிறகு, காபி, டீ தோட்டங்களிலே, கிளைகளை வெட்டிக்கொள்ளலாம் என்று அந்த சட்டத்திலே இடம் அளிக்கப்பட்டது. இந்த மசோதாப்படி, காபி தோட்டங்கள் புதிதாக ஏற்படுத்த வகை செய்திருக்கிறோம். இதிலே, "ஏற்காடு"

[a] Published in the *Fort St. George Gazette*, dated 1st November 1961.

[Sri J. Matha Gowder] [15th November 1961

என்று மட்டும் கொடுக்கப்பட்டிருந்தது; அதை மாற்றி அமைச்சர் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள், அது எல்லா ஹில் ஸ்டேஷன்களுக்கும் என்று. காபி, டீ இவைகள் உற்பத்தி செய்ய வேண்டுமானால், மரங்களை வெட்டிவிடவேண்டும். ஆனால், அப்படி வெட்டுவிடுவதனால், மழை குறைந்துவிடுமோ என்று அங்கலாய்த்துக் கொள்ளலாம். ஆனால், இன்றைக்கு இருக்கும் நிலைமையைக் கவனிக்க வேண்டும். இரண்டு ஆண்டுகளாக இந்த மலைப் பிரதேசங்களெல்லாம், சர்க்காரால் பத்து ஆண்டு காலமாக வைத்து வளர்க்கப்பட்ட பாரஸ்ட் மரங்கள் வளர்ந்து பெரிது பெரிதாகி இருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிலையில், மேலும் மலைப் பிரதேசங்களில் ஏழு மாதம் தொடர்ச்சியாக மழை பெய்து கொண்டிருக்கிறது. அதனால், காபி, டீ போன்ற செடிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. அதிகமாக மழை இருந்தால் அது நல்லதல்ல. சாதாரணமாக நவம்பர் மாதத்தில் மேகங்கள் மூடிக் கொண்டு, 15 நாட்கள் வரை ஒரே மழையாக இருக்கிற காரணத்தினால், "பிளைடர் ப்ளிஸ்ட்" என்ற பூச்சி தேயிலைக்கு ஏற்படுகிறது. அதன் காரணமாக ப்ளாண்டேஷனுக்கே சேதம் ஏற்படுகிறது. இதைப்பற்றி ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன் சர்க்காருக்குச் சொல்லப்பட்டது. நவம்பர் மாதத்தில் எல்லா சில்வர் ஓக் மரங்களையும் ப்ருனிங் செய்து வெளிச்சத்தைக் காண்பித்தால்தான், செடிகளுக்கு நன்மை ஏற்படும். அப்படியே விட்டுவிட்டால்,
9-a.m. இந்தப் பூச்சிதான் விழும். ஆனால், சட்டப் பிரகாரம் மரங்களை வெட்டக்கூடாது. ஆகவே, காபி, டீ தோட்டத்திற்கும் சேதம் ஏற்பட்டு, விளைபொருள்கள் குறைகின்றன என்ற கண்ணோட்டத்தோடு அமைச்சருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. நீலகிரி, ஏற்காடுப் பகுதிகளிலே, இருக்கக்கூடியவர்கள் சர்க்காருக்கு முறையிட்டதன் பேரில் இந்தச் சட்டம் இப்பொழுது திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது, புதியதாக டீ, காப்பித் தோட்டங்களை உற்பத்தி செய்யும் நிலையிலே, மழை ஒருக்கால் குறைந்துவிட்டால் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்குத் தண்ணீர் வசதி குறைந்துவிடுமோ என்று அஞ்சவேண்டிய அவசியமில்லை. நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, சென்ற 7 மாத காலமாக, சென்ற ஏப்ரல் மாதத்திலிருந்து நவம்பர் மாதம் வரையிலும், அங்கே மழை தொடர்ச்சியாக பெய்து கொண்டிருக்கிறது. காப்பி, டீ பயிரிடுவதற்காக மரங்களை வெட்ட வேண்டுமென்று சொல்லும்பொழுது, அப்படி மரங்களை நீக்குவதற்கு இங்கே "கண்டிஷன்" விதிக்கப்பட்டிருக்கிறது. காப்பித் தோட்டம், டீ தோட்டம் உற்பத்தி செய்தால் அதற்காக அங்கேயுள்ள காடுகளை அழித்து விடலாம் என்று சட்டத்திலே இடமிருக்கிறபொழுது, பிளெயின்களில் உள்ளதுபோல் அங்கே செடிகளே இல்லாமல் போய் விடுமென்று யாரும் நினைக்கக்கூடாது. அங்குள்ள நிலைமை என்னவென்றால், காப்பி நாற்று நட்டவுடனேயே, அவற்றிற்கு நிழல் கொடுப்பதற்காக நிழல் தரும் மரங்களையும் உடனே நட்டுவிட வேண்டும். ஏனென்றால் காப்பிச் செடிகள் வளருவதற்கு முன்பாகவே, இந்த நிழல் மரங்கள் மேலே தொடர்ந்து படரவேண்டும். ஆகவே, காப்பிச் செடிகளுக்கு நிழல் கொடுப்பதற்கு அங்கேயுள்ள

15th November 1961] [Sri J. Matha Gowder]

தோட்டக்காரர்கள் பாடுபடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காப்பித் தோட்டத்திற்காக காடுகளை அழிப்பதிலே எந்த விதமான சேதமும் ஏற்பட்டுவிடாது. ஆனால், இன்றைக்கு, காப்பிப் பயிர் அவசியமா, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நெல் பயிர்தானே அதிகம் தேவை என்று சிலர் நினைக்கலாம். ஆனால், நெல் பயிர் எவ்வளவு அவசியமோ, அந்த அளவுக்கு காப்பியும், தேயிலையும் அவசியம். அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதற்கு இந்த இரண்டு பயிர்களும் தேவைப்படுகின்றன. இங்கே எப்படி பிளெயின்ஸில் உள்ளவர்கள் நெற்பயிர் பயிரிடுவதிலே எவ்வளவு அக்கரை கொண்டிருக்கிறார்களோ, அதே அளவுக்கு மலை வாசஸ்தலங்களில் உள்ளவர்கள், டீ, காப்பி பயிரிடுவதிலே அக்கரை கொண்டிருக்கிறார்கள். அங்கே என்னென்ன பயிர் செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன, அந்தப் பயிர்களுக்கு என்னென்ன தேவை என்பதைப்பற்றி அங்கேயுள்ள மக்களுக்கு அக்கரை இருக்கிறது. ஆகவே, அங்கேயுள்ளவர்களுக்கு, காப்பித் தோட்டம், டீ தோட்டங்கள் உற்பத்தி செய்வதற்கு தக்க முறையில் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இதைப் பற்றி நாங்கள் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸிலிலே விவாதித்து இருக்கிறோம். நீலகிரி மாவட்டத்திலே டீ, காப்பி பயிர் செய்பவர்களுக்கு ஒரு ஏக்கருக்கு சர்க்கார் ஆயிரம் ரூபாய் வரையிலும் கடன் வசதி கொடுக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையிலே அவர்களுக்கு லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்திருக்கிறோம். உருளைக் கிழங்குப் பயிர் இந்த ஆண்டிலே எந்த நிலைமையிலிருக்கிறது என்பதைப்பற்றி சட்ட மன்றத்திலுள்ள எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரியும் என்று நம்புகிறேன். உருளைக்கிழங்கை நம்பி இருப்பவர்களின் கதி படுமோசமாக இருக்கிறது என்பதை நாம் புரிந்துக்கொள்ளவேண்டும். நில வரியை கட்டுபடுத்துவதற்குக்கூட முடியாத நிலையில், கடன் தவணைகளைக் கொடுக்க முடியாத நிலையில் இன்று அவர்கள் இருக்கிறார்கள். அவற்றைத் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று முறையிட்டு இருக்கிறார்கள். ஆகவே, உருளைக்கிழங்கு பயிர் செய்யக்கூடிய இடங்களிலெல்லாம் காப்பி, தேயிலை பயிர்செய்துவிட்டால் அங்கு இருக்கக் கூடியவர்கள் ஓரளவு கஷ்ட நிலைமை இல்லாமல் வாழ்வதற்கு வழி செய்வதாகும். இந்த நிலைமையில் காப்பி, தேயிலை தோட்டங்கள் பயிர் செய்வதற்கு அங்கே உள்ள காடுகளில் உள்ள மரங்களை வெட்டுவதற்கு நாம் தாராள மனப்பான்மையுடன் நடந்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்காக அங்கே உள்ள ரிஸர்வ் காடுகளை அழிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. இங்கே உள்ளதுபோல் ஆயிரக்கணக்கான ஏக்கர்களை கொண்ட தனிப்பட்ட ரிஸர்வ் காடுகள் அங்கே இருப்பதாக நினைத்துவிடக் கூடாது. அங்கே உள்ள தரிசு நிலங்களில் ஒரு மரம், பத்து மரம், ஐம்பது மரம் என்று இருக்கிறது. அதைக் காடு என்று கருதக்கூடாது. முன்பு இருந்த சட்டத்தின் படி காப்பிச் செடி, தேயிலைச் செடி பயிர் இடுவதற்கு அங்கு உள்ள மரங்களை வெட்டக்கூடாது என்ற நிபந்தனையிருந்ததன் காரண

மாக அவைகளைப் பயிர் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டு இப்பொழுது சர்க்கார் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, மலை வாசிகள் சார்பாக நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

ஆனால், இதிலே ஓர் இரண்டு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முன்பு இருந்த நிலைமைப்படி தங்கள் சொந்த உபயோகத்திற்காக வீட்டிற்கு முன்னால் உள்ள ஒரு மரத்தை வெட்ட வேண்டுமானால்கூட அதற்கு ஜில்லா பாரஸ்ட் ஆபீசர் உத்தரவு வேண்டியிருந்தது. இன்றைக்கு தாசில்தார் அளவிலே ஐந்து டன் மரம் வெட்டலாம் என்று இருக்கிறது. அப்படி ஐந்து டன் மரம் வெட்ட தாசில்தாரே உத்தரவு போடலாம் என்று சொன்னாலும்கூட அவர் ஜில்லா பாரஸ்ட் ஆபீஸரைக் கலந்து அவருடைய அனுமதியை பெற்ற பிறகுதான் அவர் உத்தரவு போடவேண்டும். இந்த முறையிலே ஏறத்தாழ ஆறுமாத காலம் ஆகிவிடுகிறது. கல்யாணச் செலவிற்காக ஒரு மரம் அல்லது இரண்டு மரங்கள் வெட்டுவதற்கோ, அல்லது வீட்டிலே நடக்கும் விசேஷத்திற்காக ஒன்றிரண்டு மரங்களை வெட்டுவதற்காக விண்ணப்பம் கொடுத்தால், கல்யாணம் முடிந்து ஆறு மாதத்திற்குப் பிறகுதான் உத்தரவு கிடைக்கிறது. ஏராளமான மரங்களை வெட்டி பத்து டன் அல்லது ஐம்பது டன் என்று லாரிகளில் லோடு செய்வதற்கு வியாபாரிகளுக்கு நிபந்தனை போட வேண்டியது அவசியம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அங்கே உள்ள மக்களுடைய சொந்த செலவிற்காக குறைந்த அளவிலே ஐந்து டன் மரம் வெட்டுவதற்கு பஞ்சாயத்து தலைவரோ அல்லது பஞ்சாயத்து யூனியனோ அல்லது தாசில்தாரோ உத்தரவு போடலாம் என்ற நிலைமை ஏற்பட வேண்டும். ஒரு மரத்தை வெட்டுவது என்று சொன்னால் அது நன்றாக வளர்ந்த பிறகே, சுமார் பத்து வருடத்திற்கு பிறகுதான் வெட்ட முடியும். ஆகையால் ஒரு தடவை ஐந்து அல்லது பத்து மரங்களை வெட்டி விட்டால் அதே நபர் மறுபடியும் நாலைந்து வருஷங்களுக்கு விண்ணப்பம் செய்வதற்கு வசதி இல்லாமல் போய் விடும். ஆகவே, குடியானவர்களுடைய கஷ்டத்தை ஓரளவு குறைப்பதற்கு இந்த மாதிரி ஓரிரண்டு மரங்களை வெட்டுவதற்கான நிபந்தனைகளை தளர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எத்தனை மரங்கள் வெட்டப்பட்டன என்ற கணக்கு ஜில்லா பாரஸ்ட் ஆபீஸருக்கு தெரியவேண்டுமென்றால் பஞ்சாயத்து போர்டு தலைவரோ அல்லது தாசில்தாரோ புள்ளிவிவரம் கொடுத்துவிடலாம். ஆகவே, ஐந்து மரங்கள் வரை வெட்டுவதற்கு பஞ்சாயத்து போர்டு தலைவரோ அல்லது பஞ்சாயத்து யூனியனோ உத்தரவு கொடுக்கலாம் என்ற ஒரு ஷரத்தை இங்கு சேர்த்தால் மிகவும் நலமாயிருக்கும். அல்லது சர்க்கார் தனியாக இதற்கு ஒரு உத்தரவு போட்டாலும் போதும்.

இந்த நிலைமையிலே நம்முடைய மாகாணத்திலே காப்பி, தேயிலையை அதிகமாக உற்பத்தி செய்வதற்குத் தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டும். காப்பி தோட்டம் முன்பு எவ்வளவு ஏகரா இருந்தது; இப்பொழுது எவ்வளவு இருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். காப்பிப் பயிர் இப்பொழுது எவ்வளவோ குறைந்துவிட்டது. மேலும் குறைந்துகொண்டே போகிறது. அதில் ஈடுபட்டிருப்பவர்கள் ஊக்கமில்லாமல் இருக்கிறார்கள். இந்த நிலைமையில்தான், காப்பி பயிர் அடியோடு அழிந்து போகக்கூடாது என்பதற்காகத்தான், இந்த சட்டத்தின் மூலமாக மக்களுக்கு ஊக்கம் அளித்து இருக்கிறோம். நான் குறிப்பிட்ட ஒருசில சிக்கல்களையும் நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவைக் கொண்டுவந்த அமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **SRI N. MAHALINGAM**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, வனப் பாதுகாப்பு சம்பந்தமாக இருக்கக்கூடிய சட்டத்திற்கு இப்போது கொண்டுவந்துள்ள திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே சட்டம் கொண்டு வரப்பட்டபொழுது நமது மாகாணத்திலுள்ள காட்டு மரங்களை மிகவும் அதிகமாக அழிக்கிறார்கள் என்ற காரணத்திற்காகத்தான் இந்தப் பாதுகாப்பு சட்டம் கொண்டுவரப்பட்டது. சென்ற பத்து ஆண்டுகளிலே இந்த பாதுகாப்பு சட்டம் வந்த பிற்பாடு காடுகள் எவ்வளவோ அபிவிருத்தி அடைந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால், நடைமுறையில் இருக்கக்கூடிய குறைகளைப் போக்குவதற்காக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. புதிதாக காப்பித் தோட்டம், தேயிலைத் தோட்டத்தை உண்டுபண்ணலாம் என்று சொன்னாலும், ஏற்கெனவே இருக்கக்கூடிய தோட்டங்களிலே உள்ள மரங்களை வெட்ட வேண்டுமென்று சொன்னாலும், அதற்காக அனுமதி பெறுவதிலே சிரமம் இருக்கிறது. ஜில்லா கலெக்டர் அளவிலே, சர்க்கார் அளவிலே அனுமதி பெற வேண்டும் என்று இருப்பதினாலே இந்தத் தோட்டப் பயிர் செய்பவர்களுக்கு சிரமம் இருக்கிறது. ஆகவே, நடைமுறையிலுள்ள கஷ்டங்களை நீக்க வேண்டியது அவசியமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஜில்லா கலெக்டருக்கோ அல்லது தாசில்தாருக்கோ இந்த அதிகாரத்தைக் கொடுப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும்.

காபி, தேயிலைத் தோட்டங்களைப் புதிதாக உண்டுபண்ணுவதற்காக மரங்களை வெட்டலாம், காடுகளை அழிக்கலாம் என்று திருத்தம் கொண்டுவருவது மட்டும் போதாது என்று நான் கருதுகிறேன். மலைப் பிராந்தியங்களில் ஏலம், வாழை போன்ற பல பொருள்கள் பயிரிடப்படுகின்றன. ஏலம், வாழை போன்ற இதர தோட்டங்களும் வைக்கக்கூடிய அளவுக்கு இந்தச் சட்டத்திலே ஏற்பாடு செய்யவேண்டும் என்பது என்னுடைய கருத்து. மலைப் பிராந்தியங்களில் உற்பத்தியாகக்கூடிய பொருள்களில் முக்கியமான பொருள் ஏலம். அதற்கும் இந்தச் சட்டத்தில் ஏற்பாடு

[Sri N. Mahalingam] [15th November 1961]

செய்யவேண்டியது அவசியம். கனம் அமைச்சர் அவர்கள் இதையும் முக்கியமாகக் கருத வேண்டும். சர்க்கார் கொடுத்திருக்கும் திருத்தங்களை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன்.

*** SRI R. SRINIVASA IYER :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1955-ம் வருஷத்திய 17-வது சட்டத்திலே மலைப் பிரதேசங்களில் மரங்களை வெட்டாமலிருக்கும் பொருட்டு பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவைப் பற்றியும், இதைத் திருத்துவதற்குச் சர்க்காரால் கொடுக்கப்பட்டிருக்கும் புதிய திருத்தத்தின் மூலமாக முக்கியமான சில அதிகாரங்கள் சர்க்காருக்குக் கொடுக்கப்படுவதால் அதைப் பிரயோகப்படுத்துவதில் உள்ள சில விஷயங்களையும் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.

காபி, தேயிலை இரண்டும் அவசியம்தான். அவைகள் 'லக்ஷரி' என்று சொல்லலாம். அன்னியச் செலாவணி நமக்குக் கிடைப்பதற்காக அவற்றை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டியதும் அவசியம்தான். காட்டுப் பிரதேசங்களிலும் மலைப் பிராந்தியங்களிலும், இப்பொழுது நாம் கட்டியிருக்கும் நீர்த் தேக்கங்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய ' catchment area க்களிலும் இருக்கின்றன. நான் மூன்று வருஷங்களுக்கு முன்னால் நேரில் பார்த்த ஒரு விஷயத்தை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நம்முடைய சட்டசபையின் எஸ்டிமேட் கமிட்டியின் சுற்றுப் பிரயாணத்தின்போது மாஞ்சோலை தேயிலை எஸ்டேட்டுக்கும் சென்றிருந்தது. மாஞ்சோலை தேயிலை எஸ்டேட் மணிமுத்தாறு அணைக்கு மேல் 'காட்ச்மென்ட் ஏரியா' வில் இருக்கிறது. குதிரை வெட்டி ஹில்ஸ் வரையில் 32 மைல் மலைப் பிரதேசத்தில் போகலாம். 8,400 அடி உயரம் வரை போகும்போது பார்த்தோம். 150 அடி, 200 அடி உயரம் இருக்கக்கூடிய, இரண்டு மூன்று பேர் கட்டி அணைக்க முடியாத பருமனுள்ள மரங்களில் கீழே பட்டையில் இரண்டு அடி அகலம் வெட்டிக்கொண்டிருந்தார்கள். மரங்கள் வெள்ளை வெள்ளையாகப் பட்டை உறிக்கப்பட்டிருந்தன. "என்ன இப்படி உறிக்கிறீர்களே!" என்று கேட்டதற்கு, "மரங்களை வெட்டக் கூடாதென்று சட்டம் இருக்கிறது, பட்டையை எடுத்து விட்டால் தானாகப் பட்டுப்போய்விடும், மூன்று நான்கு மாதங்கள் கழித்து கீழே விழுந்துவிடும்" என்று பதில் சொல்லப்பட்டது. கீழே விழுந்து பட்டுப்போன மரங்களையும் நாங்கள் பார்த்தோம். பிறகு, அதைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்ததில், அங்கு வந்திருந்த தாசில்தார், டெபுடி கலெக்டர் இவர்களிடமிருந்து சில விவரங்களைத் தெரிந்துகொண்டோம். இது ஆண்டிப்பட்டி ஜமீன்தார் அவர்களால் 1948-ம் வருஷத்திய 26-வது எஸ்டேட் அபாலிஷன் சட்டத்தை மீறி 1—7—1945-க்குப் பிறகு அதிகமான வருஷங்களுக்குக் குத்தகைக்கு விட்டுவிட்டார்கள். அதை அந்தச் சட்டத்தின் 20-வது செக்ஷன்படி அனுமதிக்காமல் இருக்கலாம்.

15th November 1961] [Sri R. Srinivasa Iyer]

ஆனால், போர்டு ஆப் ரெவினியூ அனுமதித்திருக்கிறார்கள். அதிலே கண்டிஷன் போட்டிருக்கிறார்கள். காபி, தேயிலைத் தோட்டங்கள் வைக்க வேண்டுமென்றால் மரங்களை வெட்டக் கூடாது என்றாலும், புதிதாக மரங்கள் வைத்து வெட்டலாம் என்று கண்டிஷன் போட்டிருக்கிறார்கள். 'வெட்டக் கூடாது' என்பதற்காக மரங்களைக் கோடரியால் வெட்டாமல் மரங்கள் தானாகப் பட்டுப்போகும் படியான வழிவகை செய்துகொண்டிருந்தார்கள். தேயிலை உற்பத்திச் செய்வதைப் பார்க்கவேண்டுமென்று அங்கு போனோம். நாங்கள் வழியில் பார்த்த விஷயம் அந்த எஸ்டேட் முதலாளிக்கு முன்னாடியே எட்டிவிட்டது. அங்கே போய்ப் பார்க்கும்போது, எண்ணெய் ஊற்றி உஷ்ணப்படுத்தவேண்டிய ஸ்டீம் பாய்லர் வைத்துக்கொண்டிருந்த அவர்கள் அங்கே ஏராளமான கட்டைகளைப் போட்டு எரித்துக்கொண்டு ஸ்டீம் பாய்லரை உஷ்ணப்படுத்திக்கொண்டிருந்தார்கள். எண்ணெய் போடக் கூடியதுதான் நியாயம். ஆனால், ஏராளமான விறகு எரிக்கப்பட்டு அந்த மெஷின் இயங்கிக்கொண்டிருந்தது. 'சாய்ந்து போன மரங்களை நாங்கள் உபயோகப்படுத்துகிறோம்' என்று அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி நாங்கள் ரிபோர்ட் எழுதியிருக்கிறோம். போர்ட் ஆப் ரெவினியூ அதைப் பார்த்ததில், 'ஏற்கனவே வைத்திருந்த கண்டிஷன் சரியானது' என்று சொன்னார்கள். எதற்காக இந்த உதாரணத்தை நான் சொல்கிறேன் என்றால், நாம் எந்த விதமான சட்டம் இயற்றினாலுங்கூட, அதை மீறி பூரா மரங்களையும் வெட்டி அழிந்துவிடுவதைப் பார்க்கிறோம். அந்தக் குத்தகைதாரர் காபி, தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக அந்த மரங்களை வெட்டவில்லை. மணிமுத்தாறு அணைக்கு மேலே இருப்பதைப்பற்றி தஞ்சை ஜில்லாக்காரர் பேசுகிறாரே என்று சிலர் நினைக்கலாம். நான் அங்கு போய்ப் பார்த்ததால் அதை ஒரு உதாரணமாகச் சொன்னேன்.

இன்றைக்கு மரங்களை நாம் பாதுகாக்கவில்லை. நீலகிரியில் இருக்கும் பெருவாரியான மரங்களை அனேகமாக வெட்டிவிட்டார்கள் என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தைப் போட்டோம். இதன் ஷெட்யூலில் 'கூனூர் முனிசிபல் ஏரியா, கொடைக்கானல் முனிசிபல் ஏரியா, கோட்டகிரி பஞ்சாயத்து ஏரியா, உதகமண்ட் முனிசியல் ஏரியா, ஏர்க்காட் பஞ்சாயத்து ஏரியா' என்று ஐந்து ஏரியாக்களுக்கு ஏற்படுத்தினோம். பின்னால் மலைப் பிரதேசங்களைப் பொருந்தும் கவர்ன்மென்ட் 'நோடிபை' செய்யலாம் என்று இருக்கிறது. இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் திருத்த மசோதாவில் கூட ஏர்க்காடு ஏரியாவைப்பற்றித் திருத்துவதற்கு ஆரம்பித்து, திருத்த மசோதாவின் 2-வது ஷரத்துக்கு சர்க்கார் திருத்தம் கொடுத்திருப்பதில் " .... such area in any hill station as the Government may, by notification, specify in this behalf" என்று இருக்கிறது. காபி, தேயிலை அவசியந்தான், அதற்கு மேல் உணவு உற்பத்தி செய்வதற்காகத் தண்ணீர் அவசியம். மரங்கள் அடர்ந்த ஏராளமான காடுகள் இல்லாவிட்டால் நமக்கு மழை குறைகிறது என்று விஞ்ஞானிகள்

சொல்கிறார்கள். அது ஒருவேளை மாறப்போகிறதோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைக்கு நீர்த் தேக்கங்களை ஏராளமாக நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அவைகளுக்குத் தண்ணீர் வரவேண்டும். காட்ச்மெண்ட் ஏரியால் மழைபெய்ய வேண்டுமானால், அதற்கு அனுகூலமாக அங்கு மரங்கள் இருக்க வேண்டும். அந்த மரங்களை தாராளமாக வெட்டுவதற்கு அனுமதி கொடுத்துவிட்டால் உணவு உற்பத்தி பாதிக்கப்படும். ஜனப் பெருக்கத்திற்கு ஏற்றாற்போல்—உணவு உற்பத்தியை அதிகப்படுத்த நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம். வருவாயைக் கணக்குப் பண்ணாமல், உணவு உற்பத்திக்காக கோடிக் கணக்கில் பணம் செலவழித்து நாம் அணைகள் கட்டுகிறோம். இந்த நிலையில் இந்த மரங்களை இப்படி வெட்டி அங்கு பாலைவனமாக ஆக்கிவிடலாமா என்பதை ஆலோசித்துச் செய்யவேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்கிறேனேயொழிய, இந்த மசோதாவை நான் எதிர்க்கவில்லை. இதிலே அக்கறைப்பட்டவர்கள் அனேகம் பேர்கள் இருக்கிறார்கள். சர்க்காரும் அக்கறைப்பட்டவர்கள்தான். நானும் அக்கறைப் பட்டவன்தான். ஆனால், ஜாக்கிரதையாக இதிலே அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

பழைய காபி, தேயிலை ப்ளாண்டேஷன்களைப் பொறுத்தவரையில், மரங்களைக் கழிப்பதற்கோ மரங்களை வெட்டிவிட்டுப் புதிதாக மரங்களை வைப்பதற்கோ அனுமதி கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. போகப் போக காபி, தேயிலை ப்ளாண்டேஷன்களை விஸ்தரித்துக் கொண்டு போனால் எவ்வளவு தூரம் நமக்கு மழை பெய்யக்கூடிய அளவு பாதிக்கப்படும் என்பதை ஆலோசிக்கவேண்டும். சென்னை மாநிலத்தில் 33 சத விகிதப் பரப்பில் காடு இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்பொழுது 17 சத விகிதப் பரப்பில்தான் காடு இருக்கிறது. இந்த நிலையில் காடுகளை ஜாஸ்தியாக வளர்க்க வேண்டும். சாலையோரங்களில் மரங்கள் வளர்க்கவேண்டும். டெல்டாப் பிரதேசங்களில் கூட மரங்கள் வளர்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, இதில் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை நல்ல முறையில், உணவு உற்பத்திக்குப் பாதகம் ஏற்படாத வகையில் பிரயோகிக்கவேண்டும் என்று மட்டும் சொல்லிக்காள்கிறேன். இந்த மசோதாவை நான் எதிர்ப்பதாக யாரும் நினைக்கக்கூடாது. கைக்குத்தல் அரிசி சாப்பிட வேண்டும், தீட்டப்பட்ட அரிசி சாப்பிடுவது நல்லதல்ல என்றெல்லாம் சொல்கிறோம். மில்லிலே கூட 'பாலிஷ்' செய்யக்கூடாது என்று சொல்கிறோம். காபி, தேயிலை இல்லாமல் காலட்சேபம் செய்யலாம். ஆனால், உணவுத்தானியங்கள் இல்லாமல் காலட்சேபம் செய்ய முடியாது. உணவு தானியங்களை அதிகம் உற்பத்தி செய்வதற்கு நீர்ப்பாசன வசதி வேண்டும். ஆறுகளில் தண்ணீர் வந்து, அணைகளில் தேங்குவதற்கு மழை வேண்டும். மழை பெய்வதற்குக் காடுகள் அவசியம். அந்தக் காடுகளைக் காப்பாற்று

வதும் அவசியமாகிறது. காடுகள் இல்லாமல் ஏதும் செய்ய முடியாது என்பதை நாம் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு, சர்க்காரும் கலெக்டரும் மற்ற அதிகாரிகளும், மாஞ்சோலை எஸ்டேட்டில் செய்ததுபோல மற்ற இடங்களில் செய்ய இடங் கொடுக்காமல், இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் சொல்லி, என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் உதவி சபா நாயகர் அவர்களே வனங்களிலுள்ள மரங்களைப் பாதுகாக்க வேண்டியிருக்கும்போது அவைகளைப் பெருவாரியாக வெட்டி விற்றுப் பணம் ஆக்கிவிடலாம் என்ற கருத்து அதிகமாக இருந்ததால் அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் முன்பு நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும்போது சில சங்கடங்கள் இருக்கின்றன என்று அப்போதைக்கப்போது சொல்லப்பட்டு வந்தது. அவசியமாக, நியாயமாக உள்ள தேவையைக்கூடப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்படுகிறது என்றும் சொல்லப்பட்டது. ஜில்லா வன அதிகாரி அவர்களிடம் அனுமதி பெறுவது கஷ்டமாக இருக்கிறது என்று கோயமுத்தூர் ஜில்லாவிலும் மற்றும் சில இடங்களிலும் சொன்னார்கள். இதற்கெல்லாம் சட்டத்தை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. தாசில்தாரிடம்கூட அனுமதி பெறலாம் என்ற வகையில் இதில் மாற்றம் செய்திருக்கிறோம்.

இப்பொழுது பேசிய கனம் அங்கத்தினர் திரு. மாதா கௌடர் அவர்கள், இந்த அதிகாரத்தைப் பஞ்சாயத்துத் தலைவருக்குக் கொடுத்து விடலாம் என்று சொன்னார்கள். அப்படிச் செய்தால் கிராமப் பஞ்சாயத்துத் தலைவருக்குத் தொந்தரவு வரும், தாட்சண்யம் வரும். நிர்த்தாட்சண்யமாகச் செய்தால் அவருக்குக் கஷ்டமாக இருக்கும். ஒருகால் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுக்கலாமா என்பதை யோசிக்கலாம். பஞ்சாயத்துத் தலைவருக்கு இந்த அதிகாரத்தைக் கொடுப்பது சரியல்ல என்றுதான் நான் நினைக்கிறேன். தாசில்தாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, சிலவிடங்களில் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குக் கூட அளிக்கத் தயார் என்று சொல்லியிருக்கிறேன். அதில் இருக்கக்கூடிய கஷ்டங்களைப் பார்த்து, அவர்களுக்குரிய கஷ்டங்களைப் பார்த்து அந்தவகையில் இதைத் தீட்டலாம். இதனால் டீ காபி, எஸ்டேட் பாதுகாக்கப்படவேண்டியதுதான். கனம் மகாலிங்கம் அவர்கள் ஏலம் பயிரிடுவது, வாழை பயிரிடுவது பற்றிச் சொன்னார்கள். வாழை வேண்டியதுதான். வனத்தை அழித்துப் போடவேண்டுமா என்பது கவனிக்கப்படவேண்டும். ஏலம் போடுவதற்குக் காடுகளை வெட்ட வேண்டிய அவசியம் இல்லை. காடுகளிலேயே அது பயிராகிறது. ஓரளவு மரங்களை வெட்ட வேண்டும் என்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்யலாம்.

[Sri M. Bhaktavatsalam] [15th November 1961

காபி, டீ பயிரிடுகிறவர்கள் தங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். கலெக்டர்கள் அவருடைய கஷ்டத்தை நீக்க வேண்டுமென்றாலும் கூட சட்டத்தில் இடமில்லை. காபி போர்டு தலைவரும் என்னிடம் அதைப்பற்றிச் சொன்னார். அதற்காகத் தான் இந்தத் திருத்த மசோதா வந்திருக்கிறது. இன்றைக்கு காபி, டீ மட்டும் சாப்பிட்டுவிட்டு இருக்கிறவர்கள் கூட இருக்கிறார்கள். ஆகவே இதை லக்ஷரி என்று சொல்லிக்விட முடியாது. உணவுப்பொருள் விஷயத்திலும் நமக்கு அக்கறையுண்டு. இதனால் மலைப்பிரதேசங்களிலுள்ள வனங்களை அழித்துவிட வேண்டும் என்பதும் நம் நோக்கம் அல்ல. ஆகவே பொதுவாக இந்த மசோதாவை எல்லா அங்கத்தினர்களும் வரவேற்றது குறித்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

DEPUTY SPEAKER: The question is—

"That the Madras Hill Stations (Preservation of Trees) Amendment Bill, 1961 (L.A. Bill No. 53 of 1961), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

DEPUTY SPEAKER: The question is—

'That clause 2 do stand part of the Bill.'

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move the following amendment:—

'for item (i), *substitute* the following:—

"(i) in sub-section (1), for clause (*c*) of the proviso, the following clauses shall be substituted, namely:—

(*c*) the tree is to be cut for the improvement of coffee crop in any coffee plantation in such area in any hill station as the Government may, by notification, specify in this behalf; or

(*d*) the tree has silviculturally matured".'

இதைப்பற்றிக்கூட இதற்கு முன் பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அதிகாரம் அரசாங்கத்திற்கு இருப்பது நலம். ஆகவேதான் காபி, டீ பயிருக்குக் குந்தகம் இருக்கக் கூடாது என்ற நோக்கத்துடன் இதைப் பிரேரேபிக்கிறேன்.

DEPUTY SPEAKER: The clause and the amendment are before the House for discussion.

* SRI R. SRINIVASA IYER: Mr. Deputy Speaker, Sir, the amendment proposed by the Hon. Minister is far better and a great improvement on the existing provision of the Bill.

Section 3 of the main Act reads as follows:—

'No person shall, without the previous permission in writing of the Collector cut, uproot or burn, or cause to be cut, uprooted or burnt, any trees".

15th November 1961] [Sri R. Srinivasa Iyer]

Provided that such permission shall not be refused if—

(*a*) the tree constitutes a danger to life or property;

or

(*b*) the tree is dead, diseased or wind-fallen; or

(*c*) the tree has silviculturally matured; . . .'

Now we are substituting a new clause for the existing clause (*c*) and it reads as follows:—

'the tree is to be cut for the improvement of coffee crop in any coffee plantation in such area in any hill station as the Government may, by notification, specify in this behalf; . . .'

The proposed clause in the Bill says—

'the tree is to be cut in any coffee plantation in Yercaud Panchayat area for the improvement of coffee crop.'

The amendment proposed is a better draft and a better wording and it gives the Government control over the orders of the Collector and also over the notification of an area in any hill station. As I stated already, when the Collector gives permission, he may consider all the points and whether the cutting of the trees as such is necessary not only for the improvement of the coffee crop but also for the cultivation of new coffee crop.

The amendment was put and carried.

Clause 2 as amended was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

'That the Madras Hill Stations (Peservation of Trees) Amendment Bill, 1961 (L.A. Bill No. 53 of 1961), as amended be passed.'

DEPUTY SPEAKER: The question is—

'That the Madras Hill Stations (Preservation of Trees) Amendment Bill, 1961 (L.A. Bill No. 53 of 1961), as amended be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

(3) THE MADRAS CATERING ESTABLISHMENTS (AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 40 OF 1961).

* THE HON. SRI M. BHAKTAVASALAM: Mr. Deputy Speaker, Sir, I move—

'That the Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961) be taken into consideration.

Sir, according to sub-section (2) of section 11 of the Madras Catering Establishments Act, 1958, every employee shall be allowed ineach calendar year a holiday of one whole day on the 26th January and the 15th August and five holidays each of one whole day for each festival as the Inspector may, in consultation with the employer and employees, specify.

[Sri M. Bhaktavatsalam] [15th November 1961

The employee will be entitled to wages on the above holidays. Sub-section (4) of section 11 of the Act prescribes that where an employee works on any holiday allowed under the Act, he shall at his option be entitled to wages at twice the ordinary rate of wages or to wages at the ordinary rate of wages and to avail himself of a substituted holiday with wages on any other day.

It is considered that provision should be made in the Act to enable the employer to require an employee to work on a national or a festival holiday provided he is given the option to avail of a substituted holiday or to get wages at twice the ordinary rate of wages for the holiday.

It is also considered that section 29 of the Act should be amended to give effect to the recommendation of the Committee on Subordinate Legislation regarding the placing of rules on the table of both House of the Legislature.

The Government of India have no objection to the State Government undertaking the proposed legislation. I move that the Bill be taken into consideration.

DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961) be taken into consideration.'

10-00 a.m. **SRI P. S. CHINNADURAI:** மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவானது தொழிலாளர்களுடைய நலனை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சபையிலே பிரேரேபிக்கப்படவில்லை என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டியது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஹோட்டல் சொந்தக்காரர்கள் நலனையும், அவருடைய லாபத்தையும் மாத்திரம் கவனத்தில் கொண்டு பார்த்தால் தேசிய விடுமுறை நாட்களிலே கூட தொழிலாளர்கள் வேலை செய்யவேண்டுமென்பது சரியாக இருக்கும். ஆகவே, இந்த மசோதாவானது முதலாளிகளுடைய நிர்ப்பந்தத்துக்கு இடம் அளிக்கக்கூடிய முறையில் வந்திருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். தொழிலாளர்களுக்குப் பிரதிகூலமான ஒரு முறையில் மசோதாவை இப்போது திருத்த வேண்டிய அவசியம் என்ன நேர்ந்து விட்டது என்று எனக்குப் புரியவில்லை. தேசிய விடுமுறை தினம் தேச மக்கள் அத்தனை பேருக்கும் பொதுவானது. அதனைத் தொழிலாளர்கள் மட்டும், ஹோட்டல் தொழிலாளிகள் மட்டும் அநுபவிக்காமல் இருக்க வேண்டுமென்று நம்முடைய மனதிலே ஏன் படவேண்டும்? ஹோட்டல் முதலாளிகள் வேண்டுமானால் அந்த தினத்தில் கூட்டமாக வரும் மக்களின் உற்சாகத்தையும், அவர்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தையும் அநுபவிக்க முற்படலாம். அவர்கள் தங்கள் லாபம் கருதி தொழிலாளர்கள் அந்த தினமும் வேலை செய்ய வேண்டுமென்று நினைப்பதில் ஆச்சரியம் இல்லை. ஆனால் நாம் ஏன் அதற்குத் துணையாக இருக்கவேண்டு

15th November 1961] [Sri P. S. Chinnadurai]

மென்று கேட்க விரும்புகிறேன். எனவே இந்த உத்தேசத் திருத்த மசோதாவைக் கைவிடுவது நல்லது. தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களுடைய ஆலோசனை, சம்மதமின்றி, இப்படிப்பட்ட மசோதாவைக் கொண்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இப்போது இந்தச் சபை இதை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளாமல் நிறுத்தி வைக்கலாம் என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

***SRI S. PAKKIRISAMI PILLAI:** கனம் தலைவர் அவர்களே, சென்னை ஹோட்டல் நிறுவனங்கள் (திருத்த) மசோதா, சென்னை தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை, விடுமுறை நாட்கள்) (திருத்த) மசோதா இரண்டும் தற்போது திருத்தங்களாக வந்திருக்கின்றன. வருஷத்தில் 7 நாட்கள் பண்டிகை விடுமுறை நாட்களாக இருக்கவேண்டும், அவைகளைத் தொழிலாளர்கள் கண்டிப்பாக அனுபவிக்க வேண்டுமென்ற முறையில் இது வரை இருந்து வந்தது. சில ஸ்தாபனங்களில் இந்தப் பண்டிகை விடுமுறை நாட்கள் கொடுக்கப்படாமலே இருக்கின்றன. பாக்டரி சட்டத்தின் கீழ் இருக்கும் விடுமுறை நாட்கள் தவிர வேறு நாட்கள் சில ஸ்தாபனங்களில் இருக்கின்றன. இந்த 7 நாட்கள் கூடுதலாகக் கொடுத்தது ஒரு அநுகூலந்தான். அது சட்டமாக இருப்பதன் காரணமாக முதலாளிகள் தப்பித்துக் கொள்ள வேறு வழி இல்லை. இருந்தாலும் அநேக ஸ்தாபனங்கள் லேபர் இன்ஸ்பெக்டர்களை ஏமாற்றி தொழிலாளர்களுக்கு விடுமுறை கொடுக்காமலே வேலை வாங்கும் பல ஸ்தாபனங்களும், தொழிற்சாலைகளும் நகரத்தில் இருநது கொண்டிருக்கின்றன. கிராமங்களிலும் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த லேபர் இன்ஸ்பெக்டர்கள் போதுமான அளவு இல்லாததும், சரியான மேற்பார்வை இல்லாததுதான் இதற்குக் காரணம். இந்த 7 நாட்களில் ஜனவரி 26-ம் தேதி குடியரசு தினமும், ஆகஸ்ட் 15 சுதந்திர தினமும் கட்டாய விடுமுறையாக வைத்திருக்கிறார்கள். எந்தத் தொழிலாளியும் அந்த நாட்களை அவ்வளவு அவசியம் என்று கருதவில்லை. அவர்கள் தங்களது நாளாகக் கொண்டாடும் சர்வதேச ரீதியில் உள்ள மே தினத்தைக் கட்டாய விடுமுறையாகக் கொண்டு வர இன்னும் முன் வரவில்லையே என்பதுதான் என்னுடைய குறை. கூடிய சீக்கிரத்தில் இதைச் செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த விடுமுறை நாட்கள் சில இடங்களில் 7 நாட்கள், 10 நாட்கள், 15 நாட்கள், 20 நாட்கள் என்று இருக்கிறது. ஒரு இடத்திற்கும் மற்றொரு இடத்திற்கும் இந்த எண்ணிக்கை மாறுகிறது. இதையெல்லாம் ஒன்றாக்கி, ஒரே அளவாக விடுமுறை அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பண்டிகை விடுமுறை மாதிரி, தொழிலாளர்கள் வருஷத்தில் ஒரு முறை வெளியே சென்று எல்லா

[Sri S. Pakkirisami Pillai] [15th November 1961

வற்றையும் கற்றுக் கொள்ளக்கூடிய முறையில், மொத்தமாக சில நாட்கள் விடுமுறை வேண்டுமென்று கேட்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

இந்தத் திருத்த மசோதாவைப் பொறுத்த வரையில், பண்டிகை விடுமுறை நாட்களில் தொழிலாளிகள் வேலை செய்ய வேண்டுமென்று சொன்னால் அவர்களுக்கு இரட்டிப்புச் சம்பளம், கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, அந்த இரட்டிப்புச் சம்பளத்தைக் கொடுக்க எந்த முதலாளியும் இஷ்டப்படமாட்டார். இந்தச் சட்டத்திலே இன்னொரு விதியைச் சேர்த்திருக்கிறார்கள். அப்படி இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கப்படவில்லை யென்றால் அந்த நாளுக்குப் பதிலாக இன்னொரு நாள் லீவ் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த மாற்று லீவ் தான் கிடைக்கும். இதிலே தொழிலாளர்களுக்கு என்ன லாபம் இருக்கிறது? தொழிலாளி சந்தோஷமாகக் கொண்டாடக் கூடிய பண்டிகை நாளில் வேலை செய்துவிட்டு இன்னொரு நாள் விடுமுறை எடுத்துக்கொள்வது அவனுக்கு நன்மையாக இல்லையே. ஆகவே, இந்தச் சட்டமானது தொழிலாளிகளுக்கு அனுகூலம் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லை. பக்கிங்ஹாம் மில்லில் வார விடுமுறை நாளில் தொழிலாளிகள் வேலை செய்தால் அவர்களுக்கு 1¼ நாள் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதே மாதிரிப் பண்டிகை நாளில் வேலை செய்தாலும் முன்பு 1¼ நாட்கள் கொடுத்து வந்தார்கள். ஆனால் இந்தச் சட்டம் வந்த பிறகு அவர்கள் அதை மாற்றி, 1¼ நாள் சம்பளம் கொடுப்பதற்கு பதிலாக ஒரு நாள் சம்பளம் கொடுத்து விட்டு இன்னொரு நாள் லீவ் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டார்கள். அவர்களுக்கு ஏற்கனவே இருந்த வசதி பறிக்கப்பட்டு விட்டது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆகவே, இது பற்றி நான் இங்கே ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் திருத்தத்தின்படி பண்டிகை நாட்களில் வேலை செய்கின்றவர்களுக்கு 1¼ நாள் சம்பளம் கொடுக்கவேண்டும், அதோடு கூட ஒரு நாள் "ஸப்ஸ்டிடூட் ஹாலிடே" இருக்க வேண்டும் என்பதுமாகும். அதுதான் நியாயம். அந்த நியாயத்தைத் தவிர்ப்பது நல்லதல்ல என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

Sri T. T. DANIEL: Mr. Deputy Speaker, Sir, while discussing this Bill, may I place two important points for the kind consideration of the Hon. Minister. According to me the proposed amendment offends the very scope and character and object of the existing Act. The amendment if it is passed will practically amount to repealing the existing Act. The objects and reasons of the existing Act say that employees should have national holidays as a matter of right. That was the fundamental object on which the existing Act stands. The Act was passed in such a way that employees shall not be compelled by the employer to work on national holidays and option was given under the existing Act to the worker, if he so chose in his own interest

15th November 1961] [Sri T. T. Daniel]

to work on a national holiday. These are the two corner stones on which the existing Act stands. If these two primary features are removed from the existing Act, then there is practically no existing Act itself. I would therefore suggest that at least in the case of national holidays there should not be the right of the employer to ask the employee to work on a national holiday. It is all contrary to modern conception. No employee working in whatever part of our country should be compelled by any employer to work on a national holiday. The right to work or not to work under the present conditions should be given only to the employee. That is in consonance with all the discussions which we had at the time of passing the existing Act. The Hon. Minister may kindly go through all opinions expressed on the floor of the House at the time of the passing of the existing Act. We all welcomed that measure (it was a historic Act that was passed by the State Legislature) because it gave the right to the employee not to work on a national holiday and also took away the right of compulsion on the part of the employer to compel the employee to work on a national holiday. So I would kindly bring to the attention of the Hon. Minister that at least in the matter of two national holidays, there should not be the right on the part of the employer to compel the employee to work on those national holidays.

Secondly so far as rules and notifications are concerned, it appears that Government have to place the rules and notifications as soon as possible on the table of the two Houses, so that the two Houses may give their consent. Sub-clause (4) of clause 3 states as follows :—

"(4) Every rule made or notification issued under this Act shall, as soon as possible, after it is made, or issued, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the section in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or notification or both Houses agree that the rule or notification should not be made or issued, the rule or notification shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification."

It appears that rules and notifications, even after they are modified, would not prejudice the validity of anything previously done. I would suggest that it is not necessary. If the rules and notifications are annulled completely, then all the proceedings that are taken under these rules and notifications by Government are absolutely void and all the actions that were taken under those rules and notifications have to be considered as mere nullity. From the last sub-clause of clause 3 of the present Bill, it appears that whatever that is done in pursuance of a rule or notification that is passed under the Act, even though afterwards that rule or notification is held quite contrary to the Act or modified, even

[Sri T. T. Daniel] [15th November 1961

then, what was done previously should stand. I would suggest therefore that the last paragraph of clause 3, viz., sub-clause (4), should be suitably amended omitting the words that occur in the end which are as follows—

"that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule or notification."

*** SRI R. SRINIVASA IYER :** ஸார், இந்த மசோதாவைக் கைவிட வேண்டுமென்று சிலரும், இதைத் திருத்தவேண்டுமென்று சிலரும் எனக்கு முன் பேசியிருக்கிறார்கள். இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். தேசீய விடுமுறை நாள் என்று விடுகிற நாட்களில் முக்கியமாக பொதுமக்கள் அனைவரும் அந்த நாள் எதற்காக விடப்பட்டதோ அதைக் கொண்டாட விடப்பட்டிருக்கிறது. வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு வெளியே—வாசலிலே போகாமல் கொண்டாடுகிறதல்ல. துக்கசாகரத்தில் இருக்கிற மாதிரி சிலர் சில பண்டிகைகளில் இருப்பது போல அந்த மாதிரி இருக்க நாஷனல் ஹாலிடே விடவில்லை. பொதுமக்கள் வெளியே போய், பல இடங்களுக்குப் போய், இதர ஊர்களுக்குப் போய் வேடிக்கை பார்ப்பதோ அல்லது சந்தோஷமாக கொண்டாடுவதோ பழக்கம். ஒரு பெரிய விசேஷத்தைக் கொண்டாடுவதானால் ஹோட்டல்களுக்குப் போகாமல், காப்பி, பலகாரம், சாப்பாடு சாப்பிடாமல் இருக்க முடியாது. கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் தொழிலாளி பலியாக வேண்டுமா என்று கேட்டார்கள். தொழிலாளிகளைப் பற்றிப் பேசுவதற்குத் நாங்கள் தான் இருக்கிறோம். தொழிலாளிகளைப் பற்றி மற்றவர்கள் பேச மாட்டார்கள் என்று நினைப்பது தவறு. தொழிலாளிகளையும் சேர்த்துத்தான் பேசுகிறேன். தொழிலாளிகளுக்கு என்ன விசேஷ உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று துருவித் துருவிப் படித்துப் பார்த்துச் சொல்ல விரும்புகிறேன். இதிலே என்ன இருக்கிறது—தொழிலாளியை வேலை செய்யும்படி கேட்கலாம்—"மே ரிக்வொயர்"—என்று இருக்கிறது. அவர்கள் சம்மதப்பட்டால் கேட்கலாம் என்று இருக்கிறது. அதோடு இன்ஸ்பெக்டருக்கு வேறு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதிலே இன்ஸ்பெக்டருக்குக் கூட அதிகாரம் இருக்கிறது சட்டத்திலே—அந்தத் தொழிலாளிகளை வேலை செய்யச் சொல்லவே கூடாது என்று கூடச் சொல்லலாம். அப்படி ஒரு நாளில் வேலை செய்தால் இன்னொரு நாளை விடுமுறை நாளாகக் கேட்டுக் கொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலை செய்யும் நாளுக்கு சம்பளம், சாப்பாடு எல்லாம் இருக்கின்றன. இரண்டு நாள் சம்பளம் கூட இருக்கிறது, நாஷனல் ஹாலிடேயில் வேலை செய்வதற்கு பதிலாக. ஆனதால் ஹோட்டலில் வேலை பார்க்கிறவர்கள் ஜாஸ்தியா? அல்லது பொது மக்கள் ஜாஸ்தியா? 10 தொழிலாளிகள் ஒரு ஹோட்டலில் வேலை பார்க்கிறார்கள் என்றால் அவர்களுள் 5 பேர்களை வைத்துக்கொண்டு சர்வீஸ் செய்யும் முறை

15th November 1961] [Sri R. Srinivasa Iyer]

யில் ஹோட்டல் முதலாளிகள் செய்யவேண்டும். ஞாயிற்றுக் கிழமை ஒரு ஊருக்குப் போனால் அங்கே இருக்கக் கூடிய எல்லா ஹோட்டல்களும் சாத்தியிருக்கின்றன. ஹோட்டல் தொழிலாளிகள் சங்கமும், ஹோட்டல் முதலாளிகள் சங்கமும் கூடி மாறி மாறி ஒருவர் ஞாயிற்றுக் கிழமை மூடுவது, ஒருவர் சனிக்கிழமை மூடுவது என்ற முறையில் இருக்கிறது. ஒரு ஊரில் இருக்கக்கூடிய கடைகள் 50 என்று இருந்தால் ஒவ்வொரு நாளும் 7 அல்லது 8 கடைகள் சாத்தக்கூடிய முறையில் இருக்கிறது. தொழிலாளிகளும் முதலாளிகளும் ஒற்றுமையாக இருந்து செய்யவேண்டியது தான் முறை. இதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது?

'any employee may be required by the employer to work on any holiday allowed under that sub-section, if the employer has not less than twenty-four hours before such holiday,—

(i) served in the prescribed manner on the employee a notice in writing requiring him to work as aforesaid; and

(ii) sent to the Inspector and exhibited in the premises of the catering establishment, a copy of such notice'. அப்புறம்

'where an employee works on any holiday allowed under sub-section (2), he shall, at his option, be entitled to wages at twice the ordinary rate of wages as defined in the Explanation to section 8 for such day, or to wages at the ordinary rate of wages defined as aforesaid for such day and to avail himself of a substituted holiday with wages on any other day.'

அப்படி வேலை செய்தால் அவர்களுக்கு அன்றைக்கு இரட்டை சம்பளம். இது ஹோட்டல் தொழிலாளிகளை பழி வாங்குவது அல்ல—இரட்டைச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். மாற்று விடுமுறைதான் வேண்டுமென்றால் ஒரு நாள் சம்பளம், வேறு ஒரு நாள் விடுமுறை என்று போடப்பட்டிருக்கிறது. தொழிலாளி வேலை செய்ய மாட்டேன் என்று சொல்லலாம். ஆனால், வேலை செய்தால் சாப்பாடு, சம்பளம் எல்லாம் இருக்கிறது. ஆகையால் ஹோட்டல் முதலாளிகள் பிழைப்பதற்கு அவர்கள் வேலை செய்யவேண்டுமென்று தொழிலாளிகளைக் கஷ்டப் படுத்தி அவர்கள் லாபம் அடையும் இந்தச் சட்டம் கொண்டுவரப் பட்டது என்று சொல்வதாம். அதனால் இது கைவிடப்பட வேண்டும் என்று சொல்லுவதும் சரியல்ல. ஹோட்டலில் இன்றைக்கு காப்பி விலையை ஏற்றினால் கட்டுப்பாடு செய்கிறோம்—சாமான்களின் விலையை ஏற்றினால் கட்டுப்பாடு செய்கிறோம். வீக்லி ஹாலிடே தவிர நாஷனல் ஹாலிடே என்று 7 நாட்கள் கொடுத்தோம்.

இப்போது இந்த மே தினத்தைச் சேர்ப்பதா, வேறு நாட்களைச் சேர்ப்பதா என்பதை அலசிப் பார்த்து செய்ய வேண்டியிருக்கிறது. இப்போதுள்ள மசோதா நியாயமானது. இதிலே கொடுக்கப்பட்டிருக்கிற உரிமை ஹோட்டல் முதலாளிகளுக்கும், ஹோட்டல் தொழிலாளிகளுக்கும் நல்ல முறையிலே அமைந்திருக்கிறது. இதிலே எந்த விதமான நிர்ப்பந்தமே கிடையாது. நஷ்டப்பட்டு வேலை செய்தால் செய்யலாம். எனக்குத் தெரிந்த வரையில், சில தொழிலாளர்

[Sri R. Srinivasa Iyer] [15th November 1961

கள் விடுமுறை நாட்களில் வேறொரு ஓட்டலில் வேலை செய்து சம்பளம் வாங்கிக் கொள்கிறார்கள். இது அநேக இடங்களிலே நடக்கிறது. இஷ்டப்பட்டு வேலை செய்தால், இரவு பகலாக வேலை செய்து சம்பாதிக்கலாம். ஒரு இடத்தில் 8 மணி நேரம் வேலை செய்துவிட்டுகூட, மற்றொரு இடத்திலே வேலை செய்து ஊதியம் பெற்றுக் கொள்ளலாம். அதிலே எவ்விதக் கட்டுப்பாடும் கிடையாது. அப்படி சம்பாதித்து பிள்ளை குட்டிகளுக்கு நிறைய கொடுக்கலாம். ஆனால் National Holiday என்று பொது மக்களுக்கு ஒரு விடுமுறை நாளை கொடுத்து, அவர்களை அதை கொண்டாடச் சொல்லிவிட்டு, அப்படிக் கொண்டாடுவதை முன் னிட்டு அவர்கள் ஊர்களிலிருந்து சென்னைக்கோ அல்லது வேறு பட்டணத்திற்கோ வந்தால், ஓட்டல் மூடப்பட்டு, காப்பி கிடையாது, டிபன் கிடையாது என்பதைக் கண்டு அவர்களை துக்கம் கொண்டாடுவதற்கா இந்த நேஷனல் ஹாலிடே அவர்களுக்கு விடப்படுகிறது. அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டிய கடமை சர்க்காருக்கும் உண்டு, ஓட்டல் முதலாளிகளுக்கும் உண்டு, அதேபோல் ஹோட்டல் தொழிலாளிகளுக்கும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற வகையிலே கடமைப்பட்டிருக்கிறார் கள். ஆனால் இதிலே எந்தவிதமான நிர்ப்பந்தமே கிடையாது. ஒரு வனுக்கு தலையை வலிக்கின்றது என்று சொல்லிவிட்டால், அவனைக் கட்டாயப் படுத்தப் போவதில்லை. "மே ரிகுயர்" என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. அவன் வேலை செய்வதற்கு சம்மதப் பட்டால் வேலை செய்யலாம் என்றுதான் சொல்லப்படுகிறது. அப்படி வேலை செய்தாலும், அவனுக்கு முன்னதைவிட அதிகமான உரிமை கொடுக்கப்படுகிறது. அதாவது இரண்டு நாள் சம்பளத்தை வேண்டுமானாலும் அவன் வாங்கிக் கொள்ளலாம், அல்லது ஒரு நாள் சம்பளமும், ஒரு நாள் விடுமுறையும் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். இதை அவர்களுடைய ஆப்ஷனாக போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவை நான் வரவேற்கின்றேன். இது பொதுமக்களுக்கும் நல்லது; ஓட்டல் முதலாளிகளுக்கும், அதிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கும் நல்லது என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, ஸ்ரீ. டி. டி. டானியல் அவர்கள் 4-வது சப்-செக்ஷனைப் பற்றிச் சொன்னார்கள். இது எல்லாச் சட்டத்திலும் உள்ளது. சென்டிரல் ஜெனரல் கிளாஸஸ் ஆக்ட் 6 (எப்) ஆகியவை களிலேயும் மதராஸ் ஆக்டிலேயும் 8 (எப்) பில் இது இருக்கிறது. இப்போது இந்த மாறுதல் செய்ய வேண்டுமென்றால், எல்லாச் சட்டத்தையும் முதலிலே மாறுதல் செய்யவேண்டும். ஏற்கனவே உள்ள சட்டப்படி செய்யப்பட்ட ஒரு காரியத்தை புது சட்டத் தினால் அல்லது விதியினால், திருத்தத்தினால் பாதிக்க முடியாது. இந்த ஆக்டைப் புதிதாக கொண்டு வருகிறோம். இரண்டு சட்டசபைகளும் இதிலே உள்ள ரூல்களை திருத்தலாம். அல்லது ரூல்களை மாற்றியமைக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை ரத்து பண்ணி

15th November 1961] [Sri R. Srinivasa Iyer]

விட்டால், அந்த ரூல்படி ரெஸ்டிடியூஷனாகிவிடும். அதாவது மாற்றி யதைத் திருப்பிக் கொண்டு வருவது சாத்தியமான காரியமல்ல. இதனாலே இந்த கடைசி கிளாஸ் ரொம்பவும் அவசியம் தான். ஆகவே இந்த மசோதாவை அதிலே உள்ளபடி பூராவாகவே இருக்க வேண்டுமென்று வரவேற்று, இதை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri V. SANKARAN**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய ஸ்ரீ. ஆர். சீனுவாச அய்யர் அவர்கள் சொல்லிய கருத்துக்களை நான் ஒத்துக்கொள்ளவில்லை. பொது வாக, இரண்டு நாள் தேசிய திருநாள் என்று விடுமுறை விடப் பட்டு, அந்த நாட்களிலே எல்லோரும் வெளியே போய் உல்லாச மாக ஓட்டல்களுக்கு எல்லாம் செல்வார்கள் என்றும், அதற்கு நாம் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் அவர் சொன்னார். அதேமாதிரி வெளியூர்களுக்கும் போகவேண்டுமென்று சொன்னார் கள். சாதாரணமாக, தேசிய திருவிழாக்களை அவர் அவர்கள் நகரங்களிலேயே, வீடுகளிலேயே கொண்டாடினாலேயே போதும். அதற்காக அவர்கள் வெளியூர்களுக்குப் போகவேண்டிய அவசிய மில்லை. அதேபோல் வெளியிடங்களுக்குச் செல்ல வேண்டியதும் இல்லை. தங்கள் தங்கள் ஊர்களிலேயே வீடுகளிலேயே நல்ல முறையில் கொண்டாடலாம். இதுதான் என் கருத்து. அதனாலே பொதுமக்கள் வெளியூர்களுக்குப் போவார்கள், அந்த சமயத்திலே ஓட்டல்களுக்குப் போவார்கள் என்று சொல்லி, அந்த வகையிலே இதற்கு இத்தகைய ஒரு அர்த்தம் கொடுக்கவேண்டிய அவசிய மில்லை. அதுபோன்ற விழாக்களில் முக்கியமாக ஓட்டல்களிலே சாப்பிடுவதற்குப் பதில், வீட்டிலேயே சாப்பிடுவதுதான் நல்லது. ஆகவே, ஓட்டல்களிலே தான் சாப்பிட வேண்டுமென்ற அவசியமே இல்லை. அந்த விதத்திலே பார்க்கும்போது, கண்டிப்பாக இவர் களுக்கும் விடுமுறைதான் கொடுக்கவேண்டும். இரண்டாவது, பொதுமக்கள் வேறு, ஓட்டல் தொழிலாளர்கள் வேறு என்று நாம் பேசக்கூடாது. பொதுமக்கள் என்றால், இந்த ஓட்டல் தொழி லாளர்களையும் சேர்த்துத்தான் பார்க்கவேண்டுமே தவிர, இவர்களை மட்டும் தனியாக ஒதுக்கித் தள்ளி, அல்லது இவர்களுக்கு இதிலே பங்கு இல்லை என்ற முறையிலே இதைச் செய்யக்கூடாது. கடை சியாக, கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட் ஆக்டை எடுத்துக் கொண்டு பார்த்தால், தொழிலாளர்களுக்கு நன்மை செய்யவேண்டு மென்று, அவர்களுக்கு அனுகூலம் கொடுக்க வேண்டுமென்றுதான் இந்த மசோதா செய்யப்பட்டது. இதில் முதலாளிகளுக்கு மட்டும் அனுகூலம் செய்து கொடுத்தால், அதிலே அடிப்படைக்கு விரோதம் ஆகிவிடும். தவிர, இப்படிப்பட்ட மசோதாவில் ஒரு திருத்தம் செய்வது என்பது, ஏற்கனவே அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக் கிற உரிமையை மேற்கொண்டு இந்த திருத்தத்தின் மூலம் குறைப் பதும், குறுக்குவதும் ஆகும். இது பொருந்தாது என்று நான் நினைக்கிறேன். இப்போதுள்ள திருத்தத்தின் மூலம் நாம் முதலாளி களுக்கு மேலும் வசதி செய்துகொடுத்து, அவர்கள் மேலும் தொழிலாளர்களை நிர்ப்பந்திக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது.

[Sri V. Sankaran] [15th November 1961]

இதை எடுத்துக்கொண்டு பார்த்தால், ஏற்கனவே அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அனுகூலங்கள் திருப்பிப் பெறும்படியான ஒரு நிலைமைதான் ஏற்படும். இந்த நிலைமையை நாம் அனுமதிக்கக் கூடாது. ஏற்கனவே அனுகூலம் கிடைத்திருக்கிறது. அதை திருத்தம் என்ற பெயரிலே சொல்லி, மாற்றியமைப்பது நல்ல திருத்தமாகாது. தவிர, தொழிலாளர்களின் அனுகூலத்தை குறைக்கக்கூடிய அளவிலே ஒரு திருத்தம் கொண்டு வருவது அவசியமில்லை. ஆகவே, ஏற்கனவே இருப்பதுபோல் இருப்பதே நல்லதென்று சொல்லிக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

SRI M. P. SARATHI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஓட்டல் சட்ட மசோதாவின் மீதும், தேசிய பண்டிகைகள் விடுமுறை திருத்த மசோதாவின் மீதும் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டங்கள் தொழிலாளர்களுக்கான நன்மைகளை செய்யவேண்டுமென்பதற்காகத்தான் நமது சர்க்காரால் கொண்டுவரப்படுகிறது. அதற்காகவே ஏற்கனவேயே பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதே முறையிலே தான் ஓட்டல் தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அதேபோல் தான் பீடித் தொழிலாளர்களுக்கும், மற்றுமுள்ள தொழிலாளர்களுக்கும்கூட அவர்களுடைய நன்மையை உத்தேசித்து, அந்த நேரத்தில் பல கமிட்டிகளைப் போட்டு, அதற்குண்டான சூழ்நிலைகளை கவனித்து, என்னென்ன முறையிலே அமைக்க வேண்டுமோ அந்த முறையிலே சென்ற வருஷம் தான் நாம் இதற்கான சட்டத்தை இயற்றி இருக்கிறோம். குறிப்பாக, அதை அமுல் நடத்தி அது சரியான முறையிலே நடத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், அது சரியாக அமுல் நடத்தப்படவே இல்லை என்றுதான் தெரிகிறது. இதே ஓட்டல் முதலாளிகளும், மற்றுமுள்ளவர்களும்கூட இந்தச் சட்டத்தை கவனிக்காமலும், அதை மதிக்காமலும் தான் நடந்து கொண்டு வருகிறார்கள் என்பதைப் பார்க்கின்றோம். இப்போது இந்தச் சட்டம் அமுலில் இருக்கக்கூடிய நேரத்திலே பல ஓட்டல்களில் விடுமுறையே விடாததைத் தான் பார்க்கின்றோம். தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதியை இவர்கள் அளிப்பதில்லை. இதை சர்வசாதாரணமாக இன்றைக்கு நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். இந்த முறையிலே நடக்கும் முதலாளிகளுக்கு, மேலும் சாதகமாக இந்தச் சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வருவது தொழிலாளர்களை மேலும் கீழ்மட்டத்தில் கொண்டுபோய் விடக்கூடிய நிலையைத் தான் ஏற்படுத்துமென்று நான் நினைக்கிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ. சீனுவாச அய்யர் அவர்கள் பேசும்போது, பொதுமக்களுக்கு சேவை செய்வதற்காக வேண்டி இந்தத் தொழிலாளர்களை மேலும் அடிமைகளாக்க வேண்டுமென்ற எண்ணத்தில், அவர்கள் சேவை செய்து கொண்டுதான் இருக்கவேண்டுமென்று பேசுவது அவர்களை இழிவுபடுத்துவதாகும் என்பதை இந்தச்

15th November 1961] [Sri M. P. Sarathi]

சமயத்திலே மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், சுதந்திரத் திருநாளில் எல்லோருக்கும் சம உரிமை இருக்கவேண்டியது அவசியம். ஆகவே, அவர்களுக்கு உண்டான பாதுகாப்பளிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஆகவே, இந்த தேசீய விடுமுறை என்ற விடுமுறையை விட்டுவிட்டு, இப்போது ஓட்டல் தொழிலாளர்களை கட்டாயப்படுத்தக்கூடிய முறையில், 24 மணி நேரத்திற்குள் நோட்டீஸ் கொடுத்து, அவர்களை வேலை செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடிய முறையில் திருத்தம் கொண்டு வரத் தேவையில்லை. அப்படிச் சொல்வது, அவர்கள் வேலை செய்வதற்கென்றே பிறந்திருக்கிறார்கள், அடிமைகளாக இருப்பதற்கு என்றே பிறந்திருக்கிறார்கள் என்ற நிலைமையை உண்டாக்கிவிடும். ஆகவே, விடுமுறை நாட்களில் அவர்களும் பங்கு கொள்ளக்கூடிய முறையில் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

10 30 a.m.

முக்கியமாக இதிலே குறிப்பிட்டிருப்பது என்னவென்றால் '(2) உட்பிரிவில் என்ன சொல்லியிருப்பினும், அந்த உட்பிரிவின்கீழ் யாதொரு விடுமுறை நாளில் வேலை செய்யவேண்டும் என்று ஹோட்டலின் உரிமையாளர் யாதொரு வேலையாளைக் கேட்கலாம். அத்தகைய விஷயத்தில் ஹோட்டலின் உரிமையாளர் அந்த விடுமுறை நாளுக்கு இருபத்துநான்கு மணி நேரத்துக்குக் குறையாமல் மேற்சொன்னவாறு வேலை செய்யவேண்டும் என்று கேட்கும் எழுத்து மூலமான அறிவிப்பு ஒன்றை நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் அந்த வேலையாளிடம் சேர்ப்பிக்கவேண்டும்.' அத்துடன் அது விடப்பட்டிருக்கிறது. அந்த வேலையாள் வரமுடியாது என்று சொல்லவேண்டுமென்றால், அவன் அம்மாதிரி சொல்லவே முடியாதபடி அமைந்திருக்கிறது. அந்தத் தொழிலாளிக்கு சாதகமாக ஒரு சட்டம் கொண்டுவந்தால் பரவாயில்லை. வேலை செய்ய என்னால் முடியாது என்று தொழிலாளி சொல்லுவதற்கு உரிமை உண்டு என்று இதில் கண்டிருந்தால் இந்த மசோதா நல்ல முறையில் அமைந்திருக்கும். ஆகையினால், அந்த உரிமை கூட தொழிலாளிக்கு இல்லாமல் போய்விட்டது. எந்த நல்ல நோக்கத்தைக் கொண்டு தேசீய விடுமுறை நாட்களும், மற்ற விடுமுறை நாட்களும் தொழிலாளர்களுக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று நிர்ணயித்தோமோ, அந்த நோக்கத்திற்கு அனுகூலமாகத்தான் இந்த மசோதா அமைய வேண்டுமே தவிர, அந்த உரிமையை குறைக்கும் விதத்தில் முதலாளிக்கு அனுகூலமான முறையில் அமையக்கூடாது என்ற யோசனையைச் சொல்லி, என் பேச்சை முடிக்கிறேன்.

SRI K. B. S. MANI : அவைத் தலைவர் அவர்களே, தேசீய விடுமுறை நாட்களிலே தொழிலாளிகளும் ஹோட்டலை நடத்துகிற முதலாளியும் விரும்பினால், தொழிலாளிகளை வைத்து ஹோட்டல் நடத்தலாம் என்ற பிரிவிலே தொழிலாளர்களுடைய நலன் ஏதோ பாதிக்கப்பட்டு நசுக்கப்படுவதாகவும், அதனால் பெரிய பாதகம்

[Sri K. B. S. Mani] [15th November 1961

வந்துவிடுவதாகவும் கூறுகிறார்கள். தேசிய விடுமுறை தினங்களில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மாணவ, மாணவிகள் ஒன்று சேர்ந்து விளையாட்டுகளையும், களியாட்டங்களையும் நடத்தி வருகிறார்கள். அம்மாதிரி விளையாட்டுகள், களியாட்டங்களில் உண்மையிலேயே தங்களுடைய உடல் நிலையை ஒட்டி தங்களுக்குத் தேவையான உணவை புசிக்கக்கூடிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். அந்தக் காலத்தில் எல்லா ஹோட்டல்களும் மூடப்பட்டிருந்தால் அவர்களுடைய நிலைமை என்ன ஆகும் என்பதைப்பற்றி சற்று யோசிக்க வேண்டும். தேசிய விடுமுறை தினங்களில் தொழிலாளிகளும், முதலாளிகளும் இஷ்டப்பட்டால் ஹோட்டல் நடத்தலாம் என்றுதான் இருக்கிறது. அவர்கள் கட்டாயம் அன்று வேலை செய்து தான் தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அவர்கள் விருப்பப்பட்டால், முதலாளிகளும் விருப்பப்பட்டால் நல்ல முறையிலே ஹோட்டல்களை அந்த விடுமுறை தினங்களில் நடத்த முடியும், நடத்தலாம் என்றுதான் குறிக்கப்பட்டிருக்கிறது. தேசிய விடுமுறை தினங்களில் தாலுகா தலைநகரங்களில் 20,000, 30,000 மாணவ மாணவிகள் கூடி விளையாட்டு விழாக்களை நடத்துகிறார்கள். அவர்களுடன்கூட ஆசிரியர்களும், விளையாட்டுகளைக் கண்டுகளிக்கப் பெற்றோர்களும் வருவார்கள். அவ்வளவு பேர்களுக்கும் உதவியாக அவர்களுக்குத் தேவையான உணவுகளை வழங்குவது என்பது விழாக் குழுவினால் முடியாத காரியம். தீபாவளியை ஒட்டி ஹோட்டல்களில் ஸ்பெஷல் பலகாரங்கள் செய்யப்படுவதுபோல, அதன் மூலம் முதலாளிகளும் தொழிலாளிகளும் லாபம் அடைவது போல, இம்மாதிரி தேசிய விடுமுறை தினங்களில் விழாக்கள் கொண்டாடும் பொழுது அங்குள்ள ஏராளமான மாணவ மாணவிகளுக்கும் மற்றவர்களுக்கும் விசேஷ பலகாரங்கள், தின்பண்டங்கள் செய்யப்பட்டு ஹோட்டல்களில் வழங்கப்படவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இம்மாதிரி தினங்களில் ஹோட்டல்கள் நடத்துவது மிகவும் அவசியம். தொழிலாளிகள், முதலாளிகள் விரும்பினால், அந்த விழா தினங்களில் ஹோட்டல்கள் நடத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மசோதாவினால் தொழிலாளிகளுக்குப் பெரிய நஷ்டம் ஏற்படுகிறது, உரிமை பாதிக்கப்படுகிறது, உரிமை பிடுங்கப்படுகிறது என்றெல்லாம் சொல்லுவது மிகையாகக் கூறுவதாக இருக்குமே தவிர, வேறு அல்ல. உண்மையிலேயே இதையொட்டி உயர்ந்த மனப்பான்மையோடு தேசீயத்தில் நமக்கு இருக்கிற நம்பிக்கைக்கு, அபிமானத்திற்கு, தேசத்தினுடைய நலனுக்காக இம்மாதிரி விழாக்களைக் கொண்டாடுகிறோம் என்ற பெருமைக்கு இது இழுக்காகும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். தேசீய விடுமுறை தினங்களில் எல்லோரும் நல்ல மனதோடு பெருமைப்பட்டுக்கொண்டு விசேஷ பலகாரங்களை விருப்பப்படி புசிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அம்மாதிரி முறையிலேதான் செய்யப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் இதன் மூலம் வருகிற லாபத் தொகையை அன்று வேலை செய்கின்ற தொழிலாளிக்கும் போனஸ்

15th November 1961] [Sri K. B. S. Mani]

போலப் பங்கு போட்டுக் கொடுத்து நல்ல முறையில் செய்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறி, நான் என்னுடைய உரையை முடிக்கிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN: ஸார், இந்தத் திருத்த மசோதாவை இந்த நேரத்தில் கொண்டுவந்திருப்பது ரொம்பவும் வருத்தப்படக்கூடிய விஷயம். இது அவசியமற்ற ஒரு திருத்தம் என்றுதான் நான் பலமாக ஆட்சேபிக்கிறேன். தயவு செய்து இந்த நேரத்திலே இந்தத் திருத்தத்தைக் கைவிடுவது ரொம்பவும் நல்லது என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் என்ன என்று சொன்னால், தேசியப் பண்டிகை விடுமுறையாக ஏழு தினங்கள் விடப்பட்டிருக்கிறதே, அதைச் சர்க்கார் தானாகவே கொண்டு வந்துவிடவில்லை. பல பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் எதிர்த்துப் போராடி, கிளர்ச்சி செய்து, அதற்குப் பிறகுதான் அதைக் கொண்டு வந்தார்கள். அதைக் கொடுக்கிற மாதிரி கொடுத்து, பின்னாலே கன்னத்தில் அறைந்து பிடுங்கினால் எப்படியோ அம்மாதிரி முறையில், முதலாளிகளுக்கு வக்காலத்து வாங்கக்கூடிய தன்மையிலே, முதலாளிகளுக்குச் சாதகமான முறையில் தொழிலாளிகளைப் பாதிக்கக்கூடிய தன்மையிலே இந்தத் திருத்தம் அமைந்திருக்கிறதே தவிர, தொழிலாளிகளுக்கு நன்மை செய்யக்கூடிய அளவுக்குக் கிடையாது. ஹோட்டல் தொழிலாளர்கள் என்று சொன்னால், ஹோட்டலுக்குப் போகக்கூடியவர்கள் எல்லோருக்கும் தெரியும், அந்தத் தொழிலாளிகள் இரவு பகலாக வேலை செய்யக்கூடியவர்கள், இரவு பகலாக வேலை செய்துவிட்டு சாப்பிட முடியாத ஒரு நிலைமையில், சாப்பிட்டதை ஜீரணம் செய்யக்கூடாத நிலைமையில் பல வியாதிகளுக்கு உள்ளாகக்கூடிய நிலைமையில் இருக்கும் தொழிலாளர்கள். அப்பேர்ப்பட்ட தொழிலாளர்களுக்கு இரவு காலத்தில் உறங்குவதற்குக்கூட சுகாதார முறையில் அமைந்த இடங்கள் இருக்கிறதா என்று பார்த்தால் கிடையாது. அந்த ஒரு நிலைமையில் தான் அவர்கள் போராடிப் பெற்ற சட்ட ரூபமாக வந்திருக்கக்கூடிய விடுமுறை தினங்களில் கூட முதலாளிகள் விரும்பினால் எந்த நேரத்திலும், யாதொரு தினத்திலும் 24 மணி நேரம் நோட்டீஸ் கொடுத்து வேலையை வாங்கலாம், ஹோட்டல் நடத்தலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதற்காக வேண்டி? அவர்களுடைய வருமானத்திற்கு வேண்டி. கனம் சீனுவாசய்யர் அவர்கள் அந்த விடுமுறை தினத்தில் அந்தத் தொழிலாளி இன்னொரு ஹோட்டலில் போய் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது, நான் பார்த்திருக்கிறேன் என்று சொன்னார். நானும் பார்த்திருக்கிறேன், இல்லை என்று சொல்லவில்லை. எல்லாத் தொழிலாளர்களும் அப்படியில்லை. யாரோ ஒரு சிலர் 100-க்கு ஒன்றிரண்டு தொழிலாளர்கள் அவர்களுடைய உழைப்பிற்கேற்ற ஊதியத்தை பெறமுடியாத ஒரு நிலைமையில் இருக்கிற காரணத்தினால், அவர்கள் அப்படி அதிகமாகப் பாடுபடக்கூடிய அளவுக்கு, கஷ்டப்படக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. விடுமுறை தினங்களில் வேறு ஹோட்டல்களில்

[Sri V. K. Kothandaraman] [15th November 1961

போய் வேலை செய்வது மாத்திரம் அல்ல, தவறான முறையில் கூடப் போகக்கூடிய அளவுக்கு இன்றைய சமூக அமைப்பு இருக்கிறது என்பதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு அவர்களுக்குப் போதுமான அளவுக்குச் சம்பளம் கொடுக்காமல், பஞ்சப்படி கொடுக்காமல், இன்னும் அவர்களுக்கு என்னென்ன உரிமைகள் இருக்கின்றனவோ, ஜீவாதார உரிமைகள் இருக்கின்றனவோ, அவைகளையெல்லாம் கொடுக்காமல், இன்றையதினம் தொழிலாளர்களுடைய வயிற்றில் அடித்து முதலாளிகள் சம்பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. நாம் பார்க்கவேண்டியது என்னவென்று சொன்னால், பாடுபட்டுக் கஷ்டப்படக்கூடிய தொழிலாளர்களுக்கு நன்மையாக இருக்கவேண்டும் என்பதற்காக வேண்டிக் தான் இந்த விடுமுறை தினங்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் தேசீயவிடுமுறை தினங்கள் கொண்டாடுவதற்கு வேண்டியே ஒழிய வீட்டிலேயே படுத்துத் தூங்குவதற்கு அல்ல. ஸ்ரீ சீனுவாசய்யர் அவர்கள் சுலபமாகச் சொல்லலாம். ஆனால் தொழிலாளர்கள் எந்த அளவுக்கு இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எல்லோரையும் ஒன்று சேர்த்து தேசீய தினத்தைக் கொண்டாடக்கூடிய அளவுக்குச் சர்க்கார் மூலமாகவோ, அல்லது சர்க்காரைச் சேர்ந்த கட்சித் தலைவர் மூலமாகவோ எங்கேயாவது ஏற்பாடு செய்தது உண்டா என்பதைப் பார்த்தால் அடியோடு கிடையாது. "எங்களுக்குத்தான் இதைக் கொண்டாடுவதற்கு 'ரைட்', ஆகையினாலே நாங்கள் வேறு ஒருவரையும் கிட்ட சேர்க்கமாட்டோம், கிட்ட சேர்த்தால் கன்னா பின்னா என்று எதிர்க் கட்சிகளைப் பற்றி பேச முடியாது" என்ற முறையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கூப்பிடாமல் அவர்கள் என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்ற முறையில், மற்றவர்களைச் சேர்க்காமல் தேசீய தினத்தைக் கொண்டாடுகிறார்கள். தமிழ்நாட்டில் தீபாவளியைப் போன்ற முக்கியமான பண்டிகைகளெல்லாம் வருகின்றன. தேசீய விடுமுறை தினங்களும் வருகின்றன. அம்மாதிரி தினங்களில் கூட தொழிலாளர்கள் வேலை வாங்கக்கூடிய நிலைமை இருக்குமானால், அதைவிட வருத்தப்படக்கூடிய விஷயம் ஒன்றும் கிடையாது. அது தொழிலாளர்களை மிகவும் அழுத்தமாகப் பாதிக்கக்கூடிய ஒரு பிரச்னை என்பதை நாம் கவனத்தில் வைக்க வேண்டும். இந்த ஏழு தினங்களிலே கூட, தொழிலாளிகள் கேட்கிறார்கள் என்றால், இன்னின்ன தினங்கள் என்பதை நாங்கள்தான் சொல்லுவோம், நீங்கள் கேட்கும் நாட்களைக் கொடுக்க முடியாது, உங்களுக்கு வேண்டிய நாட்கள் என்றால், லீவுதான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமைதான் இருக்கிறது பல இடங்களிலே. மே தினம் சர்வதேசீய விடுமுறை நாள். அதற்கும் சர்க்கார் இன்றைக்கு லீவு விட்டு விட்டு, அதற்குப் பதிலாக இன்னொருநாள் தொழிலை நடத்துங்கள் என்று முதலாளிகளுக்கு அறிக்கை விடுகிறார்கள். சர்க்காரே அவ்வளவு

15th November 1961] [Sri V. K. Kothandaraman]

முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய தினத்திலேகூட, அந்தத் தொழிலாளிகளுக்கு அவர்களின் ஜீவாதார உரிமைகளை வழங்கும் தினத்தில் கூட, விடுமுறை கொடுப்பது கிடையாது.

ஹோட்டல் தொழிலாளி ஒருவரை ஒழித்துக் கட்ட வேண்டும் என்றால், 24 மணி நேரம் என்று போட்டிருந்தாலும், 4 மணி நேரம் மட்டும் அறிவித்துவிட்டு, நோட்டீஸ் போர்டையும் தொங்கவிட்டு விட்டு, அதிகாரிக்கும் எழுதி அனுப்பி, தொழிலாளியும் 24 மணி நேரம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதாகக் கையெழுத்திடும் முறையில் செய்துவிடுகிறார்கள். கனம் ஸ்ரீனிவாச அய்யர் சொன்ன மாதிரி, லேபர் இன்ஸ்பெக்டர், லேபர் கமிஷனர் எல்லோரும் இருக்கிறார்கள், அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆனால் நடைமுறையில் நாம் பார்ப்பது என்ன? சில இடங்களில தொழில் இலாகா அதிகாரிகள் நியாயத்தை எடுத்துக் கூறும் அளவுக்குச் செய்தால், முதலாளிகளும், சர்க்காரும் கூட என்ன நினைக்கிறார்கள்? "இவன் என்ன கம்யூனிஸ்ட் போல் இருக்கிறது, தொழிலாளிக்குச் சாதகமாக இருக்கிறார், பேசுகிறார், இவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று எழுதக்கூடிய நிலைமைதான் இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். கனம் அமைச்சர் என்ன நினைப்பார்? சரி, இவர்கள் சொல்லுவதிலும் உண்மை இருக்கும் என்று சொல்லித் கன்யா குமரியிலிருப்பவரைத் தூக்கி வட ஆற்காடு ஜில்லாவிற்கும், வட ஆற்காடு ஜில்லாவில் இருப்பவரை இன்னொரு ஜில்லாவிற்கும் மாற்றி விடுகிறார்கள். ஆகவே, நேர்மையாக நடக்கும் அதிகாரி கூட என்ன நினைப்பார்? "நமக்கு என்ன; இவர்கள் சொல்வது போல் செய்து விட்டுப் போவோம்; ப்ரமோஷனும் கிடைக்கும், சம்பள உயர்வும் கிடைக்கும்" என்று சொல்லக்கூடிய . . . .

DEPUTY SPEAKER : The hon. Member is talking on irrelevant matters. His time is up.

SRI V. K. KOTHANDARAMAN : இல்லை, இல்லை; சம்பந்தப்பட்டதுதான். ஆகவே, நிலைமை அந்த அளவுக்கு இருக்கிறது. அமைச்சரவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆகவே, இந்தத் திருத்தம் அவசியமற்றது, கை விடவேண்டும், என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இது தொழிலாளிகளுடைய நன்மைக்காக அல்ல, முதலாளிகளின் நன்மைக்காகவே முழுக்க முழுக்க இருக்கிறது. திடீர், திடீர் என்று இன்னொரு ஹோட்டலுக்குப் போய்விடுகிறார்கள் என்றால், காரணம், அங்கே அவர்களைப் பாதிக்கக்கூடிய நிலைமை இருப்பதால்தான். ஆகவே, தயவுசெய்து, இந்த மசோதாவைக் கைவிடவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா ஹோட்டல் தொழிலாளிகளின் விடுமுறையைப் பற்றியது. இதைப் பற்றி முன்பே சட்டம்

[Sri M. Bhaktavatsalam] [15th November 1961

இயற்றப் பட்டிருக்கிறது. 7 விடுமுறை நாட்கள் என்றும், இரண்டு தேசீய விடுமுறை நாட்கள் என்றும், கட்டாயமாக விடவேண்டும் என்றும், 5 பண்டிகை நாட்கள் இன்னின்ன நாட்கள் என்று அவர்கள் கலந்து ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும் என்றும் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்திலேயே தேசீய விடுமுறை நாட்களில் தொழிலாளிகள் வேலை செய்தால், நஷ்டஈடு என்ன கொடுக்க வேண்டும் என்றும் இருக்கிறது. இரட்டிப்பாக ஊதியம், அல்லது மற்றொரு நாள் விடுமுறையும், ஒரு நாள் ஊதியமும் கொடுக்க வேண்டும் என்றிருப்பது பழைய சட்டம். அது புதிதாக வரவில்லை.

கடைசியாகப் பேசிய அங்கத்தினரைக் கேட்கும்போது, எனக்கு கிராமபோன் ரிக்கார்டுதான் ஞாபகத்திற்கு வந்தது. கிராமபோன் ப்ளேட் பழைய பாட்டுத்தான் பாடும். இன்றைக்கு என்ன காலம், காலத்திற்குத் தக்கபடி ராகம் என்பார்கள், அப்படி அதற்கு ஒன்றும் தெரியாது. ப்ளேட்டைப் போட்டால் அது பழைய பாட்டைத்தான் பாடும். நான் பார்த்திருக்கிறேன், கல்யாண வீட்டில் "பண்டித மோதிலால் நேருவைப் பறிகொடுத்தோமே" என்று பாடும். முகூர்த்தம் நடந்து கொண்டிருக்கும். அந்த மாதிரி, இவர்கள் சொல்வதெல்லாம் பழைய பல்லவி தான். "நாங்கள்தான் தொழிலாளிகளைப்பற்றிக் கவலைப்படுகிறோம், அரசாங்கம் ஒன்றும் கவனிக்கவில்லை, முதலாளிகளுக்கு விட்டுக் கொடுக்கிறார்கள்" என்ற அந்த வாதத்திற்கு நான் இப்பொழுது தீவிரமாகப் பதில் சொல்லத் தேவையில்லை. அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்று தொழிலாளிகளுக்கே தெரியும். பொது மக்களுக்குத் தெரியும்.

"தேசீய விடுமுறை நாளிலே போய் வேலை செய்யச் சொல்லலாமா?" என்று கேட்கிறார்கள். "முழு விடுமுறையாக விட வேண்டும்" என்று சொல்லுகிறார்கள். முதலில் பேசிய ப்ரஜா சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் கனம் சின்னதுரை கூட, "நாம் ரொம்பப் பிற்போக்கான சட்டம் கொண்டு வந்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். ஒன்று தேசீய விடுமுறை பற்றி சொல்லும்போது, அந்த விடுமுறைநாளில், எல்லோரும் உண்ணாவிரதம் இருக்கிறதானால்—உண்ணும் விரதம் இருக்கிறார்கள்; உண்ணும் விரதம் இருக்கலாம், ஆனால், உண்ணாவிரதம் இருப்பதானால், இப்பொழுது நடக்கும் உண்ணாவிரதம் போல் அல்ல, உண்மையாகவே உண்ணாவிரதம் இருப்பதானால்—சரி, முழு விடுமுறையாகச் செய்யலாம். ஆகஸ்ட் 15-தேதி, ஜனவரி 26-ம் தேதி தினங்களில் உண்மையிலேயே உண்ணாவிரதம் அனுஷ்டிக்கச் சம்மதப்பட்டால், ஹோட்டல்களை மூடிவிடலாம். ஹோட்டல் முதலாளிக்கு நஷ்டம் வந்துவிடும் என்பதல்ல பிரச்னை. அவர்கள் வேண்டுமானால் இன்னொரு நாளைக்கு வேலைசெய்துவிட்டுப் போகிறார்கள். விடுமுறை 7 நாட்கள் கொடுக்க வேண்டும். அது குறையவில்லை. விடுமுறை இந்த நாளாக இருந்தால் என்ன, அந்த நாளாக இருந்தால் என்ன, நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடாது.

15th November 1961] [Sri M. Bhaktavatsalam]

ஆனால், நாம் விடுமுறைநாளில் உண்ணாவிரதமா இருக்கிறோம்? மகா சிவராத்திரிபோல் இருக்கிறோமா? ஒருபொழுது நாட்கள், பலகாரங்கள் செய்யும் நாட்கள் இருக்கின்றன. அப்படியில்லாமல், பூராவும் உண்ணாவிரதம் எல்லோரும் இருந்தால், ஹோட்டல்களே வேண்டியதில்லை. ஆனால், பலருக்கும் ஹோட்டல்கள் தான் வேண்டியிருக்கிறது; ஏதோ தொழிலாளிகளுக்குப் பாதகமாகவும், முதலாளிகளுக்குச் சாதகமாகவும் செய்வதாகச் சொல்கிறார்கள். அதுவல்ல உண்மை. ஹோட்டல்களில் சாப்பிடுகிறவர்கள் இருக்கிறார்கள். பொதுமக்கள் சாப்பிடுகிறார்கள். விடுமுறை நாட்களில், வீட்டில் இருப்பவர்கள்கூட தமாஷாகப் போய் சாப்பிடுகிறார்கள், நல்ல ருசியாக இருப்பதனால். "விடுமுறை இன்று, தமாஷாகச் சாப்பிடலாம்" என்று போகிறார்கள். அவர்களின் சௌகரியத்தைக் கவனிக்க வேண்டியிருக்கிறது; பொதுமக்கள் சௌகரியத்தைக் கவனிக்க வேண்டியிருக்கிறது.

நான் ஒரு முறை பாரிஸ் நகரில் இருந்தேன்; அன்று சுதந்தர விழா. ரொம்பக் கோலாகலமாக இருந்தது, நம்மைவிட நூறு பங்கு, பல மடங்கு கோலாகலமாகக் கொண்டாடினார்கள். கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. நகரைச் சுற்றி வந்தேன். கடைகளெல்லாம் மூடப் பட்டிருந்தன. ஆனால், எல்லா ஹோட்டல்களும் திறந்து இருந்தன. அது சுதந்தர நாளில்! அந்தத் தொழிலாளிகளுக்குச் சுதந்திர உணர்ச்சி இல்லையா? அவர்கள் என்ன ஹோட்டல்களையெல்லாம் மூடிவிட்டுச் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று இருந்தார்களா? சலூனுக்குப் போகலாம் என்றால்கூட, மூடியிருந்தது. ஆனால், ஹோட்டல்களில் வேலை செய்து கொண்டு இருந்தார்கள். அது சிறந்த தேசீய விடுமுறை நாள். சுதந்திர நாள். ஆனால் பார்த்தேன், ஹோட்டல்களெல்லாம் திறந்திருந்தன. பின்னால் வரும் மசோதாவில் மற்றத் தொழில்களைப் பற்றிச் சொல்லுகிறேன். ஆகவே, ஹோட்டல்களை மூடுவதால் பாதிக்கப்படுவது முதலாளிகள் அல்ல, ஹோட்டல் அதிபர்கள் அல்ல, ஆனால் பொதுமக்கள். அவர்களுக்காகத் திறந்து வைக்க வேண்டியிருக்கிறது. அசல் மசோதாவில், தேசீய விடுமுறை நாளில் வேலை செய்தால், இரண்டு பங்கு கொடுக்க வேண்டும் என்று இடம் அளிக்கப் பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல், கனம் அங்கத்தினர் திரு. பக்கிரிசாமி பிள்ளை "மே டே" பற்றிச் சொன்னார்கள். இந்த அசல் மசோதா விவாதத்திற்கு வந்தபோதே திருத்தப் பிரேரணைகள் கொண்டு வந்தார்கள். அவற்றை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை, அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, திரும்பத் திரும்ப "மே டே"-யைப் பற்றிச் சொல்வதில் அர்த்தம் இல்லை, ஆட்சேபணையில்லை. தொழிலாளிகளுக்கு வேண்டுமென்றால், மற்ற பண்டிகை விடுமுறையை எடுத்து விட்டு, மே டே கொடுக்கலாம் என்று சொல்லுகிறோம். அதைக் கூடத் தவறு என்று கனம் கோதண்டராமன் சொல்லுகிறார்கள். நாம் சுதந்திரம் அடைந்து விட்டோம், சுதந்திர நாளாகிய ஆகஸ்டு 15-ம் தேதியையும், வெள்ளைக்கார

[Sri M. Bhaktatasalam] [15th November 1961

ஆட்சி நீங்கி, நாம் சுதந்திரம் அடைந்து குடியாட்சியை ஸ்தாபித்துக்கொண்ட ஜனவரி 26-ம் தேதியையும், தேசிய நாட்களாகக் கொண்டாடி வருகிறோம். ஆனால் அதேபோல இந்த "மே டே"-க்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இந்தச் சுதந்திர நாட்களிலே அவர்களுக்கு நம்பிக்கை இல்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது . . .

Sri V. K. KOTHANDARAMAN : On a point of Order, Sir.

DEPUTY SPEAKER : Order, order. The Hon. Minister is not yielding. So, the hon. Member should resume his seat.

Sri V. K. KOTHANDARAMAN : I rise on a point of order, Sir.

சுதந்திர தினம், குடியரசு தினம் ஆகிய இரண்டு தினங்களுக்குப் பதிலாக "மே தினம்" கொண்டாடப் படவேண்டுமென்று நான் சொல்லவில்லை . . . .

DEPUTY SPEAKER : It is not a point of order. The hon. Member should resume his seat.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நான் சொல்வதைக் கேட்காமலேயே கனம் அங்கத்தினர் பேசுகிறார். தேசிய விடுமுறை நாட்களுக்குப் பதிலாக அவர்கள் மே டே-ஐக் கேட்கிறார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் தேசிய விடுமுறை நாட்களுக்குச் சமமாக மே டே இருக்க வேண்டுமென்று சொன்னால் அதை நான் ஆட்சேபிக்கிறேன். அப்படிச் சொல்கிறவர்களுக்கு இந்த சுதந்திர தினத்திலே நம்பிக்கை இல்லை என்றுதான் நான் சொல்லுவேன். அதற்காகத்தான் மே டே-ஐ இதிலே சேர்க்கவில்லை. மே டே என்பது தொழிலாளர்களுக்கு ஒரு முக்கியமான நாள்தான். ஆனால் அது புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்று சொல்வது தவறு. தொழிலாளர்களின் சார்பாக நானும் பேசலாம். நான் சொல்வது என்னவென்றால், தொழிலாளர்களுக்கு இந்த மே தினத்தை விட தேசிய நாட்கள்தான் முக்கியமானது. சரி சமம் என்று சொல்ல முடியாது. மே தினம் வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம் என்று சட்டத்திலே இருக்கிறது. அதைப்பற்றி இப்பொழுது பேசுவதற்கு அவசியமில்லையென்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, கனம் அங்கத்தினர் டேனியல் அவர்கள் இது சட்டத்தின் அமைப்புக்கே முரண்பாடானது என்று கூறினார்கள். இந்தத் தேசிய விடுமுறை நாட்களிலே வேலை செய்யலாம் என்று இருக்கிறது. அதற்கு விளக்கமாகத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது. தொழிலதிபர்கள் தங்களுடைய இஷ்டம்போல் தொழிலாளர்களை நிர்ப்பந்தித்து விட முடியாது. தொழிலாளர்களுக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதோடுகூட, இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரிஸுக்கும் நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் இருக்கிறது. இதிலே ஒன்றும் முரண்பாடு கிடையாது. இரண்டு நாட்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டும், அல்லது ஒரு நாளுக்கு

[15th November 1961 [Sri M. Bhaktavatsalam]

விடுமுறையும் மற்றொரு நாளுக்கு ஊதியமும் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அது போதாது என்று கனம் அங்கத்தினர் பக்கிரிசாமி அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றித் திருத்தமும் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற நிலைமை நடைமுறையை ஒட்டித்தான் இருக்கிறது. இதற்கு வேறு சட்டம் செய்ய வேண்டியது அவசியமில்லை. ஆகவே இந்த மசோதாவை இந்த மன்றம் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961) be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2

DEPUTY SPEAKER : The question is—

" That clause 2 do stand part of the Bill."

Sri V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" *Add* the following proviso, after new sub-section (4) (*a*) (ii) of section 11 of the principal Act :—

'Provided that no employee shall be compelled to work on such holiday against his will '."

" *For* new sub-section (4) (*b*) (i) of section 11 of the principal principal Act, *substitute* the following :—

(i) to wages at twice the daily average wage as provided in section 13 and including food allowances' or "

Sri N. MARUDACHALAM : I second the amendments, Sir.

Sri S. PAKKIRISAMI PILLAI : Sir, I move—

" In line 20, after the words ' to wages at ' *insert* the words ' one and a quarter of '.

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

* Sri S. PAKKIRIASAMI PILLAI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தத்தைப் பற்றிப் பேசும்பொழுது சில விஷயங்களை இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சாதாரணமாக நம் நாட்டிலே இந்த ஹோட்டல் நிறுவனங்கள் மிகவும் நல்ல நிலையிலே, செழிப்பாக, லாபத்தைப் பெருக்கிக் கொண்டு வளரும்படியான ஸ்தாபனங்களாக இருந்து வருகின்றன. பல ஹோட்டல் முதலாளிகள் முதலில் ஒரு ஹோட்டலை ஸ்தாபித்து, அதற்குப் பிறகு பல ஹோட்டல்களை ஸ்தாபிக்-

கும் முறையில் நல்ல வளர்ச்சி பெற்று இந்தத் தொழில் நடந்து கொண்டு வருகின்றது. பெரிய பெரிய ஸ்தாபனங்களெல்லாம் வெவ்வேறு ஜில்லாக்களில் மட்டும் அல்ல, வெவ்வேறு ராஜ்யங்களிலேயும் தங்களுடைய கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தி நிறைய லாபத்தை சம்பாதிக்கும்படியான நிலைமையில் இருக்கிறார்கள். எப்படி நாம் பெரிய தொழில் அதிபர்களை, அவர்களுக்கு நிறைய லாபம் வருகிறது என்ற காரணத்தால், வற்புறுத்தி தொழிலாளர்களுக்கு அதிகமான சலுகைகளைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோமோ, அதேமாதிரியாக இந்த ஹோட்டல் நிறுவனங்களிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்பதற்கு உரிமை இருக்கிறது. இதைப் பற்றிச் சட்டம் கொண்டுவருவதற்கு அரசாங்கமும் மனது வைக்க வேண்டும். ஒரு தொழில் ஸ்தாபனத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் மட்டும் இந்தப் பண்டிகை தினங்களிலே வேலை செய்யவேண்டுமென்று சொன்னால் அந்த மாதிரி வேலை செய்யக் கூடாது என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் அந்த மாதிரி வேலை செய்வதற்கு ஊக்கம் கொடுக்கும்படியான முறையிலே, ஈடு கொடுக்கும்படியான முறையிலே என்ன ஊதியம் கொடுக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். அதைக் கவனிப்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். சாதாரணமாக, ஹோட்டல் முதலாளிகளை அணுகி அந்தமாதிரி தேசீய விடுமுறை நாளிலே வேலை செய்வதற்காக அன்றைக்கு இரட்டிப்புச் சம்பளம் கொடுத்து இன்னொரு நாளும் விடுமுறை கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம். இந்த நிறுவனங்கள் "கேட்டரிங் எஸ்டாபிளிஷ்மெண்ட்" என்ற அடிப்படையின்கீழ் வருவதன் காரணமாக, இவற்றிற்கு ஏன் அரசாங்கம் தனிப்பட்ட முறையிலே வழிவகை செய்யக் கூடாது? எப்படி நாம் தேசீயப் பண்டிகை விடுமுறை நாட்களிலே பொதுமக்களுக்கு உபயோகப்படும்படியான வகையிலே வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறோமோ, அதே நிலையிலே இந்த ஹோட்டல்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். நிறைய லாபம் வருகிறபொழுது ஏன் அப்படிச் செய்து கொடுக்கக் கூடாது? குறைந்த பட்சம் இரண்டு நாள் சம்பளம் கொடுக்கலாம். இரண்டு மணி நேரத்திற்கு ஓவர் டைம் வேலை செய்தால் இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று பேமெண்ட் ஆப் வேஜஸ் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாதிரி கேட்பதற்கும் நியாயம் இருக்கிறது. அப்படி இருக்கும்பொழுது, இந்த மாதிரி ஒரு மசோதாவைக் கொண்டு வந்து ஏன் தடை செய்கிறார்கள் என்று கேட்கிறேன். தொழிலாளிகள் கோர்ட்டுக்குப் போய் கேட்டு வாங்குவதற்குக் கூட உரிமை இருக்கிறது. ஆனால் இந்த மாதிரிச் சட்டம் கொண்டு வருவதினாலே அம்மாதிரி கோர்ட்டுக்குப் போகும் உரிமையைத் தடுப்பதற்கு வழி செய்கிறது. அவர்களுக்கு உண்டான, நியாயமான, விடுமுறை நாளைக்கு வேலை செய்வதற்கு உள்ள சம்பளத்தை வாங்குவதற்குத் தடை விதிக்கக் கூடாது

என்பதுதான் என்னுடைய கருத்து. அப்படி இரண்டு நாள் சம்பளம் அன்றையதினம் வேலை செய்வதற்காகக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், இப்பொழுது நடைமுறையில் மற்ற இடங்களிலே உள்ளது போல் ஒன்றேகால் நாள் சம்பளமாவது அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலே கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Sri V. K. KOTHANDARAMAN : உதவி சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் முதல் திருத்தமானது பின்வருமாறு—

" *Add* the following proviso, after new sub-section (4) (*a*) (ii) of section 11 of the principal Act :—

" Provided that no employee shall be compelled to work on such holiday against his will ."

இந்த மாதிரி விடுமுறை நாளாயிருந்தாலும் தொழிலாளியை "நீ வந்து வேலை செய்துதான் ஆகவேண்டும்" என்று வற்புறுத்தி வேலை வாங்கக்கூடிய நிலைமை இல்லை என்று சொன்னாலும்கூட, தொழிலாளி விரும்பினால், அவரும் ஏற்றுக் கொண்டால் வேலை செய்யலாம் என்ற அளவுக்காவது திருத்தம் வந்தால் நலமாயிருக்கும். ஆனால் முதலாளிகள் எவ்வளவு பேர் தாங்கள் கேட்டும் தொழிலாளிகள் மதிக்கவில்லை என்ற முறையிலே பேசுவதை நான் பார்த்திருக்கிறேன். ஆகவேதான் நான் இந்த சிறிய திருத்தத்தை கொடுத்திருக்கிறேன். அவர்களுக்கு விருப்பம் இல்லை, ஓய்வுதான் வேண்டும் என்று பிரியப்பட்டால் அவர்களை விட்டுவிட வேண்டும், அவர்கள் விரும்பினால்தான் அந்தத் தினத்திலே வேலை செய்ய வேண்டும் என்கிற திருத்தத்தை கனம் அமைச்சர் அவர்கள் 11-00 a.m. ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய இரண்டாவது திருத்தமாவது—

" *For* new sub-section (4) (*b*) (i) of section 11 of the principal Act, *substitute* the following :—

' (i) to wages at twice the daily average wage as provided in section 13 and including food allowances ' or "

ஹோட்டல் தொழிலாளிகளுக்குப் பஞ்சப் படியும் கொடுப்பதில்லை. பெரிய பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்குக் கொடுப்பது போன்ற சலுகைகள் இவர்களுக்கு இல்லை. ஓரளவு குறைந்த பட்ச சம்பளம் மாத்திரம்தான் இவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. விடுமுறை தினத்தில் வேலை செய்தால் இரண்டு தினங்களுக்கான 'ஆவரேஜ் வேஜ்', உணவு அலவன்சு இரண்டும் கொடுக்கவேண்டுமென்று நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இதையும் கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

Sri P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கொடுத்திருக்கும் இரண்டாவது திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். தேசீய விடுமுறை நாட்களிலே ஹோட்டல்

தொழிலாளிகள் வேலை செய்ய நேர்ந்தால் அவர்களுக்கு இரட்டிப்புச் சம்பளம் கொடுப்பதோடு, அந்த விடுமுறை நாட்களுக்குரிய வேறொரு விடுமுறை நாளை அனுபவிக்க உரிமை வழங்க வேண்டுமென்று கோருவதுதான் இந்தத் திருத்தத்தின் நோக்கமாகும்.

பொது மக்களின் சௌகரியத்திற்காக ஹோட்டல் தொழிலாளிகள் தேசியப் பண்டிகை விடுமுறை நாட்களில் பணி புரிய வேண்டுமென்று கோருகின்றபோது உண்மையிலேயே ஹோட்டல் தொழிலாளிகள் சம்பந்தப்பட்டவரை, அந்த நாளை அவர்கள் தியாகம் செய்கிறார்கள் என்று தான் அர்த்தம். அதற்குப் பதிலாக வேறொரு விடுமுறை நாளை அவர்கள் அனுபவித்தாலுங்கூட அந்த நாளைப் போல், அவ்வளவு சுவையுள்ளதாக அவர்களுக்கு இருக்காது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். ஜனவரி 26-ந் தேதியை எடுத்துக் கொண்டால் அந்த நாளிலே ஹோட்டல் தொழிலாளி . . .

DEPUTY SPEAKER : தயவு செய்து திருத்தத்தைப்பற்றி மாத்திரம் பேசுங்கள்.

SRI P. S. CHINNADURAI : சம்பளம் என் கொடுக்க வேண்டும் என்பதைத்தான் சொல்கிறேன். திருத்தத்திற்குச் சம்பந்தம் உடையதாகத்தான் பேசுகிறேன். 'திருத்தத்தை ஆதரிக்கிறேன்' என்று சொல்லிவிட்டு உட்கார வேண்டுமென்று சொன்னால் அப்படியே செய்கிறேன்.

DEPUTY SPEAKER : நான் அம்மாதிரிச் சொல்லவில்லை. திருத்தத்தைப்பற்றி மாத்திரம் தான் பேசவேண்டும் என்று சொன்னேன்.

SRI P. S. CHINNADURAI : தேசியப் பண்டிகை விடுமுறை நாட்களில் தொழிலாளி வேலை செய்யவேண்டுமென்று கோரினால் அந்தத் தொழிலாளி அந்த நாளைத் தியாகம் செய்கிறான் என்று தான் அர்த்தம். அதனால் அந்தத் தொழிலாளிக்கு அன்றைக்கு இரட்டை நாள் சம்பளம் கோர பாத்தியதை உண்டு என்று தான் நான் சொல்கிறேன். அதற்கு இன்னும் ஒரு காரணம் என்னவென்றால், அந்த நாளை அவன் தியாகம் பண்ணுகிறான். அந்த நாளை உண்மையாக அனுபவிக்க உரிமை பெற்றவன் அந்த உரிமையை இழந்து வேலைக்கு வருவதால் இரண்டு நாள் சம்பளம் கொடுங்கள் என்று கோர அவனுக்குப் பாத்தியதை இருக்கிறது என்று தான் நான் மறுபடியும் சொல்ல விரும்புகிறேன்.

தொழிலாளி, பொது மக்களுடைய சௌகரியத்திற்காக வேலை செய்யவேண்டும் என்று கோரப்படுகின்றபோது தொழிலாளியும், அந்த நாளைக்கு வேலைசெய்வதற்கான விலை கொடுக்க வேண்டும் என்று கோர பாத்தியதை இருக்கிறது. அந்தப் பாத்தியதையை இந்தச் சபை அங்கீகரிக்க வேண்டும். அதற்குரிய திருத்தத்தை ராஜ்ய சர்க்கார் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும். ராஜ்ய சர்க்கார் அத்தகைய திருத்தத்தைக் கொண்டுவராத காரணத்தி

னால் கனம் அங்கத்தினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் கொடுத்திருக்கும் திருத்தத்தை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*** SRI R. SRINIVASA IYER :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிலே புதிதாகச் சேர்க்கப்படுகிற (4) (ஏ) (1), (2)-வது உப-பிரிவுகளைப் பார்த்தால், நிர்ப்பந்தப்படுத்தி, கட்டாயப்படுத்தி யாரையும் வேலை வாங்கிவிடுவதாகச் சொல்ல முடியாது. (பி) உப-பிரிவைப் பார்த்தால், அந்தத் தொழிலாளி இஷ்டப்பட்டு வேலை செய்தால், இரட்டிப்புச் சம்பளம் அல்லது ஒரு நாள் சம்பளத்தோடு, ஒரு விடுமுறை நாளையும் அனுபவிக்கலாம் என்று இருக்கிறது. இஷ்டப்பட்டு வேலை செய்யாத தொழிலாளியை வைத்துக்கொண்டு முதலாளி வேலை செய்யவேண்டுமென்று நினைத்தால், தொழில் பாதிக்கப்பட்டுவிடும். தொழிலாளி தொழிலை நஷ்டப்படுத்த நினைப்பான். காபியிலே உப்பைப் போட்டால் கூடத் தொழில் பாதிக்கப்பட்டுவிடும். தொழிலாளி இஷ்டமாக வேலை செய்தால்தான் தொழில் நன்றாக நடக்க முடியும். இல்லையேல் தொழிலை மூடுவது நலம்.

விடுமுறை நாளிலே வேலை வாங்கவேண்டுமானால், தொழிலாளிக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். இன்ஸ்பெக்டருக்கும் நோட்டீஸின் காப்பி அனுப்பப்படவேண்டும் என்று விதிகள் இருக்கின்றன. அத்துடன் வேலை செய்கிற நாளில் இரட்டைச் சம்பளம் அல்லது ஒரு நாள் சம்பளத்தோடு இன்னொரு நாள் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம். அந்த விடுமுறை நாளுக்கும் சம்பளம் இருக்கிறது. அன்றைக்குச் சாப்பாடும் இருக்கிறது. ஆகையால், சம்மதமில்லாமல் வேலை வாங்குவதாகச் சொல்ல முடியாது. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையே thin end of the wedge புகுத்தி அந்த பிளவு அதிகரித்துக் கொண்டே போகுமானால், முதலாளி ஹோட்டலை மூடிக்கொண்டு போகவேண்டி வரும். முதலாளி தொழிலை மூடின பிறகும் தொழிலாளிகள் அதைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று கூறுவதும் உண்டு. ஆக, தொழிலையே மூடிவிடக்கூடிய அளவு இவர்களுக்குள்ள உறவு கெட்டுவிடக் கூடாது. பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்கு வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் அந்தத் தொழிலாளி வேலை செய்தால் இரட்டிப்புச் சம்பளம் கேட்க உரிமை இருக்கிறது. விடுமுறை நாளிலும் சம்பளம் கொடுக்கலாம். கனம் அங்கத்தினர் கொடுத்திருக்கும் திருத்தம் தேவையில்லை. இரட்டைச் சம்பளமும் சாப்பாட்டுப் படியும் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அத்தகைய திருத்தம் அவசியமில்லை. காலையில் அடுப்பிலிருந்து முதலில் எடுக்கிற இட்லி தொழிலாளிக்குத்தான் நைவேத்யம் செய்யப்படுகிறது. தொழிலாளிக்குத்தான் முதல் சாப்பாடு, காபி முதலியவை. பிறகுதான் மற்றவர்களுக்கு. ஆக, ஹோட்டல் தொழிலாளிக்குச் சாப்பாடு போட்டுத்தான் தொழில் நடக்கிறது. அவர்கள் 24 மணி நேரமும் வேலை செய்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. எட்டு மணி நேரம் வேலை செய்தால் ஒரு மணி நேரம்

ஓய்வு இருக்கிறது. இதற்கெல்லாம் சட்டம் இருக்கிறது. 24 மணி நேரமும் கட்டாயப்படுத்தி வேலை வாங்க எந்தச் சட்டமும் இடம் கொடுக்கவில்லை. நடைமுறையிலும் அப்படி இல்லை. ஆகையால், 'இன்க்ளூடிங் புட் அலவன்ஸ்' என்று இந்த ஷரத்தைத் திருத்த வேண்டிய அவசியமில்லை. இரட்டைச் சம்பளமும், டிகிரி காப்பியும் சாப்பாடும் இருந்து கொண்டிருக்க, 'புட் அலவன்ஸ்' ஏன் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை. வேலை செய்கிற நாளுக்குச் சாப்பாடும், இரட்டைச் சம்பளமும் இருக்கும்போது தனியாக 'புட் அலவன்ஸ்' தேவையில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலையே பாதிக்கக்கூடிய முறையில் தொழிலாளிகள் நடந்து கொள்ளக்கூடாது என்று சொன்னால், தொழிலாளிகளுக்கு விரோதமாகப் பிரசாரம் செய்கிறதாக யாரும் சொல்லிவிடக்கூடாது. எது நியாயம் என்று பேசவேண்டும். சுவரை வைத்துச் சித்திரம் எழுதவேண்டும் என்பதுபோல, முதலாளி என்பவர் முதல் போட்டு, இரவு பகலாகப் பல இடங்களிலிருந்து சாமான்களை வாங்கிவந்து, தொழிலாளர்களையும் நியமித்து ஹோட்டலை நடத்தினால்தான் தொழிலாளிகளும் பிழைப்பார்கள். எதற்கெடுத்தாலும் ஊதியம் நிறைய வேண்டும் என்ற நிலைமை எங்கு பார்த்தாலும் இருக்கிறது. பொருள்களின் உற்பத்தி பெருகினால்தான் விலை குறையும். அரிசி விலையும் குறையும். கூலியை ஏற்றிக்கொண்டே போனால் தொழில் நடக்காது. சர்க்கார் சிப்பந்தியாக இருந்தாலும் சரி, வேறு தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்குத் தேவையான ஊதியம் கொடுக்கவேண்டும் என்பதில் ஆட்சேபணை இல்லை. ஹோட்டல் தொழிலாளிக்கு இப்படிப்பட்ட விடுமுறை நாளில் வேலை செய்யும்போது இரட்டைச் சம்பளம் கொடுக்கும்போது, உணவும் அங்கு கொடுக்கப்படும்போது, 'உணவு அலவன்ஸ்' என்று தனியாக இதில் குறிப்பிட வேண்டியது அவசியம் என்று எனக்குத் தோன்றவில்லை.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, தேசீய விடுமுறை நாட்களில் தொழிலாளிகள் வேலை செய்வதைப்பற்றி நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது என்ற முறையில் திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேசீய விடுமுறை நாளில் தொழிலாளியை வேலை செய்யச் சொல்ல வேண்டுமானால், அந்தத் தொழிலாளிக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. பாக்டரீஸ் இன்ஸ்பெக்டருக்கும் நோட்டீஸின் நகல் அனுப்பப்படவேண்டுமென்று விதி இருக்கிறது. ஒரு தொழிலாளியால் விடுமுறை நாளில் வேலைசெய்ய முடியவில்லையென்றால், அவர் விடுமுறை எடுத்துக்கொள்ளலாம். அது வேறு விஷயம். சாதாரணமாக தொழிலாளிகள் 'ஓவர் டைம்' வேலை செய்கிறார்கள் என்றால், உற்பத்தியைப் பெருக்கும் நிமித்தமாகச் செய்யவேண்டியிருக்கிறது. குறைந்தபட்சம் ஒரு தொழிலாளி எத்தனை மணி நேரம் வேலை செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், உற்பத்திப் பெருக்கத்தின் நிமித்தமாக 'ஓவர் டைம்' வேலை செய்யவேண்டி ஏற்படுகிறது. அப்படிச் செய்யும்போது

இரட்டிப்புச் சம்பளம் தொழிலாளிக்குக் கிடைக்கிறது. இப்படிப் பல சட்டங்களிலே இடம் இருக்கிறது. சில இடங்களில் ஒரே சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் இரட்டிப்பு சம்பளம் கொடுக்கவேண்டுமென்று சாதாரணமாக எல்லாச் சட்டங்களிலும் இருக்கிறது. அந்த அடிப்படையில் தான் தேசீய விடுமுறை நாட்களில் வேலை செய்தால், இரட்டிப்புச் சம்பளம் கொடுக்கவேண்டுமென்று இந்த மசோதாவில் கண்டிருக்கிறது. ஹோட்டல் தொழிலாளிகள் தியாகம் செய்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. தியாகம் செய்வதைப்பற்றி மறுக்கவில்லை. ஹோட்டல் தொழிலாளிகள் கடுமையாக உழைக்கவேண்டியிருக்கிறது. அவர்கள் உழைக்கவில்லையென்றால் நாம் சாப்பிட முடியாது, நம் பசி தீர முடியாது. அந்த வகையில் அவர்கள் செய்வது தியாகமாகத்தான் இருக்கிறது. தேசீய விடுமுறை நாட்களில் வேடிக்கை பார்க்காமல் வேலை செய்தால் இரட்டைச் சம்பளம் கிடைக்கிறது என்றால், அவர்களுக்குப் பொருளாதார வகையிலே நலமாகத்தான் இருக்கமுடியும். அப்படிச் செய்வதில் கெடுதல் இல்லை. பேச்சுக்கு வேண்டுமானால் சொல்லலாம், அவர்கள் தியாகம் செய்வதாக. விடுமுறையை எப்படி உபயோகிப்பது என்பது வேறு விஷயம். அப்படி ஓவர் டைம் வேலை செய்வதாக இருந்தால், இரட்டைச் சம்பளம் கிடைக்கிறது. மற்றொரு நாள் விடுமுறை வாங்கிக்கொள்வதோடு கூட, ஒரு நாள் சம்பளமும் கிடைக்கிறது.

அதற்கு மேலே ஓவர்டைம் கேட்பதற்கு இடமில்லை, நியாயமில்லை. உணவு அலவன்ஸ் கொடுப்பது பற்றிச் சொல்லப்படுகிறது. சம்பளத்தோடு உணவு அலவன்ஸ் கொடுப்பது அல்லது கொடுப்பதில்லை என்று முன்னதாகவே காண்ட்ராக்ட் செய்து கொள்ள முடிந்தது. அந்த ஒப்பந்தத்தில் உணவு அலவன்ஸ் கொடுப்பது என்று இருந்தால் இப்போதுத் தருவார்கள். இதற்காக இந்தச் சட்டத்திலேயே அதைக் கொண்டு வரவேண்டுமென்ற அவசியமும் இல்லை, முறையும் இல்லை. ஆகவே, இந்தத் திருத்தங்கள் எதையும் நான் ஏற்றுக்கொள்ள முடியாமைக்காக வருந்துகிறேன்.

The amendments of Sri V. K. Kothandaraman and Sri S. Pakkirisami Pillai were put and lost.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961) be passed."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961) be passed."

[15th November 1961

* SRI S. PAKKIRISAMI PILLAI : கனம் அமைச்சரவர்கள் எந்தத் திருத்தத்தையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்ன பிற்பாடு நாம் அதைப் பற்றி அதிகமாகப் பேசுவதற்கில்லை. ஆனாலும் கனம் அமைச்சரவர்கள், அரசாங்க அதிகாரிகள் இவர்கள் எல்லாம் ஒன்று கூடி விடுமுறை நாட்களில் இந்தத் தொழிலாளர்களை வேலை செய்யச் சொல்கிறபோது என்ன சம்பளம் கொடுக்கிறார்கள்? என்ன அலவன்ஸ் கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். பாரிஸ் நகரத்தைப் பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படித்தான் இருக்கும் எல்லா தேசங்களிலும். நம் நாட்டில் மட்டும் வேறு விதமாக இருக்கும்படி செய்யாமல் சர்வதேச தொழிலாளர் இயக்கத்தின் விதிகளை இங்கே அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். பத்தாம் பசலியாக பழைய முறையிலேயே தொழிலாளர்கள் தர்மம் செய்யும்படியாக இருப்பது நியாயமாக இருக்காது. தொழிலாளர்கள் முன்னேறுவதனால்தான் நாட்டுக்கு நன்மை கிடைக்கும். நாடும் சுபிட்சமடையும். இப்படி சின்னஞ்சிறு சலுகைகளைக் கூட அந்தத் தொழிலாளிகளுக்கு நாம் கொடுக்காமல் பிற்போக்கான நிலைமையில் இருப்பது சரியல்ல. ஆகவே, இந்த மசோதா பிடிக்கவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்ற வேண்டாமென்று பணிவன்போடு கேட்டுக் கொண்டு ஆளும் கட்சியினர் தங்களுக்கிருக்கிற மெஜாரிடியின் காரணமாக இதை நிறைவேற்றித் துணிந்தது மிகவும் வருந்தத்தக்கது என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தத் திருத்த மசோதாவினால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நன்மை ஏற்படப் போவதில்லை. பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களுடைய ஊதியத்தையும் அவர்களுக்குக் கிடைக்க விடாமல் செய்வதற்குத்தான் இந்த மசோதா காரணமாக அமையும். எப்படியும் இதை நிறைவேற்றியே தீர வேண்டுமென்று சர்க்கார் இருப்பதால் இந்தத் தருணத்தில் இதை விட அதிகமாகப் பேசிப் பயன் இல்லை. ஹோட்டல் முதலாளிகள்தான் என்ன செய்யப் போகிறார்கள். தங்கள் கல்லாவுக்குப் பின்னால் இருக்கக் கூடிய சாமி படங்களுக்கு அதிகமாகச் சூடம் கொளுத்தப் போகிறார்கள், இந்த மசோதாவை நிறைவேற்றப் போகிற காரணத்தினால். அதைத் தவிர அரசாங்கத்துக்கும், அரசாங்கக் கட்சியினருக்கும் இதனால் பெரும் நன்மை விளையப் போவதில்லை. ஏதோ சில பேர் வந்து சொன்னார்கள் என்பதற்காக, அந்த முதலாளிகளுக்காகப் பெருவாரியான தொழிலாளர்களுக்கு நன்மை புரியாத ஒரு மசோதாவை நாம் நிறைவேற்றுகிறோம். இது தவறு என்று மட்டும் குறிப்பிடுகிறேன்.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா நிறைவேற்றப்படுவதனால் ஹோட்டல் முதலாளிகளுக்கு எப்படி லாபம் ஏற்படப் போகிறது

15th November 1961] [Sri M. Bhaktavatsalam]

என்று புரியவில்லை. ஒன்றிரண்டு தேசிய விடுமுறை நாட்களில் தொழிலாளர்களை வேலை செய்யும்படி சொன்னால் ஒன்றுக்கிரண்டாகச் சம்பளம் கொடுத்து விடுகிறார்கள். கனம் அங்கத்தினர் பக்கிரிசாமி பிள்ளை அவர்கள் ரொம்பப் பிற்போக்கான நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார். நான் சொல்வேன்—இந்த அரசாங்கம் அவ்வப்போது தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, தொழிலாளர் இயக்கத்தில் அக்கறை கொண்டு, அந்தத் தொழிலாளர்களுடைய தலைவராக இருந்து இன்று அமைச்சராக இருக்கிற ஒரு அமைச்சராலேயே பல மசோதாக்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த அரசாங்கம் பத்தாம் பசலியாக இல்லை. பத்தாம் பசலியாக தொழிலாளர் நலனில் இருக்கிறது என்று குற்றம் சாட்டுவதும் பொருந்தாது. எனக்கு முன்னால் இரண்டு தொழிலாளர் தலைவர்கள் பேசினார்கள். அவர்களுடைய பேச்சுத்தான் பத்தாம் பசலியானது என்று சொல்லலாமே தவிர, அரசாங்கத்தின் காரியங்கள் எல்லாம் முற்போக்கானது என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Catering Establishments (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 40 of 1961) be passed."

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL HOLIDAYS) (AMENDMENT) BILL, 1961 (L.A. BILL NO. 41 OF 1961).

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Deputy Speaker, I beg to move—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961) be taken into consideration."

Sir, the Bill was introduced in the House on 19th September 1961. According to sub-section (1) of section 5 of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Act, 1958, every employee shall be paid wages for each of the holidays allowed to him under section 3. Under sub-section (3) of section 5 of the said Act an employee who is paid wages by the day or at piece-rates shall be entitled to be paid wages at the rates prescribed in that sub-section, for any holiday allowed under section 3, but no such employee shall be entitled to be paid any wages for any of the holidays allowed under section 3 other than the 26th January and the 15th August, if he has not completed a period of thirty days' continuous service immediately proceeding such holiday.

It has been represented that even workers who have put in long years of service are deprived of the benefit of the wages for the festival holidays granted under section 3 of the said Act as the

[Sri M. Bhaktavatsalam] [15th November 1961

employers insist that the workers must have been in continuous service for thirty days immediately preceding such holiday in order to enable them to claim wages for that holiday.

Even if the worker is absent for one day during this period, he becomes ineligible for wages on the holiday. The Government have examined the question in detail and they consider that it is not necessary for the employees to put in thirty days' continuous service immediately preceding the holiday every time before they are entitled to be paid wages for the holiday. They have decided that the employees should be entitled to be paid wages for all the festival holidays allowed under the Act, once they have completed a total period of thirty days, within a continuous period of ninety days immediately preceding such holiday.

It is also considered that on the lines of the amendment proposed to the Madras Catering Establishments Act, 1958, contained in the Madras Catering Establishments (Amendment) Bill, 1961, which has just been passed, provision should be made in this Act also to enable the employer to require an employee to work on a national or festival holiday provided he is given the option to avail himself of a substituted holiday or to get wages at twice the ordinary rate of wages, for the holiday.

It is also considered that section 12 of the Act should be amended to give effect to the recommendation of the Committee on Subordinate Legislation regarding the placing of rules on the table of both Houses of the Legislature.

The Government of India have no objection to the State Government undertaking the proposed legislation.

I move that the Bill be taken into consideration.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தேசீய விடுமுறை நாட்களிலேகூட ஏன் வேலை செய்ய வேண்டுமென்றிருக்கிறது என்பது பற்றி. முன்பு ஹோட்டலைப் பற்றி மட்டும் குறிப்பிட்டேன். தேசிய விடுமுறை நாட்களிலே சாப்பிடாதவர்கள் இருக்கிறார்களா என்று கேட்டேன். மற்றத் தொழில்களிலும் கூட—கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள்—ஒரு மணி நேரம், அரை மணி நேரம்கூட மூட முடியாத நிலை இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்கும் நிமித்தம் விடுமுறை விடாது தொழிலை நடத்த வேண்டியிருக்கிறது. ஆகையால்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதைக் கனம் அங்கத்தினர்களும், தொழிலாளர் தலைவர்களும் தொழிலாளர்கள் நிமித்தம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

15th November 1961]

DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961) be taken into consideration.'

SRI V. K. KOTHANDARAMAN: சார், இப்போது விவாதம் செய்யப்பட்டு முடிவு பெற்ற ஹோட்டல் தொழிலாளர் பற்றிய திருத்த மசோதாவின் தொடர்ச்சிதான் இது. இது போன்ற விடுமுறை தினத்தில் வேலை வாங்காமல் விட்டு விடுவது என்று சொன்னால் உற்சாகமாகக் கொண்டாடக் கூடிய தினங்களில் ஸ்வீட் கொடுக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் ஹோட்டல் தொழிலாளர்கள் பற்றிய திருத்த மசோதாவில் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் தொழிலாளர்களுக்கு இந்த விடுமுறை தினங்கள் எல்லாம் தேவையில்லை என்று சொல்லிவிட்டு, "நீங்கள் தான் தொழிலாளிகள் பக்கத்தில் இருப்பதுபோல் கிராமபோன் ரிக்கார்டு மாதிரிப் பேசிக் கொண்டிருக்கிறீர்களே!" என்று கேட்டார்கள். நாங்கள் முதலாளிகளை எந்தெந்தப் பிரச்னையில் எதிர்ப்பது என்பதை யோசித்துத்தான் எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறோம். எப்போதும் எதிர்த்துக் கொண்டேயிருப்பதில்லை. கிராமபோன் ரிக்கார்டு என்று அமைச்சரவர்கள் சொன்னது மாதிரி, நாங்கள் எப்போதும் தொழிலாளர் பக்கந்தான் பேசுவோம். ஆனால் ஆளும் கட்சியினருடைய கிராமபோன் ரிக்கார்டு எப்போதும் முதலாளிகள் பக்கமே பேசிக் கொண்டிருப்பதாகும். வித்தியாசம் அவ்வளவுதான்.

நான் இதிலே ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். ஏழு தினங்கள் விடுமுறை கொடுக்கலாம் என்றிருப்பதில் தற்போது குடியரசு தினமாக ஜனவரி 26-ம் தேதிக்கும் சுதந்திர தினமாக ஆகஸ்ட் 15-ம் தேதிக்கும் கண்டிப்பாக விடுமுறை அளிக்க வேண்டுமென்றிருக்கிறது. இதோடுகூட மேலும் மூன்று தினங்களை, மே தினம், காந்தி ஜெயந்தி தினம், தமிழ் வருஷப் பிறப்பு தினம் ஆகிய மூன்று தினங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். மே தினத்திற்கு இருக்கக் கூடிய முக்கியத்துவம் தேசிய தினத்திற்குக் கிடையாது என்று சொல்வது தேசிய தினத்தை முக்கியமாகக் கருதக் கூடிய அளவுக்கு நல்ல பார்வை இல்லை என்பதைத்தான் காட்டுகிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். உங்களுடைய பார்வைப்படிப் பார்த்தாலும்கூட இந்தத் தேசிய தினங்களுக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவரான, உலக உத்தமர் காந்திஜியின் பிறந்த தினத்தை, இந்த நாட்டின் விடுதலைக்கு வழி காட்டியாக இருந்தவருடைய பிறந்த தினத்தை மற்ற இடங்களில் எல்லாம் விடுமுறையாக விடும்போது, ஏன் இவர்களுக்கும் கட்டாய விடுமுறையாக விடக்கூடாது, இதை ஏன் தேசிய விடுமுறை தினமாக ஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[15th November 1961

* **THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தேசிய விடுமுறை நாட்கள், மற்ற விடுமுறை நாட்கள் பற்றி முன்பு விவாதிக்கப்பட்ட மசோதாவில் ஆட்சேபணைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லப்பட்டது. பொது தன்மையைக் கருதி விடுமுறை நாட்களில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இப்போது பேசிய கனம் அங்கத்தினர் கோதண்டராமன் அவர்கள், மே தினத்திற்குத்தான் ஏதோ சொன்னீர்கள், காந்தி பிறந்த நாளை ஏன் சேர்த்துக்கொள்ளவில்லை என்று கேட்டார்கள். அதற்கும் நான் காரணம் சொல்கிறேன். ஐந்து பண்டிகை நாட்கள் இருக்கின்றன. இன்னென்ன பண்டிகை நாட்கள் என்று சட்டத்தில் இல்லை. எதற்கு விடுமுறை வேண்டுமென்று தொழிலாளர்களே நிர்ணயித்துக் கொள்ளலாம். காந்தி அடிகள் பிறந்த தினத்தைவிட வேறு என்ன பெரிய பண்டிகை இருக்கிறது என்று நினைக்கிற தொழிலாளர்கள் அன்றைக்கு விடுமுறை எடுத்துக்கொள்ளலாமே. சும்மா தேசிய விடுமுறை என்று விடுவதை விட, தொழிலாளர்கள் இவ்வாறு எடுத்துக் கொள்வதில் தான் சிறப்பு இருக்கிறது. இதைப்பற்றியெல்லாம் முன்பே, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்ட போதே தொழிலாளர் தலைவர்களுடனும் தொழிலதிபர்களுடனும் பேசி இந்த 7 நாட்களை நிர்ணயித்திருக்கிறோம். எந்தப் பண்டிகை நாட்களுக்கு விடுமுறை வேண்டுமோ அந்த தினத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று இருப்பதால் மேலும் மாற்றுவது சரியல்ல என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

DEPUTY SPEAKER : The question is—

"That clause 2 do stand part of the Bill".

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the following amendments—

Add the following proviso, after the proposed new sub-section (2) (*a*) (ii) of section 5 of the Principal Act :

"Provided that no employee shall be compelled to work on such holiday against his will."

Substitute the following for new sub-section (2) (*b*) (*a*) of section 5 of the principal Act.—

"(i) to wages at twice the daily average wage including food allowances or"

15th November 1961] [Sri V. K. Kothandaraman]

Add the following after the words, "15th August" in the proviso to sub-section (3) of section 5 of the principal Act :—

"Gandhi's Birth Day, Tamil New Year's Day and May Day".

The amendments were duly seconded.

SRI S. PAKKIRISAMI PILLAI : Sir, I move the following amendment—

In Clause 2, line 35, after the words "For such Day" *add* the words,

"At one and quarter of the ordinary rate of wages."

DEPUTY SPEAKER : There is no seconder.

SRI P. S. CHINNADURAI : I am seconding it, Sir.

DEPUTY SPEAKER : The hon. Member should do it immediately. All right. I will allow it this time.

The clause and the amendments are before the House for discussion.

Is the hon. Member Sri V. K. Kothandaraman anxious to speak? I think he has already explained everything. Any way if he wants to speak again, I have no objection.

SRI V. K. KOTHANDARAMAN : I do not want to speak anything now.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, திருத்தங்கள் பிரேரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்படுகின்றன. அவைகளுள் எதையாவது ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அமைச்சர் அவர்கள் கொஞ்சமாவது இணக்கம் கொடுத்தால்தான் எந்தத் திருத்தமானாலும் நிறைவேறும். ஆகையால் அமைச்சர் அவர்கள் இந்தத் திருத்தங்களிலே எதையாவது ஏற்றுக்கொள்ளக் கருதியிருக்கிறாரா, இல்லையா என்பதை நன்கு ஆராய்ந்து தங்களுடைய சம்மதத்தைத் தெரிவிக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 11-30 a.m.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது பேசிய கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர்கள் முன்பு ஒரு முறை கூறினார்கள் எல்லாம் மெஜாரிட்டி பலம் என்று. இந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்றுவருகிற நடைமுறையில் இரண்டு பேர்கள் அல்லது ஒருவர் கொண்ட எதிர் கட்சிகளாக இருந்தாலும் அவர்களுடைய கருத்துக்களையெல்லாம் தெரிந்துகொண்டு, அவர்களையும் கேட்டு, அவர்களுடைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுத்து, எல்லாக் காரியங்களையும் செய்துகொண்டு வருகிறோம் என்பது தெரியும். ஆனால் ஒன்று—

மைனாரிட்டி டிக்டேட் செய்ய இடம் கொடுக்க முடியாது. திருத்தத்தைச் சொல்லுகிறார்கள். அவைகளைப் பரிசீலனை செய்கிறோம். ஏதாவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளுகிறோம். அப்படி ஏற்றுக்கொள்ளுவதற்கில்லையென்றால் அதற்கான காரணங்களை விளக்கிச் சொல்லுகிறோம். அதை விளக்கிச் சொல்லி எந்தக் காரணங்களினால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று சொல்லுகிறோம். இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக தொழிலாளருடைய நலனைக் கருதவில்லை என்று சொல்ல முடியாது. தொழிலாளருடைய நலனைப் புறக்கணிக்கிறோம் என்று சொல்லுவதற்கு இடமில்லை. இந்தத் திருத்தங்களைப் பொறுத்த வரையில் சர்க்காருடைய நிலையை முன்பே நான் விளக்கியிருக்கிறேன். இந்தத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை. இந்தத் திருத்தங்களை எதிர்க்க வேண்டியிருப்பதற்கு நான் வருந்துகிறேன்.

The amendments of Sri V. K. Kothandaraman and Sri S. Pakkirisami Pillai were put and lost.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961) be passed."

DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961) be passed."

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவானது ஓரளவுக்கு தொழிலாளிகளுக்கு ஒரு விதத்தில் நன்மை செய்கிறது. 30 நாள் தொடர்ந்து சர்வீஸ் என்ற அம்சத்தைப் பொறுத்த வரையில் இது வரையில் தொழிலாளர்களுக்கு பல வித இடையூறுகளைச் செய்வதற்கு சில தொழில் நிர்வாகிகள் முயன்று வந்தார்கள். அந்தத் தவறான முறைக்கு ஒரு தடை போடுகிறது இந்தத் திருத்த மசோதா என்பதற்காக இந்த அம்சத்தை வரவேற்கிறேன். ஆயினும் சம்பளம் பற்றிய திருத்தத்திலே இரட்டைச் சம்பளம், வேறு ஒரு நாள் விடுமுறை என்று கொடுத்திருந்தால் இன்னும் அதிகமாக இதை வரவேற்றிருக்க முடியும். இந்த மசோதாவும் சரி, இதற்கு முன் நிறைவேற்றிய மசோதாவும் சரி நிறைவேற்றப்படுவதற்கு முன்னால் மாநில தொழில் நல போர்டில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதால், பல நல்ல யோசனைகள் சொல்லப்பட்டிருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். நான் 3-4 மாதங்கள் இங்கே இல்லாமலிருந்தேன். அந்த காலத்தில் தொழில் நல போர்டு இதனை விவாதித்ததோ என்னவோ தெரியாது. இந்தத் திருத்த மசோதாக்கள் தொழிலாளர் நல ஆலோசனை போர்டில் ஆலோசிக்கப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட மசோதாக்களை நிறைவேற்றுவதற்கு முன்னால் தொழிலாளர்களின் பிரதிநிதிகளின் ஆலோசனைகளைக் கோரிப் பெறுவது இனிமேலாவது அவசியம் என்று அரசாங்கத் தரப்பினர் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறி, பொதுவாக இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : சார், திருத்த மசோதா நிறைவேறி விட்டது. அது தங்களுடைய பலத்தைக் கொண்டு, என்ன கொண்டு வந்தாலும் நிறைவேற்றக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. இருந்தபோதிலும், நண்பர் சின்னதுரை அவர்கள் சொன்ன மாதிரி தொழிலாளர்களிடத்தில் கலந்து ஆலோசித்திருக்கவேண்டும். அது போகட்டும், இலாகா அதிகாரிகளிடத்தில் கலந்திருக்கிறார்களா என்று பார்த்தால் அப்படி கலந்ததாகவே நான் நம்பவில்லை. அந்த அளவுக்கு . . .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தொழிலாளர் இலாகா அதிகாரிகளிடத்தில் கலந்து பேசியிருக்கிறார்களா கனம் அங்கத்தினர் அவர்கள்?

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மாதிரி சொன்னோம் என்று சொன்னால் அதிகாரிகளுடைய கழுத்தைச் சீவும் அளவுக்கு இருக்கிறது. என்னவாவது பேசினார்களா என்ன என்று கேட்டு அவர்களுக்கு ஆபத்தை உண்டாக்க நீங்கள் கேட்கிறீர்கள்—சொல்ல வேண்டுமென்று விரும்புகிறீர்கள். உண்மையில் ஒருவரையும் கலக்காமல், கேட்காமல், ஹோட்டல் முதலாளி வந்து மந்திரியிடம் சொன்னார், மந்திரி உடனே எழுதினார்—ஆர்டர் போட்டு விட்டார். அதுதான் நடந்திருக்கிறது. ஆகையால் இனிமேலாவது தொழிலாளர்களோடு கலந்து ஆலோசனை செய்து முடிவுக்கு வரவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மஹாத்மாஜி பிறந்த நாளை தேசீய விடுமுறை தினமாகச் சேர்க்கவேண்டுமென்று சொன்னதற்கு, மே தினத்தைப் பற்றிச் சொன்னவுடன் கர்ஜனை செய்து சீறி விழுகின்ற அளவுக்கு இதிலே மந்திரிக்குத் துணிச்சல் வரவில்லை. பண்டிகை நாட்கள் 7-ல் இரண்டு போனால் பாக்கி 5 நாட்கள் இருக்கின்றன, தொழிலாளிகள் விரும்பினால் இதையும் வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார். சாதாரண பண்டிகை தினத்திற்குச் சமமாகச் சொல்லும் அளவுக்கு, அந்த அளவுக்குத்தான் அந்தஸ்து, மதிப்பு மஹாத்மாஜி அவர்களுக்குக் கொடுக்கும் அளவுக்கு வந்திருக்கிறது என்றால் இதைவிட வருத்தப்படக்கூடியது வேறு இல்லை என்று

[Sri V. K. Kothandaraman] [15th November 1961

தாழ்மையாகத் தெரிவித்துக் கொண்டு, மீண்டும் பரிசீலனை செய்து அந்த தினத்தையாவது சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மஹாத்மாஜிக்காக கனம் கோதண்டராமன் அவர்கள் பரிந்து பேசும்போது தான் உண்மையில் அவருக்கு மாற்றம் ஏற்பட்டு விட்டதா அல்லது வேறு ஏதாவது தடுமாற்றமா என்று சந்தேகம் வந்து விட்டது. காரணம் மஹாத்மாஜிக்காக மரியாதை செலுத்துவதில் நாம் என்றைக்கும் பின் தங்க மாட்டோம். மஹாத்மாஜி அவர்கள் நாட்டின் உற்பத்தி பெருகவேண்டுமென்று ஆசைப்பட்டதால், அண்ணல் காந்தியடிகள் தொழிலாளர்கள் தேசியப் பிரஜையாக இருக்கவேண்டும் என்று சொன்ன காரணத்தினால், இரண்டு தேசியத் திருநாளை விடுமுறை நாட்களாக எடுத்திருக்கிறார்களே தவிர, அண்ணல் காந்தியடிகள் மேல் அன்பு எங்களுக்குக் குறைவாகி விட்டது என்று கனம் கம்யூனிஸ்ட் அங்கத்தினர் எடுத்துக் காட்டுவது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. இருந்த போதிலும், இந்த மசோதா மிக மிக வரவேற்கத் தக்க ஒரு மசோதா. தொழிலாளருக்கு அவர் ரெக்கார்டு, முதலாளிகளுக்கு நாங்கள் ரெக்கார்டு என்று சொன்னார். தொழிலாளர்களுக்கும் நல்ல ரெக்கார்டு போடும் வசதி எங்களுக்கும் எங்களுடைய கட்சிக்கும் இருக்கிறது. நல்லது எது, கெட்டது எது என்று தீர ஆலோசித்து எல்லா சாராருக்கும் நன்மை செய்யவேண்டுமென்று எண்ணித் தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை துருவிப் பார்த்தால் நன்றாகத் தெரியும். இப்போது தொழிலாளர்களுக்கு எவ்வளவு சங்கடம் ஏற்பட்டாலும் அவைகளைத் தீர்ப்பதற்கு சர்க்கார் பின் வாங்காது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மற்றொன்று 30 நாட்கள் முன்னே தொடர்ந்து வேலை செய்தால் தான் லீவு, இல்லாவிட்டால் இல்லை என்ற நிலை மாறி தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல விடுதலையாக வந்தது வரவேற்கத் தக்கது. இது போன்று தொழிலாளர்களுக்கு இருக்கும் சங்கடங்களை அப்போதைக்கப்போது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால்தான் அந்த சங்கடங்கள் தீர்க்கப்படுமே தவிர, தொழிலாளர் தலைவர்களால் தீர்க்கப்பட முடியாது. தொழிலாளர் வர்க்கம் தங்கள் உரிமைகளைக் கேட்பதில் பின்னே போகாமல், தக்க சமயத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், கட்டாயமாக அவர்களுடைய உரிமையைப் பெற வாய்ப்பு உண்டு என்பதற்கு இந்தத் திருத்த மசோதா ஒரு எடுத்துக்காட்டு என்று சொல்லி, இத்தகைய திருத்த மசோதாக்களை என்றைக்கும் எல்லாக் கட்சிகளும் வரவேற்கவேண்டும் என்று சொல்லி, அந்த வகையிலே நானும் இதை வரவேற்று, எனது வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

15th November 1961]

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு இதிலே மிகுந்த திருப்தி. திருப்தி என்னவென்றால், எங்களுக்கு மகாத்மா காந்தி அடிகளிடத்திலே இல்லாத ஒரு மதிப்பு, கம்யூனிஸ்ட் அங்கத்தினருக்கு, கம்யூனிஸ்டு கட்சிக்கு இருக்கிறதே என்பதுதான். அப்படி மதிப்பு என்று சொல்லும்போது, அது வார்த்தைகளாலே மட்டும் இருந்தால் பயனில்லை. நடத்தையிலும் இருக்கவேண்டும். இப்போது மகாத்மா காந்தி அடிகளுக்கு மதிப்பு கொடுப்பது என்றால், அதை நடைமுறையிலே காட்ட வேண்டுமென்று சொன்னால், உழைப்பது தான் மதிப்பு கொடுப்பதாகும். உழைப்புக்குத்தான் வந்தனை செய்யவேண்டும். உண்மையிலேயே நாம் காந்தி அடிகளுக்கு மதிப்பு கொடுப்பதென்றால், பண்டிகை நாளில் சும்மா இருப்பதில் எவ்விதப் பிரயோஜனமும் இல்லை. அந்தப் பண்டிகையை மிகவும் சிறந்த முறையிலே கொண்டாட வேண்டும். அதைத்தான் இது குறிப்பிடுகிறது.

அடுத்தாற்போல், கனம் சின்னத்துரை அவர்கள் எதிர்பார்த்ததைப் போல் இதிலே நல்ல அம்சம் இருக்கிறது, தொழிலாளர்களுக்கான நலனளிக்கக்கூடிய ஒரு திருத்தத்தை அவர்கள் ஒப்புக்கொண்டதற்கு மிகவும் திருப்தியடைகிறேன். தொழிலாளர்கள் ஆலோசனைக் குழுவிலே முக்கியமான பிரச்னைகள் விவாதிக்கப்படுகின்றது என்று சொன்னால், இந்த சட்டம் நிறைவேற்றும்போது சிற்சில பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். அவைகள் எல்லாம் திருத்த வேண்டிய பிரச்னைகளாக இருக்கும். எல்லாவிதத் திருத்தங்களையும், விஷயங்களையும் ஆலோசனைக் குழுவிலே விவாதித்து நிறைவேற்றுவது என்பது சாத்தியமல்ல. இருந்தாலும் முக்கியமான பிரச்னைகள், அந்த தொழிலாளர் ஆலோசனைக் குழுவிலே கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது என்று சொல்லி, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

'That the Madras Industrial Establishments (National and Festival Holidays) (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 41 of 1961) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

IV—ANNOUNCEMENTS.

(1) THE MADRAS MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1961

DEPUTY SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for the consideration in the Legislative Assembly of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 48 of 1961).

III.—GOVERNMENT BILLS.—*cont.*

(5) THE MADRAS MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1961 (L.A. BILL NO. 48 OF 1961)

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg to move—

'That the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Bill, 1961 (L.A. Bill No. 48 of 1961) be referred to a Select Committee consisting of—

(1) The Hon. Sri M. A. Manickavelu.
(2) The Hon. Sri M. Bhaktavatsalam.
(3) Sri P. G. Karuthiruman.
(4) Sri R. Srinivasa Iyer.
(5) Sri V. Sankaran.
(6) Sri K. S. Ardhanareeswara Gounder.
(7) Sri G. Annamalai Muthuraja.
(8) Srimathi Kamalambujammal.
(9) Sri P. Ramachandran.
(10) Sri K. Ponnian.
(11) Srimathi A. S. Ponnammal.
(12) Sri V. Arunachala Thevar.
(13) Sri T. T. Daniel.
(14) Sri T. Sampath.
(15) Sri K. R. Viswanathan.
(16) Sri S. Ramakrishna Thevar.
(17) Sri V. K. Ramaswamy Mudaliyar.
(18) Sri K. Ramachandran
(19) Sri S. Ramaswami Thevar.
(20) Sri A. V. P. Periavalaguruva Reddiar.
(21) Sri P. S. Santhanam.
(22) Sri A. Govindasamy.
(23) Sri N. K. Palanisami.
(24) Sri P. S. Chinnadurai.

Now I may just clarify the objective with which this Bill has been brought forward.

The inams in this State fall into two broad classes—major and minor.

The major inams consist of grants of whole villages, on favourable tenure, with or without conditions of service attached to them. In pursuance of the policy of abolition of all intermediaries between the Government and the actual cultivators, those major inams in which the grant consisted the melvaram alone were abolished and

converted into the ryotwari, under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948). As the hon. Members are aware a Bill for the abolition and conversion into ryotwari of the remaining major inams, in which the grant consists of both the melvaram and kudivaram, has been introduced in this House, which will be taken up later.

The minor inams consist of grants of isolated fields or blocks, on favourable tenure, and subject to rendering some service or other in most cases or as a reward for past service, etc. The present Bill seeks to abolish the minor inams and convert them into ryotwari.

The provisions of the Bill generally follow those in Madras Act XXVI of 1948, except in regard to compensation. The provisions relating to compensation have been briefly examined in the Statement of Objects and Reasons attached to the Bill.

With these words, I request the House to accept the motion.

DEPUTY SPEAKER : The motion is before the House for discussion.

SRI R. SRINIVASA IYER rose. . .

DEPUTY SPEAKER : Sri R. Srinivasa Iyer and Sri T. Sampath are in the Select Committee. Generally, it has not been the practice for the members of the Select Committee to speak on a motion for referring that Bill to a Select Committee. Sri K. Vinayakam will now speak.

SRI R. SRINIVASA IYER : Not that I want to speak for a long time over this Bill. . .

DEPUTY SPEAKER : I have called the hon. Member, Sri K. Vinayakam to speak.

* SRI K. VINAYAKAM : When I rise here, I am not trying to contribute anything on this subject of which the House or the Government are not aware. But I was always wondering why members representing City Constituencies were not taken to give any advice or tender their suggestion to any of these Committees dealing with Bills affecting the rural parts. Is it the opinion of the Government that Members coming from City Constituencies are devoid of knowledge of rural parts and so they would not be in a position to contribute anything useful to the Select Committee? Apart from this, this Bill is a very vital one, which affects the set-up of our rural areas. The opinion has gained ground in this House whether we should not have discussion on this Bill to-morrow. Of course, this is going to be discussed in the Select Committee. The general discussion on this Bill at this stage would be very useful for the Select Committee also. Therefore, I suggest that

we can have the general discussion to-morrow and dispose of the other business in the meanwhile. This is only a suggestion for the consideration of the Deputy Speaker.

DEPUTY SPEAKER : The House is going to adjourn to-day.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மேஜர், மைனர் இனாம் விஷயமாக சபை முன்பு வந்திருக்கக்கூடிய மசோதாவிலே, இந்த மசோதாவானது நெடு நாட்களாகவே இது நாள் கடத்திக்கொண்டு வரப்பட்டதாகும். இதனாலே இந்த மேஜர் இனாம் நிலத்தைச் சாகுபடி செய்யக்கூடியவர்களும், மைனர் இனாம் நிலத்தைச் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகளும் பலவிதமான கஷ்டங்கள் அடைந்திருக்கிறார்கள். அந்த கஷ்டமான விஷயங்களையெல்லாம் பார்த்துக்கொள்வதற்காக, இந்த மசோதாவானது பொறுக்குக் குழுவுக்கு விடுவது நல்லது. அப்படி விடும்போது, அந்த பொறுக்குக் குழுவிலே உள்ளவர்கள் இதை நன்றாக கவனித்துப் பார்த்து, விவசாயிகளுக்கு, இதிலே சாகுபடியாளர்களுக்கு எந்தெந்த வகையிலே கஷ்டங்கள் இருக்கின்றன, எந்தெந்த முறையிலே இதைப் பாகுபாடு செய்துபார்க்க வேண்டுமென்பதை நன்றாக திருப்பித் திருப்பிப் பார்த்து, ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று கேட்டால், இது ஒரு சிக்கலான விஷயமாகும். இந்த இனாம்களிலே பலவித இனாம்கள் இருக்கின்றன. பல இடங்கள் இன்னும் சர்வே செய்யக்கூடப் படாமல் இருக்கின்றன. இது இனாம் நிலம்தானா, இல்லையா, இது யாருக்குச் சொந்தம், விவசாயிகளுக்குச் சொந்தமா, அல்லது வேறு யாருக்காவதா என்றெல்லாம் முடிவு செய்யக்கூடிய பல பிரச்னைகள் இதிலே இருக்கின்றன. இதுபோன்ற பல கேஸ்கள் இன்றைக்கு கோர்ட்டுகளிலே தாக்கல் செய்யப்பட்டு, இதுவரைக்கும் முடிவு செய்யப்படாமல் இருந்து வருகிறது. இப்படி இதிலே பலவிதமான விஷயங்கள் இருப்பதினாலே, இது பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விடக்கூடிய காரணத்தினாலே, இங்கே இதைப்பற்றி அதிகமாக விவாதிக்க வேண்டியதில்லை. பொறுக்குக் குழுவிற்கு இது விடப்பட்டு, மீண்டும் இந்தச் சபையிலே விவாதிக்கின்ற நேரத்திலே இதைப்பற்றி அப்போது அதிகமாக பேசிக்கொள்ளலாம். இந்தப் பொறுக்குக் குழுவிலே இடம் பெற்றிருக்கக்கூடிய அங்கத்தினர்கள் இதை பரிசீலனை செய்யக்கூடிய நேரத்திலே, இந்த இனாம் நிலங்களிலே சாகுபடி செய்யக்கூடிய சாகுபடியாளர்களையெல்லாம் வரவழைத்து, அவர்களிடத்திலே நன்றாக விஷயங்களை கவனித்துக் கேட்டு, எந்தெந்த வகையிலே சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் கவனித்து அந்த முறையிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் இதைப்பற்றி அதற்கு முன்னால் தெளிவாகப் பேச வேண்டுமென்று சொன்னால், இந்த விஷயத்திற்கு சற்று அவகாசம் கொடுத்து, இந்த சபையிலே நல்லமுறையிலே விவாதம் செய்து,

அவைகளை இந்த பொறுக்குக் குழு பரிசீலனை செய்வது நல்லதாகும். ஆகவே இந்த இனாம் நிலங்களிலே மேல்வாரத்தை மாத்திரம் விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டும். நிலம் இனாம்களுக்குச் சொந்தமல்ல. நிலம் உழவர்களுக்குத்தான் சொந்தம். இனாம்களுக்கு மேல்வார சாகுபடி தான் சொந்தமே தவிர, நிலம் சொந்தம் என்று சொல்வதற்கே இடமில்லை. ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய இனாம் நிலங்களில் சாகுபடி செய்து கொண்டு வரக்கூடியவர்களுக்குக் கூட எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சட்டப்படி மறுக்கப்படுகிறது, அரசாங்கத் துறையிலே கூட, அந்தச் சட்டம் தெளிவாக வரையறுக்கப்பட்டு, இனாம் நிலம் யாருக்குச் சொந்தம், மேல்வாரம் இனாம்தாருக்குச் சொந்தமா, நிலமே இனாம்தாருக்குச் சொந்தமா என்று முடிவு காணாமல் இருக்கிற காரணத்தினால், விவசாயிகள் பலவிதத்திலும் கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் பல இடங்களில் இனாம் நிலங்கள் இருக்கின்றன. கிஸ்திதான் இனாம்தார்களுக்குச் சொந்தம். கிஸ்தியைக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். இனாம் எஸ்டேட்டிலிருந்து எவ்வளவு கிஸ்தி வசூலிக்கிறார்களோ அந்தக் கிஸ்தியை மொத்தத்தில் கட்டிவிட்டு, அவர்கள் ஒரு ஏக்கர் சாகுபடி செய்பவர்களிடம் கூட, ரூ. 50, ரூ. 25, ரூ 5, வசூல் செய்கிறார்கள். அவர்கள் கிஸ்தி எவ்வளவு கட்டவேண்டுமோ மொத்தத் தொகையை வசூலித்தால் போதும். ஒரு ஏகர், 2 ஏகர் சாகுபடி செய்பவர்களிடம் அளவு என்ன என்று நிர்ணயம் செய்யாமல் வசூல் செய்கிறார்கள். இந்த விஷயத்தை அரசாங்கத்தினிடம் முறையிட்டால், சர்வே செய்துதான் தீர்வை நிர்ணயிக்கவேண்டும், நாங்கள் இப்பொழுது எப்படிச் சொல்லுவது என்ற முறையில் தான் சொல்லப்படுகிறது. கலெக்டரிடம் சொல்லியும்கூட பரிகாரம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. உழுபவர்களுக்குத்தான் நிலம் சொந்தம். மேல்வாரம்தான் இனாம்தார்களுக்குச் சொந்தம் என்று முன்னமே தீர்மானம் செய்து நிலத்தை மாத்திரம் சர்வே செய்யக்கூடிய அளவுக்கு இருக்கிறோம். சில இனாம்தார்கள் இனாம் நிலத்தை ஒருவர் பல ஆண்டு காலமாக சாகுபடி செய்துகொண்டிருந்தாலும், அந்த நிலத்தை வேறு ஒருவனுக்கு விற்றுவிட்டு, அந்த நிலத்தில் உனக்கு உரிமை கிடையாது என்று சொல்லுகிறார்கள். குத்தகைக்கு சாகுபடி செய்தால் அந்த உரிமை கிடையாது என்று சொல்லி, குத்தகைக்கு விட்டமாதிரி தவறான முறையிலே கையெழுத்து வாங்கி நிலத்தை வேறு ஒருவருக்கு கிரயம் செய்த மாதிரி ரிகார்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். சாகுபடி செய்யக்கூடிய நிலத்தை இன்னொருவர் பெயருக்கு கிரயம் செய்து வைத்துவிடுகிறார்கள். இந்தமாதிரி சிக்கல்களெல்லாம் இனாம் நிலங்களில் விவசாயம் செய்யக்கூடியவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் காரணத்தினால், பரிசீலனைக்குழு நல்ல முறையில் இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து நல்ல முடிவு காணவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன்.

[15th November 1961

*** SRI T. IRUSAPPAN :** தலைவர் அவர்களே, இன்றையதினம் கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற திருத்த மசோதாவின் பேரில் இரண்டொரு கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். எஸ்டேட் மானேஜர் நிலத்திலே தலைமுறை தலைமுறையாக விவசாயம் செய்பவர்களுக்கு நன்மையாக காங்கிரஸ் சர்க்கார் வந்ததற்குப் பின்னால் அவைகளையெல்லாம் எடுத்து சர்க்காரே ஏற்று நடத்துவது என்ற முடிவுக்கு வந்த பின்னாலும், இன்னும் அவர்களுக்கு முன்பிருந்த தொல்லைகள் போன பாடில்லை. அந்த நிலங்களில் உழுது பயிரிடக்கூடிய விவசாயிகளுக்கு இன்னும் சர்க்கார் கொடுக்கக்கூடிய கடன் வசதியோ மற்ற வசதிகளோ பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல், அவர்கள் இன்னல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஜமீன்கள் எடுத்துவிட்டோம், மிட்டா நிலங்களை எடுத்துவிட்டோம், அந்தமாதிரி எடுத்து விவசாயிகளுக்கு அனுகூலமாக பல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறோம் என்று மக்களிடையே சொல்லிவரக்கூடிய நேரத்தில், இன்னும் அவர்களைப் பிடித்த தொல்லைகள் போகாமல் இருக்கின்றன. இவைகள் பற்றி நன்றாக பரிசீலனை செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய இனாம் நிலங்கள் இன்னும் சர்வே செய்யப்படவில்லை. சர்வே செய்யப்பட்ட நிலங்களுடைய விவரங்கள் அனுப்பப்பட்டிருந்தும் இன்னும் பரிசீலனை செய்யப்படவில்லை. எந்தெந்த நிலங்களை எந்தெந்த விவசாயிகள் அனுபவித்தார்களோ அந்த விவசாயிகளுக்கு அந்தந்த நிலத்தை 'மாப்கள்' போட்டு அடங்கல் செய்துகொடுத்தபாடில்லை. ஒருவர் 10 ஏகர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார் என்றால், அந்த நிலத்தை மற்றவருக்கு சேர்த்துக்கொடுக்கக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறது. ஆத்தூரில் செக்கிடுபட்டு என்ற கிராமத்தில் இம்மாதிரி பல தகராறுகள் ஏற்பட்டு கோர்ட்டுக்கு விஷயங்கள் போய், அடிதடி சண்டைகள் கூட ஆகியிருக்கின்றன. இம்மாதிரி சிக்கல்களுக்கு விவசாயிகள் ஆளாக்கப்படுகிறார்கள். 10 ஏகர் நிலத்தை ஒருவன் அனுபவித்து வந்தால், இன்றையதினம் அவனுக்கு 3 ஏகர் தான் சொந்தம் என்று சொல்லி, மற்றதை அடுத்தவனுக்குக் கொடுத்தால், அவனுக்குக் கொஞ்சம் ஆத்திரம்தான் வரும். பல காலமாக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து நிலத்தை சாகுபடி செய்துவந்த விவசாயிகளுக்கு இந்தமாதிரி தொல்லைகள் ஏற்பட்டு வருகின்றன. இன்றைக்கு சர்க்கார் மின்சாரத்தை கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்கிறார்கள். அதேநேரத்தில் மிட்டா நிலத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு சர்க்கார் கடன் கொடுப்பதில்லை. அவர்களுடைய சொத்தை அடமானம் வைத்தாலும், அதன்பேரில் கடன் கொடுக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பொறுக்குக்குழுவில் ஆராய்ந்து சரிப்படுத்த வேண்டும். மானேஜர் கையிலிருந்து சர்க்காரே அந்த நிலங்களை

15th November 1961] [Sri T. Irusappan]

எடுத்து, உள்ளபடியே உழுகிற விவசாயிகளுக்கு நல்ல விதத்தில் அளிக்கக்கூடிய வகையிலே, நல்ல முறையில் பரிசீலனை செய்து தீர்வு காணவேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மசோதாவை பரிசீலிக்க நியமிக்கப்பட்டிருக்கும் பொறுக்குக் கமிட்டியின் அங்கத்தினர்கள் விஷயமாக கனம் அங்கத்தினர் விநாயகம் அவர்கள் ஏதோ நகரத்தில் இருக்கிற அங்கத்தினர்கள் இந்தக் குழுவில் இடம் பெறவில்லை என்று சொன்னார்கள். பொறுக்குக் கமிட்டிக்கு அங்கத்தினர்களை நியமனம் செய்யும்போது, ஒரு கமிட்டியில் ஒரு அங்கத்தினர் இல்லாவிட்டால் இன்னொரு கமிட்டியில் இருப்பார், அப்படி ரோடேஷனாக வரும்படி எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கக்கூடிய முறையிலேதான் இருக்குமே தவிர, இதிலே நகரம் கிராமம் என்ற பாகுபாடு செய்யக்கூடிய முறையில் இல்லை.

